# திருவிளையாடற் புராணம்



தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்

மற்றும் ஆய்வு மையம்

தஞ்சாவூர்

சரசுவதி மகால் நூலக வெளியீட்டு எண்:523

# திருவிளையாடற் புராணம்

(பரஞ்சோதி முனிவர் அருளிச் செய்தது)

பதிப்பாசிரியர்

தவத்திரு **சொக்கலிங்க** சுவாமிகள்
எனும்
புலவர் **வீ. சொக்கலிங்கம்,**
முன்னாள் தமிழாசிரியர்,
சரசுவதி மகால் நூலகம் மற்றும் ஆய்வு மையம்,
தஞ்சாவூர் - 613 009.

வெளியீட்டாளர்
தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்
**சரசுவதி மகால் நூலகம்**
மற்றும்
**ஆய்வு மையம்,**
தஞ்சாவூர் - 613 009.

2008 விலை :ரூ. 375/-

# நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு


| | |
|---|---|
| நூற்பெயர் | : திருவிளையாடற் புராணம் |
| பதிப்பாசிரியர் | : புலவர் வீ. சொக்கலிங்கம் |
| வெளியிடுபவர் | : இயக்குநர்,<br>சரசுவதி மகால் நூலகம் &<br>ஆய்வு மையம், தஞ்சாவூர். |
| வெளியீட்டு எண் | : 523 |
| மொழி | : தமிழ் |
| பதிப்பு | : முதல் பதிப்பு 2008 |
| தாள் | : 16 கி. டி.என்.பி.எல். |
| நூல் அளவு | : 21 × 14 செ.மீ. |
| பக்கங்கள் | : xxiv + 272 + 431 = 727 |
| படிகள் | : 250 |
| எழுத்து | : 12 புள்ளிகள் |
| அச்சிட்டோர் | : சரசுவதி மகால் நூலக<br>கணினி அச்சகம், தஞ்சாவூர். |
| புத்தகக் கட்டு | : செக்ஷன் தையல் |
| பொருள் | : புராணம் |
| கோலன் பகுப்பு | : Q23:22x P8 |
| விலை | : ரூ.375-00 |

# வெளியீட்டாளர் முகவுரை

தஞ்சையில் அமைந்து தரணி முழுமைக்கும் அறிவுச் செல்வமாகப் பயன்பட்டுக் கொண்டிருக்கும் அரும்பெரும் நிறுவனம் நம் சரசுவதி மகால் நூலகமாகும். சுவடிக் கருவூலமாகவும், பன்மொழி நூற்களஞ்சியமாகவும், பன்மொழி ஆய்வு மையமாகவும் திகழும் சரசுவதி மகால் நூலகம் ஆற்றிவரும் தொண்டு அளப்பரியது.

இந்நூலகம் தமிழகத்தினர் மட்டுமின்றிப் பிற மாநிலத்தவரும், பிற நாட்டினரும் பயன்படுத்தி வருகின்ற ஓர் அரிய ஞான ஆலயமாகும். பாரதநாடு பழம்பெரும் நாடு. உலகின் மிகச் சிறந்த நாகரிகத்திற்கும், பண்பாட்டிற்கும், மொழி வளத்திற்கும், இலக்கிய, இலக்கண மேம்பாட்டிற்கும், இயல், இசை, நாடகம், ஓவியம், சிற்பம், கட்டிடம் போன்ற நுண் கலைகளுக்கும் மெச்சும் அறிவிற்கும் மேதினியில் உயர்நாடு நம்நாடு. இமய முதல் குமரிவரை சைவநெறி தழைத்துப் பரவியது எனினும் தமிழகத்தில் சைவ ஒளி பரவி நாயன்மார்கள் தோன்றி சைவநெறி வளர்த்தனர். சைவநெறி அன்பு, அறம், பக்தி, விருந்தோம்பல், பணிவு போன்ற வாழ்வியல் நெறிகளைக் கூறுவது.

இப்பதிப்பு பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடற் புராணமாகும். சிவபெருமானது திருவிளையாடல்களைக் கூறுவது திருவிளையாடற் புராணம். தமிழில் நான்கு நூல்கள் சிவபெருமானது திருவிளையாடல்களை நிரல்படத் தருகிறது. அவை:-

1. பெரும்பற்றப் புலியூர் நம்பி இயற்றிய திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம்.
2. தொண்டைநாட்டு இலம்பூர் வீமநாதபண்டிதர் இயற்றிய கடம்பவன புராணம்.
3. தொண்டைநாட்டு வாயற்பதி அனதாரியப்பன் இயற்றிய சுந்தர பாண்டியம்.
4. பரஞ்சோதியார் இயற்றிய திருவிளையாடற் புராணம்.

மேற்கண்டவற்றுள் முதலாவது கூறப்பட்ட புராணமும், இறுதியாகக் கூறப்பட்ட புராணமுமே குறிப்பிடத்தக்கவை. கல்லாடம், சிலப்பதிகாரம், தேவாரம், திருவாசகம் ஆகியனவும் சில திருவிளையாடல்களைக் குறிப்பிட்டுள்ளன. மிகவும் சிறப்புப் பெற்றுத் திகழ்வது பரஞ்சோதியார் இயற்றிய திருவிளையாடற் புராணம். பரஞ்சோதியார் திருவிளையாடற் புராணம். திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்தை விட இருமடங்கு பெரியது. ஆனால் திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணமே பரஞ்சோதியார் திருவிளையாடற் புராணத்தைவிடக் காலத்தால் முந்தியது.

பரஞ்சோதியார் திருவிளையாடற் புராணம் சோழநாட்டில் திருமறைக்காட்டில் பிறந்த பரஞ்சோதியார் இயற்றியது. அங்கயற்கண்ணி இவரது கனவில் தோன்றி 'இறைவன் திருவிளையாடலை இன்னே பாடுக' என ஆணையிட்டதாக சைவர்கள் கூறுகின்றனர். வடமொழி நூலான ஆலாசியமான்மியம் இதனுடைய முதல் நூல் என்பார்கள். சொல் நோக்கம், பொருள் நோக்கம், சாமுத்திரிகா லட்சணம், அசுவ லட்சணம், இரத்தின பரிட்சை, பரதம் முதலியவற்றிற்கு இந்நூல் இலக்கியமாகத் திகழ்கிறது என்று குறிப்பிடுவார்கள். வடமொழி நூல் முதல் நூல் ஆயினும் சொற்சுவை, பொருட்சுவை, அருமை, பெருமை, தொன்மை, மென்மை, நன்மை, வனப்பு ஆகிய தன்மைகள் இதில் அமைந்துள்ளன. இதில் இடம் பெற்றுள்ள 3360 விருத்தப் பாக்களும் இனிமையும் தெளிவும் உடையன.

மதுரையில் சிவபெருமான் நடத்திய 64 திருவிளையாடல்களை இந்நூல் கூறுகிறது. மதுரைக் காண்டம், கூடற்காண்டம், திருவாலவாய்க் காண்டம் என மூன்று காண்டங்களை உடையது. கடவுள் வாழ்த்து, பாயிரம், அவையடக்கம், நாட்டுப்படலம், நகரப்படலம், கைலாய வருகை, புராண வரலாறு ஆகிய பகுதிகள் முதலில் இடம் பெற்றுள்ளன. தலம், தீர்த்தம், மூர்த்தி ஆகியவற்றின் சிறப்புக் கூறிப் பின் திருவிளையாடல் அறுபத்து நான்கினையும் தொகுத்துரைத்து அதற்குப் பதிகப்படலம் என்று பெயர் கொடுக்கும் முறை உள்ளது.

இந்நூலகத்தில் உள்ள சுவடி எண்.901 இல் கூறப்படும் திருவிளையாடற் புராணம் பரஞ்சோதியார் அருளிய திருவிளையாடல் புராணமாகும். இந்நூலகத்தில் தமிழ்ப் பண்டிதராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற புலவர் திரு. வீ.சொக்கலிங்கம்அவர்கள் இந்நூலைப் பதிப்பித்துள்ளார்கள். இவர் பதிப்புப் பணியில் பழுத்த அநுபவமும் சிறந்த ஆய்வு நோக்கும் கொண்டவர். இந்நூலகத்தில் சற்றேறக்குறைய 40 சுவடிகளைப் பதிப்பித்த பெருமைக்கும் பெற்றிக்கும் உரியவர். மேலும், தமிழ்ச் சுவடிகள் 10 அட்டவணைப் பட்டியலை வெளிக் கொணர்ந்த பெருமைக்குரியர். தற்போதைய திருவிளையாடல் புராணப் பதிப்பில் இவர் அறிமுக நூல்களின் பட்டியலைத் தந்துள்ளார். அதில் பல புராணச் செய்திகளை நிரல்பட தொகுத்துக் கூறியுள்ளார். பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடல் புராணத்தில் கூறப்படும் சொக்கலிங்கப் பெருமானின் அருமைத் திருநாமங்கள், நம்பி திருவிளையாடல் புராணத்தில் காணப்படும் திருநாமங்கள், இவ்விரு திருவிளையாடற் புராணங்களுக்கும் உள்ள வேறுபாடுகள், திருவிளையாடல் புராணம் தொடர்புடைய பிற நூல்கள் வரலாற்றுச் செய்திகள் என பல்வகைச் செய்திகளையும் நிரல்பட தொகுத்துக் கூறியிருப்பது மிகவும் பாராட்டிற்குரியது. இதில் மதுரைக் காண்டம் முதல் பகுதியாக வந்துளது. கூடற்காண்டமும், திருவாலவாய்க் காண்டமும் இரண்டாம் பகுதியாக வெளிவர உள்ளது. இவரது இலக்கியப் பணி மென்மேலும் தொடருமெனக் கருதுகிறேன்.

இந்நூல் வெளிவர நிதியுதவி நல்கிய நடுவண் அரசுக்கும், இந்நூல் கணினி அச்சில் வெளிவர கணினிப் பிரிவில் பணியாற்றியவர்களுக்கும், நிருவாக அலுவலர் மற்றும் வெளியீட்டு மேலாளர் (பொறுப்பு) வகிக்கும் திரு. சாமி. சிவஞானம் அவர்களுக்கும் எனது பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தஞ்சாவூர்
8.12.2008.

**எம். எஸ். சண்முகம்,** இ.ஆ.ப.
மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் இயக்குநர்.

## திருவிளையாடற் புராணம் தொடர்புடைய

## நூல்களின் அறிமுகம்

**அறிமுக நூல்களின் பட்டியல்:**


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | கடம்பவன புராணம் | 1 |
| 2. | கல்லாடம் | 23 |
| 3. | திருவிளையாடல் கருணைத் திருவிருத்தம் | 35 |
| 4. | திருவாலவாயுடையார் திருவிளையாடற் பயகரமாலை .. | 42 |
| 5. | மதுரை 64 திருவிளையாடற் போற்றிக்கலிவெண்பா .. | 56 |
| 6. | பரஞ்சோதிமுனிவரின் திருவிளையாடற் புராண மதுரைக்காண்டச் செய்யுட்களில் காணப்படும் சொக்கலிங்கப் பெருமானின் அருமைத் திருநாமங்கள் .. | 61 |
| 7. | ஷெ கூடற்காண்டச் செய்யுட்களில் காணப்படும் சொக்கலிங்கப் பெருமானின் அருமைத் திருநாமங்கள் .. | 70 |
| 8. | ஷெ திருவாலவாய்க் காண்டச் செய்யுட்களில் காணப்படும் சொக்கலிங்கப் பெருமானின் அருமைத் திருநாமங்கள் .. | 81 |
| 9. | நம்பி திருவிளையாடற் புராணத்தின் செய்யுட்களில் காணப்படும் சோமசுந்தரக் கடவுளின் அருமைத் திருநாமங்கள் .. | 94 |
| 10. | திருவுசாத்தான நான்மணிமாலையுள் திருவிளையாடல் சிறப்பு .. | 97 |

| | | |
|---|---|---|
| 11. | திருவிளையாடற் புராணத்திற்குப் பலபட்டடைச் சொக்கநாதப்புலவர் இயற்றிய சிறப்புப் பாயிரம் .. | 100 |
| 12. | திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணம் பரஞ்சோதியார் திருவிளையாடற்புராண வேறுபாடுகள் .. | 102 |
| 13. | நம்பி திருவிளையாடலின் படலவைப்புமுறை .. | 106 |
| 14. | திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம் மதுரைப் புராண வரிசக் குறிப்பு .. | 111 |
| 15. | பாண்டியர் பெயரும் அவர்காலத்தில் நிகழ்ந்த திருவிளையாடலும் படல அகரவரிசையும் .. | 124 |
| 16. | உரைநடை நூல் - 1 .. | 130 |
| 17. | உரைநடை நூல் - 2 .. | 141 |
| 18. | மதுரைத் திருவிளையாடல் அட்டோத்திர சதநாமாவளி அருச்சனை அகவல் .. | 146 |
| 19. | இப்பதிப்பின் தொடக்கத்தில் உள்ளவை .. | 150 |
| 20. | திருவிளையாடற் புராண படல வைப்புமுறைகள் .. | 156 |
| 21. | தலபுராணப்பட்டியல் .. | 160 |
| 22. | வலைவீசுபுராணம் கதை அறிமுகம் .. | 162 |
| 23. | வலைவீசுபுராணம் சுருக்கம் .. | 169 |
| 24. | திருவிளையாடற் புராண ஓலைச்சுவடிகள் உள்ள இடம் முதலியன .. | 172 |
| 25. | திருவிளையாடற் புராண தொடர்புடைய நூல்கள் .. | 186 |
| 26. | சீகாளத்திப் புராணம் - நக்கீரச் சுருக்கம் .. | 187 |
| 27. | சீகாளத்திப் புராணம் நக்கீரச் சுருக்கம் உரைநடை .. | 213 |
| 28. | பரஞ்சோதி முனிவரும் திருவிளையாடற் புராணமும் .. | 220 |
| 29. | திருவிளையாடற் புராணமும் மதுரையின் இடப்பெயர்களும் .. | 221 |

| | | |
|---|---|---|
| 30. | கூடற் புராணம் .. | 231 |
| 31. | திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராண அறிமுகம் .. | 238 |
| 32. | சொக்கநாத வெண்பா .. | 241 |
| 33. | மதுரைக் கலம்பக அறிமுகம் .. | 244 |
| 34. | சொக்கநாத மாலை அறிமுகம் .. | 247 |
| 35. | வரலாறுகள் .. | 259 |
| 36. | சுந்தரபாண்டியம் அறிமுகம் .. | 261 |
| 37. | நெற்கதிர் சூடும் சுந்தரேசன் .. | 272 |




உ

திருச்சிற்றம்பலம்

# முன்னுரை

"நறுமலர் நீருங் கொண்டு நாடொரு மேத்தி வாழ்த்திச்
செறிவன சித்தம் வைத்துத் திருவடி சேரும் வண்ணம்
மறிகடல் வண்ணன் பாகா மாமறை யங்க மாறும்
அறிவனே ஆல வாயில் அப்பனே அருள்செ யாயே!"

'பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணம் வடமொழி ஆலாசிய மான்மியத்தைத் தழுவி இயற்றியது'என்பர். மதுரையம் பதியில், சிவபக்தியும், உள்ளன்பும் உடையவர்களுக்காக சொக்கேசர் 64 திருவிளையாடல்களை நிகழ்த்தியுள்ளார். மற்றும் பல திருவிளையாடல்களை நிகழ்த்தியிருப்பினும், அவற்றுள் மிகச் சிறந்தவையான திருவிளையாடல்களை 64 எனத் தொகுத்தனர். இவர் நூல் செய்வதற்கு முன்னமேயே, சிலப்பதிகாரம், தேவாரம், திருவாசகம், பெரும்பற்றப்புலியூர் நம்பி திருவிளையாடற் புராணம் முதலான நூல்களில் திருவிளையாடற் புராணக் குறிப்புகள் உள்ளன.

செல்லிநகர் பெரும்பற்றப் புலியூர் நம்பிகள், வடமொழி உத்தரமகா புராணத்தைத் தழுவி 13 ஆம் நூற்றாண்டில், 'திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம்' என்ற பெயரால் பாடியுள்ளார். இது, 'மதுரைப் புராணம்' எனவும் வழங்கப் பெறும். புராணங்கள் பலவாயினும் அவற்றுள் மிகுதியும் புகழ் கொண்டு விளங்குவனவற்றுள் சைவப் புராணங்கள் 9 ஆகும். அவற்றுள்ளும் தெய்வத்தையும் தமிழையும் ஒருசேரத் துய்க்க இயல்வன சிவபெருமானின் முக்கண் போல விளங்குவன மூன்று. இதிகாசங்கள் மூன்று என்பது போல, இவையும் மூன்று.

கச்சியப்பசிவாச்சாரியாரின் 'கந்த புராணம்' நெற்றிக்கண் போன்றது. சேக்கிழார் 'பெரியபுராணம்' வலக்கண் போன்றது. பரஞ்சோதியாரின் 'திருவிளையாடற் புராணம்' இடக்கண் போன்றது. திருவிளையாடற் புராணம் பக்திச் சுவையும் இலக்கிய நடையும், எளிமையும், பொருட் செறிவும் கொண்டது.

பரஞ்சோதியார் திருவிளையாடற் புராணம் பக்திச் சுவையும், இலக்கியச் சுவையும், எளிமையும், பொருட் செறிவும் கொண்டது.

எல்லாம் வல்ல அங்கயற்கண்ணம்மை உடனாய ஆலவாய்ச் சொக்கன் விளையாட்டாகவே இந்திரன் பழிதீர்த்த படலம் முதலாக வன்னியும் கிணறும் இலிங்கமும் அழைத்த படலம் ஈறாக 64 திருவிளையாடல்களிலும் அடியார்கட்கு அருள் பாலித்துள்ளார்.

அவன் ஆடியவை விளையாட்டுக்கள்; அருள் விளையாடல்கள். 'திரு' எனும் சொல், செல்வம், இலக்குமியாம் திருமகள் முதலான பல பொருள் ஒரு சொல். 'திரு'என்பது கண்டாரால் விரும்பப்படும் தன்மை நோக்கம் - என தொல்காப்பிய உரையாசிரியர் பொருள் உரைக்கின்றார்.

விளையாட்டு என்பது விளை+ஆட்டு எனப் பாகுபடும். 'விள்' என்ற வேர்ச்சொல்லிலிருந்து விருப்பம் உண்டாயிற்று. 'விள்' என்பதுடன் 'ஐ' என்ற பெயராக்க விகுதி சேர்த்து 'விளை' ஆயிற்று. 'விளை' என்ற சொல்லுக்கு அகர முதலியில், சம்பவித்தல், என்ற பொருள் தரப்பட்டுள்ளது. சம்பவித்தல், நிகழ்த்தல் என்ற பொருள்பட ஆட்டு என்பதனுடன் சேர்ந்து 'விளையாட்டு' ஆயிற்று. ஆம் சிவபெருமான் எளிமையாக நிகழ்த்தியது விளையாட்டு.

கடலில் ஆடுவது கடல் விளையாட்டு
நீரில் ஆடுவது நீர் விளையாட்டு
புனலில் ஆடுவது புனல்விளையாட்டு
பொழிலில் ஆடுவது பொழில் விளையாட்டு

என்பது போல விளையில் ஆடியது விளையாடல் ஆனது. மக்கள் விளையாட்டினின்றும் வேறுபடுத்தி, இறைவனாகிய திருவாளனின் விளையாடலைத் திருவிளையாடல் என்றனர்.

இறைவன்புரிகின்ற ஐந்தொழில்களையும் அவனுடைய திருவிளையாடல் என்பார் அடியார்கள்.

"கூத்தன் இவ்வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி"

என்று மாணிக்கவாசகரும்,

"இனிமைசேர் பயன் விளம்பினிவ் வவனிக்கண்" எனத் தொடங்கும் பாடலில் பெரும்பற்றப் புலியூர் நம்பியும்,

"சொன்னவித் தொழில்கள் என்ன காரணந் தோற்ற" எனத் தொடங்கும் பாடலில் சிவஞான சித்தியாரும் இறைவனின் முத்தொழிலைக் குறிப்பிடுகின்றனர்.

'புராணம்' என்ற சொல் பழமையானது என்று கூறும். மேலும் இது, பழமைக்கும் பழமையாய், புதுமைக்கும் புதுமையாய்த் தோன்றுவது.

"முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப் பெற்றியனே"

என்பது போல எனலாம். பழைய வரலாற்றைக் கூறுவது புராணம். பக்தியிற் சிறந்த அன்பர் பொருட்டு மதுரையில் ஆலவாய் அழகன் பலகாலங்களில் புரிந்த பழமையான திருவிளையாடல்கள் பலப் பல. அவற்றுள் சிறந்தனவாற்றைத் தொகுத்துக் கூறியுள்ளார் பரஞ்சோதியார். தெய்வத் தன்மை பொருந்திய 64 திருவிளையாடல்களை இப் புராணம் விளக்குகின்றது. ஆகவே இந்நூலைத் "திருவிளையாடற் புராணம்" என்றனர்.

தமிழ்ப் புராணங்களை நான்கு வகையாகப் பிரிப்பர்.

1. சான்றோர் வரலாறு கூறுதல்.
2. தெய்வங்களின் திருவருட் செயல்களைக் கூறுதல்.
3. இறைவனின் செயலை ஒரு திருத்தலத்துடன் இணைத்துக் கூறுதல்.
4. இவையல்லாத பிற நடைமுறைகளை விரித்துக் கூறுதல்.

இவற்றுள் இறைவன் திருவிளையாடலை நேர் முகமாகக் கூறுவது இத் திருவிளையாடற் புராணம்.

அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி விளங்குகின்ற கருணைக் கடல் சிவபெருமான். நல்லவர்களைக் காத்து, அல்லவர்களை அழித்தற் பொருட்டுத் தன் ஐந்து முகங்களோடு, அதோ முகத்தும் விளங்குகின்ற ஆறு நெற்றிக் கண்களினின்றும் ஆறுமுகனைத் தோற்றுவித்தார். அந்த வரலாற்றைக் கூறுவதனால் கந்த புராணம் எம்பெருமானுடைய நெற்றிக் கண்ணுக்கு ஒப்பிடலாயிற்று.

சிவனடியார்களைச் சோதித்து வாழ்வளித்து ஆட்கொள்வ தனையே செயலாகக் கொண்டு தன்னை வெளிப்படுத்திக் கொள்ளாமல், அடியார்களின் இல்லங்கள் தோறும் எழுந்தருளி அருள்பாலித்த வரலாற்றினைத் தெரிவிப்பதினால் அது வலக்கண் ஆயிற்று.

மாதொரு பாகனான சிவபெருமான், பராசக்தியினைத் தன் இடப்பாகத்தே கொண்டு கருணை பாலிக்கின்றார். அக் கருணைக்கு வித்தான அன்னை மதுரையில் மீனாட்சி, அங்கயற்கண்ணி என தடாதகைப் பிராட்டியாராய் ஆழல் முகத்தே தோன்றி, 'ஆணுக்குப் பெண் நிகர்' எனப் பெண்ணரசியாய், அரியாசனம் இருந்து செங்கோலோச்சியது யாவரும் அறிந்ததே. அங்கயற்கண்ணி, சொக்கேசனின் இடப்பாகம் அமர்ந்ததால் அவளது கண்கொண்டதனால் திருவிளையாடற் புராணம் இடக்கண் ஆனது.

அதனால் பரஞ்சோதியார்,

"சத்தி யாய்ச்சிவ மாகித் தனிப்பர
முத்தி யான முதலைத் துதிசெயச்
சுத்தி யாகிய சொற்பொரு ளல்குவ
சித்தி யானைதன் செய்யபொற் பாதமே!"

எனத் தொடங்கினார்.

அத்தகு மதுரையம் பதியில் சொக்கேசப் பெருமான் விலங்கு, பறவை என்ற வேறுபாடின்றித் தன் படைப்பில் உள்ள அனைத்து உயிர்கட்கும் அருள்பாலித்த கருணை 64 திருவிளையாடல்கள் எனப்படும்.

தமிழிலக்கிய புராணமாகிய இத் திருவிளையாடற் புராணம், தனித் தமிழின் சிறப்புக்களையும், பசுந்தமிழின் தொன்மைகளையும், அவற்றின் மேன்மைகளையும், அருமைகளையும், அற்புதச் செயல்களையும், பிறவற்றையும் எடுத்தியம்புகின்றது. அதனை,

"கண்ணு தற்பெருங் கடவுளும் கழகமோ டமர்ந்து
பண்ணு றத்தெரிந் தாய்ந்தஇப் பசுந்தமி ழேனை
மண்ணி டைச்சில இலக்கண வரம்பிலா மொழிபோல்
எண்ணி டைப்படக் கிடந்ததா எண்ணவும் படுமோ!"

என்கின்றார் பரஞ்சோதி முனிவர். மேலும் செயற்கருஞ் செயலில் சிறந்து விளங்கும் வரலாற்றினைக் கூறித் தண்டமிழின் சிறப்பின் மேன்மையை விரித்துரைக்கின்றார்.

"தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்தது முதலை
உண்ட பாலனை அழைத்ததும் எலும்புபெண் உருவாக்
கண்ட தும்மறைக் கதவினைத் திறந்ததுங் கன்னித்
தண்ட மிழ்ச்சொலோ மறுபுலச் சொற்களோ சாற்றீர்!"

இதற்கு மேலும் அருஞ்செயல்கள் பல செய்த தமிழ் மொழியே தமிழ் நாட்டுத் திருக்கோயில்களில் வழிபாட்டு மொழியாக இருக்க வேண்டுமே அன்றி மறுபுலச் சொற்களோ சாற்றீர் என்கின்றார்.

அந்தந்த நாட்டில் அந்தந்த மொழிகளில் அருஞ்செயல்களை நிகழ்த்துவதே இயல்பும் பெருமையும் உடையது. இந்த அடிப்படையில் தமிழ்நாட்டில் தெய்வத்தமிழ்தான் அருஞ் செயல்கள் பல செய்தது. ஆகவே தென்தமிழ், இறைவனால் அங்கீகரிக்கப்பட்ட செம்மொழி.

அருவமும், உருவமும் ஆகிய இறைவன் ஆன்மாக்களைக் காக்கும் பொருட்டே அம்பலத்தாடுகின்றான். அவன் நோக்கும் திசை தென்திசை.

"கனிகண்ணன் போகின்றான் காமருபூங் கச்சி
மணிவண்ணா நீ கிடக்கவேண்டாம்"

என்று கூறிய அப்புலவனின் பைந்தமிழின் பின் சென்ற பச்சைப் பசுங்கொண்டலும் தென்திசை நோக்கியே பாம்பணையில் பள்ளிகொண்டுள்ளான். ஆம். இன்றும் திருமால் திருக்கோயில்களில், பட்டாச்சாரியார்கள் இறைவழிபாட்டில் பாசுரத்தமிழ் பகராமல் வழிபடமாட்டார்கள். அதுபோலவே நம் சிவன் கோயில்களிலும் திருமுறை ஓதாமல் வழிபாடு நிகழ்த்துவது சரியன்று. வழிபாட்டில் திருமுறைகளை ஓதுதலே சிறப்பு.

திருமுறை அருளிய பேராளர்கள், நல்ல தமிழில் இறைவனை வழிபட்டு பலனடைந்து, அவைகளை நாம் தொடர நமக்கு நல்கியுள்ளார்கள்.

அவற்றுள் கூடல் மதுரையின் பாடலகள் மிகமிக அருமையாக உள்ளன. திருஞானசம்பந்தர் திருவாய்மலர்ந்தருளிய,

"நீலமா மிடற்று ஆல வாயிலான்
பால தாயினார் ஞாலம் ஆள்வரே!"

எனத் தொடங்கும் பாடலும் பிறவும் போற்றத் தக்கன. அவர் பாடிய பதிகங்கள் மதுரையில் ஒன்பது.
திருநாவுக்கரசர்,

"வேதியா வேத கீதா விண்ணவர் அண்ணா என்றென்று"

எனத் தொடங்கும் பாடல் முதலாக பதிகங்கள் இரண்டு.

மாணிக்கவாசகர் திருவாய்மலர்ந்தருளிய மதுரைச் சிறப்புகளுக்கும் அளவே இல்லை. மதுரைச் சொக்கன் ஆடிய ஆடல்விளையாட்டுக்களின் பெருமைக்கும் அளவே இல்லை.

"பண்சுமந்த பாடல் பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண்சுமந்த கீர்த்தி வியன் மண்டலத்து ஈசன்
கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண்சுமந்து கூலிகொண்டு அக்கோவால் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய்!"

பிறவும் அன்ன.

மேலும் அருளாளர்கள் பலர் மதுரைநாயகனைப் பாடி மகிழ்ந்துள்ளனர்.

ஆன்மாக்கள் உய்யும்பொருட்டு விண்பழித்து மண்புகுந்த பிறவா யாக்கைப் பெரியோன், ஆன்மாக்கள் நம்பும் பொருட்டு சடைமறைத்துக் கதிர் மகுடம் தரித்து வழுதி மருமகனாகி, மீனநோக்கின் மடவரலாம் மீனாட்சியை மணந்து உலகம் முழுதும் ஆண்டார். அங்கயற் கண்ணியை மயக்கும் பேரழகுடையன் மட்டுமல்லாது, கண்டாரை யெல்லாம் சொக்கவைக்கும் அழகுடையனாதலால் 'சொக்கன்' எனப்பட்டான். அத்தகைய சொக்கனையும் சொக்கவைக்கும், அவனது அங்கமான அங்கயற்கண்ணியும், மீன்கள் எவ்வாறு தன் முட்டைகளைக் கண்ணால் கண்ட மாத்திரத்திலேயே குஞ்சு பொறிக்க வைப்பது போலவே, அடியவர்கள் வந்து அடிபணியும் போது அவர்களது குறைகளைத் தன் கண் பார்வையினாலேயே அகற்றி அருள்பாலிக்கும் பேரழகுடையவளாதலால் இவளைச் 'சொக்கி' எனல் பொருந்தும்.

திருஞானசம்பந்தருக்குத் திருமணம் செய்ய ஏற்பாடு செய்த மணப்பெண் 'சொக்கியார்' என்பதாக அறியமுடிகிறது.

மக்களின் வாழ்க்கை நெறிமுறைகளுக்கு ஏற்ற நீதிகளை உரைப்பது திருவிளையாடற்புராணம். தடாதகைப் பிராட்டியார் பாண்டியனுக்குத் திருமகளாகி, ஆய கலைகள் அறுபத்து நான்கும் கற்று திரையரசர்களை வென்று, சொக்கேசனை மணந்தாள்.

கணவன் இருக்க, தான் முடிபுனைந்து அரசாள்வது சரியல்ல வென்று தன் கணவன் சோமசுந்தரருக்க அரசளித்து மகிழ்ந்தாள் பெண்ணரசி மீனாட்சி. இதனை

"செழியர்பிரான் திருமகளாய்க் கலை பயின்று
முடிபுனைந்து செங்கோ லோச்சி
முழுதுலகும் சயங்கொண்டு திறை கொண்டு
நந்திகண முனைப்போர் சாய்த்துத்

தொழுகணவற்கு அணிமணிமா லிகைசூட்டித்
தன்மகுடம் சூட்டிச் செல்வம்
தழைவுறுதன் அரசு அளித்த பெண்ணரசி
அடிக்கமலம் தலைமேல் கொள்வாம்.!"

என்கிறார் பரஞ்சோதியார். இதனால், பெண்கள் தான் எவ்வளவு உயர்வு பெற்றிருந்தாலும் கணவனுக்கு மதிப்புத் தரவேண்டும் என்று பெறப்படுகின்றது.

ஆலவாயழகனும் தனது திருவிளையாடல் மூலம் மக்கள் வாழ்க்கை நெறிமுறைகளை அருள்பாலித்துள்ளார். வலைவீசு புராணத்து 'பரதவர்'வேடந் தாங்கி வந்து, வலைவீசி, பரதவர் மகளாகிய திரைசேர் மடந்தையைத் திருமணம் செய்து கொண்டார். இவரால் பரதவர் (செம்படவர்) குலம் மேம்பட்டது. இதனால் ஜாதி, குலம் பார்ப்பது தவறு என்பதனைத் தன் திருவிளையாடல்மூலம் வெளிப்படுத்துகின்றார். மற்றும் பல.

கூடல் இலங்கு குருமணியாம் சொக்கேசன், 'எல்லா உயிர்களையும் காக்கின்றவன் என்பதனை இத் திருவிளையாடற்புராணம் அறிவுறுத்துகின்றது. எல்லாப் பிறப்பினும் மேலாய மானிடர்களைக் காப்பதே அன்றி, ஐயறிவுள்ள விலங்கு, பறவை முதலானவற்றையும் காப்பவன். ஏழை பங்காளனாகத் தோன்றி, கடவுளை நம்பினோர் கைவிடப் படாதவாறு காப்பவன். அகந்தையை அழிப்பவன். அறியாமையை நீக்கி நல்லருள் தருபவன். இவையனைத்தையும் நிகழ்வு மூலம் கூறுவதே இத்திருவிளையாடற் புராணம்.

பரஞ்சோதியார் சத்திய ஞான தரிசகரின் மாணாக்கராகவும், மெய்கண்ட தேவருக்கு ஆசிரியராகவும் கி.பி.16 ஆம் நூற்றாண்டினராகவும் இருந்தார் என்று அபிதான சித்தாமணி ஆசிரியர் கூறுகின்றார். இப் பரஞ்சோதியார், மதுரைத் திருமலை நாயக்கர் காலத்தவர் எனக் கூறுவர்.

இவர், திருமறைக்காட்டில், மீனாட்சி சுந்தர தேசிகரின் மகனாக, சைவ வேளாளர் மரபில் தோன்றி, தென்மொழி, வடமொழி, சித்தாந்த சாத்திரங்கள் முதலானவை கற்றவர். அது மட்டுமின்றி மாணிக்கம் விற்ற படலத்தில் கூறுவதுபோல நவமணிகள் இலக்கணம் முதலான பிற அரியவற்றின் இலக்கணங்களையும் கற்றவர்.

குமர குருபரருக்கு அருளிய அன்னை அங்கயற் கண்ணியாம் மீனாட்சி அம்மை இவரது கனவில் தோன்றி, "சுந்தரேசப் பெருமான் புரிந்தருளிய திருவிளையாடல்களைப் பாடுக" எனப் பணித்ததன் பேரில் இப்புராணத்தினைப் பாடினார்.

சித்தர் வேடத்தில் வந்த சிவபெருமானின் தோற்றத்தினைப் படம்பிடித்துக் காட்டுகின்றார். கல்லானைக்குக் கரும்பு தந்தது, இரசவாதம் செய்தது, முதலான பகுதிகள் வியப்புக்குரியன.

வலைவீசிய புராணத்தில், இவரது புராணத்திற்கும், நம்பிதிருவிளையாடற் புராணத்திற்கும் வேறுபாடுகள் காணப்படுகின்றன. தனித்த "வலைவீசு புராணம்" வேறுவகையாகக் கூறுகின்றது. இதன் தொடர் இதனை அடுத்துள்ள அறிமுகப் பகுதியில் காணலாம்.

இதில், திருமுருகாற்றுப்படையை, நக்கீரர், இயமலையின் நடுப்பகுதியில் இருந்து பாடியதாகக் கூறுகின்றது. பிற செய்திகள் அறிமுகப் பகுதியில் காணலாம்.

பரஞ்சோதிமுனிவர், திருவிளையாடற் புராணம் இயற்றுவதற்குப் பல நூற்றாண்டுகட்கு முன்னரே அந்நிகழ்ச்சிகள் நாட்டில் வழங்கி வந்ததாகக் 'கல்லாடம்' எனும் நூலில் கல்லாடர் கூறுகின்றார் என்று கூறுகின்றார் டாக்டர் வ. கோபாலன் அவர்கள்.

'சிவன்' என்ற பெயர் கிறித்து பிறப்பதற்கு பல நூற்றாண்டுகட்கு முன்னரே உலகில் பல பாகங்களிலும் வழிபட்டுவந்த இறைவன் பெயர் என்பது உறுதியாகிறது என்று அவர் மேலும் கூறுகிறார்.

திருவிளையாடலில் பங்குபெற்ற பாத்திரங்கள் 95 அவை,

| | | |
|---|---|---|
| 1. | சிவபெருமான் (பல வேடங்களில்) | 1 |
| 2. | தொடர்புடைய பாண்டியர்கள் | 23 |
| | சேரமான் பெருமாள் (சேரன்) | 1 |
| | காடுவெட்டி சோழன் (சோழன்) | 1 |
| | விக்கிரம சோழன் (சோழன்) | 1 |
| 3. | பிறபாத்திரங்கள் | |
| | ஆண்கள் | 23 |
| | பெண்கள் | 23 |
| | தேவர்கள் அசுரர்கள் | 9 |
| | முனிவர்கள் | 9 |
| | விலங்கு | 2 |
| | பறவை | 2 |
| | | ..... |
| | ஆக கூடுதல் | 95 |
| | | ..... |

இவர்களில் சொக்கேசன் கூலியாளாக வந்து திருவிளையாடல் செய்ததனை யாவரும் அறிவர். இத் திருவிளையாடல் புகழ் பெற்றது.

"அரும்பிட்டுப் பச்சிலையிட்டாட் செய்யும் அன்னையவள்
தரும்பிட்டுப் பிட்டுண்டான் தலையன்பில் கட்டுண்டு"

மூதாட்டி வந்தியாள். அவளுடைய அன்பிற்கும் பக்திக்கும் இரங்கி அழுக்கடைந்த பழந்துணி ஒன்று அரைக்கு அசைத்து, தேய்ந்த மண்வெட்டியும், கூடையும் கொண்டு அம்மையார் தெருவழியே வந்து "கூலி கொடுத்து எனை வேலை கொள்வாருண்டோ?" என்று கூறிக் கொண்டு வரவும், மூதாட்டி உள்ளே அழைத்து, 'தெள்ளியடு சிற்றுண்டி சிக்கடைந்த பொதிநீக்கி அள்ளியெடுத்து அருந்தப்பா

என்றிட்டாள்.' அவர் அரைக்கசைத்த புள்ளியுடைத் துகில் அவிழ்த்து முந்தானை ஏந்தி, வாங்கி உண்கின்றார். இதனைப் பரஞ்சோதியார்:

"தெள்ளியடு சிற்றுண்டி சிக்கடைத்த பொதிக்கி
அள்ளியெடுத்து அருந்தப்பா என்றிட்டாள் அரைக்கசைத்த
புள்ளியுடைத் துகில்நீத்தார் புறத்தானை விரித்தேந்தி
ஒள்ளியதென்று அவள் அன்பும் உடன்கூட்டி அமுது செய்தார்"

என்கின்றார்.

இதனால், இறைவன் அன்புக்குக் கட்டுப்பட்டவன் என்பதனை உணர்த்துகின்றார். உடைப்பை அடைக்காது இருந்தபோது பிரம்படி பட்டார். அன்பர்கட்காக அடியும் படுவேன் என்கின்றார். இதனால் வேலை செய்யாதவர்கட்கு அடியும் கிடைக்கும் என்று உணர்த்துகிறார்.

ஆலவாய் அழகன் பாண்டியனால் அடிக்கப்பட்டார். அந்த அடி எல்லோர் முதுகிலும் பட்டது. ஆனால் அவர் உண்ட பிட்டு யாருக்கும் வரவில்லை. இதனால் இறைவன் 'ஏகன்' அனேக'னாக இருக்கின்றதனைக் காட்டினார். மேலும் வேலை செய்யாதிருந்த போது, இவரை, மற்றவர்கள், "உள்ளொடு புறங்கீழ் மேலாய் உயிர்தொறும் ஒளித்து நின்ற கள்வனை வந்தி ஆள் இவன்' எனக் காட்டினர் என்கின்றார். பரஞ்சோதியார். இதனால் பிறவாயாக்கைப் பெரியோன் உயிர்தொறும் ஒளித்து நிற்பவன் என்பது புலனாகிறது. "கள்வனை இவன் எனக் காட்டினார்" என்ற சொற்களால், முன்பு, அங்கு திருஞானசம்பந்தர், தனக்கு ஞானப்பால் தந்த இறைவனை, 'உள்ளங்கவர் கள்வன்,' 'பெம்மான் இவன்' எனக்காட்டினார்.

இங்கு, 'இவன்' என, கூலியாளாக வந்த இறைவனைக்காட்டினார். ஆக இந்த இரண்டு இடங்களில் மட்டுமே இறைவன் 'இவன்' எனச் சுட்டிக் காட்டப் பெறுகின்றான். இதனால் இறைவன் அடியவர்கட்காய் எளிவந்த பிரானாக இருக்கிறான் என்பது இந்த வரலாற்றால் அறியக் கிடைக்கிறது.

"...................................திருமிக்கே"
ஓர்வாழ்க்கை வேண்டி உயரிகிழி கொள்வான் கொங்கு
தேர் வாழ்க்கை என்றெடுத்த செய்தியும்"

என்ற இதனால் இறைவன் தருமிக்குத் தந்த 'கொங்குதேர் வாழ்க்கை' எனத் தொடங்கும் பாடலை நக்கீரன் அகந்தையினால் மறுத்ததால் அவனை மடுவில் விட்டார். இறைவன். பின் அகந்தை நீக்கிப் பணிந்தான். திருமுருகாற்றுப்படை பாடினார். இதில் இறைவன், அகந்தையினை அழிப்பவர்.

உக்கிர குமார பாண்டியனுக்கு வேல் வளை செண்டு கொடுத்த படலத்தில் பெண்களின் இலக்கணம் கூறுகின்றார்.

மாணிக்கம் விற்ற படலத்தில் நவமணிகளின் இலக்கணம் கூறுகின்றார். கால் மாறியாடியதில் நடனக்கலை படம்பிடித்துக் காட்டப்படுகிறது. விறகு விற்ற படலத்தில் இசை நுணுக்கங்கள் காணப்படுகின்றன. நரி பரியாக்கியதில் குதிரை இலக்கணம் பேசப்படுகின்றது. மற்றும் பல.

எல்லா நிகழ்ச்சிகளிலும் இவ்வுலக வாழ்வியல் நெறிமுறைகளுக்குரிய மையக் கருத்துக்களைக் கொண்ட கதைப் பொருள்களே அமைந்துள்ளன. இவை இல்லறத்தார், அரசர், அடியார், கலைஞர், மற்றையோர் கடைப்பிடிக்க வேண்டிய நெறிகளைக் கூறுகின்றன.

கருணைக் கடலான கடம்பவன சுந்தரன், பாணபத்திரருக்கு உதவும் பொருட்டு, சேரமான் பெருமாள் நாயனாருக்கு ஒரு (கடிதம்) முடங்கல் தருகின்றார். முன்பு தருமிக்கு 'கொங்குதேர் வாழ்க்கை' என்று தொடங்கி எழுதித் தந்ததுபோல், சேரமானுக்குக் கொடுத்தது 'திருமுகப்பாசுரம்' என்றழைக்கப் படுகின்றது. இதில் கடிதத்தின் இலக்கணம் காணப்படுகின்றது. பதினோராம் திருமுறையில் முதற்பாடலாகக் காணப்படும் இது:

"மதிமலி புரிசை மாடக் கூடல்
பதிமிசை நிலவும் பால்நிற வரிச்சிறகு
அன்னம் பயில்பொழில் ஆல வாயில்
மன்னிய சிவன்யான் மொழிதரு மாற்றம்
பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்கு
உரிமையின் உருமையின் உதவி ஒளிதிகத்
குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச்
செருமா உகைக்கும் சேரலன் காண்க!
பண்பால் யாழ்பயில் பாண பத்திரன்
தன்போல் என்பால் அன்பன்; தன்பால்
காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே!"

என்பதாம்.

கூடலிங்கு குருமணி தன்மீது அயரா நம்பிக்கை கொண்டு தன்னை வழிபட்டவர்களுக்காகப் பல்வேறு வேடங்களில் தோன்றி அருள்பாலிக்கின்றார்.

சித்தர், புலவர், ஆசிரியர், அரசர், வணிகர், தொழிலாளர், வேடர், வாளாசிரியர், அந்தணர், முதியவர், தவசி, குதிரைப் பாகன், மாமன், வலைஞன், பசு, பன்றியாக வடிவம் கொண்டு திருவிளையாடல்களை நிகழ்த்துகிறார்.

| | | | |
|---|---|---|---|
| சித்தர் | 5 படலங்கள் | புலவர் | 5 படலங்கள் |
| ஆசிரியர் | 3 ,, | அரசர் | 8 ,, |
| வணிகர் | 2 படலங்கள் | வேடர் | 3 படலங்கள் |
| தொழிலாளர் | 2 ,, | | |

அந்தணன் - 1, முதியவர் - 1, பிட்சாடணர் - 1, தவசி - 1, சேனைத்தலைவன் - 1, குதிரைப்பாகன் - 1, மாமன் - 1, வலைஞன் - 1, பன்றி - 1, பசு - 1, ஆகிய வேடங்களில் தோன்றுகின்றார். தான் இருந்தபடியே அருள்வதாக 5 படலங்கள், அடியார்களுக்குக் காட்சிதரும் அருளாளராக 7 படலங்களிலும், பிறர்வாயிலாக அருளல் 3 படலங்கள், கனவில் தோன்றி அருளால் 5 படலங்கள், அசரீரியாக 6 படலங்கள் ஆகியவற்றில் விளையாட்டயர்கின்றார்.

ஆடகமதுரை அரசனாம் ஆலவாய்ச் சொக்கன் அருள் விளையாடல்களைப் பரஞ்சோதிமுனிவர் கூறிய பாங்கு போற்றுதற்குரியது. போற்றியும், மதித்தும், துதித்தும், படித்தும், பாடியும், படிக்கப் பக்கநின்று கேட்டும் இன்புறுகின்றனர் மக்கள்.

இவ்விளையாடல்கள் அனைத்தும் மதுரையில் அந்தந்த நாட்களில் கொண்டாடப்படுகின்றன. ஆண்டு முழுவதும் விழாக்கோலங் கொண்டுள்ள பதி, மதுரையம் பதி ஒன்றே ஆகும்.

பரஞ்சோதியாரைக் 'கலைப்பெருங்கடல்' என்றே கூறலாம் என்று, மனம் கசிந்து, மகிழ்ந்து, முனைவர் ப. கோபாலன் அவர்கள் தனது, 'பரஞ்சோதி திருவிளையாடற்புராண' இலக்கிய மதிப்பீட்டில் கூறியுள்ளார்.

"ஆலந் தரித்தலிங்கம் ஆலவாய்ச் சொக்கலிங்கம்
மூலமாய் எங்கும் முளைத்தலிங்கம் – பாலொளியாம்
மத்தனே கூடல் மதுரா புரியுமையாள்
அத்தனே ஆலவா யா!"

என்ற சொக்கநாத வெண்பாவின் சிறப்புப்படி எங்கும் முளைத்த லிங்கமாம் சொக்கலிங்கத்தின் 64 திருவிளையாடல்களைப் பரஞ்சோதியால் பாடியுள்ளதனை மக்கள் படித்துப் பக்தியுணர்வு பெறுகின்றனர்.

இப்புராணம் தொடர்புடைய நூல்களை ஆய்வுக் கண்ணோட்டத்தோடு, இதனை அடுத்து அறிமுகம் என்ற தலைப்பில் தந்துள்ளோம். எங்கெல்லாம் திருவிளையாடற்புராணம் எப்படி எப்படியெல்லாம் மிளிர்கின்றது என்பதற்காகத் தரப்பட்டுள்ளது.

திருவிளையாடற்புராணம் பல இடங்களில் பலபதிப்புகள் ஒளிர்கின்றபோதும், நம் சரசுவதி மகாலிலுள்ள ஓலைச் சுவடிகள் மூலம் பதிப்பிக்க வேண்டும் என்று எண்ணிய தமிழ் வல்லுநர்குழுவின் பரிந்துரையின்படி, இதனை எமக்குத்

தந்துள்ளனர். இதனைப் பதிப்பிக்க அனுமதிதந்த அப்போதைய மாவட்ட ஆட்சித் தலைவரும், சரசுவதி மகால் இயக்குநருமான திருமிகு **சி. கோசலராமன்,** இ.ஆ.ப. அவர்கட்கும், தற்போதைய மாவட்ட ஆட்சித்தலைவரும், சரசுவதி மகால் நூலக இயக்குநருமான திருமிகு **எம்.எஸ். சண்முகம்,** இ.ஆ.ப. அவர்கட்கும், ஷை மகால் நிருவாக அலுவலரும், வெளியீட்டு மேலாளர் பொறுப்புமான திருவாளர் **சாமி. சிவஞானம்** அவர்கட்கும் இந்நூலினை நன்முறையில் அச்சிட்டுத் தந்த சரசுவதி மகால் நூலக மற்றும் ஆய்வு மையப் பணியாளர்கட்கும் எமது மனமார்ந்த நன்றியினை உரித்தாக்குகின்றோம். இதில் காணும் குற்றம் களைந்து குணம் பெய்து வாசித்தல் கற்றறிந்த மாந்தர் கடன். மக்கள் யாவரும் இந்நூலினை மனங்கொண்டு நல்லருள் பெற அந்த ஆலவாய்ச் சொக்கனை வேண்டுகிறோம்.

இங்ஙனம்,
தவத்திரு **சொக்கலிங்க** சுவாமிகள்
எனும்
புலவர் **வீ. சொக்கலிங்கம்**
(முன்னாள் தமிழாசிரியர்),
சரசுவதி மகால் நூலகம்.

தஞ்சாவூர்,
24.09.2008.



பிற நூல்களில்

# திருவிளையாடற் புராண ஆய்வு

## அறிமுகம்



உ

திருச்சிற்றம்பலம்

# கடம்பவன புராணம்

(அறிமுகம்)

பத்தாவது

## இல்லா சங்கிரக அத்தியாயம்

### 1. இந்திரன் பழிதீர்த்த திருவிளையாடல்

புரந்தரன்முன் விருத்திரா சுரனை வீட்டும்
புன்பழிநாற் கூறாக்கி நீக்கி வந்தே
யரந்தைதவிர் நிருத்தங்கண் டிருக்கத் தேவர்
மனங்கவரு மடல்வேட்ட மென்னப் போந்து
வரந்தருநற் கதம்பவனத் தருளா லெய்தி
வரதனைத்கண் டாவிப்பொற் கமலஞ் சூட்டித்
திரந்தருசித் திரையில்விடாப் பழிநீங் கற்கெண்
டிண்கயமா னஞ்சாத்திச் சிறப்பின் வாழ்ந்தான் (1)

## 2. வெள்ளானைக்குச் சாபந்தீர்த்த திருவிளையாடல்

வாசவன்கூ றிடவயிரா வதநீ பக்கான்
வந்தருளா லீசனைக்கண் டிறைஞ்சி வேந்தன்
றேசுபெறு துருவாசன் கொடுத்த சேடந்
திருமுடிசூ டாதிகழத் தென்னர் கோவாற்
பேசுறுமா முடிபிளக்க வெற்று ணென்றும்
பெரிதுதுகைத் திடுமெனைவிண் ணகன்று மண்ணிற்
காசுறச்செல் கென்றுமுடன் சபிப்பப் போந்தே
னெனக்கழறிக் கடுஞ்சாபந் தீர்ந்தே கிற்றால். (2)

## 3. தடாதகையார் அவதரித்த திருவிளையாடல்

தென்னன்மல யத்துவசன் காதன் மாதர்ச்
சேர்ந்துநெடுங் காலங்கள் போக்கி வேந்த
ரின்னகைமா தினைமணந்து மகவி லாம
லியற்றுதவத் தான்மூன்று முலையி னாலோர்
மின்மகவை யருளவரு ளால மைச்சன்
விளங்கியபேர் தடாதகையாங் கணவற் கண்டான்
மன்னுமுலை மறைந்தரசா மெனப்பொன் மோலி
வைத்தரசன் வானடைந்தான் மதுரை யாண்டாள்! (3)

## 4. மணஞ்செய்த திருவிளையாடல்

மும்முலையாள் கணவனைவேட் டெழுந்தெண் டிக்கு
முடுகிவிச யஞ்செய்து கயிலை மேவ
வம்மினென விமையவர்போர் புரிந்தாற் றாது
வந்துரைப்ப வஞ்சலென்றீ சன்முன் கண்டாள்
செம்மையிற்காண் பளவின்மற்றைத் தனம றைந்த
செயலறிந்தே யருளெனலுந் திருக்கண் சாத்தித்
தம்முறையான் மணந்துமுடி சூடி வையந்
தனையாண்டு சிவலிங்கார்ச் சனையுஞ் செய்தான்.(4)

## 5. பதஞ்சலிக்கு நடஞ்செய்த திருவிளையாடல்

திருமணத்தின் வந்தோர்க டமைநீ ராடிச்
செம்மினிவ ணெனமூழ்கி முனிவர் தேவர்
வருமவரிற் பதஞ்சலிமா முனிவன் றில்லை
மன்றினடங் கண்டல்லாற் புசியே னென்ன
தருமகவான் சாத்தியபொன் மான மீது
தளிர்ப்பொடுகண் டறிதியெனக் காட்டி முன்னை
யருமறைசூழ் கனகசபைத் தென்பால் வெள்ளி
யம்பலத்தி னடம்புரிந்தான் புசித்தான் கண்டு. (5)

## 6. பூதமுண்ட திருவிளையாடல்

தடாதகைசொல் வாளிறைவ நின்னோ டிங்குத்
தாவில்பலர் வருவரென வமைந்த வன்னம்
விடாதசுரர் சுரர்நாகர் நரர்க ளுண்டு
மிகவளருந் தொலைந்ததிலை யென்னும் வேலை
யடாதபசி யால்வருந்தி மெலிந்த குண்டோ
தரனாற்றே னெனவலர வீசன் காட்ட
வடாதுகயி லைக்கிரிக்கோ ரன்னக் குன்றை
வாரியபின் றதுநொடியின் மங்கை காண. (6)

## 7. ஆறழைத்த திருவிளையாடல்

பொருவருமா தபத்திரந்தாங் கியநான் சிற்றூண்
புசித்திளைத்தே னென்றன்னங் குழிக ணான்கின்
வருதலுநாற் றிரளையாய் விழுங்கித் தெண்ணீர்த்
தாகத்தான் மடுப்பொய்கை வாவி கூபப்
பொருபுனலுள் ளனகுடித்தும் புனிதா நீரென்
றோலிட்ட பூதநதி யழைத்துக் காட்ட
வொருவுகிழக் ககன்றபுனன் மீண்டுஞ் செல்ல
வுறிஞ்சியது மணல்பிறங்க வாயங் காந்து. (7)

## 8. கடலழைத்த திருவிளையாடல்

அன்புடைய வன்னைகட லாடற் கெண்ண
வவண்மொழிகேட் டீசனைத்தன் வயத்த தாக்கு
நம்புடையா டொழுதுரைத்தம் மாற்றங் கூற
நயந்தறியா ரெனவிருந்து முகம்வா டக்கண்
டின்புடைநின் முகவாட்டந் துணிந்து காண்பா
னெண்ணியிருந் தேனெனவேழ் கடலுங் கூவத்
தென்புடவி கடவாதவ் வடைவின் வந்து
சிவதீர்த்தத் தடத்துறவேழ் கடலென் றார்கள். (8)

## 9. மலயத்துவசனை யழைத்த திருவிளையாடல்

வாருதியொன் றுவந்தனையேழ் கடலு மிங்கு
வந்தனநம் மிறையருளா லாடு கென்னப்
பேருததி மாமடவா ராடிற் கொண்கண்
பிறங்குசுத னான்கன்றோ டாடி னல்லாற்
சாருறவா டாரென்பர் வரரென் றியாய்முன்
சாற்றுதல்சாற் றப்பதியை யழைத்துக் காட்டிச்
சீருதவு கணவனொடா டிப்போற் றாமுன்
சிவலோகங் கொடுக்கவவர் சேர்ந்து வாழ்ந்தார். (9)

## 10. உக்கிரன் பிறந்த திருவிளையாடல்

பொன்மலய மயிலாக புரிந்து காக்கும்
புவிமுழுதோர் புரமெனவே புரக்கும் வேந்தன்
மன்மதிநன் மரபோங்க விருங்கோ மாறன்
மாறறுசுந் தரமாற னாதி மாறன்
மென்முளரிக் கண்ணுவந்தோ னருளால் வேலோன்
விமலைதடா தகைவயினுக் கிரனா ரென்றோர்
நன்மகவாய்ச் சடையொடுமுற் பவிக்க மோலி
நனிகவித்தான் கோச்சடில வரும னென்றார். (10)

## 11. வளைவேல்செண்டு கொடுத்த திருவிளையாடல்

தாவருமுக் கிரன்றலையிற் புவிவன் பாரந்
        தாங்கெனவைத் தருள்புரிந்தங் கிமையோர் வேந்த
னோவமுடி சாடுகென வளையுந் தந்து
        நூக்குகடல் சுவறவெறி கெனவே லீந்து
மேவருகந் துகம்போல விமையோர் வாழ்பொன
        மேருவினை யடிக்கெனவன் செண்டை நல்கித்
தேவர்புகழ் மணம்புணர்வித் தமலை யோடுஞ்
        சிறந்தகணத் தொடுமறைந்தான் செழிக்க வையம். (11)

## 12. நான்மாடக் கூடலான திருவிளையாடல்

தாணுவலி யறிவானங் கெண்ணி யேவுந்
        தடங்கடலைச் சுரர்சித்தர் மனிதர் நாகர்
பூணரவா வெனுமுன்விடக் குடித்த வென்றிப்
        புட்கலாவ ருத்தமுதற் புயல்க ணான்கா
மாணுறுமா மழையையே வுறநான் மாட
        மாக்கிவலி தொலைவிக்க விகல்விட் டேகி
நாணொடுதாழ்ந் தருச்சித்தான் வருணன் றூய
        நகரிதனை நான்மாடக் கூட லென்றார். (12)

## 13. சித்தரான திருவிளையாடல்

மாத்திரைபொக் கணம்யோக பட்டத் தோடு
        மதுரையிலெல் லாம்வல்ல சித்த ராகி
யேத்திமட வாரெல்லாம் வீதி தோறு
        மினவளைசிந் திடவெங்கும் வந்து லாவிச்
சேர்த்திமன் னாள்பிடிப்ப வகப்ப டாது
        சென்றுமருத் தின்றிசைக்கல் லியத்தின் பாங்கர்த்
தோத்திரஞ்சே ராலயத்துட் டென்னர் கோமான்
        றொடுதிடுவான் வரமதியா திருந்தான் சொக்கன். (13)

## 14. கல்லானை கரும்பு வாங்கின திருவிளையாடல்

வல்லவநீ யாக்கினா சித்த னாயின்
வாங்குவிகல் லிபத்தால்யாங் காண்ப மென்றே
யெல்லவர்கா ணக்கைகன் னலைக்காட் டாமுன்
வாங்கியயின் றிதுகமல நாள மென்றே
சொல்லருமார் பணிதரள வடமும் பற்றித்
துணைவினயின் றதிரமுழங் கிடமுன் சீறும்
வில்லரச னஞ்சியதி சயிப்ப வானில்
விரைவினோடு நகைத்தொளித்தான் விமலச் சித்தன். (14)

## 15. சங்கப்பலகை கொடுத்த திருவிளையாடல்

தவிசுவிரும் பிப்புலவர் வேண்டக் கன்மாப்
பாவறிவ தொருபலகை தந்தே பின்பு
புவிபுகழ்கீ ரன்பரணன் கபிலன் முன்னாப்
புகழ்ந்தடைவி னிருந்துதமிழ் வைத்தாங் கெய்தி
விவிதமெனுங் காலநீ ளத்தாற் செய்யு
டலைமயங்கி மீண்டொருகான் மலைதல் கொண்டாண்
டவைபொருந்து பொருள்செய்து கூட்டித் தானு
மேறினா னரனாற்பத் தொன்ப தென்றார். (15)

## 16. கிழியறுத்த திருவிளையாடல்

திருந்துசிவ முனிதருமி தளர்ந்தோன் மன்றல்
செய்வான்வண் பொருளிலையென் றேத்த விங்குப்
பொருந்துமடந் தையரொடுயர் தலத்து லாவும்
புகழ்மாற னணைந்தமணங் கண்டீ தென்கொ
லருந்தமிழா லிதுபொருந்தப் பாடு வாரே
லளிப்பலென்றோர் பொற்கிழிநற் சபையுட் டூக்க
மருந்தனையான் கொங்கென்றோர் கவிதை பாடிக்
கிழியறுப்பான் வழங்கியொப்பித் தனன்கீழ் நின்றே. (16)

## 17. நக்கீரனைக் கரையேற்றின திருவிளையாடல்

நாவலவ ரன்பர்பிழை பொறுக்குஞ் சொக்கே
நக்கீரன் பிழைபொறுத்துன் னுதற்கட் டீயால்
வேவுறச்சுட் டிடுதுயர்நீத் தருளை நல்கி
விளங்கியசொல் லெனும்புகழந் தாதி கேட்டுப்
பூவைகயற் கண்ணியொடும் பொய்கை மேவிப்
பொன்மலர்ச்செங் கைகொடுத்துக் கரையேற் றென்றே
தேவர்புக ழாலயத்துட் சென்று போற்றத்
தேவியொடுஞ் சென்றுகரை யேற்றினானே! (17)

## 18. குறுமுனிக்குத் தமிழுரைத்த திருவிளையாடல்

ஒண்கவிகுன் றும்பின்ன முறுகீ ரற்கிங்
குரைதமிழ்நூ லருள்பவர்யா ரெனவெம் மன்னை
திண்புவிப்போந் துயர்தருதென் றிசைவை கென்று
தென்முனிக்குக் கயிலையின்முன் புகன்ற ஞான்று
விண்புகழ்முத் தமிழுரைத்தா யென்றி றைஞ்ச
விளம்பியயான் மறந்தனனீ நினைத்தி ருந்தா
யெண்வழிநன் றென்றவற்கு முணர்த்து வாயென்
றியன்முனிவா வெனவழைத்துள் ளுபதே சித்தான். (18)

## 19. ஊமை தமிழறிந்த திருவிளையாடல்

சங்கத்தா ரிறையனார் பொருட்கே னோருந்
தகைமைபெற வுரையெழுதி மலைந்து முன்சென்
றெங்கட்கீ தறிபவனே நல்ல சொல்லென்
றியம்பவெல்லா மறிவனிவ்வூர் வணிகன் மைந்தன்
றுங்கவுருத் திரசன்ம னூமன் றன்னைத்
தூயமண்ட பத்துவைத்துச் சொன்மி னன்மைக்
கங்கமுறும் புளகெனப்போந் திருத்திக் கண்டே
யக்கீரன் முதன்மூவ ருரைகொண் டார்கள். (19)

## 20. இடைக்காடன் பின்போன திருவிளையாடல்

கூறுமிடைக் காடனியற் கவிதை பாடிக்
கொடுகாண மன்னிகழ்ந்து தள்ள நொந்தே
வீறுயரா லயத்துணுகிப் பொருணீ சொல்லுன்
மெல்லியென மறைபுகலு மிகழ்ந்த துன்னை
மாறகலுன் றேவியைமற் றிலையென் றேத்தி
வரைந்தேக யானுமே குவலென் றேகி
யேறியசங் கத்தொடிருந் தழைப்பப் போந்தா
னிடத்தைவட திருவால வாயென் றார்கள். (20)

## 21. கடல்சுவற வேலெறிந்த திருவிளையாடல்

சீலமது ரையையாழி கொள்வான் மேவர்
சிவனருண்ஞா னக்கண்ணாற் கண்ட போதே
யேலவருங் கனவினிலுக் கிரமா றன்பா
லெய்தியரும் புதல்வகே ளெதிர்சென் றேநின்
றோலமொடுங் கழியவருங் கடலை யாமுன்
னுதவியவே லெறிந்துசுவற் றென்னப் போதும்
வேலைசுவ றிடவேலை யெறிந்தா னாமம்
வேலைவடிம் பலம்பநின்றா னென்றா ரன்றே. (21)

## 22. வலைவீசின திருவிளையாடல்

அம்பிகைக்கா கமங்களியம் புங்காற் கேட்ட
வரியபொருண் மறந்திடக்கண் டமலன் சீறி
வெம்பரதர் குலத்துதிபோ கெனவு தித்த
மெல்லியைக்கொள் வானுருக்கொண் டணுகிக் கேட்பக்
கம்புததிக் கொலைமகர வரையொன் றுண்டெங்
கவலறநீ வலைவீசிப் பிடித்து வந்தா
னம்புதரு குவமெனவம் முறையி னோடு
நளிமகரம் பிடித்தடைவின் மணஞ்செய் தானால். (22)

## 23. வளையல் விற்ற திருவிளையாடல்

மாதவர்க ளாச்சிரமத் தெய்தி மாதர்
மாமைகவர்ந் தவர்கொழுநர் சவிப்பப் போந்தே
கோதையர்நீள் வணிகர்குலத் துதித்தி லங்கக்
கோலவளை வணிகனாக் கூறிச் சென்று
வீதியின்மா லாக்கிச்சூ லாக்கித் தீயில்
வீழ்ந்திடுவா னொருப்படுங்கால் விருப்போ டஞ்சி
யாதியுரு மறைத்தொருதன் னுருவங் காட்டி
யவருவப்ப வுயர்குலமென் றருளிச் செய்தான். (23)

## 24. இலச்சினையிட்ட திருவிளையாடல்

காடுவெட்டி யென்பானோர் பழுதில் சோழன்
கனப்படையோ டெய்திவையை வடதீ ரத்தி
னாடிவணங் குதற்கிரங்க வல்ல சொக்க
னயந்திரவு பகலோக்கிச் சென்று மாற
னீடுகயல் பொறித்தடைத்த வடபால் வாயி
னெடுமதிலி னொடுமுரித்துக் கொணர்ந்து தான்றன்
சேடுருவங் காட்டிவிடுத் தடைத்தா னேற்றின்
றிகழுமிலச் சினைவாயி லெனப்பொ றித்தே. (24)

## 25. மாணிக்கம் விற்ற திருவிளையாடல்

செழியர்குலத் தருளினா லுதித்தோர் மைந்தன்
செலும்பருவ மைந்திலடல் வேட்டைக் காட்டிற்
றழியபுலி தாதையைக்கொண் டேக வங்குச்
சார்பில்லாப் புதல்வர்நிதி கவர்ந்தே கக்கண்
டொழிவின்முடி சூடுவான் மறைத்துக் காத்த
வமைச்சர்முடிக் காமணியின் றென்றோ யுங்காற்
கொழிதமிழ்தேர் பட்டினத்துச் செட்டி யென்று
கொணர்ந்துவிற்றான் மாணிக்க மவுலி சூட்ட. (25)

## 26. ஆனையெய்த திருவிளையாடல்

தவறறுமீ னவனையொரு சோழன் சென்று
        தன்படையால் வெலமாட்டான் சமணர் தம்மாற்
புவனிவளர் மதுரையையோர் கவள மாகப்
        போந்துவிழுங் கெனவிட்ட களிற்றை வீழ
விவர்புகழ்பே ரட்டாலை மீது நின்றோ
        ரேவிடக்கண் டியானைமலை யென்றா ரன்று
குவைகொள்சொரி யிலத்தியிலத் திமிலை யென்றார்
        கோறொட்டா னட்டாலை வீர னென்றார். (26)

## 27. ஞானோபதேசஞ் செய்த திருவிளையாடல்

கணநாதர் தமிலொருவன் விடையிற் போந்து
        கமழ்மதுக மகிழ்வாத புரத்து வாழந்
தணராமாத் தியர்குலத்துட் டோன்றி மாறன்
        றனக்குரிய மந்திரியா யிவுளி கொள்வான்
வணமார்பொன் னோடுபெருந் துறைசேர்ந் தாசான்
        வழங்குபதே சமும்பெற்றுத் தமிழ்பா டித்தன்
னிணையாந்தொண் டருக்கிரும்பொ னீந்தே கென்ன
        வேகினான் றென்மதுரை வேந்தன் றன்பால். (27)

## 28. நரி குதிரையான திருவிளையாடல்

வருமிவுளி யிடம்போதா மதுரை யென்றோர்
        மண்டபத்து மாறனுயர் சிறப்பின் வைகி
யொருமையொடு வினவவரும் வருமென் றோதிப்
        பரிதவிப்ப வுரைத்துவிட்ட முறைசெய் வோர்க
ளிருநிலெனக் கொடுந்தண்ட மாற்றா ராகி
        யின்புறுவா சகமோத விரங்கிச் சொக்க
னருநரிமா வாய்க்கொணர்ந்திட் டுகைத்துக் காட்டி
        யாடையும்வாங் கிப்பரிமாற் றறுதி யென்றான். (28)

## 29. குதிரை நரியான திருவிளையாடல்

அருளாற்பந் தியிற்கட்டும் பரிக ளெல்லா
        மருக்கனெழு முன்னிமையோர் நகைப்ப வாழ்ந்த
பொருளாரம் புவிமாறன் பொருமி யேங்கக்
        குறுநரியாய் நெடியகுரல் காட்டப் போந்து
மருளாருந் துறையாள ருரைப்பச் சால
        மகிழ்ந்திருந்த மன்னவன்போல் வாத வூரர்
வெருளாதுண் மகிழ்ந்தறியார் போன்று செல்ல
        வெகுண்டுகண்டு சிறைவைத்தான் மிகவுஞ் சீறி. (29)

## 30. மண்சுமந்த திருவிளையாடல்

மீதுயர்ந்து பௌவமெனப் பெருகும் வையை
        மேண்மைநதி யுடைப்படைப்பா னடைந்த வம்மை
யாதரிக்கும் பிட்டுதிர்க்கு மண்சு மந்தாண்
        டடிபட்ட மாறெங்கும் படவி தேதென்
றோதுங்கான் முனியைவிடு விடென்றோர் வாக்காங்
        குயர்வான்றோன் றச்சிறைவிட் டழைத்துள் ளஞ்சிப்
பாதமல ரிறைஞ்சிநும்மிச் சையிற்போ மென்று
        பகர்ந்துவிட்டான் பெயர்மாற்றான் மாற னென்றார். (30)

## 31. விருத்த குமார பாலரான திருவிளையாடல்

வரமுனிவ னொருவன்றன் மகவைப் பாக
        வதன்வரவே தங்கண்டீந் திடச்சீ றுற்றா
ருரைசெயவுண் டென்றாறி விடுப்பர் சென்றோ
        னுறுசைவன் மகளென்று தொடானம் வீச
னரைவிருத்த னாய்புகுந்துட் குமார னாகி
        நனிமாமி வரவழும்பா லனுமாய்க் காட்டிப்
பெரிதுமழ கிதென்றுதள்ள வுருவங் காட்டிப்
        பேதையையுங் கொண்ட கன்றான் வியக்க யாரும்.(31)

## 32. மாறியாடின திருவிளையாடல்

தென்னனுவந் தறுபத்து மூன்றாய்த் தெண்ணெண்
டிண்கலைவல் லானெனவாங் கணைந்தோர் பாட்டன்
பன்னியநாட் டியமறியாய் வளவ னாமம்
வருசகல கலாவலவ னென்னக் கற்றாங்
குன்னுமுன்னோர் தாள்வருத்தம் பொறானோய்ந் தீச
னொருதாளி னின்றானென் றழுங்கு வாற்கண்
டன்னவட கீழ்பாலிந் திரற்கு முன்ன
மாடினான் கான்மாறி யாடி னானால். (32)

## 33. பழியஞ்சின திருவிளையாடல்

மனைவியொடும் போந்திருந்து வழங்க ணான்மேல்
வனசரன்முன் கிளியொத்த வம்பு வீழ்ந்து
தனிமரணம் வரவருவே டனைத்த டுத்துத்
தலைக்கடைசார்ந் தபயமிடும் பனவ னோடு
நுனியிருளின் மணமனைபோ யருளா நிற்ப
நமன்படர்மா தினைக்கொன்ற விசேடஞ் சொல்லி
யினிவரனைப் பசுவாற்கொல் வமெனக் கொல்ல
வெழில்வழுதி யினுந்தெளிந்தான்
மறையோ னுள்ளம். (33)

## 34. மகாபாதகந் தீர்த்த திருவிளையாடல்

அனையைமன மருட்டியொரு மறையோன் புல்லி
யுளவறியா வத்தனைமண் கொட்டால் வெட்டாக்
கனையிருளிற் கொடுபோங்கால் வேடர் மாதைக்
கைக்கொடுசெல் லாரடித்த புண்ணீ மொய்ப்பத்
துனைவினின்மண் ணுலகினில்வா வென்பா ரின்றிச்
சுழன்றுதவத் தாற்கடம்ப வனத்தின் மேவத்
தனையடைந்தோர்க் கருள்சொக்கன் வெறுத்து வேளைத்
தவிராமா பாதத்தைத் தவிர்த்தா னன்றே! (34)

## 35. அங்கம் வெட்டின திருவிளையாடல்

அன்பர்தமக் கிடர்வருமோ கருணைச் சொக்குண்
டாகவெனும் பணிக்கனிடத் தடைந்து கற்குந்
தென்பரவா யுதகலைகள் பயில்வோர் தம்முட்
சித்தனெனு மொருதீம்பன் முற்றுங் கற்று
மின்பரவா சான்மனைகை தொடக்கண் டீசன்
விருத்தனென்றோ விதுநினைந்தாய் வெட்ட வாவென்
றென்பகர்வ தவனுருக்கொண் டறைகூ விச்சென்
றில்லினுட்போய் மறுகேறி வெட்டி வீழ்த்தான். (35)

## 36. மதுரையான திருவிளையாடல்

வெஞ்சமணர் வைதிகநன் னெறிபொ றாது
விடுமரவை நாகமலை யென்ன முன்னம்
பஞ்சவனோர் கணையினா லெய்ய வாயாற்
படக்கக்கும் விடம்பரந்து நரராற்றாது
நஞ்சணிகண் டாவெனச்சென் றேத்தத் திங்க
ணல்லமுதான் மதுரையென மதுர மாக்கி
வஞ்சகர்பின் பசுவைவிட விடையை யேவி
வலிதொலைத்தா னிடபகிரி பசுவெற் பென்றார். (36)

## 37. வெப்புத் தீர்த்த திருவிளையாடல்

புகலியினில் வைதிகவா ரணமென் றியாரும்
போற்றியசம் பந்தரென்றோர் புதல்வர் தோன்றித்
தகவுமையா டிருமுலைப்பா லமுத முண்டு
தந்தருண்ஞா னம்பெற்று மதுரை மேவிப்
பகவனரு ளால்விட்ட மடத்தி லிட்ட
படுதழன்மா றனுக்கேவித் தணியா வெப்புந்
திகையமணர் காணவொழித் தொழியாக் கூனுந்
தீரநிமிர்த் தார்புனிதத் திருவெண் ணீற்றால். (37)

## 38. கழுவேறின திருவிளையாடல்

திரண்டமண ரெரியினிடை யெழுதி யிட்டாற்
றிறல்வேகா வேடுடையார் வென்றா ரென்று
முரண்டருவா துரைத்தேறி யழலார் வன்னி
முடுகிமிசை யேடெவையும் வேவ வேவா
தரண்டருநல் லேடெடுத்தார் தம்மோ டின்னு
மாற்றிலிட வாவென்றாற் றிட்டுத் துங்கள்
கரந்தருமே டாழிசெலக் காழி யாரே
டெதிரேற வேறினார் கழுவாய் மீது. (38)

## 39. மெய்க்காட்டிட்ட திருவிளையாடல்

அடற்படையா ளெனவேண்டு மம்பொ னல்கி
யரனடியார்க் கமுதாக்கி யளித்த வென்றிச்
சுடர்ப்படைவேற் படைத்தலைவன் கொடுந்த வீரன்
சுந்தரசா மந்தனென்போன் றன்னைக் கூவி
மிடற்படைமீ னவனாண்ட படையா வென்ன
விமலனுண்டே லவையுண்டென் றுரைத்தோ னுக்காத்
திடப்படுபுள் ளியும்வடுவுங் காட்டிச் சொக்கன்
சேனைகொணர்ந் தரியுகைத்து மெய்க்காட் டிட்டான்.
(39)

## 40. உலவாக் கிழிகொடுத்த திருவிளையாடல்

ஈசனையுண் டென்றேத்தி மறையோர் தம்மை
யிகழ்ந்திமையோ ரவிவேள்வி குன்றி வானம்
பேசுலகம் பொழியாமல் வாடக் கண்ட
பெருவழுதி தளர்ந்திரவு துயிலும் போது
நேசமுனி வரைமறந்த தானின் னாடு
நிலைதளர்ந்த தவரைநம்போற் பழிச்சீ தென்றுந்
தேசொடுகா ணப்பொலியும் பெயும்வா னென்றே
செப்பினன்பொற் கிழிகனவில் வைத்தான் சென்றே.
(40)

## 41. மாமனாகவந்து வழக்குரைத்த திருவிளையாடல்

மகவிலா வொருவணிகன் றங்கை மைந்தன்
மைந்தனெனத் தன்செல்வ நல்கி யிங்குத்
தகைமைபெற விருமெனவைத் தேகத் தள்ளித்
தாயத்தா ரில்லமொடு தனங்கைக் கொள்ள
விகழப்போம் வனிதைமக வொடுங்கோ யிற்போந்
திறைவவெனச் செய்திசொல்ல விரங்கிச் சொக்கன்
மிகையுறுமா துலனுருக்கொண் டவையி லேறி
வேண்டாரை விடவென்றான் வியப்ப யாரும். (41)

## 42. அட்டமாசித்தி பகர்ந்த திருவிளையாடல்

அரன்கயிலை யின்கணிறைஞ் சியக்கி மாரே
றறுவருயர் சித்தியெட்டுங் கேட்குங் காலைத்
திரமுறக்கே ளாதுமறந் திறைஞ்ச நீர்போய்த்
தென்னாட்டிற் பட்டமங்க லத்தாற் கீழ்வீழ்ந்
துரனுறுகல் லாக்கிடத்திர் நீபக் கானத்
துறைகுவம்யா மவணுற்றே சித்தி யாவும்
விரவவறை குவநுங்கல் லுருநீத் தென்ன
மேவினர்க்கு மேவியறி வித்தா னுய்ய. (42)

## 43. தண்ணீர்ப்பந்தல் வைத்த திருவிளையாடல்

பரிவேத்தா வெனவழுதி தமையன் கொள்வான்
பகர்ந்திடுபெண் கொண்டபய னொடுங்கூ டிப்போய்
வரவேற்று வடநாட்டுப் பகையும் வென்று
வந்துதமிழ் மதுரைகொள்வா னெதிரக் கண்டு
தெரிவேகத் துடன்முன்னோன் சொக்குண் டென்று
சிந்தித்தேற் றிடச்சென்று பாலை யாக்கி
யரிபோற்றுங் கடவுளனை யெனத்தற் சேர்ந்த
வரசுவெல வுதவிவைத்தான் றண்ணீர்ப் பந்தல். (43)

### 44. இந்திரன் முடிமேல் வளையெறிந்த திருவிளையாடல்

மன்னவர்மூ வரும்வரவிந் திரனிங் கென்னீர்
வந்ததென விருவர்மழை யென்று போற்ற
வுன்னுமுன வுதவியுரை கொடாத மாறற்
குறுவலிகாண் பானார முதவப் பூண
வின்னருளா லிருந்துளங்கண் டேகு மென்ன
வேகினருள் வழுதிபுய லரசர் தம்மை
மின்னிகள மிடவவனொந் தோலை போக்க
வேளாளர் பிணையில்விட்டான் மழைமல் கிற்றால். (44)

### 45. பொன்னனையாளுக் கருள்புரிந்த திருவிளையாடல்

பூவணத்திற் பொன்னனையாள் பதியி லாண்முன்
புனிதனுருக் கும்பிடுவான் மெழுகு சாத்தி
மேவணநற் பொருள்பெறாள் சொக்குண் டென்று
மிகவருந்துங் காற்சித்த ராச்சென் றாண்டு
மாவணவல் லிரும்புதரச் சொல்லித் தீயின்
மாட்டென்று பரிசனஞ்செய் தொளித்தான் றந்து
பாவணத்தாள் சொலிச்செய்திறை யுருக்கண் டாண்மெய்ப்
பத்தியெழில் கண்டள்ளி முத்தங் கொண்டாள். (45)

### 46. சோழனைக்கொண்டாழியிற்றாழ்ந்த திருவிளையாடல்

செம்பியன்றென் மதுரைகொள்வான் றிறங்கள் பேசிச்
சென்றடர வெந்தையுண்டென் றிசைக்கு மாறன்
றம்பமென வவனெதிரே தோன்றச் சொக்கன்
றாண்டுபரி மேல்வேடக் குதிரை யாளாய்
நம்புவிசைப் போந்துபரி காட்டிக் காட்டி
நனிபாய்ந்து மேற்றடத்துத் தீரத் தேறி
வம்பினுடன் பாய்ந்துகுசை தாங்கச் சோழ
மனைக்கொண்டாழ்ந் தத்தடங்கொண் டாழி யென்றார்.
(46)

## 47. திருவாலவாயான திருவிளையாடல்

ஓங்குபிர ளயத்தச்சுக் குலையா வாறிங்
குயர்ந்திட நிற்றலினடுவூ ரென்றார் மாறி
நீங்கியபி னொருசெழியன் றோன்றிச் சொக்கே
நீணகருக் கெல்லைகட் டென்று போற்றப்
பாங்குபெறக் காட்டென்று விட்ட பாந்தள்
படிவாய்வால் வைத்துத்தன் கதியாற் சூழத்
தேங்குபுகழ் மதுரைதனைத் திருமு டங்க
றிருவால வாயால வாயென் றார்கள். (47)

## 48. வரகுணனுக்குச் சிவலோகங் காட்டின திருவிளையாடல்

சினமாவேட் டம்போய்மீள் வாசித் தாளிற்
றிகழ்நிசியில் வழியுறங்கு மறையோன் றுஞ்சக்
கனசாயை பலதருமஞ் செய்து நீங்கக்
காணான்மெய் வருந்துங்கால் வெல்வான் போந்த
வினமார்செம் பயிற்சயித்துத் தேயங் கைக்கொண்
டிடைமருதிற் பிரமகத்தி யொழித்துப் போகி
மனமார்நின் னுலகிங்குக் காட்டென் றேத்தும்
வரகுணற்குச் சிவலோகங் காட்டி னானால். (48)

## 49. விடைக்குறியம்பெய்த திருவிளையாடல்

அன்புடையோ னொருசோழன் மதுரை கொள்வா
னணுகலுங்கண் டுளந்தளர்ந்தா லயத்துட் சென்றே
மன்பரம னருள்பெற்றுச் சிறிய தானை
மருங்குவரப் போரின்கட் பொருவான் போந்த
பொன்பரவு முளந்தெளிந்த செழியற் காவோர்
பொருகணையா லருகணையுஞ் சேனை மாளக்
கொன்பரவ வணைந்தறிவான் பொறித்து விட்ட
கோலில்விடை கண்டுவிடை கொண்டு போனான். (49)

## 50. உலவாக்கோட்டை வைத்த திருவிளையாடல்

அஞ்சியவன் புடைவேளாண் டலைவ னாளு
மரனடியார்க் ககமகிழ மாதுந் தானும்
விஞ்சுமனத் தமுதுபடைத் தொழுக மாய
மிடிபுகுந்தாங் கமுதளித்தன் முட்டக் கண்டே
யெஞ்சினமண் ணிற்றனிசுந் தருவா ரில்லை
யீபவரைக் காட்டாயேன் மடிவ லென்ன
வுஞ்சிடநன் கனவினன விற்கா ணப்போய்க்
காட்டியுல வாவரிசிக் கோட்டை வைத்தான். (50)

## 51. மூர்த்தியார்க்கு அரசளித்த திருவிளையாடல்

வைதிகத்தை யொழித்தமணர் கையில் வீழ்ந்து
மதுரைகொண்டு வழுதியைவென் றுலகையாளுங்
கைதவக்கன் னடனையுமண் மழையான் மாற்றிக்
காதலினாற் சாத்தொருநாண் முட்டக் கண்டு
பைதலொடு சந்தரைத்த முழங்கை வட்டப்
பாறையிற்றேய்த் திடும்வணிக மூர்த்தி தன்னை
மொய்சடைமா மவுலியக்க மணிபூ ணீறு
முழுப்பூச்சா மும்மையா லுலகாள் வித்தான். (51)

## 52. காரியார் நாரியார் பாப்பகுந்த திருவிளையாடல்

இலகுபுகழ்க் காரியார் நாரி யாரா
மிருவர்கவிப் புலவர்வட நாட்டி னின்று
நிலவுபுகழ்த் தென்னனைநான் கவிதை பாடி
நேருங்கா னெறிமயக்க முறக்கண் டீசன்
றிலகவடி விடையனாய் நிரையான் மேய்த்துச்
செலும்வனத்திற் றோன்றியிது முன்னந் தென்னர்க்
குலவுபுக முரியதென நவின்று காட்டி
யுடன்புகுந்து சாத்துதமிழ் மாலை கொண்டான். (52)

## 53. புலிமுலை புல்வாய்க் கருளின திருவிளையாடல்

சித்திரைச்சித் திரைக்குவந்து மகவான் பூசை
செயுங்காலை மணற்புரத்தை நோக்கிச் செல்லு
மெத்துபுகழ் வணிகன்கண் டவன்ட ரித்து
வியன்வனத்தை மற்றைநாட் சென்று சொல்லப்
பத்தியொடு வருஞ்செழியன் புலிமு லைப்பால்
பயந்தபுல்வா யுணக்கண்டு விசேட முள்ள
நித்தியவிப் பதிக்கெல்லை காட்டென் றேத்த
நிகழ்சித்த னெனவெல்லை காட்டி னானால். (53)

## 54. சாதாரி பாடின திருவிளையாடல்

இசைவல்லா னெனும்பாணன் வடதே யத்தா
னெய்திடமா றன்பத்தி ரனைவா வென்றே
வசையில்லா யவனொடுபா டுகவா தென்ன
வந்துசொக்குண் டென்றிரப்பப் பாணர் வேந்த
னசைவில்லா வடிமையென விறகு கூறி
யரையிருளிற் சாதாரி யிறைவன் பாடத்
திசைநில்லா தொளித்துவிடி வதன்முன் போனான்
றிறந்பாணன் கிளைஞரொடும் வெருக்கொண் டாங்கு.
(54)

## 55. திருமுகங்கொடுத்த திருவிளையாடல்

இன்னிசைபா டும்புகழ்ப்பத் திரன்கொ டுப்பா
னிறைவநிதி யில்லையென வருந்துங் காற்போய்
மன்னுமதி மலிபுலிசை மாட மென்று
வரைந்தொர்திரு முகங்கனவி னனவிற் காண
முன்னுதவி நம்மன்பன் சேர மான்பான்
முடுகென்று விடைகொடுப்பப் போனான் சால
மின்னுபொருள் வேண்டுவன நல்க வாங்கி
மேவியிருந் தனன்வழங்கிச் சொக்கை வாழ்த்தி. (55)

## 56. பலகையிட்ட திருவிளையாடல்

பெருகுபொருள் கண்டுமனம் பொறாது மற்றப்
பெரும்பாண ரிருப்பப்பத் திரனு மன்பா
லுருகுமிசை முச்சந்தி யன்றிக் கங்கு
லுறுநள்ளும் பாடுதுமென் றெய்திப் பாட
வெருவுறமெய்ந் நோவக்கன் மாரி யேவி
மெய்யன்பு கண்டியாரும் வழுத்தச் சங்கக்
கிருமையியற் பலகைதந்தோ னிருந்து பாடென்
றிசைப்பலகை கொணர்ந்திட்டா னினிமை கூர்ந்து.(56)

## 57. இசைவாது வென்ற திருவிளையாடல்

நவையறுபத் திரன்மனைவி முல்லை மாலை
நனிவழுதி நினைவுதனைத் தள்ள நாணிப்
புவனியிற்றீ பாந்தரத்து நின்றுந் தேடிப்
பொருவிலொரு பாடுவாட் கொணர்ந்து தன்பே
ரவையினின்றோற் றாள்சுமக்க வென்று பேசி
யறுதியிசைத் திடவவையிற் பாடிச் சார்ந்த
சிவனருளால் வரும்விறலி மாலை முல்லைத்
தேமாலை கழுத்திலிடப் பெற்றா ளன்றே! (57)

## 58. பன்றிக் குட்டிகளுக்குத் தாயான திருவிளையாடல்

உயர்தந்தை யிறந்திடப்பன் னிருவர் மைந்த
ரூழ்வினையாற் காட்டுறைவன் னியர்கள் போந்தோ
ரயர்வறுதூற் றிருப்பமுனி வன்சூழ்ந் தேதம்
மங்கைகொட்டி யிகழவவர் தம்மைப் பற்றி
வயினுதிமி னெனமுனிவன் சபிப்பத் தாயும்
வந்துதியா முனம்வேட்டைக் காட்டிற் றுஞ்ச
வியலுறுதா யிழந்தகுரு ளைகளீ ராறு
மினிதுயத்தாய் வடிவின்முலை யூட்டி னானே! (58)

## 59. பன்றிக் குட்டிகளுக்கு அருள்புரிந்த திருவிளையாடல்

அருளுமையாள் பெரியவனீ சிறிய பன்றி
யாகமெடுத் தணிமுலைப்பா லளித்தா யுண்ட
குருளைகளீ ராறுமுய்யும் வண்ணங் கண்பார்த்
தருளெனநம் மிறைகருணை கூர்ந்து பார்ப்பத்
தெருளுறுவே ளாண்டலைவன் மைந்த ராகித்
தென்னனுக்கு மந்திரியாய் விசயஞ் செய்த
மருளறுவன் னியர்பன்றிக் குறும்ப ரென்பார்
வளர்ந்தமலை யைப்பன்றி மலையென் பாரால். (59)

## 60. கரிக்குருவிக்கு அருள்புரிந்த திருவிளையாடல்

கொடிக்கஞ்சிக் கருங்குருவி போந்து கூடற்
கோயில்வல நாளுஞ்சூழ் தரவே சொக்கன்
படிக்கஞ்சா மருத்தியுஞ் சயம தென்னும்
பகர்வென்றி மந்திரத்தை யுபதே சித்து
மடிக்கஞ்சாய் கிளைகளொடு முச்ச ரித்து
வெம்பகைவென் றிருக்கெனவந் தினங்க ளோடும்
வடிக்குங்கூர் மூக்கலகாற் காக்கை யாதி
வலிதொலைக்கக் கண்டுலகோர் வலியா னென்றார். (60)

## 61. மாமேருவிற் கயல்கெண்டு பொறித்த திருவிளையாடல்

அந்தணரை யிகழ்ந்திடுமோர் வழுதி தாங்கு
மவனியுளோர் மழையின்றி வருந்தல் கண்டிங்
கெந்துசெய்வே னெனக்கனவி லீச னெய்தி
யிருஞ்செண்டான் மேருவைச்சென் றுணர்த்தி வேண்டு
மைந்துதனந் தறித்தெடுத்துன் கயலு மிட்டு
வந்தவரை வாழ்வித்தி யாக மோங்கக்
கந்தரவான் பொழியுமெனச் சொன்ன செய்து
காலமழை பொழிதரப்பல் லூழி வாழ்ந்தான். (61)

## 62. சான்றழைத்த திருவிளையாடல்

மலகுபொரு ளுடைவணிகன் கன்னி தன்னை
மதுரைவளம் பதியிருக்க மருக னார்க்கே
நல்குமெனச் சொலித்துஞ்சக் கேட்குஞ் சுற்ற
நகரத்தா ரோலைவிட வந்தோன் பாம்பா
லொல்குமிடை யொடும்போங்காற் புறம்ப யத்தி
லொழிந்தெழுப்புங் கவுணியரான் மணந்து போத
வல்குமனம் பொறாதமுன்கொண் மனைவி காண
வழைத்தான்முச் சான்றீசன் கிணறு வன்னி! (62)

## 63. நாரைக்கு அருள்புரிந்த திருவிளையாடல்

வதிவாவி வற்றமீ னற்றுப் போந்தோர்
மாதவராச் சிரமத்தா வியுட்பு காமுன்
புதுநீரா டுறுதவமா முனிவர்ச் சூழ்ந்து
புணராமீ னலியாது நிற்பக் கண்டு
துதிஞானம் பிறந்துகொலை தவிர்ந்து போந்து
சொக்கனரு ளுடையனெனக் கோயில் சூழும்
விதிநாரை வந்தனையை விரும்பி வாவி
மீனொழித்துச் சிவலோகங் கொடுத்தா னன்றே. (63)

## 64. வேதமுணர்த்திய திருவிளையாடல்

பொற்புறுகண் ணுவன்முதலா முனிவ ரெல்லாம்
போந்துகிரே தாயுகத்தா திக்கட் கூடி
முற்புகலுங் கலியுகத்தி லிறந்த வேத
மொழிபவர்யா ரென்றுவருந் துங்கால் விண்மேற்
றற்பரன்மா மதுரைதனி லிருப்பல் வந்தாற்
சாற்றுவலென் றருளக்கேட் டணைந்து போற்ற
நற்பரம குருவடிவாய்ச் சொக்கன் வந்து
நான்மறையும் வியாகரணத் தொடுந வின்றான். (64)

**கடம்பவன புராண இலீலா சங்கிரக வத்தியாயம் முற்றும்.**

## கல்லாடம் (அறிமுகம்)

'கல்லாடம்' என்பது நந்தமிழ் மொழியிற் சிறந்து விளங்கும் சீரிய இலக்கியங்களுள் ஒன்றாகும். இக் கல்லாட நூலை முறையாகக் கற்று வல்லுநர் ஆயவர். பல்வேறு கலைகளையும் பயின்றுணர்ந்தவராகத் திகழ்வர். அதனால் இவ்விலக்கியத்தைப் பற்றிக் 'கல்லாடங் கற்றவரோடு சொல்லாடாதே' என்றும் 'கல்லாடம் கற்றவரோடு மல்லாடாதே' எனவும் வழங்கிவரும் பழமொழிகள் நமக்குணர்த்துகின்றன.

கல்லாடனார், இந்நூலை இயற்றுதற்குக் காரணம் மதுரையிலெழுந்தருளியுள்ள இறைவன் அருட்புகழை உள்ள முருகப் பாடிப் பரவுதல் வேண்டுமென்ற பேரவாவாகும்.

மேலும், பண்டைக் காலத்தே, மதுரை மாநகரத்து நிகழ்ந்து வந்த தமிழ்ச் சங்கத்தே வீற்றிருந்த சங்கப் புலவர்கள், 'மாணிக்க வாசகப் பெருமான் திருவாய்மலர்ந்தருளிய 'திருச்சிற்றம்பலக் கோவையார்' எனும் நூல்பற்றி ஆய்வு நிகழ்த்தினர்.

"இக் கோவையார், யாப்பு வகையானும் பொருள் வகையானும், பழைய இயல்நூல் முறைக்கு மாறுபட்டது. இதனைச் சீரிய நூலாக ஏற்றல் கூடாது" என எல்லாப் புலவர்களும் கூறினர். கல்லாடர் மட்டும் தனித்து நின்று, எதிர்த்து, இக் கல்லாடம் எனும் சீரிய நூலை இயற்றினார். அதனை, மதுரைத் திருவாலவாயார் முன்னர், சங்கப் புலவர்கள் கூடியிருந்தபோது அரங்கேற்ற, ஒவ்வொரு செய்யுளுக்கும் சொக்கநாதர் தலையசைத்தார். அதுகண்டு எல்லாப் புலவர்களும் ஏற்றனர்.

கல்லாடர், இந்நூலின்கண், ஒரு செய்யுளிலே, மதுரைப் பெருமானாகிய சோமசுந்தரக் கடவுள், மதுரையின்கண் அறுபத்து நான்கு திருவிளையாடல் நிகழ்த்தியவர் எனச் சுட்டுமிடத்து, அத்திருவிளையாடல்களுக்குத் தொகையுங் கூறுகின்றார்.

அச்செய்யுட் பகுதி வருமாறு:

"........................அன்பினர்க் கருளும்
கூடற் பதிவரும் ஆடற் பரியோன்
எட்டெட் டியற்றிய கட்டமர் சடையோன்"
(செய்யுள் 96:12-14)

இதன் பொருள்: "அறுபத்து நான்கு திருவிளையாடல்களைச் செய்தவனாகிய கட்டுதலமைந்த சடையையுடைய சிவபெருமான்" என்பதாம்.

அறுபத்து நான்கு திருவிளையாடல்களுள், வெப்புத் தீர்த்த திருவிளையாடல், கழுவேறின திருவிளையாடல் என்னும் இரண்டு திருவிளையாடல்களிலும், தேவாரம் பாடிய திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் செய்தி விரவியிருத்தலால், இக்கல்லாடர் இவருக்குப் பிற்பட்ட காலத்தவராகும் என உணரக் கிடைக்கிறது.

இனி, கல்லாடத்துத் திருவிளையாடற் புராணச் செய்திகளைக் கூறும் பகுதிகளைக் காண்போம்.

1. தருமிக்குப் பொற்கிழியளித்தது.

முதற் பாடல்: வரிகள் 10-12

"பொதியப் பொருப்பன் மதியக் கருத்தினை
கொங்குதேர் வாழ்க்கைச் செந்தமிழ் கூறிப்
பொற்குவை தருமிக் கன்புட னுதவி" என்பது.

இதில், பொதியப் பொருப்பன் மதியக் கருத்தாவது:

மகளிர் கூந்தலுக்குச் செயற்கையானன்றி, இயற்கை மணம் உளதோ, இலதோ எனும் ஐயம். இவ்வாறு ஐயுற்ற பாண்டியன், "என் உளக்கருத்தினை அறிந்து செய்யுள் செய்யும் புலவர்க்கு ஆயிரம் செம்பொன் வழங்குவேன்" என்று அறிவித்து, ஆயிரம் பொன் பொதிந்த பொதியினைப் புலவர் முன்னே தூக்கினான்.

சங்கப் புலவர்கள் பெரிதும் ஆராய்ந்து. அவன் கருதிய செய்யுள்செய் புலவர் இலராயினர். அப்பொழுது ஆலவாய்ச் சொக்கன், தருமி எனும் ஓர் அன்பன் வேண்டுகோட்கிணங்கிக் "கொங்குதேர் வாழ்க்கை" எனத் தொடங்கும் செய்யுளைப்பாடி, அவன்பாற் கொடுத்து, அப்பொற்கிழியினைப் பெற்றுக் கொள்ளுமாறு திருவருள் புரிந்தார், என்பது வரலாறு. அப்பாடல்:

**"கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி**
**காமம் செப்பாது கண்டது மொழிமோ**
**பயிலியது கெழீஇய நட்பின் மயிலியல்**
**செறியெயிற்(று) அரிவை கூந்தலின்**
**நறியவும் உளவோ நீயறியும் பூவே! "**
(குறுந்தொகை:2)

இப்பாடல் கருத்தினைப் பொறாமையினால் ஏற்காத நக்கீரனை, ஆலவாயழகனே புலவர் உருக்கொடு வந்து, வாதிட்டு, கீரனை, மடுவில் வீழ்த்தினார். தருமி பொற்கிழி பெற்றான்.

அடுத்து,

## 2. மதுரையில் சுந்தரபாண்டியனாக வந்து அரசுபுரிந்தது.

பாடல் எண்: 2 வரிகள் 7-14

"பெருநீர் வையை வளைநீர்க் கூட
லுடலுயி ரென்ன வுரைதரு நாயகன்
கடுக்கைமலர் மாற்றி வேப்பலர் சூடி
ஐவாய்க் காப்புவிட் டணிபூ ணணிந்து
விரிசடை மறைத்து மணிமுடி கவித்து
விடைக்கொடி நிறுத்திக் கயற்கொடி யெடுத்து
வழுதி யாகி முழுதுல களிக்கும்
பேரரு ணாயகன்." என்பதாம்.

மேலும்:

## 3. சிவபெருமான் "இறையனா ரகப் பொருள்" தோற்றுவித்தது.

பாடல் எண்: 3 வரிகள் 11-16.

"மாறனும் புலவரு மயங்குறு காலை
முந்துறும் பெருமறை முளைத்தருள் வாக்கா
லன்பினைந் திணையென் றறுபது சூத்திரங்
கடலமு தெடுத்துக் கரையில்வைத் ததுபோற்
பரப்பின் றமிழ்ச்சுவை திரட்டிமற் றவர்க்குத்
தெளிதரக் கொடுத்த தென்றமிழ்க் கடவுள்"

அடுத்து:

## 4. தடாதகப் பிராட்டியார் திருமணம், அன்னக்குழி அழைத்தது, வையை யழைத்தது.

பாடல் எண்:10 வரிகள் 16-23

"..................................முக்கட் பெருமான்
பனிக்கதிர்க் குலவன் பயந்தருள் பாவையைத்
திருப்பெரு வதுவை பொருந்திய வந்நாட்
சொன்றிப் பெருமலை தின்றுநனி தொலைத்த
காருடற் சிறுநகைக் குறுந்தாட் பாரிட
மாற்றா தலந்த நீர்நசை யடக்க
மறிதிரைப் பெருநதி வரவழைத் தருளிய
கூடலம் பதியுறை குணப்பெருங் கடவுள்."

மேலும்:

## 5. பாணனுக்குத் திருமுகம் அளித்தது

பாடல் எண்: 11. வரிகள்: 25-30

"பரிபுரக் கம்பலை யிருசெவி யுண்ணுங்
குடக்கோச் சேரன் கிடைத்திது காண்கென
மதிமலி புரிசைத் திருமுகங் கூறி
யன்புறுத் தரித்த வின்பிசைப் பாணன்
பெறநிதி கொடுக்கென வுறவிடுத் தருளிய
மாதவர் வழுத்துங் கூடற் கிறைவன்."

சொக்கேசர் பாணபத்திரருக் கருளிய திருமுகம்:

"மதிமலி புரிசை மாடக் கூடல்
பதிமிசை நிலவும் பால்நிற வரிச்சிறை
யன்னம் பயில்பொழி லால வாயின்
மன்னிய சிவன்யான் மொழிதரு மாற்றம்
பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்கு
உரிமையி னுரிமையி னுதவி யொளிதிகழ்
குருமா மதிரை குலவிய குடைக்கீழ்ச்
செருமா வுகைக்குந் சேரலன் காண்க.
பண்பால் யாழ்வல்ல பாண பத்திரன்
தன்போ லென்பால் அன்பன் தன்பால்
காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே."

என்பதாம்.

அடுத்து:

## 6. சிவபெருமான் பரதவனாய்வந்து வலைவீசியது

பாடல் எண்: 15. வரிகள் 22-29

"வரைநிரை கிடந்த திரையுவர் புகுந்து
நெடுஞ்சடைக் கிடந்த குறும்பிறைக் கொழுந்துங்
கருமுகில் வெளுத்த திருமிடற் றிருளு
நுதன்மதி கிழித்த தழலவிர் நோக்கமு
மறைத்தொரு சிறுகுடிப் பரதவ னாகிப்
பொன்றலைப் புணர்வலை கொடுங்கர மாக்கி
நெடுங்கடல் கலக்கு மொருமீன் படுத்த
நிறையரு ணாயக னுறைதரு கூடல்."

மீண்டும்:

## 7. மதுரையைச் சுந்தரபாண்டியனாகி ஆண்டது

பாடல் எண்: 21 வரிகள் 61 – 62.

"மதுரை மாநகர்ச் செழிய னாக்க்
கதிர்முடி கவித்த விறைவன்"

மேலும்:

8. தடாதகைப் பிராட்டியார் திருமணம்

பாடல் எண்: 30 வரிகள் 10 –21

"முட்டாட் செம்மலர் நான்முகத் தொருவ
னெண்ணிநெய் யிறைத்து மணவழ லோம்பப்

புவியளந் துண்ட திருநெடு மாலோ
னிருகர மடுக்கிப் பெறுநீர் வார்ப்ப
வொற்றை யாழியன் முயலுடற் றண்சுட
ரண்டம் விளர்ப்பப் பெருவிளக் கெடுப்ப
வளவாய் புலன்கொள விஞ்சைய ரெண்மரும்
வள்ளையிற் கருவியிற் பெரும்புகழ் விளைப்ப
முனிவர் செங்கரஞ் சென்னி யாக்க
வுருப்பசி முதலோர் முன்வாழ்த் தெடுப்ப
மும்முலை யொருத்தியை மணந்துல காண்ட
கூடற் கிறைவன்."

அடுத்து,

## 9. வெள்ளியம்பலத் திருக்கூத்தாடியது

பாடல் எண்: 34 வரிகள் 8-13

"தேவர்கண் பனிப்ப முனிவர்வாய் குழறக்
கல்லவ டத்திரண் மணிவாய்த் தண்ணுமை
மொந்தைகல் லலகு துத்திரி யேங்கக்
கட்செவி சுழல தாழ்சடை நெறிப்ப
விதழிதா துதிர்ப்பப் பிறையமு துகுக்க
வெள்ளியம் பலத்துட் டுள்ளிய பெருமான்."

(இப்பாடலின் முதல் 7 வரிகளும் இதன் தொடர்புடையதே)

மேலும்

## 10. இந்திரன் பழிதீர்த்தது.

பாடல் எண்: 35 வரிகள்: 7-11.

"காருடன் பிறையெயிற் றரக்கனைக் கொன்று
வச்சிரத் தடக்கை வரைப்பகை சுமந்து
பழவுடற் காட்டுந் தீராப் பெரும்பழி
பனிமலை பயந்த மாதுடன் றீர்த்தருள்
பெம்மான்."

அடுத்து:

## 11. விறகுவிற்ற திருவிளையாடல்

பாடல் எண்:43. வரிகள் 25-34.

"வடபுல விஞ்சையன் வைகிடத் தகன்கிடைத்
தென்றிசைப் பாண னடிமை யானெனப்
போகா விறகுடன் றலைக்கடை பொருந்தி
யுந்தித் தோற்ற மோசைநின் றொடுங்கப்
பாலையி லெழுப்பி யமரிசை பயிற்றித்
தூங்கலுந் தள்ளலுஞ் சுண்டிநின் றெழுதலுந்
தாரியிற் காட்டித் தருஞ்சா தாரி
யுலகுயி ருள்ளமு மொன்றுபட் டொடுங்க
விசைவிதி பாடிய விசைப்பகை துரந்த
கூடற் கிறையோன்."

மேலும்:

## 12. மாமனாக வந்து வழக்குரைத்தது.

பாடல் எண்: 44 வரிகள் 14-27.

"முன்னொரு வணிகன் மகப்பே றின்மையின்
மருமான் றன்னை மகவெனச் சடங்குசெய்
துள்ளுமுங் கரணமு மவனுழி யொருக்கி
முக்கவர்த் திருநதி துணையுடன் மூழ்கி
யப்புலத் துயிர்கொடுத் தருட்பொருள் கொண்டபின்
மற்றவன் றாயம் வவ்வுறு மாக்கள்
காணிகைக் கொண்ட மறுநிலை மைந்தனை
நிரைத்துக் கிளைகொ ணெடுவழக் குய்த்தலு
மைந்தனுங் கேளிரு மதிமுடிக் கடவுணின்
புந்தியொன் றன்றிப் புகலில னென்றய
ரவ்வழி யொருசா ரவன்மா துலனென
வறிவொளி றிறைவே யோருருத் தரித்துவந்
தருள்வழக் கேறி யவர்வழக் குடைத்த
கூட னாயகன்."

அடுத்து

## 13. வளையல் விற்ற திருவிளையாடல்.

பாடல் எண்: 45 வரிகள்: 14-22

"இதழியுந் தும்பையு மதியமுங் கரந்து
வளைவிலை மாக்கள் வடிவெடுத் தருளி
முத்தமிழ் நான்மறை முளைத்தருள் வாக்கால்
வீதி கூறி விதித்தமுன் வரத்தாற்
கருமுகில் விளர்ப்ப வறனீர் குளிப்பக்
கண்புதை யாப்புத் திணியிருள் விடிய

வுடறொறும் பிணித்த பாவமும் புலரக்
கண்டநீள் கதுப்பினர் கைகுவி பிடித்துக்
குருகணி செறித்த தனிமுத னாயகன்."

மேலும்:

**14. பிட்டுக்கு மண்சுமந்த திருவிளையாடல்**

பாடல் எண்: 47. வரிகள்: 22-28

"மண்ணகழ்ந் தெடுத்து வருபுனல் வையைக்
கூலஞ் சுமக்கக் கொட்டா ளாகி
நரைத்தலை முதியோ ளிடித்தடு கூலிகொண்
டடைப்பது போல வுடைப்பது நோக்கிக்
கோமக னடிக்க வவனடி வாங்கி
யெவ்வுயி ரெவ்வுல கெத்துறைக் கெல்லா
**மவ்வடி கொடுத்த வருணிறை நாயகன்."**

அடுத்து:

**15. வெள்ளியம்பலத் திருக்கூத்தாடியது.**

**பாடல் எண்: 85 வரிகள்.38 -40**

**"பொலன்மிளிர் மன்றப் பொதுவக நாடித்
தனிக்கொடி காணவெவ் விடத்துயிர் தழைப்ப
வாடிய பெருமான்."**

மேலும்:

## 16. மாணிக்கம் விற்ற திருவிளையாடல்

பாடல் எண்: 98 வரிகள் : 11-45

"வேத முளைத்த வேதமில் வாக்காற்
குடுமிச் சேகரச் சமனொளி சூழ்ந்த
நிறைதரு நான்கி னிகழ்ந்தன குறியுங்
குருவிந் தஞ்சௌ கந்தி கோவாங்கு
சாதுரங் கமெனுஞ் சாதிக ணான்குந்
தேய்க்கி னெருப்பிற் சேர்க்கினங் கையிற்
றூக்கினற் றகட்டிற் சுடர்வாய் வெயிலிற்
குச்சையின் மத்தகக் குறியினோ ரத்தி
னெய்த்துப் பார்வையி னோர்ந்து சிவந்தாங்
கொத்த நற்குன முடையபன் னிரண்டுங்
கருகிநொய் தாதல் காற்று வெகுளி
திருகன் முரணே செம்ம ணிறுகன்
மத்தகக் குழிவு காசமி லைச்சுமி
வெச்சம் பொரிவு புகைதல் புடாயஞ்
சந்தைநெய்ப் பிலியெனத் தகுபதி னாறு
முந்திய நூலின் மொழிந்தன குற்றமுஞ்
சாதகப் புட்கண் டாமரை கழுநீர்
கோப மின்மினி கொடுங்கதிர் விளக்கு
வன்னி மாதுளம் பூவிதை யென்னப்
பன்னுசா துரங்க வொளிக்குணம் பத்துஞ்
செம்பஞ் சரத்தந் திலகமு லோத்திர
முயலின் சோரி சிந்துரங் குன்றி
கவிரல ரென்னக் கவர்நிற மெட்டுங்
குருவிந் தத்தின் குறித்தன நிறமு
மசோகப் பல்லவ மலரிசெம் பஞ்சு
கோகிலக் கண்ணீ ளிலவலர் செம்பெனத்

தருசௌ கந்தி தன்னிற மாறுஞ்
செங்கல் குராமலர் மஞ்சள் கோவை
குங்கும மஞ்சிற் கோவாங்கு நிறமூந்
திட்டை யேறு சிவந்த விதாய
மொக்கல் புற்றாங் குருதி தொழுதினை
மணிகோ கனகங் கற்பம் பாடி
யாங்கிச கந்தி வளர்காஞ் சுண்டையெவ்
றாங்கொரு பதின்மூன் றடைந்த குற்றமு
மிவையெனக் கூறிய நிறையருட் கடவுள்."

(இதில் மாணிக்கங்களின் இலக்கணங்கள் கூறப்பட்டுள்ளன.)

மேற்கண்ட திருவிளையாடல்கள் 'கல்லாடம்' என்ற நூலுட் காணப்படுகின்றன.



உ
சிவமயம்

# திருவிளையாடல் கருணைத் திருவிருத்தம்

(அறிமுகம்)

இந்நூல்

திருப்பனந்தாள்

ஸ்ரீகாசிமடத்தில் இருபதாம் பட்டத்தில் எழுந்தருளியுள்ள

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி
**அருணந்தித் தம்பிரான் சுவாமிகள்**
அவர்களின்

அறுபத்தோராவது ஜன்ம நக்ஷத்திரத் திருநாளான
ஆவணி மூலத்தன்று (11.9.1959)

சென்னை, அடையாறு
மகா மகோபாத்தியாய டாக்டர் உ.வே. சுவாமிநாதையர்
நூல்நிலையத்தாரால் பணிவுடனும், பேரன்புடனும்
நன்றியறிவிப்பு மலராகச்

சமர்ப்பிக்கப் பெறுகின்றது.

......

உ

சிவமயம்

## முகவுரை

"அண்ணல் ஆலவாய் நண்ணி னான்றனை
எண்ணி யேதொழ திண்ணம் இன்பமே"

இந்நூல் சென்னை, அடையாற்றில் உள்ள மகா மகோபாத்தியாய டாக்டர் உ.வே. சாமிநாதையர் அவர்கள் நூல்நிலையத்திலுள்ள 584 ஜெ என்னும் எண்ணுள்ள ஓலைச்சுவடியிலிருந்து எடுத்துப் பதிப்பிக்கப் பெற்றது.

இதன்கண் திருவாலவாய்ச் சோமசுந்தரக் கடவுள் அடியார்பொருட்டு இயற்றியருளிய திருவிளையாடல்கள் கூறப்பெற்றுள்ளன. இந்நூல், அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தால் யாக்கப் பெற்ற பதின்மூன்று செய்யுட்களைக் கொண்டுள்ளது. "கருணை வாழ்வே" என்ற ஈற்றினை மகுடமாக இதன் செய்யுட்கள் பெற்றிருந்தலால் இது "கருணைத் திருவிருத்தம்" என்ற பெயரைப் பெற்றுள்ளது.

இந்நூலாசிரியர் பெயர், காலம் முதலியன சுவடியில் குறிப்பிடப் பெறவில்லை. ஆனால், இறுதிச் செய்யுளில், 'மீனலோசனியாளே தஞ்சமென்று முழுதும் நம்பும் கொத்தடிமைச் சேறை' என்று காணப்பெறும் குறிப்பால், இதனை யாத்தவர், மதுரை மீனாட்சியம்மைத் திருவாலயத்தில் திருத்தொண்டு செய்யும் திருக்கூட்டத்தின் வழி வந்தவர் என்பது உணரப் பெறும். இறைவன் திருவிளையாடல்களைத் தாம் உணர்ந்து பாடி இன்பத்தைத் துய்க்கும் நிலையைப் பிறரும் அடையவேண்டும் என்னும் விருப்பத்தால் இந்நூல் அமைந்ததாதல் வேண்டும்.

ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் அவர்கள் மதுரை, ஸ்ரீ சொக்கநாதர் திருவிளையாடல்களில் கொண்டுள்ள ஈடுபாடு, அவர்கள் நிறுவியுள்ள, 'மதுரையில் திருவிளையாடற் புராணம் பிரசங்க நிதி ரூ.37,000' என்ற அறக்கட்டளையால் விளங்கும்.

ஆவணி மூல நன்னாள், மதுரைச் சொக்கநாதர் தம் அடியார்களிற் சிறந்தவரான ஆளுடைய அடிகளின் பொருட்டுப் பரிமேலழகராகித் திருவிளையாடல் புரிந்த திருநாளாகும். அச் சொக்கநாதர் பாலும், அவ்வடியார்பாலும் இடையறா அன்பு பூண்டு, அவர்களுடைய பணியே தம் பணியாகக் கொண்டு திகழும் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களின் அறுபத்தோராவது திருநக்ஷத்திரமான இம்மங்கல நாளில், அவர்கள் இறைவன் திருவருளும், அடியார் திருவருளும் ஒருங்கே பெற்று, எல்லா நலன்களுடனும் நீடூழி வாழவேண்டுமென்று ஸ்ரீ சொக்கேசன் திருவடிகளில் வணங்குகின்றோம்.

ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் அவர்கள் இந்நூல்நிலையம் தொடங்கிய கால முதல் இதன்பால் அன்பும், இதன் அபிவிருத்திக்குப் பேரூக்கமும் ஆதரவும் காட்டி வருகின்றார்கள். இந்நூல் நிலையத்தின் வெளியீடுகட்குப் பொதுவாக அவ்வப்போது ஆதரவளித்தும், சிறப்பாகத் திருக்குற்றால நாதருலா வெளியீட்டின் முழுச்செலவையும் தாமே ஏற்று உதவியும், நிலையத்தில் அச்சுப் புத்தங்கள் வாங்குவாதற்காகப் பெருந்தொகை வழங்கியும், மற்றும் பலவகைகளில் அவர்கள் அன்புடன் ஊக்கங் காட்டியும் வருவது குறிப்பிடத்தக்கது.

இந்த நன்னாளில் நூல் நிலையம், ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் அவர்கள் பால் கொண்டுள்ள கடப்பாட்டை இதன்மூலம் தெரிவித்துக்கொள்ளுகின்றது.

நூல்நிலையத்தார்.

11.9.1959.

## திருவிளையாடல் கருணைத் திருவிருத்தம்.

காப்பு

திருவால வாயர்சவுந் தரநாத
ரங்கயற்கண் டேவி பாகர்
விரிவாகச் செய்தவெண்ணெண் விளையாட
றனைச்சுருக்கி விருத்தப் பாவாய்ப்
பரிவாகச் செய்தற்குப் பொற்பதும
முலர்க்கரையிற் பண்பால் வைகும்
மருவார்ந்த பிறைமௌலிச் சித்திவிநா
யகன்மலர்த்தாள் வழுத்தல் செய்வாம்.

நூல்

பொன்னுலகத் திமையவர்கோன் பழிநீக்கி
வெள்ளானைச் சாபம் போக்கி
மன்னுகடம் பாடவியை மாமதுரா
புரமாக்கி மகம்பு ரிந்த
தென்னவற்கு மகளாகி மூன்றுமுலை
யுடன்றிக்கு விசயஞ் செய்த
கன்னிதனை மணம்புரிந்து முடிதரித்து
நடம்புரிந்த கருணை வாழ்வே! (1)

குறட்பூத முண்ணவன்ன மளித்துவைகை
நன்னீருங் கொடுத்து வெற்றித்
திறத்தேழு கடலழைத்து மாமியையுங்
கடலாட்டிச் செல்வ வுக்ர
விறற்பாண்டி யனைத்தந்து வளைகெண்டு
வேலவனுக் குதவி வேலை
கறுத்தேவந் திடவேலை விடுத்துமுந்நீர்
மாற்றுவித்த கருணை வாழ்வே. (2)

வாசவன்றன் முடிசிதற வளையெறிந்து
மேருவினின் மகரந் தீட்டித்
தேசுறுபொன் குவைநல்கி மறையுரைத்தி
ரத்தினம்வி லைசெய் துஞ்சால்
வீசுதிரைப் பரவைதனை விழுங்குவித்து
நான்மாடக் கூடல் வேய்ந்து
காசினியோர் புகழுவெல்லாம் வல்லசித்த
ரானசொக்கே கருணை வாழ்வே! (3)

சிலைவேழம் வேழமுண்ணச் செய்துகரி
கிரியாக்கிச் கௌரி சித்தர்
மலையாது மூன்றுவடி வமுங்காட்டி
மாறிநடம் புரிந்து மாறாக்
கொலையான பழியஞ்சி முறைமைகெட்ட
பாதகன்றன் கொடுமை மாற்றிக்
கலைகாட்டுங் குருநிந்தை செய்தானை
யங்கம்வெட்டுங் கருணை வாழ்வே ! (4)

நாகத்தை நாகமென நன்கமைத்துப்
பசுவைமலை யாக நாட்டி
நீகத்த னெனநம்பு சவுந்தரசா
மந்தனுக்கு நிரைத்துச் சேனை
வேகத்தால் மன்னவனுக் குலவாத
கிழிவழங்கி விரும்பு மாதர்க்
காகப்போய் வீடுதொறுங் கனகவளை
விற்றசொக்கே கருணை வாழ்வே ! (5)

மங்கையருக் கட்டசித்தி வழங்கிச்சேர
மன்றனக்கு வடக்கு வாசற்
சங்கையறத் திறந்துதரி சனங்காட்டி
விடைக்குறியுந் தரித்துச் சாத்தித்
துங்கமுடி மேற்றெண்ணீர் சுமந்தேபொன்
னனையாடன் றுயரந் தீரக்
கங்கைசடைக் கரந்துசித்தர் வடிவான
சுந்தரனே கருணை வாழ்வே ! (6)

செம்பியனை மடுவில்விழச் செய்துதொலை
யாக்கோட்டை சுமந்து சேர்த்து
நம்புசெட்டிப் பெண்ணுக்காய் வழக்கில்வென்று
பொருளனைத்தும் நாடி நல்கி
வெம்புவர குணன்றனக்குச் சிவலோகங்
காண்பித்து விறகைத் தாங்கிக்
கம்பமுற்ற பத்திரர்க்குத் திருமுகமு
மீந்தசொக்கே கருணை வாழ்வே! (7)

பாணர்க்குப் பொற்பலகை பாலித்து
மனைவியிசைப் பகைவெல் வித்துப்
பூணப்பன் றிக்குமுலை கொடுத்துமதி
மந்திரியாய்ப் பொருது வித்துச்
சேணுற்ற கரிக்குருவிக் குபதேசஞ்
செய்துவந்து செங்கா னாரை
காணத்தன் கதியளித்தும் பணியானான்
கெல்லைகண்ட கருணை வாழ்வே ! (8)

ஒருவாளி யாற்சோழன் வலிதொலைத்துத்
தமிழ்ப்பலகை யுயர்ந்தோர்க் கீந்து
தருகாஞ்ச னக்கிழியைத் தருமிக்குத்
தருவித்துச் சார்நற் கீரன்
வெருவாமற் கறையேற்றிக் குறுமுனியாற்
செந்தமிழை விளக்கு வித்துக்
கரைகாணாப் புலவரிக லூமனால்
மாற்றுவித்த கருணை வாழ்வே ! (9)

வடவால வாயமர்ந்து வலைவீசி
மாணிக்க வாச கர்க்குத்
திடஞான குருவாகி நரிபரியாக்
கிப்பரியை நரியாய்ச் செய்தே
அடலாறு வருவித்து மண்சுமந்து
வழுதிசுர மகற்றிப் புத்தர்
கடிதான கழுவேற வன்னிலிங்கங்
கிணறழைத்த கருணை வாழ்வே ! (10)

சந்தனமிட் டடிமுழங்கை தனையுரைத்துச்
சாத்தவர சளித்த நூலோர்
செந்தமிழைப் பாதிபகுந் துரைசெய்த
புலிமுலையைச் சிறிய புல்வாய்
வந்தருந்தும் படியளித்த மாமதுரை
யங்கயற்கண் மணவா ளாசீர்க்
கந்தமலர் கடம்பவன மேவுசுந்த
ரேசுரனே கருணை வாழ்வே ! (11)

இத்தகையாய் லீலைதனை யடியருக்காய்ச்
செய்தருளு மிறைவ ரியாங்கண்
முத்தநகை மீனலோ சனியாளே
தஞ்சமென்று முழுது நம்புங்
கொத்தடிமை பரம்பரையா ளடிச்சேறை
யாதலினாற் கருணை கூர்ந்து
சித்தமிரங் கிக்காக்கக் கடனாகுந்
தென்மதுரை தேவ தேவே! (12)

நன்றாக

கருணைத் திருவிருத்தம் முற்றும்.

வாழ்த்து

"ஞால மோங்குக நான்மறை நீடுக
சீல மன்னவன் செங்கோல் விளங்குக
கால மாமழை மன்னுக காதலாற்
சால வீச னடியார் தழைகவே !"

சுபம்

மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே. சாமிநாதையர்
நூல்நிலையம், அடையாறு, சென்னை - 20.

உ
திருச்சிற்றம்பலம்

வீரபத்திரக் கம்பர் இயற்றிய

# திருவாலவாயுடையார் திருவிளையாடற்

## பயகரமாலை (அறிமுகம்)

காப்பு

### சித்தி விநாயகர்
### கட்டளைக் கலித்துறை

மன்னிக் கிடக்குநின் பொற்றாளல் லாற்கதி மற்றில்லையென்
றுன்னிக் கிடக்குமென் றுள்ளங்கண் டாயர வொன்றொடொன்று
பின்னிக் கிடக்குஞ் சடைமீதுஞ் சாமற் பிறைக்கொழுந்து
மின்னிக் கிடக்குந் தமிழ்க்கூடற் சித்தி விநாயகனே ! (1)

### கற்பக விநாயகர்

பரிவொடு செல்வ மதுரா புரிச்சொக்கர் பாங்கிற்செய்த
திருவிளை யாடற் பயகர மாலையைச் செப்பிடவே
சொரிதரு மும்மத நால்வாய்த் தழைசெவித் துங்கச்செங்கட்
கரிமுகக் கற்பகக் கன்றே கழறந்து காத்தருளே ! (2)

### நூல்
### 1. இந்திரன் பழிதீர்த்த திருவிளையாடல்

பூவிற் கவட விருத்தா சுரனைப் பொருதுகொன்று
மேவுற்ற பாவத்தை மண்பெண் புனன்மர மேனிறுத்திச்
சேவித் தொளிர்பொன் விமானமுஞ் சாத்திய தேவர்கள்கோன்
பாவத்தைத் தீர்த்தசொக் கேபர தேசி பயகரனே ! (3)

## 2. வெள்ளானைக்குச் சாபந் தீர்த்த திருவிளையாடல்

இந்திரன் கையிற் றுருவாச னிட்ட விணைமலரைச்
சிந்திவெண் சிந்துரந் தீங்கணைந் தேதென் மதுரைவந்து
முந்துறச் சென்று பணிந்தேத்த மெச்சி முதுபெருஞ்சா
பந்தனைத் தீர்த்தசொக் கேபர தேசி பயகரனே ! (2)

## 3. தடாதகையார் அவதரித்த திருவிளையாடல்

சீராக வாழு மதுரா புரியிற் செழியர்குலப்
பேரா மரசன் மகவேண்டித் தந்தருள் பிள்ளையென்ன
நேராக மூன்று முலையா ளொருபெண்ணை நீதியுடன்
பாராளத் தந்தசொக் கேபர தேசி பயகரனே ! (3)

## 4. மணஞ்செய்த திருவிளையாடல்

தாண்டிய வெம்பரித் தேரேறி மன்னர் தளத்தைவென்று
மீண்டிடு மூன்று முலையா டடாதகை மேவிநின்கண்
டீண்டி யிரண்டு முலையா மணஞ்செய்து தென்மதுரைப்
பாண்டிய னானசொக் கேபர தேசி பயகரனே ! (4)

## 5. பதஞ்சலிக்கு நடஞ்செய்த திருவிளையாடல்

விதம்பெற லேய்தென் மதுரையி லேமண வேள்வியிலற்
புதம்பெற வந்த முனிவர் குழாத்தைப் புசியுமென்ன
இதம்பெறத் தில்லை நடங்கண் டலாதுண வில்லையென்ற
பதஞ்சலிக் காடுஞ்சொக் கேபர தேசி பயகரனே ! (5)

## 6. பூதமுண்ட திருவிளையாடல்

சுசியா ரமுதி னறுசுவை கூட்டித் துலங்குமன்ன
முசியா தளித்தவை யெல்லாரு முண்டு முடிவிலவாய்
புசியாக் குறையமு தூட்டக்குண் டோதரப் பூதத்திற்குப்
பசியாக் கியசொக்க னேபர தேசி பயகரனே ! (6)

## 7. ஆறழைத்த திருவிளையாடல்

அருகிருக் குங்குழி யன்னமெல் லாமுத ரத்தடக்கி
மருவுறு கேணி குளமுத லாவுண்டு வற்றியபின்
பெருகுவிக் கும்வையை வெள்ளமெல் லாம்பெரும் பூதத்தினாற்
பருகுவிக் குஞ்சொக்க னேபர தேசி பயகரனே ! (7)

## 8. கடலழைத்த திருவிளையாடல்

பிரியா வெனது பிதாவின் றிவசம் பெருங்கடல்போய்த்
தரியா திரங்கி யருள்புரி வாயென்று சாற்றிடவே
முரியா ரளகத் தடாதகை யாரன்னை மூழ்கமுந்நீர்
பரிவா யழைத்தசொக் கேபர தேசி பயகரனே ! (8)

## 9. மலயத்துவசனையழைத்த திருவிளையாடல்

வித்தார மாக மதுரா புரியின்முந் நீரைவிடக்
கத்தா வுடனன்றி யான்மூழ் குவது கணக்கல்லவே
மைத்தா ரளகத் தடாதகை யென்ன மலயத்துவசப்
பத்தாவைக் காட்டுஞ்சொக் கேபர தேசி பயகரனே ! (9)

## 10. உக்கிரன் பிறந்த திருவிளையாடல்

தடாதகை யார்தென் மதுரா புரியிற் றவமுமன்பும்
விடாவகை யாலுக் கிரனாம் புதல்வனை மேதினிமே
லடாவகை யின்றி யரசாளும் வண்ண மழகிற்குறை
படாவகை யீந்தசொக் கேபர தேசி பயகரனே ! (10)

## 11. வளைவேல்செண்டு கொடுத்த திருவிளையாடல்

தெரியலர் வந்து வணங்கித் திறையிடுஞ் சீர்மதுரை
தரிபெற வேண்டுஞ் சடைமன்ன னேதரு நாட்டரையன்
கிரிகட லேபகை கிட்டின் வளைசெண்டு சத்திதந்தோம்
பரிகரி யென்னுஞ்சொக் கேபர தேசி பயகரனே ! (11)

## 12. நான்மாடக் கூடலான திருவிளையாடல்

மதியா வருணன் மழையால் வருத்தவிம் மாநிலத்தோர்
கதியாரு மில்லை சரணெனப் புட்கலா வத்தமுன்னா
னதியார் மதுரையை நான்மாடக் கூட லலஞ்சிறக்கப்
பதியாக் கியசொக்க னேபர தேசி பயகரனே ! (12)

## 13. சித்தரான திருவிளையாடல்

சகம்புக ழுந்தென் மதுரா புரியிற் றரைமதிக்க
வகந்தொறு நீசெய்த வாடல்கண் டேயழ கார்வழுதி
யிகழ்ந்துநின் னாமமென் னென்னவெல் லாம்வல்ல சித்தரெனப்
பகர்ந்தருள் காட்டுஞ்சொக் கேபர தேசி பயகரனே ! (13)

## 14. கல்லானை கரும்புவாங்கின திருவிளையாடல்

நீங்காத செல்வ மதுரைநன் னாட்டி னிறைபுவியைத்
தாங்காவ லிற்புய மீதுவைத் தோர்தண் மதிக்குலத்தோ
ராங்கார மார்மன் னவன்கைக் கரும்பைக்கல் லானையினாற்
பாங்காக வாங்குஞ்சொக் கேபர தேசி பயகரனே. (14)

## 15. சங்கப் பலகை கொடுத்த திருவிளையாடல்

உலக மகிழ்வெய்த முன்னாட் புலவ ருடனிருக்கு
மிலகு தவிசை யளித்தருள் வாயென் றெதிர்புகழும்
புலவர் மதுரையி லேழேழு பேரும் பொருந்தச்சங்கப்
பலகை தருஞ்சொக்க னேபர தேசி பயகரனே ! (15)

## 16. கிழியறுத்த திருவிளையாடல்

மாப்பாட லஞ்செறி மாமது ராபுரி வாழ்வழுதி
காப்பா னினைந்த படிகவி பாடிக் கனகத்தினாற்
கோப்பாகக் கட்டுங் கிழியை யறுத்துக் குலதிலகப்
பாப்பானுக் கீந்தசொக் கேபர தேசி பயகரனே ! (16)

## 17. நக்கீரனைக் கரையேற்றின திருவிளையாடல்

உயர்ந்தநற் கூடல் வழுதிமுன் னேயுன் னுடனெதிர்க்க
வியந்திட நன்னுதற் கண்ணழல் காட்டி மிகவஞ்சியே
கயந்தனில் வீழுநக் கீரனை நீர்க்கரை யேற்றியவன்
பயந்தனைத் தீர்த்தசொக் கேபர தேசி பயகரனே !

## 18. குறுமுனிக்குத் தமிழுரைத்த திருவிளையாடல்

எண்ணுந் தமிழின் பெருமையிந் நாட்டி லிசைத்திடவு
முண்ணின்ற ஞானநக் கீரற்குண் டாகவு மோங்குபுகழ்
நண்ணுங் குறுமுனி வற்குப தேசநற் கூடலிலே
பண்ணுந் தமிழ்ச்சொக்க னேபர தேசி பயகரனே ! (18)

## 19. ஊமை தமிழறிந்த திருவிளையாடல்

எழிறிகழ் கூடலி னின்பா லகப்பொரு ளின்பயனை
வழிபடு சங்கத் தவர்மொழி வாயென்று வந்துநிற்க
வொழிவிலிவ் வூர்ச்செல்வ னுப்பூர் கிழார்மக னூமன்றன்னாற்
பழுதொழி கென்னுஞ்சொக் கேபர தேசி பயகரனே ! (19)

## 20. இடைக்காடன் பின்போன திருவிளையாடல்

திருந்திய செல்வ மதுரைச் செழியன்முன் சென்றடியே
னருந்தமிழ் பாடினன் றள்ளின னேயென் றவன்செல்லவே
கரும்பன சொல்லி யுடன்வட பாலிடைக் காடனுக்காப்
பரிந்துபின் போனசொக் கேபர தேசி பயகரனே ! (20)

## 21. கடல்சுவற வேலெறிந்த திருவிளையாடல்

செருவேறு மன்ன ருடன்புவி மீதிற் றிகழ்சனமு
மருவே தனையுட னீங்கணைந் தாரணி கூடனகர்ப்
பெருவேலை வந்தது வாலுக் கிரனே பிடித்தெறிநின்
பருவேலை யென்னுஞ்சொக் கேபர தேசி பயகரனே ! (21)

## 22. வலைவீசின திருவிளையாடல்

இருமீன் பிடிக்கு மதியரை யன்முன் பொழின்மதுரைப்
பொருமீன்கண் ணாளைத் தருகெனக் கென்று பொருந்தியபின்
வருமீனுங் கப்பலு மங்குற வேசெயு மாமகரப்
பருமீன் பிடித்தசெக் கேபர தேசி பயகரனே ! (22)

## 23. வளையல் விற்ற திருவிளையாடல்

நிகரற்ற தாரு வனமட வார்நின் மதுரைதன்னிற்
றகவுற்ற செட்டிப் புதல்விக ளாகச் சமைந்தவந்நாண்
மிகவுற்ற நல்வளை கொள்ளுமென் றேயவர் வீதிதொறும்
பகர்செட்டி யானசொக் கேபர தேசி பயகரனே ! (23

## 24. இலச்சினையிட்ட திருவிளையாடல்

ஓங்கிய கூடற் பதிச்செம் பியன்வர வுள்ளஞ்சியே
யாங்குள வாச லிலச்சினை யிட்டிறை யாங்கிருப்ப
வீங்கொரு வாசல்விட் டேதொழு வித்திட பக்குறியே
பாங்கூட னிட்டசொக் கேபர தேசி பயகரனே ! (24)

## 25. மாணிக்கம் விற்ற திருவிளையாடல்

சாத்திய மேன்மை தவறா மதுரைத் தலமதனில்
வாய்த்தநற் செல்வ வணிகனைப் போல வளர்மதியின்
கோத்திர மன்னன் முடிசூட மாணிக்கங் குற்றமறப்
பார்த்திவற் கீந்தசொக் கேபர தேசி பயகரனே ! (25)

## 26. ஆனையெய்த திருவிளையாடல்

வகையான தொன்றை யறியார் மறமண் டலத்தமணர்
தொகையாக மேவி வழுதிதன் மேல்விடச் சூழ்ச்சியினான்
மிகையானை வேந்தினைக் கூடற் பதியை விழுங்கவந்த
பகையானை யெய்தசொக் கேபர தேசி பயகரனே ! (26)

## 27. ஞானோபதேசஞ் செய்த திருவிளையாடல்

ஞாலத்தர் போற்று மதுரைமன் னன்பொரு ணல்கியனு
கூலப் பெரும்பரி கொள்ளப் பெருந்துறை கூடியநா
ளாலித்த ஞான வுபதேசம் வாதவூ ராளிக்கன்பிற்
பாலித் தருளுஞ்சொக் கேபர தேசி பயகரனே !

## 28. நரி பரியான திருவிளையாடல்

அரியார்க்குஞ் சோலை மதுரையின் மன்ன னடற்பரிக்கா
வெரியார்த்த கோபத்தின் வாதவூ ராளி யிடுக்கணுறத்
தரியாத் திருவுளத் தாலே நரிதன்னைத் தாரணியிற்
பரியாக் கியசொக்க னேபர தேசி பயகரனே ! (28)

## 29. குதிரை நரியான திருவிளையாடல்

வரிபயின் மீனத் துவசன்முன் னேதென் மதுரைதன்னில்
விரிவுறச் செண்டு வெளிதனிற் காட்டி விழுப்பமுட
னெருநலின் முன்றந்த பொன்னுக்கெல் லாம்பரி நேரென்றபின்
பரிநரி யாக்குஞ்சொக் கேபர தேசி பயகரனே ! (29)

## 30. மண்சுமந்த திருவிளையாடல்

அடல்வந்த மானப் பரிக்கு நரியிட் டமைச்சனுக்காக்
கடல்வந்த வெள்ள மழைப்பித்துத் தென்கரை கட்டுதற்காச்
சுடவந்த பிட்டுக்குக் கூடையி லேமண் சமந்தடியும்
படவந்த தென்சொக்க னேபர தேசி பயகரனே ! (30)

## 31. விருத்த குமார பாலரான திருவிளையாடல்

சேலிகல் கூடற் புரத்தே மறையவன் செல்வமின்னை
மாலடி போற்று மறையோன் புதல்வன் வதுவைசெய்யக்
கோலமென் னென்ன விருத்தனு மாகிக் குமாரனுமாய்ப்
பாலனு மானசொக் கேபர தேசி பயகரனே ! (31)

## 32. மாறியாடின திருவிளையாடல்

விதமான வெண்ணெண் கலைவல்ல கூடலின் மீனவனற்
புதமா நடத்தி னருமைகண் டேபொற் பதம்வருந்த
விதமா நடித்தனை யெத்தனை கால மெனவிரங்கிப்
பதமாறி யாடுஞ்சொக் கேபர தேசி பயகரனே! (32)

## 33. பழியஞ்சின திருவிளையாடல்

செழியன் றமிழ்தெரி கூடலிற் பூசுரன் றேவிவடத்
திழியுமம் பாலுயி ரேகிற்றென் னாதிந்த வேடன்கொன்றான்
மொழியும் பரிசிவை யென்றாற்கும் வேந்தற்கு மூதலித்துப்
பழியஞ்சி யானசொக் கேபர தேசி பயகரனே! (33)

## 34. மகா பாதகந் தீர்த்த திருவிளையாடல்

தோதக வாசகன் மாமது ராபுரி சூழ்பதியிற்
பேதக மாக மறையோன் புதல்வன் பிதாவைக்கொன்று
தீதகந் தன்னிலுஞ் செய்யா ததுசெய்யச் சேர்ந்தபெரும்
பாதகந் தீர்த்தசொக கேபர தேசி பயகரனே! (34)

## 35. அங்கம் வெட்டின திருவிளையாடல்

புடவிக்குள் வீறு மதுரா புரியிற் புகழ்ப்பணிக்கன்
றிடமுற்ற மைந்தரிற் சித்தனென் போன்செய்த தீமையினாற்
கடகொட்டி வாளிட் டெதிரிட் டவன்றன்னைக் கண்டதுண்டம்
படவெட் டியசொக்க னபேர தேசி பயகரனே! (35)

## 36. மதுரையான திருவிளையாடல்

கதியங்கெய் தாத வமணர்க ளேவுங் கடியரவைத்
துதிகொண்ட பாண்டியன் வில்வாங்கிக் கொல்லத் தொடர்விடத்தை
மதிபொதி நீர்கொண்டு மாற்றிக் கடம்ப வனமதுரைப்
பதியெனப் பண்ணுஞ்சொக் கேபர தேசி பயகரனே! (36)

## 37. வெப்புத் தீர்த்த திருவிளையாடல்

வந்தித் தவர்த மனத்துயர் தீர்க்கு மதுரையென்றே
சிந்தித் துயர்கதி சேராமற் றீநெறி சேர்ந்தபொல்லா
நிந்தைச் சமணும் வழுதிவெப் புங்கெட நீறிடச்சம்
பந்தர்க கருள்சொக்க னேபர தேசி பயகரனே! (37)

## 38. கழுவேறின திருவிளையாடல்

இதத்த செழுந்தமிழ் சேர்கூடன் மன்னன்மு னேடெழுதி
விதத்துடன் சம்பந்தர் தீநீரிற் போட்டிட வெற்றிகண்டே
மதத்தபொல் லாத சமணரெண் ணாயிரர் வன்கழுவிற்
பதைத்திட வேறுஞ்சொக் கேபர தேசி பயகரனே ! (38)

## 39. மெய்க்காட்டிட்ட திருவிளையாடல்

விண்ணாடர் போற்ற மதுரைதன் மேன்மறு வேந்தன்வரத்
தண்ணாறா மந்திரிக் கொந்தக னார்செய்த தன்மங்கள்கண்
டெண்ணாப் பெரும்படை மெய்க்காட்டிட் டேயன்
றெதிர்த்துவெம்போர்
பண்ணாமல் வெல்லுஞ்சொக் கேபர தேசி பயகரனே ! (39)

## 40. உலவாக்கிழி கொடுத்த திருவிளையாடல்

கோத்திர மன்னவன் வேதாந்தத் துண்மைகொள் ளாமன்முனஞ்
சாத்திர வேள்வி மறந்திட மாமழை தாழ்த்ததனாற்
காத்தரு ளென்ன மதுரையி லேகன கக்கிழியப்
பார்த்திபற் கீந்தசொக் கேபர தேசி பயகரனே ! (40)

## 41. மாமனாக வந்து வழக்குரைத்த திருவிளையாடல்

எண்பார் மதுரை வணிகன் புதல்வரில் லாமையினா
னண்பா மருகை மகவாக்கிச் சென்றபி னாதியர்கள்
கண்காணி கைக்கொள்ள மாமனைப் போல்வழக் காடச்செட்டிப்
பண்பாக வந்தசொக் கேபர தேசி பயகரனே. (41)

## 42. அட்டமாசித்தி பகர்ந்த திருவிளையாடல்

நலங்கிளர் வெள்ளிப் பொருப்பினின் மூவிரு நாரியர்க
டுலங்குப தேசம் பராமுகஞ் செய்திடத் தொன்மரத்தி
னிலங்கிய நீழலிற் கல்லாக்கி மாற்றிமுன் பெண்சித்தியும்
பலந்தரச் சொன்னசொக் கேபர தேசி பயகரனே ! (42)

## 43. தண்ணீர்ப் பந்தல் வைத்த திருவிளையாடல்

முந்திப் பருதி குலத்துடன் மன்னன் முதிர்படையால்
வந்திடக் கண்டு மதுரையர் கோன்செய்யும் வாறெதென்னத்
தந்திரத் தாலவன் றான்றோற்கு நீசெல்க வென்றுதண்ணீர்ப்
பந்தரை வைத்தசொக் கேபர தேசி பயகரனே ! (43)

## 44. இந்திரன் முடிமேல் வளையெறிந்த திருவிளையாடல்

மடலவிழ் சோலை மதுரையர் வேந்தன் மழைபொழியா
திடர்செயுங் காரைச் சிறைவைக்க நீக்கென் றிமையவர்கோ
னடல்செயு நாளி லவன்முடி மேல்வளை யாரநின்று
படவெறி யென்னுஞ்சொக் கேபர தேசி பயகரனே ! (44)

## 45. பொன்னனையாளுக் கருள்புரிந்த திருவிளையாடல்

மணிதிகழ் மாட மலிமது ராபுரி வாழ்சித்தரேந்
துணிவுட னின்னன்பு கேட்டணைந் தோமென்று
சொல்லிப்பின்ன
ரணிதிகழ் பூவணப் பொன்னனை யாளுக்கன்
றாணிப்பொன்னைப்
பணிவிடைக் கீந்தசொக் கேபர தேசி பயகரனே ! (45)

## 46. சோழனைக்கொண் டாழியிற்றாழ்த்த திருவிளையாடல்

வேதா வணங்கு மதுரா புரியில் வெகுண்டடைந்தான்
நீராக வந்த வளவனென் றோதச் செழியனுக்கா
வாதார மாய்ச்சென் றமராடிப் பண்டுகொண் டாழியென்னும்
பாதாளத் திட்டசொக் கேபர தேசி பயகரனே ! (46)

## 47. திருவாலவாயான திருவிளையாடல்

ஆம்பா ரனைத்து மலைகோத்து நீங்குமந் நாளினின்லைன
வேம்பார் தொடைப்புய னெல்லை விளம்பென வேண்டிடவே
தேம்பாத செல்வத் திருவால வாயெனச் சீருடைய
பாம்பால் வளைத்தசொக் கேபர தேசி பயகரனே ! (47)

## 48. வரகுணனுக்குச் சிவலோகங்காட்டிய திருவிளையாடல்

வரகுண தேவன் பிரமத்தி வந்து வருத்தியநாட்
டிரமுட னேயிடை மாமரு தூரிற் செறுத்ததனை
யுரகமுற் சூழ்ந்த மதுரையி லேயவற் கூரறியப்
பரகதி காட்டுஞ்சொக் கேபர தேசி பயகரனே ! (48)

## 49. விடைக்குறி யம்பெய்த திருவிளையாடல்

மடைத்தலை முத்தங் கொழிக்கு மதுரையின் மேல்வளவன்
றிடத்துட னேவரப் பாண்டிய னுள்ளந் தெளியச்செய்து
விடைக்குறி தீட்டிய வம்பாற் கரிபரி வீழ்ந்துமுற்றும்
படத்தொலை வித்தசொக் கேபர தேசி பயகரனே ! (49)

## 50. உலவாக் கோட்டை வைத்த திருவிளையாடல்

பெருங்கோ டுலாவும் வயல்சூழ் மதுரைப் பெரும்புரியின்
மருங்கோடு வாழ்கின்ற சூத்திர வாதித்தன் மாதவர்க்கா
யிருங்கோ டிலாத வமுதிட் டிளைத்தன னென்றவற்குப்
பருங்கோட்டை யீந்தசொக் கேபர தேசி பயதரனே !

## 51. மூர்த்தியார்க்கு அரசளித்த திருவிளையாடல்

கலித்துயர் தீர்க்க மதுரையி லேயன்பர் காதலினா
லொலித்திடு பூசைக்குச் சந்தன முட்ட வுரைத்துச்செங்கை
சலித்திடு மூர்த்தி பணிவிடை யிம்மையிற் றாழ்வறவே
பலித்திட வீந்தசொக் கேபர தேசி பயகரனே !

## 52. காரியார் நாரியார் பாப்பகுந்த திருவிளையாடல்

மாப்பல வுங்கமு கம்புடை சூழு மதுரைதன்னிற்
கோப்புடன் காரியார் நாரியார் மேற்குல வேந்தன்றன்மேல்
யாப்பலங் கார மெழுத்துப் பொருட்சொற் கியையச்செய்த
பாப்பகுந் திட்டசொக் கேபர தேசி பயகரனே ! (52)

## 53. புலிமுலை புல்வாய்க் கருளின திருவிளையாடல்

மாலொடு தேவர் மகிழ்ந்தேத்து நீப வனத்துழையைக்
கோலொடு வேடுவர் கொல்லக்கண் டேயதன் குட்டிக்குத்தாய்
போலுடன் வந்தந்தப் புல்வாய் மறிக்குப் புலியைமுலைப்
பால்கொடு வென்னுஞ்சொக் கேபர தேசி பயகரனே ! (53)

## 54. சாதாரி பாடின திருவிளையாடல்

புயறவழ் சோலை மதுரையின் மன்னன் புகழவந்தோ
னியலிசை வல்ல னெனவே வரவியற் பாணனுக்கா
வியனுற வேழிசைச் சாதாரி பாட விறகுசுமை
பயனுற வேந்துசொக் கேபர தேசி பயகரனே ! (54)

## 55. திருமுகங் கொடுத்த திருவிளையாடல்

வேடிக்கை யாக மதுரா புரிமன்னன் மேன்மையெலா
நாடிப் புகமு மியற்பாண பத்திர னல்லிசைக்காத்
தேடிக் கொடுக்கவும் போதாமற் சேரற்குச் சீட்டுகவி
பாடிக் கொடுத்தசொக் கேபர தேசி பயகரனே ! (55)

•

## 56. பலகையிட்ட திருவிளையாடல்

முத்தமி ழோரெண் மதுரையி லுன்னைமுப் போதுமல்லான்
மெத்திய யாமத்தும் பாடப்பெய்ம் மாரிக்கு வேண்டியதோர்
சித்திர மாம்பொற் பலகை செழுந்தமிழ்ப் பாணனென்னும்
பத்திரற் கீந்தசொக் கேபர தேசி பயகரனே ! (56)

### 57. இசைவாது வென்ற திருவிளையாடல்

முடிவொன் றிலாத மதுரா புரிமன்னன் முத்தமிழ்நூல்
குடிகொண்ட வெற்றி விறலிதன் னோடிசை கூறென்றநாள்
வடிவந் திகழ்பத் திரன்மனை யாளிசை வாதுவெல்லும்
படிவந் துதவுஞ்சொக் கேபர தேசி பயகரனே ! (57)

### 58. பன்றிக் குட்டிகளுக்குத் தாயான திருவிளையாடல்

வென்றிகொள் கூடலில் வேளாளன் சேய்கண்மென் றூறகழ்ந்து
வன்றிறன் மாமுனி சாபத்துக் கேழன் வடிவுறத்தாய்க்
கொன்றிடப் பாண்டியன் றாய்போல் வந்து கொழுமுலையைப்
பன்றிகட் கீந்தசொக் கேபர தேசி பயகரனே ! (58)

### 59. பன்றிக் குட்டிகட்கு அருள்புரிந்த திருவிளையாடல்

நீலக் கரும்பன்றிக் குட்டிமுந் நான்குநின் பாலருந்திக்
கோலத் துடன்வளர்ந் தக்கோல நீங்கித்தென் கூடலிலே
சீலத் தவர்புகழ் வேளாளர் கோத்திரத் திற்செனிக்கப்
பாலர்க் கருள்சொக்க னேபர தேசி பயகரனே ! (59)

### 60. கரிக்குருவிக்கு அருள்புரிந்த திருவிளையாடல்

பொறையற்ற காகத்துக் காற்றாம லேதினம் போதநொந்தே
குறைவற்ற செல்வ மதுரைவந் தேதன் குறையனைத்து
மறையமித் துஞ்சய மந்திரத் தாலக் கரிக்குருவிப்
பறவைக் கருள்சொக்க னேபர தேசி பயகரனே ! (60)

### 61. மாமேருவிற் கயல்செண்டு பொறித்த திருவிளையாடல்

நான்மறை யோரை வழுதி யிகழநன் மாரியின்றி
மேலுயர் பூதலத் தெல்லோரு மாமு மிடிகெடவே
சேலுடன் செண்டிட்டு மேருப்பொன் வாங்கித் திகழ்மதுரைப்
பால்வரச் செய்தசொக் கேபர தேசி பயகரனே ! (61)

### 62. சான்றழைத்த திருவிளையாடல்

கதிசேர் வணிகன் விடத்தா லுயிர்விடக் கன்னிகையால்
விதிசேர் சம்பந்த னெழுப்ப மணந்தவர் மேவுறுநா
ணதிசேர் புறம்பயக் கூவ மிறைவன்னி நன்மதுரைப்
பதிசேரப் பண்ணுஞ்சொக் கேபர தேசி பயகரனே ! (62)

### 63. நாரைக்கு அருள்புரிந்த திருவிளையாடல்

கத்திக் கழனி தொறுமீ னருந்துஞ்செங் கானாரைதான்
முத்திக் குரிய பெரியோரைச் சேர்ந்த முகிழ்த்தத்தினா
லெத்திக்கு மெண்ணு மதுரா புரியிற்சென் றேகிச்செய்த
பத்திக் கருள்சொக்க னேபர தேசி பயகரனே ! (63)

### 64. வேதமுணர்த்திய திருவிளையாடல்

மரியாத மாமதுரை மாய்ந்திட முன்னுகம் வந்தவந்நாட்
டெரியாம லந்தண ரெல்லாந் திகைப்பத் தெளிந்திடவே
விரிவான வேதத்தை யெல்லாருங் கண்டு விளம்புகென்னப்
பரிவாய்ப் பகர்ந்தசொக் கேபர தேசி பயகரனே ! (64)

திருவிளையாடற் பயகரமாலை
முற்றிற்று

திருச்சிற்றம்பலம்.

உ

திருச்சிற்றம்பலம்.

# மதுரை அறுபத்து நான்கு திருவிளையாடல் போற்றிக் கலிவெண்பா

(அறிமுகம்)

காப்பு

நாற்றிக்கும் போற்று நதிமதுரைச் சொக்கரையாம்
போற்றிக் கலிவெண்பாப் போற்றிசெயச் - சீற்றமதன்
றைக்குஞ் சரமுகத்தான் சாயவிழித் தோனுதவு
கைக்குஞ் சரமுகத்தான் காப்பு.

பூமேவு கற்பகநா டாளும் புரந்தரனார்
தீமை விருத்திரனைச் செற்றபழி - போமாறு
பொற்கமலந் தோய்ந்து விமானமிசைப் பூசிக்க
நற்கருணை செய்த நலம்போற்றி - நற்றவத்தோர்
ஈசனார் சாத்து மெழின்மலரைக் கால்சிதைத்த
வாசவனார் வெள்ளானை மண்ணிழிந்து - பூசனைசெய்
தல்லற் படுசாபந் தீர வருள்சுரந்த
மல்லற் கருணை வளம்போற்றி - நல்வணிகன்
கண்டுவந்து கூறக் கனவினருட் சித்துருவங்
கொண்டுவந்து காடெறிந்து கோநகரங் - கண்டிடெனக்
கொத்தறா நிம்பக் குலசே கரனையெதிர்
சித்தரா யாட்கொண்ட சீர்போற்றி - பத்தி
மலையத் துவசன் மகந்தன்னின் மூன்று
முலையுத் தமியாய் முளைத்துக் - கலைமுழுதுங்
கற்றுமுடி சூடிக் கயற்கண்ணி வெங்கலியைச்
செற்றுலகை யாண்டிருந்த சீர்போற்றி - கொற்றமணித்
தேரேறி யெட்டுத் திசைவென்று நந்திகணப்
போரேறி வென்றெதிர்க்கும் போதிலொரு - வாரேறு
கொங்கை மறைந்தமதிக் கொம்பைமணஞ் செய்துமுடி
மங்கலஞ் செய்த வளம்போற்றி - அங்கனக
மன்றாடல் வேட்டவிரு மாதவர்க்கு வெள்ளிமன்றுள்
நின்றாடிக் காட்டு நிலைபோற்றி - குன்றமென

முன்ன மலைபசித்தீ மூளுங் குறள்வீரற்
கன்னமலை யீந்த அருள்போற்றி - பின்னுமவன்
வெய்யபசிக் கன்னக் குழியுநீர் வேட்கைக்கு
வையையுந் தந்த வரம்போற்றி - ஐயைதனை
ஈன்றாள் கடலாட வேண்ட வெழுகடலுஞ்
சான்றா வரநிறுத்துந் தாள்போற்றி - வான்றாழ
வாழுமலை யத்துவச மன்னனைக்கூஉய்த் தேவியொடும்
ஆழிபடி வித்த வருள்போற்றி - வேள்விவரு
வில்வளைக்கை நங்கை விறலுக் கிரகுமரச்
செல்வனைப் பெற்ற திறம்போற்றி - செல்வனுக்கு
மன்றன் முடித்து வளைசெண்டு வேல்கொடுத்து
வென்றிமுடி சூட்டும் விறல்போற்றி - வன்றிறல்வேல்
வேலை சுவற விடுத்துக் கிரகுமரன்
ஞாலம் புரந்த நலம்போற்றி - வேல்வலக்கைச்
சேயனைய வுக்ரன் றிகிரியெறிந் திந்திரன்போர்
சாயமுடி சிந்து சயம்போற்றி - ஆயவரி
வண்டலம்பு தார்க்குமரன் மேரு மணிமுடிமேற்
செண்டெறிந்து வைப்பெடுத்த சீர்போற்றி - பண்டொருநாள்
ஆறறிய வந்தணருக் காதி மறைப்பொருளைத்
தேற விரித்த திறம்போற்றி - ஈறடைந்த
தென்னன் குமரன் திருமுடிக்கு வாணிபராய்
நன்மணிகள் விற்ற நலம்போற்றி - நன்னகர்மேல்
வென்றி வருணன் விடுத்த கடல்பருகத்
துன்றுமுகி னான்கேவுஞ் சூள்போற்றி - கன்றியவன்
வான்மாரி யேழும் விடுப்பமழை நான்கும்போய்
நான்மாட மான நலம்போற்றி - தேனிதழி
வைத்த முடிமறைத்து மாடநக ரெங்கெங்குஞ்
சித்தரா யாடியருள் சீர்போற்றி - சித்தராய்
மன்னவன் கைக்கரும்பை வாங்கிக்கல் யானைக்குத்
தின்ன வளித்த திறம்போற்றி - தென்னவன்மேல்
வெங்க ணமணர் விடுத்த களிற்றைநர
சிங்கசரந் தொட்டெய்த சீர்போற்றி - தொங்குதிரை
மூப்பிளைய காளை முலையுண் குழவியெனக்
கோப்பருவங் கொண்ட குணம்போற்றி - மாப்பெரியோர்
தேறுநடந் தன்னையொரு தென்னன் றனக்கிரங்கி

மாறிநடஞ் செய்த மலர்போற்றி - ஆறடைந்தோர்
வஞ்சி யுயிரிழப்ப நாடு மறப்பழியை
அஞ்சி வெளிசெய்த வறம்போற்றி - வஞ்சமனத்
தாயைப் புணர்ந்தமகன் றந்தை தனைவதைத்த
தீயபழி தீர்த்தவருட் சீர்போற்றி - தாயனைய
ஆசான் மனைவிதன்மேல் ஆசைவைத்த மாணவனைக்
கூசாமற் கொன்ற கொலைபோற்றி - மாசமணர்
வல்வித்தை செய்துவிடு வன்னஞ்ச வாளரவைக்
கொல்வித்த நல்ல குணம்போற்றி - வல்லமணர்
கூரியகோட் டாவை வரவிடுப்பக் கொல்லேற்றால்
வீரியஞ் சாய்ந்த விறல்போற்றி - தாரணியில்
வெந்திறல்வேன் மீனவன்முன் மெய்காட்டிட் டன்புடைய
மந்திரியைக் காத்த வளம்போற்றி - நொந்திரந்த
கொற்கையர்கோ வேந்தன் குறையிரப்பச் சித்தராய்ப்
பொற்குவை தந்த புகழ்போற்றி - நற்குவளை
மையேற்ற வாட்கண் வணிகமட வார்க்குவளை
கையேற்றி மாலேற்றுங் கைபோற்றி - மைதீரப்
பட்டமங்கைப் பாறையுரு நீத்தாறு பைந்தொடியார்க்
கட்டசித்தி யீந்த வருள்போற்றி - கட்டவிழார்த்
தாராற் கரையிரவிற் றாழ்திறந்து காப்படைத்துச்
சீரார் விடைபொறித்த சீர்போற்றி - ஆரானை
மூண்டுபொருந் தென்னன் முனைப்போர்க்குத் தண்ணீர்தந்
தாண்ட கருணை யறம்போற்றி - ஈண்டயன்மால்
வன்மனத்துக் கெட்டான் வடிவெடுத்தப் பொன்னனையாள்
நன்மனையிற் சென்ற நடைபோற்றி - தென்னனெதிர்
ஆயிர வாம்பரிக்கோ ராடவனை யோடையினில்
வீய வலந்திரித்த வேல்போற்றி - தூயவளம்
ஒல்கு மடியாற் குலவாத் தனிக்கோட்டை
நல்குங் கருணை நலம்போற்றி - நல்வணிகன்
மாமனென வந்து வழக்குரைத்து ஞாதியர்பாற்
சேமநிதி வாங்கியருள் சீர்போற்றி - கோமகனை
ஆட்டிய வன்பழிதீர்த் தாண்டச் சிவலோகங்
காட்டி யருள்கருணைக் கண்போற்றி - பாட்டிசைக்குப்
பாண னடிமையெனப் பாடி விறகெடுத்த

நாண மிலாத நடைபோற்றி - பாணனுக்குச்
செந்தமிழாற் றீட்டுந் திருமுகத்தைச் சேரனிடைத்
தந்தருளிச் செய்த தனம்போற்றி - வந்திறைஞ்சி
அற்பொழிவு மாரிவெள்ளத் தாழ்ந்திசைக்கும் பாணனுக்குப்
பொற்பலகை யிட்ட புகழ்போற்றி - கற்பதனான்
மாட்சிபெறு பாடினியை வாதுக்குத் தோற்றாடன்
றோட்சுமையாத் தாங்குவித்த சூள்போற்றி - காட்சிபெற
மாயாமல் வெஞ்சுரத்து வல்லேனக் குட்டிகட்குத்
தாயாய் முலைகொடுத்த தாய்போற்றி - வீயாத
ஏனமிரண் டாறனைய்யு மீராறு மந்திரியா
மீனவனுக் கீந்த விறல்போற்றி - மானவலி
எய்த்தெளிய னான விரும்புட் குபதேசம்
வைத்துவலி தந்த வரம்போற்றி - சித்தநெகிழ்
பத்தியினாற் சூழ்ந்துவழி பாடுசெய்யு நாரைக்கு
முத்தி கொடுத்த முறைபோற்றி - சித்தரணி
கோளரவு நான்மாடக் கூடலை யாலவாய்
வாளகிரி போல்வளைத்த மாண்போற்றி - கோளமரிற்
சுந்தரப்பே ரம்பெய்து சோழன் கடற்சேனைக்
கந்தரநா டீந்த வருள்போற்றி - நெந்தமிழ்நூல்
ஆய்ந்தவர் கல்வி யளந்தறியும் பொற்பலகை
ஈந்த கருணை யிசைபோற்றி - வேந்தனிடைச்
சொற்சவையாற் பாட றொடுத்துத் தருமிக்குப்
பொற்கிழி தந்த புகழ்போற்றி - நக்கீரன்
மெய்வெந் தழற்கண்ணால் வெந்தோடை வீழ்ந்தோனைக்
கைதந்தே றிட்ட கரைபோற்றி - மைதவிர
ஏதமுறுங் கீரற் கியற்றமிழைத் தென்மலய
மாதவனாற் றேற்றுவித்த மாண்போற்றி - போதணிந்த
மங்கல மண்டபத்து வந்தூமன் சங்கத்தார்
சங்கையறத் தேற்றுந் தமிழ்போற்றி - சங்கையாய்ப்
போனவிடைக் காடன்பின் போய்ப்பாடல் கேட்டரசன்
மானநிதி நல்குவிக்கு மாண்போற்றி - மீன்மகனாய்ச்
செங்கையொரு நான்குடைய திண்மீன் பிடித்துவலை
மங்கையை வேட்ட மணம்போற்றி - துங்கமறை
ஆன்றதிரு வாதவூ ரந்தணருக் கைந்தெழுத்தின்

மூன்றுபொரு டேற்று முறைபோற்றி - தேன்றதும்பும்
வேம்புநறுந் தாரான்முன் வெவ்வாய் நரித்திரளை
வாம்பரியாய்த் தந்த வரம்போற்றி - வாம்பரிகள்
நின்ற பரிக ணிணம்பிடுங்கி யூளையிட்டுத்
தின்றுநரி யாகுஞ் செயல்போற்றி - அன்றொருத்திக்
காளாய் முதுகி லடிபட்டு மண்சுமந்து
தாளாண்மை செய்த சயம்போற்றி - கோளமணர்
வீறுகெடக் கூனிமிர்த்து வெப்பொழித்துப் பாண்டியனை
நீறுபுனை வித்த நிலைபோற்றி - சீறமணர்
அங்கனலும் வேகவதி யாறுந் தமிழறிய
வெங்கழுவி லேற்றும் விறல்போற்றி - அங்கொருத்தி
மன்றற்குச் சான்றாக வன்னி கிணறிலிங்கம்
அன்றழைத்துக் காட்டு மருள்போற்றி - அன்றிறைவன்
ஆற்றிய வாட லறுபத்து நான்கினையுஞ்
சாற்றிய தென்முனிவன் றாள்போற்றி - சாற்றிய
வண்ணங்கேட் டர்ச்சித்த மாமுனிவர் தாள்போற்றி
தண்ணங் கயற்கண்ணி தாள்போற்றி - அண்ணலருள்
போற்றி மதுரைநகர் விண்ணிழிந்த பொற்கோயில்
போற்றி கருணைமுகப் போது.

திருவிளையாடற் பேற்றிக் கலிவெண்பா

முற்றும்
திருச்சிற்றம்பலம்



உ

பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடற்புராணம்

## மதுரைக்காண்டம் செய்யுட்களில் காணப்படும் சொக்கலிங்கப் பெருமானின் அருமைத் திருநாமங்கள்.

1. அகண்ட பூரணன்
2. அங்கணன்
3. அங்கயற்கண்ணி மாதேவி நாயகன்
4. அடிகள்
5. அடியார் எண்ணம் முடிப்பவன்
6. அட்டமூர்த்தி
7. அண்ணல்
8. அண்டவாணர்
9. அண்டர் நாயகன்
10. அத்துவலிங்கம்
11. அநாதிபரம்
12. அந்தமாதியிலான்
13. அந்தமு முதலுமிலான்
14. அபிராமசுந்தரன்
15. அமரர் சிகாமணி
16. அரவப்பூணநூலினன்
17. அரவுநீர்ச்சடையண்ணல்
18. அரியெட்டுத்திருவுருப் பரஞ்சுடர்
19. அருட்கடல்
20. அருவாகி வுருவாகி அருவுருவங்கடந்தான்
21. அருள் பழுத்தன்ன தேசிகன்
22. அலையொடு மதியஞ்சூடு மண்ணல்

23. அழகன்
24. அளவிலா வுயிர்க்கெலாங் கருணை வைத்தவன்
25. அறப்பெருங்கடவுள்
26. அறவுருவன்
27. அறிவானந்த சுந்தரச்சோதி
28. அறிவானந்தன்
29. அறுகாற்பீடுயர் முடியார்
30. அனாதி
31. அன்பின் வலைப்படு பெருமா னெம்மான்
32. ஆண்டநாயகன்
33. ஆதி ஈறிலாப் பரமயோகி
34. ஆதிகடவுளர்க் காவிநாயகன்
35. ஆதி சிவபரஞ்சுடர்
36. ஆத்தன்
37. ஆலத்தை அமுதமாக்கும் அண்ணல்
38. ஆலவாயகத்துளெம்பிரான்
39. ஆலவாயரன்
40. ஆலவாயின் அண்ணல்
41. ஆலவாயுடைய நாயனார்
42. ஆலவாயுடையார்
43. ஆலவாயுடையான்
44. ஆலவாய்க் கண்ணுதல்
45. ஆலவாய்ச் சுந்தரன்
46. ஆலாலம் உண்டவன்
47. ஆறுசேர் சடையார்
48. ஆனந்தப்பொருட் கடவுள்
49. ஆனந்த மதுக்கடல்
50. இகபரந்தந்து உலவாவீடுதருவான்
51. இந்திரேச்சுரன்
52. இந்துசேகரன்
53. இருண்டகண்டன்
54. இலிங்க ஒளி உருவம்
55. இலிங்கமூர்த்தி
56. இறைமகன்
57. ஈசன்

58. ஈறிலா இன்ப மூர்த்தி
59. ஈறிலா முதல்
60. ஈறிலானன்
61. உத்தமலிங்கம்
62. உத்தமன்
63. உம்பர்கள் நாயகம்
64. உம்பர் தம்பிரான்
65. உயிர்க்கெலாம் போகநாயகன்
66. என்பதாம் ஆரம்பூண்ட எந்தை
67. என்பு அரவு ஆரம் பூண்ட இறைவன்
68. ஐம்முகன்
69. ஐவினைநடாத்துமீசன்
70. ஒப்பிலொளியாய்முளைத்த சிவலிங்கம்
71. ஓதநஞ்சுண்டருள் கண்ணுதல்
72. ஓருருவாய் நேர்நின்ற வணிகேசன்
73. கடம்பமா வனத்தான்
74. கடம்பவன சுந்தரன்
75. கடலரவம்பூணும் நாயகன்
76. கடவுளரிலுத்தமன்
77. கடவுளர்பெருமான்
78. கடுத்த தும்பிய கண்டன்
79. கண்ணினுக்கினியான்
80. கண்ணுதல்
81. கண்ணுதற்பிரான்
82. கண்ணுதற்பெருங்கடவுள்
83. கபாலி
84. கருணைவாரி
85. கருவாகிமுளைத்த சிவக்கொழுந்து
86. கலியாண சுந்தரன்
87. கவனமால் விடையாளி
88. கவனமால் விடையான்
89. களங்கறுத்து விண்காத்தவன்
90. கறுத்த கண்டன்
91. கறைநிறுத்திய கந்தரக்கடவுள்
92. கறையிட்டு விண்புரந்த கந்தரசுந்தரக் கடவுள்

93. கற்பூர சுந்தரன்
94. கற்றைவார்சடைச் சங்கரன்
95. கனத்தினுங்கரிய கண்டன்
96. கன்னிபுரேசன்
97. கன்னியொருபங்கினர்
98. காக்கும் நாயகன்
99. காண்பதற்கரியான்
100. கார்கெழுகண்டத்தண்ணல்
101. காமனைக் காய்ந்த நம்பி
102. காவினாயகன்
103. குறள்வீரற்கு அன்று அன்னக்குழியினொடும் ஆறழைத்த அருட்கடல்
104. குறி
105. குன்றவார்சிலையன்
106. கூடல்நாயகன்
107. கையிற்கட்டங்கந் தரித்த பிரான்
108. கொடும்புரம் பொடித்தான்
109. கொடியபழியஞ்சு சுந்தரன்
110. கொன்றைச் சடையான்
111. கொன்றை[illegible] மிடைந்தான்
112. சண்பக சுந்தரன்
113. சதாசிவம்
114. சமட்டிவடிவாகிய லிங்கம்
115. சமட்டிவிச்சாபுரநாதன்
116. சமட்டிவிச்சாபுரமுறை முதல்வன்
117. சயம்பு
118. சராசரமாகி வேறாய் நின்ற தற்பரன்
119. சராசரமீன்ற தாதை
120. சாத்திர முடிபுந்தேறாத் தனிமுதலொருவன்
121. சிந்தனைவாக்கிற்கெட்டாச்சிவன்
122. சிவக்குறி
123. சிவபரஞ்சுடர்
124. சிவபரஞ்சோதி
125. சிவபெருமான்

126. சிவப்பெருங்கடவுள்
127. சிவன்
128. சீவன்முத்திபுரந்தரன்
129. சீவன்முத்திபுரேசன்
130. சுந்தரசம்புலிங்கம்
131. சுந்தரசாமி
132. சுந்தரச் செஞ்சோதி ஞானஈட்டம்
133. சுந்தரநாயகன்
134. சுந்தரப்பெருங்கடவுள்
135. சுந்தரமூர்த்தி
136. சுந்தரலிங்கம்
137. சுந்தரவிடங்கன்
138. சுந்தரன்
139. சுயம்பு
140. சுருதிநாயகன்
141. சூலகபாலத்தன்
142. சூலமோடு அழலேந்துஞ் சொக்கர்
143. செங்கணேற்றவர்
144. செங்கணேற்றன்
145. செங்கண்ஏற்றினன்
146. செங்கண்மால் விடையான்
147. செஞ்சடைப்பிறைமுடி நிருமலக்கொழுந்து
148. செஞ்சுடர்க்கடவுள்
149. சேற்கண்மடவரல்மணாளன்
150. சேற்கண்மணாளன்
151. சைவலிங்கம்
152. சொக்கேசன்
153. சோமசுந்தரக் கடவுள்
154. சோமசுந்தரன்
155. ஞானநாயகன்
156. ஞானவித்தனைய சிவக்கொழுந்து
157. ஞானவுருவாகியுறை சோமசுந்தரன்
158. ஞானவெண்மதிச்சடையவன்
159. தண்டமிழாலவாய்ச்சிவன்
160. தருமச்செங்கண்விடையான்

161. தனி (தனிமுதல்)
162. தனிச்சுடர்
163. திங்கள்வேணிப்பகவன்
164. திப்பியவிலிங்கம்
165. திருவாலவாயான்
166. திருவாலவாயுடையான்
167. தீர்த்தன்
168. தெய்வநாயகன்
169. தென்னவர்குலப்பெருந்தெய்வமாகிய மன்னவர்
170. தென்னவனாய் நிலம்புரக்கும் காவிதிகழ் மணிகண்டர்
171. தேசிகவள்ளல்
172. தேமலர்க்கொன்றையான்
173. தேவதேவு
174. தேவர்கள்தேவன்
175. தேன்செய்தகொன்றைநெடுஞ்சடையார்
176. தொண்டர்க்கின்புருவானவீசன்
177. தொண்டர்நாதன்
178. நடம்பயில்கூத்தர்
179. நலங்கடந்தருள் மூர்த்தி
180. நவவடிவிறந்தோன்
181. நாககங்கணன்
182. நாகநாயகன்
183. நாகம்பூண்டோன்
184. நாட்டமொருமூன்றுடைய நாயகன்
185. நாதவேதாந்தப் புலங்கடந்த பேராளன்
186. நாயகன்
187. நான்மாடக் கூடல் நாயகன்
188. நிரஞ்சனன்
189. நிராமய பரமானந்த நிருத்தன்
190. நிராமயன்
191. நிருத்தானந்தன்
192. நீலமாமிடற்றுமுக்கண்
193. நெற்றிச்செங்கணன்
194. நெற்றிச்செங்கண்
195. பசுபதி

196. பந்தமும் வீடுநல்கும் பராபரச்சோதி
197. பரஞ்சுடர்
198. பரமயோகி
199. பரமானந்தக்குறி
200. பராபரச்சோதி
201. பராபரமுதல்
202. பராபரலிங்கம்
203. பழிதவிர்த்தவிமலன்
204. பழியஞ்சு சுந்தரன்
205. பற்றிலார்க்கே வீடருள் பரமயோகி
206. பாண்டிவேந்து
207. பாம்புடைத்தாய வேணிப்பரமன்
208. பாலநேத்திர அனபர்க்கன்பன்
209. பிணிநோய் தணிய முளைத்தெழுந்த முழுமுதல் மருந்து
210. புத்தனா ரெறிந்தகல்லும் போதெனமுளைத்தெழுந்த வேதவித்தகன்
211. புழைக்கை வரைதொலைத்தான்
212. புள்ளியதோலாடை புனைந்தரவப் பூணணிந்த வெள்ளிய செங்கண் விடையான்
213. பூங்கடம்பவனசுந்தரன்
214. பூமகணாயகன்
215. பூவலரயன்மால் காணாப் பூரண புராணன்
216. பூவினாயகன்
217. பூவுலக சிவலோகாதிபன்
218. பெண்புதைக்குமொரு பாகப்பிரான்
219. பெருங்கடவுள்
220. பைம்முகவராவணி பரஞ்சுடர்
221. பையராவணிந்த வேணிப் பகவன்
222. பைவைத்தாடரவார்த்த பசுபதி
223. பொன்னவிர் சடையன்
224. போதவடிவாகி நின்ற பூரணபுராணன்
225. மகுடசுந்தரன்
226. மங்கலந்தருகடைக்கணாயகன்
227. மங்கலமாகிய தனிமுதல்
228. மங்கையோர் பங்குறை சங்கரன்

229. மணியணிசுந்தரநாயகன்
230. மதுராபதிக்குவேந்தன்
231. மதுரைநாயகன்
232. மதுரையெம் பெருமான்
233. மந்திர வடிவமாஞ்சதாசிவன்
234. மலைமகள் தலைமகன்
235. மழுமான் செங்கைத் தலத்தவன்
236. மறைப்பொருள்
237. மறைமுதலடிகள்
238. மறைமுதல்
239. மாமணிவரிவளை விறகுவிற்றுழன்றோன்
240. மாவிலங்கம்
241. மான்மதசுந்தரன்
242. மின்வண்ணச்சடைதாழ வெள்ளிமணிமன்றாடும்மன்
243. மின்னவிர்சடையான்
244. மீனநோக்கிகணவன்
245. முக்கட்கரும்பு
246. முக்கணன்
247. முக்கணாதன்
248. முக்கணாயகன்
249. முக்கணெம்பெருமான்
250. முக்கண்ஐயன்
251. முக்கண்ஞானநாயகன்
252. முக்கண்மாதவன்
253. முக்கண்வரதன்
254. முக்கண்மதிமுடிமறைத்த முடித்தென்னன்
255. முதலீறின்றித்தொலைவருஞ்சோதி
256. முப்புறங்கடந்தான்
257. முன்னவன்
258. மூலகாரணன்
259. மூலலிங்கம்
260. மூவரின் விளங்கிய முக்கண்மூர்த்தி
261. மூவர்கள் முதல்வன்
262. மைக்கருங்கயலுண் கண்ணி வாமத்தன்
263. மைவரை மிடற்று மதுரைநாயகன்

264. யாவையுந்துடைப்போன்
265. யாவையு மல்லான்
266. யாவையு மறந்தான்
267. யாவையுமறிந்தான்
268. யாவையுமானான்
269. யாவையும் படைப்பான்
270. யாவையும் படைப்போன்
271. யாவையும் பிரிந்தான்
272. யாவையும் புணர்ந்தான்
273. வடநிழலமர்ந்த கண்ணுதற்பரன்
274. வடநிழலமர்ந்த மூர்த்தி
275. வடநீழல் மோனவடிவாகிய முதற்குரவன்
276. வரையுரங்கிழிய வேலெடுத்த வித்தகன்
277. வாய்மையாரணன்
278. வானவர்நாயகன்
279. வானோர்கடொழற்கரியான்
280. வான்நதிச்சடைவேதியன்
281. விடமுண் டமுதருள்புரிந்த உத்தமன்
282. விடம்பொதிகண்டத்தான்
283. விடைமேல் ஊரும் சுந்தரநாடவன்
284. விடையவன்
285. விடையுகைத்தவன்
286. விண்காத்தவன்
287. விண்டவழ்மதியஞ்சூடும் சுந்தரவிடங்கப் புத்தேள்
288. வித்தகன்
289. விமலன்
290. வெண்சுடர்மதிச் செல்வன்
291. வெண்திங்கட் செக்கரஞ்சடையன்
292. வெண்பிறைக் கண்ணியான்
293. வெள்ளிமன்றுளாடிய பொற்பாதம்
294. வேதஉடையான்
295. வேதியனாகிநின்ற பண்ணவன்
296. வேதன்மால் பதவியும் வேண்டினார்க்கருள் நாதன்.

...

உ

# பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடற் புராணம் கூடற் காண்டம் - செய்யுட்களில் காணப்படும் சொக்கேசப் பெருமானின் அருமைத் திருநாமங்கள்

1. அகழ்ந்த ஆழிநஞ்சுண்டவன்
2. அங்கணாயகர்
3. அங்கயற்கணா டனைப் பிரியார்
4. அங்கயற் கண்ணி நாதன்
5. அங்கயற்கண்ணிபாகக் குணங்குறி கடந்த சோதி.
6. அங்கயற்கண்மடந்தை பாகன்
7. அங்கயற்கண் மின்னமர்ந்த பங்கொருவன்
8. அடியவருக் கெளியவர்
9. அடியார்க்கினியான்
10. அடியார்க்கு நல்லான்
11. அண்டர் பெருமான்
12. அத்திதந்த விமானமழகியார்
13. அநாதிமறையவன்
14. அந்தமில்லி
15. அமரர்நாயகன்
16. அமலச்சோதி
17. அமுதவாரி
18. அம்மையப்பராய்க் காப்பவர்
19. அரசாய் மதுரை அமர்ந்தான்
20. அரண்மூன்றட்ட மன்னவன்
21. அரவங்கம்பூண்ட கூடலாதிநாயகன்
22. அரவணி சடையார்
23. அரவணிச் சொக்கநாயகன்
24. அரிமானூர்த்தித் தெய்வதம்
25. அரியதினும் அரியது
26. அரியாயெளியாய் அடிமாறிநடம் புரிவாய்
27. அருட்கடலனைய வாதிநாயகன்
28. அருட்கடல்

29. அருட்சித்தசாமி
30. அருட்பெருங்கடல்
31. அருத்திசாலறவோர்தேறும் அருட்பெருங்கடல்
32. அருமறை முதல்வன்
33. அரும்பழியஞ்சு நாதர்
34. அருளுருவமாகிய சித்தர்
35. அலைபுனலுடுத்த கூடலடிகள்
36. அல்லேறு கண்டன்
37. அவுணர்மார்பிடந்த சிங்கநாயகன்
38. அழகர்
39. அளவிலா உயிர்க்கும் ஈன்ற தாயனார்
40. அறத்திற்கும் புகழ்க்கும் நல்லான்
41. அறப்பெருங் கருணை மூர்த்தி
42. அனந்தகுணப் பெருந்தகை
43. அனைத்துயிருமீன்று காத்தழிக்குமப்பன்
44. அனைத்துயிர்க்குமுயுராகு மரன்
45. அனைத்தையும் அழிக்க நின்ற அரன்
46. அன்பின் வள்ளல்
47. அன்புக்கிரங்கும் கருணைக்கடல்
48. அன்புடை யன்பருக் கெளியன்
49. அன்பெமு கருணையார்
50. ஆடகமேருக் கொடியவிற்குரிசில்
51. ஆடலேற்றழகர்
52. ஆண்டநாயகன்
53. ஆதி
54. ஆதிசுந்தரக் கடவுள்
55. ஆதித்தனிமுதலடி
56. ஆதிநாயகன்
57. ஆதிமுதல்வன்
58. ஆயிரம் பெயருடைக் கடவுள்
59. ஆலவாயிலமர்ந்தான்
60. ஆழ்ந்த அன்பின் நாடுவார்
61. ஆறுமதிமுடியணிந்த வருட்கடல்
62. ஆனஞ்சாடிய பரஞ்சடர்

63. ஆனந்த ஆரமுது
64. ஆனந்த சித்தர்
65. இந்திரன் பழியைத்தீர்த்த வெற்றிகொள் விடையினான்
66. இந்துவார் சடையோன்
67. இமவான் மகளைப் பிரியாத இன்பன்
68. இமையாத முக்கண் மறைமுதல்
69. இமையாமுக்கட் பகவன்
70. இருளாய் வெளியாய்
71. இருளினை மறைத்த கண்டன்
72. இருளைக் கந்தரத்தில் வைத்தோன்
73. ஈறிலான்
74. உண்மையானந்தத் திருத்தனார்
75. உமையிடங் கரந்திருந்த அரிய நாவலர்
76. உம்பர்க்கிறைவன்
77. உம்பர்நாதன்
78. உம்பர் பெருமான்
79. உயிர்கள் தோறும் நிறைந்த நான்மாடக் கூடல் நிமலன்
80. உயிர்தொறு மொளித்த கள்வன்
81. உருகாதவர்பால் விழையான்
82. உருவறாவிரண்டினையுமொருவிவரு சித்தன்
83. உலகெலாமழித்து மீளவுண்டாக்கு முருத்திரன்
84. உள்ளங் கோயிலாக் கொண்டுறையுங் கூடனாயகன்
85. எண்குணச் செல்வன்
86. எண்குணத்தினான்
87. எண்குணன்
88. எண்ணலாவுயிர்க்கிறைவன்
89. எல்லாம்வல்லார்
90. எவற்றினுக்குங் காரண வடிவமான சங்கரன்
91. எவ்வுயிர்க்குந்தானே போதகனாகித் தேற்றும் புண்ணியன்
92. எவ்வுயிர்க்கும் நாயனார்
93. எளியதினும் எளியது
94. என்புபூண்டிடுகாட்டிற் பொடியாடு முருத்திரன்
95. ஏகநாயகன்
96. ஏறுயர்த்தோன்
97. ஏற்றில் வருநாதன்

98. ஐயர்
99. ஐயன்
100. ஒளியுருவாய் முளைத்தெழுந்தான்
101. கங்குல் சோதி
102. கங்கை ஆறுசேர்சடையான்
103. கங்கைச் சுழியாறலைக்குஞ் சடையான்
104. கங்கை நாயகன்
105. கங்கை மிலைந்த கடவுள்
106. கங்கையாறுகொள் சடையார்
107. கடவுளர் நாயகன்
108. கடவுளர் நாயனார்
109. கட்டவிழ் கடுக்கையர்
110. கண்ணிறைநுதலோன்
111. கண்ணுதல்
112. கண்ணுதல் மூர்த்தி
113. கண்புனைநுதலினார்
114. கதவெங்கரியின் உரியான்
115. கதிர்மதி மிலைந்த வேணிக் கண்ணுதல்
116. கயலுண்கண்ணாள் மணாளன்
117. கயற்கண்ணி தலைவன்
118. கயற்கண்மங்கை நாயகன்
119. கரித்தோல் போர்த்த புண்ணியமூர்த்தி
120. கரியாகிய வங்கணன்
121. கருணைமூர்த்தி
122. கருந்தடங்கண்ணிபாகன்
123. கருந்துழாய் முகிலொருபாற் கலந்தவர் (சங்கரநாராயணர்)
124. கருமணிகண்டன்
125. கவளமானுறித்துப் போர்த்த கண்ணுதல்
126. கறுத்தகண்டர்
127. கற்றளியிடையுறையிறை
128. கன்னலார்மொழிபங்கர்
129. காண்பானுங் காட்சியுமாய் அவைகடந்த
துரியமுமாய் நின்றான்.
130. காபாலி

131. காமனுங்காமுற்றஞ்சும்காளை
132. காமனைவெகுண்டவேடன்
133. காமாரி
134. குஞ்சிநாண்மலர்க்கொன்றையான்
135. குணங்குறிகடந்த வேடர்
136. குளிர்மதிக்கண்ணி அண்டவாணர்
137. குனிமதிமிலைந்த நாதன்
138. கூடலிறை
139. கூடலுடைய நாயகர்
140. கூடலெம்பெருமான்
141. கூடல்அறவேதியன்
142. கூடல் ஏகநாயகன்
143. கூடல் கோயில் கொண்டான்
144. கூடல் நாதனார்
145. கூடல் முன்னவன்
146. கூடற் கடவுள்
147. கூடற் கண்ணுதல்
148. கூடற் கோமான்
149. கூடற்கோனவன்
150. கூடற் செம்மல்
151. கூடற் பகவன்
152. கூடற்படியார்க்குஞ் சீர்த்திப் பதியேருழவோருணல்லான்
153. கூடற்புனிதநாயகன்
154. கூடற்றலைவன்
155. கூடற்றேவர்தம்பிரான்
156. கூடன்மேய அண்டர்தம் பெருமான்
157. கூடன் மேய கடுவந்த மிடற்றான்
158. கைப்போதக முரித்தான்
159. கொங்கலர்கொன்றையான்
160. கொடியணிமாடக்கூடற்கோமகன்
161. கொடுவெண்மழுவாள் உழையான்
162. கொத்திலங்கு கொன்றைவேய்ந்த கூடலாதி
163. கொலையிரும்பழிக்கஞ்சுங் கூடலெம்பெருமான்
164. கொன்றைக் கொத்தவன்

165. கொன்றைச் சடையவன்
166. கொன்றைச் செஞ்சடையார்
167. கொன்றை முடியினான்
168. கொன்றை வேணியன்
169. கோதமிலான்
170. கோவணமிசையசையுடையர்
171. கோளாடரவ மரைக்கசைத்த கூடற்பெருமான்
172. சரதமான் வீட்டின்பந்தருவான்
173. சிங்கமெல்லணைமேல் இருந்த நாயகன்
174. சித்தசாமி
175. சித்தராகிய செல்வர்
176. சித்தவெம் பெருமான்
177. சித்துருவான கூடற்சிவன்
178. சிவந்தசடை முடியண்ணல்
179. சிவபரஞ்சுடர்
180. சிவபரஞ்சோதி
181. சிறியதினுஞ் சிறியது
182. சிற்பரஞ்சுடர்
183. சீவன்முத்திபுராதிபன்
184. சுடர்
185. சுடர்மதிக் கண்ணிநாயகன்
186. சுந்தரச் செம்மல்
187. சுந்தரச் சோதி
188. சுந்தரத்தோன்றல்
189. சுந்தரநாதன்
190. சுந்தரப் புத்தேள்
191. சுந்தரமூர்த்தி
192. சுந்தரவிடங்கன்
193. சுந்தரேசப்பெருந்தகை
194. சுருதிகருதரும்பரன்
195. செக்கரஞ்சடையான்
196. செங்கணேறழகர்
197. செங்கண்மால்விடைமேல் விடங்கர்
198. செம்பொன்மணிமாடக் கூடன் மேயசிவன்
199. செழுமதிப் பிளவு வேய்ந்த தேவு

200. சேல்நயனத்தவள் நாயகன்
201. சேற்கணாள்பங்கினான்
202. சேற்கண் நங்கைதன்பதி
203. சொயம்பிரகாசப் பரிதி
204. சொற்பதங்கடந்த சோதி
205. சோதனையுளகப்படாச் சோதி
206. தண்ணிலாமதிச் சடிலன்
207. தமிழ் மதுரை மின்னேர் சடையார்
208. தம்பிரான்
209. தற்பரவறிவானந்தத் தனியுருவுடையசோதி
210. தானவனை ஆழிகொடு சாய்த்தவன்
211. திங்கட்கொழுந்தலைய நதியலையக் குனிக்கின்ற தனிக்கடவுள்
212. திருவாலவாயுடையார்
213. துய்யநீறணிமெய்யன்
214. துலைபோல்யார்க்கும் சமநிலையாய கூடல்நாயனார்
215. தென்னராகிய தேவர்கள் தேவர்
216. தென்னர்பிரான்
217. தென்னவனாயிருந்தரசு செய்தபிரான்
218. தேவதேவு
219. நஞ்சயின்றுசான்றாய் உறையெனமிடற்றில் வைத்த உம்பரான்
220. நஞ்சு தடவு மணி கண்டன்
221. நதியாடிய செஞ்சடையான்
222. நாட்டம் மூன்றுடைய நாயகன்
223. நாதனாம் குரவன்
224. நாதவந்தமுங்கடந்த மெய்ஞ்ஞான ஆனந்த போதம்
225. நானாவேதப் பொருளுரைத்தான்
226. நான்மறைவிரித்த பரமேட்டி
227. நான்மாடக்கூடல் கருணை நாயகன்
228. நான்மாடக்கூடல் நாயகன்
229. நான்மாடக்கூடல் நிருத்தன்
230. நான்மாடக் கூடற் கண்ணுதல்
231. நான்மாடக் கூடற் பராபரன்

232. நிராமயனிருத்தன்
233. நிராமயன்
234. நிருமலன்
235. நிறைந்த பேரொளியாயுறை நிருத்தர்
236. நீரும் பிறையுங்கரந்தார்
237. நெடியவன் பிரமன் தேட நீண்டவன்
238. நெடியோன் மகனைப் பொடியாக்கும் அறவன்
239. பசுபதி
240. பஞ்சாதி வேதப்பொருள் சொன்ன பரமன்
241. பணிலக்குழையான்
242. பண்கொண்ட வேத முதலிடையீறு நாடரிய பரன்
243. பண்ணியமறைகடேறாப் பான்மொழி மணாளன்
244. பண்ணிறைந்த மறைப்பொருள்
245. பண்மலர்ந்த நான்மறைப் பொருள்
246. பதினெண் கணமும் பரவும் துதியாய்
247. பரதத்துவப் பொருள்
248. பரதேசி காவலர்
249. பரமன்
250. பரமானந்த நிருத்தன்
251. பராபரன்
252. பரிவயவர்
253. பவளச் செய்வேணியர்
254. பழனக் கூடற்சித்த வெம்மடிகள்
255. பழையாய் புதியாய்
256. பன்னகாபரணன்
257. பாடன்மறையுந் தெளியாப்பரமன்
258. பாதிநாரியுருவானான் (அர்த்தநாரீசன்)
259. பாதிபெண்ணுருவமாயிருந்தார் (அர்த்நாரீசுவரர்)
260. பார்ப்பதி மணாளன்
261. பானன் மணிகண்டன்
262. பான்மொழி மங்கைதன் மணாளன்
263. பிள்ளைவெண்டிங்கள் வேய்ந்த பிரான்
264. பிறைச் சடைப்பெருமான்
265. பின்னல் வார்சடை மௌலி எம்பிரான்

266. புங்கவன்
267. புண்ணியப்பயன்
268. புண்ணியமூர்த்தி
269. புரமூன்றட்ட காவலன்
270. புராதன அகிலநாதன்
271. புராரி
272. புனிதபூரணவேதன்
273. பூங்கொன்றைவேணியர்
274. பூதநாயகன்
275. பூதிப்பையர்
276. பூரண சுந்தரப் புத்தேள்
277. பெண்ணோர்பாகன்
278. பெரியதினும் பெரியது
279. பெரியாய் சிறியாய்
280. பொடியணி புராணப் புத்தேள் புண்ணியர்
281. பொடியார்க்கு மேனிப்புனிதர்க்குப் புனிதன்
282. பொன்மலை வல்லி காதல்நாயகன்
283. பொன்னியலுஞ்சடை மௌலிப் புராணர்
284. போதங்கடந்த பொருள்
285. போதங்கள் கடந்தான்.
286. மங்கல மாட மோங்கு மதுரை நாயகன்
287. மங்கைபாகர்
288. மங்கையோர் பக்கநாயகன்
289. மணிகண்டன்
290. மண்சுமக்குமன்னவன்
291. மண்ணளந்த விடையான்
292. மதுராபுரிச் சித்தர்
293. மதுராபுரிப் புனிதன்
294. மதுரேசன்
295. மதுரைத்தனிமுதல்
296. மதுரை நகர்க் கரசாகிய சுந்தரக்கடவுள்
297. மதுரை நாயகன்
298. மதுரைப் பரமேட்டி
299. மதுரைப் பரன்
300. மதுரைப் பெருமான்

301. மதுரைமூதூர் நாயகன்
302. மதுரையிலிருக்குஞ் சித்தர்
303. மருவிதழியான்
304. மலைமகள் நாயகன்
305. மழவிடைக் கொடியான்
306. மழவிடையுடையான்
307. மழவிடையூர் அங்கண் அழகன்
308. மறைகள்தேறாச் சிவ பரஞ்சுடர்
309. மறைப்பொருளுரைத்தோன்
310. மனமொழிகடந்த நாயகர்
311. மன்றாடுமணி
312. மாகநாயகன்
313. மாடக் கூடற் கடவுள்
314. மாடநீடு கூடன் மேயசிவன்
315. மாடமதுரையெங்குரவன்
316. மாமதுரை மன்னவன்
317. மாயம்வல்லார்
318. மாழைமான்மட நோக்கிதன் மணாளன்
319. மாறியாடியவொருவர்
320. மாறியாடுந்தலைவன்
321. மாறுகொள்வழக்குத் தீர்க்க வல்லவர்
322. மின்தயங்கு செய்யவேணி விடையினான்
323. மின்பனிக் கதிர்வேணி வானவன்
324. மின்னார் சடையான்
325. மின்னியல் சடையினான்
326. மின்னீர் வேணி மதுரேசர்
327. மீனோக்கிதின் மணாளன்
328. முக்கணாயகன்
329. முக்கண் அத்தரானவர்
330. முக்கண் வானவன்
331. முக்கண் வேதியன்
332. முடங்கல் வன்திங்க ளொன்றும் முக்கணும்
நான்குதோளும் விடங்கலூழ் மிடறுந்தோன்றா
வென்னி வான்விஞ்சை வேந்து
333. முடங்கன் மதிசெஞ்சடைமுடித்து விடையேறும் விடங்கர்

334. முண்டக மலரோன் மாயோன் புரந்தரன்
முதல் மற்றேனை அண்டருந்தன் குற்றேவல்
அடிமையாக்கொண்ட அம்மான்.
335. முதலந்தமிலா முதல்
336. முந்தைவேத முதல்வன்
337. முப்புரத்தை முனிந்த நாயகன்
338. முழுதுணர்ந்த முதல்வன்
339. முன்னவன்
340. மேருக்கல்வரிசிலையான்
341. மேருயர்த்தவர்
342. மேருவிற்பூட்டி புரம்பொடித்த வேதியர்
343. மையணிமிடற்றான்
344. யார்க்கும் இறைவன்
345. வண்டறை கொன்றையான்
346. வண்டாரிதழி மறைத்தார்
347. வரதன்
348. வளையிந்தனாதி பகர்வார்
349. வானவர் பரவு நாயகன்
350. வானாறுசூடி
351. வானோர் உய்யும்படி நஞ்சமுதுண்ட ஒருவன்
352. விகிர்தன்
353. விடநாகஞ் சுற்றிய சடையினர்
354. விடனல்கு சூலப்படையான்
355. விடைக்கடவுள்
356. விடையவர்
357. விண்ணாறு சூடும் விடையான்
358. விண்ணிழி விமான மேய சுந்தரவிடங்கர்
359. விண்ணிழி விமான வாழ்க்கை விடையவன்
360. விண்மதி மிலைந்த வேணி விடையவன்
361. வித்தின்றிமுளைத்தவன்
362. விருத்த வேதியர்
363. விரைசார் மலரோன் அறியா விகிர்தன்
364. வெம்பழி யஞ்சிய நாதன்
365. வெள்ளிமன்றவாணர்

366. வெள்ளிமன்றாடி
367. வெள்ளிமாமன்ற வாணர்
368. வெள்ளிமாமன்றுளான்
369. வெள்ளியம்பலத்துளாடுமடிகள்
370. வேடக்குழகன்
371. வேதகீதர்
372. வேதங்கட்கருத்தஞ்சொன்ன வேதியன்
373. வேதநாதன்
374. வேதநாயகன்
375. வேதப்பொருளுரை பொருள்
376. வேந்தனாய் உலகங்காத்த பொன்னியல் சடையான்
377. வைகைத்திரை செய்நீர்க் கூடலெந்தை

## உ

## பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடற் புராணம்

## திருவாலவாய்க்காண்டம் செய்யுட்களில் காணப்படும் சொக்கேசப் பெருமானின் அருமைத் திருநாமங்கள்

1. அங்கணன்
2. அங்கணாயகன்
3. அங்கயற்கண்ணிகோன்
4. அங்கயற்கண்ணியன்பன்
5. அசைவற்று எல்லா உலகமும் அசைக்கவல்லார்
6. அடியாருளகப்படுத்து ஆட்கொண்டு அருமை காட்டியவன்
7. அடியார் சேமவைப்பு
8. அட்டமூர்த்தி
9. அண்டமும் அளவில்லாத உயிர்களும் ஆகமாகக் கொண்டவன்
10. அண்ட மெலாமாதாரமாகத் தங்கும் ஆனந்த தனிச்சோதி
11. அண்டம் நின்றிழி விமானக் கோயில் நிரம்பிய அழகர்
12. அநங்கனை ஆகந்தீய எரியிடு நயனம்

13. அநாதிமூர்த்தி
14. அந்தணக்குலக்குரவன்
15. அந்தண்கூடல் எல்லையில் கருணை மூர்த்தி
16. அந்தமாதியின்றாகிய வானந்த போகந் தந்த தேசிகவுழவன்
17. அந்தமிலழகன்
18. அமலச்சோதி
19. அமலன்
20. அரிகணை தொடுத்து வேழம் அட்டவன்
21. அருட்கணாளன்
22. அருமறைப் பரிமேலழகியார்
23. அரும்புமூரற்செய்கதிர் முகத்தானந்த தேறல்
24. அருவநாலகன்றான்
25. அருவி மணிதெறிக்கும் வெள்ளி மலையினான்
26. அருளினால் உலகமெல்லாம் ஆக்கியும் அளித்தும் நீத்தும் பெருவிளையாடல் செய்யும் பிறைமுடிப் பெருமான்.
27. அருளின்மூர்த்தி
28. அருள்குன்றான்
29. அருள் விகிர்தன்
30. அலர்ந்த செங்கமலப் புத்தேள் நடுச்சிரமரிந்தான்
31. அவுணர்புரம் நொடிவவையிற் பொடியாகக் குனித்தமேருச் சிலையினான்
32. அளவில் கோடி துனிவரு வினைகள் தீர்க்கும் சுந்தரக் கடவுள்
33. அறிவன்
34. அறிவானந்த உண்மை
35. அறனிலானிழைத்த வேள்வி யழித்த பேராண்மை
36. அறிஞராய் வந்த பெம்மான்
37. அற்குவை கண்டத்தண்ணல்
38. அனற்கணான்
39. அனைத்துங் கண்ட புங்கவன்
40. அனைத்துலகும் ஈன்றான்
41. அன்பராவார் யாவர்க்கும் எளியனாகும் ஈசன்
42. அன்பர்க்குமெய்யன்
43. அன்பிலெளிய அட்டமூர்த்தி

44. அன்பினுக் கெளியன்
45. அன்புதானாகிய சிவன்
46. அன்புதேனாக வருத்திய சிற்றூண் அமுது செய்தருளினான்
47. ஆடல்விஞ்சையன்
48. ஆதியீறில்லா முன்னவன்
49. ஆலமயின்ற வெங்கருணை வள்ளல்
50. ஆலவாயடிகள்
51. ஆலவாயான்
52. ஆலவாயிறைவன்
53. ஆலவாயுடையநாயகன்
54. ஆலவாயுடையபிரான்
55. ஆலவாயுடையான்
56. ஆலவாயெம் ஐயன்
57. ஆலவாயெம்மிறைவன்
58. ஆலவாயெம்முன்னவன்
59. ஆலவாய்ப் பஞ்சமுகச் சோதிப்பரன்
60. ஆலவாய்ப்பரன்
61. ஆலவாய் மன்னவன்
62. ஆலவாய் மைதழைத்த மிடற்றினன்
63. ஆலுமறைச்சிர முடியார்
64. இச்சையால் வடிவெடுப்பவன்
65. இந்திரசாலங்காட்டுஞ் சித்தன்
66. இந்திரசாலவிச்சை காட்டுவான்
67. இந்திரன் பழிதுரத்தியரசளித்துப் பின்பு கதியின்பமீந்த சுந்தரன்
68. இரதிவந்திரப்ப மீளக்கரியவன் மகனுக்காவி உதவிய கருணை
69. இருக்கிசைத்தவனே பாட இரங்கிவாள் கொடுத்தான்
70. இருணிறைந்த மிடற்றடிகள்
71. இருபெருங் குரவரற்ற தமியன்
72. இருவருந் துருவ நீண்ட எரியழல் தூணில் தோன்றும் உரு
73. இலிங்கத்தின் மூர்த்தி
74. இளையவன்
75. ஈறிலாச் சிவபரஞ்சுடர்

76. உமைநாயகன்
77. உலகநாயகன்
78. உலகமெலா முடையான்
79. உலகுக்கெல்லாம் கருவெனமுளைத்த மூலலிங்கம்
80. உள்ளத்தாசங்கை பூண்டவன்
81. உள்ளொடு புறங்கீழ் மேலாய் உயிர்தொறும்
ஒளித்துநின்ற கள்வன்
82. ஊழ்ந்திடும் அரவம்பூண்டோன்
83. எங்கும் செவியுடையான்
84. எண்வகைமூர்த்தி
85. எத்தன்
86. எத்தேவர்க்குந் தந்தை
87. எவ்வுயிர்க்கும் தானானவன்
88. எவ்வுயிர்க்கும் போதன்
89. எவ்வுயிர்க்கும் மன்னவன்
90. எழுகடல் கூவி மாமியுடன் மாமனாட இசைவித்த ஆதி
91. எழுபிறவி வேலைக் கொடுங்கரை ஏற்றவல்லார்
92. ஏகநாயகன்
93. ஏறு கொடியுயர்த்த மன்னன்
94. ஐயசொற்பொருள் தன்வடிவானவர்
95. ஐயர்
96. ஒப்பவர் மிக்கோர் வேறற்றொருவனாய் எங்கும் தங்கும்
அப் பரஞ்சுடரே இந்த ஆலவாயுறைசோதி.
97. ஒற்றைப்பிறையினார்
98. கங்கண நாகம்வீசி நகரெல்லைகண்ட
கறைகொண்ட கண்டன்
99. கங்கைச் சடைக்காடன்
100. கங்கைசடைமுடிமேல் கரந்தான்
101. கச்சான அரவமார்த்த கருணையங்கடல்
102. கட்டவிழ் கடுக்கை யண்ணல்
103. கட்டழகன்
104. கண்ணுதல் மூர்த்தி
105. கரந்தை சூடிய ஆலவாய்க் கண்ணுதல்
106. கரவிலாத பேரன்பினுக்கெளிவருங் கருணைக்குரவனார்
107. கருக்கிய கண்ணுதலார்

108. கருணையங்கடல்
109. கருணைவள்ளல்
110. கருத்திரைபாணன் ஆளின் இசைபாடி
மாறுகளை வேதகீதன்
111. கரும்பனும் விரும்பநின்ற கட்டழகுடையான்
112. கரையிலார்
113. கலைவீசு மதிச்சடையோன்
114. கள்ளத்தர்
115. கள்ளேறு கடுக்கை நறுஞ்சடையான்
116. கறுவிவீழ் கூற்றைக் காய்ந்த கனைகழற்கமலம்
117. கறைகெழுமிடற்றோன்
118. கற்பினொருத்தி மன்றலறிவிக்க மூன்றுகரிதந்த வள்ளல்
119. கற்றைவார் சடையான்
120. காண்டற் கரியதோர் புலவன்
121. காமனைப் பொடியாக் கண்ட கண்ணுதல்
122. காமனை முனிந்தோர்
123. காலனைக்காய் செய்யன்
124. காவிநேருங் கண்டன்
125. கிங்கரனான காளை
126. குடைக்காடன் பசிக்கன்னக்குழியருத்தி
வேட்கையறக் கொடுத்தான்
127. குரங்கு பாம்பு எரும்பு நாரை கோழியாண் அலவன்
தேரை கருங்குரீஇ கழுகி னன்புக் கிரங்கிய கருணை.
128. குரத்தியை நச்சுபாவியுயிருண்டு சோரிகுடை வாகைவேலன்
129. குருமொழி தந்து நாரை குருவிக்கு வீடுகுடி தந்தவன்
130. குறிகுணங்கடந்த தனிக் கூத்தன்
131. குன்றிருஞ்சிலை கோட்டிய கூடல் நாயகன்
132. கூடலாலவா யமர்ந்த நீல கந்தரன்
133. கூடலுடைய நாயகன்
134. கூடல் அம்பகநுதலினான்
135. கூடல் ஆதி
136. கூடல் நாதன்
137. கூடற் கண்ணுதற் பெருமான்
138. கூடற் கறையினார் கண்டத்தார்

139. கூடற் கோமான்
140. கூடற்பரமேட்டி
141. கூடன் மன்றவர்
142. கைம்மலைச் சாபந்தீர்த்த கருணையங்கடல்
143. கொன்றை மதிமுடியார்
144. கொன்றையந் தெரியல் வேய்ந்த கூடலெம்பெருமான்
145. கோட்டஞ்சிலை குனித்த கூடற்பிரான்
146. கோயில் அகத்திவிசுடரைத் தூண்டும் எலிக்கரசாள
மூன்று சகத்தையு மளித்த தேவர் தம்பிரான்
147. சடையார் விடையார்
148. சண்பக சுந்தரன்
149. சம்பு
150. சராசர சடங்கடமக்குயிராயினோன்
151. சலந்தரனுடலங்கீண்ட சக்கரப் படையான்
152. சனகாதி முழுதுணர்ந்த மெய்த்தவர்
153. சாலப்பொன்னளிப்பவர்
154. சிலந்தியை மகுடஞ் சூட்டி யரசருள் செல்வம்
155. சிறுகுழவிமதிநுதலங்கயற்கண்ணி மணாளன்
156. சிறுவனுக்கழியா வாழ்நா ளளித்தருள் செய்தான்
157. சீரணி புலவன்
158. சீலமாணவர் செவ்விதேர் தேசினென்ன
மூலவாகமம் ஓதினான்
159. சுடர்வெள்ளி மன்றுகிழவர்
160. சுட்டுதற்கரிய சோதி
161. சுந்தரநாமவாளி பணிகொண்டு கள்ளி
தொகை வென்ற வீரன்
162. சுந்தர விடங்கர்
163. செங்கதிர் மேனியான்
164. செங்கமலக் கண்ணிடந்த கண்ணனுக்குத்
திகிரியருள் செய்தவன்
165. செங்குவளைத் தாரான்
166. செந்தீ அவியுணவூட்டு மீசன்
167. செம்பொன்கூடல் மன்னவன்
168. செல்வ நான்மாடக் கூடல் நரைவிடையுடைய நாதன்

169. செழியன் விளிந்திடாதபடி மாறியாடல் தெளிவித்த சோதி
170. சென்னி வெண் திங்கள் மிலைச்சிய மதுரைச் சிவன்
171. சைலவேந்தன் மங்கை நாயகன்
172. சொற்பொருளானவன்
173. சோமசுந்தரக் கருணை வெள்ளம்
174. ஞானநாயகன்
175. ஞானமயமாகிய இலிங்கம்
176. தக்கன் மகம் பொடியாகத் திருப்புருவம்
நெரித்த கொடுந்தழல்
177. தண்டமிழாலவாயெங் கனிவரு கருணைமூர்த்தி
178. தத்துவமுணர்ந்த யோகர் ஞானக்கண் கொண்டே யன்றி
நாடருஞ் சோதி
179. தந்தி நாலிரண்டேத்திய தபனிய விமானத்துந்து
நீர்ச்சடையார்
180. தந்தை தாய் பிறரின்றி வருகின்ற தனிக்கூலி மைந்தனார்
181. தமிழறியும் பெருமான்
182. தம்மை மறந்துனை நினைப்பார் மனத்தினன்
183. தருக்கொடு மிருவர் தேடத் தழற்பிழம் பானான்
184. தனிச் சுடர்
185. தனிஞான பூரணமாய தேவாதி தேவன்
186. தனியே முளைத்த சிவக்கொழுந்து
187. தனிவலை யுழவன்
188. தன்னைச் சேர்ந்தார் நன்னிதி
189. தாழ்ந்த வேணியன்
190. திங்கட் கொழுந்தார்
191. திங்களங் கண்ணி வேய்ந்த செக்கரஞ் சடிலநாதன்
192. திரிபுரம் பொரிய நக்க சேவகம்
193. திருத்தன்
194. திருமணி மைந்தன் முடிசூட விற்ற திருமல்கு செல்வன்
195. திருவாலவாயுடைய நாயகன்
196. திருவாலவாயுறையும் ஆவாக் கொடியான்
197. திருவாலவாய் ஒருத்தன்
198. திருவாலவாய் நாயகன்
199. தீபகம் போல்வருமண்ணல்
200. தீவாய் நஞ்சமுது செய்தான்

201. தும்பைச்சடை முடியான்
202. தென்சொற்பனுவல் மாலைப்பணி கொண்டான்
203. தென் தமிழாலவாய்த் தனிப்பதி
204. தென்றமிழ்க் கூடல் அட்டமூர்த்தி
205. தென்னவனாயுலகாண்ட திருவாலவாயுடைய மன்னர்பிரான்
206. தென்னவன் குல தெய்வமாகிய மன்னர்
207. தேய்ந்த நாண்மதிக் கண்ணியான்
208. தேவதேவன்
209. தேவர்க்குங் காண்டற்கரிய கருணையுரு
210. தேவர்க்கு மரியனாகுந் தேவன்
211. தொடுத்த மற்சரமிலாப் புனிதர்
212. தொண்டர் பாசவன்றொடரவிழ்த்திட வருஞ் சோதி
213. நகைத்திட வந்த வந்த நகுசிரந் திருகி வாங்கிச் சிகைத்திரு முடிமேல் வைத்த திண்டிறல்.
214. நச்சரவசைத்த கூடனாயகன்
215. நதியணிந்தவர்
216. நரித்திரண் மாவை மீள நகரங் கலங்க நரிசெய்த நம்பன்
217. நல்ல மைந்தன்
218. நாத முடிவிறந்த நாடகஞ் செய் பரதன்
219. நாயகன்
220. நால்வாய் ஐங்கரக் கடவுளர் தாதை
221. நான்மாடக் கூடன் முழுமுதல்
222. நித்தன்
223. நிராமயநிருத்தன்
224. நிருத்தானந்தச் சுடர்
225. நிறைந்த சோதி
226. நிறைவேதநூல் அருத்தன்
227. நீபவனத்துறையுஞ் சிவபெருமான்
228. நூற்பொருளினா லளப்பரிய அந்திவான் மதிச்சடையான்
229. நெய்தற்கண்ணியன்
230. பஞ்சேரடியாள் பாகன்
231. படைத்தளித்தழிப்பவன்
232. படைத்துக் காத்துத் துடைக்கவும் வல்லன்

233. பண் சுமக்குங் சொல்லி பாகர்
234. பண்சுமந்த மறை நாடரும் பொருள்
235. பண்ணாய் இசையாய்ப் பனுவலாய்
எங்கணுங் கண்ணானான்
236. பண்ணான் மறையுந் தேறாப் பரசிவன்
237. பந்தமும் வீடும் வேதப்பனுவலும் பயனுமான
சுந்தரவிடங்கன்
238. பரமேட்டி
239. பரன்
240. பரியின் பாகரானவர்
241. பருங்கைமால் யானை ஏனம் பாய்புலி அரிமான் மீனம்
இருங்குறள் யாமை கொண்ட இகல்வலி கடந்தான்
242. பருமுத்த மலையாள் பங்கன்
243. பல்லுயிர்க்கெலாந் தாயுந்தந்தையுமாயினான்
244. பழியொடுபாசமாறு கெட வாசவன் செய் பணி கொண்டவன்
245. பழுதிலாத சொன் மணி
246. பழைய சிவபுரத்தினான்
247. பற்பலஞால மெங்கு மடையப் பிரம்புபடுமட்ட மூர்த்தி
248. பன்னிரண்டு கையானைப் பயந்தான்.
249. பாடல் விஞ்சையன்
250. பாட்டிற்கின்புறு குருபரன்
251. பாதி பகிர்ந்தவள் காணப் பரானந்தத்
தனிக்கூத்துப் பயிலாநிற்கும் ஆதி
252. பாதியுமையுரு உருவான பரமேட்டி
253. பாயுமால் விடைமேல் வருவோன்
254. பானிற வெண்ணீற்றன்
255. பித்தன்
256. பிள்ளையாகிய மதிமுடிப்பிரான்
257. பிள்ளைவாண் மதிச்சடைமுடிப் பெருந்துறை மறையோர்
258. பின்னாம் புதுமைக்கும் பின்னாகும் பேரொளி
259. புங்கவர் தேறவாதி மறையுட் கிடந்த பொருளோது போதன்
260. புண்ணிய மன்று ளாடும் ஈசன்
261. புண்ணிய மூர்த்தி
262. புத்தகத் தெழுதிய சிவஞான மெய்ப்போதங்
கைத்தலந் தரித்திருப்பதோர் கருணை

263. புரம்பொடி படுத்தவீரர்
264. புரிசடைப் பிரானார்
265. புள்ளேறு கொடியுயர்த்த புனிதன் அயன்தேறாத புனிதன்
266. புறம்பிலாப் பூரண வடிவம் ஆக்கினான்
267. புனையிழை பாக நீங்காப் புலவர்
268. பூரணமாகிய சுந்தரச்சோதி
269. பூவார்முளரிப் புத்தேள் அறியா நெறிதந்தான்
270. பெண்ணினைப் பாகங்கொண்ட பெருந்தகைப் பரமயோகி
271. பெருங்கருணை
272. பேதற்ற முனிவர்க்கன்று பெருமறை விளக்கஞ் செய்த வேதத்தின் பொருள்
273. பையரவாரம் பூண்ட பரஞ்சுடர்
274. பொக்கமுடையார் செய்யும் புசைதவங்கண்டு நகும்புராணன்
275. பொங்காலமுண்டருள் சுந்தரன்
276. பொட்டழகன்
277. பொருதாரகனை வென்றோன் மாமன்
278. பொருப்பகழ்ந் தெடுத்தோன் சென்னிபுயமிற மிதித்தான்
279. பொருப்பே சிலையாய்ப் புரங்கடந்த புனிதன்
280. பொற்புறுமாயவாவை அடலேறு கொண்டு பொருதட்ட சிட்டன்
281. பொற்றளிர்சடைப்புவன நாயகன்
282. பொன்னவிர் கமலம் பூத்த பொய்கைசூழ் ஆலவாயெம் முன்னவன்
283. பொன்னாடர் ஏறு
284. போகம்வீடுதரும் மேலாங் கடவுள்
285. போதநெறி கடந்த பூரணன்
286. போதமூர்த்தி
287. போதவடிவாய் நால்வர்க் கசைவிறந்து நிறைந்த பரம்பொருள்
288. போதவானந்தச் சோதி
289. போதனாகிய குருபரன்
290. மங்குலின் இருண்டகண்டன்
291. மணிக்கனக விமானத் தமர்ந்த தனிச்சுடர்
292. மணிக்கூடன் முன்னவர்

293. மண்ணாய்ப் புனலாய்க் கனலாய் வளியாகி
விண்ணாய் இருசுடராய் இத்தனையும் வேறாகினான்
294. மதுரேசர்
295. மதுரைத் திருவாலவாயுறையுஞ் சிந்தாமணி
296. மதுரை நாயகன்
297. மதுரையெம் பெருமான்
298. மத்தன்
299. மருங்கு நான்கு கைகளாய் முளைத்த முக்கட் கரும்பு
300. மருத்தவனைச் சூழ்ந்த பொருபழி துடைத்தோன்
301. மருமகனென்று மாமனுருவாய் வழக்கு வலிபேசுமைந்தன்
302. மலைத்தனுவளைத்த முக்கண் மன்னவன்
303. மலைமகள் மணாளன்
304. மலைவன் சிறகரிந்த நாமன்
305. மறனிலாச் சண்டிக் கீந்த மாண் பெருங் கருணை
306. மறைகளால் அளவை தன்னால் தேவரான் மனத்தால்
வாக்கால் அறிவருஞ் சோதி
307. மறைச்சென்னிமேல் நிருத்தன்
308. மறைநூல் உதித்த நாவினான்
309. மறையினந்தமுந் தொடாத தாளிலந் தொட வந்த
நிறைபரஞ்சுடர்
310. மறையெலா முறையிடு பரம்பொருள்
311. மன்றாடிய கூத்தன்
312. மன்றுடையான்
313. மன்றுணடம் பிரியாத பெருமான்
314. மன்றுளாடிய அனந்த வடிவம்
315. மன்றுளாடிய சேவடி
316. மாடக்கூடல் ஐயன்
317. மாதவள நீறணிந்த மன்னன்
318. மாமதுரேசர்
319. மாரனைப் பொடி கண்டவன்
320. மாறிநடமாடும் வெற்றி விடையான்
321. மின்மதிச் சடையினான்
322. மின்றிரித்தன்ன வேணி வேதியன்
323. மின்னார் சடைமேற் பிறை முடித்தோன்

324. முக்கட் புண்ணியன்
325. முது மறையா யம்மறையுந் தாவாத சோதி
326. முத்தொழிலின் மூவராய் மூவர்க்குந்
தெரியாத முக்கண்மூர்த்தி
327. முந்திய கல்லின் மாதர் பெற அட்டசித்தி முயல்வித்த யோகி
328. முந்தைநூன் மொழிந்த ஆசான்
329. முழுதொருங் குணர்ந்த வேத முதல்வன்
330. முறையினோதிய புராண மூவாறு நாமொழியும் இறைவன்
331. முற்பகலாறிரண்டு சிறு பன்றி யுண்ண
முலைதந்த அன்னை
332. முன்னாமுது பொருட்கு முன்னாமுது பொருள்
333. மூலமறையோதி முடியாத பொருள்
334. மூவர்க்கருளிய தலைமை
335. மூவாமுதலான்
336. மெய்ப்பொருள் விளங்கித் தோன்றா வேதத்தை
விருத்தி செய்தான்
337. மெய்யன் புடையார்
338. மேருவனையார்
339. மேருவில்லவன்
340. மைக்குவளை யனைய மணிகண்டன்
341. மைந்தனிலாழி மேரு மகவன் அகந்தை மடிவித்த நித்தன்
342. மைவ்வேலை விடமுண்ட வானவன்
343. மோன மயமான மூர்த்தி
344. மௌவலிள முகை மூரல் மாதினொடும் இருக்கின்ற மணி
345. வங்கமதேறி வேலை மகரம் பிடித்த வலையாண் மணாளன்
346. வடதிருவாலவாயில் வந்து வீற்றிருந்த வள்ளல்
347. வடவால் ஒன்றி நால்வருக் கசைவற உணர்த்திய உரு
348. வதுவைக்கோல மாயின மருகனார்
349. வந்திஆள்
350. வருணனார் பெருவயிற்று நோய் வலிகெடுத்தாண்ட
தருணநாண்மதிச் சடையுடையடிகள்
351. வருபழியஞ்சி வேடமகனுக்கிரங்கு மதுராபுரேசர்
352. வலந்தருமதனை மாயோன் வழிபடக் கொடுத்தான்
353. வலைஞர்க்கெல்லாந் தந்தை

354. வழிபடு தொண்டர் கொண்ட நிலைகண்டு
வெள்ளி மன்றுளாடி
355. வாழ்த்தும் வேதத்தலையினான்
356. வானநாயகன்
357. வானவர்தம்பிரான்
358. வான்திங்கள் மிலைந்தவன்
359. விடையவன்
360. விடையேறு சுந்தரன்
361. விண்டொரு திண்டிமில் விடையவன்
362. விண்ணிழிவிமானமேய செம்மலை
363. விருத்த குமார பால வருண்மேனி கொண்டு
விளையாடும் அண்ணல்
364. வீங்குநீர்ச்சடையான்
365. வீணைதொட்டின்னிசை பாடக் கனிந்தவன்
366. வெங்கரி ஆவி சோர நரசிங்கவாளிவிடு வேடரேறு
367. வெந்திறன் மாறன் முன் கலுருவான கன்னன் மிசை
வித்த சித்தன்
368. வெள்ளி மன்றாடும் அன்னை
369. வெள்ளி மன்றுடையார்
370. வெள்ளிமன்று வேண்டிநின்றாடிய வள்ளல்
371. வெள்ளேறு கொடியுயர்த்த விடையான்
372. வெள்ளை மாமதிப் பிளவணி வேணியங்
கருணை வள்ளலார்
373. வேதப்பரியேறுஞ் சேவகன்
374. வேதமுடிகடந்த பரஞானத்தில் ஆனந்தவிளைவு
375. வேதமுடிவின் விளைந்த தனிப்போதன்
376. வேதனாதன்
377. வேயிலையடைந்தவர்

...

## நம்பி திருவிளையாடற் புராணத்தின் செய்யுட்களில் காணப்படும் சோமசுந்தரக் கடவுளின் அருமைத் திருநாமங்கள்

1. அடிமைக்கு நல்லவர்
2. அடியவர்க் கெளிய சுந்தரன்
3. அடியவர்க் கெளிய சொக்கன்
4. அடியவர்க் கெளியவர்
5. அடியவர்க் கெளியவெம் பெருமான்.
6. அடியவர் திறத்து நல்லவன்
7. அடியவர் நன்மை தின்மை யறிபவன்
8. அடியார் குறைதீர்ப்பான்
9. அடியார்க்கு இனியன கொடுக்கும் சொக்கன்
10. அடியார்க்கு நல்லான்
11. அடியார் தங்கட்கெளியவன்
12. அணுக்கட்கு நல்லவர்
13. அதிரவீசியாடுவான்
14. அந்தநாயகன்
15. அபிடேகச் சொக்கன்
16. அருபேடங்குநாதன்
17. அருந்தவன்
18. அருவ மெய்யினன்
19. அருளாகரன்
20. அழகன்
21. அழகார் மெய்யன்
22. அழகிய சொக்கன்
23. அழகிய பெருமான்
24. அற்றவர்க்கற்ற சிவன்
25. அற்றவர்க் கற்ற செல்வன்
26. அன்பர்க் கன்பன்
27. அன்பர் சுமைபூண்டு கொண்டான்
28. அன்பர் தம்பிழை பொறுப்பவன்
29. அன்னையொப்ப அணுக்கட்கு நல்லவன்

30. ஆதி
31. ஆதிநாதன்
32. ஆதிநாயகன்
33. ஆதிமுனி
34. ஆலவாய்
35. ஆலவாய்த் தருமமூர்த்தி
36. ஆலவாய் மெய்யன்
37. ஆலவாயமுதமன்
38. ஆலவாயமுத வாக்கன்
39. ஆலவாயமுத வாயான்
40. ஆலவாயமுது
41. இசைக்குநல்ல சங்கரன்
42. இசைக்கு நல்லான்
43. இசைச் சொக்கன்
44. இயற்சொக்கன்
45. உற்றவர்கட்குற்றவன்
46. எளிய சொக்கன்
47. எளியவர்க் கெளிய சொக்க நாதன்
48. ஒப்பிலழகன்
49. கருணை மெய்யன்
50. கருணை மேனிப் புண்ணியன்
51. காரண முதல்வன்
52. காரணவான்
53. குஞ்சரந் தாங்குங் கோயிற் குழகன்
54. குஞ்சரந் தாங்குங் கோயிற் கூத்தன்
55. குழகன்
56. கூடமில்லான்
57. கூத்தன்
58. சாலநல்லவன்
59. செந்தமிழ்க் கினிய சொக்கன்
60. செந்தமிழ் பயிலுஞ் சுந்தரன்
61. செழியர் நாதர்
62. சேட்டநாதன்
63. சொக்கமூர்த்தி
64. சொக்கவேந்து

65. சொக்கன்
66. சொக்கர்
67. சொக்கு
68. தனக்கு நல்லவர்க்கு நல்லோன்
69. தெய்வப் பாண்டியன்
70. தெய்வவான்வழுதி
71. தென்னவர் கிளைக்குநல்ல செல்வன்
72. தொழுபவர்க் கெளியான்
73. நயந்தவை யாவையும் நல்க வல்லவன்
74. நல்லடியார்க்கு நல்லான்
75. நற்றமிழிறைவன்
76. நற்றவன்
77. நாயனார்
78. நாயன்
79. நேசர்கட்கென்றும் நேசன்
80. பண்ணிசைச் சொக்கன்
81. பத்தர்கள் பத்தன்
82. பத்தர் பத்தன்
83. பத்தர் வாழ்வு
84. பழிக்கஞ்சு சொக்கன்
85. பழியஞ்சு சொக்கன்
86. பாண்டிநன்னாடன்
87. பாவறிந்த நாவலன்
88. புகழ்க்கினியான்
89. புகழ்க்கு நல்ல சொக்கன்
90. புகழ்க்கு நல்லோன்
91. புகழ் கொண்டான்
92. புழுகுநெய்ச் சொக்கர்
93. முனிவன்
94. மெய்யர்க்கு மெய்யன்
95. மெய்யன்
96. யாவும் வல்லவன்
97. வணங்குவோரிணங்கன்
98. வாசிவாரியப் பெருமான்.

...

உ

திருச்சிற்றம்பலம்

## திருவுசாத்தான நான்மணிமாலையுள் திருவிளையாடல் சிறப்பு

28ஆம் பாடல் (அகவல்)

உண்மையி னுணர்ந்த வுறுபொரு ளன்பர்
கண்ணினு ணிறைந்த காட்சியை யுரைப்பி
னிந்திரன் பழிதீர்த் திபத்தினுக் கருளி
வந்து மும்முலைத் தடாதகை பிறந்துழி
யிதம்பெற மணஞ்செய் திறையா னதுவும்
பதஞ்சலி முனிக்குப் பதநட நடித்தது
நீறணி பூத நிறையா துண்டதற்
காறழைத் ததுமுய ரலைகட லழைத்ததுஞ்
சக்கர மலயத் துவசனை யழைத்தது
முக்கி ரப்பெரு வழுதி பிறந்ததுங்
கூனல் வளைவேல் செண்டு கொடுத்தது
நான்மா டத்திருக் கூட லானது
மெல்லாம் வல்ல சித்த ரானதுங்
கல்லாம் யானை கரும்புவாங் கியதுஞ்
சங்கப் பலகை தனையளித் ததுவுந்
துங்கப் பொற்கிழி தொடர்ந்தறுந் ததுவு
மறுவறு கீரனை வண்கரை யேற்றிக்
குறுமுனிக் குத்தமிழ் கூறியீந் ததுவு
முண்மை நற்றமி ழூமை யறிந்ததும்
பண்புடை யிடைக்கா டன்பின் போனது
மலைகடல் சுவற வயில்வே லெறிந்ததும்

வலைவீ சியதும் வளையல்விற் றதுவு
மேனுறு மிடப விலச்சினை யிட்டது
மாணிக்கம் விற்றதும் வல்லிப மெய்தது
முரிய ஞான முபதே சித்தது
நரிபரி யானதும் பரிநரி யானதும்
வருத்த மின்றி மண்சுமந் தருளி
விருத்த குமார பாலரா னதுவும்
பதமா றியதும் பழியஞ் சியது
மதிபா தகந்தீர்த் தங்கம்வெட் டியது
மதுரை யானதும் வன்சுரந் தீர்த்ததுங்
கதியி லமணர் கழுவே றியதும்
விலகா தரசன்முன் மெய்க்காட் டிட்டது
முலவாக் கிழிகொடுத் துயர்வழக் குரைத்தது
மட்டமா சித்தி யருளிய வதுவு
மிட்டமாய்த் தண்ணீர்ப் பந்தர்வைத் திருந்தது
முன்னமிந் திரன்முடி மிசைவளை யெறிந்ததும்
பொன்னனை யாளுக் கருளது புரிந்ததும்
வெருவாச் சோழனை யாழியில் வீழ்த்தித்
திருவால வாயெனச் செப்பிய செயலும்
வரகுணன் றனக்குச் சிவலோ கத்தினை
விரைவினிற் காட்டி விடைக்குறி யெய்தது
மூற்றமிக் குலவாக் கோட்டை வைத்தது
மூர்த்தி யார்க்கு முதலர சளித்ததுங்
காரியார் நாரியார் கவின்பாப் பகுந்ததும்
வார்புலி முலைபுல் வாய்க்கரு ளியதுஞ்
சாரமா விசைச்சா தாரிபா டியதுஞ்
சேரமா னுக்குத் திருமகங் கொடுத்ததும்
பலகை யிட்டதும் பாட்டிசை வென்றதுந்
தலமிசைப் பன்றித் தாயா யருளிக்
கானக் கரிக்குரு விக்கரு ளியது
மீனக் கொடிபொன் மேருவிற் பொறித்ததும்
சாட்சி யழைத்ததுந் தரைவியந் தருள
வாட்சி நாரைக் கரும்பத மளித்ததும்
வேதங் கரைகண் டருளிய வீறுமா

நாதனென் ணெண்டிரு நடன நடித்தே
தெள்ளிய தில்லைச் சிற்றம் பலத்தும்
வெள்ளியம் பலத்தும் வியன்மா வனத்த
னமிர்தமெய் வடிவா யருளிய பெருமை
நமர்களே யலது நவிலுவ தரிதே !

திருவுசாத்தான நான்மணிமாலையுள்
மதுரைத் திருவிளையாடல் முற்றும்

...

உ

திருச்சிற்றம்பலம்

திருவிளையாடற் புராணத்திற்குப்

**பலபட்டடைச் சொக்கநாதப்புலவர்**

இயற்றிய

# சிறப்புப் பாயிரம்

## ஆசிரிய விருத்தம்

வரஞ்சோதி நாண்மழையால் வருமுத்த
நகைபங்கன் வழங்கப் பெற்றோன்
பரஞ்சோதி மாமுனிவன் பகர்ந்ததிரு
விளையாடற் பாடல் கூடற்
புரஞ்சோதி யரநின்ற புனிதரைப்போற்
றடையின்றிப் புகுஞ்சோ மாதித்
தரஞ்சோதி தாழமுனி தமிழ்முனிதென்
முனியெனச்சொல் தகைமைத் தாமே! (1)

## எண்சீர் விருத்தம்

அருட்கடவுள் வணக்கம்பா யிரத்தொடவை யடக்கம்
ஆனதிரு நாடுநக ரங்கயிலைச் சிறப்புத்
தெருட்பெருகு புராணவழி தலந்தீர்த்த மூர்த்தி
திருவிளையா டற்றொகையவ் விளையாட்டின் வகையோ
டிருட்கெடருச் சனையீறா யாப்பின்விரி மூவாயி
ரத்துமுந்நூற் றறுபஃதே ழின்மதுரைப் புராணம்
பொருட்சுவை சொற்சுவை பெருகப் பரஞ்சோதி முனிவன்
புவிதழைந்து கதியேறப் பொற்பிறந் தனனே! (2)

இந்நூலாசிரியர் மரபினர் "பலபட்டடைக் கணக்கு" எனும் ஒருவகைக் கணக்குப் பதவி வகித்து வந்தவர்கள். அதனால் "பலபட்டடைச்சொக்கநாதப் புலவர்" எனப் பெயர் பெற்றார் என்பர். இவர் பாடிய இச்சிறப்புப் பாயிரப் பாடலால், பரஞ்சோதி முனிவர், 3367 பாடல்களைக்கொண்டு, திருவிளையாடற்புராணம் பாடினார் என்பது தெரியவருகின்றது. இவர், இராமநாதபுரம் சமஸ்தானத்தை கி.பி.1711 முதல் 1725 வரை அரசாண்ட விஜயரகுநாத சேதுபதி என்பவரால் ஆதரிக்கப் பெற்றவர்.

இச்சிறப்புப் பாயிரம் பாடல்கள் இரண்டும் பழைய ஏட்டுச் சுவடியினின்றும் கிடைக்கப் பெற்றதாக, திருப்பனந்தாள், காசிமடத்து 1951ஆம் ஆண்டுப் பதிப்பில் சிவத்திருவாளர் வித்துவான் தி. பட்டுச்சாமி ஓதுவார் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

...

உ
கணபதி துணை
திருவாலவாயுடையார்
திருவிளையாடற்புராணம்

செல்லிநகர்ப்
பெரும்பற்றப் புலியூர் நம்பி
இயற்றியது
இது
மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி
**உத்தமதானபுரம்**

**வே. சாமிநாதையரால்**
பல கையெழுத்துப் பிரதிகளைக் கொண்டு
நூதனமாக எழுதிய குறிப்புரை முதலியவற்றுடன்

சென்னை
கேசரி அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பெற்றது.

(இரண்டாம் பதிப்பு)

விலை ரூ. 2-8-0.

பிரபவ வருஷம் சித்திரை மாதம்

1927
Copyright Registered

திருவாலவா யென்பது பாண்டி வளநாட்டிலுள்ள தேவாரம் பெற்ற பதினான்கு தலங்களுள் ஒன்று. "பாண்டி பதினான்கு என்பது" குறிப்பிட்டுக் கூறும் தொடர் மொழி. அவை.

கூடல் புனவாயில் குற்றால மாப்பனூர்
ஏடகம் நெல்வேலி இராமேசம் – ஆடானை
தென்பரங்குன்றம் சுழியல் தென்திருப்புத் தூர்கானை
வன்கொடுங்குன் றம்பூ வணம்.

என்பன.

'கூடல் ஆலவாய்' எனும் இத்திருத்தலம் கருணைக் கடலாம் சோமசுந்தரக் கடவுள், ஆன்மாக்கள் உய்தற்பொருட்டு, பிறவிவேறு பாடின்றி 64 திருவிளையாடல்களை நிகழ்த்தி அருள்பாலித்த பெரும் பேற்றினை யுடையது.

இத்தகைய அருட்டிறத்தினையும், பழமையான வரலாறுகளையும், தெளிவு படுத்தும் வடமொழிப் புராணங்களும் வடமொழித் துதிகளும், தனித் தமிழ் நூல்களும், திருமுறைகளும், தனிப்பாடல்களும் பிறவும் பல உள்ளன.

வடமொழி நூலிலிருந்து மொழிபெயர்த்துச் செய்யப் பெற்றனவாய், மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகியவற்றின் சிறப்பினைக் கூறுவனவாய நூல்கள் திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம், கடம்பவன புராணம், சுந்தர பாண்டியம், பரஞ்சோதியார் திருவிளையாடற் புராணம், அட்டமிப் பிரதட்சிண மான்மியம் என்பன. அவற்றுள்,

## 1. திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம்

இது, தற்போது கிடைக்கப்பெறாத உத்தரமகா புராணம் என்னும் வடமொழிநூலின் ஒரு பகுதியாகிய சாரசமுச்சயம் என்பதிலிருந்து செல்லிநகர்ப் பெரும்பற்றப் புலியூர் நம்பி என்பவரால் மொழிபெயர்க்கப்பட்டு செய்யுள் நடையாக இயற்றப் பெற்றது என்பது. நம்பி திருவிளையாடலின் 'ஓதரிய' எனத் தொடங்கும் இந்திரன் பழிதீர்த்த படலத்து 35 ஆம் செய்யுளாலும், ஷ நூல் நுற்சிறப்புப் பாயிரம் 'அம்பதுமத்தார்' எனத் தொடங்கும் வெண்பாவானும் பிறவற்றானும் கொள்ளக் கிடைக்கின்றது.

இந்நூலின் செய்யுட்டொகை 1753. இதன் வேறு பெயர்கள் :- பழைய திருவிளையாடல், வேம்பத்தூர் திருவிளையாடற் புராணம், நம்பி திருவிளையாடற் புராணம் என்பன.

2. கடம்பவனபுராணம்:- இஃது தொண்டை நாட்டு இலம்பூர் 'வீமநாத பண்டிதர்' என்பவரால் நீபாரண்ய மகாத்மியம் என்னும் வடமொழி நூலிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டு 1090 செய்யுட்களால் இயற்றப்பட்டது.

இதில், இலீலா சங்கிரக அத்தியாயத்தின் முதலிலுள்ள 64-செய்யுட்களாற் கூறப்பெற்ற 64-திருவிளையாடல்களும், மேற்கூறிய திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்திலுள்ள வரிசைப்படியே அமைந்துள்ளன.

3. சுந்தரபாண்டியம் :- இது தொண்டை நாட்டிலுள்ள வாயற்பதி எனும் ஊரின் 'அனதாரி' எனும் புலவர் பெருமானால், சுந்தரபாண்டியம் எனும் வடமொழிநூலிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டு, செய்யுள் நடையாகச் செய்யப்பெற்றது. இந்நூல், மதுரைத் தமிழ்ச்சங்கத்துப் பாண்டியன் புத்தகசாலையில் இடம்பெற்றது.

இந்த அனதாரிப்புலவர் புகழ் கூறும் செய்யுட்கள்:-

"மிண்டரை வெல்லும் வளைச்சிங்க ராயன் விலைகொடுப்பத்
தண்டமிழ் மேக முரத்தூரில் வேதியன் றானும்விற்பக்
கொண்டவன் பின்சென்று மண்டலத் தேபுகழ் கொண்டபிரான்
வண்டமிழ்க் கும்ப னனதாரி யுந்தொண்டை மண்டலமே"

எனும் தொண்டைமண்டல சதகம்.

"கம்பனென்றுந் தாத னென்றுங் காழியொட்டக் கூத்தனென்றுங்
கும்பமுனி யென்றும்பேர் கொள்வரோ - அம்புவியின்
மன்னா வலர்புகழும் வாயிலன தாரியப்ப
னன்னாளி லேயிருந்தக் கால்"

எனும் பழைய வெண்பா.

இவரது காலம் சாலிவாகன சகாத்தம் 1486; கி.பி.1563. இஃது இன்னும் அச்சிடப்படவில்லை. முற்றும் கிடைக்கவில்லை என்பது மதிப்பிற்குரிய டாக்டர் உ.வே.சா. அவர்களின் கூற்று.

4. பரஞ்சோதி திருவிளையாடற்புராணம் :- இது, பரஞ்சோதி முனிவ ரென்பவரால், ஸ்ரீஹாலாஸ்யமாகாத்மிய மென்னும் வடமொழி நூலிலிருந்து மொழிபெயர்த்து 3363 செய்யுட்களாக இயற்றப் பெற்றது. தற்போது எல்லாராலும் மிகுதியும் போற்றப் பெறும் நூல் இதுவேயாகும்.

5. அட்டமிப் பிரதட்சிண மான்மியம் :- தேவாரப் பண்முறையினை தேவாரத் திருமுறையாக முதன்முதலிற் பதிப்பித்தவர், மதுரையில் வாழ்ந்த திருவாளர். இ. இராமசாமிப் பிள்ளையாவர். இவர் ஷெநூலை வடமொழி நூலிலிருந்து உரைநடையாக இயற்றினார்.

மேற்கூறப்பட்ட நூல்களுள் நம்பி திருவிளையாடலும், பரஞ்சோதி திருவிளையாடலும், மதுரைச் சொக்கேசனுடைய 64 திருவிடையாடல்களையும், மிகச் சிறப்பாகக் கூறவன.

நம்பி திருவிளையாடலிலுள்ள 51-வது மூர்த்தியார்க்கு அரசளித்த திருவிளையாடலும், 52-வது காரியார் நாரியார் பாப்பகுத்த திருவிளையாடலும், 53-வது புலிமுலை புல்வாய்க்கு அருத்திய திருவிளையாடலும் பரஞ்சோதி திருவிளையாடலில் இல்லை.

பரஞ்சோதியில் உள்ள வருணன்விட்ட கடலை வற்றச்செய்த படலம், நம்பியல் நான்மாடக் கூடலான திருவிளையாடல் எனவும், பரஞ்சோதியில் உள்ள நாகமெய்த படலம், மாயப்பசுவதைத்த படலம் ஆகியவை நம்பியில் 36-மதுரையான திருவிளையாடல் எனவும், பரஞ்சோதியில் உள்ள திருநகரங்கண்ட படலம், நம்பியில் 53-வது புலிமுலை புல்வாய்க் கருத்திய திருவிளையாடல் எனவும், வேறுபாடுகள் காணப் பெறுகின்றன.

பரஞ்சோதி திருவிளையாடற்புராணம் படல அட்டவணை முன்னர் கூறப்பட்டது.

**நம்பி திருவிளையாடலின் வைப்புமுறை:**

1. இந்திரன் பழிதீர்த்த திருவிளையாடல்
2. வெள்ளானைக்குச் சாபந் தீர்த்த திருவிளையாடல்
3. தடாதகையா ரவதரித்த ,,
4. மணஞ்செய்த ,,
5. பதஞ்சலிக்கு நடஞ்செய்த ,,
6. பூதமுண்ட ,,
7. ஆறழைத்த ,,
8. கடலழைத்த ,,
9. மலயத்துவசனை யழைத்த ,,
10. உக்கிரன் பிறந்த ,,
11. வளைவேல் செண்டு கொடுத்த ,,
12. நான்மாடக் கூடலான ,,
13. சித்தரான ,,
14. கல்லானை கரும்பு வாங்கின ,,
15. சங்கப் பலகை கொடுத்த ,,
16. கிழியறுத்த ,,
17. நக்கீரனைக் கரையேற்றின ,,
18. குறுமுனிக்குத் தமிழுரைத்த ,,
19. ஊமை தமிழறிந்த ,,
20. இடைக்காடன் பின்போன ,,
21. கடல் சுவற வேலெறிந்த ,,
22. வலைவீசின ,,
23. வளையல் விற்ற ,,
24. இலச்சினை யிட்ட ,,
25. மாணிக்கம் விற்ற ,,
26. ஆனையெய்த ,,
27. ஞானோபதேசஞ் செய்த ,,
28. நரி குதிரையான ,,
29. குதிரை நரியான ,,

30. மண்சுமந்த ,,
31. விருத்தகுமார பாலரான ,,
32. மாறியாடின ,,
33. பழியஞ்சின ,,
34. மகாபாதகந் தீர்த்த ,,
35. அங்கம் வெட்டின ,,
36. மதுரையான ,,
37. வெப்புத் தீர்த்த ,,
38. கழுவேறின ,,
39. மெய்க்காட்டிட்ட ,,
40. உலவாக்கிழி கொடுத்த ,,
41. மாமனாக வந்து வழக்குரைத்த ,,
42. அட்டமாசித்தி பகர்ந்த ,,
43. தண்ணீர்ப்பந்தல் வைத்த ,,
44. இந்திரன் முடிமேல் வளையெறிந்த ,,
45. பொன்னனையாளுக்கு அருள்புரிந்த ,,
46. சோழனைக் கொண்டாழியிற்றாழ்த்த ,,
47. திருவாலவாயான ,,
48. வரகுணனுக்குச் சிவலோகங் காட்டின ,,
49. விடைக்குறியம் பெய்த ,,
50. உலவாக்கோட்டை வைத்த ,,
51. மூர்த்தியார்க்கு அரசளித்த ,,
52. காரியார் நாரியார் பாப்பகுந்த ,,
53. புலிமுலை புல்வாய்க் கருளின ,,
54. சாதாரி பாடின ,,
55. திருமுகங் கொடுத்த ,,
56. பலகையிட்ட ,,
57. இசைவாது வென்ற ,,
58. பன்றிக்குட்டிகட்குத் தாயான ,,
59. பன்றிக்குட்டிகளுக்கு அருள்புரிந்த ,,
60. கரிக்குருவிக்கு அருள்புரிந்த ,,
61. மாமேருவிற் கயல்செண்டு பொறித்த ,,
62. சான்றழைத்த ,,
63. நாரைக்கு அருள்புரிந்த ,,
64. வேதம் உணர்த்திய ,,

ஆகியவை.

பரஞ்சோதி திருவிளையாடல், கதைகளை விரிவாகக் கூறுவது. நம்பி திருவிளையாடல், சுருக்கமாகவும், சங்கச் செய்யுட்களைத் தழுவியும், பண்டைய மதுரை வரலாறுகளையும் தழுவியுரைப்பது.

முன்னதாக இயற்றப்பட்ட நம்பி திருவிளையாடலை எல்லோரும் போற்றிப் பாராயணம் செய்துவந்தனர். இந்நூலை அடிப்படையாகக் கொண்டு, இத்தல சம்பந்தமான நூல்களை இயற்றி வந்தனர். அது, திருவிளையாடற் பயகரமாலை, கடம்பவன புராணத்துள்ள இலீலாசங்கிரக அத்தியாயம், திருவுசாத்தான நான்மணிமாலையின் 27ஆம் செய்யுள் முதலியவற்றால் அறியக் கிடக்கின்றது.

நம்பி திருவிளையாடற் செய்யுட்கள், பின்னர் எழுந்த நூல்கட்கு உரைக்குறிப்பு எடுத்துக் காட்டுகளாக அமைந்துள்ளன. சான்றாக, "கொலை மறுத்தல்" என்ற நூலுக்குத் திருப்போரூர் சிதம்பரசுவாமிகள் எழுதிய உரை உளது.

இவ்வாறே, பரஞ்சோதி திருவிளையாடல் செய்யுட்களும் பல நூல்களில் எடுத்தாளப்பட்டு வருகின்றன.

நம்பி திருவிளையாடலால், சில பழைய நாடுகள், மலைகள், ஊர்கள், புண்ணிய தீர்த்தங்கள் சிவத்தலச் சிறப்புக்கள், பழமொழிகள், புராணத் தொடர்புடைய வரலாற்று நிகழ்விடங்கள் முதலியன இன்றும் காணக்கிடைக்கின்றன.

அதுபோலவே, பரஞ்சோதி திருவிளையாடற் புராணத்தும் காணக்கிடைக்கின்றன.

இருநூல்களிலும், இசை பற்றிய விரிவான செய்திகள், குதிரை இலக்கணம், நவமணிகள் இலக்கணம், போர்முறைகள், இறைவனின் எளிவந்த கருணை, முதலானவை காணப்படுகின்றன.

ஸ்ரீ சோமசுந்தரக் கடவுள் இந்நூலுள்ளே பெரும்பாலும் "சொக்கன்" என்ற வழங்கப் பெறுவர். சொக்கு - அழகு; பேரழகு என்றும் பொருள் கூறுவதுண்டு. இதனை இந்நூல் "இந்திரன் பழிதீர்த்த திருவிளையாடல்" 26ஆம் செய்யுளாலுணர்க. பண்டைக் காலத்து இப்பெயரே பெரும்பாலும் வழங்கப்பட்டு வந்தமையின் இந்நூலாசிரியரால் இத் திருநாமம் மிக எடுத்தாளப்பட்டதென்று தெரிகின்றது. அங்ஙனம் வழங்கி வந்தமையை, சொக்கலிங்கம், சொக்கர் தீபாராதனை, சொக்கத் தாண்டவம், சொக்குப்பாட்டு, சொக்கரப்பம், சொக்கர் தலைக்கீடு (சொக்கர் லேஞ்சு), பழைய சொக்கநாதர் கோயில் என்னும் உலக வழக்காலும், தேவாரம், கடம்பவன புராணம், சுந்தரபாண்டியம், மதுரை மும்மணிக் கோவை, மதுரைச் சொக்கநாதருலா, மதுரைப் பதிற்றுப்பத்தந்தாதி, மதுரைத் திருப்பணிமாலை, மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், மதுரைக் கலம்பகம், திருவாதவூரர் புராணம், பழைய திருப்பெருந்துறைப் புராணங்கள் முதலிய நூல்களாலு முணர்க. அன்றி, வடமொழிப் பெயராகிய "சுந்தரர்" என்பதை எடுத்தாளுதலிலும், தென்மொழிப் பெயராகிய "சொக்கர்" என்பதைத் தமிழ் நூலில் எடுத்தாளுதல் அழகென்று இவர் எண்ணி யிருக்கலா மென்றும் தோற்றுகிறது; சுந்தர னென்ற திருநாமமும் இதில் சிறுபான்மை வழங்கும்.

நம்பி திருவிளையாடல் உ.வே.சா. பதிப்பு
முன்னுரை பக்கம் 9-10.

ஒட்டக்கூத்தரும், கம்பரும் இராமாயணம் எழுதிய கதை போல், பெரும்பற்றப்புலியூர் நம்பிக்கும், பரஞ்சோதி முனிவருக்கும் நிகழ்ந்த நிகழ்ச்சி அறியக் கிடைக்கிறது.

"தாமியற்றிய திருவிளையாடற்புராணச் செய்யுட்களைப் படித்துக் காட்ட நினைந்து, ஒருநாள் அந்திப் பொழுதில் வேம்பத்தூருக்கு வந்த பரஞ்சோதி முனிவரை, அவ்வூர்க் கவிஞர்களுள்ளே தண்டிகை பெற்று விளங்கிய பெரியார் அறுபத்து நால்வர் மறுநாட் காலையில் வரச் சொல்லிவிட்டு, இன்ன இன்ன பகுதியை இன்னார் இன்னார் இயற்றுதற்குரிய ரென்று அன்றிரவில் யோசித்துத் தமக்குள் நிச்சயித்துக் கொண்டு ஒவ்வொருவர் ஒவ்வொன்றாக அறுபத்து நான்கு திருவிளையாடல்களையும்,

விடியற்காலத்துள் தனித்தனியே செய்து முடித்து, அவற்றை ஒருங்கு சேர்த்து வைத்துக்கொண்டிருந்து, காலையில் வந்த பரஞ்சோதி முனிவரை நோக்கிஇதைக் கேளுமென்று தாமியற்றிய நூலைப் படித்துக் காட்டி, திருவிளையாடற் புராணம் தமிழில் முன்னமே யிருக்கையில் நீர் செய்தது எதன்பொருட்டென்று வினாவ, அம்முனிவர் மனநொந்து சபித்துவிட்டுப் போயினர்; அதனால் இந்நூல் வழங்காது போயிற்றென்று ஒரு கட்டுக்கதை கூறுவாரும் வடநூல் ஆதாரமில்லாமையால் இந்நூலை ஒருவரும் அங்கீகரிக்கவில்லை யென்று சொல்லுவாரும், சோமசுந்தரக் கடவுளை அருமையாகச் சொல்லாமல், பக்தியின்றி, 'சொக்கன், சொக்கன்' என்று பலவிடத்துங் கூறியிருத்தலால் இதை ஒருவரும் கையால் தொடவில்லை எனபாரும், பரஞ்சோதி முனிவர் இயற்றிய திருவிளையாடல் வழங்கத் தொடங்கிய பின்பு இது வழங்குத லற்ற தென்பாரும், இன்னும் தத்தமக்குத் தோற்றிய வண்ணம் பற்பல கூறுவாருமாக, அங்கங்கே பற்பலர் உளராயினார்; இவைகள் யாவும் கதானுகந்நியாயமென்பது. இந்நூலை ஆராய்ந்து பார்ப்பவர் களுக்கு இனிது விளங்கும்."

(நம்பி திருவிளையாடல் உ.வே.சா பதிப்பு முன்னுரை பக்கம் 10, 11)

உ

கணபதி துணை

# திருவாலவாயுடையார்

## திருவிளையாடற் புராணம்

தமிழும் கிரந்தமும் கலந்த மணிப்பிரவாள நடை

சரசுவதி மகால் சுவடி எண்.1157

## மதுரைப் புராண [1]வரிசக் குறிப்பு

**முதலாம் படலம்:**

இந்திரன் பழிதீர்த்த படலத்தில் தேவேந்திரனானவன் துவஷ்டா யாகத்தில் பிறந்த விருத்திராசுரனை வெட்டின பிரம்மஹத்தி தீர சொக்க நாயகரைப் பூசை செய்தான்.

**2ஆம் படலத்தில்,**

வெள்ளையானை சாபந்தீர்த்த படலத்தில் தேவேந்திரனுக்கு துருவாசர் கொடுத்த தாமரைப் பூமாலையை, அவன், தன் யானை தலைமேல் வைக்க, அது, அதை யெடுத்து பூமியில் போட்டு மெரிக்க, அதை துர்வாசர் பார்த்து, கோபித்து, இந்திரனுக்கும் அந்த யானைக்கும் சாபம் கொடுக்க, அந்த யானையானது மதுரையில் போய் சொக்கநாதரைப் பூசித்து அந்த சாபத்தைத் தீரத்துக் கொண்டது.

**3ஆம் படலத்தில்,**

திருநகரங்கண்ட படலத்தில், கொற்கை வேந்தனாலுண்டான கொற்கைப் பட்டணத்திலிருந்த கொற்கை வேந்தன் வம்சத்தில் பிறந்த சம்பந்த பாண்டியன் மோட்சமும், ஆலய உற்பத்தியும் அவன்

1. வரிசைக் குறிப்பு

புத்திரனான குலசேகர பாண்டியனுக்கு மலையத்துவச பாண்டியன் உத்பத்தியும், குலசேகர பாண்டியன் மோட்சமும் சொல்லு(வ)து.

**4ஆம் படலத்தில்,**

தடாதகைப் பிராட்டியார் திருவவதாரப் படலத்தில், ஷெ மலையத்துவச பாண்டியன் செய்த யாகத்தில் ஈஸ்வரி 3 முலையுடன் பிறந்து தடாதகை யென்று பேர் பெற்று அரசு செய்ததும் அந்த மலையத்துவச பாண்டியன் மோட்சமும்

**5ஆம் படலத்தில்,**

திருமணப்படலத்தில், அந்த தடாதகை தேவி திக்விஜயத்தில், சொக்கநாயகர் வேடனைப் போலே போய் யெதிர்த்து, சௌந்தரபாண்டியன் என்று பேர் தரித்து அவளை விவாகம் செய்தார்.

**6ஆம் படலத்தில்,**

வெள்ளியம்பலத் திருக்கூத்தாடிய படலத்தில் முன்சொன்ன விவாகத்துக்குவந்த, பதஞ்சலி வியக்கிரபாதர் போஜனம் செய்ய, ஷெபாண்டியன், சபாநாயகரைப்போல ரூபம் கொண்டு நடனம் செய்தது.

**7ஆம் படலத்தில்,**

குண்டோதரனுக்கு அன்னமிட்ட படலத்தில் ஷெவிவாகத்துக்கு சமைத்து பொஜித்த மீதி வஸ்துவை, ஷெசௌந்தரபாண்டியனானவர் குண்டோதரன் வயிற்றில் வடவாக்னியைப் போகச் செய்து, அதுகளைச் சாப்பிடச் செய்தது.

**8ஆம் படலத்தில்,**

அன்னக் குழியையும், வையையும் அழைத்த படலத்தில் ,

ஷை சௌந்தர பாண்டியனானவர், அன்னக் குழியையும் 9 நதிகளையும் வரவழைத்து, குண்டோதரன் பசியை நீக்கினது.

**9ஆம் படலத்தில்,**

எழுகடலழைத்த படலத்தில் (ஸ்வாமியான) பாண்டியன், தன்னைத்தான் பூசிப்பது நியாயமல்ல வென்று, வேறே லிங்கப் பிரதிஷ்டை செய்து பூசித்ததும், தன் மாமியாருக்காக சப்த சமுத்திரத்தையழைத்ததும்.

**10ஆம் படலத்தில்,**

மலையத்துவசனை யழைத்த படலத்தில் ஷை மாமியாருடன் கூட முழுக, தேவலோகத்திலிருந்த அவள் புருஷனான மலையத்துவசனை அழைப்பித்து தம்பதி நமேதராய் ஸ்நானம் செய்யச் சொல்லி தரிசனம் கொடுத்தது.

**11ஆம் படலத்தில்,**

உக்ரகுமாரன் திருவவதாரப் படலத்தில் ஷை சௌந்தர பாண்டியனுக்கு உக்கிர குமாரன் உத்பத்தியானது.

**12ஆம் படலத்தில்,**

உக்கிரகுமாரனுக்கு வேல்வளை செண்டு கொடுத்த படலத்தில், ஷை உக்கிர பாண்டியனுக்கு விவாகம் செய்து, பட்டங்கட்டி, ஷை சௌந்தர பாண்டியனும், ஷை தடாதகையும் மூலலிங்கத்தில் ஐக்கியமானது.

**13ஆம் படலத்தில்,**

கடல்சுவர வேல்விட்ட படலத்தில் உக்கிரபாண்டியனானவன் 96 அஸ்வமேதயாகம் செய்த பலத்தால், பாண்டிய தேசம் க்ஷேமமாயிருப்பதை, இந்திரன் பார்த்து, பொறாமை கொண்டு, வருணனைக் கொண்டு, பாண்டிய தேசத்தை அழிக்கும்படிக்கு சமுத்திரங்களை அனுப்ப, அது வருவதைச் சொக்கநாயகர் அறிந்து, ஷை உக்ர பாண்டியனை வேல்விடச் செய்து, ஷை சமுத்திரத்தை வற்றச் செய்தது.

**14ஆம் படலத்தில்,**

இந்திரன் முடிமேல் வளையெறிந்த படலத்தில் சேரன் முதல் 3 ராஜரும், அகஸ்தியர் சொன்னபடி [1]சோமவாரம் அனுஷ்டித்து, அந்த 3 பேரும் தேவலோகத்தில் போய், சேரனும் சோழனும், தேவேந்திரனை மழை பெய்ய உத்தரவு பெற்றுக் கொண்டு தன்(னிடம்) போக, பாண்டியன் மழை வேண்டுமென்று கேழ்க்காமல் வந்துவிட்டு, வேட்டைக்குப் போய், அந்த 3 பேரும் மேகங்களைப் பிடித்து வந்து சிறையில் போட, அதை தேவேந்திரன் கேட்டு சண்டைக்கு வர 2ஆம் திருவிளையாடலில் துர்வாசர் இந்திரனுக்குக் கொடுத்த சாபத்தால், பாண்டியன் வளை என்கிற ஆயுதத்தை இந்திரன் முடிமேல்விட்டு இடரச் செய்தது.

**15ஆம் படலத்தில்,**

மேருவைச் செண்டாலடித்த படலத்தில், மதுரையில், ஒரு வருடம் மழையில்லாமலும், பாண்டியனிடத்தல் [2]தன மில்லாமலும் போக, அதை, பாண்டியன் போய் சுவாமியுடன் சொல்ல, சுவாமி உத்தரவுப்படிக்கு, பாண்டியன் போய், மேருவைச் செண்டா லடிக்க, அந்த மலை புருஷன் வந்து அநேக பொன் கட்டிகளைக் கொடுக்க, அதைப் பாண்டியன் வாங்கி வந்து ஜனங்களை ரட்சித்தது.

**16ஆம் படலத்தில்,**

வேதத்துக்குப் பொருளருளிச் செய்த படலத்தில் சொக்கநாயகர் பிராம்மணன ரூபங்கொண்டு வேதாரணயத்துக்குப் போய், ரிஷிகளை யிட்டு வந்து, வேதத்துக்குப் பொருள் சொல்லச சொன்னது.

**17ஆம் படலத்தில்,**

மாணிக்கம் விற்ற படலத்தில், அபிஷேக பாண்டியனுக்கு மகுடம் செய்ய, சொக்கநாயகர் சொக்கலிங்கஞ் செட்டியார் என்று வந்து ரத்தின வியாபாரம் செய்தது.

1. சோமவாரவிரதம். 2. பொருள் – பணம்.

**18ஆம் படலத்தில்,**

வருணன்விட்ட கடலைவற்றச் செய்த படலத்தில் வருணன் தனக்கு வந்த மகோதர வியாதியைத் தீர்த்துக் கொள்வதற்காக, சொக்கநாயகர் மகிமையை யறிய, சமுத்தரங்களை யனுப்பி மதுரையை ஹதம் செய்ய, சொக்க நாயகர் தன் சடையிலிருக்கிற மேகத்தை யனுப்பி, அந்த சமுத்திர ஜலத்தை வற்றச் செய்தது.

**19ஆம் படலத்தில்,**

வருண பகவான், மகோதர வியாதியை மதுரையில் போய், சொக்கநாயகரால், தீர்த்துக் கொண்டது.

**20ஆம் படலத்தில்,**

சொக்க நாயகர் சித்தர் வேஷங்கொண்டு ஜாலவித்தை யாடினது.

**21ஆம் படலத்தில்,**

ஷெ சித்தர், பாண்டியன் சொல்லியபடி, கல் யானையைக் கரும்பு தின்னச் செய்தது.

**22ஆம் படலத்தில்,**

(சோழன் போராடி பாண்டியனைக் கொல்லும்படி) சமணர் விட்ட யானையைச் சொக்கநாயகர் வேட ரூபம் கொண்டு போய், அந்த யானையைக் கொன்று, எதிர்த்துவந்த சோழனையும் வெட்டினது.

**23ஆம் படலத்தில்,**

வைஷ்ணவ பிராம்மணனைக் கட்டிக்கொண்ட சிவப்பிராம்மணத்திக்கு மோட்சம் கொடுத்தது.

**24ஆம் படலத்தில்,**

இராச சேகர பாண்டியன் சொல்படிக்கு, மதுரையிலிருந்து சபாநாயகர் வலதுகாலைத் தூக்கியாடினது.

**25ஆம் படலத்தில்,**

மதுரைக்குப் போகும் போது, ஒரு பிராம்மணனானவன் தன் பெண்சாதி இறந்ததற்காக, அங்கே வந்திருந்த ஒரு வேடன்மேல் பழிபோட, சொக்கநாயகர், பாண்டியனை நகர் சோதனைக்குப் போகச் சொன்னது.

**26ஆம் படலத்தில்,**

தகப்பனை வெட்டிவிட்டு, தாயைப் புணர்ந்த பிராம்மணனுக்கு சொக்கநாயகர் மோட்சம் கொடுத்தது.

**27ஆம் படலத்தில்,**

மதுரையிலிருந்த சங்கீத வித்துவானான பாணபத்திரன் பெண்சாதியைச் சம்போகத்துக்கு அழைத்த சிஷ்யனை சொக்கநாயகர், பாணபத்திரரைப்போல் ரூபங்கொண்டுபோய்க் கொன்றது.

**28ஆம் படலத்தில்,**

பாண்டியனைக் கொல்லும்படி சமணர்கள் அனுப்பின பாம்பை, சொக்கநாயகர், பாண்டியனால் கொன்றது.

**29ஆம் படலத்தில்,**

பாண்டியனைக் கொல்ல ஷெ சமண முனிவர்கள் அனுப்பின பசுவைச் சொக்கநாயகர் நந்திகேசுவரரை அனுப்பிக் கொன்றதும், ராமாயணகதையும் சொல்லுவது.

**30ஆம் படலத்தில்,**

அனந்தகுண பாண்டியன்மேல் சண்டைக்கு வந்த மறவனை ஜெயிக்க, சுவாமி குதிரை கொண்டுவந்தது.

**31ஆம் படலத்தில்,**

குலபூஷண பாண்டியன் காலத்தில் மழையில்லாமல் க்ஷாமம் வர, அப்போது சுவாமி பாண்டியனுக்கு 1000 தங்கக்காசு கொடுத்தது.

**32ஆம் படலத்தில்,**

சிவன் பிட்சாரந ரூபங்கொண்டு தாருகாவனத்து ரிஷி பத்தினிகளிடத்தில் போய் பிட்சை எடுத்தும், சொக்கநாயகர் செட்டியார் ரூபங்கொண்டுபோய் அந்த ஸ்திரீகளுக்கு வளையலிட்டதும், உபதேசித்ததும்.

**33ஆம் படலத்தில்,**

பட்டமங்கலத்தில் சொக்கநாயகர் 6 தேவகன்னிகைகளுக்கு உபதேசம் செய்தது.

**34ஆம் படலத்தில்,**

சொக்கநாயகர் காஞ்சிபுரத்து காடுவெட்டி சோழனுக்காக வைகையாற்று ஜலத்தை வடியச் செய்தது. அவனை மதுரைக்கு [1]இட்டும் போய் தரிசனமும் வரமும் கொடுத்து; வைகை ஆறு தாண்டி அவனை அனுப்பிவிட்டு, கதவுக்கு ரிஷப முத்திரை வைத்தது.

**35ஆம் படலத்தில்,**

பாண்டியன் மேல் சண்டைக்கு வந்த சோழனை சொக்கநாயகர் குறிக்காரனைப் போல் போய் பிடித்துக் கொடுத்தது.

..............................................................................

1. அழைத்துக்கொண்டுபோய்

**36ஆம் படலத்தில்,**

(சொக்கநாயகர் சித்தர் ரூபங்கொண்டு போய் [2]திரிபுவனத்து தாசிக்கு) இரும்புகளைப் பொன்னாக்கிக் கொடுத்தது.

**37ஆம் படலத்தில்,**

சொக்கநாயகர் குதிரை ராவுத்தன் வேஷங் கொண்டுபோய், பாண்டியன் மேல் சண்டைக்கு வந்த சோழனைக் கொன்றது.

**38ஆம் படலத்தில்,**

மதுரையில் அன்னதானம் செய்கிற ஒரு வேளாளனுக்கு [3]க்ஷாம காலத்தில் சொக்கநாயகர் கூலிக்காரனைப் போல் ரூபங்கொண்டு அரிசி மூட்டைகளைக் கொண்டுபோய் அவன் குதிரில் வைத்து, அவனை அன்னதானம் செய்யச் சொன்னது.

**39ஆம் படலத்தில்,**

மதுரையிலுள்ள ஒரு செட்டிப் பெண்ணுக்காக அவள் மாமனைப்போல் ரூபங்கொண்டு போய் வழக்கை ஜெயித்தது.

**40ஆம் படலத்தில்,**

வரகுணபாண்டியனானவன், தனக்கு வந்த பிரம்ம ஹத்தியை சொக்கநாயகர் சொல்படி திருவிடைமருதூரில் போய் தீர்த்துக்கொண்டது.

**41ஆம் படலத்தில்,**

சொக்கநாயகர் விறகு விற்கிறவனைப்போல் ரூபங்கொண்டு போய், பானபத்திரரை ஜெயிக்க வந்த சங்கீத வித்துவானை ஜெயித்தது.

---

*2. திருப்பூவணம். 3. வறுமைபோனும்*

**42ஆம் படலத்தில்,**

[1]பாணபத்திரர் செய்கிற தவத்துக்கு தன்மத்துக்காக சொக்கநாயகர் அவர் கையில் திருமுகம் எழுதிக்கொடுத்து அனுப்பி (சேர ராஜாவின்) கனாவில்போய், பாணபத்தருக்கு தன்மம் கொடுக்கச் சொன்னது.

**43ஆம் படலத்தில்,**

சொக்க நாயகர் தன்பேரில் பாணபத்திரர் பக்தியினாலேயோ, தர்மத்துக்காகவோ பாடுகிறார் என்று காற்று மழையை விட்டு சோதித்து அவருக்குப் பொன் நாற்காலி போட்டுப் பாடச் சொன்னது.

**44ஆம் படலத்தில்,**

பாண்டியன் சபையில் சங்கீதம் பாடுகிற பாணபத்திரரின் பெண்சாதிக்கு வந்த [2]தோற்பை சொக்கநாயகர் ஒரு வித்துவானைப் போல் ரூபங்கொண்டுபோய் தீர்த்து, பின்பு ஸ்வாமி ரூபங்கொண்டு வரங்கொடுத்தது.

**45ஆம் படலத்தில்,**

குருவி(ந்து)த்துறை என்கிற பட்டணத்திலிருந்த ஒரு வேளாளனுக்குப் பிறந்த 12 பிள்ளைகளும் ஒரு ரிஷி சாபத்தால் பன்றியாய்ப் பிறந்து பசியால் வருத்தப் படும்போது, ஸ்வாமியானவர் விமானத்தின் மேல் அங்கே போய், தான் அந்தக் குட்டிகளின் தாய்போல ரூபங்கொண்டு, அந்த 12 குட்டிகளுக்கும் பால் கொடுத்து ரட்சித்தது.

**46ஆம் படலத்தில்,**

(ஷை) 12 பன்றி (மனுஷ)ாளைப் பாண்டியனானவன் சொக்கநாதர் சொல்படிக்குத் தனக்கு மந்திரிகளாய் வைத்துக் கொண்டது.

........................................................................

*1. பணபத்தர் என்றுளது. 2. தோல்வளை.*

**47ஆம் படலத்தில்,**

சொக்கநாயகர் 'வலியனைப்போல் ரூபங்கொண்டு வலியனுக்க உபதேசம் செய்தது.

**48ஆம் படலத்தில்,**

சொக்கநாயகர் நாரைப் பட்சிக்குப் பசியில்லா வரமும், சாயுச்சிய பதவியுங் கொடுத்தது.

**49ஆம் படலத்தில்,**

(கீர்த்தி பூஷண) வரபாண்டியனானவன் மதுரையைச் சுத்தி கோட்டை வளைப்பதற்காக சொக்கநாயகர், தான் தரித்த வாசுகி என்கிற பாம்பை அனுப்பி மதுரையில் எல்லையகலத்தைக் காட்டச் சொன்னது.

**50ஆம் படலத்தில்,**

பாண்டியன்மேல் சண்டைக்குவந்த சோழனை சொக்கநாயகர், வேடனைப்போல் ரூபங்கொண்டுபோய் பாணம் போட்டு ஓட்டினது.

**51ஆம் படலத்தில்,**

பிரம்மா சாபத்தால் சரசுவதி 48 வித்துவானாய்ப் பிறந்து, மதுரையில் போக, சொக்கநாயகர் வித்துவானைப் போல் ரூபங்கொண்டு போய், அவாள் உட்கார்ந்திருக்க பலகை கொடுத்தது.

**52ஆம் படலத்தில்,**

சொக்க நாயகர் ஒரு ஏழைப் பிராம்மணப் பிள்ளைக்குக் கவி எழுதிக் கொடுத்து, பாண்டியனிடத்தில் அனுப்பினது.

**53ஆம் படலத்தில்,**

சொக்கநாயகர் பொற்றாமரையிலிருந்து நக்கீரரை யெடுத்து, சங்கத்தாருடன் கூட்டி பிரசங்கிக்கச் சொன்னது.

**54ஆம் படலத்தில்,**

சொக்கநாயகர், அகத்தியரை யழைப்பித்து ஷை சங்கத்தாருக்கு வஸ்து [1]லட்சணம் உபதேசித்தது.

**55ஆம் படலத்தில்,**

சொக்கநாயகர், சங்கத்தார் செய்த பாட்டுகளையெல்லாம், ஊமையாய்ப் பிறந்த சுப்பிரமணியருக்குக் காட்டும்படிக்கு, சங்கத்தாருக்குச் சொன்னது.

**56ஆம் படலத்தில்,**

சொக்க நாயகர், இடைக்காடருக்காக, வேறே ஆலயம் செய்து கொண்டு, அதில் தானும் இடைக்காடரும் சங்கத்தாரும் இருந்தது.

**57ஆம் படலத்தில்,**

கைலாயத்துச் சிவனானவன், ஈசுவரியைத் திருவுத்தரகோச மங்கையில், செம்படவன் வீட்டில் போய்ப் பிறக்கும்படி யனுப்பி, தான் செம்படவனைப் போல் போய் வலைவீசி, அவளைக் கலியாணம் செய்தது.

**58ஆம் படலத்தில்,**

[2]வம்ச சேகர பாண்டியன் காலத்தில் சொக்க நாயகர், திருப்பெருந்துறையில், மாணிக்க மூர்த்திக்கு உபதேசித்தது.

.............................................................................................

*1. இலக்கணம். 2. அரிமரத்தன பாண்டியன்*

**59ஆம் படலத்தில்,**

சொக்கநாயகர் நரிகளையெல்லாம் குதிரைகளாக்கி, மதுரையில் பாண்டியனுக்குக் கொடுத்தது.

**60ஆம் படலத்தில்,**

மாணிக்க வாசகர் வெய்யிலில் படுகிற வருத்தத்துக்காக, சொக்கநாயகர், கங்கையை வைகையில் பெருகிவரச் சொன்னது.

**61ஆம் படலத்தில்,**

சொக்கநாயகர், பிட்டு வாணிச்சிக்குக் கூலியாளாகி, மண்சுமந்து பிரம்படி பட்டது.

**62ஆம் படலத்தில்,**

சொக்நாயகர் ................கூன் பாண்டியன் ,,,,(சுர)த்தையும் கூனையும் தீர்த்து, உபதேசம் செய்து, அவனை சிவமதமாக்கி, சமணானைப் பங்கப்படுத்தினது.

**63ஆம் படலத்தில்,**

சம்பந்தருடனும் (பாண்டியனுடனும்) சொக்க நாயகர் கூடிக்கொண்டு, ஷெ சமணானைக் கழுவிலேற்றினது.

**64ஆம் படலத்தில்,**

சம்பந்தரானவர், காவேரிப் பட்டணத்து செட்டியார் பெண்ணுக்கும், மதுரைச் செட்டிப் பிள்ளைக்கும், திருமருகல் கோவிலில், சிவலிங்கம், கிணறு, வன்னமரம் இதுகளை சாட்சி வைத்து கல்யாணம் செய்ததை, சொக்கநாயகர், அதுகளை மதுரைக்கு அழைப்பித்து சாட்சி காட்டினது.

**65ஆம் படலத்தில்,**

அகத்யரானவர் காசியிலிருந்து ரிஷிகளை [1]இட்டுக்கொண்டு மதுரைக்குப் போய் சொக்கநாயகருக்குப் பூசை செய்துவிட்டு, அவாளவாள் தபோவனம் போய்ச் சேர்ந்தது.

முற்றும்.



1. அழைத்துக்கொண்டு

[1]பாண்டியர் பெயரும் அவர்காலத்தில் நிகழ்ந்த திருவிளையாடலும்; படல அகரவரிசையும்.

1. இராசேந்திர பாண்டியன்

    1. தண்ணீர்ப்பந்தல் வைத்தது.
    2. இரசவாதஞ் செய்தது.

2. இராசேச பாண்டியன்
3. இராச கெம்பீரன்
4. பாண்டி வங்கிய தீபன்
5. புரந்தர சித்து
6. பாண்டி வங்கிய பதாகன்
7. சுந்தரேச பாதசேகரன்

    3. சோழனை மடுவில் வீட்டியது
    4. உலவாக்கோட்டை யருளியது
    5. மாமனாக வந்து வழக்குரைத்தது

8. வரகுண பாண்டியன்

    6. வரகுணனுக்குச் சிவலோகங்காட்டியது
    7. விறகு விற்றது
    8. பலகையிட்டது

9. இராசராச பாண்டியன்

    9. இசைவாது வென்றது
    10. பன்றிக்குட்டிகளுக்கு முலை தந்தது.
    11. பன்றிக்குட்டிகளை மந்திரிகளாக்கியது

10. சுகுண பாண்டியன்

    12. கரிக்குருவிக் குபதேசம் செய்தது
    13. நாரைக்கு முத்தி கொடுத்தது.

11. சித்திரவிரத பாண்டியன்
12. சித்திர பூடண பாண்டியன்
13. சித்திரத் துவச பாண்டியன்

.........................................................................

1. சுவடியில் உள்ளபடி

14. சித்திர வருமபாண்டியன்
15. சித்திர சேன பாண்டியன்
16. சித்திர விக்கிரம பாண்டியன்
17. இராச மார்த்தாண்ட பாண்டியன்
18. இராச சூடாமணி பாண்டியன்
19. இராச சார்த்தூல பாண்டியன்
20. இராச குலோத்தும பாண்டியன்
21. ஆயோதனப் பிறவீண பாண்டியன்
22. இராச குஞ்சர பாண்டியன்
23. பரவராச பயங்கர பாண்டியன்
24. உக்கிரமசேன பாண்டியன்
25. சத்துரு சயன பாண்டியன்
26. வீமத் தேர்வயங்கெமு பாண்டியன்
27. வீரபாற்கர பாண்டியன்
28. பிரதாப மார்த்தாண்ட பாண்டியன்
29. விக்கிர கஞ்சுக பாண்டியன்
30. சமர கோலாகல பாண்டியன்
31. அதுல விக்கிரம பாண்டியன்
32. அதுலகீர்த்தி பாண்டியன்

[1]ஆக வங்கிச பரம்பரை 44.?

33. கீர்த்தி பூஷண பாண்டியன்

14. திருவாலவாயானது
(வங்கிய சேகரபாண்டியன்)
15. சுந்தரப் பேரம் பெய்தது
16. சங்கப்பலகை தந்தது

34. வங்கியசூடாமணியான சண்பக பாண்டியன்

17. தருமிக்குப் பொற்கிழியளித்தது
18. கீரனைக்கரையேற்றினது
19. கீரனுக்கிலக்கண முபதேசித்தது
20. சங்கத்தார் கலகந் தீர்த்தது

35. பிரதாபசூரிய பாண்டியன்
36. வங்கிஷத்துவச பாண்டியன்
37. நரியுமர்த்தக பாண்டியன்

---

1. எண்சரியில்லை

38. சோழ வங்கி சாந்த பாண்டியன்
39. பாண்டி வங்கிசேச பாண்டியன்
40. வங்கிச சிரோமணிப் பாண்டியன்
41. பாண்டீசுர பாண்டியன்
42. குலத்துவச பாண்டியன்
43. வங்கிவிபூடண பாண்டியன்
44. சோழசூடாமணிப் பாண்டியன்
45. குலசூடாமணிப் பாண்டியன்
46. இராச சூடாமணிப் பாண்டியன்
47. பூப சூடாமணிப் பாண்டியன்
48. குலேச பாண்டியன்

21. இடைக்காட்டான் பிணக்குத் தீர்த்தது.

49. அரிமர்த்தன பாண்டியன்

22. வலைவீசின திருவிளையாடல்
23. வாதவூரடிகளுக்கு உபதேசித்தது
24. நரி பாரியாக்கியது
25. பரிநரியாக்கியது
26. மண்சுமந்தது

50. சகநாத பாண்டியன்
51. வீரவாகு பாண்டியன்
52. விக்கிரபாகு பாண்டியன்
53. பராக்கிரம பாகு பாண்டியன்
54. சுரதமாற பாண்டியன்
55. குங்கும பாண்டியன்
56. கற்பூரபாண்டியன்
57. காருண்ணிய பாண்டியன்
58. புருடோத்தம பாண்டியன்
59. சத்துரு சாதன பாண்டியன்
60. கூன்சவுந்திர பாண்டியன்

27. சுரந்தீர்த்தது
28. சமணரைக் கழுவேற்றியது
29. வன்னியும் கிணறும் லிங்கமுமழைத்தது.

ஆக வங்கிஷ பாரம்பரை 29.
ஆக பாண்டிய ராசாக்கள் 73.

திருவிளையாடல் தெரிசித்த பாண்டிய ராசாக்கள் 22க்கு திருவிளையாடல் 62.

ஆக தெய்வேந்திரன் உள்பட ராசாக்கள் 75க்குத் திருவிளையாடல் 64.

இக்கைமு தாரமுதற் சுவைவாகு வடித்திடு சீனிநாற்
முற்கனியா எருள் முத்தமி ழோதினன் முத்தியின் மேவுவனோ
கற்கனிறே முருகற்கு முன்னாகிய கற்பகமே நிதியே
திற்கனிசீர் மதுரைப் பதிமேவிய சித்திவி நாயகனே.

...

## படல அகரமுதலி

படலம்

1. அங்கம் வெட்டினது
2. அட்டமாசித்தி யுபதேசித்தது
3. அருச்சனைப் படலம்
   அவையடக்கம்
4. அன்னக்குழியும் வைகையு மழைத்தது
5. இசைவாது வென்றது
6. இடைக்காடன் பிணக்குத் தீர்த்தது
7. இந்தீரன் பழி தீர்த்தது
8. இந்திரன் முடிமேல்வளை யெறிந்தது
9. இரசவாதஞ் செய்தது.
10. உக்கிர பாண்டியன் திருவவதாரமானது
11. உக்கிர பாண்டியனுக்கு வேல்வளை செண்டு கொடுத்தது.
12. உலவாக்கிழியருளியது.
13. உலவாக்கோட்டையருளியது
14. எல்லாம்வல்ல சித்தரானது
15. எழுகடலழைத்தது

16. கடல்சுவற வேல்விட்டது
கடவுள் வாழ்த்து
காப்பு
17. கரிக்குருவிக்குபதேசம் செய்தது.
18. கல்லானைக்குக் கரும்பருத்தியது
19. கீரனுக்கிலக்கண முபதேசித்தது
20. கீரனைக் கரையேற்றியது
21. குண்டோதரனுக்கு அன்னமிட்டது.
22. சங்கத்தார் கலகந்தீர்த்தது
23. சங்கப் பலகை தந்தது.
24. சமணரைக் கழுவேற்றியது
25. சுந்தரப் பேரம்பெய்தது.
26. சோழனை மடுவில் வீழ்த்தியது
27. தடாதகைப்பிராட்டியார் திருவவதாரம்
28. தண்ணீர்ப்பந்தல் வைத்தது
29. தருமிக்குப் பொற்கிழியளித்தது
தலவிசேடப் படலம்
திருக்கயிலாயச் சிறப்பு
31. திருநகரங்கண்டது
32. திருமணப் படலம்
33. திருமுகங் கொடுத்தது
34. திருவாலவாயானது
திருவிளையாடல் வரலாறு
தீரத்த விசேடப் படலம்
நகரச் சிறப்பு
35. நரிபரியாக்கியது
36. நாகமெய்தது
நாட்டுச் சிறப்பு
37. நாரைக்கு முத்தி கொடுத்தது
38. நான்மாடக் கூடலானது
நூற்பயன்
பதிகம்
39. பரிநரியாக்கி வைகை யழைத்தது
40. பலகையிட்டது

41. பழியஞ்சினது
42. பன்றிக்குட்டிகட்கு முலைகொடுத்தது
43. பன்றிக்குட்டிகளை மந்திரிகளாக்கியது
44. பாண்டியன் சுரந்தீர்த்தது
பாயிரம்
மண்சுமந்தது
46. மலையத்துவசனை யழைத்தது
47. மாணிக்கம் விற்றது
48. மாபாதகந்தீர்த்தது
49. மாமனாகவந்து வழக்குரைத்தது
50. மாயப்பசுவதைத்தது
51. மாறியாடினது
மூர்த்திவிசேடப்படலம்
52. மெய்க்காட்டிட்டது
53. மேருவைச் செண்டாலடித்தது
54. யானை யெய்தது
55. வரகுணனுக்குச் சிவலோகங் காட்டினது
56. வருணன்விட்ட கடலை வற்றச் செய்தது.
57. வலைவீசினது
58. வளையல் விற்றது
59. வன்னியுங் கிணறும் இலிங்கமுமழைத்தது
60. வாதவூரடிகளுக்குபதேசஞ் செய்தது
வாழ்த்து
61. விடையிலச்சினையிட்டது.
62. விருத்த குமார பாலரானது
63. விறகு விற்றது
64. வெள்ளையானை சாபந்தீர்த்தது
65. வெளியம்பலத் திருக்கூத்தாடியது
66. வேதத்துக்குப் பொருளருளிச் செய்தது.

...

உரைநடைநூல்:1 அறிமுகம்

உ

திருச்சிற்றம்பலம்

திருவாலவாய் என்கிற மதுரையில்

எழுந்தருளியிருக்கிற

கடவுளது

**திருவிளையாடற்புராணம்**

...

இஃது

பூவைசியர்களால்

தொண்டை மண்டலம் துளுவவேளாளர்

திருமயிலை நாட்டாண்மை முத்தியப்பமுதலியார் வம்சம்

வைத்திய நாத முதலியார் பௌத்திரரும்

சுப்பராய முதலியார் புத்திரருமாகிய

அருணாசல முதலியார்

தாம் முன்பதிப்பித்த பிரதிக் கிணங்க

சிலநூதனமான பொழிப்புரையுடன்

சென்னை சூளை

பி. வேம்பு முதலியார் குமாரர்

நமசிவாய முதலியாரது

நிரஞ்சனி விலாச அச்சியந்திர சாலையிற்

பதிப்பிக்கப்பட்டது

Registered Copy right

1891

கலியாப்தம் (4992) க்கு விக்ருதி வருஷம் மாசி மாதம்

அளவு : 26 x 20

பக்கங்கள்: 253

## திருவிளையாடற் றொகை


| | |
|---|---|
| இந்திரன் பழிதீர்த்த திருவிளையாடல் | 1 |
| வெள்ளையானை சாபந்தீர்த்தது | 2 |
| திருநகரங் கண்டது | 3 |
| தடாதகைப் பிராட்டியார் திருவவதாரம் | 4 |
| திருமணஞ் செய்தது | 5 |
| வெள்ளியம்பலத் திருக்கூத்தாடியது | 6 |
| குண்டோதரனுக் கன்னமிட்டது | 7 |
| அன்னக்குழியும் வையையும் அழைத்தது | 8 |
| எழுகடலழைத்தது | 9 |
| மலையத்துவசனை யழைத்தது | 10 |
| உக்கிர பாண்டியன் திருவவதாரம் | 11 |
| அவருக்கு வேல்வளை செண்டு கொடுத்தது | 12 |
| கடல்சுவற வேல் விட்டது | 13 |
| இந்திரன் முடிதகர்த்தது | 14 |
| மேருவைச் செண்டாலடித்தது | 15 |
| வேதத்துக்குப் பொருளருளிச் செய்தது | 16 |
| மாணிக்கம் விற்றது | 17 |
| வருணன் விட்ட கடலை வற்றச் செய்தது | 18 |
| நான்மாடக் கூடலானது | 19 |
| எல்லாம்வல்ல சித்தரானது | 20 |
| கல்லானைக்குக் கரும்பருத்தியது | 21 |
| யானை யெய்தது | 22 |
| விருத்த குமார பாலரானது | 23 |
| மாறியாடியது | 24 |
| பழியஞ்சியனது | 25 |
| மாபாதகங் தீர்த்தது | 26 |
| அங்கம் வெட்டினது | 27 |
| நாகமெய்தது | 28 |
| மாயப்பசு வதைத்தது | 29 |
| மெய்க்காட்டிட்டது | 30 |

| | |
|---|---|
| உலவாக்கிழியருளியது | 31 |
| வளையல் விற்றது | 32 |
| அட்டமாசித்தியுபதேசித்தது | 33 |
| விடையிலச்சினையிட்டது | 34 |
| தண்ணீர்ப்பந்தல் வைத்தது | 35 |
| இரசவாதஞ்செய்தது | 36 |
| சோழனை மடுவில் வீட்டியது | 37 |
| உலவாக் கோட்டை யருளியது | 38 |
| மாமனாகவந்து வழக்குரைத்தது | 39 |
| வரகுணனுக்குச் சிவலோகங் காட்டியது | 40 |
| விறகுவிற்றது | 41 |
| திருமுகங் கொடுத்தது | 42 |
| பலகையிட்டது | 43 |
| இசைவாது வென்றது | 44 |
| பன்றிக்குட்டிக்கு முலை கொடுத்தது | 45 |
| பன்றிக் குட்டிகளை மந்திரிகளாக்கியது | 46 |
| கரிக்குருவிக்குபதேசஞ் செய்தது | 47 |
| நாரைக்கு முத்தி கொடுத்தது | 48 |
| திருவாலவாயானது | 49 |
| சுந்தரப்பேரம் பெய்தது | 50 |
| சங்கப்பலகை தந்தது | 51 |
| தருமிக்குப் பொற்கிழியளித்தது | 52 |
| கீரனைக்கரையேற்றினது | 53 |
| கீரனுக்கிலக்கண முபதேசித்தது | 54 |
| சங்கத்தார் கலகந் தீர்த்தது | 55 |
| இடைக்காடன் பிணக்குத் தீரத்தது | 56 |
| வலைவீசினது | 57 |
| வாதவூரடிகளுக்குபதேசித்தது | 58 |
| நரிபரியாக்கியது | 59 |
| பரி நரியாக்கியது | 60 |
| மண் சுமந்தது | 61 |
| பாண்டியன் சுரந்தீர்த்தது | 62 |
| சமணரைக் கழுவேற்றியது | 63 |
| வன்னியும் - கிணறும் இலிங்கமும் அழைத்தது | 64 |

ஆக அறுபத்து நான்கும் யாவர் நிமித்தமாக
செய்தனரென்று நீவிர் வினாவிய படியால்
அந்த நிமித்தங்களை
வரன்முறையாகச் சொல்லுகிறேனென்று
அகத்தியர்சொல்லத் தொடங்கினார்.

திருவிளையாடற்றொகை முற்றியது.

## திருவிளையாடலின் முகவுரை

கடவுளருளாலே தெளிந்த நந்திதேவரிடத்தில் அன்புடனே கேட்டுத் தெளிந்து சனற்குமார முனிவர் வேதவியாச முனிவருக்குச் சொல்ல அந்த வேதவியாச முனிவர் சூத முனிவருக்குச் சொன்ன பதினெண் புராணங்களிலே ஒன்றாகிய கந்த புராணத்தில் சங்கர சங்கிதையில் சொல்லப்பட்டதான திருவாலவாய் மகிமை யென்கிற வடநூலைத் தமிழாலே பாடுகென்று மதுரையிலுள்ள பெரியோர்கள் சொல்லக்கேட்டு பாடுவோமென்று மறவாமற் கொண்ட இந்தவுறுதியை அநித்தியமான பிறவியானாலும் பெரியோரருளாலே பாடி முடிப்போமென்று, மனந்தேறி நகர்ச் சிறப்பு தீரத்தச் சிறப்பு மூர்த்திச் சிறப்புகளாகிய மூன்றும் அந்த மூர்த்தியின் அருள்விளையாடல் அறுபத்து நான்கும், அருச்சனைக் கிரம மொன்றும் ஆக அறுபத்தெட்டு படலமும் விருத்தச் செய்யுள் வகையாக நான் பாடுகின்றேன்.

ஆனாலும் சோமசுந்தரக் கடவுள் பாடிய கவிக்கும் குற்றஞ்சொன்ன கல்விச் சங்கத்தார் வாழ்ந்திருந்த மதுரையிலுள்ளவர்களுக்கு என்னுடைய வெள்ளரிவினாலே சொல்லுகிற பாடல்களில் குற்றங்காண்பது அரிதன்று.

ஆகிலும் நீரைப்பிரித்து அன்னமுண்கின்ற பால் போல இந்தச் சோமசுந்தரன் சரிதத்தை யொப்புக்கொள்ளவேண்டும்.

எப்படியென்றால் அககினி நாவினாலே உரிசை கண்ட தசையானது தேவர்கள் உண்ண அமுதமானாற் போலே சான்றோர் கழகத்திலே சென்று நன்மையாகித் திருவாலவாய்க் கடவுள் செவியினிடத்தும் சிறியேன் பாடின இந்தப் பாடல்களும் நுழைந்து அங்கீகரிக்கலாகும்.

இன்னும் கடலிலே நீரையுண்டு அந்த நீரிலுள்ள உவர்ப்பைப் போக்கி நன்னீராக்கின மேகம் போல சொல்லிலக்கணமும் பொருளிலக்கணமும் தெளிந்தோராகிய பெரியோர்கள் ஒரு நன்றியுமில்லாத என்னுடைய புன் சொற்களிலுள்ள குற்றங்களைப் போக்கித் திருவாலவாய்க் கடவுளுக்கு மகிழ்வு தோன்றச் செய்வார்கள்.

இன்னும், நீ இதுவும் அல்லை, இதுவும் அல்லையென்று வேதங்களும் உண்மை சொல்ல மாட்டாமல் அன்மைச் சொற்களாலே துதித்து இளைக்கும்படியான இந்தச் சோமசுந்தரக் கடவுள் திருவிளையாடல்களுக்கு என்னுடைய புன்சொற்கள் முடிவு காட்டுமோ? காட்டாது. ஆனாலும் இந்தத் திருவிளையாடலைப் பாடுவேனென்னும் ஆசையானது என் சொல்வழி கேட்டு நில்லாமையால் நானென்ன செய்வேனென்று (அறுகாற் பீடத்துயர் மாலாழி கடைந்தமுதையரங் கேற்றுமா போலறுகாற் பேடிசை பாடுங் கூடன் மான்மியத்தை யருந்தமிழாற் பாடி யறுகாற்பீடுயர் முடியார் சொக்கேசர் சன்னிதியிலமரர் சூழ மறுகாற்பீடத்திருந்து பரஞ்சோதி முனிவ னரங்கேற்றினானே) என அரங்கேற்றினவர் துதிகவிகளை யெல்லாம் விடாமல் அப்படியே செய்யுள்களாகவும் மற்றைய கவிகளை உலகநடையாகப் பின்னோான் வேண்டியவாறு கொண்டெழுதியிருக்கின்ற அன்றியும் சுருங்க வேண்டி விடுபட்ட கற்பனை யலங்காரங்களையும் அடைமொழிகளையும் புராணச் செய்யுட்களாலே தெரிந்து கொள்க.

...

## சிறப்புப்பாயிரம்

### நிலைமண்டிலவாசிரியப்பா

பூமகள் குளிர்நிறம் பூமக ளொடுவனத்
தேமல ராங்கல்பூண் டேமலர் தரும்பே
ருந்திநின் றொரீஇ யுந்திநீர் நாப்பணில்
றருந்தவம் பலதா னருந்தநல் லின்பம்.
..　　..　　..　　..　　..
..　　..　　..　　..　　..
சிவனடி யார்வரிற் சேவித் தீரெட்
டுபசா ரஞ்செய் துளமகிழ் விப்போன்
இசைத்திரு முகமெண் டிசையவ ரறிந்து
துன்னெனை விடுத்துச் சுகக்கட லாழ்ந்தோன்
என்னுரைக் கடங்கா மன்னுறு புகழோன்
வைத்திய நாத வள்ளல் மகிழும்
பௌத்திர னெழிற்சுப் பராயவேள் பயந்த
புத்திர னருணா சலபுரந் தரனே!

...

இஃது திரிசிரபுரம் தமிழ்த் தலைமைப் புலவராகிய
ம-கா-ள-ள-ஸ்ரீ வி.கோவிந்தசாமிப் பிள்ளையவர்கள் குமாரர்
நாராயணசாமி பிள்ளையவர்களா லியற்றியது.

...

( ) இப்பிறைக்குளடங்கியவை
திருமயிலைப் பள்ளுளிருந்து சேர்க்கப்பட்டவை.

மேற்கண்ட நிலைமண்டில ஆசிரியப்பா 296 அடிகளைக் கொண்டது. இரண்டு பத்திகளாக எழுதப்பட்டுளது. அடைப்புக்குறி நடுவில் உளது. இதனால் இவ்வுரைநடை நூலை எழுதியவர் சுப்பராயவேள் புதல்வர் அருணாசலம் என்பது தெரிகின்றது. வேறிடங்களில் உரைநடை ஆசிரியர் பெயர் காணப்படவில்லை.

படங்கள்: அழகான, முக்கிய பகுதியினைக் காட்டும் படங்கள் 64 உள்ளன. சான்றுக்கு 5 தந்துளேன். சான்றுக்கு ஒரு படலம் தரப்பட்டுளது.

இருபத்துநான்காவது

## மாறியாடின படலம்

### அறுசீரடியாசிரிய விருத்தம்

திருத்த ராய்மது ராபுரி மேவிய
சித்தரா கியசெல்வர்
விருத்த ராயிளை யவருமாய் மழவுமாய்
வேடங்கொண் டடலேற்றின்
ஒருத்த ராய்விளை யாடிய வாடலை
யுரைத்தன மினிமன்றுள்
நிருத்த ராயவர் மாறிநின் றாடிய
நிலைசிறி துரைசெய்வாம்.

**(இதன் பொருள்)**

திருத்த முடையவராய் மதுரையின்கண் எழுந்தருளியிருக்குஞ் சித்தராகிய சோமசுந்தரக் கடவுள் கிழவனாகியும், குமரனாகியும், குழந்தையாகியும் வேடந் தாங்கி விளையாடி விருஷபாரூடராய் வெளிவந்தருளிய திருவிளையாடலைச் சொன்னோம். இனி அந்தக்கடவுள் வெள்ளியம்பலத்தின்கண் கான்மாறியாடிய திருவிளையாடலைக் கொஞ்சஞ் சொல்லுகின்றோம். ஃ = எ-று

பின்பு விக்கிரம பாண்டியன் தன் புதல்வனாகிய இராஜசேகர பாண்டியனுக்குப் பட்டங்கட்டி வைத்துப் பிரமலோக முதலான லோகங்களுக்கெல்லா மேலான சிவலோகத்தை யடைந்தான்.

பின்பு, இராஜசேகர பாண்டியன் உலகமெல்லாம் தன்னதாக அரசு செலுத்தி ஒருகுடை நிழலிலாண்டு அனந்த வடிவாய் வெள்ளியம்பலத்துளாடுகிற சோமசந்தரக் கடவுள் திருநடத்திலே அன்பு மிகுந்து அந்தப் பரத சாஸ்திரம் தவிர அறுபத்து மூன்று கலைஞானங்களுந் தெரிந்து வருகிற காலத்தில் கோச்செங்கட் சோழனாலே பூசிக்கப்பட்டுக் காவேரிக் கரையிலே திருவானைக்காவிலே வளர்கிற கடவுளிடத்து அன்பு பெருகினவானாய் அறுபத்து நான்கு கலைஞானங்களுந் தெரிந்த கரிகாற் சோழன் அரசாட்சி செய்யும்போது, அவன் சபையிலிருந்து ஒரு புலவன் வந்து பாண்டியனைக் கண்டு, ஐயா எங்கள் கரிகாற் சோழனுக்கு அறுபத்து நான்கு கலை ஞானங்களுந் தெரியும். உமக்கு பரதசாஸ்திரம் ஒன்றும் தெரியாதிருக்கின்றதே யென்று துதித்துச் சொல்ல, பாண்டியன் கேட்டு மறுதேசத்து வித்துவான் சொல்லுகிற சொல்லினாலே மிகவு மனமுண்டாகி வியாகுல சித்தனாய் வேதாந்த மாகிய வெள்ளியம்பலத்திலே திருநடனஞ் செய்கிற கடவுளாடலை நானும் கற்று ஆடுதற்கு என்மனம் விரும்புகின்றதே. இதுவும் எனதாண்டவன் அருள் விதிதானென்று அது கற்கத் தொடங்கி பரதநூலளவு கண்டவராய் அந்த நூலின்படி ஆடவும் வல்ல நாடகநடைதெரிந்த வித்துவான்களைத் தேடி அவ்வித்துவான்களுக்குத் தனது மகிழ்வினாலே வேண்டிய வஸ்திராபரண திரவியங்கள் போதும் போதுமென்னக் கொடுத்து இராச சேகர பாண்டியன் கசடறப் பரத சாஸ்திரங் கற்ற வகையாவது பாவம் அராக – தாளம் ஆகிய மூன்றுஞ் சொன்ன முறைப்படி பரதமென்பதில் அங்கம் – உபாங்கம் – பிரத்தியாங்கம் – முகராகம்– கரப்பிரசாரம் – சிரக்கர கருமம் – கரகேத்திரம் – கரகரணம் – தானகம் – சுத்தசாரி – தேசிசாரி – நியாயம் – விருத்தி – பிரவிசாரம் – பூமண்டலம் – ஆகாச மண்டலம் – சுத்தக்கரணம் – உற்புலிதகரணம் – அங்ககாரம் – இரேசிதம் என்று சொல்லப்படுகின்ற இருபது பேதமும் கற்றுப் பின்னும் அவற்றிலே மனோபாவ முதலாகிய எட்டுவகை நிருத்தங்களில் சாரி நிருத்தமாகிய தாண்டவ மகமார்க்கம் – தேசி – வடுகு – சிங்களம் என மூன்றாம்.

அதனிலை ஆறு மூவிரண்டு பதமும் இரேகாதி அங்கம் பதினெட்டும் நால்வகைக் கரணமும், இருவகைக் கரமும், கால்வகைபுரிகை முதலாகிய பதினாறு மகவான் மனை முதலாகிய இரண்டும், மடிப்புவகை எழுநான்கும், சுத்தசாரியெனும் பூசாரி பதினாறும், கனகசாரி பதினாறும் திக்கிராந்த முதலாகிய முப்பத்திரண்டு தேசிசாரிகளும், தேர்ச்சக்கர முதலாகிய கனகசாரிகைகள் முப்பத்தைந்தும், வித்துவற் பிராந்த முதலாகிய சாரி பத்தொன்பதும் ஆகிய இவைகளெல்லாம் புட்பபுடத்திலக்கணமாகிய முதற் பொருள்கள். ஆசவாத்திய முன் பொருள் முதற் களாச முதலாகிய பாடபேதங்கள் பதினாறும், படகபேதம் பத்தொன்பதும் அளக முதலாகிய பாடவகைகள் இருபத்தெட்டும், அதில் பூசல் வார்த்திகத்துடனே ஐந்துவகைச் சச்சபுட முதலாகயி தாள மாத்திரையும், மாத்திரையின் கதிகளும், கீதமும், பாடமும், எழுத்தும், மணிபந்து முதலிய (கீதமும், பாடமும், எழுத்தும், மணிபநது முதலிய) கீதத்தில் வகுத்த கட்டளை இருபத்தெட்டும் சரளை முதலிய கட்டளை முப்பத்தைந்தும், நன்றாகப் பொருந்திப் பாவரதி மூன்று கலப்பீறாக வுண்டாக்கப்படும் கூத்த மார்க்கம் என்று சொல்லப்பட்ட இந்தக் கூத்தைக் கற்கும்போது, பாண்டியன் தன்னுடம்பில் மிகவும் வருத்தத்தையடைந்து "இந்த வருத்தம் நான்கு வேதங்களாலும் தெளியலாகாத பொருளாய் ஞானமாய் வெள்ளியம்பலத்தி லாடுகின்ற சோமசுந்தரக் கடவுளுக்கு முண்டல்லாவா" வென்று தன்னினைவிலே கொண்டு "பிரமனும் விஷ்ணுவுங் காணக்கூடாத பாதமொன்றே நெடுங்காலமாய் வருந்த நிற்கின்றது".

"ஐயோ இப்படி வருத்தஞ் செய்வதாகிய இந்தக் கூத்தை நான் வருத்தித் தெரிந்தும் நான் கண்டிருக்கலாவதோ". இதுவோ தருமமென்று மனது நொந்து பிறவிக் கடலைக் கடக்க வெண்ணினவர்கள் வந்து தெரிசிக்க ஆடுகின்ற ஆடலை நானெப்படித் தடுக்கலாகும். தடுப்பது தகாது. அப்படித் தடாவிட்டால் பாதம் வருந்து மல்லவோ.

ஆனால் இந்த வருத்தம் போக இப்படிச் செய்தால் நன்றென்று துணிந்து எழுந்துபோய்ச் சிவனிராத்திரியில்

சோமசுந்தரக் கடவுளுக்கு அளவிறந்த பூசைகள் நான்கு சாமமுஞ் செய்து திருவடிகளைத் துதித்துப் பின்பு வெள்ளியம்பலத்துளாடுகின்ற சோதியின் மெஞ்ஞானக் கூத்தைக் கண்டு மனமகிழ்ந்து வணங்கி ஆனந்தக் கண்ணீரொழுகக் கைகளைத் தலைமேற் குவித்து நின்று "எம்பெருமானே! தேவரீர் ஊன்றினகாலைத் தூக்கித் தூக்கின காலை ஊன்றி இன்று நான் தெரிசிக்க மாறியாடி என் வருத்த மெல்லாம் போகும்படிச் செய்ய வேண்டும்.

இப்படி நீர் செய்யாதிருந்தால் இந்தச் சுரிகைக் கத்திமேல் விழுந்து இறந்துபோவே னென்று கத்தியை நட்டு அதில் விழுந்து சாவத் தொடங்குமுன்னே இடக்காலை ஊன்றி வலக்காலைத் தூக்கி அந்த நிருமலக்கடவுள் மாறியாட அதைப் பாண்டியன் கண்டு சேவித்துத் தன் கவலைகளெல்லாந் தீர்ந்து பரமானந்தக் கடலின் மூழ்கி அப்படித் தேனில் மூழ்கின வண்டு போல சச்சிதானந்தக் கடலில் மூழ்கியெழுந்து பின்னும் திரிகரணங்களுமொருமித்து அன்பு வடிவாய் நின்று

பெரியாய் சரணஞ் சிறியாய் சரணங்
கரியா கியவங் கணனே சரணம்
அரியா யெளியா யடிமா றிநடம்
புரிவாய் சரணம் புனிதா சரணம்

நதியா டியசெஞ் சடையாய் நகைவெண்
மதியாய் மதியா தவர்தம் மதியிற்
பதியாய் பதினெண் கணமும் பரவுந்
துதியாய் சரணஞ் சுடரே சரணம்

பழையாய் புதியாய் சரணம் பணிலக்
குழையாய் சரணங் கொடுவெண் மழுவாள்
உழையாய் சரணம் முருகா தவர்பால்
விழையாய் சரணம் விகிர்தா சரணம்.

இருளாய் வெளியாய் சரணம் மெனையும்
பொருளா கநினைந் துபுரந் தரன்மால்
தெருளா தநடந் தெரிவித் தெனையாள்
அருளாய் சரணம் மழகா சரணம்.

அயனத் தனெனப் படுமா டரவச்
சயனத் தவனைத் துருதத் துவநால்
வயனத் தவவா னவர்வா னவசேல்
நயனத் தவணா யகனே சரணம்.

கதவெங் கரியின் னுரியாய் சரணம்
முதலந் தமிலா முதலே சரனென்
றதிர்பைங் கழனூ புரவண் டலரும்
பதபங் கயமுன் புபணிந் தரசன்.

இவ்விதமாகத் துதித்துப் பெருமானுடைய திருவடிகளில் விழுந்து சேவித்தெழுந்து நின்று "எம்பெருமானே! இப்படியே எக்காலமும் இந்தத் திருநடனத்தை எல்லோருங் கண்டு தெரிசிக்க வெள்ளியம்பலத்திலே நின்றருள அடியேன் வேண்டுகின்ற வரம் அருளவேண்டு" மென்று வணங்கினான்.

அப்படியே அன்று முதல் இன்றளவும் கால்மாறினபடியே கடவுள் நின்றருளினார்.

மாறியாடின படலம் முற்றிற்று

*குறிப்பு: இப்படலம் இரண்டு பத்திகளாக அச்சிடப்பட்டுள்ளது. கால்புள்ளி, அரைப்புள்ளி, முற்றுப்புள்ளிகள் இல்லாமல் சொற்கள் கோர்வையாகவும் உள்ளன. அச்சுப் பிழை இல்லாமல் காணப்படுவது சிறப்பு. கால்மாறி யாடின அழகான படம் உளது. (அறுபத்து நான்கு படலங்களுக்குமே அழகான படங்கள் இந்தப் பதிப்பில் உள்ளன).*

...

உரைநடை நூல்: 2 அறிமுகம்

உ

கணபதி துணை

பரஞ்சோதி முனிவர்

அருளிச் செய்த

மதுரை யறுபத்து நான்கு

# திருவிளையாடற் புராண வசனச் சுருக்கம்

திருமயிலை

வி. சுந்தர முதலியாரால்

தமது சென்னை

விக்டோரியா ஜுபிலி பிரசில்

பதிப்பிக்கப்பட்டது

முதற் பதிப்பு

1893 வருஷம்

இதன் விலை அணா ௧0.

...

அளவு: 9 x 13 செ.மீ

பக்கங்கள் : 310

ஆண்டு 1893

## முகவுரை

அகண்ட பரிபூரண சச்சிதானந்த சொரூபனாகிய சிவபெருமான் தனது சரண கமலங்களில் மெய்யன்பு பூண்ட அடியார் பொருட்டு அருமைக் கருணைத் திருமேனிதாங்கி வெளிப்பட்டு அநுக்கிரகித்த திவ்விய க்ஷேத்திரமாகிய மதுரைத் திருவிளையாடற் புராணத்தை வசனச் சுருக்கமாக, யான் முன்னர் நடாத்திவந்த, "சென்னை இந்துஜனபூஷணி" என்னும் வாராந்தரத் தமிழப் பத்திரிகையில் ம-ள-ள-ழ் ஸ்ரீ குன்றத்தூர், மதுரகவி மாணிக்க முதலியார் அவர்கள் எழுதி வந்தனர். அதில் அடங்கிய சாராம்சமான சரித்திரங்களை மாத்திரம் சங்கிரகித்துக் கூறியிருத்தலால், பலரும் அதிசுலபமாய் வாசித்து விஷயங்களைக் கரதலாமலகம் போல் நன்கு உணர்த்தற் பொருட்டு, சிறு புத்தக ரூபமாய் வெளியிடும்படி எனது நண்பர்களிற் சிலர் விரும்பிய வண்ணம், ஷெயாரால், பின்னர், சுருக்கியெழுதித்தந்த நாடு, நகரம், மூர்த்தி, தல, தீர்த்தம் விசேடங்களையும் சேர்த்து, மூன்று திருவுருவப் படங்களுடன் நிரந்தரம் கையாளத் தக்க சிறு பாக்கட் புத்தகமாக அச்சிட்டு முடித்தனன்.

விஜய வருஷம்
அற்பிசி மாதம்

திருமயிலை
வி. சுந்தர முதலியார்.

## திருவிளையாடற்
### புராண அட்டவணை


| படலப் பெயர் | பக்க எண் |
|---|---|
| திருவிளையாடலருச்சனையகவல் | 1 |
| ஷே தோத்திரச் செய்யுள் | 5 |
| திருநாட்டுப் படலம் | 8 |
| திருநகரப் படலம் | 12 |
| திக்கைலாயப் புகழ்ச்சி | 16 |
| புராண வரலாறு | 17 |
| தல விசேடம் | 20 |
| தீர்த்த விசேடம் | 24 |
| மூர்த்தி விசேடம் | 28 |
| ... | |
| இந்திரன் பழிதீர்த்த படலம் | 32 |
| வெள்ளையானைச் சாபந்தீர்த்த படலம் | 40 |
| திருநகரங்கண்ட படலம் | 45 |
| தடாதகைப் பிராட்டியார் திருவவதாரப் படலம் | 49 |
| தடாதகைப் பிராட்டியார் திருமணப் படலம் | 54 |
| வெள்ளியம்பலத் திருக்கூத்தாடிய படலம் | 61 |
| குண்டோதரனுக்கு அன்னமிட்ட படலம் | 64 |
| குண்டோதரனுக்கு அன்னக்குழியும் வையையு மழைத்த படலம் | 67 |
| எழுகடலழைத்த படலம் | 69 |
| மலயத்துவசனையழைத்த படலம் | 71 |
| உக்கிர பாண்டியன் திருவவதாரப் படலம் | 74 |
| உக்கிர குமாரனுக்கு வேல், வளை, செண்டு கொடுத்த படலம் | 76 |
| கடல் சுவறவேல் விட்ட படலம் | 80 |
| இந்திரன் முடிமேல் வளை யெறிந்த படலம் | 82 |
| மேருவைச் செண்டாலடித்த படலம் | 85 |
| வேதத்துக்குப் பொருளருளிச் செய்த படலம் | 89 |

| | |
|---|---|
| மாணிக்கம் விற்ற படலம் | 91 |
| வருணன் விட்ட கடலைவற்றச் செய்த படலம் | 99 |
| நான்மாடக்கூடலான படலம் | 102 |
| எல்லாம்வல்ல சித்தரான படலம் | 105 |
| கல்லானைக்குக் கரும்பருத்திய படலம் | 108 |
| யானையெய்த படலம் | 111 |
| விருத்தகுமார பாலரான படலம் | 116 |
| மாறியாடின படலம் | 120 |
| பழியஞ்சின படலம் | 123 |
| மாபாதகம் தீர்த்த படலம் | 129 |
| அங்கம் வெட்டின படலம் | 133 |
| நாகமெய்த படலம் | 137 |
| மாயப் பசுவதைத்த படலம் | 140 |
| மெய்க்காட்டிட்ட படலம் | 143 |
| உலவாக்கிழி யருளின படலம் | 148 |
| வளையல்விற்ற படலம் | 151 |
| அட்டம்மாசித்தி யுபதேசித்த படலம் | 153 |
| விடையிலச்சினையிட்ட படலம் | 157 |
| தண்ணீர்ப்பந்தல் வைத்த படலம் | 160 |
| இரசவாதஞ்செய்த படலம் | 163 |
| சோழனை மடுவில் வீட்டிய படலம் | 167 |
| உலவாக்கோட்டையருளிய படலம் | 170 |
| மாமனாகவந்து வழக்குரைத்த படலம் | 172 |
| வரகுணனுக்குச் சிவலோகங்காட்டிய படலம் | 177 |
| விறகுவிற்ற படலம் | 184 |
| திருமுகங் கொடுத்த படலம் | 189 |
| பலகையிட்ட படலம் | 192 |
| இசைவாது வென்ற படலம் | 194 |
| பன்றிக்குட்டிகளுக்கு முலைகொடுத்த படலம் | 199 |
| பன்றிக்குட்டிகளை மந்திரிகளாக்கிய படலம் | 203 |
| கரிக்குருவிக் குபதேசஞ் செய்த படலம் | 206 |
| நாரைக்கு முத்திகொடுத்த படலம் | 209 |
| திருவாலவாயான படலம் | 211 |
| சுந்தரப் பலகை தந்த படலம் | 214 |

| | |
|---|---|
| சங்கப்பலகை தந்த படலம் | 217 |
| தருமிக்குப் பொற்கிழியளித்த படலம் | 222 |
| கீரனைக் கரையேற்றிய படலம் | 226 |
| கீரனுக்கிலக்கணமுபதேசித்த படலம் | 229 |
| சங்கத்தார் கலகந்தீர்த்த படலம் | 232 |
| இடைக்காடன் பிணக்குத் தீர்த்த படலம் | 235 |
| வலைவீசின படலம் | 240 |
| வாதவூரடிகளுக்குபதேசித்த படலம் | 245 |
| நரிபரியாக்கிய படலம் | 254 |
| பரிநரியாக்கிய படலம் | 261 |
| மண்சுமந்த படலம் | 265 |
| பாண்டியன் சுரந்தீர்த்த படலம் | 276 |
| சமணரைக் கழுவேற்றிய படலம் | 284 |
| வன்னி, கிணறு, இலிங்கமழைத்த படலம் | 294 |
| அருச்சனைப் படலம் | 300 |


திருச்சிற்றம்பலம்

...

உ

சிவமயம்

# மதுரை திருவிளையாடல்
# அட்டோத்தரசத நாமாவளி
## அருச்சனை அகவல்

பொன்னகர்க் கிறைபழி போக்கிய வாநம
அன்னவன் கரிப்பழி யைத்தவிர்த் தாய்நம
கடம்பா டவிநகர் கண்டதே வேநம
உடம்பார் தடாதகை யுதிக்கச்செய் தாய்நம
அங்கயற் கண்ணியை யவண்மணந் தாய்நம
அங்கிர சதச்சபை யாடிய வாநம
குண்டோ தரற்கனங் கொடுத்தாண் டாய்நம
குண்டோ தரநதி கூவித்தந் தாய்நம
அலைகட லேழையு மழைத்திட் டாய்நம
மலையத் துவசனை வருவித் தாய்நம
உக்கிர குமரனை யுதிப்பித் தாய்நம
செக்கதிர் வேல்வளை செண்டளித் தாய்நம
வேல்கடல் சுவற்றிட விடுவித் தாய்நம
கோல்வளை யரிமுடி குலைவித் தாய்நம
பொன்வரை செண்டாற் புடைப்பித் தாய்நம
புன்மைதீர் வேதப் பொருளுரைத் தாய்நம
குருமன் மணிமுடி குயிற்றவிற் றாய்நம
வருணன் விடுகடல் வற்றுவித் தாய்நம
கூடுநான் மாடக் கூடல்கண் டாய்நம
தேடுமெல் லாம்வல்ல சித்தனா னாய்நம
கல்லானை தின்னக் கரும்பளித் தாய்நம
வல்லானை யெய்தமண் மாய்வித் தாய்நம
விருத்த குமரனாய் மிளிர்பால னேநம
நிருத்த மாறி நிகழ்த்திய வாநம
அந்தண னில்பழிக் கஞ்சிய வாநம
அந்தணன் மாபா தகமடர்த் தாய்நம

சித்தனை தங்கஞ் சிதைத்திட் டாய்நம
பைத்தலை நாகம் படவெய் தாய்நம
மாயப் பசுவை வதைத்திட் டாய்நம
ஏய மெய்க்காட் டிட்டதே வேநம
உலவாக் கிழியொன் றுதவிய வாநம
பலவாம் வளையல் பகர்ந்துவிற் றாய்நம
அட்டமா சித்தி யறிவித்த வாநம
சிட்டமாம் விடையிலச் சினையிட்ட வாநம
பஞ்சவன் பாற்றணீர்ப் பந்தர்வைத் தாய்நம
வஞ்சமி லிரச வாதஞ்செய் தாய்நம
சோழனை மடுவிற் றொலைவித் தாய்நம
கூழுறு முலவாக் கோட்டைதந் தாய்நம
அவையிடை வழக்குரை யறைமாம னேநம
சிவபதி வரகுணன் றேறச்செய் தாய்நம
இந்தன முடிமிசை யேற்றுவிற் றாய்நம
பந்தமி றிருமுகம் பத்தர்க்கீந் தாய்நம
பாணபத் தர்க்கோர் பலகையிட் டாய்நம
மாணவர் மனையிசை வாதுயர்த் தாய்நம
பன்றிக் குருளைகள் பாலுணா யேநம
பன்றிகளை மந்திரிகளாக்கினை யேநம
கரிக்குரு விக்குமெய் காட்டிய வாநம
தெரித்த நாரைக்குச் சிவமளித் தாய்நம
அரவினா லாலவா யாக்கிய வாநம
பிரமைகொள் சுந்தரப் பேரம்பெய் தாய்நம
பருமைச் சங்கப் பலகைதந் தாய்நம
தருமிக் குக்கிழி தந்திட் டாய்நம
கீரனைக் கரைமேற் கிட்டுவித் தாய்நம
கீரனுக் கிலக்கணங் கிளத்திய வாநம
கடைச்சங் கக்கல கந்தவிர்த் தாய்நம
இடைக்கா டன்பிணக் கிகலொழித் தாய்நம
மீதலை மேல்வலை வீசிய வாநம
வாதவூ ரர்க்குமெய் வழுத்திய வாநம
நரிபரி யாக்கிய நாயக னேநம
பரிநரி யாப்பின் பண்ணிய வாநம

பிட்டுக்கு மண்சுமை பெட்டேற் றாய்நம
சுட்டுக்க பூழியன் சுரந்தீர்த் தாய்நம
கன்னிகர் சமணரைக் கழுவேற்றி னாய்நம
வன்னி கூவல்குறி வரவழைத் தாய்நம
மூர்த்திதீர்த் தந்தல மூன்றுமுள் ளாய்நம
சீர்த்தி மலிந்த சிவநக ரோய்நம
மாவண் கடம்ப வனமுடை யாய்நம
சீவன் முத்தி சேர்புரத் தாய்நம
கன்னி புரத்துறை காமாரி யேநம
அன்னநண் வயற்றிரு வாலவா யாய்நம
மகிழ்கொள் மதுரை மாநக ராய்நம
திகழ்பூ லோக சிவலோக னேநம
சமட்டி விச்சைத் தனிநக ரோய்நம
எமக்கண் கூட லெழினக ரோய்நம
துவாத சாந்தத் தொல்பதி யோய்நம
தவாத வாதிதீர்த் தத்தாதி யேநம
பரம தீர்த்தப் பசுபதி யேநம
சிரமநீக் குஞ்சிவ தீர்த்தத் தாய்நம
உயர்சிவ கங்கை யுடையவ னேநம
தீர்த்த வுத்தமத் திப்பிய னேநம
சீர்த்திடு தரும தீர்த்தத் தாய்நம
அருத்த தீர்த்தத் தறவோ னேநம
திருத்து காம தீர்த்தத் தாய்நம
பொற்றா மரைத்தடப் புண்ணிய னேநம
தூயகற் பூர சுந்தர னேநம
வாயெழிற் கடம்ப வனசுந் தராநம
கல்யாண சுந்தரக் கடவுளே றேநம
தொல்யாணர்ச் சண்பக சுந்தர னேநம
அபிராம சுந்தர வைய னேநம
அபிடேக சுந்தர வபிதான னேநம
பழியஞ்சு சுந்தரப் பண்ணவ னேநம
சுழிபுன லாலவாய்ச் சுந்தர னேநம
அட்டாள சுந்தர னாகிய வாநம
மட்டார் நறுமான் மதசுந்த ராநம
தூமணி மகுட சுந்தர னேநம

சோம சுந்தரச் சோதி யேநம
சித்தி விநாயகத் தேவையீன் றாய்நம
சத்திகொள் முருகனைத் தந்ததந் தாய்நம
துய்ய மீனாட்சி சுந்தர னேநம
மெய்யருள் தெட்சணா மூர்த்தி யேநம
வெம்பும் வயிரவ மெய்பூண் டாய்நம
சம்பந்த மூர்த்தியைத் தந்தளித் தாய்நம
அந்திரு நாவுக் கரசையாண் டாய்நம
சுந்தர மூர்த்தியைச் சூழ்ந்தாண் டாய்நம
ஒண்டுய வாத வூரர்க்கொண் டாய்நம
சண்டீசர் பூசைகொள் சங்கரா நமவே!

திருச்சிற்றம்பலம்



இப்பதிப்பின் தொடக்கத்தில்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

மதுரை

## திருவிளையாடற்புராணம்

எனத் தொடங்கி, பரஞ்சோதி முனிவர் இயற்றிய விநாயர் காப்பு, வாழ்த்து, நூற்பயன், சொக்கலிங்க மூர்த்தி, அங்கயற்கண்ணம்மை, சபாபதி, தக்ஷிணாமூர்த்தி, சுப்பிர மணியர், நந்திதேவர், தண்டியடிகள், திருத்தொண்டர்கள் ஆகிய தலைப்புக்களில் பாடல்கள் உள்ளன.

அடுத்து, பாண்டித் திருநாட்டுப்படலம் முதலியன தொடங்குகின்றன. இவ்வுரை நடை நூலில் சான்றுக்கு ஒரு படலம் மட்டும் ஈண்டு தரப்பட்டுள்ளது.

### தடாதகைப் பிராட்டியார் திருமணப் படலம்.

தடாதகைப் பிராட்டியார் மனுநீதி வழுமாமல் பாண்டிய நாட்டில் அரசுபுரிந்து வருநாளில், மணப்பருவம் வந்தடுப்ப ஈன்றாளாகிய காஞ்சனமாலை கண்டு இன்னம் நமது திருமகட்கு மணப்போறு வாய்க்கவில்லையே யென்று மிகுந்த சிந்தாகுல முடையவளாய்ச் சொல்லும்போது, அது செவியுற்ற தடாதகையார்: "அன்னையே! நீ எண்ணிய காரியம் நிறைவேறுங் காலம் வரும்போது முடியும். அது பொருட்டு நீ மனம் வருந்தல் வேண்டாம். நான் உலகெங்கும் போய்த் திக்கு விஜயஞ்செய்து ஜயபதாகை நாட்டி மீண்டுவருகிறேன்" என்று விரைவிலெழுந்து பிரயாணப் பட்டனள்.

அப்போது, சாரதி தேர் கொண்டுவர அதன்மீதா ரோகணித்துக் கொண்டு வேந்தர், அமைச்சர் ரத கஜ துரக

பதாதிகள் தன்னைப் புடைசூழ்ந்து வர, பலவகை வாத்தியங்கள் கடல்போலொலிக்கச் சென்று, திக்குப் பாலர்களையெல்லாம் வென்று, திறை கொண்டு, கைலையை நோக்கிச் சென்றனள்.

அதனைச் சமீபித்தலும், சேனாவீரர்கள் முற்றிலுஞ் சூழ்ந்து வளைத்துக் கொண்டு ஆரவாரிக்க, அது கண்ட கைலைமலைக் காவலர்கள், நந்தியெம் பெருமானிடஞ் சென்று கூறினர். அவர் கணங்களோடும் வந்து, தேவியாரோடும் போர் புரிந்து வெல்லமாட்டாமல் கணங்களெல்லா முதுகிட்டோடக் கண்டு நாணுற்று, சிவபெருமானிடத்திலிதனைப் புகல, அவர் போர்க்ளத்தில் வந்து, கணவீரர்களைத் தோற்கடித்தது மல்லாமல், இன்னும் எவர்வந் தெதிர்த்தாலும் பின்னிடாது முனைந்து போர் செய்து வலி கவரும்படி, பெண் சிங்கம் போல் வீறி நிற்கின்ற தேவியாரைக் கண்டனர்.

இவ்வாறு தன்னை நோக்கிய சிவபெருமானைத் தடாதகையார் எதிர்நோக்கியபோது, ஒரு தனமறைந்திடலும், நாணங்கொண்டு, பண்டைய அன்பு வந்து மனத்தே குடிகொள்ள, தன் புறவடிவையே நோக்கிய வண்ணம் மண்கிளைத்துக் கொண்டு நின்றனர்.

உடனே, சுமதியென்னும் மந்திரி பிராட்டியாரை நோக்கி, "அன்னையே! இவரே நின் மணக் காதலனாமென்று மொழிந்து நிற்கையில், சிவபெருமான் தடாதகைப் பிராட்டியாரை நோக்கி, "பெண்ணே !" என்று தொடங்கி, "நீ திசாமுகங்களிற் செல்லக்குறித் தெழுந்தனையோ, அந்நாள் தொடங்கி நாமும் நம் மதுரா நகரை விட்டுன்னை விடாது பின்பற்றி வந்தோம். நாம் சோமவாரத்திலுன்னை மணஞ்செய்ய வருவோமாகலால், நீ உன்னுடைய நகர்க்கேகென" வாஞ்ஞாபித்தார்.

பின்னர், தேவியார் தேர்மேற்கொண்டு, சேனைகள் புடைசூழ்ந்து வர, மதுரா நகர்வந்து சேர்ந்தனர்.

பிறகு, மந்திரிகள் எங்கும் மணவோலை போக்கி, கலியாண முரசறைவித்து, நகரெங்கும் ஆயிரம் பணமுடிகளையுடைய ஆதிசேடனாலும் புகழவொண்ணாத பெருஞ்சிறப்போ டலங்கரித்து,

மணச்செய்தி கேட்டடைந்த பல தேசத்தரசர்களுக்கும் விடுதி தந்து, சிவபெருமானுடைய வரவுக்கெதிர்பார்த்திருந்தனர்.

அங்கே, வெள்ளியங்கிரியில், பரமசிவனாஞ்ஞையால், நந்தியெம் பெருமானனுப்ப, சங்கு கன்னன் முதலிய கணத் தலைவர்கள், பிரம விஷ்ணுக்கள் முதலிய தேவர்கள் பதிகளிற் சென்று, சிவபெருமானுடைய திருமணச் செய்தியை யறிவிக்க, மாலயன் முதலிய தேவர்களும் பூத கணங்களும், இயக்கர், கின்னரர் விச்சாதர்களும், முனிவர்களும், மற்றுமுள்ளோர் யாவரும் தத்தமனைவியர்களோடும் கயிலை வந்து சேர்ந்து சிவபெருமானைப் பணிய, அவர்களைக் கடைக்கணித்து, குபேரனை வருவித்து கலியாண கோலத்துக் கேற்ப சர்வாலங்காரமுஞ் செய்வித்துக் கொண்டு இடபவாகனாரூடரா யெழுந்தருளி, தேவர்கள் அந்தர துந்துபி முழங்கிப் பூமாரி பொழிய, மங்கல வாத்தியங்கள் கல்லென் றொலிக்க, அரம்பை மாதர்கள் நடனஞ் செய்ய, பானுகம்பன ஆயிர முகங்களால் சங்கமூத, வாணன் குடமுடக்க முனிவர்களுந் தொண்டர்குழாங்களும் அஞ்சலியஸ்தராய், கனிந்த வன்போடும், ஹர, ஹர வென்று துதி செய்ய, இந்திரன் காளாஞ்சி யேந்த, ஈசானன் அடப்பை தாங்க, வாயு பகவான் ஆலவட்டம் பணிமாற, அக்கினி பகவான் தூபமேந்த, வருணன் பூததட்டு தாங்க, நிருதி கண்ணாடி கொண் டெதிர்வர, குபேரன் நிதி வழங்க, ஆதி சேடன் மணிவிளக்கெடுக்க, வேதங்கள் திருவடிகளை முடிகளாற் சுமந்து பின் செல்ல, கங்கை காவிரி முதலிய நதிகள் பெண்ணுருவங்கொண்டு கவரிகளிரட்ட குண்டோதரன் குடைபிடித்து வர, ஆலால சுந்தரன் திருநீறும் பூமாலையும் கொண்டுவர, சதுர் முகனுந் திருமாலும் இருபாலு நின்றேத்திவர மதுராநகர் வந்தடைந்தனர்.

அப்போது, தேவதேவன் வந்தான், மால் விடையான் வந்தான், மும்மூர்த்தி முதல்வன் வந்தான், முக்கட் பெருமான் வந்தான் என்று பொற்சின்னங்களூத, நகரில் பிரவேசித்து, வீதி மார்க்கமாய் வருகையில், மந்திரிகளும் பலதேயத்தரசர்களும், ஏனைய புருஷர்களும், மாதர்களு மாங்காங்கு திரள் திரளாகக் கூடி சிவபெருமானுடைய திருமேனிப் பொலிவை நேத்திரோச்சவமாகக் கண்டு ஆனந்தித்துப் பலவாறு கொண்டாட, அரண்மனை குறுகிய

மாத்திரத்தில், அந்தணமாதர் ஆலத்தி சுற்றி, குடவிளக்கு முதலிய அஷ்ட மங்கலங்கள் செய்ய, வேதியர் ஆசி புகல, இரு புறத்திலும் பிரம விஷ்ணுக்கள் கைதரப் பற்றிக்கொண்டு, பாதுகை திருவடிகளிற் சூடி தேவர்கள் மந்தார மாரி பொழிய, உள்ளே புகுந்தனர்.

அக்காலையில் மங்கல ஸ்திரிகள் கரகநீர் வார்க்க, மாமியாராகிய காஞ்சனமாலை, சிவபெருமானுடைய திருப்பாதங்களை விளக்கி, அந்நீரைச் சிரமேற்றெளித்துட்கொண்டு, வெண்பட்டால் திருவடிகளைத் துடைத்து, மலர்கள் தூவிக் கும்பிட்டு நின்று, "அடியேன் அருமையாகப் பெற்ற இப் பெண்ணை மணம்புரிந்து, இந்நகர் கைக்கொண்டு ஆள்க" வென்று மொழிய, அதற்குடன்பட்டுச் சிவபெருமான் குறுநகை கொண்டிருந்தனர்.

பின்னர், வேதங்களார்ப்ப சிங்காதனத் தெழுந்தருளிச் சூழநின்ற பிரம விஷ்ணு முதலிய தேவர்ளை அவரவர்கட் கிட்ட ஆசனங்களிலிருக்கக் கட்டளையிட்டு, கலியாணத்துக்கு நியமித்த முகூர்த்தகாலம் வருமளவும் அரம்பை மாதர்கள் நடனத்தைக் கடைக்கணித்திருந்தனர்.

பின்னர், தடாதகைப் பிராட்டியாரை ஸ்நானஞ் செய்வித்து, திவ்விய வஸ்திராபரணாலங்காரஞ் செய்து, கலைமகளும், லக்ஷுமியு மிருபாரிசத்திலுங் கைகணீட்டத் தனது திருக்கரங்களாற் பற்றிக் கொண்டு, தூரியம் சங்க முதலிய வாத்தியங்கள் கோஷிக்க, மலர்மாரி பொழிய, மங்கலப் பெண்கள் வாழ்த்து கூற, இந்திராணி அடப்பைதாங்க, திலோத்தமை கண்ணாடியேந்திவர, துர்க்கை பொற்பிரம்பு தாங்கி ஜன நெருக்கையொதுக்கிவர, அரம்பை காளாஞ்சி கொண்டுவர, ஊர்வசி ஆலவட்டம் வீச, மேனகை பூத்தட்டேந்திவர, மாதர்கள் சோபன கீதம் பாட, மெல்லென நடந்து வந்து சிவபெருமானருகணைந்து, தலைவணங்கிக் கொண்டு இருந்தனர்.

அப்போது, திருமால் கரகநீர் கொண்டு பரமசிவத்தின் திருவடிகளை விளக்கி, மலர் கொண்டு சாத்தி, தூபதீபங்காட்டி,

அன்போடருச்சித்து, பாததீர்த்தத்தை திருமால் முதலிய சகஸ்த தேவர்களும், முனிவர்களும், தொண்டர்களும் உள்ளும் புறம்புங் கொண்டு கைகூப்பி நிற்ப, திருமால் தடாதகைப் பிராட்டியார் திருக்கரங்களைப் பற்றிச் சிவபெருமான் கையிற் கொடுத்து, மந்திர மோதி, தாரைவார்த்துக் கொடுத்தனர்.

பிறகு, காமதேனுவின் பாலும், கற்பகக் கனிகளும், நெய் தேன் முதலியனவுங் கலந்து அமுது செய்யச் சொல்லச் சிவபெருமான் அதைக் கையாற்றொட்டு அமுது செய்ததுபோ லகமகிழ்ந்து, இருடி பத்தினிகளும், பூமகளும், நாமகளும், மங்கலம் பாட, சதுமகன்தன் புதல்வரோடொருங்கிருந்து, ஓமம் வளர்க்க, நான்மறைகளார்ப்ப, மங்கல வாத்தியங்கள் கோஷிக்க, பிரமன் வேதவிதிப்படி சடங்குகளியற்ற, சிவபெருமான் தடாதகைப் பிராட்டியாரைப் பாணிக் கிரகணஞ்செய்து, பொரி வாங்கிச் செந்தீயிலிட்டு, வேதியர்க்குத் தானங்கொடுத்து, எரிவலம் வந்து பிராட்டியார் பாதத்தைப் பற்றி அம்மிமேல் வைத்து, அருந்ததியெங்கென்றுரைப்ப, அவள் கைகூப்பி நேர்வர, அருட்கண் சாத்தி, வேள்வியை நிறைவேற்றி பிராட்டியோடு மணவறை புகுந்தனர்.

பின்னர், மணவறையினின்றும் வதுவை மண்டபம் வந்து, சிங்காசனத்திலிருந்து, பிரமன் முதலிய தேவர்கட்கும் தத்தம் பதிக்குச் செல்ல விடை நல்கி, சோமசுந்தர பாண்டியனென்னும் திருநாமம் பூண்டு, தாம் கொண்ட கோலத்துக் கேற்ப, சங்கு கன்னன் முதலிய கணவீரர்களைப் பரிஜனங்களாகக் கொண்டு அரசு செலுத்தி வந்தனர்.

இவ்வாறு அரசு புரிகையில், உலகங்காக்குமரசர்கள் சிவனைப் பூசை செய்ய வேண்டியது வேதவிதியென்று, தாம் திருவாய் மலர்ந்துள்ளதை யெல்லோருங் கடைப்பிடித்தொழுகும் வண்ணம், தாமும் அந்நகரில் நடுவூரென்றோர் பட்டணந் தாபித்து, ஆகம விதிப்படி கோயில் ஏற்படுத்திச் சிவலிங்கப் பிரதிட்டை செய்து, இம்மையே செல்வந்தரும் பெருமானெனப் பெயர் தந்து பூசித்து, கடம்பவனத்துறை சிவபெருமானை முப்போதுஞ் சென்று வணங்கி,

உலக முழுதுஞ் செங்கோ னடாத்தி, மனிதருக் கரசாகியும், மடவார்க்கு மன்மதனாகியும், பூதேவிக்குத் திருமாலாகியும், நித்தியா நித்திய வஸ்துவுணர்ந்து, இகபரத்தாசை நீத்து, அகந்தெளிந்த மெய்ஞ்ஞானிகட்குச் சச்சிதானந்தப் பரம் பொருளாகியும் வீற்றிருந்தனர்.

திருச்சிற்றம்பலம்.

குறிப்பு:
இவ்வுரைநடையில்:
பரஞ்சோதி முனிவரின் பாடல்
"சுற்றுநான் மறைகளார்ப்பத் தூரியம் சங்கமேங்க
கற்றநான் முகத்தோன் வேள்விச் சடங்குகள் கரைந்தவாற்றால்
முற்ற மங்கல நாண் சாத்தி முழுதுலகீன்றாள் செங்கை
பற்றினன் பற்றிலார்க்கே வீடருள் பரமயோகி! "

எனக் கூறுகிறது.

மங்கலநாண் சாத்தியது விடுபட்டதுபோலும்.

## "திருவிளையாடற்புராண படல வைப்பு முறைகள்"

| பரஞ்சோதி திருவிளையாடல் | பெரும்பற்றப்புலியூர் நம்பி | கடம்பவன புராணம் | பயகரமாலை |
|---|---|---|---|
| 1. இந்திரன் பழிதீர்த்தபடலம் | இந்திரன் பழிதீர்த்த திருவிளையாடல் | இந்திரன் பழிதீர்த்த தி.வி | இந்திரன் பழிதீர்த்த தி.வி. |
| 2. வெள்ளையானைசாபந்தீர்த்த படலம் | வெள்ளானைக்குச் சாபந்தீர்த்த தி.வி. | வெள்ளானைக்குச் சாபந் தீர்த்த திருவிளையாடல் | வெள்ளானைக்குச் சாபந் தீர்த்த திருவிளையாடல் |
| 3. திருநகரங்கண்ட படலம் | தடாதகையாரவதரித்த தி.வி | தடாதகையார் அவதரித்த தி.வி. | தடாதகையார் அவதரித்த தி.வி |
| 4. தடாதகைப் பிராட்டியார் திருவவதாரப்படலம் | மணஞ்செய்த திருவிளையாடல் | மணஞ்செய்த தி.வி.. | மணஞ்செய்த தி.வி. |
| 5. திருமணப்படலம் | பதஞ்சலிக்கு நடஞ்செய்த தி.வி. | பதஞ்சலிக்கு நடஞ் செய்த தி.வி. | பதஞ்சலிக்கு நடஞ்செய்த தி.வி |
| 6. வெள்ளியம்பலத் திருக்கூத்தாடிய படலம் | பூதமுண்ட தி.வி | முதமுண்ட தி.வி | பதஞ்சலிக்கு நடஞ்செய்த தி.வி. |
| 7. குண்டோதரனுக்கு அன்னமிட்ட படலம் | ஆறழைத்த திருவிளையாடல் | ஆறழைத்த தி.வி. | பூதமூண்ட தி.வி.<br>ஆறழைத்த தி.வி; |
| 8. அன்னக்குழியும் வையுமழைத்த படலம் | கடலழைத்த தி.வி. | கடலழைத்த தி.வி. | கடலழைத்த தி.வி. |
| 9. எழுகடலழைத்த படலம் | மலயத்துவசனையழைத்த தி.வி. | மலயத்துவசனையழைத்த தி.வி. | மலயத்துவசனையழைத்த தி.வி. |
| 10. மலையத்துவனையழைத்த படலம் | உக்கிரன் பிறந்த தி.வி. | உக்கிரன் பிறந்த தி.வி. | உக்கிரன் பிறந்த தி.வி. |
| 11. உக்கிர பாண்டியன் திருவவதாரப் படலம் | வளைவேல் செண்டுகொடுத்த தி.வி. | வளைமேல் செண்டு கொடுத்த தி.வி. | வளைமேல் செண்டு கொடுத்த தி.வி. |
| 12. உக்கிரபாண்டியனுக்கு வேல்வளை செண்டு கொடுத்த படலம் | நான்மாடக்கூடலான தி.வி. | நான்மாடக் கூடலான தி.வி. | நான்மாடக்கூடலான தி.வி. |

| | | | |
|---|---|---|---|
| 13. கடல்சுவறவேல்விட்ட படலம் | சித்தரான திருவிளையாடல் | சித்தரான திருவிளையாடல் | சித்தரான திருவிளையாடல் |
| 14. இந்திரன் முடிமேல் வளையெறிந்த படலம் | கல்லானை கரும்பு வாங்கின தி.வி. | கல்லானை கரும்புவாங்கின தி.வி. | கல்லானை கரும்பு வாங்கின தி.வி. |
| 15. மேருவைச் செண்டாலடித்த படலம் | சங்கப்பலகை கொடுத்த தி.வி. | சங்கப்பலகை கொடுத்த தி.வி. | சங்கப்பலகை கொடுத்த தி.வி. |
| 16. வேதத்துக்குப் பொருளளித்த படலம் | கிழியறுத்த தி.வி. | கிழியறுத்த தி.வி. | கிழியறுத்த தி.வி. |
| 17. மாணிக்கம் விற்ற படலம் | நக்கீரனைக் கரையேற்றின தி.வி. | நக்கீரனைக் கரையேற்றின தி.வி. | நக்கீரனை கரையேற்றின தி.வி. |
| 18. வருணன் விட்ட கடலை வற்றச் செய்த படலம் | குருமுனிக்குத் தமிழுரைத்த தி.வி. | குறுமுனிக்குத் தமிழுரைத்த தி.வி. | குறுமுனிக்குத் தமிழுரைத்த தி.வி. |
| 19. நான்மாடக் கூடலான படலம் | ஊமைதமிழறிந்த தி.வி. | ஊமைதமிழறிந்த தி;வி. | ஊமைதமிழறிந்த தி.வி; |
| 20. எல்லாம்வல்ல சித்தர் தி.வி. படலம் | இடைக்காடன் பின்போன தி.வி. | இடைக்காடன் பின்போன தி.வி. | இடைக்காடன் பின்போன தி.வி |
| 21. கல்லானைக்குக் கரும்பருத்திய படலம் | கடல்சுவறவேலெறிந்த தி.வி. | கடல்சுவறவேலெறிந்த தி.வி. | கடல்சுவறவேலெறிந்த தி.வி. |
| 22. யானையெய்த படலம் | வலைவீசின திருவிளையாடல் | வலைவீசின திருவிளையாடல் | வலைவீசின தி.வி. |
| 23. விருத்தகமாரபாலரான படலம் | வளையல்விற்ற தி.வி. | வளையல்விற்ற தி.வி. | வளையல்விற்ற தி.வி. |
| 24. மாறியாடின படலம் | இலச்சினையிட்ட தி.வி. | இலச்சினையிட்ட தி.வி. | இலச்சினையிட்ட தி.வி. |
| 25. பழியஞ்சின படலம் | மாணிக்கம் விற்ற தி.வி. | மாணிக்கம் விற்ற தி.வி. | மாணிக்கம்விற்ற தி.வி. |
| 26. மாபாதகந்தீர்த்த படலம் | ஆனையெய்த தி.வி. | ஆனையெய்த தி.வி. | ஆனையெய்த தி.வி. |
| 27. அங்கம் வெட்டின படலம் | ஞானோபதேசஞ் செய்த தி.வி. | ஞானோபதேசஞ்செய்த தி.வி. | ஞானேபதேசஞ்செய்த தி.வி. |
| 28. நாகமெய்த படலம் | நரிகுதிரையான தி.வி. | நரிகுதிரையான தி.வி. | நரிகுதிரையான தி.வி. |
| 29. மாயப்பசுவதைத்த படலம் | குதிரைநரியான தி.வி. | குதிரைநரியான தி.வி. | குதிரை நரியான தி.வி. |
| 30. மெய்க்காட்டிட்ட படலம் | மண்சுமந்த தி.வி. | மண்சுமந்த தி.வி. | மண்சுமந்த தி.வி. |
| 31. உலவாக்கிழியருளிய படலம் | விருத்தகுமாரபாலரான தி.வி. | விருத்த குமாரபாலரான தி.வி. | விருத்தகுமாரபாலரான தி.வி. |
| 32. வளையல் விற்ற படலம் | மாறியாடின தி.வி. | மாறியாடின தி.வி. | மாறியாடின தி.வி. |
| 33. அட்டமாசித்தியுபதேசித்த படலம் | பழியஞ்சின தி.வி. | பழியஞ்சின தி.வி. | பழியஞ்சின தி.வி. |

| | | | |
|---|---|---|---|
| 34. விடையிலச்சினையிட்ட படலம் | மகாபாதகஞ்தீர்த்த தி.வி. | மகாபாதகஞ் தீர்த்த தி.வி. | மகாபாதகந்தீர்த்த தி.வி. |
| 35. தண்ணீர்ப்பந்தல் வைத்த படலம் | அங்கம் வெட்டின தி.வி. | அங்கம் வெட்டின தி.வி. | அங்கம் வெட்டின தி.வி. |
| 36. இரசவாதஞ்செய்த படலம் | மதுரையான தி.வி. | மதுரையான தி.வி. | மதுரையான தி.வி. |
| 37. சோழனை மடுவில்விட்ட படலம் | வெப்புத் தீர்த்த தி.வி. | வெப்புத் தீர்த்த தி.வி. | வெப்புத் தீர்த்த தி.வி. |
| 38. உலவாக்கோட்டை யருளிய படலம் | கழுவேறின தி.வி. | கழுவேறின தி.வி. | கழுவேறின தி.வி. |
| 39. மாமனாகவந்து வழக்குரைத்த படலம் | மெய்க்காட்டிட்ட தி.வி. | மெய்க்காட்டிட்ட தி.வி. | மெய்க்காட்டிட்ட தி.வி. |
| 40. வரகுணனுக்குச் சிவலோகங் காட்டிய படலம் | உலவாக்கிழிகொடுத்த தி.வி. | உலவாக்கிழிகொடுத்த தி.வி. | உலவாக்கிழிகொடுத்த தி.வி. |
| 41. விறகுவிற்ற படலம் | மாமனாகவந்து வழக்குரைத்த தி.வி. | மாமனாகவந்து வழக்குரைத்த தி.வி. | மாமனாகவந்து வழக்குரைத்த தி.வி. |
| 42. திருமுகங்கொடுத்த படலம் | அட்டமாசித்தி பகர்ந்த தி.வி. | அட்டமாசித்தி பகர்ந்த தி.வி. | அட்டமாசித்தி பகர்ந்த தி.வி. |
| 43. பலகையிட்ட படலம் | தண்ணீர்ப்பந்தல் வைத்த தி.வி. | தண்ணீர்ப்பந்தல் வைத்த தி.வி. | தண்ணீர்ப்பந்தல் வைத்த தி.வி. |
| 44. இசைவாதுவென்ற படலம் | இந்திரன்முடிமேல் வளை யெறிந்த தி.வி. | இந்திரன் முடிமேல் வளையெறிந்த தி.வி. | இந்திரன் முடிமேல் வளையெறிந்த தி.வி. |
| 45. பன்றிக்குட்டிக்கு முலைகொடுத்த படலம் | பொன்னனையாளுக்கு அருள்புரிந்த தி.வி. | பொன்னனையாளுக்கருள் தி.வி. | பொன்னனையாளுக்கருள் புரிந்த தி.வி. |
| 46. பன்றிக்குட்டிகளை மந்திரிகளாக்கிய படலம் | சோழனைக் கொண்டாழியிற் றாழ்ந்த தி.வி. | சோழனைக்கொண்டாழியிற் றாழ்ந்த தி.வி. | சோழனைக்கொண்டாழியிற் றாழ்ந்ததி.வி. |
| 47. கரிக்குரிவிக்குபதேசஞ் செய்த படலம் | திருவாலவாயான தி.வி. | திருவாலவாயன தி.வி. | திருவாலவாயான தி.வி. |
| 48. நாரைக்கு முத்தி கொடுத்த படலம் | வரகுணனுக்குச் சிவலோகங் காட்டின தி.வி. | வரகுணனுக்குச் சிவலோகங் காட்டின தி.வி. | வரகுணனுக்குச் சிவலோகங் காட்டின தி.வி. |
| 49. திருவாலவாயான படலம் | விடைக்குறியம்பெய்த தி.வி. | விடைக்குறியம்பெய்த தி.வி. | விடைக்குறியம் பெய்த தி.வி. |

| | | | |
|---|---|---|---|
| 50. சுந்தரப்பேரம்பெய்த படலம் | உலவாக்கோட்டைவைத்த தி.வி. | உலவாக்கோட்டைவைத்த தி.வி. | உலவாக்கோட்டை வைத்த தி.வி. |
| 51. சங்கப்பலகைதந்த படலம் | மூர்த்தியார்க்கு அரசளித்த தி.வி. | மூர்த்தியார்க்கு அரசளித்த தி.வி. | மூர்த்தியார்க்கு அரசளித்த தி.வி. |
| 52. தருமிக்குப் பொற்கிழியளித்த படலம் | காரியார் நாரியார் பாப்பகுந்த தி.வி. | காரியார் நாரியார் பாப்பகுந்த தி.வி. | காரியார் நாரியார் பாப்பகுந்த தி.வி. |
| 53. கீரனைக்கரையேற்றிய படலம் | புலிமுலைபுல்வாய்க்கருளிய தி.வி. | புலிமுலைபுல்வாய்க்கருளிய தி.வி. | புலிமுலைபுல்வாய்க்கருளிய தி.வி. |
| 54. கீரனுக்கிலக்கணமுபதேசித்த படலம் | சாதாரிபாடின தி.வி. | சாதாரிபாடிய தி.வி. | சாதாரிபாடின தி.வி. |
| 55. சங்கத்தார்கலகந்தீர்த்த படலம் | திருமுகங்கொடுத்த தி.வி. | திருமுகங்கொடுத்த தி.வி. | திருமுகங்கொடுத்த தி.வி. |
| 56. இடைக்காடன் பிணக்குத் தீர்த்த படலம் | பலகையிட்ட தி.வி. | பலகையிட்ட தி.வி. | பலகையிட்ட தி.வி. |
| 57. வலைவீசின படலம் | இசைவாதுவென்ற தி.வி. | இசைவாது வென்ற தி.வி. | இசைவாதுவென்ற தி.வி. |
| 58. வாதவூரடிகளுக்கு உபதேசஞ் செய்த படலம் | பன்றிக்குட்டிகளுக்குத் தாயன தி.வி. | பன்றிக்குட்டிகளுக்கு தி.வி. | பன்றிக்குட்டிகளுக்குத் தி.வி |
| 59. நரிபரியாக்கிய படலம் | பன்றிக்குட்டிகளுக்கு அருள்புரிந்த தி.வி. | பன்றிக்குட்டிகளுக்கு அருள்புரிந்த தி.வி. | பன்றிக்குட்டிகளுக்கு அருள்புரிந்த தி.வி. |
| 60. பரிநாரியாக்கி வையை யழைத்த படலம் | கரிக்குருவிக்கு அருள்புரிந்த தி.வி. | கரிக்குருவிக்கு அரள்புரிந்த தி.வி. | கரிக்குருவிக்கு அருள்புரிந்த தி.வி. |
| 61. மண்சுமந்த படலம் | மாமேருவிற்கயல் செண்டு பொறித்த தி.வி. | மாமேருவிற்கயல் செண்டு பொறித்த தி.வி. | மாமேருவிற்கயல் செண்டு பொறித்த தி.வி. |
| 62. பாண்டியன்சுரந்தீர்த்த படலம் | சான்றழைத்த தி.வி. | சான்றழைத்த தி.வி. | சான்றழைத்த தி.வி. |
| 63. சமணரைக்கழுவேற்றிய படலம் | நாரைக்கு அருள்புரிந்த தி.வி. | நாரைக்கு அருள்புரிந்த தி.வி. | நாரைக்கு அருள்புரிந்த தி.வி. |
| 64. வன்னியுங்கிணறும் இலிங்கமு மழைத்த படலம் | வேதம் உணர்த்திய தி.வி. | வேதமுணர்த்திய தி.வி. | வேதமுணர்த்திய தி.வி. |

## தலபுராணப் பட்டியல்

| | |
|---|---|
| 1. அம்பைத் தலபுராணம் | அரிகரஐயர் |
| 2. ஆற்றூர்ப் புராணம் | மீனாட்சிசுந்தரம்பிள்ளை |
| 3. உறையூர் புராணம் | ,, |
| 4. கடம்பவன புராணம் | வீமநாத பண்டிதர் |
| 5. கண்டதேவிப் புராணம் | மீனாட்சி சுந்தரம்பிள்ளை |
| 6. கமலாலயச் சிறப்பு | மறைஞான சம்பந்த நாயனார் |
| 7. கலித்துறைப்புராணம் | ஸ்ரீகாஞ்சி நாகலிங்கய்யர் |
| 8. கன்னியாகுமரித் தலபுராணம் | ஸ்ரீ சங்கர நாவலர் |
| 9. காசி ரகசியம் | மீனாட்சிசுந்தரம்பிள்ளை |
| 10. காஞ்சிப் புராணம் | சிவஞான சுவாமிகள் |
| 11. கோயிலூர்ப்புராணம் | மீனாட்சிசுந்தரம் பிள்ளை |
| 12. கோயிற்புராணம் | உமாபதி சிவாச்சாரியார் |
| 13. கோலாசலத் தலபுராணம் | .. |
| 14. சங்கரநாராயணசுவாமி கோயிற் புராணம் | சீவலமாற பாண்டியன் |
| 15. சங்கரவிலாசம் | சிதம்பரநாதபூபதி |
| 16. சீகாளத்திப்புராணம் | கருணைப்பிரகாச சுவாமிகள் சிவப்பிரகாசர், வேலைய சுவாமிகள் |
| 17. சூரைமாநகர்ப்புராணம் | மீனாட்சிசுந்தரம் பிள்ளை |
| 18. சேது புராணம் | நிரம்பவழகிய தேசிகர் |
| 19. தணிகாசலப்புராணம் | கந்தப்பையர் |
| 20. தணிகைப்புராணம் | கச்சியப்பமுனிவர் |
| 21. தனியூர்ப் புராணம் | மீனாட்சிசுந்தரம்பிள்ளை |
| 22. திருஅம்பர்ப் புராணம் | ,, |
| 23. திருக்காளத்திப் புராணம் | ஆனந்தக் கூத்தர் |
| 24. திருக்குடந்தைப் புராணம் | மீனாட்சி சுந்தரம்பிள்ளை |
| 25. திருக்குறுக்கைப்புராணம் | ,, |
| 26. திருக்குற்றாலத் தலபுராணம் | திருகூடராசப்பக் கவிராயர் |
| 27. திருக்கூவப்புராணம் | சிவப்பிரகாச சுவாமிகள் |
| 28. திருத்துருத்திப் புராணம் | மினாட்சிசுந்தரம்பிள்ளை |
| 29. திருநாகைக்காரோணம் புராணம் | ,, |

30. திருநெல்வேலித் தலபுராணம் நெல்லையப்ப பிள்ளை
31. திருபத்தூர்ப் புராணம் ராய, சொக்கலிங்கம்
32. திருப்பரங்கிரிப் புராணம் நிரம்பவழகிய தேசிகர்
33. திருப்பெருந்துறைப் புராணம் மீனாட்சிசுந்தரம்பிள்ளை
34. திருப்பைஞ் ஞுலிப்புராணம் மதுரை மெய்ப்பாத புண்ணியர்
35. திருமயிலைத் தலபுராணம் அமிர்தலிங்கத்தம்பிரான் சுவாமிகள்
36. திருவதிகைப் புராணம் ஸ்ரீஅப்பாவையர்
37. திருவருட்டுறைப் புராணம் வடிவேல் முதலியார்
38. திருவாஞ்சியத் தலபுராணம் களந்தைக் குமரன்
39. திருவாட்போக்கிப்புராணம் கமலைவைத்தியநாத தேசிகர்
40. திருவாமாத்தூர்த் தலபுராணம் தண்டபாணி சுவாமிகள்
41. திருவாளொளிபுத்தூர் புராணம் மீனாட்சிசுந்தரம்பிள்ளை
42. திருவானைக்காப்புராணம் ஸ்ரீகச்சியப்பமுனிவர்
43. திருவான்மியூர்ப் புராணம் பூவை கலியாணசுந்தர முதலியார்
44. திருவிரிஞ்சைப் புராணம் சைவ எல்லப்ப நாவலர்
45. திருவேங்கடத் தலபுராணம் வீரராகவ ஐயங்கார்
46. திருவோத்தூர்ப் புராணம் கருணாகரக் கவிராயர்
47. தேவி கருமாரியம்மன் புராணம் (ஸ்ரீ) ஸ்ரீதேவி கருமாரி தாசர்
48. நாகூர்ப்புராணம் குலாம்காதிரு நாவலர்
49. பழனித் தலபுராணம் பாலசுப்பிரமணியக் கவிராயர்
50. பாபநாசத் தலபுராணம் சொக்கலிங்கப்புலவர்
51. புள்ளிருக்குவேளூர்த் தலபுராணம் வடுகநாக தேசிகர்
52. பேரூர் புராணம் கச்சியப்ப முனிவர்
53. மண்ணிப்படிக்கரைப் புராணம் மீனாட்சிசுந்தரம்பிள்ளை
54. மயூராசல புராணம் தியாகராசக் கவிராயர்
55. மருதவனப்புராணம் ஸ்ரீசிவக்கொழுந்து தேசிகர்
56. மாயூரப்புராணம் மீனாட்சிசுந்தரம்பிள்ளை

| | |
|---|---|
| 57. வில்லைப் புராணம் | வீரராகவக் கவி |
| 58. வில்வாரணிய புராணம் | வேலைய சுவாமிகள் |
| 59. விளத்தொட்டிப் புராணம் | மீனாட்சிசுந்தரம் பிள்ளை |
| 60. வீரவனப் புராணம் | ,, |
| 61. வேதாரணிய புராணம் | பரஞ்சோதி முனிவர் |

உ

திருச்சிற்றம்பலம்

## வலைவீசு புராணம் (அறிமுகம்)

### காப்பு

இருண்மலந் தீரநற் போத மெய்தவும்
தரு பல முத்தமிழ்ச் சாரதிப் பெண்ணும்
மருவு போறது முற்று மருளெனக்
குருபரன் பாதமுட் கொண்டு போற்றுவாம். (1)

அரும்பைவைக் குஞ்சடை நின்மல னார்ந்த வாண்பனையைக்
குரும்பைவைக் கும்படிப் பாடவல் லார்கொற்கை வேந்தன்மனம்
திரும்பவைக் குஞ்சொற் றிருஞான சம்பந்தன் செந்தமிழ்நூல்
விரும்பவைக் குங்கொடு போய்விண்ணு ளோர்க்கு மிகும்பதத்தே!
(2)

வலங்கொள் சிவலிங்கம் மண்மேல்வைப் பிற்றுப்
பொலங்கொள் முடிகளிற்றைப் போற்றி - இலங்கேசன்
கற்பித்த பூசை(தனைக் காக்கின்) சிரம்வருந்த
நிற்கப் பிறவா நிலத்து. (3)

## குமாரக் கடவுளே துணை.

(செருவளர் கோட்டு நீடு) செங்கைசூழ் சகத்தி லேறி
உருவளர் கோட்டு வாகை யானைமா முகனைப் போற்றிக்)
(குருவ)ளர் கோட்டுத் தீக்கை கொண்டுல குய்யக் கொண்ட
ஒருவளர் கோட்டு வேழத் திருப்பதம் உள்ளம் வைப்பாம். (4)

ஒற்றை மருப்பு மிருபுயமும் ஒளிசேர் நயன மொருமூன்றும்
கொற்ற வலங்கற் புயநான்கும் கோலக் கரங்க ளோரைந்தும்
வெற்றி புனைந்த மதவாறும் விளங்கக் குன்றின் பிடிவருந்தப்
பெற்ற களிற்றின் திருநாமம் பேசப் பாசப் பிறப்பறுமே. (5)

அன்றிப் பெயர்மால் வரையுருவ
வடரும் மதமா உடலுருவ
வென்றிச் சூரன் மார்புருவ
மேவு மடியார் வினையுருவ
மன்றக் கடம்பன் றொடைவாகை
வடிவேல் வாங்கும் பெருமானை
இன்றிப் புராணம் நிறைவேற
விசைக்குஞ் சதங்கைப் பதம்பணிவாம். (6)

தேங்கிய கங்கை சூடுஞ் சிவனொரு படகி லேறி
வாங்கிய வுததி தன்னில் வலைவீசு புராணஞ் சொன்ன
காங்கயன் றன்னை யாளுஞ் காங்கேயன் கந்த சுவாமி
பாங்குடன் மகர மாய பணிவிடை போற்றி போற்றி ! (7)

### அவையடக்கம்

வெயிற்பா லெரியைப் பாவித்து வெளிமின் மினிதான் மின்னுவபோல்
மயிற்பா வினத்தைப் பாவித்து வராக மகிழந்து நடிப்பதுபோல்
குயிற்பால் மொழியைப் பாவித்துக் குடிஞையிருந்து குழறுவபோல்
இயற்பா வலரைப் பாவித்து யானுங் கவிதை யியம்பலுற்றேன். (8)

வாழ்த்து
(வேறு)

வாழ்க நாற்பத்து ளாயிர மாதவர்
வாழ்க நீறுட னேவள ராகமம்
வாழ்க வஞ்செழுத் தான மறைப்பொருள்
வாழ்க (மண்ணில்) மறையொடு நான்குமே! (௬)

**புராணச் சுருக்கம்**

மடவாள்தன் பாகங் கொண்டு
விண்ணுமண் ணுலகு முய்ய
கடல்விட முண்ட நாதன்
கைலையி லிருந்த வாறும்
வரியர வணிந்த நாதன்
மலரடி பணிந்த வாறும்
பொன்புது வாடை சாந்தம்
புனையாது புனைந்த தெல்லாம்
அன்புடன் புனைந்த வாறும்
அருள்செயு மென்ற வாறும்
வினவிய மடவா ளுக்கு
மேனியி லணிந்த தெல்லாஞ்
சினமிகு மழுவாள் ஐயன்
தெளிவுற வுரைத்த வாறும்
மலர்மாலை புனிந்தி டாமல்
வளம்பட நகையா நின்ற
தலைமாலை புனைந்த வண்ணம்
சாற்றுமென் றுரைத்த வாறும்
மருக்கமழ் குழலா ளுக்கு
மாலையன் சென்னி மாலை
கருத்துடன் சாற்ற வேண்டும்
(காரணங்) கூறு மாறும்
திருத்தகு மிருவர் மாளத்
திருத்தகு மிலைய மின்றி
யிருக்குமப் பெருமை தன்னை
யியம்பிடு மென்ற வாறும்

அப்பொரு ளுரைக்குங் காலை
யலைகடல் வடவைக் குள்ளே
அப்புட னிருந்து ரைக்க
வேண்டுமென் றுரைத்த வாறும்
வடவையி லிருந்து கோச
ஞானநல் வசனந் தன்னைச்
சடையர னெழுதி மங்கை
தன்கையில் கொடுத்த வாறும்
அறுமுகக் கடவுள் கோ(ல)
அறுபத மாகி யம்மை
செறிமலர்க் குழலின் மீது
திருந்தக்கேட் டிருந்த வாறும்
அகிலமா மடந்தை கூந்தல்
அறுமுக வண்டை நோக்கி
(ம)கரமாய்த் திரிநீ யென்று
வள்ளலார் முனிந்த வாறும்
தெரிவைதான் அரனை நோக்கிச்
(சிவசத்தி) யெனுமி ரண்டிற்
பெருமைதா னுடைய தேது
பேசுமென் றுரைத்த வாறும்
சித்த(மு மகிழ்ந்)து சத்தி!
சிவம்பெரி தென்னக் கேட்டு
சத்திதா னாத லாலே
தையல்கோ பித்த வாறும்
மலைமகள் செங்கை கோசம்
வாங்கிவா ருதியிற் போடக்
கொலைபுனை மகர மந்தக்
கோசத்தை விழுங்கு மாறும்,
வள்ளலார் முனிந்து மங்கை
பரதவன் றனக்கு நீபோய்ப்
பிள்ளையாய்ப் பிறக்க வென்று
பேதையைச் சபித்த வாறும்[1]

1. இதன்பின் 'தெரிவைதா னரனை நோக்க' என்றவரி மிகையாயுளது.

உமையொரு குழவி யாக
உததியில் மிதந்து செல்லச்
சமரவேல் மகர ராசன்
றுயர்பின் சென்ற வாறும்
பழுதிலாத் தவஞ்செய் கின்ற
பரதவர் பெருமா னந்தக்
குழவியை எடுத்து வீட்டில்
கொண்டுபோய் வளர்த்த வாறும்
மகரமத் துறையிற் றோன்றி
வலைபட விறக்கா வண்ணம்
சிகரமா மேரு வென்னச்
செருச்செய்து திரிந்த வாறும்
பரதவர் மகரந் தன்னைப்
படுத்தவர்க் கியான்ப யந்த
கோதையை வதுவை செய்து
கொடுப்பனென் றுரைத்த வாறும்
அணிமலர் சடையர் வேடம்
சாற்றியம் புவிமேல் வந்து
மணிவலை வீசி யந்த
மகரத்தைப் பிடித்த வாறும்
மறியுலாங் கரத்தா ரந்த
மங்கையை மணந்த வாறும்
அறிவிலாச் சிறியேன் நாயேன்
அறிந்தவாறியம்ப லற்றேன். (10)

வேறு

கலைவீசும் சிறுபிறையும் கடுக்கையுநுண் டுளையெயிற்றுக்
கொலைவீசும் விடவரவும் கொக்கிறகு மொளிவீச
அலைவீசும் புனற்சடையார் அலைகடலிற் படவேறி
வலைவீசு திருக்கதையை மண்மீது வகுத்துரைப்பாம்.

வேறு

உரகமும் மதியுஞ் சூடும்
ஒருவர்தம் பாகங் கொண்ட

மரகத மனைய மேனி
மலைமக ளுமையாள் நங்கை
கரதரு வேன்வ ழங்கிக்
கடலர சாளு மன்றிப்
பரதவர் மரபில் வந்த
பரிசுநா ளியம்ப லுற்றேன். (12)

**நிறைவுப் பகுதி**

உரை

இவ்வாறாய் நின்று போற்றி செய்த அதியரையனை நோக்கித் திருக்கண் சாத்தியருளி, "வாராய் ! பரதவராசனே ! உன் மகள் திரைசேர் மடந்தையாரைத் திருமணம் செய்திருக்க, இந்நேரம் மோதிரமும், சுருளும் வரக்கண்டிலேம்" என்று திருவாய்மலர்ந்தருள, அதியரையன் தானும், தன் குடிமக்களும், தலைமைபெற்ற பரதவரும், சென்று திருக்கை மலர்களைப் பிடித்துத் திருவாழிகள் சாற்றி வணங்கி நிற்கத் திரைசேர் மடந்தையாரின் தாயார் வருணவல்லியும் மோதிரமும் சுருளும் (வாங்கி)க் காட்டி, நாணி நிற்கத் தமக்குச் சம்பந்தக் குடியான பரதவர் குடிக்குத் தலைமை பெற்ற பரதவர்களைத் திருக்கண்சாத்தியருளி, "நான் உங்கள் குடியிலே ஒருவனாதலினாலும், உங்கள் குடிப்பெண்ணைத் திருமணம் செய்துகொண்டதாலும், கார்த்திகை தோறும் விழாவெடுத்து, மோதிரமுஞ் சுருளும் (பெறக்) கடவீர்" என்று 'ஓமம் கொண்டருளி, மீண்டும் அவர்களதைத் திருக்கண் சாத்தியருளி, "குடியிற் பிறந்த பத்தினிகளுக்குக் கெற்பம் உற்பத்தி உண்டாமளவினவும் மஞ்சள், சிவப்பு, வச்சிரபணம் முதலானவை குறைவற நடத்தக் கடவீர்" என்று திருவாய்மலர்ந்தருளிப் பரதவரெல்லாருக்கும் விடைகொடுத்தனுப்பி தம்பிரான் எழுந்தருளியிருக்கின்ற காலத்து அதியரையனுக்கும் வருணவல்லிக்கும் சிவலோகம் கொடுத்தருளிப் பின்பு குமரக்கடவுள் தம்முடைய (கையில்) முன்பே வைத்திருந்த திருக்கோசத்தைத் திரைசேர் மடந்தையார் திருக்கையில் கொடுத்தருளினார்.

மருக்கோல மயிலைத்தம் மணிக்குறங்கின் மீதிருத்தித்
திருக்கோவில் தனில்புகுந்து வீற்றிருந்தார் சிவலோகர். (250)

**விருத்தம்**

[2]சோமக் கனல்வெண் ணிலவெறிக்கும்
சுடர்மா மகுடம் வெயிலெறிப்பச்
சேமக் கனல்வாள் [3]விழிநுதலார்
சிறந்தங் கொளித்து மாமயிலை
வாமக் கவணின் மீதிருத்தி
இருந்தார் மங்கைப் பெருமானார் (251)

உரை

இவ்வண்ணமே முன்பு பரமேசுவரி கேட்டருளின உத்தரத்துக்கு பிரதியுத்தரம் எழுதிக்கொடுத்து கோசம் கடலிலே போய் மீண்டும் வருதலால், அன்றுமுதல், திங்கள் சடையார் வலைவீசித் திரைசேர் மடநல தயர் அவதரித்த மங்கைப் பகுதிக்குத் 'திரு உத்தர கோச மங்கை' என்று பேர் வழங்கியதாம்.

**விருத்தம்**

[4]ஆழின் மொழியா [5]ளுமைதனக்
கீசன்திரு உத்தரகோச மங்கைக்கு
மானகரி தனில்மா மகரமதாய்
அறுமுகவன் மீண்டருளிற் றதனால்
சூழும் பொழில்மா மங்கைக்குத்
தொல்லை யுலகி லன்றுமுதல்
வாழுந் திருவுத் தரகோச
மங்கை யெனும்பேர் வழங்கியதாம். (252)

---

1 = ?. 2. இப்பாடலில் மூன்று வரிகளே உள்ளன. 3. விழிநுதலாரைச் என்றுளது 4. இப்பாடல் சரியில்லை 5. ளுமைதிருக் என்றுளது.

**வாழ்த்து**

வாழ்க சமைத்தவர் வாழ்க அந்தணர்
வாழ்க நற்புயம் வாழ்க மன்னவர்
வாழ்க முத்தமிழ் வாழ்க நான்மறை
வாழ்க உத்தர கோச மங்கையே! (253)

வேறு

சைவ வேடந் தழைக்கத் தழைத்துடன்
வையகம் எங்கும் மழைபொழிந் தோங்கிட
அய்யன் நாமம் அஞ்செழுத்தும் வழங்குக
தெய்வ நீறுஞ் சிறக்கச் சிறக்கவே. (254)

முற்றும்
திருச்சிற்றம்பலம்
வலைவீசு புராணம் முற்றும்.

தென்னா டுடைய சிவனே போற்றி!
எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி!!

...

**வலைவீசு புராணம் கதைச் சுருக்கம்**

மாதிருக்கும் பாதியன், கைலையில் வீற்றிருக்குங்கால், குழல்வாய்மொழியம்மை எழுந்து, பணிந்து, அவர்தம் அணிகலன் களின் விளக்கம் வினவினாள். அதற்குப் பதிலளித்த பின் மேலும் கேட்க, தலைமாலை அணிந்த வரலாறும் கூறினார். ஞான கோசப் பொருளை வினாவிய உமைக்கு, உற்றவர்க் குற்றவன், அலைகடல் வடவைக் குள்ளிருந்த ஞான கோசத்தினை ஞானாம்பிகை கைக்கொடுத்துப தேசிக்குங்கால், அறுமுகவன் வண்டுருக்கொண்டு, அம்மையின் கூந்தலில் அமர்ந்து கேட்டிருந்ததால், முனிந்த முக்கட் கடவுள், முருகனை மகரமீனாகுமாறு சபித்தார்.

பின்னர் அங்கயற்கண்ணி, " சக்தி பெரிதோ ? சிவம் பெரிதோ ?" எனக்கேட்க, "சிவமே பெரிது" எனக் கூறக்கேட்ட பராசக்தி, "சத்தியே பெரிது" என்னலும் ஆதிநாதன், அவள் கையிலிருந்த கோசத்தை வாங்கிக் கடலில் எறிந்தார்.

பண்ணிசைப் பரமர், பார்வதி தேவியைப் பரதவர் மகளாகெனச் சபித்தார். கருணாம்பிகை குழவியாகிக் கடலில் மிதந்து செல்ல, பரதவர் கோமான், 'அதியரையன்' அதனை எடுத்துத் தன் மனைவி 'வருணவல்லி' கைக்கொடுத்து வளர்த்து வந்தான்.

மகரம் கடலைக் கலக்கித் தொல்லை கொடுத்தது. அதனால் பரதவர்கள் கடலில் மீன்பிடிக்கச் செல்லாது வருந்தினர். மனம் வருந்திய அதியரையன், "இம்மகரத்தைப் பிடித்துத் துயர்தீர்ப்பார்க்கு, என்புதல்வி, 'திரைசேர் மடந்தை' யைத் தருவேன் என்றறிவித்தான்.

அதுபோது அதிரவீசியாடுவார், பரதவன் வேடம் புனைந்து, வந்து, அலைகடலில் வலை வீசி, மகரத்தைப் பிடித்து அதியரையன் மகள் திரைசேர் மடந்தையை மணந்தார்.

...

### திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணம்

இதன்கண் வலை வீசிய திருவிளையாடலில் எம்பெருமான் உமா பரமேசுவரியாருக்கு, ஆகமங்களை உபதேசித்ததாகவும், அதனைத் திரும்பச் சொல்லும்படிக் கேட்டபோது, 'மறந்தேன், என்றதனால், பரதவர் மகளாகும்படிச் சபித்ததாகவும், தானே வந்து மணப்பதாகவும், சாபவிமோசனம் அளித்தாகவும்; உடன் கோபித்த விநாயகர் ஆண்டுள்ள சுவடிகளைக் கடலில் எறிந்ததாகவும், அறுமுகவேள், ஆலவாயர் கையிருந்த ஆகமத்தை வாங்கிக் கிழித்ததாகவும், அதனால் விநாயகரை சபிக்கமாட்டாமல் முருகக் கடவுளை மூங்கையனாகப் பிறக்கும்படி சபித்ததாகவும், அதுவேளை கணநாதனை உள்ளே விட்டதற்காகவும், திருநந்திதேவரை, மகர

மீனாகும்படிச் சபித்ததாகவும், பின்னர் சிவன் மகரத்தைப் பிடித்துப் பரதவர் மகளை மணந்து, திருஉத்தரகோச மங்கை என்னும் ஊரில் எம்பெருமாட்டிக்கு ஆகமங்களை உபதேசித்துத் தனது பேருருக் காட்டி, ஆகம கோசங்களை அங்கேயே வைத்து மதுரை புக்கதாகவும் கூறப்படுகின்றன.

## பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணம்

இதன்கண் வலைவீசிய படலத்தில், நற்றமிழிறைவன் வேதமறைப் பொருளைப் பகருங்கால், அகிலாண்டநாயகி கவனக் குறைவுடனும், அச்சத்துடனும் கேட்டதால், அவளைப் பரதவர் மகளாமாறு சபித்ததாகவும், தான் வந்து மணப்பதாகச் சாப நீக்க மருளியதாகவும், பிள்ளையார் கீழிருந்த சுவடிகளைக் கடலில் எறிந்ததாகவும், குமாரக்கடவுள் மெய்யர்க்கு மெய்யன் கையிருந்த கோசத்தை வாங்கிக் கடலில் எறிய, உடன் முனிந்த அழகார் மேனியன், அவரை மூங்கையனாகும்படிச் சபித்ததாகவும், பிள்ளையாரையும் கந்தக் கடவுளையும் உள்ளே அனுமதித்ததற்காகத் திருநந்தி தேவரை, மகரமாகும்படிச் சபித்ததாகவும், பிறகு சொக்கர், மகரத்தைப் பிடித்துப் பரதவர் மகளை மணந்து, உத்தரகோச மங்கையில் வேத விழுப் பொருளை சோமசுந்தரக் கடவுள், சோமசுந்தரிக்கு உபதேசித்து மதுரையை அடைந்ததாகவும் பேசப்படுகின்றன.

இவை மூன்றற்கும் உள்ள வேறுபாடு காணலாம்.

...

## திருவிளையாடற் புராணம்

**ஓலைச்சுவடிகள் உள்ள இடம் முதலியன:**

அனைத்துலகத் தமிழ் ஓலைச் சுவடிகள் அட்டவணை: தொகுதி-3; பக்.1110 முதல் 1151 வரை உள்ளவை.

**1. தொடர் எண். 13130**

திருவிளையாடல் - செய்யுள் - பதிவேட்டு எண் 148 மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.

**2. தொர் எண்.13131**

திருவிளையாடல் திரட்டு - செய்யுள் - பதிவேட்டு எண்.7301 கீழ்த்திசைச் சுவடி நூலகம், சென்னை-5.

**3. தொடர் எண்: 13132**

திருவிளையாடல் புராணச் செய்யுட் டிரட்டு - செய்யுள் - 15 ஏடுகள் - குறைச் சுவடி - பதிவேட்டு எண்.2110 - கீழ்த்திசைச் சுவடி நூலகம், சென்னை - 5.

**4. தொடர்கண்.13133**

திருவிளையாடல் புராண சாரம் - செய்யுள் - பதிவேட்டு எண்.10900d பிரெஞ்சிந்திய நிறுவனம், பாண்டிச்சேரி.

**5. தொடர் எண்.13134**

திருவிளையாடற் புராணம் - செய்யுள் - பதிவேட்டு எண்.105 - மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.

**6. தொடர் எண்.13135**

திருவிளையாடற் புராணம் - செய்யுள் - பதிவேட்டு எண்.114. மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.

**7. தொடர் எண்.13136.**

திருவிளையாடற்புராணம் - செய்யுள் - பதிவேட்டு எண்.115. மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.

**8. தொடர் எண்.13137.**

திருவிளையாடற் புராணம் - செய்யுள் - பதிவேட்டு எண்.154. தவத்திரு சாந்தலிங்க அடிகளார் தமிழ்கக் கல்லூரி, பேரூர், கோயமுத்தூர் - 10.

**9. தொடர் எண்.13138.**

திருவிளையாடற் புராணம் - செய்யுள் - பதிவேட்டு எண்.5 தவத்திரு சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரி, பேரூர், கோயமுத்தூர் - 10.

**10. தொடர் எண்.13139.**

திருவிளையாடற் புராணம் - செய்யுள் - குறை. பதிவேட்டு எண். 81. கலைமகள் கல்வி நிலையம், ஈரோடு - 1.

**11. தொடர் எண்.13140.**

திருவிளையாடல் புராணம் - செய்யுள் - 276 ஏடுகள் - முழுமை - பதிவேட்டு எண். ஆர்.2745, கீழ்த்திசைச் சுவடி நூலகம், சென்னை - 5.

**12. தொடர் எண்.13141.**

திருவிளையாடற் புராணம் - செய்யுள் - 313 ஏடுகள் - முழுமை - பதிவேட்டு எண். ஆர்4920. கீழ்த்திசைச் சுவடி நூலகம், சென்னை - 5.

**13. தொடர் எண்.13142.**

திருவிளையாடற் புராணம் - செய்யுள் - 8 ஏடுகள் - குறை - பதிவேட்டு எண். ஆர் 5133 - கீழ்த்திசைச் சுவடி நூலகம், சென்னை - 5.

**14. தொடர் எண்.13143.**

திருவிளையாடற் புராணம் - செய்யுள் - 59 ஏடுகள் - குறை - பதிவேட்டு எண்.ஆர்.5277. கீழ்த்திசைச் சுவடி நூலகம், சென்னை-5.

**15. தொடர் எண். 13144**

திருவிளையாடற் புராணம் - செய்யுள் - பதிவேட்டு எண்.72, தமிழ்ச் சங்கம், மதுரை.

**16. தொடர் எண்.13145.**

திருவிளையாடற் புராணம் - செய்யுள் - பதிவேட்டு எண்.77, தமிழ்ச் சங்கம், மதுரை.

**17. தொடர் எண்.13146.**

திருவிளையாடற் புராணம் - செய்யுள் - பதிவேட்டு, எண்.81, தமிழ்ச் சங்கம், மதுரை.

**18. தொடர் எண்.13147.**

திருவிளையாடற் புராணம் - செய்யுள் - பதிவேட்டு எண்.45778. பிரெஞ்சிந்திய நிறுவனம், பாண்டிச்சேரி.

**19. தொடர் எண்.13148.**

திருவிளையாடற் புராணம் - செய்யுள் - பதிவேட்டு எண்.30735 - பிரெஞ்சிந்திய நிறுவனம், பாண்டிச்சேரி.

**20. தொடர் எண்.13149.**

திருவிளையாடற் புராணம் - செய்யுள் - பதிவேட்டு எண்.31078 - பிரெஞ்சிந்திய நிறுவனம், பாண்டிச்சேரி.

**21. தொடர் எண். 13150.**

திருவிளையாடற் புராணம் - செய்யுள் - பதிவேட்டு எண்.50, ஸ்ரீ மௌன மடம், சிதம்பரம்.

**22. தொடர் எண்.13151.**

திருவிளையாடல் புராணம் வசனம் - உரைநடை 295 ஏடுகள் - முழுமை - பதிவேட்டு எண் - 2191 - கீழ்த்திசைச் சுவடி நூலகம், சென்னை - 5.

**23. தொடர் எண். 13152.**

திருவிளையாடல் புராண வசனம் - உரைநடை 221 ஏடுகள் - முழுமை - பதிவேட்டு எண்.2192 - கீழ்த்திசைச் சுவடி நூலகம், சென்னை -5.

**24. தொடர் எண்.13153.**

திருவிளையாடல் புராணம் வசனம் - உரைநடை பதிவேட்டு எண்.4099 - கீழ்த்திசைச் சுவடி நூலகம், திருவனந்தபுரம்.

**25. தொடர் எண்.13154.**

திருவிளையாடல் புராணம் வசனம் - உரை நடை பதிவேட்டு எண்.4107 - கீழ்த்திசைச் சுவடி நூலகம், திருவனந்தபுரம்.

**26. தொடர் எண்.13155.**

திருவிளையாடல் புராணம் வசனம் - உரைநடை பதிவேட்டு எண்.1409 - கீழ்த்திசைச் சுவடி நூலகம், திருவனந்தபுரம்.

**27. தொடர் எண்.13156.**

திருவிளையாடல் புராண வசனம் - உரைநடை - பதிவேட்டு எண்.3009. கீழ்த்திசைச் சுவடி நூலகம், திருவனந்தபுரம்.

**28. தொடர் எண்.13157.**

திருவிளையாடல் புராண வசனம் - உரைநடை பதிவேட்டு எண்.11456. கீழ்த்திசைச் சுவடி நூலகம், திருவனந்தபுரம்.

**29. தொடர் எண்.13158.**

திருவிளையாடல் புராண வசனம் - உரைநடை குறை - பதிவேட்டு எண்.4094 - கீழ்த்திசைச் சுவடி நூலகம், திருவனந்தபுரம்.

**30. தொடர் எண்.13159.**

திருவிளையாடல் புராண வசனம் - உரைநடை பதிவேட்டு எண்.6154 - கீழ்த்திசைச் சுவடி நூலகம், திருவனநந்தபுரம்.

**31. தொடர் எண். 13160.**

திருவிளையாடல் புராண வெண்பா மூலமும் - செய்யுளும் உரைநடையும் - பதிவேட்டு எண்.267 - தவத்திரு சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரி, பேரூர், கோயமுத்தூர் - 10.

**32. தொடர் எண்.13568.**

பரஞ்சோதி முனிவர் - திருவிளையாடற் புராணம் - செய்யுள் - 209 ஏடுகள்- குறை - பதிவேட்டு எண்.455 - தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சை.

**33. தொடர் எண்.13569.**

பரஞ்சோதி முனிவர் - திருவிளையாடற் புராணம் - செய்யுள் - 195 ஏடுகள் - முழுமை - பதிவேட்டு எண்.903, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சை

**34. தொடர் எண்.13570.**

பரஞ்சோதி முனிவர், திருவிளையாடற் புராணம் - செய்யுள் - 85 ஏடுகள் - குறை - பதிவேட்டு எண்.904. தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சை.

**35. தொடர் எண்.13571.**

பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணம் - செய்யுள் - குறை - பதிவேட்டு எண்.10151 -ஸ்ரீ வெங்கடேசுவரா பல்கலைக்கழகம், திருப்பதி.

**36. தொடர் எண்.13572.**

பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணம் - செய்யுள் - குறை - பதிவேட்டு எண்.10152 - ஸ்ரீ வெங்கடேசுவரா பல்கலைக்கழகம், திருப்பதி.

**37. தொடர் எண்.13573.**

பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணம் - செய்யுள் - 310 ஏடுகள் - முழுமை - பதிவேட்டு எண்.605 - கீழ்த்திசைச் சுவடி நூலகம், சென்னை - 5.

**38. தொடர் எண்.13574.**

பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணம் - செய்யுள் - 244 ஏடுகள் முழுமை - பதிவேட்டு எண்.606 - கீழ்த்திசைச் சுவடி நூலகம், சென்னை - 5.

**39. தொடர் எண்.13575.**

பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணம் - செய்யுள் - 273 ஏடுகள் - முழுமை - பதிவேட்டு எண்.607. கீழ்த்திசைச் சுவடி நூலகம், சென்னை - 5.

**40. தொடர் எண்.13576.**

பரஞ்சோதி முனிவர் - திருவிளையாடற் புராணம் - செய்யுள் - 50- ஏடுகள் குறை - பதிவேட்டு எண். ஆர்5510 - கீழ்த்திசைச் சுவடி நூலகம், சென்னை - 5.

**41. தொடர் எண். 13577.**

பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணம் - செய்யுள் - 52 ஏடுகள் - குறை - பதிவேட்டு எண்.5537 - கீழ்த்திசைச் சுவடி நூலகம், சென்னை -5.

**42. தொடர் எண்.13578.**

திருவிளையாடற்புராணம் - செய்யுள் - 29 ஏடுகள் குறை - பதிவேட்டு எண்.ஆர்.5225 - கீழ்த்திசைச் சுவடி நூலகம், சென்னை - 5.

**43. தொடர் எண்.13579.**

பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணம் - செய்யுள் 93 ஏடுகள் - முழுமை - பதிவேட்டு எண். ஆர்5255 - கீழ்த்திசைச் சுவடி நூலகம், சென்னை - 5.

**44. தொடர் எண்.13580.**

பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணம் - செய்யுள் - 347 ஏடுகள் - முழுமை - பதிவேட்டு எண்.149 - உலகத் தமிழாராய்ச்சி நிறவனம், சென்னை.

**45. தொடர் எண்.13581.**

பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணம் - செய்யுள் - 345 ஏடுகள் முழுமை - பதிவேட்டு எண். 185 - உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

**46. தொடர் எண்.13582.**

பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணம் - செய்யுள் 336 ஏடுகள் முழுமை - பதிவேட்டு எண்.333 - உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

**47. தொடர் எண்.13583.**

பரஞ்சோதி முனிவர் - திருவிளையாடற் புராணம் - செய்யுள் - ஏடுகள் குறிப்பிடப்படவில்லை - பதிவேட்டு எண்.6589. கீழ்த்திசைச் சுவடி நூலகம், திருவனந்தபுரம்.

**48. தொடர் எண்.13584.**

பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணம் - செய்யுள் - ஏடுகளின் எண்ணிக்கை காணப்படவில்லை - பதிவேட்டு எண்.6254, கீழ்த்திசைச் சுவடி நூலகம், திருவனந்தபுரம்.

**49. தொடர் எண்.13585.**

பரஞ்சோதி முனிவர் - திருவிளைாடற் புராணம் - செய்யுள் - ஏடுகள் தரப்படவில்லை - பதிவேட்டு எண்.10299 - கீழ்த்திசைச் சுவடி நூலகம், திருவனந்தபுரம்.

**50. தொடர் எண்.13586.**

பரஞ்சோதி முனிவர் - திருவிளையாடற் புராணம்- செய்யுள் - ஏடுகள் தரப்படவில்லை - பதிவேட்டு எண்.4065 - கீழ்த்திசைச் சுவடி நூலகம், திருவனந்தபுரம்.

**51. தொடர் எண்.13587.**

பரஞ்சோதி முனிவர் - திருவிளையாடற் புராணம் - செய்யுள் - ஏடுகள் தரப்படவில்லை - பதிவேட்டு எண்.11455 - கீழ்த்திசைச் சுவடி நூலகம், திருவனந்தபுரம்.

**52. தொடர் எண்.13588.**

பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணம் - செய்யுள் - ஏடுகள் தரப்படவில்லை - பதிவேட்டு எண்.6993, கீழ்த்திசைச் சுவடி நூலகம், திருவனந்தபுரம்.

**53. தொடர் எண்.13589.**

பரஞ்சோதிமுனிவர் - திருவிளையாடற் புராணம் - செய்யுள் - உரையுடன் ஏடுகள் தரப்படவில்லை - பதிவேட்டு எண்.2116. கீழ்த்திசைச் சுவடி நூலகம், திருவனந்தபுரம்.

**54. தொடர் எண்.13590.**

பரஞ்சோதி முனிவர் - திருவிளையாடற் புராணம் - செய்யுள் - ஏடுகள் குறிப்பிடப் படவில்லை - பதிவேட்டு எண்.11417 கீழ்த்திசைச் சுவடி நூலகம், திருவனந்தபுரம்.

**55. தொடர் எண்.13591.**

பரஞ்சோதி முனிவர் - திருவிளையாடற் புராணம் - செய்யுள் - ஏடுகள் தரப்படவில்லை - பதிவேட்டு எண்.7970 கீழ்த்திசைச் சுவடி நூலகம், திருவனந்தபுரம்.

**56. தொடர் எண்.13592.**

பரஞ்சோதி முனிவர் - திருவிளையாடற் புராணம் - செய்யுள் - ஏடுகள் குறிப்பிடப்படவில்லை - பதிவேட்டு எண்.8008. கீழ்த்திசைச் சுவடி நூலகம், திருவனந்தபுரம்.

**57. தொடர் எண்.13593.**

பரஞ்சோதி முனிவர், திருவிளையாடற் புராணம் - செய்யுள் - ஏடுகள் தரப்படவில்லை - பதிவேட்டு எண்.11411-பி. கீழ்த்திசைச் சுவடி நூலகம், திருவனந்தபுரம்.

**58. தொடர் எண்.13594.**

பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற்புராணம் - செய்யுள் - ஏடுகள் குறிப்பிடப்படவில்லை - பதிவேட்டு எண்.4101-ஏ. கீழ்த்திசைச் சுவடி நூலகம், திருவனந்தபுரம்.

**59. தொடர் எண். 13595.**

பரஞ்சோதி முனிவர் - திருவிளையாடற் புராணம் - செய்யுள் - ஏடுகள் தரப்படவில்லை - பதிவேட்டு எண்.4094. கீழ்த்திசைச் சுவடி நூலகம், திருவனந்தபுரம்.

**60. தொடர் எண்.13596.**

பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணம் - செய்யுள் - ஏடுகள் குறிப்பிடப்படவில்லை - குறை - பதிவேட்டு எண். 6184 கீழ்த்திசைச் சுவடி நூலகம், திருவனந்தபுரம்.

**61. தொடர் எண்.13597.**

பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணம் - செய்யுள் - ஏடுகள் தரப்படவில்லை - பதிவேட்டு எண். 8799- கீழ்த்திசைச் சுவடி நூலகம், திருவனந்தபுரம்.

**62. தொடர் எண்.13598.**

பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணம் - செய்யுள் - ஏடுகள் குறிப்பிடப்படவில்லை - பதிவேட்டு எண்.10297 - கீழ்த்திசைச் சுவடி நூலகம், திருவனந்தபுரம்.

**63. தொடர் எண்.13599.**

பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற்புராணம் - செய்யுள் - ஏடுகள் - தரப்படவில்லை - பதிவேட்டு எண்.11454 - கீழ்த்திசைச் சுவடி நூலகம், திருவனந்தபுரம்.

**64. தொடர் எண்.13600.**

பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணம் - செய்யுள் - ஏடுகள் கொடுக்கப்படவில்லை - பதிவேட்டு எண்.8804 - கீழ்த்திசைச் சுவடி நூலகம், திருவனந்தபுரம்.

**65. தொடர் எண்.13601.**

பரஞ்சோதி முனிவர் – திருவிளையாடற்புராணம் – செய்யுள் – ஏடுகள் தரப்படவில்லை – பதிவேட்டு எண்.6177 – கீழ்த்திசைச் சுவடி நூலகம், திருவனந்தபுரம்.

**66. தொடர் எண்.13602.**

பரஞ்சோதி முனிவர் – திருவிளையாடற் புராணம் – செய்யுள் - ஏடுகள் - குறிப்பிடப்படவில்லை - பதிவேட்டு எண்.3978 - கீழ்த்திசைச் சுவடி நூலகம், திருவனந்தபுரம்.

**67. தொடர் எண்.13603.**

பரஞ்சோதி முனிவர் - திருவிளையாடற் புராணம் - செய்யுள் - ஏடுகள் 233 - முழுமை - பதிவேட்டு எண். 3084 - இந்திய தேசிய நூலகம், கல்கத்தா.

**68. தொடர் எண்.13604.**

பரஞ்சோதி முனிவர் - திருவிளையாடற் புராணம் - செய்யுள் - ஏடுகள் - 303 - முழுமை - பதிவேட்டு எண்.3027 - இந்திய தேசிய நூலகம், கல்கத்தா.

**69. தொடர் எண்.13605.**

பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற்புராணம் - செய்யுள் - ஏடுகள் - 237 - முழுமை - பதிவேட்டு எண்.3088 - இந்திய தேசிய நூலகம், கல்கத்தா.

**70. தொடர் எண். 13606.**

பரஞ்சோதி முனிவர் - திருவிளையாடற் புராணம் - செய்யுள் - ஏடுகள் - 282 - முழுமை - பதிவேட்டு எண்.3100 - இந்திய தேசிய நூலகம், கல்கத்தா.

**71. தொடர் எண்.13607.**

பரஞ்சோதி முனிவர் - திருவிளையாடற் புராணம் - செய்யுள் - ஏடுகள் 213 - முழுமை - பதிவேட்டு எண்.3132 - இந்திய தேசிய நூலகம், கல்கத்தா.

**72. தொடர் எண்.13608.**

பரஞ்சோதி முனிவர் திருவிளையாடல் புராணம் - செய்யுள் - 293 ஏடுகள் - முழுமை - பதிவேட்டு எண்.3126 - இந்திய தேசிய நூலகம், கல்கத்தா.

**73. தொடர் எண்.13609.**

பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணம் - செய்யுள் - 207 ஏடுகள் - முழுமை - பதிவேட்டு எண்.600 - டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் நூலகம், சென்னை.

**74. தொடர் எண்.13610.**

பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணம் - செய்யுள் - 219 ஏடுகள் - முழுமை - பதிவேட்டு எண்.601 - டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் நூலகம், சென்னை.

**75. தொடர் எண். 13611.**

பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணம் - செய்யுள் - 263 - ஏடுகள் - முழுமை - பதிவேட்டு எண்.602 - டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் நூலகம். சென்னை.

**76. தொடர் எண்.13612.**

பரஞ்சோதி முனிவர் - திருவிளையாடற் புராணம் - செய்யுள் - 169 ஏடுகள் - முழுமை - பதிவேட்டு எண்.603 - டாக்டர் உ.வே. சாமிநாதய்யர் நூலகம், சென்னை.

**77. தொடர் எண்.13613.**

பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணம் - செய்யுள் - 183 ஏடுகள் - குறை - பதிவேட்டு எண்.604 - டாக்டர் உ.வே.சாமிநாத ஐயர் நூலகம், சென்னை.

**78. தொடர் எண்.13614.**

பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணம் - செய்யுள் - 1 ஏடு- குறை - பதிவேட்டு எண்.605 - டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் நூலகம், சென்னை.

**79. தொடர் எண்.13615.**

பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணம் - செய்யுள் - ஏடுகள் 254 - முழுமை - பதிவேட்டு எண்.901 - மகாராசா சரபோஜியின் சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

**80. தொடர் எண்.13616.**

பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணம் - செய்யுள் - ஏடுகள் தரப்படவில்லை - பதிவேட்டு எண்.10875 ய- பிரெஞ்சிந்திய நிறுவனம், பாண்டிச்சேரி.

**81. தொடர் எண்.13617.**

பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணம் - செய்யுள் - ஏடுகள் தரப்படவில்லை - பதிவேட்டு எண்.47 - திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை.

**82. தொடர் எண்.13618.**

பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணம் - செய்யுள் - ஏடுகள் குறிப்பிடப்படவில்லை - பதிவேட்டு எண்.49 - திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை.

**83. தொடர் எண்.13619.**

பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணம் - செய்யுள் - ஏடுகள் 130. குறை - பதிவேட்டு எண்.பி.23 - போர்ட்லியன் நூலகம், ஆக்ஸ்ஃபோர்டு.

**84. தொடர் எண்.13620.**

பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணம் - செய்யுள் - 285 ஏடுகள் - முழுமை - பதிவேட்டு எண்.289 - பிபிலோதேகு நேஷனல், பாரிஸ், பிரான்ஸ்.

**85. தொடர் எண்.13621.**

பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணம் - செய்யுள் - 393 ஏடுகள் - முழுமை தெரியவில்லை - பதிவேட்டு எண்.290 - பிபிலோதேகு நேஷனல், பாரிஸ், பிரான்சு.

**86. தொடர் எண்.13622.**

பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணம் - செய்யுள் - 167 ஏடுகள் - (குறைபோலும்) பதிவேட்டு எண்.291 - பிபிலோதேகு நேஷனல், பாரிஸ், பிரான்சு.

**87. தொடர் எண்.13623.**

பெரும்பற்றப் புலியூர் நம்பி - திருவாலவாய்ப்புராணம் - செய்யுள் - ஏடுகள் குறிப்பிடப்படவில்லை - பதிவேட்டு எண்.3877 - கீழ்த்திசைச் சுவடி நூலகம், திருவனந்தபுரம்.

**88. தொடர் எண்.13624.**

பெரும்பற்றப்புலியூர் நம்பி - திருவாலவாய்ப் புராணம் - செய்யுள் - ஏடுகள் தரப்படவில்லை - பதிவேட்டு எண்.3877 - கீழ்த்திசைச் சுவடி நூலகம், திருவனந்தபுரம்.

**89. தொடர் எண்.13625.**

பெரும்பற்றப்புலியூர் நம்பி - திருவிளையாடற்புராணம் - செய்யுள் - 206 ஏடுகள் - முழுமை - பதிவேட்டு எண்.ஆர்1308 - கீழ்த்திசைச் சுவடி நூலகம், சென்னை - 5.

**90. தொடர் எண்.13626.**

பெரும்பற்றப்புலியூர் நம்பி - திருவிளையாடற்புராணம் - செய்யுள் - ஏடுகள் குறிப்பிடப்படவில்லை - பதிவேட்டு எண்.10875பி. - பிரெஞ்சிந்திய நிறுவனம், பாண்டிச்சேரி.

**91. தொடர் எண்.13627.**

பெரும்பற்றப்புலியூர் நம்பி - நம்பி திருவிளையாடற் புராணம் - செய்யுள்- 199 ஏடுகள் - முழுமை - பதிவேட்டு எண்.608 - கீழ்த்திசைச் சுவடி நூலகம், சென்னை -5.

இதுவரை குறிப்பிடப்பட்ட சுவடிகளின் கணக்கெடுப்பு எடுத்த ஆண்டு 1991. ஆதன் பிறகு சுவடிகள் பல சேர்ந்திருக்கக் கூடும்.

உதாரணமாக, நமது, சரசுவதி மகால் நூலகத்தில் பதிவான சுவடி:-

திருவிளையாடற்புராணம் :- சுவடி எண்.1157 செய்யுளும் உரைநடையும் - ஏடுகள் -15 குறை.

முன்பே பதிவான சுவடி எண்.324. மணிப்பிரவாளநடை - ஏடுகள் 404 உரைநடை முழுதும் இல்லை. இது, ஆலாஸ்ய மகாத்மியத்தின் மொழிபெயர்ப்பு. சமணரைக் கழுவேற்றிய படலம் வரை உள்ளது.

பின்னர் பதிவானது. பதிவேட்டு எண்.1596/டி.2186 மதுரைத் திருவிளையாடற்புராணக் கதை வசனம் ஏடுகள் 86. முழுமை இல்லை.

...

**92. தொடர் எண்.13541.**

நம்பி - வேம்பத்தூர் திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணம். செய்யுள் - 229 ஏடுகள் - முழுமை - பதிவேட்டு எண்.595 - டாக்டர் உ.வே.சாமிநாதய்யர் நூலகம், சென்னை.

**93. தொடர் எண்.13542.**

நம்பி - வேம்பத்தூர் திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணம். செய்யுள் - 227 ஏடுகள் - குறை - பதிவேட்டு எண.596 - டாக்டர் உ.வே.சாமிநாதய்யர் நூலகம், சென்னை.

**94. தொடர் எண்.13543.**

நம்பி - வேம்பத்தூர் திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணம். செய்யுள் - 70 ஏடுகள் - முழுமை - பதிவேட்டு எண்.597 - டாக்டர் உ.வே.சாமிநாதய்யர் நூலகம், சென்னை.

**95. தொடர் எண்.13544.**

நம்பி வேம்பத்தூர் திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணம். செய்யுள் - 133 ஏடுகள் - முழுமை, பதிவேட்டு எண்.598 - டாக்டர் உ.வே.சாமிநாதய்யர் நூலகம், சென்னை.

**96. தொடர் எண்.13545.**

நம்பி - வேம்பத்தூர் திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம். செய்யுள் - 88 ஏடுகள் - குறை - பதிவேட்டு எண்.599 - டாக்டர் உ.வே.சாமிநாதய்யர் நூலகம், சென்னை.

**97. தொடர் எண்.13546.**

நம்பி - வேம்பத்தூர் - நம்பி திருவிளையாடல் புராணம் - செய்யுள் - ஏடுகள் தரப்படவில்லை - பதிவேட்டு எண்.48 - திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை.

...

## திருவிளையாடற் புராண தொடர்புடைய நூல்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1. | திருவிளையாடல் | | 13130 |
| 2. | ,, | கருணைத் திருவிருத்தம் | 16353, 16354, 16423, 16424 |
| 3. | ,, | கலிவெண்பா | 10149, 10150. 10193 |
| 4. | ,, | திரட்டு | 13131 |
| 5. | ,, | நாட்டுப் பாடல் | 5129 |
| 6. | ,, | பயகரமாலை | 9093 |
| 7. | ,, | மூலம் | 9281 |
| 8. | ,, | மூலமும் உரையும் | 9094 |
| 9. | ,, | புராணச் செய்யுள்திரட்டு | 13132 |
| 10. | ,, | புராண சாரம் | 13133 |
| 11. | ,, | புராண வசனம் | 13151-13159 |
| 12. | ,, | புராண வெண்பா மூலமும் உரையும் | 13160 |
| 13. | ,, | போற்றிக் கலிவெண்பா | 10145-10148, 10187-10192 |
| 14. | ,, | போற்றித் திருவகவல் | 10025, 10026. |
| 15. | ,, | வண்ணம் | 9664 |
| 16. | மதுரைச் சொக்கேசர் திருவிளையாடல் பயகரமாலை | | 16426 |
| 17. | மதுரைத் தலபுராணம் | | 13177 |
| 18. | மதுரைத் தலவரலாறு | | 21695 - 21696 |
| | | மற்றும் பல | |

எண்கள் : அனைத்துலகத் தமிழ் ஓலைச் சுவடிகள் அட்டவணை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

# சீகாளத்திப் புராணம்

## நக்கீரச் சருக்கம்

### அறுசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்

அமுதுறழ் தமிழொண் முத்த
மையசந் தனமெல் வாசங்
கமழ்குளிர் தென்ற லென்று
கரையரும் பொருள்படாம
லிமிழ்கடல் வரைப்பெ லாந்தோன்
றெண்பொருள் படுகாடெள்ளித்
தமிழ்முதல் பிறக்கு நாடாய்த்
தயங்குமாற் பாண்டி நாடு. (1)

### மேற்படி வேறு

தன்கால் சுமக்கு முறுப்பிலான்
றன்னே வலரா னிலைகலங்கிப்
பொன்கா றிதலை முலைமடவார்ப்
பொருத்து துணையா மாநிலத்து
வன்கா றரியா துழல்வாரைத்
தலையாற் சுமக்கு மலையைநகு
மின்கார் மழைதோய் முடிமலய
விலங்க லுடைத்தத் திருநாடு. (2)

வானோ ரமுதஞ் சாபத்தான்
மண்ணிற் புனலா யொழுகியது
தானோ நிலத்தி னியல்பாற்றன்
றன்மை திரியா வரம்பெற்ற
மானீ ரோமற் றிதுவென்ன
மதுரங் கடிகொண் டெஞ்ஞான்று
மானா தொழுகும் பொருநையாற்
றரசு முடைத்தத் திருநாடு. (3)

### கலிநிலைத்துறை

கறங்கு பன்மணி யருவியைத் துளியொடு கலந்து
நிறங்கொண் மாமணி சேணிடைச் சிதறிட நெடுங்கைப்
பிறங்கு வெண்பிறைக் கோட்டியா னைகண்மதப் பெருநீ
ரிறங்கு மாமுகந் தேற்பன குறிஞ்சியி னிடங்கள். (4)

கொன்றை பூத்துழை தன்னிடங் கொண்டுகூர்ங் கோட்டு
வென்றி யேறுபெற் றண்டரைத் தாங்குபு வீயா
தென்றும் யாறுதன் றலைக்கொடு முக்கணெம் மிறைபோற்
றுன்று பல்பசுச் சேரிட மாய்முல்லை தோன்றும். (5)

குழலி னோசையுந் தயிர்கடை யொலியுங்கொல் லேறு
தழுவு மார்ப்புமா னிரைமணி யரவமுந் தண்ணென்
செழும லர்க்கொன்றை படுசுரும் பிசையும்வெஞ் சினத்த
மழவி டைக்குலம் வாய்விடு முழக்கமு மாறா. (6)

போர்வி டைக்குல முயர்ந்தெழு புற்றுமண் சிதறக்
கூர்ம ருப்பினாற் குத்துபு துகளெழக் குளம்பா
லார ழற்சினத் தொடுநிலந் தொட்டிமி லசைய
மூரி வாய்விடு முழக்கம்விண் ணேற்றொடு முரணும். (7)

### அறுசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்

தாமரை குவளை யாம்பல்
சங்குசை வலமீ னன்ன
மாமைவண் டரம்பை கன்னல்
கமுகமென் றவைநி றைந்து
காமரு மருத மாதர்
கவினுறுப் பமைப்போ னவ்வத்
தோமின்மா திரிகை யெல்லாந்
தொகுத்ததோ ரிடத்தை யொக்கும். (8)

### கலித்துறை

அன்ன மந்நலா ரணிநடை கற்கவேட் டனையர்
பின்னு ழுன்றுழன் றடிசிவந் தும்பெறா மையினான்
மன்னு மெய்விளர்த் ததுபெற வனத்தினுட் பதும
மென்னு மாதனத் திடையிருந் திருந்தவ மியற்றும். (9)

கழனி யுட்புகுந் துறவலிப் பகட்டினேர் கடவி
யுழுந ரோதையால் வெரீஇயெழுந் தும்பரிற் பறக்கு
மழகின் மென்சிறை யோதிமத் தணிசிறை யடித்த
லொழுகு வான்கங்கை வெண்டிரை யெறிந்திட லொக்கும். (10)

சேல்க ளுண்டக டார்த்திய மென்சிறைச் செய்ய
கால வோதிமஞ் சிறுதிரை யசைக்குமென் கமலக்
கோல நாண்மலர்ச் சேக்கையிற் பெடைதழீஇக் கொண்டு
சாலம் வண்டிசை கேட்டுறங் குவமலர்த் தடங்கள். (11)

மாம லர்க்கணை யோன்சிலை யாயுயிர் வருத்து
தீமை யின்பய னுறலென மள்ளராற் செய்ய
காமர் தீங்கரும் பாலையா டப்படு கவ்வை
தாம யற்கணெற் போர்கடா விடுமொலி தாழ்க்கும். (12)

யாமு ழுத்தியர் காற்கிணை யாயிழி பெய்தத்
தாமு லைத்தட மிடற்றொடு நிகர்த்துயர் தருக்குச்
சாமு ருக்குது மெனத்தெங்கின் காய்விழத் தாக்கிக்
காமர் நாகிளங் கமுகொடிப் பனவராற் கணங்கள். (13)

வரைக ளொப்பன போரொழுக் கியபுரி வரையி
னருவி யொப்பன சுற்றுபா கடுபுகை யவைசூழ்
கருமு கிற்குல மொப்பன தீங்கழைக் கரும்பின்
றாள வற்றினைச் சூழ்ந்தகா டொப்பன செறிந்து. (14)

நிரந்த மஞ்சள்கள் வாழையின் குலைதொடு நெடிய
வரம்பை பாளைவாய்க் கமுகெழிற் குலையினை யடுக்கு
முரிஞ்சு மற்றவை தெங்கினொண் குலையையவ் வுயர்ந்த
குரும்பை நெட்டிலைத் தாழைதை வருமுகிற் குலத்தை. (15)

கருத்திண் கோட்டன கவிமுலைச் செய்யகட் காரா
னிருந்தண் பன்மல ரிலஞ்சியுண் மேய்த்திடு மிளைஞர்
பெருந்தண் மாம்பழ மெறிகரும் பின்குணில் பிறங்கு
சுரும்புண் டாமரைத் தடத்துவீழ்ந் தனக்குழாந் துரக்கும். (16)

குளிர்கொண் முத்தொடு முகையிற்செய் சிற்றிலிற் குழிசி
வளையு மிப்பியுங் கொண்டனத் தூவிமேல் வயங்கு
மொளிகொள் செந்துகிர்ப் பாவையை யிருத்திமற் றுள்ளங்
களிகொள் பேதைய ராடுவ புன்னையங் கானல். (17)

ஒழுகு தீம்புனற் கொழுங்கய லொடுவரால் கொடுத்துக்
கழியு நுண்ணிடைக் கொடிச்சியர் கொடிச்சியர் கையிற்
பழுதி லின்சுவைக் குறிஞ்சித்தேன் சுடர்கெழு பசும்பொற்
குழைக டந்தகட் கடைச்சியர் கடைச்சியர் கொள்வார். (18)

முருந்தெ யிற்றிய ரெயிற்றியர் கருங்குழன் முல்லை
யரும்ப விழ்ந்தபூ முடிப்பர்க ளணிமுலை யாகும்
பெருங்கு டத்தியர் குடத்தியர் பிறங்குகோங் கரும்பு
விரிந்த பூவினுட் பொற்றுகள் பூசுவர் மெய்யில். (19)

கொம்ப ரொத்தசிற் றிடையுழத் தியர்கள்கட் கொண்டு
பம்ப ரத்திய லாடவர் மனம்படப் பரந்த
சம்ப ரத்திய முலைப்பரத் தியர்தளர் மருங்கு
லம்ப ரத்தியர் பரத்தியர் விலைமுத்த மளப்பார். (20)

இன்ன தன்மைய வளங்கெழு பாண்டிநா டென்னு
மன்ன மன்னவ டிருமுக மண்டல மாகி
மன்னும் விண்ணவர் பொன்னக ரத்தினை மறுக்கும்
பொன்ன னன்மணி மாமதின் மதுரையம் புரமே. (21)

தேடி நான்முகன் செங்கண்மால் காண்கிலான் றிங்கள்
சூடி னானடி யார்மனத் தான்மறைத் தொகுதி
பாடி னானரு ளாலறு பத்துநா லாட
லாடி னானதி லெனினதன் பெருமையா ரறைவார். (22)

மொய்வம் பார்மலர் மிகநனி போர்த்திசை முழுதுஞ்
செய்வண் டார்த்திட வொழுகுறும் வைகைவிண் செல்லு
மைவந் தாடொளிர் மணிசெய்பொன் மாடமா மதுரைத்
தெய்வஞ் சாத்திய பன்மலர் மாலையிற் றிகழும். (23)

நிலைபெ யர்ந்தயல் செல்கலாத் தாரகை நிரையி
னிலகி [1]வம்பல ரிவையியங் காவகை யென்னென்
றலகில் விம்மித முறச்செயு மந்தரத் தகடு
தலையு ரிஞ்சுயர் கோபுரத் துறுசுடர்ச் [2]சாலம். (24)

அங்கண் மாடத்தின் மேற்பயின் மடந்தைய ரனம்வான்
கங்கை யங்கம லத்திரள் வளையவூண் கருதிப்
பொங்கு மாசையிற் புகவதி லூறுமன மிவைக
டங்க டொல்குல மன்மையிற் றனித்தனி யிரியும். (25)

மெலிநு சுப்பினார் களிமயின் மாடத்தின் மேற்றந்
நலிப கைப்பெரும் பாம்புகள் வைகலு நடுங்க
வுலவ லாலிரு சுடர்களு நனியுள முவந்து
மலிபொன் மாடத்திற் றமகதிர் வேறுறா வழங்கும். (26)

விண்டொ டர்ந்த[1]வே ரங்கடம் மேற்புறத் தாடும்
பண்ட ருங்குத லைப்பசுங் கிளிகடம் பணைத்தோட்
டொண்டை வாயினர் விழைதலிற் பிடித்திடத் தொடரும்
வண்டில் பூங்கண்ணி விஞ்சையர் சூழ்தர வயங்கும் (27)

விண்ண கட்டினைத் தொடுமுடி யேறுதல் வேட்ட
வெண்ணி றப்புறாப் பறந்தரு கேசெல விளங்கு
மண்ணு றுத்திய செம்மணி வேரமா மலரி
னொண்ணி றந்தனந் தேடழற் றாணுவை யொக்கும். (28)

நெடிய வெண்சுதை மாடத்தின் விரிந்தவெண் ணிலவுங்
கடவுள் வான்கங்கை வெள்ளமும் வேற்றுமை காணப்

.................................................................................

1. வம்பலர் – புதியோர். 2. சாலம் – கூட்டம்.

படுக லாமையிற் கங்கைவேட் டெய்திய பரிதி
வடிவ மென்சிறைப் புட்களோ டன்னங்கண் மருளும். (29)

இருவி சும்புதோய் மாடமேற் சுருங்கையி லிருந்து
திருவி ளங்குமா நகரணி பார்த்திடுஞ் செய்ய
வரிநெ டுங்கணார் தோட்கிளி கொத்தலின் வளர்ந்த
வுருவி ளங்கமு கின்குலை செழும்பழ முதிர்க்கும். (30)

இனைய வாம்பெரு வளம்பல சிறந்தவவ் விணையி
லனக மாநகர் வெண்குடைச் செய்யகோ லரசன்
புனித வானவன் றலைக்கொளத் திங்களம் புத்தே
டனது தொல்குல விளக்கமோர் வழுதிபைந் தாரான். (31)

**கலிவிருத்தம்**

நடுங்குஞ்சர தனமாமுடி நாகத்திறை வனவாழ்
வெடுக்குஞ்சர வணமைந்தனொ டிணைவான்முகப் புகரா
முடுக்குஞ்சர மலையான்மலை யுறழ்தேர்பல வுடையான்
றொடுக்குஞ்சர மழையாற்பகை சுடுதீப்பல வவித்தான். (32)

மேற்படி வேறு

வரையா கத்தான் வளர்தோ ளான்செவ்
வரையா கத்தான் மதிபோல் குடையா
னரிமா னனையா ரணியேந் தல்பெறா
வரிமா மனையா ரலர்மா லையினான். (33)

**தரவு கொச்சகக் கலிப்பா**

மாமாலை வண்டுபண்ணின் வகைபாடுந் துழாய்மாலை
மாமாலை வண்டுபண்ணி மதில்களொரு மூன்றுமெய்த
காமாரி யீகைப்பூங் கழன்மறவாக் கருத்தினனீங்
காமாரி யீகைப்பூங் கரதலத்தான் கடற்படையான். (34)

**கலித்துறை**

ஆட லந்திரு வொடுநில மகள்விளை யாடு
நீடு செய்குன்ற மாந்தடந் தோளினா னிலவும்

பாட னங்கையா டாங்கமா நாவினன் பதும
வாடு நுண்ணிடை மடந்தையத் தாணியா மார்பன். (35)

கலச யோனியா முனிவரன் குடித்தவக் கார்கோ
ளலைபெ ரும்புனன் மறித்தும்விட் டானென்ப ரதுபொய்
புலமை யந்தணர் பெறத்தகு பொருளொடப் பொன்மா
மலைய னான்பொழி தானநீர் நிறைந்தன்று மன்னோ. (36)

திரைநெ டுங்கடற் றானையவ் வரசர்கோன் செந்நா
வரிநெ டுங்கணார் புலவியாற் பொய்ம்மையு மறியும்
பெரிய வந்தணர் மந்திர சேடையாற் பிறங்கு
மெரிம ணிப்பொலந் தொடிக்கைக ளேற்றது மறியும். (37)

உலவி லண்டமாம் புதுநறா வூற்றிருந் தொழுகு
மலரி னோன்வனை பொற்குட நிறைந்துமேல் வழியப்
புலவ ராமெகி னக்குழா நனிதவப் பரிய
நிலவு தன்பெரும் புகழெனும் பாலினா னிறைத்தான். (38)

திரைய கன்கட லிடத்துறுந் துகிர்க்கொடி சேண்டோய்
வரைக ளுக்கொளிர் செந்நிறத் தாதுமா திரத்தெண்
கரிக ளுக்கெழிற் சிந்துர மாகுமக் கழற்கா
லரசர் தம்பிரான் றனதடற் றோன்றொளி யன்றே! (39)

வெற்றி வேற்படை யவன்பிர தாபமாம் வெய்யோ
னுற்ற வார்திரைப் பெரும்புனற் குவலய முவப்ப
மறற வன்றரி யார்வசை யிருளொடு வயங்கும்
பற்று தீக்கதிர்ச் சுடரொடு மறுதலைப் பட்டு. (40)

இந்த கைப்பெரும் பெயர்முடி வேந்தர்கோ னிலங்கு
நித்தி லத்தனிக் கவிகையா னிலமெலா நிழற்றி
மெய்த்த செய்யகோ றடையற நடாய்த்திசை மேவு
மத்த வாரண முகங்களிற் கயற்பொறி வரைந்து. (41)

குரும ணிக்குவால் பொற்குவை விலையிற்பூண் குவவு
முரண்ம ணிப்பொலந் தேர்த்திரண் மனத்தினு முந்தும்

பரிய ணிக்குழாம் பிறைமருப் பீர்ங்கவுட் பரூஉத்தா
ளருவ ரைக்களிற் றினத்திறை யரசர்க ளளக்க. (42)

வெளிறி னுண்புல மந்திரிக் கிளையொடு மேவி
யளவில் போகந்துய்த் தினிதுவீற் றிருந்தன னந்நா
ணெளிதி ரைக்கட லுலகெலாந் தம்புகழ் நிறீஇய
தளர்வில் கேள்விநக் கீரனார் முதலிய சான்றோர். (43)

அன்ப ரெண்ணிய வெண்ணியாங் கந்நிலை யளிக்கும்
பின்பு தாழ்சடைப் பெருந்தகை யருளினாற் பெற்ற
பொன்பி றங்கிய தெய்வதப் பலகைதம் புலமை
வன்ப றிந்திடந் தரவதி லிருந்துள மகிழ்ந்து. (44)

யாக்கை பெற்றவர்க் குறுதியா மறம்பொரு ளின்பம்
போக்கி னுண்பொரு ளரிலறப் புதுமொழி புணர்த்துத்
தூக்கி னம்பல பலபுனைந் தெறிதிரை சுருட்டு
மாக்க ருங்கட லுலகிடைத் தமிழினை வளர்த்தே! (45)

வெள்ளைத் தாமரைச் செல்விதன் பெண்மையை விடுத்திட்
டெள்ளற் பாடிலா ணுருவெடுத் தெனமுடி யேந்தும்
பிள்ளைப் பான்மதி யான்றமி ழொருவனாப் பெருஞ்சீர்
வள்ளற் பாண்டியற் காருயிர்த் துணைவராய் வாழ்ந்தார். (46)

இன்ன வாறவர் வாழுநா ளோர்பக லெரிகான்
மின்னு வாட்படைச் சேல்வல னுயர்த்ததார் வேந்தன்
பொன்னின் மாடத்தின் மேனிலைக் குழையடர் பூங்க
ணன்ன மன்னவ ளோடினி தேறின னமர்ந்தான். (47)

ஆய காலையின் மந்தமா ருதத்தொடு மரிக்கண்
வேயை வென்றதோ ளணங்கின்வார் குழன்மணம் வீசச்
சேய னான்குவி முகிழ்முலைச் செய்யவாய்த் தேவி
மாயி ருங்குழ லின்மண மாமென மதித்தான். (48)

மதித்த காவல னதுமனங் கொண்டுதன் மனத்திற்
றதைத்த நுண்பொரு டரவொரு செய்யுள்செய் புலவ

ரிதைக்கொள் கென்றுபொன் னாயிர மொருகிழி யியற்றி
யதைப்பொற் சங்கமண் டபத்தின்முற் றூக்கின னன்றே! (49)

புலவர் யாவருந் தாங்கண்ட வாறுபாப் புனைந்து
தலைவன் முன்புபோய்ச் சாற்றிய வனைத்தையுந் தண்டார்
மலைகொ டோளினன் மறுத்தலின் வறிதகன் றனரவ்
விலகு பொற்கிழி யிருந்ததங் கறுப்பவ ரின்றி. (50)

கால மங்கதி லூரோணியிற் கரியவன் புகுத
வால வெவ்வர வடுத்தவீ ருவாவினு மழன்று
கோல வெஞ்சுடர் தண்சுட ரிரண்டும்வாய்க் கொள்ள
ஞால மைந்தனும் வெள்ளியு மிகல்பட நடந்தார். (51)

காலை தண்பனி சொரிதலு நண்பகற் கால
நீல வான்புதை முகிலினம் பெய்வபோ னின்று
மாலை தோன்றுமுன் மலர்தலை வான்கமு வியது
போல நீங்கலு நிகழ்ந்தன மழைவளம் பொன்ற. (52)

பெயல்வ றந்தபைங் கூழெலாம் பீளொடு கரிந்த
பயம்வ றந்தன மரங்களு மலைகளும் பனிநீர்க்
கயம்வ றந்தன கள்ளியும் பெண்ணையுங் கதிரின்
வெயிலின் வெந்துதம் பசுமைபோ யுலர்ந்தன மிகவும். (53)

உண்ப தின்பன நனிமிகக் குறைந்தன வொருங்கு
வெண்க லங்களும் வெள்ளியுஞ் செம்பொனும் விளங்கு
மண்கொ ளொன்பது வகையான் மணிகளு மலிந்த
வெண்ப தம்பெற லரியதா யிற்றுமன் யார்க்கும். (54)

நீடுந் தீப்பசி யாற்குடர் கொழுந்திய நிலத்தோ
ராடுந் தின்கலா வடகுதின் றனர்நில னகழ்ந்து
வாடும் பல்வகைக் கந்தமுந் தின்றனர் மக்கள்
காடுங் குன்றமு நிரம்பினர் தின்பன கருதி. (55)

சிறுவர் கையன தாயர்தாம் பறித்தனர் தின்றார்
முறுகு தீப்பசி பொறுக்கலார் மக்களுன் முதலா

வுறுப சுந்தசை யாவையுந் தின்றன ருலகத்
தறைப ழுஞ்சொலைப் புதுக்கினர் மானமாண் பற்றார். (56)

வழியெங் கும்பிண மிடறுமிவ் வார்கடற் கப்பாற்
பொழிலின் கண்ணுமுற் றுலாயது நாற்றநீள் பேழ்வாய்
முழைவெங் கூற்றுயி ருண்டற வெறுத்தது முள்வாய்க்
கழுகுங் காக்கையு ஞமலியு நரிகளுங் களித்த. (57)

சிலர்பி ழைத்தவவ் வற்கடத் திறையையர்ச் சிக்குந்
தலைமை பெற்றவன் றருமியென் பவனுட றளர்ந்திங்
கிலையு யிர்க்கர ணினிநடந் தெத்திசை யேனு
மலிவி லைத்துநா டெய்துவ மெனமனம் வலித்தான். (58)

கோயில் சென்றடைந் தருட்பெருங் கடலினைக் குருகித்
தாயி லன்புடை யாயிவ ணுறிலினிச் சாவேன்
றேய முய்வதற் கேற்றது புகுந்துறீஇச் செழுமை
யாய பின்பிவ ணடைகுவ லெனத்தொழு தழுதான். (59)

### அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

குழவியந் திங்கள் வேணிக்
குரிசின்மற் றிதனைக் கேளா
வழுதகங் குழையல் வாழி
யன்பவொன் றறைவல் கேட்டி
வழுதிதூக் கினனோர் பாத்தன்
மனங்கொள வுரைத்தோர்க் கென்று
கிழயதா யிரம்பொன் சங்கக்
கிளர்மணி மண்ட பத்தே ! (60)

அங்கதை யிப்பா வேந்தற்
கறைந்தனை பெறுதி யென்று
கொங்குதேர் வாழ்க்கை யென்னுங்
கோதிறூக் கீந்து விட்டான்

பொங்கிய களிப்பி னானும்
போய்த்தொடர் பழுதந் தன்னைத்
திங்கள்வெண் குடையி னான்றன்
செவிப்புலத் தூற்றி னானால். (61)

மற்றது கேட்டுத் திங்கண்
மருகன்றா னினைந்த வண்ணஞ்
சொற்றலி னினிது வந்து
தொகுசங்கத் தவர்பாற் போயிப்
பொற்றபாட் டிசைவி யென்றான்
பொருக்கெனத் தருமி சென்று
கற்றவ ரவைமுன் சொன்னான்
கவிகள்கேட் டலுமு வந்தார். (62)

ஆங்கவர் தம்முட் கீர
னரும்பெறற் கல்விச் செல்வத்
தோங்கிய தருக்கி னாலிவ்
வுரைத்தபாக் குற்ற மென்றான்
றாங்கிய வுவகை சிந்தத்
தருமிதா னுலைவிற் போந்து
தேங்கமழ் கடுக்கை வேணிச்
செல்வனோ டிதனைச் சொன்னான்.

கேட்டலு மங்க யற்கட்
கிளியுறழ் கிளவி பங்கன்
கோட்டமில் புலவ னாகிப்
பாவலர் தம்பாற் போயெங்
கோட்டமில் கவிக்குக் குற்றங்
கூறினர் யாவ ரென்றா
னாட்டிய புகழ்நக் கீரன்
நானெனத் தருக்கிச் சொன்னான். (64)

சொல்லலுங் குற்றம் யாது
சொல்லென நெடுங்க ணல்லார்

சில்லிருங் குழற்குநாற் றஞ்செயற்
கையன்றி யற்கை யுண்டோ
வில்லது கூற லான்மற்
றிதுகுற்ற மென்றா னண்ணல்
மல்லல்விண் மகளிர் கூந்தன்
மணமியல் பன்றோ வென்றான். (65)

என்றலு மரம்பை யர்க்கு
மிருங்குழ னறிய நாற்ற
மின்றென வுரைத்தா னைய
னிறைவியென் றுலக மேத்துங்
குன்றிறை பயந்த செல்வி
கூந்தலெற் றென்றான் கீரன்
றன்றனித் தருக்கா லம்மை
தனதுகூந் தலுமற் றென்றான். (66)

ஏற்றினா னெற்றிக் கண்ணு
மெரிமருள் சடையுங் காட்ட
மாற்றரு மருட்சி யான்கண்
வடிவெலாங் காட்டி னாலுஞ்
சாற்றிய செய்யுள் குற்றஞ்
சடைகொண்டு வெருட்டல் வேண்டா
தோற்றில னிதனுக் கென்றான்
றொலைவிலான் வெகுண்டு சொல்வான்.(67)

எம்மொடு முரணி வான்றோ
யிமயமால் வரைப்பூங் கொம்பின்
மைம்மலி மறைசொல் லானா
மணங்கமழ் குழல்ப ழித்த
செம்மைகொ ளறிவி லாய்நீ
தீர்ப்பருங் குட்ட நோய்கொண்
டிம்மையி லலைக வென்றா
னிறப்பநக் கீர னஞ்சி. (68)

முழுமெயும் பனித்தி ரங்கி
முருகலர் கமலம் வென்ற
கழலடி வீழ்ந்தி றைஞ்சிக்
கருணையங் கடலே யெந்தா
யிழிபுடை நாயி னன்னே
னிலங்கறி விலாது செய்த
பிழைபொறுத் தருளிச் சாபப்
பிணிகெட வருள்வா யென்றான். (69)

என்றலுங் கருணை வள்ள
லெரிசினந் தணிந்து கீர
சென்றுநீ கயிலை காணிற்
றீருமிக் கொடுநோ யென்று
குன்றுறழ் புரிசை விண்டோய்
கோயிலிற் புகுந்தொ ளித்தான்
றென்றலம் பொதிய வெற்பிற்
றென்னர்கோ னதிச யித்தான். (70)

பொற்குவை தருமி யேற்றுப்
பொலிந்தினி திருந்தான் வெய்ய
வற்கடந் தீர வெங்கு
மழைவளஞ் சுரந்த திப்பாற்
சிற்குணன் றந்த சாபத்
தீப்பிணி யுடலம் போர்ப்ப
நற்கவி னிகந்து கீர
நாவலன் சிந்தை செய்வான். (71)

விரனிரை யழுகி நைந்து
வீழ்ந்துகால் குறையா முன்ன
மிருகையும் விரல்கு றைந்திட்
டெரிபுகு துடுப்பொவ் வாமு
னுருவினுண் புழுக்கள் சோர
வொழுகுசீ நாறச் சேணில்

வருதல்கண் டவரு மிழ்ந்து
வழிவில கினர்சொல் லாமுன். (72)

பலப்பல நாடி றந்து
படரொளிக் கயிலை யென்னு
முலப்பில்குன் றெய்தி யிந்நோ
யொழிக்குவ மெனத்து ணிந்தான்
விலக்கரு நண்பி னோரை
விட்டக றற்கு நெஞ்சங்
கலக்கமுற் றழுதி ரங்கிக்
கரையில்பே ரஞரு ளாழ்ந்தான். (73)

தடையில்பே ரறிஞர் தம்மைத்
தனித்தனி விளித்து நும்மோ
டுடனுறை வாழ்வு நீங்கு
மொருபெரும் பாவி யேனை
மடனறு நமராங் காணீர்
மறவன்மி னென்று தன்மெய்ப்
படுபிணி நோக்கி மார்பம்
படத்தழு வாது நின்றான். (74)

ாவல ரதைய றிந்து
நண்ணிமா ிருகப் பல்லி
ாவில்கண் ணுருவி பாய
வுளங்குழைந் தழுது நல்லோய்
மேவரு நின்னை நீத்து
வெறுவிய மிருப்ப நின்ற
வாவல்வல் வினையு ளார்யா
மல்லதிவ் வுலகத் தியாரே! (75)

என்றன ரிரங்க மேலோ
னெதிர்தழீஇத் தழுவி யாறிக்
குன்றனீர் சிறியற் காகக்
குழைந்தழ றமியேன் செல்வல்

பொன்றலி நட்பி னுக்குப்
        [1]புணர்வொடு பழகல் வேண்டா
நின்றநல் லுணர்ச்சி தானே
        நிறைக்குமென் றுணர்ந்த நல்லீர். (76)

என்றுபஃ திறத்தார் கூறி
        யிணையிலா னரிதி னீங்கிச்
சென்றனன் புலவர் கண்ணுஞ்
        சிந்தையுந் தொடர்ந்து செல்லத்
தன்றிரைக் கையான் மோதித்
        தான்றியங் குலையு திர்க்கு
மன்றலம் புதுநீர் வைகை
        வடகரை கடந்து மன்னோ! (77)

என்றினி மதுரை காண்பே
        மெப்பகல் சவுந்த ரேசன்
தன்றிரு வடிகள் காண்பேந்
        தாயையெஞ் ஞான்று காண்பேம்
வென்றிவேற் றரும வேந்தா
        வேந்தனை யெந்நாட் காண்பே
மொன்றுயிர்த் துணையாஞ் சங்கத்
        துறவையெப் பொழுது காண்பேம். (78)

நுணங்குமா ணறிவின் மிக்க
        நூல்வலார் மறப்பர் கொல்லோ
வணங்குதேர்த் தானை மன்னர்
        மணிமுடி யுழுக ழுற்கா
லணங்குடை யரிமான் றுப்பி
        னரசர்கோ னினையான் கொல்லோ
விணங்குநூற் புலவர் நாற்பா
        னெழுவரென் றுரைக்கும் கொல்லோ. (79)

1. திருக்குறள்: நட்பு : 5

இனித்தமி ழினிமை யாவர்க்
கெடுத்திசைத் திடுவ மன்னோ
வெனப்பல பலவு மெண்ணி
யினைந்துவெஞ் சுரமி றந்து
புனற்றிரு நாடு புக்குப்
பொருந்திரைப் பெண்ணை நாடு
தனைக்கடந் தந்தண் பாலித்
தண்ணடை கண்டு சென்றான். (80)

அரவணைச் செல்வன் வாழு
மந்தமிழ் நிலத்தி னெல்லைத்
திருமலை கண்டு [1]கண்டோர்
செறிவினைத் தொடர றுக்கும்
பெருவரை கண்டி றைஞ்சிப்
பிறங்குவெள் ளருவி தாழும்
பொருவரு மேம கூடப்
பொருப்பினை யினிது கண்டான். (81)

அருணெடுங் கடலா நந்தி
யடிகள்வந் தவத ரித்து
முரணுறு சமண்கு றும்பு
முருக்குபு சைவ மென்னுந்
திருநில முழுது மாண்டு
செல்வமோ டினிதி ருந்த
பொருவில்கல் யாண மென்னும்
பொன்மதி நகரங் கண்டான். (82)

உரைபெயர் பலதே யங்க
ளொருபொழு திருந்தவ் வூர்பின்
னொருபொழு திராமற் சென்றே
யொளிவளை மணிகொ ழிக்கு
மிரைதிரைக் கங்கை யாடி
யிறந்தவர் பிறவா வின்பந்

1. கண்டோர் செறிவினைத் தொடரனுக்கும் பெருவரை – பரூப்பதம்

தருதிரு நகரி றைஞ்சித்
தடவரை நாடு புக்கான். (83)

கண்ணுத றிருக்கே தாரங்
கண்டுதண் பனியு தைத்த
விண்ணக டணவு கோட்டு
வியனெடுங் குன்றத் தாறவ்
வண்ணற னருளா னாப்பே
ராற்றலாற் சென்றா னன்றேற்
பண்ணவர் தமக்குஞ் சேறற்
பாலவோ பனிமாக் குன்றம். (84)

மடங்கலெண் குழுவை பன்றி
வாரண முளவுள் ளிட்ட
கொடுஞ்சின மாவ ழங்கு
குன்றமுஞ் செறிமுட் காடு
மும்புறு பிணிவ ருத்த
வுள்ளங்கால் வெள்ளென் பாகக்
கடந்துசெல் வழிகண் டானாற்
கடல்புரை தடமொன் றம்மா. (85)

சிறந்தவாங் கலைவி ளங்கித்
தெளிநறா வொழுகச் செவ்வாய்ச்
செறிந்தசெந் தாம ரைத்தண்
டேமலர் மாலை தாங்கிப்
பிறந்தநாட் டொடங்கி யானாப்
பிறங்குநன் னீர்பு ணர்ந்திட்
டறந்தவா மறைவ லாள
ரனையதத் தடந்தான் மன்னோ. (86)

**எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்**

மாண்டவா ரணத்தோ டராசிய லோதி
மந்திரி வளம்பெரி தமைந்தே

யீண்டிமே லெழுந்து வந்தமே வலர்தம்
மினநிலை தளர்ந்திட வலைத்துக்
காண்டக விளங்கி யுயிர்த்தொகை புரந்து
களியளி யுளர்நறுந் தண்டார்த்
தூண்டரு தடந்தோட் புலவுவேற் றடக்கைச்
சுடர்முடி வேந்தர்போற் றோன்றும். (87)

வளரிள வளைய வெள்ளியும் பொகுட்டு
மாசறு செம்பொனுந் தும்பி
யுளர்கமழ் பதுமப் பதுமரா கமுந்தே
னுறுநறு நீலநீ லமும்பச்
சிளவடை யொளிசெய் மரகத மணியு
மெகினிழற் காற்கொழுந் துகிரு
மொளிகிளர் வளைவெண் டாமரை மணியு
முடைமையின் வணிகரே யொக்கும். (88)

## கலிவிருத்தம்

பூமி மங்கையைப் பொற்புறுத் திப்பல
வேம வன்னந் தருமோர் வளம்பெறாக்
காமர் பூவிளை வித்தலி னக்கயந்
தோமில் பின்னவர் போன்மெனத் தோன்றுமே ! (89)

வெளிய செய்ய கரியவொள் வீபொகுட்
டிளைய பாசடை யென்றிவை துன்னிய
தெளிபு னற்றடஞ் செய்யவ டானம
ரொளிகொள் சித்திரக் கம்பல மொக்குமே. (90)

சால வூடிய தன்பெடை மீனகொளற்
காலு மொண்சிரல் வீழொலி யச்சுற
மாலு மன்னமவ் வச்சமே [1]வாயிலாக்
கோல மென்சிற காற்றழீஇக் கொள்ளுமே. (91)

1. வாயில் – தூது.

மைத்த வண்டிசை வண்சிறைப் புள்ளிசை
தத்து பஃறவ ளைக்குரல் சங்கொலி
முத்த வெண்மருப் பியானைநீர் மொள்கலி
யித்தி றத்தினார்ப் பென்று முடைத்தரோ. (92)

பொருவி லாவகன் பூந்தடத் தின்கரை
மரக தக்குவ டொப்பது வான்றிசை
விரிவ ளக்கும் வியன்சினைத் தூன்றும்வீழ்த்
திரள தோறாற் றிருமா னிகர்க்குமால் (93)

காற்ற ழுங்கு கழற்கம லத்தினாற்
சாற்று மீரேழ் தலமு மளந்தவவ்
வாற்றன் மாய னறிதுயில் கொள்ளுதற்
கேற்ற பைந்தளி ரீட்ட முடைத்தரோ. (94)

திசையி னின்ற தெறுசின வாரண
மசைத டக்கையி னான்முரித் தாரழற்
பசிகெ டத்தினும் பாசிலை மென்சினை
யொசிவி னீள்பணைக் கோடி யுடையதால் (95)

தூங்கு வீழ்நுனித் தொத்தி வருமுலை
வாங்கு நுண்ணிடைச் சூரர மாதர்தாந்
தாங்க மூசலி [1]னாழித் தடமுடி
யோங்கு வெற்பி லுதைத்துதைந் தாடுவார். (96)

வேட்டு மெய்குளிர் மென்னிழை னின்றமாத்
தாட்ட டக்கைத் தழைசெவி யானைமேற்
கோட்டி னம்பொற் குடம்புரை செங்கனி
கூட்டு ணும்புட் குலங்க ளுதிர்க்குமே. (97)

நீரில் வீழ்ந்தன நீர்பயின் மீன்களாம்
பாரில் வீழ்ந்த பறவைக ளாங்கதிர்த்

1. ஆழிவெற்பு - சக்கரவாளகிரி.

தேரின் மேற்செல் சினைப்பஃ றலையரா
வூரில் வேரூன் றுயரா லிலையெலாம். (98)

அனைய வாற்கீ ஈருந்தமிழ் நாவலன்
மனன மர்ந்து வதிந்தன னாங்கொரு
சினையி னீங்கிலை பாதி திரைப்புன
னனைய வீழ்ந்தது நன்புனற் றீரமே. (99)

மேற்படி வேறு

வீழ்ந்தது பறவையு மீனு மாகியங்
காழ்ந்திடு புனலினு மகன்க ரைக்கணுஞ்
சூழ்ந்திடு முலகினுந் துறவின் பாலினுந்
தாழந்திடு மனமெனத் தம்மி லீர்த்தவே ! (100)

அனையதோர் புதுமைகண் டதிச யத்தனாய்த்
தனியொரு தானவண் டரித்து வைகினா
னினைவரு குறுமுனி யிலக்க ணம்பெறப்
புனைதரு மிலக்கியப் புலவர் சிங்கமே. (101)

பரியந் தகன்றனைப் பயந்த பின்னர்வல்
லிருணுகர்ந் தனையவ னிளவ லாமெனக்
கருவிருந் தீன்றன காட்சித் தாகிய
வொருபெரும் பூதமங் குடன்று வந்ததே. (102)

வாரியை வயிற்றுறும் வடவை யோடொரு
பாரிய வுருவுசெய் தென்னப் பார்மிசைக்
காரினை யிடியொடு கவர்ந்து பங்கய
னோருரு வமைத்தென வுருவ மிக்கதே ! (103)

இருளறி யாதவல் லிரவி யும்பெறு
தெருளறி யாதவா னவமுந் தீர்தலின்
மருளறி யாததோர் சிவமு மானவே
யருளறி யாதத னகமெஞ் ஞான்றுமே. (104)

அடுதிற லுடையவப் பூத மாயிடை
வடநிழ லமர்தரும் வள்ளற் கீரனை
நடைதள ருழையிளங் கன்று நச்சியோர்
கொடுவரி கவர்ந்தெனக் கொண்டு சென்றதே! (105)

ஆங்கொரு மலைமுழை யவிர்ச டைப்பிரான்
பூங்கழ லடிநிழல் பொருந்தி னோர்தமை
நீங்கிய வாணவ சத்தி நித்தமா
மிங்குறு மெனநனி யிருளொ டொன்றுமால் (106)

பகலிடை மெலிதலும் பரந்த வல்லிடை
மிகுதலு மிலையிருள் வெற்பி னம்முழை
மகிழ்வுசெய் வாழ்வினும் வறுமை யின்கணுந்
தகுதியா மனமொரு தன்மைத் தாதல்போல் (107)

உண்ணிறை யிருள்முழை யொன்றில் பத்துநூ
றெண்ணுறு தொகையரா யிருந்து ளோருட
னண்ணலை யுள்புக வடைத்துப் பூதநீர்க்
கண்ணிய வுளமொடு கயத்திற் போயிற்றே. (108)

போயின காலையிற் புலவ னோடவண்
மேயின ரினைவுறீஇ விளம்பன் மேயினார்
நீயிவண் வருதலாற் குறைநி ரம்பியே
யாயிர மெனுங்கணி தத்த ராயினோம். (109)

இனியுயிர் செகுத்துநம் யாக்கை யால்வயிற்
றனலினை யவிக்குமாங் கதுவென் றுள்ளுடை
நினைவொடு முரைத்தனர் நிரம்பு தங்கணல்
வினைவழி புலவன்வந் தமைவி ளங்கிலார் (110)

கீரனங் கவர்மொழி கேட்டு மாழ்கில
னாரஞ ரெய்தலு மார்வ மெய்தலு
மோருட லியற்கையென் றுள்ளி யாங்குளார்
பேரிட ரகற்றுமோர் பெற்றி யெண்ணினான். (111)

### அறுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்

வரைபுணர் குறிஞ்சி மன்னன் வரைபக வெறிந்த செவ்வேண்
முருகல ரலங்கற் றிண்டோன் முருகனென் றவன்பொற் றண்டைத்
திருவடி மலரி றைஞ்சிற் றீவினைச் செல்லன் முற்றும்
பரிதியங் கடவுட் கண்ட பனியென வகன்று போமால். (112)

ஆறிரு தடந்தோ ளண்ண லாறெழுத் தினையு மோதில்
வேறொரு பிணிபோ மென்கை வியப்பதோ பிறவியென்று
மாறரு மனாதி நோயு மாறிவே தாக மங்கள்
கூறரு மின்ப வீட்டிற் குடிபுகுந் திருப்ப ரன்றே! (113)

ஐம்பெரும் பூத வாயி னகப்படு முயிரை மீட்டுச்
செம்பொனஞ் சிறுச தங்கைத் திருவடி நிழலில் வைக்கு
நம்பிநங் குமர வேட்கிந் நாளொரு சிறுபூ தத்தா
லிம்பரிங் குறுநோய் தீர்த்த லெளிதலா லரிய தன்றே! (114)

இன்னன நினைந்து கீர னிலங்கிலை நெடுவேற் செம்மல்
பன்னிரு செவியு மாரப் பருகமு தாகி யோதி
லுன்னிய வுன்னி யாங்கிங் குதவுவ தாகிப் பாவுண்
முன்னுற வந்து நிற்கு முருகாற்றுப் படைமொ ழிந்தான். (115)

பொன்னவிர் சுணங்கு பூத்த புணர்முலைக் கருங்கண் வள்ளி
கன்னலு மமுதுந் தேனுங் கைக்குமின் றீஞ்சொன் மாற்றித்
தன்னிகர் புலவன் கூறுந் தமிழ்செவி தாழ்த்துக் கேளா
வந்நிலை மனங்க ளிப்புற் றறுமுகம் படைத்த கோமான். (116)

துயின்மலி திருமால் வீழ்ந்து துணுக்கென வெழுந்து நிற்ப
வெயின்மணி யணைமு டக்கு மெய்நிமிர்ந் தோட வாடு
மயின்மிசை யலையிற் றோன்றும் வளரிளம் பரிதிப் புத்தே
ளியன்மலி யுருவந் தோன்ற விவர்ந்தறு முகமி லங்க. (117)

பன்னிரு கதிருந் தோன்றும் பன்னிரு மலைகள் போலு
மின்னவிர் குழைக டாழ்ந்து விளங்குறு குவவுத் திண்டோட்

பொன்னரி மாலை தாழப் பொலங்கழல் புனைந்து வந்தென்
சென்னியின் மலர்ந்த கஞ்சந் திகழ்தர வந்து தோன்றி. (118)

பூதநா தனுக்கங் காமப் புலவனைப் பூத முண்ணுங்
காதலா னணுகும் போதோர் கதையினா லலகி லண்ட
மோதினா னெனவே மோதி முடிதகர்த் ததனை வீட்டி
மேதையாம் புலவ னோடும் விடுத்தனன் முழையு ளோரை (119)

பாரிடம் விழுங்கப் பட்ட பலரையும் வாய்தி றந்திங்
கோரிடம் விடுப்ப வந்த தொத்தவ ணிருந்தோ ரெல்லாம்
போரிட மலைவேல் போற்றும் புலவனை யடுத்த வாற்றாற்
காரிட மெனும்ப ராரைக் கனமுழை னின்றும் போந்தார். (120)

பெரியவர் சங்க மெய்தப் பெற்றிடி னன்மை யென்ன
வுரைசெயப் பட்ட வற்று ளொன்றுமெய் தாத தில்லை
புரைதரும் வினைக டம்முட் போயுகா வினையு மற்றே
வரையுறழ் குவவுத் திண்டோண் மழைமத யானை வேந்தே! (121)

மணிமுடி யரசர் வாழ்வு மக்கட்பே றாதி நல்கிப்
பிணிமிடி பகையி டுக்கண் பேயினாக் கனவு கள்வர்
பணிவிட மொழிக்கு மாற்றுப் படைமொழி புலவர் சிங்க
மணிகிள ரலங்கற் றிண்டோ ளறுமுகற் றொழுது சொல்வான்.
(122)

அடியனேன் செருக்கா லைய வாலவா யமல னென்றன்
வடிவெலாங் கவரு மிந்நோய் வரப்புகன் றனன்பா னஞ்சிக்
கொடியனேன் பிழைபொ றுத்தாட் கோடியென் றனனீ தின்றாங்
கடிவிலாக் கயிலை காணி னென்றனள் கருணை வள்ளல்.
(123)

ஆதலாற் கயிலை காண்பா னடைந்திவ ணிருந்த காலைப்
பூதமா ரனரி ழைப்பப் போற்றினர்க் குதவி செய்யும்
வேதநா யகநீ யென்பரால் விழுமமிங் கலைத்துந் தீர்த்தாய்
சோதிமா கயிலை காட்டித் தொலைத்தருள் பிணியு மென்றான்.
(124)

செந்தமி ழாளி யின்ன செப்பலுங் கருணை கூர்ந்து
கந்தவே டிசையுன் ணர்த்திக் கயிலையெ றால வாயி
லெந்தைகூ றாமை யானின் றிலங்குதென் கயிலை யானு
முந்துநோய் தீரு மென்னா முன்னின னிதனைச் செய்தான்.
(125)

கரைபொரு திரைநீர்ப் பொய்கை காட்டியொன் றிதன்கண்
மூழ்கில்
விரைபடு கொன்றை வேணி வெற்பினைக் காண்பை யென்றான்
வரைபக வெறிந்த வைவேன் மணிமருள் கலாப மஞ்ஞைக்
குரைகழ லறுமு கத்தெங் குடிமுழு தாளுங் கோமான். (126)

தன்றலை யானடந்த தாய்க்கலாற் கயிலைக் குன்ற
மின்றிரு தாளா லெய்த றனக்கெளி தோநல் யானைக்
கன்றொடு பிறந்த சிங்கங் கருணையாற் பணித்த வாறு
நன்றென வுளங்கொண் டங்க ணல்லிசைப் புலவ னென்பான்.
(127)

முருகனைத் தொழுது சென்று மூழ்கின நத்த டத்தி
லிருவினைக் குறும்பு கொல்லு மிலங்குதென் கயிலை தோன்றப்
பொருதிரைக் கங்கை நாணும் பொன்முக ரியினெ முந்தான்
சுரர்கண்மொய்த் தலர்பூ மாரி சொரிந்தனர் விசம்பு போர்ப்ப.
(128)

அருந்தமிழ்ப் புலவன் பொன்னை யாற்றிலிட் டொருகு ளத்திற்
பொருந்துவித் தவன்ப யந்த புதல்வனோர் புலவன் றன்னைத்
திருந்துறக் குளத்தின் மூழ்கச் செய்தொரு நதியின் வந்து
விரைந்தெழப் புரிந்த தன்மை வியந்திடப் பட்ட தன்றே! (129)

தாழ்ந்தபொன் முகரி தன்னைச் சார்ந்தலாற் றணந்த தென்ன
வாழ்ந்ததென் கயிலை தன்னைக் காண்கையான் மாய்ந்த
தென்னச்
சூழ்ந்ததன் மேனி மாநோய் தொலைந்தெழுந் தனன்மேல் வேலை
வீழ்ந்தவெங் கதிக்கு ணாது வேலையூ டெழுந்த தென்ன. (130)

மாசுறு மணியை மாசு தீர்தர மண்ணி யாங்குத்
தேசுறு முருக னாகித் திருந்துபொன் முகரி மூழ்கி
யாசறு கலிதொ டுத்த வரும்பொரு ளெதிர்ந்தான் போற்கண்
கூசுறு மொளிகொள் மேனிக் குமரன்றா தையையெ திர்ந்தான். (131)

மேற்படி வேறு

நெஞ்சக் குளமன் பெனு ளைா னிறைந்து கடைவிட் டெனவிழிநீர்
ந்சக் கரங்க டலை விளங்கு திருக்கா ளத்திமலை
நஞ்சக் கரிய மிடற்றமுதை ஞானக் கொழுந்தைத் தொழுதிறைஞ்சி
யஞ்சக் கரமு மலத்தொண்ணி யமையா வன்பு மயமாகி. (132)

யிலை வேறு காளத்தி வேறென் றெண்ணுங் கருத்திலனாய்க்
கலை பாதி காளத்தி பாதி யாகக் கலந்துறழ்ந்து
மயல கரும்பா மொழிபாகன் மகிழ வெண்டா வந்தாதி
மயிலில் வருவோன் பேரருளால் வந்த புலவன் பாடினான். (133)

பாடும் புலவன் றனக்கொருதான் பரிசு கொடுப்பத் திருவுளங்கொண்
டாடும் பெருமா னெதிர்நின்றே யறைதி வேண்டிற் றெனவுடம்பு
கூடும் பிணியில் கொழித்தவருட் குன்றே யென்றும் பேரறிவை
மூடும் பிணியுங் களைந்துனது முளரித் தாட்கீ ழிருத்தென்றான். (134)

அந்த மாதி யிலாக்கயிலை யமர்ந்த பெருமா னந்தாதிச்
சந்த மாலைப் புலவனது சத்தி பாதத் துயர்ச்சியாற்
பந்த பாச மறமாற்றிப் பன்றி யுருவாய்க் காண்பதற்கு
வந்த மாலு மறியாத மலர்த்தா ணிழலி லிருத்தினான். (135)

என்று திருக்கா ளத்திமலை யெழுந்த ஞானச் செழுஞ்சுடரிற்
சென்று புகுந்த கீரனார் செய்தி யனைத்துங் கையிளமான்
கன்று கரந்த பரன்கூறக் கழற்கால் வேந்தன் கதையின்னு
மொன்று கருணைப் பெருங்கடலே யுரையா யடியேற்
கெனத்தாழ்ந்தான். (136)

**கலிவிருத்தம்**

தீதறு கவிவரன் செயலு ரைத்தனங்
கோதையர் கயிலைசேர் கொள்கை கூறுதும்
யாதவ மனனமர்ந் தினிது கேளென
மாதவ வடிவருள் வள்ளல் கூறுவான்

நக்கீரச் சருக்கம் முற்றிற்று.

சிவப்பிரகாச சுவாமிகள் திருவடிகள் வாழ்க.



## சீகாளத்திப் புராண நக்கீரச் சருக்கத்தின் உரை நடை

பாண்டி நாட்டிலே, சோமசுந்தரக் கடவுள் அறுபத்து நான்கு திருவிளையாடலியற்றிய மதுரைப் பதியிலே 'சரசுவதி யவதாரமாகிய விளங்கி, உலக முழுமையும் தம் புகழை நாட்டிப் பொய்யடிமை யில்லாப் புலவர் எனப்பெயர் பெற்ற, நக்கீர தேவர், கபிலதேவர், பரணதேவர் முதலிய நாற்பத்தெண் புலவர்களும். ஒருநாள் அக்கடவுளை யடைந்து, "எம்பெருமானே ! எங்களிடத்து யாவரும் வந்து வீண்வாதஞ் செய்கிறார்கள்; அங்ஙனஞ் செய்யாது அவரவர் புலமையையும் அளவிடுங் கருவியாக சங்கப் பலகையொன்று தந்தருளுக" என்று பிரார்த்திக்கக் கடவுள் புலவருருக் கொண்டெழுந்தருளி, சதுரமாய், முழ அளவினதாகிய ஓர் பலகையை யளித்து, "இது நும்போல்வார்க் கெல்லாம், முழம் வளர்ந்து இடங் கொடுக்கும்; இதை அளவு கோலாக வைத்துக் கொள்க"என்று கட்டளையிட்டு மறைந்தருளினார்.

அப்புலவர்கள் திருவுள மகிழ்ந்து, ஆலயத்தினது வடமேற்கிலே, வங்கிய சேகரனாற் றங்கள் பொருட்டுக் கட்டுவிக்கப்பட்ட சங்க மண்டபத்திலே, அப்பலகையிலிருந்து கொண்டு, உயிர்க் குறுதியாகிய அறம் பொரு ளின்பம் வீடென்னும் நால்வகைப் பொருள்களையும், புது மொழிகளுள்ளே புணர்த்தி, நவரசங்களும்; யாண்டுந் துலங்க, பல பிரபந்தங்களை யருளிச் செய்ததுமன்றி, சிவபெருமானே 'இறையனார்' என்னுந் திருநாமத்தோடு, தங்களுள்ளே ஓர் புலவராய் வீற்றிருந்து ஐயந்திரிபுகளை அகற்றியருளச் செந்தமிழைத் தேசமெங்கும் பரவச் செய்தனர்.

அக்காலத்திலே, இவர்களை உயிர்த் துணைவராகக் கொண்டு, வேண்டிய சிறப்புக்களை நடாத்தி, அத்தியந்த அன்புடையனா யொழுகும், 'வங்கிய சூடாமணி' யென்னும்

---

இச்சரித்திர விரிவைத் திருவிளையாடற் புராணத்துட் காண்க.

பாண்டியன். வசந்த காலத்திலே, ஒருநாள் மேல் மாளிகையிலே, மனைவியோடு தனித்து இனிதிருந்தனன். அத்தருணத்திலே, சிறிய தென்றலோடு கலந்து, ஒரு திவ்விய மணம் வீச, அவன் அதைத் தனது மனைவியினது கூந்தலின் மணமென மதித்து, விம்மிதமடைந்து, "இவ்வாசம் கூந்தலுக்கு இயற்கையோ!, செயற்கையோ!" என ஐயமுற்று, இதைப் பிறர்க்குப் புலப்படுத்தாது தன் மனத்தடக்கிக் கொண்டு, "யான் ஐயுற்ற பொருள் விளங்கச் செய்யுளியற்றும் புலவர்கள் இதைக் கொள்க!" என்று ஆயிரம் பொன்னை ஓர் முடிப்பாக்கி, அதைச் சங்க மண்டபத்தின் முன்னே தூக்கினான்.

புலவர் பலரும், அரசன் கருத்து விளங்காமையால், வெவ்வேறு பொருள்களை யமைத்து பாடல்களை யியற்றி, அரசன் முன்னருரைத்து, அவைகள் அன்றென மறுக்கப்பட்டமையால் வறிதகன்றிருக்க, அக்கிழி அறுப்பவரின்றியிருந்தது.

இருக்கும் நாளிலே, உரோகணி நட்சத்திரத்தில், சனி பிரவேசிக்க, சூரிய கிரகணமும், சந்திர கிரகணமும், அமாவாசை பௌர்ணிமைகளிலே அடுத்துவர, செவ்வாய் முற்பட்டுச் சுக்கிரன் பிற்பட்டமையால், மழை இல்லாமல், தானிய விளைவு குன்றி, பசிப்பிணி வருத்த, அதனால் உணவின்றி மடிந்தவரொழிய, பிழைத்தவருள்ளே சிலர், நரமாமிசங்களை அருந்தத் துணிந்தனர்.

அந்நாளிலே, மதுரையில் சோமசுந்தரக்கடவுளை வழிபடும் ஆதிசைவர்களுள்ளே ஒருவராகிய "தருமி" யென்பவர், தமக்குப் பொருள் வரவின்மையால் கவலையுற்று, இனி யாம் செழிப்படைய ஓர் தேசத்திற் சென்று ஜீவிப்பதே தகுதி' எனத் துணிந்து, ஆலயத்தை யடைந்து, சோமசுந்தரக் கடவுளை வணங்கி, "தாயினுமிக்க தயாநிதியே!, யான் இனி இங்கு இருப்பேனாயின் சாதலையடைவேன். ஆதலால், தக்க தேயத்திற் போயிருந்து ஈண்டுச் செழித்த பின்னர் வருகின்றேன்" என்று முறையிட, சோமசுந்தரக் கடவுள் திருவருள் சுரந்து, "அன்பனே ! நீ வருந்தேல், பாண்டிய னானவன், தனது கருத்தை விளக்கி, ஒரு செய்யுள் செய்யும் புலவர்

கைக்கொள்ளும் படி, ஆயிரம் பொன்னையமைத்த ஓர் கிழியை சங்க மண்டபத்திற்கு முன்னே தூக்கியிரு[illegible]லை யுரைத்து, அதைப் பெற்றுக் கொள்வாயாக" என்று கட்டளை யிட்டு,

"கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
காமம் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
செறியெயிற் றரிவை கூந்தலின்
நறியவும் உளவோநீ யறியும் பூவே!"

என்னும் திருப்பாசுரத்தை அளித்தருளினார்.

அது பெற்ற தருமியென்பவர் பெருமித முற்றுச் சென்று, அச்செய்யுளமுதத்தை, அவ்வரசனது இரு செவிகளிலும் புகட்ட, அரசன், தனது கருத்தை விளக்கி யிருத்தலால் இனிது உவந்து,"இப்பாடலை சங்கப்புலவர்கள்பாற் சென்று அரங்கேற்றிவீராக " என்றுரைத்தனன். தருமி சென்று, அப்புலவர்கள்பா லுரைக்க, அவர்கள் கேட்டு மகிழுந் தருணத்திலே, நக்கீர தேவர் கல்விச் செல்வத்தினா லதிகரித்த இருமாப்பினால், "இப்பாடல் குற்றமுடைத்து " என்றுரைத்தனர்.

அதுகேட்ட தருமியார் வாட்டமுற்று, சோமசுந்தரக் கடவுள் சந்நிதியை யடைந்து, "ஒப்புயர்வில்லாத பெருமானே!" சில்வாழ்நாளையும், சிற்றறிவையுமுடைய ஓர் புலவன் தேவரீர் செய்யுட்குக் குற்றம் கூறினர் " என விண்ணப்பிக்க, அப் பெருமான், புலவர் வடிவங் கொண்டு, சங்க மண்டபத்தைச் சார்ந்து, "குற்றமற்ற நமது செய்யுளுக்குக் குற்றம் கூறினவர் யாவர்? " என்று வினவினார். உடனே, நக்கீரதேவர், "யானே கூறினேன்" என்று தருக்கி மொழிதலும், பெருமான், "குற்றம் யாது?" என்று வினாவ, அவர், "கூந்தலுக்கு செயற்கையாலல்லது இயற்கையாக மணமில்லையே. அங்ஙனமிருக்க " 'இயற்கை' என இல்லாததைக் கூறினமையே குற்றம்" என்று கூற, மீட்டும் அப்பெருமான், "அரம்பையர் கூந்தலுக்கு மணம் இயற்கை யன்றோ?" என்று கூறிய வழியும் "அதுவும் மந்தார மலரொடு கலந்து மணத்தலால் செயற்கையே" என்றனர். சோமசுந்தரக் கடவுள், "நீ வழிபட்டேத்தும்

காளத்தி நாதரது பாகத்தமர்ந்த ஞானப்பூங்கோதையம்மையினது கூந்தல் எத்தன்மையது?" என வினாவி, "அதுவும் செயற்கையானதே" யெனச் சாதித்தல் கண்டு, நெற்றிக் கண்ணையும், சடை முடியையுங் காட்டியருள, நக்கீரதேவர், விபரீத வுணர்ச்சியால் கடவுளை நோக்கி, "நீர் வடிவ முழுமையும் கண்களைக் காட்டினும் உமது பாடல் குற்றமே! சடைகொண்டு மயக் வேண்வதில்லை. இதற்குப் பயந்து என் கொள்கையை விடேன்." என்றுரைத்தனர். கடவுள் அவனை நோக்கி, "அறிவலாதவனே! வேதங்களாற் புகழப்படும் அம்பிகையினது கூந்தலை, எம்மோடு மாறுபட்டுப் பழித்தா யாதலால் நீ குட்ட நோய் கொண்டு அலை" எனக் கட்டளை யிடுதலும், நக்கீரதேவர் மிகவும் பயந்து நடுங்கி, திருவடிகளில் வீழ்ந்த பணிந்து, "கிருபாசமுத்திரமே! நாயிற்கடையேன். அறிவிலாது செய்த பிழையைப் பொறுத்தருளி இந்த சாபப் பிணி நீங்கத் திருவருள்புரிவீராக" என்று பிரார்த்திக்க, பெருமான் திருவுளமிரங்கி, "நக்கீரனே! நீ சென்று கைலையைக் காணின் இக்கொடுநோய் நீங்கும்." என்று பணிந்து ஆலயத்துட் புகுந்து மறைந்தருளினார். தருமியார் பொற்கிழி பெற்றுக் களித்திருந்தார். வறுமை தீர எங்கும் மழைவளஞ்சுரந்தது.

இப்பால், நக்கீரதேவர், 'சிவபெருமான்றந்த சாபத்திப்பிணி திருமேனியிற் கவிதலால், இனி இந்நோய் முதிருதற்கு முன்னமே, கைலையடைந்து, தரிசித்து நிவர்த்தித்துக் கொள்ளல் வேண்டும்' எனத் துணிந்து, புலவர்களைத் தனித்தனி யழைத்து, "நட்பினார்களே! உங்களோடு உடன் வசிக்கும் வாழ்வை யிழக்கின்ற பாபியாகிய என்னை மறவாதீர்," என்றுரைத்து, வியாதி காரணமாக விலகி நிற்க, அவர்கள் அதையறிந்து, நெருங்கியணைத்து, கண்ணீர் பெருக, உளங்குழைந் தழுது, "பெறுதற்கரிய பெருந்தகையே! நுண்ணிய உணர்ச்சி மிக்க நும்மை யிழந்து பயனற்றே மாகி இருக்கும் பாபமுதிர்ச்சியை யுடையார் யாங்களே யன்றி வேறு யாவருளர்!" என்று கலங்கினர். நக்கீர தேவர், அவர்களைத் தனித்தனியே தழுவி, "நட்பிற்கு ஒரு தேயத்தராய் உடன் கலந்து பழகுதல் வேண்டுவதில்லை. உணர்ச்சி ஒத்தலே சிறப்பு என உணர்ந்த பெரியீர்! சிறியேன் பொருட்டுத் தியங்கற்க. யான் செல்கின்றேன்." என்று கூறி, அவர்களுடைய கண்ணும் மனமும் தொடர்ந்து செல்ல,

அரிதினீங்கி, இனி இம் மதுரையையும், சோம சுந்தரக் கடவுளையும், அங்கயற்கண்ணியம்மையையும், பாண்டியனையும், சங்கப் புலவர்களையும் எக்காலங் காணப் பெறுவே மெனவும், தமிழினினிமையை எடுத்து எடுத்து யாவர்க்குரைத்துவே மெனவும் நினைந்து நினைந்து வருந்தி வழிக்கொண்டு, சோழநாடு, மகதநாடு, தொண்டை நாடு என்பவற்றிலுள்ள தலங்களையும், பருப்பதம், விரூபாட்சம், கல்லியாணபுரம், காசி, திருக்கேதார முதலிய வடநாட்டுத் தலங்களையும் தரிசித்து, ஒருதினமிருந்தவூரில் மற்றொரு தினந் தங்காது விரைந்து, சிவகிருபையால், மனிதர்களா லடைதற்கரிய இமயமலையை யடைந்து, திருமேனியிலே பிணிமிகவும் வருத்தவும், உள்ளங்கால்கள் வெள்ளெலும்பாகத் தேயவும் செல்லும் வழியிலே, கடலையொத்த ஒரு தடாகத்தைக் கண்டு, நீராடி நியதி முடித்து, அதன் கரையிலே, தெய்வீகம் பெற்றாய்ப் பணைத்துத் தழைத்திருக்கும் ஒரு ஆலவிருட்சத்தடியிலே தியானித் திருந்தனர்.

அச்சமையத்திலே, அவ்வால மரத்திலிருந்து ஓரிலை பாதி சலத்திலும், பாதி கரையிலுமாக வீழ்ந்து, சலத்தில் விழுந்த பாகம் மீனும், கரையில் விழுந்த பாகம் பறவையுமாகி, மீன் சலத்திலும், பறவை கரையிலுமாக இழுக்க, நக்கீர தேவர் அப்புதுமையைக் கண்டு, அதிவியப்புடையராகி, தியானநிலை தவறியிருந்தனர்.

இருக்குங்கால், வடவாக்கினி போலும் உதராக்கினியுடையதாய், இடியைப் போலுங் கடியமுழக்கமுடையதாய் அருளென்பது சிறிதும் அணுகப் பெறாததாயுள்ள ஒரு கரிய பூதம், அவ்விடத்திலே சிவபூஜையாதிகளில் வழுவினவர்களாயி தொளாயிரத்துத் தொண்ணூற்றொன்பதின்மரை ஒரு இருட் குகையிலே அடைத்து வைத்துக்கொண்டு, இன்னும் ஒருவன் வேண்டுமென காத்திருந்து, இவரைக் கண்டவுடனே தூக்கிச் சென்று, அக்குகையினுள்ளே யடைத்து, ஆயிரவராக்கி, தன்னியமப்படி நீராடுதற்குத் தடாகத்திற்குச் செல்ல, முன்னர் அடைபட்டிருந்தவர்கள் தங்களுடைய பூர்வ புண்ணிய முதிர்ச்சியினால் நக்கீரதேவ ரெழுந்தருளியதை உணராது, அவரை நோக்கி, "நாங்கள் நெடுங்காலமாகச் சிறையிலகப்பட்டிருந்தும், இப்பூதத்தினால் உணவு

முதலியவைகளைப் பெற்று பிழைத்திருந்தோம். இன்றைக்கு உம்மாலே இதற்கிரையாகுங்காலம் சமீபித்தது" என்று அழுதார்கள். நக்கீரதேவர் அவ்வாக்கியங்களைக் கேட்டு மனஞ்சலிப்பில்லாமல், யாவர்க்கும் இன்பமெய்தலும் துன்ப மெய்தலும் இயற்கையே. ஆயினும், இவர்களது துக்கத்தை நிவர்த்தித்தலே நமக்குத் தகுதி' எனத் துணிந்து சிந்திப்பாராயினார்.

குறிஞ்சி நிலத் தலைவனாய் விளங்கும் குமரகுருபரனை வழிபடில் துன்பமனைத்தும் சூரியனைக் கண்ட பனியெனத் தொலையும். அம்மட்டோ! அப்பெருமானது ஆறெழுத்தையும் உச்சரித்தோர் அநாதி தொடங்கியே அகலுதற்கரிதாய்த் தொடர்ந்த பிறவிநோயுமகன்று, வேதாகமங்களால் விளம்புதற்கரிய மெய்யின்ப வீட்டிலே வீற்றிருக்கப் பெறுவர். இங்ஙணமாயின், இவ்வாறெழுத்தையும் உச்சரிப்போரை யணுகிய பல வேற்றுமைப் பிணிகளும் விளிந்தொழியு மென்பது ஓர் வியப்பாகுமே! ஐந்து பெரும்பூதங்களினுடைய வாய்களிலே அகப்பட்டு மாழ்கும் ஆன்மாக்களை அவற்றினீக்கிச் செம்பொற்சிறு சதங்கையணிந்த திருவடி நிழலிலே வைக்கும் எமது குமரவேளுக்கு இப்பொழுது, இங்கே இச்சிறு பூதத்தாலணுகிய இந்நோயைத் தவிர்த்தல் எளிதேயன்றி அரியதாகுமோ!' என இன்னன பல நினைந்து, அக்கடவுளுடைய பன்னிரு செவிகளும் ஆர்ப்பரிக்கும் அமுதமாகியும் யாவரோதினும் சிந்தித்த பொருள்களைச் சிந்தித்த வண்ணமே அச்சனனத்திற்றானே அளிப்பதாகியும், செய்யுள்களினுள்ளே பெரிதும், சிறந்ததும் யாதென ஆராயுங்கால் இணையின்றி எவ்வாற்றிற்கும் முன்னிற்பதாகியும் விளங்கும் 'திருமுருகாற்றுப் படை'யை அருளிச் செய்தனர்.

அன்பர் துயரை யகற்றும் அறுமுகக்குரிசில் வள்ளி நாச்சியாரது, கன்னலுமமுதமுங் கைக்கும் இனிய மொழியையுமகற்றி, தந்நிகர் பெருமான் கூறும் தமிழ்த்துதியைத் திருச்செவியிலேற்றருளி, சால மகிழ்ந்து, பசுங்கடலினிடத்தே தோன்றிய செஞ்ஞாயிறு போல மயில்வாகனத்திலெழுந்தருளி, புலவர் பெருமானை யுண்ண அப்பூதம் அணுகுங்கால், கதையினால் மோதி, முடியைத் தகர்த்து வீட்டி, யாவரையுஞ் சிறைவிடுவித்து, திருவருள் பாலித்தனர்.

உடனே நக்கீரதேவர், எமது குலமுழுதையும் ஆளும் அக்கோமானை வணங்கி, "அடியனேன் செருக்கை நோக்கி ஆலவாயமலர் முனிந்து இப்பிணி முதிர இசைத்தருளினார். யான் பயந்து கொடியனேன் பிழையைப் பொறுத்தாட்கொள்க" என்று பிரார்த்தித்த வழி, "கைலையைத் தரிசிக்கின் இது நீங்கும்" எனத் திருவருள் புரிந்தனர். அது கொண்டு திருக்கைலையைத் தரிசிக்க வந்து இவணிருந்த காலையில் இப்பூதம் இவ்வாபத்தை விளைவிக்க, தேவரீர் எழுந்தருளி நிவர்த்தித்தருளினீர்.

இனிக் கைலையையும் தரிசிப்பித்து, இந்நோயையு மகற்றி யருள்க" என்று பிரார்த்திக்க, கந்தவேள் கருணைகூர்ந்து ஆலவாயெந்தை இன்ன கைலை யென்று சுட்டியுரை யாமையால், தென் கைலையினாலும் தீப்பிணி தீருமெனத் திருவுளங் கொண்டு, பொய்கை யொன்று காட்டி, "இதில் மூழ்குவையேல் திருக்கைலையைக் காண்பாயெனவும், எம்மைத் துதித்த இப்பிரபந்தத்தை யோதினார் இஷ்டசித்திகளை அடைவரெனவும், கட்டளையிட்டு மறைந்தருளினார்.

நக்கீரதேவர், அக்குழகனை வணங்கி, அப்பொய்கையிலே மூழ்கி, மேற்கடலிற் படிந்த சூரியன், கீழ்க்கடலிலெழுந்தாற் போல, தென்கைலை தோன்றப் பொன்முகரியிலெழுந்தார். தேவர்கள் விண்மழையெனக் கற்பகப் பூமாரி சொரிந்தனர். நக்கீரதேவர், வியாதியகன்று, கடைந்தெடுத்த மணிபோலத் திருமேனிவிளங்க, நெஞ்சி லன்பு பெருக, விழிகளில் நீர் சொரிய கரங்களைச் சிரமேற் குவித்து, நாகலிங்கப் பெருமானையும், ஞானப்பூங்கோதை யம்மையையும் பலமுறை பணிந்தெழுந்து, ஐந்தெழுத்தையும் அகலாதுச்சரித்து, அன்புமயமாகி, கைலை வேறு காளத்தி வேறு என்னுஞ் சிந்தனை யின்றி, கைலைபாதி, காளத்தி பாதியாகக் கலந்து, ஒற்றுமைப்படுத்தி ஒரு வெண்பாவந்தாதியைப் பாடியருளினார்.

அதைத் திருச்செவியேற்று மகிழ்ந்த காளத்தி நாதர் தரிசனந் தந்தருளி, "வேண்டிய வரம் யாது?" என வினாவிய வழி, "எளியேனது உடலைக் கவிந்த இப்பிணியை ஒழித்தருளியது போலவே, அறிவைக் கவிந்த ஆணவப் பிணியையும் அகற்றியருளல்

வேண்டும்" என வேண்டிக் கொள்ள, பெருமான், சத்திநிபாதத்தால் பந்தபாசத்தை முற்றக் களைந்து, திருவடி நீழலிலே இருத்தியருளினார்.

## பரஞ்சோதி முனிவரும் திருவிளையாடற் புராணமும்

மதுரைப்புராணத்தில் சோமசுந்தரப் பெருமானின் செயற்கரும் செயல்கள், வியத்தகு நிகழ்ச்சிகள், மதுரைப் பெருமானோடு தொடர்புடைய அரசர்கள், அடியார்கள், பறவைகள் விலங்குகள் உள்ளிட்ட அருட்செயல்களை உட்படுத்திப் பழம்கதையோடு புதுமெருகேற்றி இப்புராணத்தைப் பாடியுள்ளார்.

திருவிளையாடற்புராண ஆசிரியரான பரஞ்சோதி முனிவர் தென்மொழி, வடமொழி, திருமுறைகள், சித்தாந்த சாத்திரங்கள் இவற்றை ஐயம் திரிபு அறக் கற்றவர். தம் தந்தையிடம் முறையாகத் தீட்சை பெற்றவர். சிவ பக்தியும், குருபக்தியும் அடியார் பக்தியும் மிக்கவர். அங்கயற்கண்ணம்மை திருவடியில் மிக்க அன்பு பூண்டவர். அதனால்தான் "சத்தியாய்" என்று தொடங்கும் காப்புச் செய்யுளுடன் நூலைத் தொடங்குகின்றார்.

இவர், சிவபெருமான் திருக்கோயில் கொண்டிருக்கும் பல தலங்களுக்குச் சென்று, தரிசித்து மதுரையை அடைந்து, அங்கயற்கண்ணம்மையுடன் எழுந்தருளியிருக்கும் சோமசுந்தரப் பெருமானைத் தரிசித்து, அங்கு தங்கி இருந்தார். அப்போது, மீனாட்சியம்மை தன் கனவில் தோன்றி 'எம்பெருமானின் திருவிளையாடல்களைப் பாடுவாய்' என்று பணித்தார்.

அப்பணியைத் தலைமேற்கொண்டு, இந்நூலைப் பாடி முடித்தார். சொக்கேசர் சந்நிதியில் அறுகாற் பீடத்திருந்து (பாடல் எண்21) இதனை அடியார்களும் புலவர்களும் கூடிக்கேட்க அரங்கேற்றினார் என்பர்.

திருவிளையாடற்புராணம், முருகப்பெருமானால் அகத்தியருக்கு அருளப் பெற்றுப் பின்னர், அகத்தியரால் பிற முனிவர்கள் அறிந்தனர். அவர்கள் சொக்கலிங்கப் பெருமானை வழிபட்டுப் பூசித்தனர். என்று இப் புராணம் கூறுகின்றது.

இறைவனின் அருள் விளையாடல்கள் அறுபத்து நான்கு என்பது பண்டைக்காலம் தொட்டு வந்த ஒரு மரபு.

கதை நிகழுமிடமோ, சங்கத் தமிழ்வளர்த்த மதுரையாகும். இதில் உள்ள மாந்தரோ தமிழ் மண்ணினர்.

(ஒப்புமை: திருக்கோயில்: ஜனவரி, 2003. பக்.19)

## திருவிளையாடற் புராணமும் மதுரையின் இடப் பெயர்களும்

இறைவன் உயிர்கள் மீது கொண்ட விருப்பத்தின் காரணமாக விளையாடும் விளையாடல்களே திருவிளையாடல்கள் ஆகும். உயிர்மீது கொண்ட பேரருளால் சிவபெருமான் எளிவந்து மதுரை மண்ணில் நடத்திய திருவிளையாடல்களைக் கூறும் புராணங்கள் ஐந்து உள்ளன. அவை:

1. கல்லாடர் இயற்றிய கல்லாடம்.
2. பெரும்பற்றப் புலியூர் நம்பி இயற்றிய திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம்
3. அனதாரியப்பர் இயற்றிய சுந்தரபாண்டியம்
4. பரஞ்சோதி முனிவர் இயற்றிய திருவிளைாடற் புராணம்
5. வீமநாத பண்டிதர் இயற்றிய கடம்பவனபுராணம்.

ஆகியனவாகும்.

இப்புராணங்கள் கூறும் திருவிளையாடற் கதைகள் இலக்கியங்களில் மட்டுமல்லாது கலைகளிலும், பிறவழிகளிலும் பல தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன. அவற்றுள் மதுரையிலும் மதுரையைச் சார்ந்த சில பகுதிகளிலும் வழங்கப்பட்டுவரும் இடப்பெயர்களில் திருவிளையாடற் புராணத்தின் தாக்கம் எந்தளவு உள்ளது என்பதை அறிய முற்படும் வகையில் இக்கட்டுரை அமைகிறது.

**மதுரையின் மாண்பு:**

திருவிளையாடற் கதை கூறும் புராணங்கள் எல்லாம் சிவபெருமான் திருவிளையாடல்களை மதுரையில் நடத்தினார் என்று கூறுகின்றன. இதற்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பழமை வாய்ந்த மதுரைநகர் பௌராணீக, இலக்கிய வ[illegible]ற்றுப் பெருமையுடையது என்பது ஒரு காரணமாகும்.

சைவசமயத்தில் துவாதசாந்தத் தலம் என்ற சிறப்பினை உடையது மதுரையாகும் என்பதால் இம் மதுரையில் திருவிளையாடல்கள் நடந்தனவாகக் கூறியிருக்கலாம்.

மேலும் திருவிளையாடற்புராண நூலாசிரியர்கள் அனைவரும் பிறந்தது எங்கிருப்பினும் தஞ்சமடைந்தது பாண்டிய நாட்டில்தான். எனவே, தங்களை ஆதரித்த பாண்டிய நாட்டைப் போற்றும் வகையிலும் திருவிளையாடல்கள் மதுரையிலேயே நடந்தன என்று பாடியிருக்கலாம்.

மேற்கூறியவையே அன்றி மதுரையில் திருவிளையாடல் நடந்ததற்கான சின்னங்களும் சான்றுகளாக நமக்குக் கிடைத்துள்ளன. சின்னங்கள் என்கிற அளவில் மதுரையில் வழங்கிவரும் சில இடப்பெயர்களையும் காட்டலாம்.

**திருவிளையாடல்களால் தோன்றிய இடங்களின் பெயர்கள்:**

திருவிளையாடல் நிகழ்வுகள் நடந்ததாகக் கூறப்படும் இடங்களுக்கு அந்தத் திருவிளையாடல் நிக[illegible]வு காரணமாகவே

பெயர்கள் அமைந்தன என்பது முற்றிலும் ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல. எல்லா இடங்களுக்கும் இம்முறையில் பெயர்கள் ஏற்பட்டிருக்கவும் வாய்ப்பில்லை.

புராண ஆசிரியர் ஏற்கனவே வழங்கி வந்த அந்த இடத்தின் பெயருக்கேற்ப, ஒரு கதையை உருவாக்கி, அதன் காரணமாகவே அவ்விடத்திற்கு அப்பெயர் உருவானது என்று கூறியிருக்கலாம். இவை திருவிளையாடல் நிகழ்வுகளை உண்மை யென்று நிலைநாட்டவும் அப்புராணத்தின் காலம் பழமை சான்றது என்று நிறுவுவதற்கும் உண்டாக்கப்பட்டவை என்றிடலாம்.

**இடப்பெயர்கள்:**

பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடற்புராணத்துடன் கூறியுள்ள இடப்பெயர்களோடு பெரும்பற்றப்புலியூர் நம்பியின் திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்துள் கூறியுள்ள இடப்பெயர்களும் ஆய்விற்குரிய களமாக இக்கட்டுரையில் எடுத்துக்கொள்ளப் படுகிறது. பரஞ்சோதி முனிவரைக் காட்டிலும் பெரும்பற்றப் புலியூர் நம்பியே தம் நூலுள் திருவிளையாடல்கள் நடந்த இடங்கள் அதிகமாகக் கூறியுள்மையே இதற்கான காரணம் ஆகும். திருவிளையாடற் புராணத்துள் கூறப்பட்டுள்ள இடப்பெயர்கள்

1. ஊர்ப்பெயர் 2. தெருப்பெயர்கள் 3. மண்டபங்கள் 4. மலைகள் 5. குளங்கள் என்று வகைப்பாடு செய்யலாம்.

**1. ஊர்ப்பெயர்கள் :**

**ஐராவதநல்லூர்:**

ஒரு சமயம் துருவாச முனிவர் காசியில் தம் பெயரால் இலிங்கம் ஒன்றை நிறுவிப் பூஜை செய்து வருகையில் சிவபெருமானின் முடியினின்றும் ஒரு மலர் விழுந்தது. அதனைக் கையிலேந்தி வந்து, வெற்றிவலம் வந்த இந்திரனின் கரத்தில் தந்தார். அவன் அம்மலரைப் பெற்றுத் தனது யானையாகிய ஐராவதத்தின் மேல் வைத்தான். அவ் யானை அந்த மலரைக் கீழே போட்டுத் தன் காலால் மித்தது.

அதைக் கண்டு வெகுண்ட துருவாசர் ஐராவத்தைக் காட்டானையாக ஆயிரம் ஆண்டுகள் வாழும்படி சபித்தார். முனிவரது சாபத்தினால் காட்டானையாக மாறி ஐராவதம் பூவுலகில் திரிந்து கடம்பவனத்தில் சொக்கரைக் கண்டு வழிபட்டதால் சாபம் நீங்கியது. சாபம் நீங்கிய ஐராவதம் தன் பெயரில் ஒரு நகரினை அமைத்தது. அந்நகரே "ஐராவத நல்லூர்" என வெள்ளையானை சாபந்தீர்த்த கதை கூறுகின்றது. இவ்வூர் வண்டியூர் மாரியம்மன் தெப்பக்குளத்திலிருந்து ஒரு கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது.

**சாம்பல் நத்தம்:**

கூன்பாண்டியனின் வெப்பு நோயைத் தீர்த்த பிறகு சமணர்களும் திருஞான சம்பந்தரும் அனல்வாதம் புரிந்தனர். இரு திறத்தினரும் தங்கள் பாடல்கள் எழுதப்பட்ட ஏடுகளைத் தீயிலிட்டனர். பச்சை ஓலையில் எழுதியிட்ட சமணர்களின் ஏடு கருகிச் சாம்பலானது. ஆனால், திருஞான சம்பந்தரின் ஏடானது கருகாமல் அப்படியே இருந்தது. ஏடுகள் எரிந்த இடமே 'சாம்பல் நத்தம்' என்று வெப்புத் தீர்த்த கதை கூறுகின்றது. சாம்பல் நத்தம் என்ற பெயர் இன்று 'சாமநத்தம்' என்று வழக்கிலுள்ளது.

**திருவேடகம்:**

திருஞானசம்பந்தரும் சமணர்களும் புனல்வாதம் புரிந்தபோது திருஞானசம்பந்தரின் பாடல்கள் அடங்கிய ஏடு எதிரேறிச் சென்றது. அவ்வேடு எதிர்ந்து சென்ற இடம் 'திருவேடகம்' என்று பெயர் பெற்றதாகப் புராணக் கதை கூறுகின்றது.

**கட்டுநல்லூர்:**

உக்கிர குமார பாண்டியன்மீது பகைமை பூண்ட இந்திரன், பாண்டிய நாட்டில் மழைவளம் குன்றச் செய்தான். அதனால் சினமுற்ற பாண்டியன் மழை தரக்கூடிய புட்கலாவிருத்தம், சங்காரித்தம், துரோணம், காளாமுகி ஆகிய நான்கு மேகங்களையும் சிறைப்பிடித்து வைத்தான். அவ்வாறு நான்கு மேகங்களையும் சிறைப்பிடைத்த இடம் "கட்டுநல்லூர்" என்று திருவிளையாடற்புராணம் கூறுகின்றது.

**தனிச்சயம்:**

மேகங்கள் நான்கினையும் பாண்டியன் சிறையில் இட்டதால் இந்திரனுக்கும் பாண்டியனுக்கும் போர் நிகழ்ந்தது. அவ்விருவரும் தனித்துப் போர் புரிந்த இடமே "தனிச்சயம்"எனப் பகர்கின்றது, புராணம். இப்பெயர் இன்று "தனிச்சயம்"என்று வழக்கிலுள்ளது.

கட்டு நல்லூர், தனிச்சயம் என்ற இரு இடப்பெயர்களும் பெரும்பற்றப்புலியூர் நம்பி நூலில் மட்டுமே, இந்திரன் முடிமேல் வளையெறிந்த திருவிளையாடலில் கூறப்பட்டுள்ளன. இப்பெயர்கள் பரஞ்சோதி முனிவர் நூலில் இடம்பெறவில்லை.

**உ. தெருப்பெயர்கள்:**

"எழுகடல் தெரு"

தடாதகைப் பிராட்டியாக உமை அவதரித்த போது அவளது தாயான காஞ்சனமாலை கடல் நீராடும் பொருட்டு, சோமசுந்தர பாண்டியனாய் வந்த சிவபெருமான் ஏழு கடல்களையும் மதுரைக்கு அழைத்திட்டார். அங்ஙனம் அவர் அழைத்த ஏழு கடல்களும் வந்து சேர்ந்த இடம், (குளம் உள்ள தெரு) "ஏழுகடல் தெரு" எனப்படுகிறது. இதன் அருகில் காஞ்சனமாலை கோயில் இன்றைக்கும் உளது. இஃது, ஏழுகடலழைத்த திருவிளையாடலை நிறுவுதற் பொருட்டு அமைந்துள்ள ஒன்று எனலாம்.

**"வளையல்காரத் தெரு":**

தாருகாவன முனிவர்களது மனைவியரின் சாபத்தினை நீக்குவதற்காக சிவபெருமான் வளையல் விற்கும் வணிகனாய் வடிவம் தாங்கி, அப்பெண்கள் வாழ்ந்த வீதியில் வந்தார். அங்ஙனம் சிவபெருமான் வளையல் வணிகராய் வந்த திருவிளையாடலை மெய்ப்பிக்கும் வகையில் அத் தெருவிற்கு "வளையல்காரத் தெரு" என்ற பெயர் அமைந்துள்ளது எனலாம்.

அடுத்து:

## மண்டபங்கள்:

### 1. அன்னக்குழி மண்டபம்:

சோமசுந்தரர் - தடாதகைப் பிராட்டியார் திருமணத்திற்கு வந்திருந்தவர்கள் அனைவரும் உண்ட பிறகும் உணவு எஞ்சியதனைத் தடாதகையார் சிவபெருமானிடம் கூறினார். அதைக் கேட்ட சிவபெருமான் குண்டோதரன் என்னும் குள்ள பூதத்தின் வயிற்றில் வடவைத்தீயை உண்டாக்கினார்.

அப் பூதம் அத்தனை உணவு வகைகளையும் உண்ட பிறகும் பசியடங்காமல் தவித்தது. அதைக் கண்ட சோமசுந்தரக் கடவுள் அன்னபூரணியை நினைத்தார். உடனே நான்கு குழிகளில் தயிரன்னம் நிரம்பியது. அதனை உண்ட பூதம் பசியடங்கியது. தயிரன்னம் வந்த குழிகள் உடைய மண்டபம் 'அன்னக்குழி மண்டபம்' என்று அழைக்கப்படுகிறது.

### 2. சங்க மண்டபம்:

பத்து அசுவமேத யாகங்கள் நடத்திய பிரமதேவன், கங்கையில் நீராடத் தன் மூன்று மனைவியருடன் சென்றபோது, வழியில் சரசுவதி மட்டும் ஒரு விஞ்சை மகளின் இசையில் மயங்கி நின்று விட்டாள். பிரமதேவன் மற்ற இருவருடன் சென்று நீராடி எழுந்தார். இதனால் சரசுவதி பிரமதேவன் மேல் கோபங்கொண்டதால், பிரமதேவன் அவளை மனிதப்பிறவி எடுக்கச் சபித்தார். பின்னர் அவளது நிலைகண்டு இரங்கி, அவளது வடிவாகிய முதலெழுத்து 51-இல் ஆகாரம் முதல் ஹகாரம் வரை உள்ள 48 எழுத்துக்களும் 48 புலவர்களாகப் பிறக்கட்டும் என்று கூறினார்.

அப்புலவர்கள் வங்கிய சேகர பாண்டியனின் ஆட்சியின்போது பாண்டிய நாட்டிற்கு வந்தனர். நாற்பத்தெட்டு புலவர்களையும் பாண்டியன் வரவேற்று உபசரித்தான். அப்புலவர்களுக்காக, சோமசுந்தரக் கடவுளின் கோயிலுக்கு வடமேற்குத் திசையில் ஒரு சங்க மண்டபத்தை அமைத்தான் என்று சங்க மண்டபம் குறித்துத் திருவிளையாடல் கதை உள்ளது.

**மலைகள்:**

**1. யானைமலை:**

விக்கிரம பாண்டியனை வஞ்சகமாகக் கொல்லக் கருதிய சமணர்கள் அபிசார வேள்வி நடத்தி, யானையைத் தோற்றுவித்து மதுரையை அழிக்க ஏவினர். அப்போது சிவபெருமான் விற்சேவகனாய் வந்து அம்பு விடுத்து அந்த யானையைக் கொன்றார். அந்த யானை இறந்து வீழ்ந்த இடம் 'யானைமலை' என்றாயிற்று.

**2. நாகமலை:**

பின்னர், அனந்தகுண பாண்டியனின் ஆட்சிக் காலத்தில்,சமணர்கள் மீண்டும் வேள்வி நடத்திக் கொடிய நாகத்தினை உருவாக்கினர். அந்த நாகத்தை மதுரையை அழித்திட ஏவினர். அந்த நாகத்தினை அனந்தகுண பாண்டியன் சிவபெருமான் அருளால் அழித்தான். அந்த நாகம் இறந்து விழுந்த இடமே "நாகமலை" என்றழைக்கப்படுகிறது.

**3. பசுமலை:**

சைவ சமயத்தைச் சேர்ந்தவர்கள் பசுவிற்கு ஊறு செய்யமாட்டார்கள் எனக் கருதிய சமணர்கள், அனந்தகுண பாண்டியன் காலத்தில், யாகம் நடத்தி பசுவினைத் தோற்றுவித்தனர். அப்பசுவை அடக்கி வரும்படி இறைவன் இடபத்தைப் பணித்தார். அவ் இடபம், பசுவினை அழிக்காமல் தன் அழகினைக் காட்டி மயங்கச் செய்து அடக்கியது. அப்பசு அடங்கி விழுந்த இடம் 'பசுமலை' எனப்பட்டது.

**இடபமலை:**

பசுவினை அடக்கிய இடபம், தனது தூலசரீரத்தை அவ்வித்திலேயே விட்டுச் சென்றது. அவ்விடம் 'இடபமலை' என்றாயிற்று என்று திருவிளையாடற் புராணம் கூறுகின்றது.

**குளங்கள்:**

**1. வலைவீசியம்மன் தெப்பக்குளம்:**

கைலையில், சிவபெருமான், ஆகமங்களை விளக்கியபோது, அம்மை அதனைக் கேளாமல் இருந்தாள். அதனால் கோபம் கொண்ட சிவபெருமான் அவளைப் பரதவப் பெண்ணாகப் பிறக்கும்படி சபித்திட்டார். அச்சாபத்தால், பரதவப் பெண்ணாகப் பிறந்த பார்வதி தேவியை மணம் முடிக்க, வலைஞராய் வந்தார், சிவபெருமான். அங்ஙனம் வந்தவர், பரதவர் மன்னனின் அறிவிப்பிற்காகாக வலைவீசி, சுறாவடிவில் இருந்த நந்திதேவரைப் பிடித்தார். இங்ஙனம் அவர் வலைவீசி மீனைப் பிடித்த இடம், 'வலைவீசியம்மன் தெப்பக்குளம்' என்று கூறப்படுகிறது.

**2. பூதங்கண்ட குளம்:**

தடாதகையின் திருமணத்தின்போது பசியால் துடித்துப் பின்னர் பசியடங்கிய குண்டோதரன் தாகம் வந்து தவித்தான். அவனுக்காக சிவபெருமான் கங்கையை வைகையாக ஓடிவரச் செய்தார். அந்நீர் பருகித் தாகம் நீங்கிய குண்டோதரன் தன் பெயரை நிலைநாட்டப் பல சிவத் தொண்டுகளைச் செய்தான். அதற்காகக் குண்டோதரன் வெட்டிய குளத்திற்குப் 'பூதங்கண்ட குளம்' எனலாயிற்று.

**பரம்பு:**

கூடைக்தட்டிய பரம்பு.

மேற்கண்ட குளம் வெட்டிய மண்ணை எடுத்துக் கரையில் கொட்டிய கூடையைக் குண்டோதரன் தட்டிய இடத்திற்குக் "கூடைதட்டிய பரம்பு"என்ற பெயர் உண்டாயிற்று. மேற்கூறிய இவ்விரண்டு இடங்களும் திருப்பரங்குன்றத்திற்கு வடக்கே உள்ளன. இவ்விரு பெயர்களும் பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடற் புராணத்தில் மட்டும் கூறப்பட்டுள்ளன.

**நரிக்குடி:**

மாணிக்கவாசகர் பொருட்டுச் சிவபெருமான் நரிகளைக் பரிகளாக்கிய இடமே "நரிக்குடி" எனப்பட்டது.

**செல்லூர்:**

குதிரைச் சேவகனாய் வந்த சிவபெருமான் அரிமர்த்தன பாண்டியனிடம் கயிறு மாற்றிக் கொடுத்தபின், அன்றிரவு குதிரைகளாக வந்த நரிகள் எல்லாம் தம் பழைய உருவினைப் பெற்றுச் சென்ற இடம் "செல்லூர்" எனலாயிற்று.

மேற்கண்ட இரு செய்திகளும்,பெரும்பற்றப் புலியூர் நம்பி திருவிளையாடற் புராணத்துட் கூறப்பட்டுள்ளன.

**கழுவர்படைவீடு (கழுவர்கடை) :**

திருஞானசம்பந்தருடன் அனல்வாதம், புனல்வாதம் புரிந்து தோற்ற சமணர்கள் தாமே கழுவில் ஏறினர் என்றும், அவர்கள் கழுவில் ஏறிய இடம் "கழுவர் படை வீடு" என்று பெரும்பற்றப்புலியூர் நம்பி கூறுகின்றார். இவ்விடம் இன்று "கழுவர்கடை" என்று வழங்கப்படுகிறது.

இங்ஙனம் பெரும்பற்றப்புலியூர் நம்பி தம் நூலில், பரஞ்சோதி முனிவரின் நூலைக்காட்டிலும் அதிகமான அளவில் இடப்பெயர்களைக் கூறியுள்ளார்.

ஆதாரம்: 'உழுவாரம்' நவம்பர், 2003. பக்கம்.26-28.

மாணிக்கவாசகருடைய வாழ்க்கை வரலாறு பற்றிக் கூறும் நூல்கள்:

1. பெரும்பற்றப்புலியூர் நம்பி இயற்றிய திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம்.
2. கடம்பவன புராணம்
3. கடவுள் முனிவர் இயற்றிய திருவிளையாடற் புராணம்.
5. திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளை இயற்றிய திருப்பெருந்துறைப்புராணம்.
6. உத்தரகோச மங்கைப் புராணத்தில் பார்ப்பதி தவம்புரிந்த அத்தியாயம்.
7. வடமொழி ஆலாசிய மான்மியம்.
8. ஆதிகைலாச மான்மியம்.
9. மணிவாசக புராணம்.

ஆதாரம் : "சிவசாந்தலிங்கர்" சனவரி, 2003. பக்.22.

**பிற செய்திகள்:**

ஆவணி மூலத்தன்று சோமசுந்தரக் கடவுள் வந்தி அம்மைக்காகக் கூலியாளாக வந்து பிட்டுக்கு மண் சுமந்த வரலாற்றினைக் கூறுமுகத்தான் மதுரையில் 'பிட்டுத்திருவிழா' நிகழும். கூலியாளாக வந்து பிட்டுக்கு மண்சுமந்த இடம், "பிட்டுத் தோப்பு" என வழங்கப்படுகிறது.

தஞ்சையில், கீழவாசல் பகுதியில் "பூமரத்தான் கோயில் தெரு" என்ற ஒரு தெரு உளது. சோமசுந்தரக் கடவுள், பூமாலை தரித்துக்கொண்டு, 'ராவுத்தன்' வேடங்கொண்டு புறப்பட்டு நரிகளைக் குதிரைகளாக்கிக் கொண்டு மதுரையை அடைந்தார் என்ற ஒரு செவிவழிச் செய்தி கூறுகிறது.' "பூமாலை ராவுத்தன் கோயில் தெரு" என்பது மருவி 'பூமரத்தான் கோயில் தெரு' என்று வழங்குவதாகக் கூறுவர்.

மதுரைக்குக் கிழக்கே சுமார் 5 கல் தொலைவில் மாட்டுத் தாவணி பேருந்து நிலையத்திற்குக் கிழக்கில் 'ஒத்தக்கடை' என்ற சிற்றூர் உளது. இவ்வூரின் நெடுஞ்சாலை அருகில் உள்ள ஒரு மலை "யானையின் வடிவில்"அமைந்துள்ளது அதிசயிக்கத்தக்கது. நான்கு கால்களையும் மடக்கி, துதிக்கையை முன்னே நீட்டி அமர்ந்திருப்பது போன்றுளது. "யானைமலை"ச் செய்தி முன்பு கூறப்பட்டுள்ளது.

திருமருகலில், திருஞானசம்பந்தர், அரவம் தீண்டி இறந்த வணிகவாலிபனை உயிர்பெற்றெழச் செய்து, அத்திருக் கோயிலிலுள்ள, வன்னிமரம், கிணறு, சிவலிங்கம் ஆகிய மூன்றையும் சான்றாகக் கொண்டு திருமணம் நடத்தி வைத்தார். மதுரையில் இத்திருமணத்தினை ஏற்காத வணிகப் பெண்ணின் பெற்றோர், சுற்றத்தாருக்காக, திருமகலில் இருந்த வன்னி, கிணறு, சிவலிங்கம் ஆகிய மூன்றும் மதுரை வந்து சான்று கூறின. இவை மூன்றும் அமைந்துள்ள இடம் மீனாட்சி அம்மன் சந்நிதி அருகில் யானை கட்டும் இடம் எதிரில் உள்ளது.

கரும்புதின்ற கல்யானை கோயிலின் எதிர்ப்புறம் உள்ள ஆயிரக்கால் மண்டபத்தின் அருகில் உள்ளது.

பொற்றாமரைக்குளம், அம்மன் சந்நிதியின் எதிர்ப்புறம் உள்ளது.

மற்றும் பல வரலாற்றுச் செய்திகள் காணக்கிடைக்கின்றன.

...

## கூடற் புராணம்

காப்பு

பொன்பூத்த புரிசடையும் பூண்மணிப்பொன் னீண்முடியு
மின்பூத்த வொருபாலும் திருமார்பும் வெண்ணீறு
மன்பூத்த மான்மதமு மானிடமும் வளையுமணிந்
தன்பூற்றி யுலகளிக்கு மவரேயெம் வினைதவிர்ப்பார். (1)

விட்டாங்கு திசைப்பாலர் வசக்கண் மருத்துவர் வேதன்
கட்டாங்கச் சனகர் சண்டர் குமுத ருத்திரர் காக்கு
மட்டாங்க விமானத்தி லமர்ந்துநின்று துயின்றி யோக
நிட்டாங்க முறைந்தவரை நெஞ்சுருகி யஞ்சலிப்பாம். (2)

காப்பு முற்றும்.

## கடவுள் வணக்கம்

உலகெலாம் விளங்குஞ்சோதி யுதயமா யகிலமாகிப்
பலகலா பேதமாகி யபேதமாம் படிவமாகி
யலகிலாப் பகுதிமாயைக் கதிகனாம் புருடனாகி
யிலகிய பரந்தா மத்தை யிதயதா மரையுள்வைப்பாம். (1)

வெண்ணிற வளைகோ டேந்தி விண்டுடை மதமே யோங்கிப்
புண்ணிய வடிவாய்ஞான போதக முகத்தோ னாகிக்
கண்ணகு முளரி யான்பொற் கடைத்தலைக் காவல் பூண்டு
தண்ணளி புரியும் சேனைத் தலைவனை வணக்கஞ் செய்வாம்!
(2)

வேறு

மேகத்துட் படுமுரு மரன் மின்னுவே பிரம
னாகத்தோன் றுருவி ரண்டையு மொன்றுளே யடக்கி
நாகத்துட் படுத்தறி துயிலமரு நாரணப்பே
ரேகத்துட் பொருளெவ னவனிணை யடிபணிவாம்! (3)

பிலங்கடந்த சேட்டனந் தனைப்பெருந் திருவடியை
யுலங்கடந்த தோளறு மனையுந்தி மேற்றோன்றித்
தலங்கடந்த வன்றன்னை யைம்படைகளைப் பதினென்
பலங்கடந்த தொல்பரம பாகவதரைப் பணிவாம்! (4)

அன்றுமாட னுட்கிடத்தி யவுபநிட தார்த்த
நின்றுநீ வெளிப்படுத்தென நெடியமால் பணிப்பச்
சென்றுகூட லிற்புறமதத் திரள்களைச் சிதைத்து
வென்றுவான் கிழிவீட்டினார் தாட்டுணை விடேமால். (5)

வேறு

பாற்கடல் புதுவை யாகப் பட்டர்கோன் வரைமத் தாக
மேற்குணங் கயிற தாக விண்டுவே மதிக்குங் காலை
மாற்கணி துளவ மென்று மருந்துடன் பிறந்த கோதை
காற்கம லங்கள் சூடச் சிவந்ததென் கவிவெண் மாலை! (6)

வேறு

வில்லாண்ட வடவரையான் மணம்புணர
வட்டாங்க விமான மென்னு
மில்லாண்டம் புயன்சனகர் காசிபனார்
பிருதுவம் பரீடன் கூட
றொல்லாண்ட புரூரவசு மலையகேதனன்
முதலோர் தொழப்புத் தூரான்
பல்லாண்டு பாடவந்த மல்லாண்ட
தோளனடி பணிதல் செய்வாம். (7)

மதியிருக்குந் திருமுகமுங் கனியிருக்குந்
துவர்வாயும் வழுத்து மன்பர்
துதியிருக்குங் குழைக்காதும் புயலிருக்குங்
குழற்கானுந் துணைக்கண் மானும்
பதியிருக்கும் பொருப்பனைய தனதடமுந்
துடியிடையும் பதுமக் கையுங்
கதியிருக்கும் குடிபோன்ற மதுரவல்லி
யார்பதமுங் கருத்துள் வைப்பாம். (8)

புறவடியே புத்தகமாய் வளைக்கரமே வீணையாய்ப்
போதன் காத
லுறவடிக்கொண் டெழுந்தடர்ந்த திருமுலையே குண்டிகையா
யுண்மை யேதன்
னிறவடிவாய் வெண்கலையே நுண்கலையாய்த் தரித்தெளியே
னெஞ்சந் தானே
நறவடிவெண் டாமரையா யுறைந்தருள்வாள் அன்னம்போ
னாவின் செல்வி. (9)

நத்தினையும் வளையினையும் பொறித்துடங் கரத்தொருத்தன்
ஞால மூல
வித்தினையும் வேரினையுங் கடந்தபிரான் சேலாமை
வெண்கோட் டேனந்

சித்தினைய வரிகுறண்மூன்றி ராமர்கண்ணன் கற்கியெனச்
சிறந்த மூர்த்தம்
பத்தினையு மெட்டினையும் பத்திநையும் படியுருகிப்
பரவு வாமே ! (10)

தனிப்புளி யினிலினிப்பு மிகுந்தமிழ்ச் சுருதிநிறுத்த வருஞ்சுட
கோபனாசான்
செனிப்பொழிந்த பொய்கையார் பூதத்தார் மயிலையர்
கோன்சேரன் புத்தூர்
முனிப்பெருமாள் றொண்டரப் பொடிபாணர் மழிசை மங்கை
முதல்வன் கோதை
பினிப்பகலு மதுரகவி பாத மலரோத மலம் பாருமன்றே. (11)

வேறு

தமிழ்க்கடன் ஞாலமுற்றும் வயிணவச் சமயத்தித்திச்
சிமிழ்புறு புறமதங்க டெரிந்துவே ரகழ்ந்து போக்கிக்
குமிழ்ப்புறு புளகாநந்தக் குஞ்சியஞ் சலிக்கை கூப்பி
நிமிர்க்குமெம் பெருமானாரை நினைத்தலுஞ் சனித்தல் போமே.
(12)

அண்டகோ ளத்தாரென்னு மாரியத் தமிழாலன்று
தண்டமிழ்ச் சங்கம்வென்ற சடகோபர் தாமே சிற்பங்
கண்டதோர் வடிவாற் பேசத் திரைப்புறத் திருங்கிக் காலத்
துண்டெனப் பதின்மர் பாடலுத்தரித் தவர்தாள் போற்றி. (13)

கடவுள்வணக்க முற்றும்
ஆக கவி - 15.

## அவையடக்கம்.

கோதையார் தாதை யார்தாங் கூறுபல் லாண்டு கேட்குங்
காதையார் நிரப்ப வல்லா ராயினுங் கருணை மாயன்
சீதையார் பொருட்டாற் சென்று சபரியு மணிலுஞ் செய்த
பேதையார் சிறப்பென் கொண்டா னவன்செயல் பேசற் பாற்றோ?
(1)

தாதுலாம் பூவின் செல்வி தன்னிலு நலத்த வாய
காதலாய் விண்டு சித்தன் கவித்தமிழ்க் கின்பங் கூர்ந்தா
னாதலா லுந்தி பூத்த வண்ணல்சீர் பாட வல்லார்க்
கீதலா லுறுதி யுண்டோ யான்றுணிந் ததுவு மென்னாம்.(2)

சூதங்கந் தகம்பா டாணஞ் சுத்தியாற் குற்றம் போக்கி
மீதங்கங் கூட்டு மாயுள் வேதியன் போல மேலோர்
மாதங்கங் காத்த கூடன் மதுரையான் புகழ்நான் பேசும்
போதங்கண் டேத மெல்லாம் போக்கிநன் காக்கு வாரே. (3)

மச்சகந் தியைப்ப ராச மாமுனி சுகந்தி யாக்கி
முச்சகம் புகழக் கூடி முயங்கிமேன் மகப்பெற் றாங்கு
நிச்சலும் பயனொன் றில்லே னிகழ்ந்துபுன் கவியீ தேனும்
விச்சைகற் றுணர்ந்த மேலோர் விழுப்பயன் மிகச்செய் வாரே!
(4)

அவையடக்கம் முற்றும்.

ஆக கவி - 19.

### வாழ்த்து.

வருணமோர் நான்கு மோங்க வகுத்தவாச் சிரம நான்கும்
பெருகவான் மாரி பெய்க பெருங்கொடை வேந்த னீதி
தருகநான் மறையா றங்கந் தழைப்பநா ரணன்சீர் மல்கத்
திருமகள் கருணை யாலைத் திறத்தரும் வாழ்க மாதோ !

வாழ்த்து முற்றும்.
ஆக. கவி - 20.

### புராண வரலாறு

பூதங்கள் கோடி புவனங்கள் புத்தேளிர் யாரு
மாதங்கு மார்பன் மலர்நாபியிற் றோன்று முன்னம்
வேதங்கள் கண்ட மிருதி மிருதிக்குள் வரும்பு ராண
பேதங்க டம்முட் பிரமாண்ட புராண மன்றோ ? (1)

ஆண்டப் புராணத் தருங்கேத் திரமான் மியப்பேர்க்
காண்டத்தி லெண்பத்தி ரண்டாங் கதையாத் தொடங்கி
யீண்டப் பனிரண் டினிதாகத் தொண்ணூற்று மூன்றாய்த்
தூண்டுற்ற கூடன் மதுராபுரிப் பெற்றி சொல்லும். (2)

முன்னா ரணன்சொன் முகத்தாலொரு நான்மு கற்குச்
சொன்னா னதனைச் சுரர்மாதவர் சூழ்ந்து போற்ற
நன்னா ரதனுக் கயன்கூறலு நார தன்றான்
பின்னாள் வியாதற் குணர்த்துங்கதை யீது பேசின் ! (3)

ஈறாறு நாமத் தொகையாயின வத்தி யாயத்
தோரா றதிற்பாதி யென்றோர் கிரந்தங்க ளேனும்
யாரா தரத்தொ டுரைத்தாரெவர் கேட்க லுற்றார்
நாரா யணற்கங் கவரேயுவப் பாய நல்லோர். (4)

கோடுந்து வேகவதி மாநதிக் கொள்கை பாடி
நாடுந் நகரு நலஞ்சேர்ந்த நயிமி சப்பேர்

சூடும் வனமும் வருணித்தெழு வாய்த்தொ டுப்பிற்
றேடும் வியாதர் தமைமாதவர் கேட்டல் செப்பி. (5)

இரண்டாங் கதையிற் கடம்பாடவிக் கீச னெய்தி
முரண்டாழ் தவந்தான் முயலும்பொழு தோங்கு செந்தீ
யண்டாவ வானோ ரயன்பாலடைந் தோடி யோதத்
திரண்டா ரணனுந் திருப்பாற்கடற் சேறல் பேசி ! (6)

முன்றா வதனிற் சுரரெண்ண முடியும் வண்ணந்
தோன்றாத மாயன் சிவன்முன்பு தொடர்ந்து தோன்றி
மீன்றாவு கண்ணா டனைமேவ விதிக்கு மாறுஞ்
சான்றாண் மைமிக்க தலப்பெற்றியுஞ் சாற்றி யிப்பால் ! (7)

நாலாங் கதையிற் கடலேழுட னாக தீர்த்த
மேலாய துங்காசி பனாச்சி ரமத்தின் வீறுஞ்
சேலா டியசக் கரதீர்த்தமுங் காசி பன்றான்
மாலாற் புகழ்ந்து மகப்பேறடை மாண்பும் வாழ்த்தி. (8)

ஐந்தா வதிலெண் கயஞ்சூழ்கய தீர்த்த வார்ப்பு
மைந்தார் சனகா தியர்வாசமுந் தோத வெற்பு
முந்தானை வெற்பின் முனிதீர்த்தமும் வால கில்லார்
தந்தா பதமும் பிருதுப்பெறுஞ் சால்பு மோதி. (9)

என்று தொடர்கிறது.

உ
கணபதி துணை

# திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம்

(அறிமுகம்)

நெல்லிநகர்ப் பெரும்பற்றப் புலியூர் நம்பி
இயற்றியது

இது
மஹாமஹோபாத்யாய தாக்ஷிணாத்ய கலாநிதி
உத்தமதானபுரம்
வே. சாமிநாதையரால்
பல கையெழுத்துப் பிரதிகளைக் கொண்டு
ஆராய்ந்து
நூதனமாக எழுதிய குறிப்புரை முதலியவற்றுடன்

சென்னை
கேசரி அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப் பெற்றது
(இரண்டாம் பதிப்பு)

விலை ரூ.2-8-0
பிரபவ வருஷம் சித்திரை மாதம்
1927

Copy right Registered
Forms 1-47 Printed at the commercial press.
Triplicane and the remaining portions at the Kesari Press.

**இப்புத்தகத்தில் அடங்கியவை.** **பக்கம்**


1. இப்புத்தகத்தில் எடுத்துக்காட்டிய நூற்பெயர்கள் முதலியவற்றின் முதற் குறிப்பகராதி. 4
2. முகவுரை 5-13
3. இந்நூலாசிரியராகிய பெரும்பற்றப்புலியூர் நம்பியின் வரலாறு 14-20
4. நூலாராய்ச்சி 20-29

{**இதில் நூலிலுள்ள முக்கியமான சில குறிப்புக்கள், துதிவகைகள், நூலாசிரியர் கூற்றுக்கள், பொருளணிகள், மடக்கணிகள், ஸ்ரீசோமசுந்தரக் கடவுளின் அருமைத் திருநாமங்கள், இந்நூலால் தெரிந்த ஊர்களின் பெயர்கள், குலங்கள், சங்கப் புலவர்கள், சாதிகள் பழைய வழக்கங்கள், தனிப்பாடல்கள், தாண்டவம், திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் பதிகங்கள், அவரது திருநாமங்கள், திருவிளையாடல் சம்பந்தமான சில பழமொழிகள் முதலியன, தீர்த்தங்கள், நாடுகள், நியாயம், நூல்கள், மடங்கள், மந்திரங்கள், மலைகள், மரபு, வித்தைகள், சில அரிய மொழிகள் ஆகிய இவற்றை முறையே அறிந்து கொள்ளலாம்.**]

5. இதிற் காணப்படும் விசேட வேறுபாடுகள் 30-34.
6. ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் திருநாவுக்கரசு நாயனாருக்குக் காலத்தால் முந்தியவரென்பது 35 - 36.
7. திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம் மூலமும் குறிப்புரையும் .. 1 - 314
8. சில கையெழுத்துப் பிரதிகளிற் கண்ட கடவுள் வாழ்த்துச் செய்யுட்கள் .. 315
9. நூற்சிறப்புப் பாயிரம் .. 316
10. திருவாலவாயுடையார் திருவிளையாடற் பயகரமாலை மூலமும் குறிப்புரையும் .. 317
11. கடம்பவனபுராணம், 10 - இலீலா சங்கிரக அத்தியாயம் மூலமும் குறிப்புரையும் .. 337
12. திருவுசாத்தான நான்மணிமாலை, 28ஆம் செய்யுளும் குறிப்புரையும் .. 348

13. திருவிளையாடற் கருணைத்திருவிருத்தம்.
11-ஆம் பாடல் .. 350
14. திருவிளையாடற் புராணச் செய்யுண்
முதற்குறிப்பகராதி .. 351-364
15. பயகரமாலைச் செய்யுள் முதற்குறிப்பகராதி .. 365
16. இலீலாசங்கிரக அத்தியாயச் செய்யுள்
முதற்குறிப்பகராதி .. 366
17. அறபத்து நான்கு திருவிளையாடல்கள்
முதலியவற்றின் அகராதி .. 367-368
18. அரும்பத முதலியவற்றின் அகராதி .. 369-423
19. பிழையும் திருத்தமும் .. 424

இப்புத்தகத்தில் எடுத்துக்காட்டிய நூற் பெயர்கள் முதலியவற்றின் முதற்குறிப்பகராதி.

அருணகிரி - அருணகிரிப்புராணம்
அழகர்கல - அழகர்கலம்பகம்
இரகு - இரகுவமிசம்
இ.கொ. - இலக்கணக்கொத்து
இலீலா - இலீலாசங்கிரகம்

...

உ

திருச்சிற்றம்பலம்

## சொக்கநாத வெண்பா

தருமையாதீன முதற்குரவர் சீர்வளர்சீர் குருஞான சம்பந்தர், தமது ஆன்மார்த்த மூர்த்தியாம் சொக்கேசப் பெருமான் சிவபூசையின் வழிபாட்டில் அவ்வப்போது பாடியருளிய வெண்பாக்களின் தொகுதியாகுமிது.

இந்நூலில் 94 வெண்பாக்களும், தனிப்பாடல் என்ற தலைப்பில் 7 வெண்பாக்களும் உள்ளன. இது, வெண்பா யாப்பில் அமைந்தது. இத் தோத்திர நூலில் பல சைவ சித்தாந்த சாத்திரப் பகுதிகள் உள்ளன. எனவே, இந்நூல் தோத்திர சாத்திர நூலாக உளது.

சொக்கேசன் செய்த திருவிளையாடல்கள் இதில் இடம் பெற்றுள்ளதால், இது புராண நூலாகவும் உளது.

'சொக்கநாதா' என ஈற்றுச்சீர்களைக் கொண்டுளது. இந்த 101 வெண்பாக்களில் திருவிளையாடல் தொடர்புடைய 13 பாடல்களைக் காண்போம்.

தருமையாதீனக் குருமுதல்வர் திருப்பெருந்திரு குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் அருளிய

## சொக்கநாத வெண்பா.

நூல்

ஆடரவஞ் சூழ்மதுரை அம்மானே அன்பருடன்
கூடவிளை யாடிவருங் கோமானே – நீடுபுகழ்
மென்மேலும் என்றனக்கு மேவியிடப் பொல்லாத
என்மேல் வினைகெடுப்பா யே! (1)

எல்லாமும் வல்லசித்தர் என்றக்கால் என்னுடைய
பொல்லாக் கருத்தகற்றப் போகாதோ - வல்லாடும்
பொங்கரா வேணிப் புனிதா மதுரைநகர்ச்
சங்கரா சொக்கநா தா. (8)

நலம்விளைக்கும் உன்பதத்தில் நாடவைப்ப தல்லால்
மலம்விளைக்குஞ் சோறருந்த வைத்தாய் - சலம்விளைக்குஞ்
சென்னியா மாமதுரைச் செல்வாஎல் லாமவல்ல
தன்னியா சொக்கநா தா. (18)

பத்திமெத்தச் சித்தம் பதியவில்லை அட்டமா
சித்தி அவாவெறுக்கச் செய்யவில்லை - முத்தியுளம்
கூடவில்லை எந்நாளும் கூடலிலே மாறிநடம்
ஆடவல்ல சொக்கநா தா. (44)

எல்லார் கருத்தும் இதமா உரைக்கறியேன்
நல்லாங்கு தீங்கிதென நாடறியேன் - எல்லாரும்
நீரூரும் வேணி நிமலா மதுரையில்வாழ்
ஆரூரா சொக்கநா தா. (53)

முன்அளவில் மாக்களுக்கு முத்தி கொடுத்தஅருள்
என்அளவில் சும்மா இருப்பதேன் - முன்அளவில்
சீர்பெற்றா ரேல்உன் திருவருளொத் தாசையன்றி
ஆர்பெற்றார் சொக்கநா தா. (56)

நோயால் வருந்தியுனை நூறுகுரல் கூப்பிட்டால்
நீயா ரெனாதிருக்கை நீதியோ - தாயாய்
அலைகொடுத்த கேழல் அருங்குழவிக் கன்று
முலைகொடுத்தாய் சொக்கநா தா. (57)

ஆலந் தரித்தலிங்கம் ஆலவாய்ச் சொக்கலிங்கம்
மூலமாய் எங்கும் முளைத்தலிங்கம் - பாலொளியாம்
மத்தனே கூடல் மதுரா புரியுமையாள்
அத்தனே ஆவலா யா. (61)

தன்னந் தனியே தமியேன் முறையிட்டால்
இன்னந் திருச்செவியில் ஏறாதோ - மன்னவனே !
தென்மதுரை மேவித் திருந்தியசெங் கோல்செலுத்துந்
தன்மதுரை நீயலவோ தான். (65)

என்போல் மலகடினர் எவ்விடத்துங் கண்டதுண்டோ
இன்பே மதுரைக் கிறைவனே ! - அன்பேதும்
இல்லா தெனையாண்ட எண்ணத்தால் தேவரீர்
எல்லாமும் வல்லசித்த ரே! (66)

அன்பர்க் கருள்புரிய தல்லாமல் தேவரீர்
வன்பர்க் கருள்புரிய மாட்டீரேல் - உம்பர்தொழு
நல்லார் புகழ்மதுரை நாதரே தேவரீர்க்
கெல்லாமும் வல்லசித்த ரேன்? (79)

நரகம் இனிநாட நாடோம் உமையாள்
விரகர் தமிழ்மதுரை மேவித் -- துரகநரி
ஆக்கினார் வைகையில்நீர் ஆடினோம் அவ்வெல்லைப்
போக்கலாம் யாம்திரிந்திப் போது. (80)

உன்னைச்சிங் காரித் துனதழகு பாராமல்
என்னைச்சிங் காரித் திடர்ப்பட்டேன் - பொன்னை
அரிவையரை யேநினையும் அன்பிலேற் குன்தாள்
தருவையோ சொக்கநா தா. (92)

ஆறுதலை இல்லை அடியேனுக் கன்பாகத்
தேறுதலை சொல்வார் சிலரில்லை - வேறெனக்குத்
திக்காரும் இல்லை சிவனே பழிக்கஞ்சி
சொக்கேநின் தாளே துணை! (94)

**தனிப்பாடல்**

உனக்குப் பணிசெய்ய உன்றனையெந் நாளும்
நினைக்க வரமெனக்கு நீதா - மனக்கவலை
நீக்குகின்ற தென்மதுரை நின்மலனே எவ்வுலகும்
ஆக்குகின்ற சொக்கநா தா! 4.

...

## மதுரைக் கலம்பகம்
(அறிமுகம்)

குமரகுருபர சுவாமிகள் திருவாய்மலந்தருளியது. திருமதுரை என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டுள்ள மீனாட்சியம்மையோடு எழுந்தருளியிருக்கின்ற சோமசுந்தரக் கடவுளைப் பற்றிப் பற்றிய சிறப்புக்களைத் திருவாய்மலர்ந்தருளிய நூலாகுமிது.

இதனுள், திருவிளையாடல்கள் அறுபத்து நான்கினுள் ஒரு சிலவற்றை ஈண்டு காண்போம்.

நூல்

விண்ணரசும் பிறவரசுஞ் சிலரெய்த விடுத்தொருநீ
பெண்ணரசு தரக்கொண்ட பேரரசு செலுத்தினையே.

** ** **

வைகைக்கோ, புனற்கங்கை வானதிக்கோ சொறிந்துகரை
செய்கைக்கென் றறியேமாற்குறி முடிமண் சுமந்ததே !

** ** **

அரும்பிட்டுப் பச்சிலையிட் டாட்செய்யும் அன்னையவள்
தரும்பிட்டுப் பிட்டுண்டாய் தலையன்பிற் கட்டுண்டே !

** ** **

ஊன்வலையி லகப்பட்டார்க் குட்படாய் நின்புயத்தோர்
மீன்வலைகொண் டதுமொருத்தி விழிவலையிற் பட்டன்றே!

வேறு

வலங்கொண்ட மழுவுடையீர் வளைகொண்டு
விற்பீர்போன் மதுரை மூதூர்க்

குலங்கொண்ட பெய்வளையார் கைவளையெல்
லாங்கொள்ளை கொள்கின் றீராற்
பலங்கொண்ட செட்டுமக்குப் பலித்ததுநன்
றானீரிப் பாவை மார்க்குப்
பொலங்கொண்ட வரிவளைகள் விற்பதற்கோ
கொள்வதற்கோ புறப்பட் டீரோ!

**அம்மானை, மடக்கு, தாழிசை**

இருவருக்குங் காண்பரிய ஈசர்மது ரேசனார்
விருதுகட்டி அங்கம்வெட்டி வென்றனர்காண் அம்மானை
விருதுகட்டி அங்கம்வெட்டி வென்றனரே யாமாகில்
அருமையுடம் பொன்றிருகூ றாவதேன் அம்மானை
ஆனாலுங் காயமிலை ஐயரவர்க்கு அம்மானை.

**தழை, கட்டளைக் கலத்துறை**

பல்லா ருயிர்க்குயி ராமது ரேசரப் பாண்டியர்முன்
கல்லானைக் கிட்ட கரும்பன்று காணின் களபக்கொங்கை
வல்லானைக் கேயிட வாய்த்தது போலுமென் வாட்கணினாய்
வில்லார் புயத்தண்ண றண்ணளி யாற்றந்த மென்றழையே !

**கொச்சகக்கலிப்பா**

ஆவமே நாணே அடுகணையே அம்மதவேள்
சாவமே தூக்கிற் சமனுந் சமனன்றே
ஓவமே யன்னா ளுயிர்விற்றுப் பெண்பழிகொள்
பாவமே பாவம் பழியஞ்சுஞ் சொக்கருக்கே !

**ஊர், அறுசீர்கழி நெடிலாசிரிய விருத்தம்**

தான வெங்களி றோடு மிந்திரன் சாப முந்தொலையா
மேனி தந்தகல் யாண சுந்தரர் மேவு வண்பதியாம்
வானி மிர்ந்திட வாடு மொண்கொடி வால சந்திரனுங்
கூனி மிர்ந்திட வேறி மிர்ந்திடு கூட லம்பதியே!

நேரிசை யாசிரியப்பா

கரும்பொறிச் சுரும்பர் செவ்வழி பாடச்
சேயிதழ் விரிக்கும் பொற்பொகுட் டம்புயம்

பாண்மகற் கலர்பொற் பலகை நீட்டுங்
கடவுசெங் கைக்குப் படியெடுப் பேய்க்கும்

சிந்து, கட்டளைக்கலிப்பா

குரும்பை வெம்முலை சேர்மது ரேசர்பொற்
கோபு ரத்திற் கொடிகட்டு சித்தர்யாம்
கரும்பை முன்புகல் யானைக் கிடுஞ்சித்தர்
கையிற் செங்கல் பசும்பொன்ன தாக்கினேம்
இருந்த வீடும் வரும்பாழ தாமவர்க்
கெருத்துக் கொட்டிலும் பொன்வேய்ந் திடச்செய்தே
மருந்த னந்நமக் கோதன மேயப்பா
வாட கத்துமற் றாசையவ் வையர்க்கே !

கட்டளைக் கலிப்பா

வால விர்த்த குமார னெனச்சில
வடிவு கொண்டுநின் றாயென்று வம்பிலே
ஞால நின்னை வியக்கு நயக்குமென்
னடனங் கண்டும் வியவாமை யென்சொல்கேன்
பால லோசன் பானுவி லோசன
பரம லோசன பக்த சகாயமா
கால காலத்ரி சூல கபாலவே
கம்ப சாம்ப கடம்ப வனேசனே !

நேரிசை யாசிரியப்பா

முட்டாட் பாசடை நெட்டிதழ்க் கமலத்
திரைவர வுறங்குங் குருகு விரிசிறைச்
செங்கா னாரைக்குச் சிவபதங் கிடைத்தெனப்
பைம்புனன் மூழ்கிப் பதும பீடத்

அறுசீர்கழிநெடிலாசிரிய விருத்தம்

பாமிக்கும் பயின்மதுரைப் பரஞ்சுடரே
யொருத்திகயற் பார்வை மட்டோ
காமிக்கு மடந்தையர்கட் கயலெலா
முமையடைதல் கணக்கே யன்றோ
மாமிக்குக் கடலேழும் வழங்கினீ
ரொருவேலை மகனுக் கீந்து
பூமிக்குட் கடலைவறி தாக்கினீர்
பவக்கடலும் போக்கி னீரே!

அறுசீர் கழிநெடிலாசிரிய விருத்தம்

அடுத்தங் குலவாக் கோட்டைசுமந் தளித்தீ
ரொருவற் கதுநிற்கத்
தொடுக்குங் கணைவே டனக்குலவாத் தூணி
கொடுத்தீர் ................

...

## சொக்கநாத மாலை

(அறிமுகம்)

தருமையாதீனத்துக் குருமகாசந்நிதானங்களின் ஆன்மார்த்த மூர்த்தி "சொக்கநாதர்" ஆவார்.

அச் சிவபூசைச் சொக்கநார் மீது பாடப்பட்டது, சொக்கநாத மாலையாகும். மதுரையில் நிகழ்ந்த திருவிளையாடல்களையும், இத்திருமடத்தின் சிறப்புகளையும் இணைத்து மாயூரம் முத்துச்சாமிபிள்ளை 100 பாடல்களைப் பாடியுள்ளார். அவற்றுள் மிகச் சிறப்புடைய சில பாடல்களை ஈண்டு காண்பாம்.

இதில், மற்றொரு சிறப்பு என்னவெனில், ஓலைச்சுவடிகளில், ஒருவரி எழுதி அதன் ஈற்றெழுத்தை ஏட்டின் ஓரத்தில் ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதியது போலவே, பதிப்பும் அமைந்துள்ளது. ஏட்டின்

இக்கடைசி எழுத்தினை அடுத்து ஒடிந்தால், இதற்குமேல் தொடர் இல்லை என்பது. அதன்முன் ஒடிந்தால் செய்யுள் தொடர் ஒடிந்துளது என்பதறிதற்காம்.

திருச்சிற்றம்பலம்

திருக்கைலாயபரம்பரைத் தருமபுரவாதீன மடாலயத்தில் எழுந்தருளியிருக்கும்

# சொக்கநாத மாலை

இஃது
திரிசிரபுர மகாவித்துவான்
மகாராஜராஜஸ்ரீ மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்கள்
மாணாக்கரு ளொருவராகிய
மாயூரம்
**முத்துசாமி பிள்ளை**
இயற்றியது

கும்பகோணம்
ஸ்ரீவித்தியா அச்சியந்திர சாலையில்
அச்சிற் பதிப்பிக்கப்பட்டன.
விஜய வருஷம் ஐப்பசி மாதம்
1893

உ

திருச்சிற்றம்பலம்

# தருமைச்
# சொக்கநாத மாலை

## நூல்

இந்நிலம் பரவவாழ் மணவூரி
லிணையிலாப் புகழ்தனஞ் சயனார்
தன்னக மகிழக் கடம்படித்
தோற்றித் தழைத்தநீ ஞானசம்பந்த
மன்னிய தேசிகன் காத்துவந்து
மருவினை யாதுகா ரணமோ
சொன்னிய மாதி முனிவர்சூழ்
தருமைச் சொக்கநாதப் பரசிவமே ! (2)

சென்றிடு திருமுகத் தொடுபாண
பத்திரனையு மஞ்சை மாக்களத்தி
னின்றிடச் செய்ததன்மை மாறிடற்கா
நீடருள் ஞான சம்பந்த
மென்றிடுநந் தேசிக னொடுநீயு
மெழிலமர் கமலையம் பதியிற்
றுன்றிநின் றுவந்து வந்தனை
தருமைச் சொக்கநாதப் பரசிவமே! (3)

தெருவினிற் கூடை மண்ணெடுத்
துழன்றசெய லுடைநின் னுருவத்தைப்
பெருமன முடையார் கண்டிடாதிருக்கப்
பேணியோ திசையறிந் திடிலுக்
கருமையாஞ் சோலைநாப் பணிலேவந்
தமர்ந்தனை யென்றுசூழ் போகாத்
துருமம்வின் னுலகின் மருவிடுந்
தருமைச் சொக்கநாதப் பரசிவமே ! (7)

சேழ்கிளர் கடம்ப வனத்திற்
சொற்கொள்ளாக் கீரனைமடுவில் வீழ்த்தியபோல்
வாழ்ந்திட வடியா ரியற்றிடு தளியை
மறைத்தவ னற்றைநா ளந்தி
யாழ்ந்தநீர்க் கூவம்வீழ்ந் தழிந்திடவே
யாக்கினை நின்னரு ளறிந்தார்
சூழ்ந்தொளிர் மதிலின் முகில்பொழி
தருமைச் சொக்கநாதப் பரசிவமே. (23)

கூர்மலி தருமியென்றவன் மகிழக்
கொங்குதேர் வாழ்க்கையை யெழுதி
யார்முழு தறிய மதுரையிற் கொடுத்தா
யானந்த பரவச ருக்குஞ்
சீர்வளர் சச்சிதானந்தற் பின்னாந்
தேசிக னாக்கெனக் ககனஞ்
சோர்விலா வுரையுஞ் தந்தனை
தருமைச் சொக்கநாதப் பரசிவமே! (29)

கூடலி னின்னோ டெதிர்த்த கீரனையுங்
குணமுறப் பொதிகையில் வாழும்
வீடருண் முனிவற் கொண்டுப தேசம்
விரித்தபோன் மாசிலா மணியாக்
கூடுதே சிகனைக் கொண்டிவண் குமர
குருபரற் கருளினை நிலவுந்
தோடலர்ந் தொளிரும் பண்ணைசூழ்
தருமைச் சொக்கநாதப் பரசிவமே ! (33)

ஆய்கருங் குருவி கேட்டிட நீமுன்
றட்சரஞ் செவியிலி லோதப்
போய்கடம் படியி லிருந்துபின் னருளிற்
புகுத்திடுந் தன்மையை மான
வாய்மலர்ந் துரைக்கும் பைங்கிளிக் கைந்தாம்
வகையெழுத் துரைத்துன தடியிற்
றோய்ந்திடச் செய்து மாண்டனை
தருமைச் சொக்கநாதப் பரசிவமே ! (44)

வரதவூ ரடிகண் மகிழ்தலை விரும்பி
வையையி னீரழைத் ததுபோற்
கோதமை யாத சச்சிதா னந்தர்
குலவு காவிரியினி னன்னீ
ராதர வாக வருதலை வேண்ட
வவ்விதம் வருத்திநற் புகழைச்
சூதரு முரைக்க நிறுவினை
தருமைச் சொக்கநாதப் பரசிவமே. (60)

உத்திர குமரன் கரத்தில் வேல்வளை
சென்டுற் றிடச்செய் ததுபோலப்
பக்கல்வாழ் சச்சிதா னந்தற் கொண்டு
பண்பமர் சாமிநா தப்பேர்
தக்கவன் மகிழ்மூன் றையுங் கொடுக்கத்
தந்துவீற் றிருந்தனை சீட்டு
துக்கிருத் தியர்கள் சூழ்ந்திடா
தருமைச் சொக்கநாதப் பரசிவமே! (72)

கொங்குதேர் வாழ்க்கைப் பராசுரந் தருமி
கொண்டிட வெழுதிய கரனே
மங்கிய கீரன் றனைக்கரை
யேற்றிவைத் தருளிய சித்திரமே
நங்கணா ரகத்தியன் றனாலி
லக்கணந் தெரிந்திடச் செயுமருவே
சுங்கனும் பணியும் புகழ்மலி
தருமைச் சொக்கநாதப் பரசிவமே. (96)

வாதவூ ரடிகட்க் குபதேச
மன்னிடச் செய்தும்பின் னரியைக்
காதலிற் பரியா யவைகளை நரியாய்க்
காட்டியும் வையை நீரடைக்கப்
பூதல மறிய மண்ணெடுத் துழன்றும்
பொலிந்திட நின்றமுக் கணனே
சூதமார் பொங்கர் சூழ்ந்திடுந்
தருமைச் சொக்கநாதப் பரசிவமே. (98)

## வேறுபாடுகள்

பரஞ்சோதி முனிவரியற்றிய திருவிளையாடற் புராணத்தில் காணப் பெறாத அரிய செய்திகள் பல நம்பி திருவிளையாடலில் காணப் பெறுகின்றன. அவை:-

(காப்பு) கற்பக விநாயகர்: இவர் சுந்தரபாண்டியத்திலும் திருவிளையாடற் பயகரமாலையிலும் துதிக்கப் பெற்றுள்ளார். இவர் கோயில் மதுரையில் இப்போது காணப்பட்டிலது.

கடவுள் வாழ்த்து: இதில் பெரும்பற்றப்புலியூர்த் துதி பாண்டிநாட்டுத்துதி, இத்தலத்துத் திருநாமங்களுள் நான்கன் துதி, மதுரைத் திருச்சிற்றம்பலம், வெள்ளியம்பலம் ஆகிய இவற்றின் துதிகள், உக்கிரப் பெருவழுதியார் துதி, நாற்பத்தெண்ணாயிர முனிவர்கள் துதி, இவைகள் உள்ளன.

பதிகம்: இதன் இறுதியில் முதற்குறிப்புச் செய்யுளொன்று உள்ளது. அச் செய்யுள் பழைய காலத்தில் இப்பதிகம் பாராயணம் செய்யப் பெற்றுவந்த தென்பதைத் தெரிவிக்கின்றது.

திருநகரச் சிறப்பு: மதுரா நகரம் கன்னி, கரியமால், காளி, ஆலவாய்த் தருமமூர்த்தி என்பவர்களாற் பாதுகாக்கப்படுவது.

1. விருத்திர ஹத்தியைப் போக்குதற்குத் தேவலோகத்திற் பலவிமானங்கள் இந்திரனாற் செய்விக்கப் பெற்றன. சிவலிங்கப் பெருமானுடைய அழகிய வடிவத்தைக் கண்டு, இந்திரன் சொக்கென்னும் திருநாமத்தைச் சாற்றினன். இத்தமிழ் நூலுக்கு முதனூல் உத்தரமகாபுராணமென்னும் வடநூலிலுள்ள சாரசமுச்சய மென்னும் பகுதி. இச்சரிதத்தை முதலில் கூறியவர்கள். வியாசர், வான்மீகி, எச்சர் என்பவர்கள். பின்பு கூறியவர் அகத்திய முனிவர்.

3. மலயத்துவசன் ஆதிமரபில் வந்த வடிவமங்கையை மணம்புரிந்தனன்.

4. மலையத்துவசன், மலைக்கொடி மன்னனென்றும், கூறப்படுபவன். பங்குனி உத்தரத்தில், தடாதகைப் பிராட்டியாருக்குத்

திருமணம் நிகழ்ந்தது. முருகக் கடவுள் பக்கத்திலிருந்து திருமணத்தைச் செய்வித்தனர். திருநந்தி தேவரே குண்டோதரனாக வந்தார்.

5. இந்திர விமானத்திற்குத் தென்பாலுள்ளதாகிய வெள்ளியம்பலத்திற் பதஞ்சலி முனிவருக்காகச் சிவவெருமான் திருநடனம் செய்தருளினார். அது சொக்க தாண்டவமென்னும் பெயர்பெறும். (மதுரையில் திருக்கோயிலுக்குத் தென்பால் வெள்ளியம்பலமென்று பெயருள்ள ஒரு மண்டப மிருத்தலும், அதில் இக்காலத்துப் பங்குனித் திருவிழா நடைபெறுதலும், வெள்ளியம்பலம் தென்பாலுள்ள தென்றதற்கும், பங்குனி உத்திரத்தில் திருமண முதலியன நடைபெற்றதற்கும் சான்றாக உள்ளன.)

6. தடாதகைப் பிராட்டியார், பச்சைத்தேவி, (மரகதவல்லி) என்று வழங்கப் பெறுவர்.

7. சிவபெருமானது கட்டளைப்படி குண்டோதரனார் பல குளங்களை உண்டாக்கினார். அக்குளங்களுட் காவணமுள்ள வாவியைத் தன்பால் பெற்ற ஊர் காவணநல்லுரென்று கூறப்படும். ஒரு வாவிக்கரையில், சடங்குக் கந்தர் எழுந்தருளியிருக்கின்றனர். இங்கே சடங்குக் கந்தரென்பது திருபரங்குன்றத்துக் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள ஸ்ரீ கல்யாண சுப்பிரமணியக் கடவுளே என்று சொல்லுகின்றனர்.

8. அக்கினி மூலையிலுள்ள தடாக மொன்றில் ஏழு கடல்களும் அடங்கின.

10. உக்கிரனார் சடையுடன் பிறந்தார்; அதனால் கோச சடிலவருமரென்பது அவருக்கு உபநயனத் திருநாமமாயிற்று. சுந்தரமாறனுக்கு விதுகுடுமிப் பெருவழுதி யென்பதும் திருநாமம். மதுரைக்கு மேற்கேயுள்ள "கோச்சடை" என்னுமூர் கோச்சடில வருமரால் அந்தணர்களுக்கு முற்றூட்டாகக் கொடுக்கப் பெற்ற அகரமென்று திருவிளையாடற் பயகரமாலையுரை தெரிவிக்கின்றது.

11. உக்கிரனார், ஆதிமரபிலவதரித்த வடிவணங்கை மணம்புரிந்தனர். சுந்தர மாறர் பதினாறு தெய்வ வருடம் அரசாண்டார்; கிரீட மணிந்து அரச போகத்தை அனுபவித்துக் கொண்டிருந்தது பற்றி, சொக்கநாதர், அபிடேகச் சொக்கரென்றும், புழுகுநெய்ச் சொக்கரென்றும் திருநாமம் பெற்றனர்.

12. வருணன்விட்ட கடல், புட்கலாவருத்த முதலிய நான்கு மேக வேந்தர்களாற் குடித்துக் குறைக்கப்பட்டது. அப்பால், வருணன் கட்டளைப்படி மேகங்கள் பெய்த பெருமழையை மேற்கூறிய நான்கு மேக வேந்தர்கள் நான்கு மாடங்களாகித் தடுத்தனர். அதனால், அவ்விடம் மாடக்குடக் கீழ் மதுரை யென்று பெயர்பெறும்.

13. எல்லாம் வல்ல சித்தருக்கு ஆக்கினைச் சித்தர் என்பது திருநாமம்.

15. சோமசுந்தரக் கடவுள் சங்கப்புலவராக எழுந்தருளி யிருந்தபோது, அவருக்கு மதுரைப் பேராலவாயா ரென்பதும், இறையனா ரென்பதும் திருநாமம். அவராலியற்றப் பெற்றது, இறையனார் பொருளிலக்கணம். சங்கப் புலவர்கள் தாமியற்றிய பாடல்கள் அப்பொருளிலக்கணத்தின்படி அமைக்கப் பெற்றிருத்தலைக் கண்டு மகிழ்ந்தார்கள். அவர்களுள் நக்கீரனார் மட்டும் அழுக்காற்றால், "யானியற்றிய நூலில் ஐந்தாம் பனுவலுக்கு ஒப்பில்லை" என்று கூறினார்.

16. தருமியின், தந்தையார் பெயர்: 'சிவமுனி' என்பது.

18. சிவபெருமான் தமிழ்நூற் கருத்தை அகத்தியருக்கு நோக்கால் உபதேசித்தனர்.

19. இறையனாரகப் பொருளுக்குப் பலரியற்றிய உரைகளுள் உப்பூர்கிழார் மகனார் உருத்திரசன்மர் மெய்யுரைகளைக் கண்டனர்.
21. பழமதுரையை அழிக்கவந்த கடல் சுவறும்படி பாண்டியன் வேலை யெறிந்தான். அப்பொழுது அக்கடல் வடிந்து அவன் காலைக் கழுவியது. அது பற்றி அப் பாண்டியற்கு 'வேலை வடிம்பலம்ப' நின்றான் என்பது பெயராயிற்று. அவ்வரசனுக்குச் சங்க மண்டபம் அமைக்கப்பெற்றது.

22. வலையரசனுக்கு 'அதியரையன்' என்பது பெயர். உத்தரகோச மங்கையில் அறுபத்துநால்வர் சிவபெருமான்பால் ஞானோபதேசம் பெற்றனர். அவர்கள்பால் உத்தராகம கோசங்களைச் சிவபெருமான் வைத்தருளினமையின், அத்தலம் அப்பெயர் பெற்றது. இதனை உத்தரகோச மங்கைப் புராணம் வலியுறுத்தும்.

24. காடுவெட்டியென்னும் சோழன் பொருட்டு முரிக்கப் பெற்ற வடக்கு மதில் வாயிலுக்கு 'இலச்சினைவாயில்' என்பது பெயர்.

25. மாணிக்கம் பிறத்தற்கு இலங்கைத் தீவிலுள்ள சமனொளி மலையைச் சூழ்ந்த வலவை, மாவலிகங்கை, கம்பளை, கல்லணை என்னும் நதிகள் நான்கும் இடங்களாகும். இதில் நவமணியின் இலக்கணங்கள் விளங்க விரித்துக் கூறப்பெற்றுள்ளன.

26. கீழை மதிற்பால் அட்டாலை மண்டபம் தெய்வக் கம்மியால் கட்டப் பெற்றது. வில்வீர வடிவங்கொண்டு அதில் எழுந்தருளி யானையை எய்த சிவபெருமானுக்கு 'அட்டாலைச் சேவகர்' என்பதுபெயர். யானை சொரிந்த இலத்தி, 'இலத்திமலை' என்று பெயர். யானை மலையிற் பாண்டியன் நரசிங்க மூர்த்தியைப் பிரதிஷ்டை செய்தனன்.

27. திருவாதவூர், காளையார்கோயில், திருப்பெருந்துறை என்கிற இத்தல வரலாறுகள் விரித்துக் கூறப்பெற்றுள்ளன. இந்தத் திருவிளையாடல் முதலியவற்றால், திருவாசகத்துள்ள பகுதிகளுள் இன்னது இன்னது இன்ன இன்ன அமயத்து மாணிக்கவாசக சுவாமிகளால் அருளிச் செய்யப்பெற்றதென்பது வெளியாகின்றது.

28. நரிகளைக் குதிரைகளாக்கிய இடம், மிழலை நாட்டில் 'நரிக்குடி' என்று வழங்கப்படும். திருவாதவூரிற் சிவபெருமானுடைய பாதச் சிலம்பொலி கேட்கப்பெற்றது. (இதில் குதிரை இலக்கணங்கள் மிகுதியாகக் கூறப்பட்டுள்ளன).

30. சிவபெருமான் கூலியாளாகி வந்தபொழுது, வேலை செய்யாதது கண்டு பாண்டியனுடைய வேலைக்காரர்கள் அடித்தார்கள்.

31. இந்திரனுக்கு முன்னம் ஆடிய ஈசான கோணத்தில் சிவபெருமான் பாண்டியனுக்காக மாறியாடி, திருவடியின் மேற் கொடிகட்டினர். அதனால், 'அதிரவீசி யாடுவார், 'மாறியாடிக் கொடியிட்ட பெருமான்' என்னும் திருநாமங்கள் அவருக்கு உண்டாயின.

33. யமதூதர்கள் சில பழங்கதைகளைத் தம்முட் பேசிக் கொண்டார்கள்.

35. இக்காலத்து வழங்காதனவாகிய யுத்த விசேஷங்களும் அவற்றிற்குரிய பரிபாஷைகளும் இதிற் கூறப்பெற்றுள்ளன.

36. தத்தனென்னும் பாண்டியன் அரசாளுகையில் சமணரனுப்பிய நாகமுமிழ்ந்த விடவாற்றின் கொடுமை சிவபெருமானுடைய சடையிலிருந்த சந்திரனிடத்துள்ள அமுதத் துளியால் சமனமுற்று மதுரமாயிற்று. அதனால், இந்நகர்க்கு 'மதுரை' யென்றது பெயராயிற்று. பின்பு அவர்களனுப்பிய மாயப்பசு வதைக்கப்பெற்றது.

37. திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார், இன்ன இன்ன அமையத்தில் இன்ன இன்ன பதிகம் பாடியருளினார் என்பது இதனால் விளங்குகிறது.

38. சைனர்களை வாது செய்து வென்றது பற்றித் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாருக்கு "வாதுசெய்தவாரணம்"என்னும் திருநாமமுண்டாயிற்று. சைனர்களை ஏற்றிய கழுக்களின் வரிசை முடிந்த இடம், 'கழுவர்படை வீடு' என்று வழங்கும். சைனர்களோடு பேசிய தோஷம் தீர்தற்பொருட்டுத் திருஞானசம்பந்த மூர்த்திநாயனார் திருவேடகத்திற் பிரதிஷ்டை செய்து, பூசித்த சிவலிங்கப் பெருமானுக்குச் "சிறுமையிற் றெள்ளியார்" என்பது திருநாமம். அத்தலத்தில் வையையாற்றின் தென்கரையில், பாண்டியன் படைவீடு செய்து அதிற் சிலகாலமிருந்து வழிபாடு செய்து வந்தான்.

39. சுந்தரசாமந்தரென்னும் சேனாபதி கொந்தகக் குலத்துப் பிறந்தவர்.

41. மாமனாக வந்தவர் கூறும் வார்த்தைகளில் சில வர்த்தக பரிபாஷைகள் வந்துள்ளன.

42. சிவபெருமான் பட்ட மங்கலத்தில் அட்டமாசித்தி உபதேசித் தருளினார்.

43. உண்ணுதற்குரிய நீரிற் சேர்த்தற்குத் தக்க வாசனைப் பொருள்கள் இவை என்பது தெரிகின்றது.

44. உக்கிர குலத்துப் பிறந்த பாண்டியன், இந்திரன் பூட்டிய ஆரத்தைத் திருப்பரங்குன்றத்தில் வைத்தனன். திருப்பரங்குன்றம் முருகக் கடவுள் முதலியோரால் பூசிக்கப் பெற்றது. நக்கீரன் பிரமராக்கதத்தால் அங்குள்ள குகையில் அடைக்கப்பட்டுத் திருமுருகாற்றுப்படையைப் பாட, அதைக் கேட்ட முருகக் கடவுள், அவரைவிடுவித்து, 'நம்மைக் கிழவ னென்றனையே' என்ன, நக்கீரர், "குன்ற மெறிந்தாய்" என்னும் வெண்பாவால் துதிப்ப, அதிலுள்ள, 'என்றும் இளையாய்' என்பதைக் கேட்டு, மகிழ்ந்து, "திருமுருகாற்றுப்படையைப் பாடியவர்கள் வேண்டிய வரத்தைக் கொடுப்போம். நீ மதுரைக்குச் செல்வாயாக" என்றருளிச் செய்தனர். பாண்டியன் மேகங்களைப் பிடித்துக் கட்டிய இடம் கட்டு நல்லூர்" என்றும், அவற்றைச் சிறைப்படுத்திய இடம், 'இருஞ்சிறை' என்றும், அவன் தனித்து நின்று போர் செய்து இந்திரனை வென்ற இடம். "தனிச்சயம்" என்றும் வழங்கப்படும். மேகத்துக்குப் புணை கொடுத்தவன், 'களவேள்வி' நாட்டிலுள்ள ஏழுரையுடைய ஒருவன். அவன் புணை கொடுத்ததற்கு, "நாம்முன்"என்று சொல்லிக்கொண்டு வந்தமையால் அவனூர் "நாமுனூர்"என்று பெயர் பெற்றது.

மேகங்கள் தமக்குப் புணைகொடுத்ததற்கு முதலில் எழுந்தவர்களுடைய இடமாகிய 'துவரை' நாட்டில் முதலில் மழைபெயதற்குத் தோன்றி, புணைகொடுத்தவனுடைய இடமாகிய 'களவேள்வி' நாட்டில் பின்பு பெய்யாநிற்கும்.

46. சோழனை உட்கொண்டு ஆழ்த்திய மடு "கொண்டாழி" எனப் பெயர்பெற்றது. அது மதுரைக்கு மேற்கேயுள்ளதோ ரோடை.

47. மதுரை, 'நடுவூர்', 'வாலவாய்', 'ஆலவாய்', 'திருமுடங்கல்' எனப் பெயர் பெற்றது. இத்தலம் சிவபெருமானுடைய படைவீடு.

48. திருவிடைமருதூரில் வரகுண பாண்டியர் சிலகாலமிருந்து, பக்திபரவசராய்ப் பலவகையான வழிபாடுகள் செய்து வந்தனர். (திருவிடைமருதூர்த் திருக்கோயிலிலுள்ள பாண்டியன் தோரணமென்ற வாயிலின் வலப்பக்கத்தே வரகுண பாண்டியருடைய திருவுருவம் அமைக்கப்பெற்றுள்ளது.)

49. வரகுணபாண்டியருடைய குமாரர் அட்டாலை வீரரைப் பிரார்த்திக்க, அவர் வீல்வீரராகத் தோன்றிச் சோழன் முதலிய பகைவர்மீது விடைக்குறி அம்பெய்தனர்.

51. சிவபெருமான், மூர்த்தியார்க்கு அரசளித்தனர்.

52. காரியார், நாரியாரென்னும் புலவர்களுடைய பாக்களைச் சிவபெருமான் பகுத்துக்கொண்டருளினர்.

53. புலியின் முலைப்பாலைச் சிவபெருமான் புல்வாய்க் கன்றுக்கு அளித்தருளினார். மணலூரிலிருந்து வந்த ஒரு வணிகனால் இத்தலம் காணப்பெற்றது. (மதுரைப் புதுமண்டபத்தில் கீழைக் கோடியுலுள்ள பெரிய கருங்கற்றூண் ஒன்றிலும், திருப்பரங்குன்றத்தில் துவஜஸ்தம்ப மண்டபத்தில் வடபாலுள்ள பெரிய கருங்கற்றூண்களுள் ஆறாவதிலும் சிவபெருமானுடைய திருவுருவம், புலியைக் கொண்டு புல்வாய்க் கன்றிற்குப் பாலருத்திய வண்ணமாகப் பெரியோர்கள் அமைத்திருத்தல், பண்டைக் காலத்தில் இத்திருவிளையாடல் நிகழ்ந்த தென்பதை நன்கு விளக்குகின்றது)

54. இதில், இசையிலக்கணங்கள் பல வந்துள்ளன.

58. காட்டுநாட்டுள்ள வன்னியர் தலைவன் 12 பிள்ளைகளைப் பெற்றான். அவர்கள் தீச்செய்கையால் 'முதியவெற்பில்' ஒரு பன்றியினித்தில் 12 குட்டிகளாகப் பிறந்தார்கள். (சோமசுந்தரக் கடவுள் பன்றிக் குட்டிகளுக்குத் தாயாகிப் பாலளித்த திருவுருவம், மதுரைப் புதுமண்டகத்திலும், திருப்பரங்குன்றத்துத் துவஜஸ்தம்ப மண்டபத்திலுமுள்ள ஸ்தம்பங்களில் அமைக்கப் பெற்றுள்ளது.)

59. அப் பன்றிக் குட்டிகள் பன்னிரண்டும் "வன்னியர்கள்" ஆயின. அவைகள் வளர்ந்த மலை "பன்றிமலை"என்று பெயர்பெற்றது. அவர்கள் "பன்றிக் குறும்பர் பன்னிருவர்" என வழங்கப் பெற்றார்கள்.

60. கரிக்குருவிச் சாதிகள் 'மிருத்தியுஞ்சய மந்திரம்' செபித்தலை இன்றும் அறியலாகும். அம்மந்திரம் விரைவிற் பலனை அளிக்கும். (காஞ்சிப் புராணம், பன்னி நாமப் படலம், 404 - ஆம் செய்யுளைப் பார்க்க.)

61. உக்கிர குலத்துப் பிறந்த பாண்டியனொருவன் மேருமலையிற் கயலையும் செண்டையும் பொறித்தனன்.

62. விடவைத்தியர் இத்தனைவகையினரென்பது இதிற் கூறப்பட்டுள்ளது. திருஞான சம்பந்தர், ஒருவனுக்குத் திருமருகலில், "சடையாய்" என்னும் பதிகத்தாலும், ஒருவனுக்குத் திருப்புறம்பயத்தில் திருநோக்காலும் விட நோயைத் தீர்த்தருளினார்.

64. வேதங்களையும், வேதாங்கங்களையும் முனிவர்களுக்குச் சிவபெருமான் உபதேசித்தருளினர்.

பரஞ்சோதி முனிவரியற்றிய திருவிளையாடலிற் கூறப்பட்டது போல, இன்ன பாண்டியன் காலத்து இன்ன திருவிளையாடல் நடந்த தென்பதும், இன்ன பாண்டியன் மகன் இன்னானென்று இடைவிடாமல் பாண்டிய பரம்பரையைச் சொல்லிக் கொண்டு போதலும் இதிலில்லை. பின்னுள்ள பாண்டியர்களின் பெயர்கள் மட்டுமே இந்நூலிற் காணப்படுகின்றன.

1. உக்கிரனார். 2. சுந்தரமாறர். 3. தத்தன். 4. மலயத்துவசன் 5. வரகுணர். 6. வரகுணருடைய மைந்தர். 7. வீரமாறன்.

...

**ஒப்புநோக்கல் :–** திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணம். உ.வே.சா. பதிப்பு. 1927)

## வரலாறுகள்

இராமன் (இராமாயண) வரலாறு:

(பரஞ்சோதி திருவிளையாடல்: மாயப்பசு வதைத்த படலம்)

அவ்விடை வரைமேன் முந்நீ
ரார்கலி யிலங்கைக் கேகும்
தெவ்வடு சிலையி ராமன்
வானர சேனை சூழ
மைவரை யனைய தம்பி
மாருதி சுக்கி ரீவன்

இவ்வுடல் வீர ரோடு
மெய்தியங் கிறுத்தான் மன்னோ! (25)

இரவிதன் மரபின் வந்த
விராமகே ளெமக்குத் தென்கீழ்
விரவிய திசையிற் போகி
விரிகடற் சேதுக் கட்டிக்
கரவிய வுள்ளக் கள்வன்
கதிர்முடி பத்துஞ் சிந்தி
அரமே கலையி னாளை
யருஞ்சிறை யழுவ நீக்கி. (34)

மீண்டுநின் னயோத்தி யெய்தி
விரிகட லுலகம் பன்னாள்
ஆண்டினி திருந்து மேனாள்
வைகுண்ட மடைவா யாக
ஈண்டுநீ கவலை கொள்ளே
லெனுமச ரீரி கேட்டு
நீண்டவன் மகிழ்ந்து தாழ்ந்து
நிருத்தனை விடைகொண் டேகி. (35)

மறைப்பொரு ளுரைத்தோன் சொன்ன
வண்ணமே யிலங்கை யெய்தி
அறத்தினைத் தின்ற பாவி
யாவிதின் றனையான் செல்வத்
திறத்தினை யிளவற் கீந்து
திருவிரா மேசங் கண்டு
கறைப்படு மிடற்றி னானை
யருச்சித்துக் கருணை வாங்கி. (36)

பற்றிய பழியி னீந்தி
யிந்திரன் பழியைத் தீர்த்த
வெற்றிகொள் விடையி னானை
மீளவும் வந்து போற்றி

அற்றிர ளனைய கோதைக்
கற்பினுக் கரசி யோடுஞ்
சுற்றிய சடையி ராமன்
றொன்னக ரடைந்தா னிப்பால். (37)

நம்பி திருவிளையாடல்: திருகாட்டுச் சிறப்பு: (இராமன் வரலாறு)

தாரணி மவுலிக் கொற்றத்
தசரதன் மகனார் வந்து
கூருகி ரெண்டு முன்னாக்
குரங்கின வெள்ளங் கொண்டு
வாரிநீள் குலைப்ப டுத்தி
வலியவா ளரக்கற் காய்ந்து
காரண வானை யேத்தி
யரும்பழி கழுவு நாடு. (5)

உ

# சுந்தர பாண்டியம் (அறிமுகம்)

சென்னை G.O.M.L. சீரிஸ் எண்.41.

பதிப்பு (ஆண்டு) 1955 விலை ரூ.7-10-0.

பதிப்பாசிரியர் T. சந்திரசேகரன், M.A.L.T.
(காப்பாட்சியர் மற்றும் நூலக ஊழியர்கள்)

### முன்னுரை

பாண்டிய நாட்டுத் தலைநகரும் பழம்பெரும் பதியுமான மதுரை மாநகரம் தொன்றுதொட்டு பெரும் புகழ்வாய்ந்து விளங்குவது. சோமசுந்தரக் கடவுள் கோயில் கொண்டுள்ள பெருந்தலம் இதுவே.

ஞானசம்பந்தப் பெருமான், பாண்டியன் வெப்புநோய் தீர்த்ததும், ஏடெதிர்ந்து வையையில் வந்ததும், இப்பதியே யாகும். ஆலவாய், மதுரை, கூடல் என்ற பெயர்களால் போற்றப் பெற்றதும். சொக்கநாதப் பெருமான் அறுபத்து நான்கு திருவிளையாடல் புரிந்ததும் இத்தலமே.

இங்ஙனம் பல்வகையிலும் சிறந்து விளங்கும் இப்பதியில், தடாதகைப் பிராட்டியும், முருக் கடவுளும் பாண்டிய மரபில் தோன்றி அரசு புரிந்துள்ளனர். இந்தத்தலத்தில் சோமசுந்தரப் பெருமான் புரிந்தருளிய திருவிளையாடல்களைப் பற்றிக் கூறும் நூல்களில், பரஞ்சோதி திருவிளையாடல் திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம், கடம்பவன புராணம் என்பன சிறந்தனவாம்.

இவையனைத்தும், "ஆலாசிய மான்மியம்"என்னும் நூலை அடிப்படையாகக் கொண்டனவே.

இப்பொழுது வெளிவரும் "சுந்தர பாண்டியம்" என்ற இந்நூலும், சுந்தரரின் திருவிளையாடல்களைப் பற்றிக் கூறுவதே. இது, சொற்சுவை, பொருட்சுவை மலிந்த பெருங்காப்பியமாய்க் கற்போர்க்குப் பக்தியையும், இன்பத்தையும் விளைவிப்பதாய் விளங்குவது.

மற்ற திருவிளையாடல்களில் கூறப்பெறும் செய்திகளில் சிலவற்றை பெருக்கியும், சிற்சில விடங்களில், அவற்றில் கூறாதனவற்றைக் கூறியும், இங்ஙனம் பல்வேறு சிறப்புக்களைக் கொண்டு விளங்குவது. இந்நூல்.

இது, 'உற்பத்தியா காண்டம், 'திக்குவிசய காண்டம்', 'உக்கிர காண்டம்', 'லீலா காண்டம்' என நான்கு பெரும்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுளது. ஒவ்வொரு காண்டமும் பல சருக்கங்களாகப் பகுக்கப் பெற்றுள்ளன. நான்காவது காண்டத்தில், 'சிவராத்திரி சருக்கம்' என்றவரையில் உள்ளது. அதுவும் முற்றுப் பெறவில்லை. செய்யுட்கள் சிறந்த நடையுடையன.

இந்நூலை இயற்றிய ஆசிரியர், 'அனதாரியப்பன்' என்பது. அவர் தொண்டை நாட்டில் 'வாயற்பதி' என்னுமிடத்தில் வாழ்ந்து

வந்தவர் என்பதும், சிறந்த தமிழ்ப் பெரும்புலவர் என்பதும், தெய்வீக சக்தி பெற்றவர் என்றும், இந்நூலால் நன்கு விளங்குகிறது. இவரைப்பற்றி வேறு ஒன்றும் அறியக்கூடவில்லை.

சோமசுந்தரக் கடவுளையும், பாண்டியரையும் தொடர்பு படுத்திக் கூறுவதனால், இவ்வரிய நூலுக்கு 'சுந்தரபாண்டியம்' என்று பெயர் வந்தது போலும்.

இது, இந்நூல் நிலையத்தில் உள்ள ஆர்.3041 -ஆம் எண் காகிதக் கையெழுத்துப் பிரதியை ஆதாரமாகக் கொண்டு வெளியிடப்பெறுகின்றது. இப்பிரதி 1951-52ஆம் ஆண்டு மதுரைத் தமிழ்ச் சங்கத்திலிருந்து வரவழைக்கப் பெற்ற ஓலைப்பிரதி யொன்றினைப் பார்த்துப் பிரதி செய்யப்பட்டதாகும். மூலப்பிரதி, பல விடங்களில் சிதைந்திருந்தமையால் பாடல்களில் சிலவற்றிற்கு முழுவுருவமுங் கிடைக்கவில்லை. பிழைகளும் உள்ளன. இயன்றவரை திருத்தஞ்செய்துள்ளோம். நூல் முற்றுப்பெறவில்லை. கிடைத்தவரை வெளியிடப்பெறுகின்றது.

இந்நூலை வெளியிடும் பொழுது ஒப்பு நோக்கிப் படியெடுப்பதற்காகத் தங்கள் மூலச் சுவடியைத் தந்துதவிய மதுரைத் தமிழ்ச்சங்க நிர்வாகிகட்கு, நூல் நிலையத்தாரின் நன்றி என்றும் உரியது.

இதனை மூலப் பிரதியிலிருந்து பெயர்த்து எழுதி அச்சிடும் வகையில் அமைத்துக் கொடுத்த நூல்நிலையத் தமிழ்ப பண்டிதர்கள் ஸ்ரீ மு. பசுபதி, ஸ்ரீ இ.பா. வேணுகோபால், ஸ்ரீ வி.எஸ். கிருஷ்ணன் ஆகியோர்க்கும் என் நன்றியுரித்தாம்.

சென்னை **தி. சந்திரசேகரன்.**

1955 ஆம் வருஷம்

ஜனவரி மாதம் 21 தேதி.

## பொருளடக்கம்


| வரிசை எண். | பொருள் | பக்க எண். |
|---|---|---|
| 1. | முகவுரை (ஆங்கிலம்) | i |
| 2. | முகவுரை (தமிழ்) | iii |
| 3. | உற்பத்தியா காண்டம் | 1 |
| | 1. வையைச் சருக்கம் | 1 |
| | 2. பாண்டிநாட்டுச் சருக்கம் | 5 |
| | 3. நகர்ச் சருக்கம் | 9 |
| | 4. தலவிசிட்டச் சருக்கம் | 15 |
| | 5. பொற்றாமரைச்சருக்கம் | 19 |
| | 6. சொக்கலிங்கச் சருக்கம் | 23 |
| | 7. திருவிமானச் சருக்கம் | 27 |
| | 8. குலசேகரச் சருக்கம் | 31 |
| | 9. தூதுச் சருக்கம் | 39 |
| | 10. திரிசிராமலைச் சருக்கம் | 55 |
| | 11. விசுவாவசுச் சருக்கம் | 63 |
| | 12. கடிமணச் சருக்கம் | 73 |
| | 13. விமானச் சருக்கம் | 81 |
| | 14. ஓரைச் சருக்கம் | 87 |
| | 15. நகர்புகு சருக்கம் | 93 |
| | 16. உபதேசச் சருக்கம் | 99 |
| | 17. மாதவச் சருக்கம் | 103 |
| | 18. திருவவதாரச் சருக்கம் | 111 |
| | 19. வித்தியாபதிச் சருக்கம் | 121 |
| | 20. நாரதச் சருக்கம் | 129 |
| 4. | திக்குவிசய காண்டம் | 139 |
| | 1. மந்திரச் சருக்கம் | 140 |
| | 2. முடிசூட்டுச் சருக்கம் | 151 |
| | 3. குமாரச் சருக்கம் | 161 |
| | 4. தாருகன் வதைச் சருக்கம் | 169 |
| | 5. வனவேட்டைச் சருக்கம் | 177 |
| | 6. கலிங்கச் சருக்கம் | 183 |

7. விசையச் சருக்கம் 191

8. இந்திரச் சருக்கம் 197

9. தேவிச் சருக்கம் 203

10. சையமணிச் சருக்கம் 207

11. வருணச் சருக்கம் 211

12. குபேரச் சருக்கம் 215

13. காட்சிச் சருக்கம் 219

14. நகரணிச் சருக்கம் 225

15. திருக்கலியாணச் சருக்கம் 227

5. உத்திர காண்டம்: 235

1. தாண்டவச் சருக்கம் 235

2. குண்டோதரச் சருக்கம் 239

3. எழுகடற் சருக்கம் 245

4. உக்கிரனவதாரச் சருக்கம் 253

5. அறம்படுச் சருக்கம் 257

6. வேல்விடுத்த சருக்கம் 265

7. வளைவிடுத்த சருக்கம் 269

8. மேகம் களைவித்த சருக்கம் 275

9. சோமவாரச் சருக்கம் 279

10. கயல்பொறித்த சருக்கம் 283

11. கண்ணுவாதிய ருபதேசச் சருக்கம் 285

12. வீரபாண்டியச் சருக்கம் 287

13. நான்மாடக் கூடல் சருக்கம் 297

14. சித்தச் சருக்கம் 297

15. கல்லானைச் சருக்கம் 301

6. லீலா காண்டம்: 305

1. அட்டாலைச் சருக்கம் 305

2. கவுரிச் சருக்கம் 309

3. மாறியாடுஞ் சருக்கம் 313

4. சிவராத்திரிச் சருக்கம் 315

செய்யுள் முதற் குறிப்பகராதி 329


(ஆக பக்கங்கள் 353)

## சுந்தர பாண்டியம்

காப்பு

பூமலி நாவலம் பொலன்க னிப்படு
தேமலி வரைக்கதை தீட்டுங் கற்பகம்
பாமலி சுந்தர பாண்டி யன்கதை
நாமலி தமிழ்ப்பல மெனக்கு நல்குமே !

மதுரை நாயகன் சுந்தர பாண்டிய வடநூற்
கதிரு லாமணி யாறுகாற் பீடத்திற் கல்லூ
ரதிப னாத்திரு விருந்தவ னவையினில் வாயற்
பதியில் வாழன தாரிசெந் தமிழினிற் பகர்ந்தான்.

## உற்பத்திக் காண்டம்

### வையைச் சருக்கம்

உலகத்தைந் தொழிலிலே றலையிற்றந் துலகின்முன் றோன்றி
யிலகற் றாதியாய் சமயகோடியு முத்தி யடைய
இலகச் சத்தியோ டவரவர் கடவுளா யியங்குந்
திலகச் சொக்கனைப் பரவுவாம், பவப்பிணி தெறவே !.

(இவ்வாறு தொடங்குகிறது; அடுத்து ஒரு சருக்கம்)

### சொக்கலிங்கச் சருக்கம்

மேருவே காசி மற்றத் தலம்புவி செவிமடு முன்னர்ச்
சேருமிவ் விலிங்க மூல லிங்கங்க ளிதனாற் சேரு
மாருமிவ் விலிங்கப் பூசை யண்டத்து ளிலிங்கத் தாகும்
வேரிடை நீரைப் பெய்யத் தருவெலாம் விளங்கு மாறே ! (1)

மந்திரத் தைஞ்செ முத்து மறைகளிற் சரம மாவிற்
றந்தவாண மானி டர்க்கு ளந்தணர் தானந் தன்னிற்
சுந்தர வன்ன தான நோன்பினிற் சோம வார
மெந்தலிங் கத்துஞ் சொக்க லிங்கமே சிறப்ப தென்பார். (2)

மகத்தய மேத நாட்டில் வானநா டாற்றிற் கங்கை
நகத்தினின் மேருத் தீர்த்தப் பலத்திற்பொன் னளின மன்பார்
நகத்திட பித்தர் தன்னிற் சிவபத்தர் மாத்தைந் தாறு
வுகத்தினிற் கிருத மென்ன விலிங்கத்தி லிங்க மோங்கும். (3)

உமையுடன் கூடலாலே சோமசுந் தரப்பே ரோங்கி
யமைவன மீனவன் பிரம்பி னடியுயிர்க் கெல்லா மார
விமையொடு விழியை நேரா யியங்குமிவ் விலங்கம் வேதச்
சமையகோ டிகளு மிந்த மூலலிங் கத்தைச் சாற்றும். (4)

இறப்பலா தெதிர்கா ணாரை முத்தியி னெய்தி ஞானஞ்
சிறப்புற விறைவன் செய்த தமிழ்ப்பெற நரிமா வாக
மறச்சமண் கழுவி னேற வரிப்பறழ் முலைப்பால் வாய்ப்ப
வறற்புனல் வையை மண்ணை சுமப்பநண் புடன ளிக்கும்.
(5)

நிற்குணஞ் சதாசி வத்து மூர்த்தியே நிறையுங் கூடற்
சிற்குண சுயம்பு வாதிச் சோதிதன் னன்பிற் சென்ற
நற்குண வடிவாம் வேறோ ருவமையுஞ் சாற்றொ ணாதால்
முற்குண ணெண்கு ணத்த னளப்பிலாக் குணத்தன் மூர்த்தி.
(6)

இரவிமுன் னிருள்சிங் கத்தி னிபமெய்முன் னிழுதை புட்கோ
கரவுகா லினிற்கார் வச்சி ரத்துவெற் பவாவிற் புத்தி
விரவுகோ பத்து நோன்பு மடியினில் விஞ்சை லோபத்
துரியபல் குணம்போ லிந்த விலிங்கமுன் பவம்விட் டோடும்.
(7)

விரவிய காலைப் பூத ரன்பல னுச்சி மேவிச்
சுரபியா யிரத்த தான மாலையத் தொகைப்ப லன்கள்
பரவிமுக் கால மும்போய்ப் பணிந்திட விவ்வி லிங்க
மிரவிவிற் பொருத போற்றீங் கறுத்துமுத் தியினை யீயும். (8)

பத்துநூ றாயி ரத்த வினைகெடும் வரிவிற் கேட்ப
யித்தனை யுள்ளக் காணப் பணிந்திட வாயி ரத்த
மெய்த்தய மேதம் வாச பேயமே வேந்த சூயத்
துய்த்திடு பலமே நல்கு மிதற்கொரு தலநே ருண்டோ. (9)

ஐந்துகவ் வியமைந் தான முதமும்நன் னீரா ரத்தின்
முந்துற வாட்டி னான்கு பொருளுமற் றவர்க்கா முன்னித்
தந்தமான் மதங்கற் பூரங் குங்குமஞ் சாந்தத் தேவர்
பைந்தொடி மகளிர் போக மவரின்பம் பலிக்கு மன்றே! (10)

உருமலர் சாத்த நூறு பொன்மலர் பலத்தை யொக்கும்
மருவிய தீப நைவேத் தியந்தரத் திருவின் மன்னி
பொருவிலாச் சிவலோ கத்திற் புகுவர்தாம் புலம எித்தாற்
றருநிறை கயிலை வெற்பிற் கோடிநூ றாண்டு சார்வார். (11)

மணியபி டேக கும்பந் தூபம்பாத் திரங்கண் மற்று
மணிபெற வுதவல் வேட்ட பலன்தரு மாடற் கீதம்
பணியிய மாலை யூர்தி தேர்விழாப் பலவு நல்கி
லிணையிலாத் துறக்கந் தன்னி லெளிதவன் சேர்வ னன்றே.
(12)

கருப்பூரச் சொக்கன் வீறு கதம்பகா னகத்திற் சொக்கன்
அருட்கலி யாணச் சொக்க னபிடேகச் சொக்க னன்பால்
விருப்புடைமூல லிங்க மேவுமா லாலச் சொக்கன்
பொருட்புழு கனைய சொக்கன் பழியஞ்சி புராரி யாமே. (13)

மதுரைநா யகன்சேர் வித்தைந் தான மாறாக் கன்னி
பதியினான் மாடக் கூடற் பரன்புவிச் சிவலோ கத்தன்
கதிதரு சீவ முத்த புரேசனென் றுரைப்பர் காதல்
விதியரி சுருதி போற்றுஞ் சுந்தர விமல நாமம். (14)

கயிலைய தாதி யிட்ட தட்டெழுக் கனகக் கோயி
லியவுறு மதுரை யிட்ட தட்டெழா திருத்த லாலே
புயல்வண னாதி யோர்கள் போற்றினர் தேவி பீடத்
துயர்வுறு பீட மீதென் றாரண முரைக்கு மன்றே ! (15)

அறமுத னான்கு மெய்த நினைத்தவை யளிக்குஞ் செய்த
மறவினைப் பஞ்ச பாத கத்துடன் மற்றத் தீமை
யுறைதரு புராண கத்தி யொருக்குந்தீங் கிலரேல் வீட்டை
யிறையினி லளிக்கு முள்ளக் கரணம்போற் றிடவெ வர்க்கும்.
(16)

உலகமீ ரேழு மெய்யா யுயர்விராட் டாறா தார
மலகிலான் கமலை நாவ லிருணையம் பலங்கா ளத்தி
கலைபயில் காசி யாறே கயிலைமேற் றுவாத சாந்த
மிலகிய கூட லென்றேற் சுந்தர னெவர்க்கு மேலோன். (17)

பிரமகற் பத்து மன்னு வந்தரத் தும்பி றங்கும்
புரிநகைப் புரம தட்டோன் பொற்பினா லுகங்க டோறும்
வரமிகு மெண்ணி ரண்டாய் மாவைப் படிவங் காட்டிப்
பரமதைத் தருமி லிங்க மீதலாற் பாரி லுண்டோ. (18)

ஆதியம் பிரமன் காலத் தருங்கடல் கடையத் தோன்றுஞ்
சீதவா ரமுதிற் சிந்துந் திவலைவித் தெழுங்க டம்பு
சோதியாஞ் சொக்கன் மேவ நிழல்தரத் தொடர்ந்து கண்டோர்
பாதக மஞ்சு நீக்கி யிப்பதிப் பரவு மன்றே ! (19)

மகந்தவந் தானம் வேதம் மந்திர மதனி ழுற்கே
சுகந்தனில் யாவ ரேனுஞ் செய்யிலொன் றனந்த மாகு
மிகப்பர நல்குங் கேட்கக் காணஞ்சேர்ந் திடவி சைக்க
வுகந்தொறு மெய்தும் வேத முரைக்குமிவ் வனத்தின் சீரே! (20)

வேறு

மருவிய தலம்புன லிலிங்க மாட்சியும்
பொருவிலா துரைத்தனம் புரந்த ரப்பெயர்
வெருவரு பழியொரீஇ விமானஞ் சாத்திப்பின்
றிருவினை மருவிய சரிதஞ் செப்புவாம்.

சொக்கலிங்கச் சருக்கம் முற்றும்.

ஆகத் திருவிருத்தம் 154.

(மொத்த திருவிருத்தம் 2015. மொத்த பக்கங்கள் 353. (நூல் உள்ள இடம்.தமிழ்ப் பல்கலைக் கழகம் எண்.32768 - அரிய நூல் பகுதி)

...

செய்தித்தாள்களில் வெளியானவை:-

## அகரத்தின் வடிவாய் அவதரித்தவன்.

புதன் வழிபட்ட சிவத்தலங்களில் முக்கியமானது ஆலவாய் எனப்படும் மதுரை. சோமசுந்தரர் கோயில், நவக்கிரகத் தலயாத்திரையில் இரண்டுவகை உண்டு.

சோழ மண்டல நவக்கிரக யாத்திரையில் புதன் வழிபட்ட தலமாக விளங்குவது திருவெண்காடு. தமிழகம் தழுவிய நிலையில் அந்த அந்தஸ்தைப் பெறுவத மதுரை.

கலைகளுக்கு அதிபதி புதன். கல்வியறிவைத் தருபவன் அவன். மதுரை சுந்தரேசுவரர் அகரத்தின் வடிவமாக, தலைமைப் புலவராக இருந்து தமிழ் வளர்த்த திருநகரம் மதுரை.

பிற எழுத்துக்கள் சங்கப் புலவர்களாக அவதரித்தனர் என்பது, "திருவிளையாடற் புராணம்".

"கண்ணுதற் பெருங்கடவுள் கழகமோடு அமர்ந்து பண்ணுறத் தெரிந்து ஆய்ந்த பசுந்தமிழ்" என்று தமிழை இலக்கியங்கள் போற்றுகின்றன.

மதுரை சோமசுந்தரர் 64 அருள்விளையாடல்களை நடத்திய திருநகரம் இது. அடியவர்களுக்காக ஆண்டவன் எளியவனாக வந்து அருள் செய்த தன்மையை விளக்குவது இது.

மதுரையில் இறைவனைவிட அம்பாளுக்கு முக்கியத்தவம் அதிகம். மீனாட்சியைத் தரிசம் செய்யத பின்னரே சொக்கநாதரை வணங்குவது மரபு. மீன் தன் பார்வையாலேயே முட்டைகளைப் பொரித்துக் குஞ்சு வெளிப்படச் செய்யும். அதுபோலவே, அம்பாளின் அருட்பார்வை பட்டவுடன் பக்தர்களின் துன்பங்களெல்லாம் விலகி ஓடும். எனவேதான் கயல்மீனைப் போன்ற விழியை உடைய பரமேசுவரிக்கு மீனாட்சி என்ற திருநாமம் வழங்கப்படுகிறது.

மதுரையில் உள்ள சொக்கநாதர் ஆலயத்தைக் கட்டியவர் நாயக்க மன்னர் பரம்பரையில் வந்த திருமலை நாயக்கர்.

இவருக்கு தீராத நோயொன்று வந்தது. இடைவிடாத தலைவலி மற்றும் மண்டைச்சளி நோயால் படாதபாடு பட்டார். பார்க்காத வைத்தியமோ, வைத்தியரோ இல்லை. அப்படியும் நோய் தீரவில்லை.

ஒருமுறை அதிகாலையில், அவரது கனவில் சிறு குழந்தையாக மீனாட்சி அம்மன் காட்சியளித்தாள். திடுக்கிட்டு எழுந்த நாயக்கர், பல் துலக்கி, சரீர சத்தி செய்தபடி மூக்கைச் சிந்தினார். மண்டையில் இருந்து சளி முற்றிலும் நீங்கியது.

அதனால், மீனாட்சி அம்மன் மீது பெரும் பக்தியும், ஈடுபாடும் கொண்ட நாயக்கர், ஆலயத்தை முழுமையாகப் புனரமைத்துச் செப்பனிட்டார் என்று "திருவாலவாயுடையார் திருப்பணி மாலை" என்ற நூல் சொல்கிறது.

சகலவித தோஷங்களையும் நீக்கும் வல்லமை படைத்தவர். நோய் தீர்ப்பவர். முன்னேற்றத்தைத் தரக்கூடியவர். பிறைசூடிய பெருமான் சோமசுந்தரர் என்ற பெயரே இந்தத் தன்மையை விளக்குவதாகும்.

"திருவால வாயென்று கேட்டவரே
அறம்பெறுவர் செல்வம் ஓங்கும்
திருவால வாயென்று நினைத்தவரே
பொருளடைவர் தேவ தேவைத்
திருவால வாயிடத்துக் கண்டவரே
இன்பநலஞ் சேர்வர் என்றும்
திருவால வாயிடத்துப் பதிந்தவரே
வீட்டுநெறி சேர்வர் அன்றே!"

என்பது பரஞ்சோதியார் அருளிய திருவிளையாடல் புராண வரிகள்.

(இது 2003, ஜனவரி 12 - சண்டே ஸ்பெஷலில் வெளியானது)

## நெற்கதிர் சூடும் சுந்தரேசன்

மதுரையில் நடக்கும் விழாக்களில் தை மாதம் நடக்கும் தெப்பத் திருவிழா மிக சிறப்பானது. இது பனிரெண்டுநாள் விழா சுவாமியும் அம்மையும் புறப்பாடாகிச் சித்திரை வீதியில் வலம் வருவர். எட்டாம் திருவிழா நாளன்று "வலைவீசிய திருவிளையாடல்" விழாவாக நிகழும். பத்தாம் நாள் தீர்த்தவாரி. பதினோராம் நாள் "கதிர் அறுப்பு விழா" இது, மதுரை சுந்தரேசுவரர் திருக்கோயிலில் நிகழும்.

அந்தந்த ஆண்டு புதிதாக விளைந்த புது நெற்கதிர்களால் சுவாமியை அலங்கரிக்கும் திருநாள் தான் "கதிர் அறுப்பு விழா".

- ஆதாரம்: தினமலர் 17.1.2003 பக்தி மலர்.

...

ஹரி: ஓம்

# திருவிளையாடற் புராணம்

நன்றாக ; குரு வாழ்க! குருவே துணை! (சுவடி எண்:901)

## மதுரைக் காண்டம்

### கடவுள் வணக்கம்

சத்தி யாய்ச்சிவ மாகித் தனிப்பர[1]
முத்தி யான முதலைத் துதிசெயச்[2]
சுத்தி யாகிய சொற்பொருள்[3] நல்குவ
சித்தி யானைதன் செய்யபொற் பாதமே!

தவளத் தாமரைத் தாதார் கோயில்
அவளைப் போற்றுது மருந்தமிழ்க் குறித்தே![4]

வேக மாநெறி சேரும் வினைகளும்
தாக போக விடாத தளர்ச்சியும்
சோக வாரியும் நால்வரு துன்பமும்
போக யானை முகத்தனைப் போற்றுவாம்.[5]

---

1. தனிப்புற என்றுளது 2. துதிசெய என்றுளது
3. சொற்பொறு என்றுளது
4,5. இவ்விருபாக்களும் ஆறுமுக நாவலர் பதிப்பில் இல்லை

## வாழ்த்து

(தலைப்பு தரப்பட்டது)

மல்குக வேத வேள்வி
வழங்குக சுரந்து வானம்
பல்குக வளங்க ளெங்கும்
பரவுக வறங்க ளின்பம்
நல்குக உயிர்கட் கெல்லாம்
நான்மறைச் சைவ மோங்கிப்
புல்குக உலக மெல்லாம்
புரவலன் செங்கோல் வாழ்க ! (1)

## நூற்பயன்

திங்களணி திருவால வாயெம் மண்ணல்
திருவிளையாட் டிவையன்பு செய்து கேட்போர்
சங்கநிதி பதுமநிதிச் செல்வ மோங்கித்
தகைமைதரு மகப்பெறுவர் பகையை வெல்வர்
மங்கலநன் மணம்பெறுவர் பிணிவந் தெய்தார்
வாழ்நாளு நனிபெறுவர் [1]வானா டெயதிப்
புங்கவரா யங்குள்ள போக மூழ்கிப்
புண்ணியராய்ச் சிவனடிக்கீழ் நண்ணி வாழ்வார் (2)

## கடவுள் வணக்கம்

வென்றுளே புலன்க ளைந்தார்
மெய்யுண ருள்ளந் தோறுந்
சென்றுளே யமுத மூன்றுந்
திருவருள் போற்றி யேற்றுக்
குன்றுளே யிருந்து காட்சி
கொடுத்தருள் கோலம் போற்றி
மன்றுளே மாறியாடு
மறைச்சிலம் படிகள் போற்றி (3)

........................................................................................................................

1. வானோடெய்தி என்றுளது. பாடல்கள் இடம்மாறியுள்ளன.

வேறு

### அங்கயற்கண் எம்பிராட்டி

சுரும்புமுரல் கடிமலர்ப்பூங் குழல்போற்றி
உத்தரியத் தொடிந்தோள் போற்றி
கரும்புருவச் சிலைபோற்றி கவுணியர்க்குப்
பால்சுரந்த கலசம் போற்றி
இரும்புமனங் குழைத்தென்னை யெடுத்தாண்ட
அங்கயற்கண் எம்பி ராட்டி
அரும்புமிள நகைபோற்றி ஆரணநூ
புரஞ்சிலம்பும் அடிகள் போற்றி ! (4)

### சொக்கலிங்கப்பெருமான்

பூவி னாயகன் பூமகள் நாயகன்
காவி னாயகன் ஆதிக் கடவுளர்க்
காவி நாயகன் அங்கயற் கண்ணிமா
தேவி நாயகன் சேவடி யேத்துவாம் (5)

### பரசிவம்

பூவண்ணம் பூவின் மணம்போல மெய்ப்போத வின்ப
மாவண்ண மெய்கொண்டு அவன்றன்வலி யாணை தாங்கி
மூவண்ணன் றன்சந் நிதிமுத்தொழில் செய்ய வாளா
மேவண்ண லன்னான் விளையாட்டின் வினையை
வெல்வாம். (6)

### சிவசக்தி

அண்டங்க ளெல்லா மணுவாக வணுக்க ளெல்லாம்
அண்டங்க ளாகப் பெரிதாய்ச்சிறி தாயி னானும்[1]
அண்டங்க ளுள்ளும் புறம்புங்கரி யாயி னானும்[2]
அண்டங்க ளீன்றா டுணையென்ப ரறிந்த நல்லோர் (7)

1. தாயினும், 2. யாயினும் என்றுளது

### அம்பலத்தாடி

உண்மையறி வானந்த வுருவாகி
யெவ்வுயிர்க்கு முயிராய் நீரின்
தண்மையனல் வெம்மையெனத் தனியகலா
திருந்துசரா சரங்க ளீன்ற
பெண்மையுரு வாகியதன் னானந்தக்
கொடிமகிழ்ச்சி பெருக யார்க்கும்
அண்மையதா யம்பலத்து ளாடியருள்
பேரொளியை யகத்துள் வைப்பாம். (8)

### சோமசுந்தரப் பெருமான்

சடைமறைத்துக் கதிர்மகுடந் தரித்துநறுங்
கொன்றையந்தார் தணந்து வேப்பந்
தொடைமுடித்து விடநாகக் கனலகற்றி
மாணிக்கச் சுடர்ப்பூ ணேந்தி
விடைநிறுத்திக் கயலெடுத்து வழுதிமரு
மகனாகி மீன நோக்கின்
மடவரலை மணந்துலக முழுதாண்ட
சுந்தரனை வணக்கஞ் செய்வாம். (9)

### கான்மாறிநடித்தவர்

பொருமாறிற் கிளர்தடந்தோ ளொருமாறன்
மனங்கிடந்த புழுக்க மாற
வருமாறிற் கண்ணருவி மாறாது
களிப்படைய மண்ணும் விண்ணும்
உருமாறிப் பவக்கடல்வீழ்ந் தூசலெனத்
தடுமாறி யுழலு மாக்கள்
கருமாறிக் கதியடையக் கான்மாறி
நடித்தவரைக் கருத்துள் வைப்பாம். (10)

## தட்சிணாமூர்த்தி

கல்லாவின் புடையமர்ந்து நான்மறையா
றங்கமுதற் கற்ற கேள்வி
வல்லார்க ணால்வருக்கும் வாக்கிறந்த
பூரணமாய் மறைக்கப் பாலாய்
எல்லாமா யல்லாதுமா யிருந்ததனை
யிருந்தபடி[1] யிருந்து காட்டிச்
சொல்லாமற் சொன்னவரை நினையாம
னினைந்துபவத் தொடக்கை[2] வெல்லாம். (11)

## கலைமகள்

பழுதகன்ற நால்வகைச்சொன் மலரெடுத்துப்
பத்திபடப் பரப்பித் திக்கு
முழுதகன்று மணந்துசுவை யொழுகியணி
பெறமுக்கண் மூர்த்தி தாளிற்
றொழுதகன்ற வன்பெனுநார் தொடுத்தலங்கல்
சூட்டவரிச் சுரும்புந் தேனுங்
கொழுதகன்ற வெண்டோட்டு முண்டகத்தா
ளடிமுடிமேற் கொண்டு வாழ்வாம். (12)

## சித்திவிநாயகர்

உள்ளமெனுங் கூடத்தி லூக்கமெனுந்
தறிநிறுவி யுறுதி யாகத்
தள்ளரிய வன்பென்னுந்[1] தொடர்பூட்டி
யிடைப்படுத்தித் தறுகட் பாசக்
கள்ளவினைப் பசுபோதக் கவளமிடக்
களித்துண்டு கருணை யென்னும்
வெள்ளமதம் பொழிசித்தி வேழத்தை
நினைந்துவரு வினைக டீர்ப்பாம். (13)

---

1. சொல்விடுபட்டுளது. 2. தாடக்கை என்றுளது

## குமரவேள்

கறங்குதிரைக் கருங்கடலுங் காரவுணப்
பெருங்கடலுங் கலங்கக் கார்வந்
துறங்குசிகைப் பொருப்புஞ்சூ ருரப்பொருப்பும்
பிளப்பமறை யுணர்ந்தோ ராற்றும்[1]
அறங்குலவு மகத்தழலு மவுணமட
வார்வயிற்றி னழலு மூள
மறங்குலவு வேலெடுத்த குமரவேள்
சேவடிகள் வணக்கஞ் செய்வாம். (14)

## நந்தியெம்பெருமான்

வந்திறை யடியிற் றாழும்
வானவர் மகுடகோடி
பந்தியின் மணிகள் சிந்த
வேத்திரப் படையாற் றாக்கி
அந்தியும் பகலுந் தொண்ட
ரலகிடுங் குப்பை யாக்கும்
நந்தியெம் பெருமான் பாத
நகைமலர் முடிமேல் வைப்போம். (15)

## திருஞான சம்பந்தர்

கடியவிழ் கடுக்கை வேணித்
தாதைபோற் கனற்கண் மீனக்
கொடியனை வேவ நோக்கிக்
குறையிரந் தனையான் கற்பிற்
பிடியன நடையாள் வேண்டப்
பின்னுயி ரளித்துக் காத்த
முடியணி மாடக் காழி
முனிவனை வணக்கஞ் செய்வாம். (16)

---

1. றாவுற்று என்றுளது

## திருநாவுக்கரசர்

அறப்பெருஞ் செல்வி பாகத்
தண்ணலஞ் செழுத்தா லஞ்சா
மறப்பெருஞ் செய்கை மாறா
வஞ்சக ரிட்ட நீல
நிறப்பெருங் கடலும் யார்க்கு
நீத்துதற் கரிய வேழு
பிறப்பெனுங் கடலு நீத்த
பிரானடி வணக்கஞ் செய்வாம் (17)

## சுந்தரர்

அரவக லல்கு லார்பா
லாசைநீத் தவர்க்கே வீடு
தருவமென் றளவில் வேதஞ்
சாற்றிய தலைவன் தன்னைப்
பரவைதன் புலவி தீர்ப்பான்
கழுதுகண் படுக்கும் பானாள்
இரவினிற் றூது கொண்டோ
னிணையடி முடிமேல் வைப்பாம் (18)

## மாணிக்கவாசகர்

எழுதரு மறைக டேறா
விறைவனை யெல்லிற் கங்குற்
பொழுதறு காலத் தென்றும்
பூசனை விடாது செய்து
தொழுதனை தலைமீ தேறத்
துளும்புகண் ணீருண் மூழ்கி
அழுதடி யடைந்த வன்ப
னடியவர்க் கடிமை செய்வாம். (19)

## சண்டேசுரரும் – மற்றும் அடியார்களும்

தந்தைதா ளொடும்பிறவித் தாளெறிந்து
நிருத்தரிரு தாளைச் சேர்ந்த
மைந்தர்தாள் வேதநெறி சைவநெறி
பக்திநெறி வழாது வாய்மெய்
சிந்தைதான ரனடிக்கே செலுத்தினராய்ச்
சிவாநுபவச் செல்வ ராகிப்
பந்தமாந் தொடக்கறுத்த திருத்தொண்டர்
தாள்பரவில் பணிதல் செய்வாம். (20)

## அங்கயற்கண்ணம்மை

பங்கயற் கணரியபரம்[1] பரனுருவே
தனக்குரிய படிவ மாகி
இங்கயற்க ணகனுலக மெண்ணிறந்த
சராசரங்க ளீன்றுந் தாழாக்
கொங்கையயற்கண் மலர்க்கூந்தற் குமரிபாண்
டியன்மகள்போற் கோலங் கொண்ட
அங்கயற்கண் ணம்மையிரு பாதப்போ
தெப்போது மகத்துள் வைப்பாம் (21)

## தடாதகைப்பிராட்டியார்

செழியர்பிரான் றிருமகளாய்க் கலைபயின்று
முடிபுனைந்து செங்கோ லோச்சி
முழுதுலகுஞ் சயங்கொண்டு திறைகொண்டு
நந்திகண முனைப்போர் சாய்த்துத்
தொழுகணவற் கணிமணமா லிகைசூட்டித்
தன்மகுடஞ் சூட்டிச் செல்வந்
தழைவுறுதன் னரசளித்த பெண்ணரசி
யடிக்கமலந் தலைமேல் வைப்பாம் (22)

கடவுள் வணக்கம் முற்றும்

1. கண்ணரியபரம் என்றுளது

## அவையடக்கம்[1]

அண்ணல்பாற் றெளிந்த நந்தி
யடிகள்பாற் சனற்கு மாரன்
உண்ணிறை யன்பி னாய்ந்து
வியாதனுக் குணர்த்த வந்தப்
புண்ணிய முனிவன் சூதற்
கோதிய புராண மூவா
றெண்ணிய விவற்றுட் காந்தத்
தீசசங் கிதையின் மாதோ. (1)

அறைந்திடப் பட்ட தாகு
மாலவாய்ப் புகழ்மை யந்தச்
சிறந்திடும் வடநூ றன்னைத்
தென்சொலாற் செய்தி யென்றிங்
குறைந்திடும் பெரியோர் கூறக்
கடைப்பிடித் துறுதி யிந்தப்
பிறந்திடும் பிறப்பி லெய்தப்
பெறுதுமென் றுள்ளந் தேறா. (2)

திருநகர் தீர்த்த மூர்த்திச்
சிறப்புமூன் றந்த மூர்த்தி
அருள்விளை பாட லெட்டெட்
டருச்சனை வினையொன் றாக
வரன்முறை யறுபத் தெட்டா
மற்றவை படல மாக
விரிமுறை விருத்தம்[1] செய்யுள்
வகைமையால் விளம்ப லுற்றேன் (3)

1. அச்சுநூலில் நூல் இயற்றுதற்குக் காரணம் என்றுளது. இதன் 3 பாடல்களின் பின் அவையடக்கம் தலைப்பு காணப்படுகிறது.
2. விருத்தச் செய்யுள் என்பது அச்சு நூற்பாடம்

நாயகன் கவிக்குக் குற்ற
நாட்டிய கழக மாந்தர்
மேயவத் தலத்தி னோர்க்கென்
வெள்ளறி வுரையிற் குற்றம்
ஆயுமா ரறிதன் றேனு
நீர்பிரித் தன்ன முண்ணுந்
தூயதீம் பால்போற் கொள்க
சுந்தரன் சரிதந் தன்னை. (4)

சுவைக்கொ முந்தழ னாச்சுவை கண்டவூ னிமையோர்
சுவைக்க வின்னமு தாயின துளக்கமில் சான்றோர்
அவைக்க ளம்புகுந் தினியவா யாலவா யுடையார்
செவிக்க ளம்புகுந் தேறுவ சிறியனேன் பனுவல் (5)

பாய வாரியுண் டுவர்கெடுத் துலகெலாம் பருகத்
தூய வாக்கிய காரெனச் சொற்பொரு டெளிந்தோர்
ஆய கேள்வியர் துகளறுத் தாலவா யுடைய
நாயனார்க்கினி தாக்குப நலமிலேன் புனசொல் (6)

அல்லை யீதல்லை யீதென மறைகளு மன்மைச்
சொல்லி னாற்றுதித் திளைக்குமிச் சுந்தரநாடற்
கெல்லை யாகுமோ வென்னுரை யென்செய்கோ விதனைச்
சொல்லு வேனெனு மாசையென் சொல்வழி கேளா (7)

**பரஞ்சோதிமுனிவர் அரங்கேற்றினது**

அறுகாற்பீ டத்துயர்மா லாழிகடைந்
தமுதையரங் கேற்று மாபோல்
அறுகாற்பே டிசைபாடுங் கூடன்மான்
மியத்தையருந் தமிழாற் பாடி
அறுகாற்பீ டுயர்முடியார் சொக்கேசர்
சந்நிதியி லமரர் சூழும்
அறுகாற்பீ டத்திருந்து பரஞ்சோதி
முனிவனரங் கேற்றி னானே ! (8)

அவையடக்கம் முற்றும்
ஆகத் திருவிருத்தம்-30.

## திருநாட்டுச் சிறப்பு

கறைநி றுத்திய கந்தர சுந்தரக் கடவுள்
உறைநி றுத்திய வாளினாற் பகையிரு ளொதுக்கி
மறைநி றுத்திய வழியினால் வழுதியாய்ச் செங்கோன்
முறைநி றுத்திய பாண்டிநாட் டணியது மொழிவாம். (1)

தெய்வ நாயக னீறணி மேனிபோற் சென்று
பௌவ மேய்ந்துமை மேனிபோற் பசந்துபல் லுயிர்க்கும்
எவ்வ மாற்றுவான் சுரந்திடு மின்னரு ளென்னக்
கௌவை நீர்சுரந் தெழுந்தன கனைகுரன் மேகம். (2)

இடித்து வாய்திறந் தொல்லென வெல்லொளி மழுங்கத்
தடித்து வாள்புடை விதிர்த்துநின் றிந்திர சாபம்
பிடித்து நீளம்பு கோடைமேற் பெய்துவெம் பெரும்போர்
முடித்து நாமென வருதல்போல் மொய்த்தன கொண்மூ. (3)

முனித னீள்வரை யுச்சிமேன் முழங்கிவா னிவந்து
தனித நீர்மழை பொழிவன தடஞ்சிலை யிராமன்
கனித னீர்மையா லாலவாய்க் கண்ணுதன் முடிமேற்
புனித நீர்த்திரு மஞ்சன மாட்டுவான் போலும். (4)

சுந்த ரன்றிரு முடிமிசைத் தூயநீ ராட்டும்
இந்தி ரன்றனை யொத்தகா ரெழிலிதென் மலைமேல்
வந்து பெய்வவத் தனிமுதன் மௌலிமேல் வலாரி
சிந்து கின்றகைப் போதெனப் பன்மணி தெறிப்ப (5)

உடுத்த தெண்கடன் மேகலை யுடையபார் மகடன்
இடத்து தித்தபல் லுயிர்க்கெலா மிரங்கித்தன் கொங்கைத்
தடத்து நின்றிழி பாலெனத் தடவரை முகடு
தொடுத்து வீழ்வன விழுமெனத் தூங்குவெள் ளருவி (6)

கருநிறமேக மென்னுங்
கச்சணி சிகரக் கொங்கை

அருவியாந் தீம்பால் சோர
வகன்சுனை யென்னுங் கொப்பூழ்ப்
பொருவில்வே யென்னு மென்றோட்
பொதியமாஞ் சைலப் பாவை
பெருகுதண் பொருநை யென்னும்
பெண்மகப் பெற்றா ளன்றே ! (7)

கல்லெனக் கரைந்து வீழுங்
கடும்புனற் குழவி கானத்
தொல்லெனத் தவழ்ந்து தீம்பா
லுண்டொரீஇத் திண்டோண் மன்னர்
செல்லெனத் தெழிக்கும் பம்பைத்
தீங்குரல் செவிவாய்த் தேக்கி
மெல்லெனக் காலிற் போகிப்
பணைதொறும் விளையாட் டெய்தி (8)

அரம்பைமென் குறங்கா மாவி
னவிர்தளிர் நிறமாத் தெங்கின்
குரும்பைவெம் முலையா வஞ்சிக்
கொடியிறு நுசுப்பாக் கூந்தல்
சுரும்பவிழ் குழலாக் கஞ்சஞ்
சுடர்மதி முகமாக் கொண்டு
நிரம்பிநீள் கைதை வேலி
நெய்தல்சூழ் காவில் வைகி. (9)

பன்மலர் மாலை வேய்ந்து
பானுரைப் போர்வை போர்த்துத்
தென்மலைத் தேய்ந்த சாந்த
மான்மதச் சேறு பூசிப்
பொன்மணி யாரந் தாங்கிப்
பொருநையாங் கன்னி முந்நீர்த்
தன்மகிழ் கிழவ னாகந்
தழீஇக்கொடு கலந்த தன்றே ! (10)

வல்லைதா யிருபால் வைகுஞ்
சிவாலய மருங்கு மீண்டி
முல்லையா னைந்துந் தேனுந்
திரைக்கையான் முகந்து வீசி
நல்லமான் மதஞ்சாந் தப்பி
நறுவிரை மலர்தூய் நீத்தஞ்
சொல்லலாற் பூசைத் தொண்டின்
செயல்வினை மாக்கள் போலும் (11)

அரும்பவி ழுனங்க வாளி
யலைதர வாகம் பொன்போர்த்
திரங்கிவா லன்ன மேந்தி
யிருகையுஞ் சங்கஞ் சிந்தி
மருங்குசூழ் காஞ்சி தள்ளி
வரம்பிற லொழுகும் வாரி
பரம்பரற் கையம் பெய்யும்
பார்ப்பன மகளிர் போலும் (12)

வரைபடு மணியும் பொன்னும்
வைரமும் குழையும் பூட்டி
அரைபடு மகிலுஞ் சாந்து
மப்பியின் னமுத மூட்டிக்
கரைபடு மருத மென்னுங்
கன்னியைப் பருவ நோக்கித்
திரைபடு பொருநை நீத்தஞ்
செவிலிபோல் வளர்க்கு மாதோ ! (13)

மறைமுதற் கலைக ளெல்லா
மணிமிடற் றவனே யெங்கும்
நிறைபர மென்றும் பூதி
சாதன நெறிவீ டென்றும்
அறைகுவ தறிந்துந் தேறா
றறிவெனக் கலங்கி யந்த
முறையின்வீ டுணர்ந்தோர் போலத்
தெளிந்தது மூரி வெள்ளம் ! (14)

மறைவழி கிளைத்த வெண்ணெண்
கலைகள்போல் வருநீர் வெள்ளந்
துறைவழி யொழுகும் பல்கால்
சோலைதண் பழனஞ் செய்தேன்
உறைவழி யோடை யெங்கு
மோடிமன் றுடையார்க் கன்பர்
நிறைவழி யாத வுள்ளத்
தன்புபோ னிரம்பிற் றன்றே! (15)

இழிந்த மாந்தர்கைப் பொருள்களு
மிகபரத் தாசை
கழிந்த யோகியர் கைப்படிற்
றூயவாய்க் களங்கம்
ஒழிந்த வாறுபோ லுவரியுண்
டுவர்கெடுத் தெழிலி
பொழிந்த நீரமு தாயின
புவிக்கும்வா னவர்க்கும் (16)

ஈறி லாதவ னொருத்தியே
யைந்தொழி லியற்ற
வேறு வேறுபேர் பெற்றென
வேலைநீ ரொன்றே
ஆறு கால்குளங் கூவங்குண்
டகழ்கிடங் கெனப்பேர்
மாறி யீறில்வான் பயிரெலாம்
வளர்ப்பது மாதோ ! (17)

களமர்கள் பொன்னேர் பூட்டித்
தாயர்வாய்க் கனிந்த பாடற்
குளமகிழ் சிறாரி னேறு
மொருத்தலு முவகை தூங்க
வளமலி மருதம் பாடி
மனவலி கடந்தோர் வென்ற
அளமரு பொறிபோ லேவ
லாற்றவாள் வினையின் மூண்டார். (18)

பலநிற மணிகோத் தென்னப்
பன்னிற வேறு பூட்டி
அலமுக விரும்பு தேய
வாள்வினைக் கருங்கான் மள்ளர்
நிலமக ளுடலங் கீண்ட
சால்வழி நிமிர்ந்த சோரிச்
சலமென நிவந்த செங்கேழ்த்
தழன்மணி யிமைக்கு மன்னோ ! (19)

ஊறுசெய் படைவாய் தேய
வுழுநரு நீர்கால் யாத்துச்
சேறுசெய் குநருந் தெய்வந்
தொழுதுதீஞ் செந்நெல் வீசி
நாறுசெய் குநரும் பேர்த்து
நடவுசெய் குநருந் தெவ்வின்
மாறுசெய் களைகட் டோம்பி
வளம்படுக் குநரு மானார் ! (20)

பழிபடு நறவந் தன்னைக்
கடைசியர் பருகிச் செவ்வாய்
மொழிதடு மாற வேர்வை
முகத்தெழ முறுவ றோன்ற
விழிசிவந் துழலக் கூந்தன்
மென்றுகில் சோர வுள்ளக்
கழிபெருங் களிப்பு நல்கிக்
கலந்தவ ரொத்த தன்றே ! (21)

பட்பகை[1] யாகுந் தீஞ்சொற்
கடைசியர் பவளச் செவ்வாய்க்
குட்பகை யாம்ப லென்று
மொண்ணறுங் குவளை நீலங்
கட்பகை யாகு மென்றுங்
கமலநன் முகத்துக் கென்றுந்

1. படைபகை என்றுளது

திட்பகை யாகு மென்றுஞ்
செறுதல்போற் களைதல் செய்வார். (22)

கடைசியர் முகமுங் காலுங்
கைகளுங் கமல மென்னார்
படைவிழி குவளை யென்னார்
பவளவாய் குமுத மென்னார்
அடையவுங் களைந்தார் மள்ளர்
பகைஞரா யடுத்த வெல்லை
உடையவ னாணை யாற்றா
லொறுப்பவர்க் குறவுண் டாமோ ? (23)

புரையற வுணர்ந்தோர் நூலின்
பொருளினுள் ளடங்கி யந்நூல்
வரையறை கருத்து மான
வளர்கருப் புறம்பு தோன்றிக்
கரையமை கல்வி சாலாக்
கவிஞர்போ லிறுமாந் தந்நூல்
உரையென விரிந்து கற்பின்
மகளிர்போ லொசிந்த தன்றே. (24)

அன்புறு பத்தி வித்தி
யார்வநீர் பாய்ச்சுந் தொண்டர்க்
கின்புரு வான வீச
னின்னருள் விளையு மாபோல்
°வன்புறு கருங்கான் மள்ளர்
வைகலுஞ் செவ்வி நோக்கி
நன்புல முயன்று காக்க
விளைந்தன நறுந்தண் சாலி. (25)

அகனில வேறு பாட்டி
னியல்செவ்வி யறிந்து மள்ளர்.
தகவினை முயற்சி செய்யக்
காமநூல் சாற்று நான்கு

வகைநலார் பண்பு செவ்வி
யறிந்துசேர் மைந்தர்க் கின்பம்
மிகவிளை போகம் போன்று
விளைந்தன பைங்கூ ழெல்லாம். (26)

கொடும்பிறை வடிவிற் செய்த
கூனிரும் பங்கை வாங்கி
முடங்குகால் வரிவண் டார்ப்ப
முள்ளரைக் கமல நீலம்
அடங்கவெண் சாலி செந்நெல்
வேறுவே றரிந்தீ டாக்கி
நெடுங்களத் தம்பொற் குன்ற
நிரையெனப் பெரும்போர் செய்தார். (27)

கற்றவை களைந்து தூற்றிக்
கூப்பியூர்க் காணித் தெய்வம்
அற்றவர்க் கற்ற வாறீந்
தளவைகண் டாறி லொன்று
கொற்றவர் கடமை கொள்ளப்
பண்டியிற் கொடுபோய்த் தென்னா
டுற்றவர் சுற்றந் தெய்வம்
விருந்தினர்க் கூட்டி யுண்பார். (28)

சாறடு கட்டி யெள்ளுச்
சாமைகொள் ளிறுங்கு தோரை
ஆறிடு மதமால் யானைப்
பழுக்குலை யவரை யேனல்
வேறுபல் பயறோ டின்ன
புன்னில விளைவு மற்றும்
ஏறொடு பண்டி யேற்றி
யிருநிலங் கிழிய வுய்ப்பார். (29)

துறவின ரீச னேசத்
தொண்டினர் பசிக்கு நல்லூண்

மறவினைப் பிணிக்குத் தீர்க்கு
　　　மருந்துடற் பனிப்புக் காடை
உறைவிடம் பிறிது நல்கி
　　　யவரவ ரொழுகிச் செய்யு
அறவினை யிடுக்க ணீக்கி
　　　யருங்கதி யுய்க்க வல்லார். (30)

நிச்சலு மீச னன்பர்
　　　நெறிப்படிற் சிறார்மேல் வைத்த
பொச்சமி லன்பு மன்னார்
　　　புதல்வரைக் கண்டாலன்ன
அச்சமுங் கொண்டு கூசி
　　　யடிபணிந் தினிய கூறி
இச்சையா றொழுகி யுள்ளக்
　　　குறிப்பறிந் தேவல் செய்வார். (31)

நறைபடு கனிதேன் பெய்த
　　　பாலொடு நறுநெய் வெள்ள
நிறைபடு செம்பொன் வண்ணப்
　　　புழுக்கலா னிமிர்ந்த சோறு
குறைவற வுண்டு வேண்டும்
　　　பொருள்களுங் கொண்மி னென்ன
மறைமுத லடியார் தம்மை
　　　வழிமறித் தருத்து வார்கள். (32)

பின்னெவ னுரைப்ப தந்தப்
　　　பெருந்தமிழ் நாடாங் கன்னி
தன்னிடை யூர்க ளென்னு
　　　மவயவந் தாங்கச் செய்த
பொன்னியற் கலனே கோயின்
　　　மடமறப் புறநீர்ச் சாலை
இன்னமு தருத்து சாலை
　　　யெனவுருத் திரிந்த தம்மா. (33)

## திணைமயக்கம்[1]

இன்ற டம்புனல் வேலிசூ
ழிந்நில வரைப்பிற்
குன்ற முல்லைதண் பணைநெய்தல்
குலத்திணை நான்கும்
மன்ற வுள்ளமற் றவைநிற்க
மயங்கிய மரபின்
ஒன்றோ டொன்றபோய் மயங்கிய
திணைவகை யுரைப்பாம். (34)

கொல்லை யானிரை மேய்ப்பவர்
கோழிணர்க் குருந்தின்
ஒல்லை தாயதிற படர்கறிக்
கருந்துண ருகுப்ப
முல்லை சோறெனத் தேன்விராய்
முத்திலழ சிற்றில்
எல்லை யாயமோ டாடுப
வெயின்சிறு மகளிர். (35)

கன்றொ டுங்களி வண்டுவாய்
நக்கவீர்ங் கரும்பு
மென்று பொன்சொரி வேங்கைவா
யுறங்குவ மேதி
குன்றி ளந்தினை மேய்ந்துபூங்
கொழுநிழன் மருதஞ்
சென்று றங்கவ சேவக
மெனமுறச் செவிமா. (36)

எற்று தெண்டிரை யெறிவளை
யெயிற்றிய ரிழைத்த
சிற்றில் வாய்நுழைந் தழிப்பவச்
சிறுமியர் வெகுண்டு

1. தலைப்பு சுவடியில் இல்லை.

பற்றி லாரெனச் சிதறிய
மனவணி பரதர்
முற்றி லாமுலைச் சிறுமியர்
முத்தொடுங் கோப்ப. (37)

முல்லை வண்டுபோய் முல்லையாழ்
முளரிவாய் மருதம்
வல்ல வண்டினைப் பயிற்றிப்பின்
பயில்வன மருதங்
கொல்லை யான்மடி யெறிந்திளங்
குழவியென் றிரங்கி
ஒல்லை யூற்றுபால் வெள்ளத்து
ளுகள்வன வாளை. (38)

கரும்பொற் கோட்டிளம் புன்னைவாய்க்
கள்ளுண்டு காளைச்
சுரும்பு செவ்வழிப் பாண்செயக்
கொன்றைபொன் சொரிவ
வருந்த டங்கடல் வளையெடுத்
தாழியான் கையில்
இருந்த சங்கென விறைகொளப்
பூவைமே லெறிவ. (39)

கழிந்த தெங்கினொண் பழம்பரீஇ
முட்பலாக் கனிகீண்
டழிந்த தேனுவர்க் கேணிபாய்ந்
தகற்றுவ வுவரை
வழிந்த தேன்மடற் கேதகை
மலர்நிழல் குருகென்
றொழிந்த தாமரைப் போதுபுக்
கொளிப்பன கெண்டை. (40)

ஆறு சூழ்கழிப் புலால்பொறா
தசைந்துகூன் கைதை

சோறு கால்வன வாம்பல்வாய்
திறப்பன துணிந்து
கூறு வாரெனக் குவளைகண்
காட்டிடக் கூடித்
தூறு வாரெனச் சிரித்தலர்
தூற்றுவ முல்லை. (41)

துள்ளு சேல்விழி நுளைச்சியர்
சுறவொடு மருந்தக்
கள்ளு மாறவுங் கூனலங்
காய்தினை யவரை
கொள்ளு மாறவுங் கிழங்குதேன்
கொழுஞ்சுவைக் கன்னல்
எள்ளு மாறவு மளப்பன
விடைக்கிடை முத்தம் (42)

அவமி கும்புலப் பகைகடந்
துயிர்க்கெலா மன்பாம்
நவமி குங்குடை நிழற்றிமெய்ச்
செய்யகோ னடாத்திச்
சிவமி கும்பர ஞானமெய்த்
திருவொடும் பொலிந்து
தவமி ருந்தர சாள்வது
தண்டமிழ்ப் பொதியம். (43)

வான யாறுதோய்ந் துயரிய
மலயமே முக்கண்
ஞான நாயக னம்மலை
போர்த்தகார் நால்வாய்
ஆனை யீருரி யம்மழை
யசும்பதன் புண்ணீர்
கூனல் வான்சிலை குருதிதோய்
கோடுபோன் றன்றே ! (44)

சுனைய கன்கரைச் சூழல்வாய்ச
சுரும்புசூழ் கிடப்ப
நனைய விழ்ந்தசெங் காந்தண்மே
னாகிள வேங்கைச்
சினைய விழ்ந்தவீ கிடப்பபொன்
றோய்கலத் தெண்ணீர்
அனைய பொன்கடு நெருப்பொடு
கரியிருந் தனைய (45)

குண்டு நீர்ப்படு குவளைவாய்க்
கொழுஞ்சினை மரவம்
வண்டு கூப்பிடச் செம்மறாய்ப்
புதுமது வார்ப்ப
அண்டர் வாய்ப்பட மறைவழி
பொரிசொரிந் தானெய்
மொண்டு வாக்கிமுத் தீவினை
முடிப்பவ ரனைய. (46)

அகிலு மாரமுந் தழன்மடுத்
தகழ்ந்தெறிந் தழல்கால்
துகிரு மாரமுந் தொட்டெறிந்
தைவனந் தூவிப்
புகரின் மால்கரி மருப்பினால்
வேலிகள் போக்கி
இகலில் வான்பயி ரோம்புவ
வெயினர்தஞ் சீறூர். (47)

அண்ட வாணருக் கின்னமு
தருத்துவோர் வேள்விக்
குண்ட வாரழற் கொழும்புகை
கோலுமக் குன்றிற்
புண்ட வாதவே லிறவுளர்
புனத்தெரி மடுப்ப
உண்ட காரகிற் றூமமு
மொக்கவே மயங்கும் (48)

கருவி வான்சொரி மணிகளுங்
கழைசொரி மணியும்
அருவி கான்றபன் மணிகளு
மகன்றலை நாகத்
திரவி கான்றசெம் மணிகளும்
புனங்கவ ரினமான்
குருவி வீழ்ந்திடக் கொடிச்சியர்
கோத்தெறி கவணகல் (49)

மாய வன்வடி வாயது
வையமா லுந்திச்
சேய பங்கய மாயது
தென்னனா டலர்மேற்
போய மென்பொகுட் டாயது
பொதியமப் பொகுட்டின்
மேய நான்முகன் அகத்தியன்
முத்தமிழ் வேதம். (50)

ஏக மாகிய மேருவும்
பொதியமே யிரும்பொன்
ஆகு மேருவைச் சூழந்தசாம்
பூநத யாறும்
நாக ராடுதண் பொருநையே
நாவலா றுடுத்த
போக பூமியும் பொருநைசூழ்
பூமியே போலும். (51)

சிறந்த தண்டமி ழாலவாய்
சிவனுல கானாற்
புறந்த யங்கிய நகரெலாம்
புரந்தரன் பிரமன்
மறந்த யங்கிய நேமியோ
னாதிய வானோர்

அறந்த யங்கிய வுலகுரு
வானதே யாகும். (52)

வளைந்த நுண்ணிடை மடந்தையர்
வனமுலை மெழுகிக்
களைந்த குங்குமக் கலவையுங்
காசறைச் சாந்தும்
அளைந்த தெண்டிரைப் பொருநையோ
வந்நதி ஞாங்கர்
விளைந்த செந்நெலும் கன்னலும்
வீசுமவ் வாசம். (53)

பொதியி லேவிளை கின்றன
சந்தனம் பொதியின்
நதியி லேவிளை கின்றன
முத்தமந் நதிசூழ்
பதியி லேவிளை கின்றன
தருமமப் பதியோர்
மதியி லேவிளை கின்றன
மறைமுதற் பத்தி (54)

கடுக்க வின்பெறு கண்டனுந்
தென்றிசை நோக்கி
அடுக்க வந்துவந் தாடுவா
னாடலி னிளைப்பு
விடுக்க வாரமென் காறிரு
முகத்திடை வீசி
மடுக்க வுந்தமிழ் திருச்செவி
மாந்தவு மன்றோ. (55)

விடையு கைத்தவன் பாணினிக்
கிலக்கண மேனாள்
வடமொ ழிக்குரைத் தாங்கியன்
மலயமா முனிக்குத்

திடமு றுத்தியம் மொழிக்கெதி
ராக்கிய தென்சொன்
மடம கட்கரங் கென்பது
வழுதிநா டன்றோ (56)

கண்ணு தற்பெருங் கடவுளுங்
கழகமோ டமர்ந்து
பண்ணு றத்தெரிந் தாய்ந்தவிப்
பசுந்தமி ழேனை
மண்ணி டைச்சில விலக்கண
வரம்பிலா மொழிபோல்
எண்ணி டைப்படக் கிடந்ததா
வெண்ணவும் படுமோ! (57)

தொண்டர் நாதனைத் தூதிடை
விடுத்தது முதலை
யுண்ட பாலனை யழைத்தது
மெலும்புபெண் ணுருவாக்
கண்ட தும்மறைக் கதவினைத்
திறந்ததுங் கன்னித்
தண்ட மிழ்ச்சொலோ மறுபுலச்
சொற்களோ சாற்றீர். (58)

வெம்மை யால்விளை வஃகினும்
வேந்தர்கோல் கோடிச்
செம்மை மாறினும் வறுமைநோய்
சிதைப்பினுஞ் சிவன்பாற்
பொய்ம்மை மாறிய பத்தியும்
பொலிவுங்குன் றாவாய்த்
தம்மை மாறியும் புரிவது
தருமமந் நாடு. (59)

உலகம் யாவையு மீன்றவ
ளும்பரு ளுயர்ந்த

திலக நாயகி பரஞ்சுடர்
சேயென மூன்று
தலைவ ரான்முறை செய்தநா
டிஃதன்றிச் சலதி
சுலவு பாரினுண் டாகுமோ
துறக்கத்து மஃதே! (60)

திருநாட்டுச்சிறப்பு முற்றும்.
ஆகத் திருவிருத்தம் 90.

## திருநகரச் சிறப்பு

மங்க லம்புனை பாண்டிநா
டாகிய மகட்குச்
சங்க லம்புகை தோளிணை
தடமுலை யாதி
அங்க மாம்புறந் தழுவிய
நகரெலா மனைய
நங்கை மாமுக மாகிய
நகர்வளம் பகர்வாம். (1)

கொங்கை யேபரங் குன்றமுங்
கொடுங்குன்றுங் கொப்பூழ்
அங்க மேதிருச் சுழியலவ்
வயிறுகுற் றாலஞ்
செங்கை யேடக மேனியே
பூவணந் திரடோள்
பொங்கர் வேய்வனந் திருமுக
மதுரையாம் புரமே. (2)

வடுவின் மாநில மடந்தைமார்
பிடைக்கிடந் திமைக்கப்
படுவி லாரமே பாண்டிநா
டாரமேற் பக்கத்
திடுவின் மாமணி யதன்புற
நகரெலா மிவற்றுள்
நடுவி னாயக மாமணி
மதுரைமா நகரம் (3)

திரும கட்கொரு தாமரைக்
கூடமே திருமான்
மரும கட்குவெண் டாமரை
மாடமே ஞானந்
தரும கட்கியோ கத்தனிப்
பீடமே தரையாம்
பெரும கட்கணி திலகமே
யானதிப் பேரூர். (4)

திக்கும் வானமும் புதையிரு
டின்றுவெண் சோதி
கக்கு மாளிகை நிவப்புறு
காட்சியந் நகருள்
மிக்க வாலிதழ்த் தாமரை
வெண்மக ளிருக்கை
ஒக்கு மல்லது புகழ்மக
ளிருக்கையு மொக்கும். (5)

## புடை நகர்[1]

நெற்க ரும்பெனக் கரும்பெலா
நெடுங்கமு கென்ன
வர்க்க வான்கமு கொலிகலித்
தெங்கென வளர்ந்த
பொற்க வின்குலைத் தெங்குகார்ப்
பந்தரைப் பொறுத்து
நிற்க நாட்டிய காலென
நிவந்ததண் பணையே (6)

சிவந்த வாய்க்கருங் கயற்கணாள்
வலாரியைச் சீறிக்
கவர்ந்த வான்றருக் குலங்களே
கடிமணம் வீசி
உவந்து வேறுபல் பலங்களும்
வேண்டினர்க் குதவி
நிவந்த காட்சியே போன்றது
நிழல்மலர்ச் சோலை (7)

ஒல்லொ லிக்கதிர்ச் சாலிகள்
புறந்தழீஇ யோங்க
மெல்லி லைப்பசுங் கொடியினால்
வீக்குறு பூகம்
அல்லெ னுங்களத் தண்ணற
னணிவிழாத் தருப்பைப்
புல்லொ டும்பிணிப் புண்டபொற்
கொடிமரம் போலும். (8)

சீத வேரியுண் டளிமுரல்
கமலமேற் செருந்தி

---

1. சுவடியில் தலைப்பு இல்லை.

போத வேரியு மலர்களுஞ்
சொரிவன புத்தேள்
வேத வேதியர் செங்கரம்
விரித்துவாய் மனுக்கள்
ஓத வேமமு முதகமு
முதவுவா ரணைய (9)

விரைசெய் பங்கயச் சேக்கைமேற்
பெடையொடு மேவி
அரச வன்னநன் மணஞ்செய
வம்புயப் பொய்கை
திரைவ ளைக்கையா னுண்டுளி
செறிந்தபா சடையாம்
மரக தக்கலத் தரளநீ
ராஞ்சனம் வளைப்ப (10)

இரும்பி னன்னதோள் வினைஞரார்த்
தெறிந்துவாய் மடுக்குங்
கரும்பு தின்றிடி யேற்றொலி
கரட்டியின் சாறு
சுரும்பு சூழ்கிடந் தரற்றிடச்
சொரிந்துவெஞ் சினத்தீ
அரும்பு கட்களி றொத்தன
வாலையெந் திரங்கள். (11)

பள்ள நீர்குடைந் தஞ்சிறைப்
பாசிபோர்த் தெழுந்த
வெள்ளை யன்னத்தைக் காரன
மெனப்பெடை வீழ்ந்த
உள்ள மீட்டல மரச்சிற
குதறியுள் ளன்பு
கொள்ள வாசையிற் றழீஇக்கொடு
குடம்பைசென் றணையும். (12)

இரவி யாழியொன் றுடையதே
ரீர்த்தெழு மிமையாப்
புரவி நாநிமிர்த் தயில்வன
பொங்கர்வாய்த் தளிர்கள்
கரவி லார்மகத் தெழுபுகை
கற்பக நாட்டிற்
பரவி வாட்டுவ பனியெனப்
பங்கயப் பொய்கை. (13)

## இடைநகர்

பிறங்கு மாலவா யகத்துளெம்
பிரானரு ளால்வந்
தறங்கொ டீர்த்தமா யெழுகட
லமர்ந்தவா நோக்கிக்
கறங்கு தெண்டிரைப் பெரும்புறக்
கடலும்வந் திவ்வூர்ப்
புறங்கி டந்ததே போன்றது
புரிசைசூழ் கிடங்கு. (14)

எறியும் வாளையு மடிக்கடி
யெழுந்துடல் பரப்பிப்
பறியு மாமையும் வாளொடு
கேடகம் பற்றிச்
செறியு நாண்மல ரகழியுஞ்
சேண்டொடு புரிசைப்
பொறியு மேயொன்றி யுடன்றுபோர்
புரிவன போலும். (15)

கண்ணி லாதவெங் கூற்றெனக்
கராங்கிடந் தலைப்ப
மண்ணி னாரெவ ரேனுமிம்
மடுவிடை வீழ்ந்தோர்

தெண்ணி லாமதி மிலைந்தவர்க்
கொப்பெனச் சிலரை
எண்ணி னாரிரு ணரகநீத
தேறினு மேறார். (6)

குமிழ லர்ந்தசெந் தாமரைக்
கொடிமுகிழ் கோங்கின்
உமிழ்த ரும்பர ஞானமண்
டுமிழ்ந்தவாய் வேதத்
தமிழ றிந்துவை திகமுடன்
சைவமு நிறுத்தும்
அமிழ்த வெண்டிரை வைகையு
மொருபுறத் தகழாம். (7)

பிள்ளை யும்பெடை யன்னமுஞ்
சேவலும் பிரியாக்
கள்ள முண்டகச் செவ்வியாற்
கண்டவர் கண்ணும்
உள்ள முந்திரும் பாவகை
சிறைப்படுத் தோங்கும்
புள்ள லம்புதண் கிடங்கிது
புரிசையைப் புகல்வாம். (8)

மாக முந்திய கடிமதின்
மதுரைநா யகர்கைந்
நாக மென்பதே தேற்றமந்
நகர்மதில் விழுங்கி
மேக நின்றசை கின்றதவ்
வெஞ்சினப் பணிதன்
ஆக மொன்றுதோ லுரிபட
நெளிவதே யாகும். (19)

புரங்க டந்தபொற் குன்றுகோ
புரமெனச் சுருதிச்

சிரங்கி டந்தவர் தென்னரா
யிருந்தனர் திருந்தார்
உரங்க டந்திட வேண்டினு
முதவிசெய் தவரால்
வரங்க டந்திடப் பெறவெதிர்
நிற்பது மானும் (20)

சண்ட பானுவுந் திங்களுந்
தடைபடத் திசையும்
அண்ட கோளமும் பரந்துநீண்
டகன்றகோ புரங்கள்
விண்ட வாயிலால் வழங்குவ
விடவரா வங்காந்
துண்ட போல்பவு முமிழ்வன
போல்பவு முழலா. (21)

மகர வேலையென் றியானைபோன்
மழையருந் தகழிச்
சிகர மாலைசூ ழும்மதி
றிரைக்கரந் துழாவி
அகழ வோங்குநீர் வைகையா
லல்லது வேற்றுப்
பகைவர் சேனையாற் பொரப்படும்
பாலதோ வன்றே! (22)

எல்லை தேர்வழித் தடைசெயு
மிம்மதிற் புறஞ்சூழ்ந்
தொல்லை மேவலர் வளைந்துழி
யுடன்றுபோ ராற்றி
வெல்ல மள்ளரும் வேண்டுமோ
பொறிகளே வெல்ல
வல்ல வம்மதிற் பொறிசெயு
மறஞ்சிறி துரைப்பாம். (23)

**மதிற் பொறிகள்**

மழுக்கள் வீசுவன நஞ்சு பூசுமுனை
வாள்கள் வீசுவன முத்தலைக்
கழுக்கள் வீசுவன குந்த நேமியெரி
கால வீசுவன காலனேர்
எழுக்கள் வீசுவன கப்ப ணங்கள்விட
மென்ன வீசுவன வன்னெடுங்
கொழுக்கள் வீசுவன கற்க வண்கயிறு
கோத்து வீசுவன வார்த்தரோ. (24)

நஞ்சு பில்குதுளை வாளெ யிற்றரவு
நாநிமிர்த் தெறியு மலையரா
வெஞ்சி னங்கொண்முழை வாய்தி றந்துபொரு
வாரை விக்கிட விழுங்குமால்
குஞ்ச ரங்கொடிய முசலம் வீசியெதிர்
குறுகு வார்தலைகள் சிதறுமால்
அஞ்சு வெம்பொறி விசைப்பி னுங்கடுகி
யடுபு லிப்பொறி யமுக்குமால். (25)

எள்ளி யேறுநரை யிவுளி மார்பிற
வெறிந்து குண்டகழி யிடைவிழத்
தள்ளி மீளுமுருள் கல்லி ருப்புமுளை
தந்து வீசியுடல் சிந்துமாற்
கொள்ளி வாயலகை வாய்தி றந்துகனல்
கொப்பு ளிப்பவுடல் குப்புறத்
துள்ளி யாடுவன கைகள் கொட்டுவன
தோள்பு டைப்பசில கூளியே. (26)

துவக்கு சங்கிலி யெறிந்தி முக்குமரி
தொடர்பி டித்தகை யறுக்கவிட்
டுவக்கு மொன்னலர்க டலைக ளைத்திருகி
யுடனெ ருக்குமர நிலைகளாற்
கவைக்கொ முந்தழல் கொளுத்தி வீசுமெதிர்
கல்லு ருட்டியடு மொல்லெனக்

குவைக்க டுங்கன்மழை பெய்யு மட்டமணல்
கொட்டு மேவலர்கள் கிட்டவே. (27)

உருக்கி யீய்மழை பெய்யு மாயை
வுருக்கு வட்டுருகு செம்பினீர்
பெருக்கி வீசும்விடு படையெ லாமெதிர்
பிடித்துவிட்டவர் தமைத்தெறச்
செருக்கி வீசுநடை கற்ற மாடமொடு
சென்று சென்றுதுடி முரசொடும்
பெருக்கி மீளுநடை வைய மேடைவீ
யெய்யும் வாளிமழை பெய்யுமால். (28)

வெறிகொ ளைம்பொறியை வெல்லி னும்பொருது
வெல்லு தற்கரிய காலனை
முறிய வெல்லினும் வெலற்க ருங்கொடிய
முரண வாயமர ரரணெலாம்.
அறிவி னானிறுவு கம்மி யன்செயவு
மரிய வாயவனர் புரியுமிப்
பொறிகள் செய்யும்வினை யின்ன பொன்னணி
புரத்து வீதிக ளுரைத்துமால். (29)

**அகநகர்**

கழையுந் தாமமுஞ் சுண்ணமு மணிநிழற்
கலனும்
குழையுந் தூபமுந் தீபமுங் கும்பமுந்
தாங்கி
தழையுங் காதலர் வரவுபார்த் தன்பகந்
ததும்பி
விழையுங் கற்பினா ரொத்தன விழாவறா
வீதி. (30)

ஆல நின்றமா மணிமிடற் றண்ணலா
னந்தக்

கோல நின்றசே வடிநிழல் குறுகினார்
குணம்போல்
வேலை நின்றெழு மதியெதிர் வெண்ணிலாத்
தெண்ணீர்
கால நின்றன சந்திர சாந்தமா
ளிகையே. (31)

குன்ற நேர்பனிக் குபரிகை நிரைதொறுங்
குழுமி
நின்ற பல்சரா சரமுமந் நிழல்வாய்
வெள்ளி
மன்ற கம்பொலிந் தாடிய மலரடி
நிழல்புக்
கொன்றி யொன்றறக் கலந்தபல் லுயிர்நிலை
யனைய. (32)

கறித்த ருந்துபுற் குவைகழீஇக் காற்றொடர்
பரியத்
தெறித்த கன்றயன் மரகதச் சித்திரத்
தெற்றி
எறித்த பைங்கதிர்க் கொழுந்தையு மெட்டிநா
வளைத்துப்
பறித்து மென்றுவா யசைப்பன பசலையான்
கன்று. (33)

சிறுகு கண்ணவாய்க் காற்றெறி செவியவாய்ப்
பாசம்
இறுகு காலவாய்க் கோட்டுமா னினம்வழங்
காறுங்
குறுகு நுண்மருங் கிறுத்தெழு கோட்டுமா
னினம்போம்
மறுகும் வண்டுசூழ்ந் திறைகொள மான்மத
நாறும். (34)

மாட மாலையு மேடையு மாளிகை
நிரையும்
ஆட ரங்குமு மன்றிவே ளன்னவர்
முடியும்
ஏட விழ்ந்ததா ரகலமு மிணைத்தடந்
தோளுஞ்
சூடு மாதரார் சீறடிப் பஞ்சுதோய்
சுவடு. (35)

மருமச் செம்புன லாறிட மாறடு
கோட்டுப்
பருமச் செங்கண்மால் யானையின் பனைக்கையு
மறைநூல்
அருமைச் செம்பொரு ளாய்ந்தவர்க் கரும்பொரு
ளீவோர்
தருமச் செங்கையு மொழுகுவ தானநீ
ராறு. (36)

பரிய மாமணி பத்தியிற் பதித்திருட்
படலம்
பொரிய வில்விடக் குயிற்றிய பொன்னர
மியமுந்
தெரிய மாமுர சொலிகெழு செம்பொனா
டரங்கும்
அரிய மின்பயோ தரஞ்சுமந் தாடுவ
கொடிகள். (37)

வலம்ப டும்புயத் தாடவர் மார்பமேற்
புலவிக்
கலம்ப டர்ந்தபூண் முலையினார் காலெடுத்
தோச்சச்
சிலம்ப லம்பிசை மழுங்கமுன் னெழுமவர்
தேந்தார்ப்
புலம்பு வண்டுநொந் தரற்றிய பொங்குபே
ரொலியே. (38)

## மதிற் பொறிகள்

மழுக்கள் வீசுவன நஞ்சு பூசுமுனை
வாள்கள் வீசுவன முத்தலைக்
கழுக்கள் வீசுவன குந்த நேமியெரி
கால வீசுவன காலனோர்
எழுக்கள் வீசுவன கப்ப ணங்கள்விட
மென்ன வீசுவன வன்னெடுங்
கொழுக்கள் வீசுவன கற்க வண்கயிறு
கோத்து வீசுவன வார்த்தரோ. (24)

நஞ்சு பில்குதுளை வாளெ யிற்றரவு
நாநிமிர்த் தெறியு மலையரா
வெஞ்சி னங்கொண்முழை வாய்தி றந்துபொரு
வாரை விக்கிட விழுங்குமால்
குஞ்ச ரங்கொடிய முசலம் வீசியெதிர்
குறுகு வார்தலைகள் சிதறுமால்
அஞ்சு வெம்பொறி விலைசப்பி னுங்கடுகி
யடுபு லிப்பொறி யமுக்குமால். (25)

எள்ளி யேறுநரை யிவுளி மார்பிற
வெறிந்து குண்டகழி யிடைவிழத்
தள்ளி மீளுமுருள் கல்லி ருப்புமுளை
தந்து வீசியுடல் சிந்துமாற்
கொள்ளி வாயலகை வாய்தி றந்துகனல்
கொப்பு ளிப்பவுடல் குப்புறத்
துள்ளி யாடுவன கைகள் கொட்டுவன
தோள்பு டைப்பசில கூளியே. (26)

துவக்கு சங்கிலி யெறிந்தி முக்குமரி
தொடர்பி டித்தகை யறுக்கவிட்
டுவக்கு மொன்னலர்க டலைக ளைத்திருகி
யுடனெ ருக்குமர நிலைகளாற்
கவைக்கொ முந்தழல் கொளுத்தி வீசுமெதிர்
கல்லு ருட்டியடு மொல்லெனக்

குவைக்க டுங்கன்மழை பெய்யு மட்டமணல்
கொட்டு மேவலர்கள் கிட்டவே. (27)

உருக்கி யீய்மழை பெய்யு மாயை
வுருக்கு வட்டுருகு செம்பினீர்
பெருக்கி வீசும்விடு படையெ லாமெதிர்
பிடித்துவிட்டவர் தமைத்தெறச்
செருக்கி வீசுநடை கற்ற மாடமொடு
சென்று சென்றுதுடி முரசொடும்
பெருக்கி மீளுநடை வைய மேடைவீ
யெய்யும் வாளிமழை பெய்யுமால். (28)

வெறிகொ ளைம்பொறியை வெல்லி னும்பொருது
வெல்லு தற்கரிய காலனை
முறிய வெல்லினும் வெலற்க ருங்கொடிய
முரண வாயமர ரரணெலாம்.
அறிவி னானிறுவு கம்மி யன்செயவு
மரிய வாயவனர் புரியுமிப்
பொறிகள் செய்யும்வினை யின்ன பொன்னணி
புரத்து வீதிக ளுரைத்துமால். (29)

## அகநகர்

கழையுந் தாமமுஞ் சுண்ணமு மணிநிழற்
கலனும்
குழையுந் தூபமுந் தீபமுங் கும்பமுந்
தாங்கி
தழையுங் காதலர் வரவுபார்த் தன்பகந்
ததும்பி
விழையுங் கற்பினா ரொத்தன விழாவறா
வீதி. (30)

ஆல நின்றமா மணிமிடற் றண்ணலா
னந்தக்

கோல நின்றசே வடிநிழல் குறுகினார்
குணம்போல்
வேலை நின்றெழு மதியெதிர் வெண்ணிலாத்
தெண்ணீர்
கால நின்றன சந்திர சாந்தமா
ளிகையே. (31)

குன்ற நேர்பனிக் குபரிகை நிரைதொறுங்
குழுமி
நின்ற பல்சரா சரமுமந் நிழல்வாய்
வெள்ளி
மன்ற கம்பொலிந் தாடிய மலரடி
நிழல்புக்
கொன்றி யொன்றறக் கலந்தபல் லுயிர்நிலை
யனைய. (32)

கறித்த ருந்துபுற் குவைகழீஇக் காற்றொடர்
பரியத்
தெறித்த கன்றயன் மரகதச் சித்திரத்
தெற்றி
எறித்த பைங்கதிர்க் கொழுந்தையு மெட்டிநா
வளைத்துப்
பறித்து மென்றுவா யசைப்பன பசலையான்
கன்று. (33)

சிறுகு கண்ணவாய்க் காற்றெறி செவியவாய்ப்
பாசம்
இறுகு காலவாய்க் கோட்டுமா னினம்வழங்
காறுங்
குறுகு நுண்மருங் கிறுத்தெழு கோட்டுமா
னினம்போம்
மறுகும் வண்டுசூழ்ந் திறைகொள மான்மத
நாறும். (34)

மாட மாலையு மேடையு மாளிகை
நிரையும்
ஆட ரங்குமு மன்றிவே ளன்னவர்
முடியும்
ஏட விழ்ந்ததா ரகலமு மிணைத்தடந்
தோளுஞ்
சூடு மாதரார் சீறடிப் பஞ்சுதோய்
சுவடு. (35)

மருமச் செம்புன லாறிட மாறடு
கோட்டுப்
பருமச் செங்கண்மால் யானையின் பணைக்கையு
மறைநூல்
அருமைச் செம்பொரு ளாய்ந்தவர்க் கரும்பொரு
ளீவோர்
தருமச் செங்கையு மொழுகுவ தானநீ
ராறு. (36)

பரிய மாமணி பத்தியிற் பதித்திருட்
படலம்
பொரிய வில்விடக் குயிற்றிய பொன்னர
மியமுந்
தெரிய மாமுர சொலிகெழு செம்பொனா
டரங்கும்
அரிய மின்பயோ தரஞ்சுமந் தாடுவ
கொடிகள். (37)

வலம்ப டும்புயத் தாடவர் மார்பமேற்
புலவிக்
கலம்ப டர்ந்தபூண் முலையினார் காலெடுத்
தோச்சச்
சிலம்ப லம்பிசை மழுங்கமுன் னெழுமவர்
தேந்தார்ப்
புலம்பு வண்டுநொந் தரற்றிய பொங்குபே
ரொலியே. (38)

வேறு

தேசவிர் நீல மாடஞ்
செம்மணிச் சென்னி மாடங்
காசறு கனக மாடஞ்
சந்திர கரந்த மாடம்
மாசற விளங்கு மின்ன
மாடநீண் மாலை கூடற்
பாசிழை மடந்தை பூண்ட
பன்மணிக் கோவை யன்ன! (74)

விரையகல் கதுப்பி னல்லார்
வீங்கிளங் கொங்கை போழ்ந்த
வரையகன் மார்ப மன்றி
வடுப்படார் தமக்கன் பில்லார்
உரையகன் மான வாற்றா
லொழுகுவார் பலகை யொள்வாட்
கரையகல் விஞ்சை வீரர்
கணம்பயில் காட்சித் தெங்கும். (75)

மின்னைவா ளென்ன வீசி
வீங்குகார் தம்மிற் போர்மூண்
டென்னவான் மருப்பு நீட்டி
யெதிரெதிர் புதையக் குத்தி
அன்னவா னென்ன வாய்விட்
டதுவெனச் செந்நீர் சோரப்
பொன்னவா மகன்ற மார்பர்
பொருகளி றாட்டு வார்கள். (76)

தூண்டுவா ருளமுந் தங்கள்
பின்னிடத் துவக்குண் டீர்த்துத்
தாண்டுமா னொற்றை யாழித்
தேரினும் தள்ளித் துள்ளப்
பாண்டில்வாய்ப் பசும்பொன் றேயப்
பார்மகண் முதுகு கீண்டு

சேண்டிசை போய்ம டங்கச்
செல்வதேர் நடாத்து வார்கள் (77)

மைந்தர்தந் நெருக்கிற் சிந்து
கலவையு மகளிர் கொங்கைச்
சந்தமுங் கூந்தல் சோர்ந்த
தாமமுஞ் சிவிறி வீசு
சிந்துரப் பொடியு நாறத்
தேனொடு [1]மெழுந்து செந்தூள்
அந்தர வயிறு தூர்ப்ப
வடுபரி நடத்து வார்கள். (78)

தம்முயிர்க் கிரங்கா ராகித்
தருக்கொடு மான மீர்ப்பத்
தெம்முனை யெதிர்ந்தா ராற்றுஞ்
செருவெனக் குருதிச் செங்கேழ்க்
கொய்ம்மலர் குடுமிச் சேவல்
கோழிளந் தகர்போர் மூட்டி
வெம்முனை நோக்கி நிற்பார்
வேறவற் றூது நோக்கார். (79)

பெண்முத்த மனைய பேதைச்
சிறுமியர் பெருநீர் வைகை
வெண்முத்த மிழைத்த சிற்றில்
சிதைபட வெகுண்டு நோக்கிக்
கண்முத்துஞ் சிதறச் சிந்தும்
கதிர்முத்த மாலை தட்பத்
தெண்முத்தி னகைத்துச் செல்வச்
சிறார்கடே ருருட்டு வார்கள். (80)

கொடிமுகி றுழாவு மிஞ்சிக்
கோநகர் வடகீழ் ஞாங்கர்

.............................................

1. மெழுந்த என்பது பாடவேறுபாடு

முடிமிசை வேம்பு நாற
        முருகவி ழாரும் போந்தும்
அடிமிசை நாறத் தென்னர்
        வழிவழி யரசு செய்யும்
இடிமுர சுறங்கா வாயி
        லெழுநிலை மாடக் கோயில். (81)

## அந்தணர் வீதி

ஆத்திக ருண்டென் றோது
        மறமுதற் பொருள்க ணான்கும்
நாத்திகம் பேசும் வஞ்சர்
        நாவிரி கருவி யாக
ஆத்தனா லுரைத்த வேத
        வளவுகண் டுள்ளந் தேறித்
தீர்த்தராய் முத்தீ வேட்குஞ்
        செல்வர்தம் மிருக்கை சொல்வாம். (82)

முஞ்சிநாண் மருங்கின் மின்னப்
        பொன்செய்த முளரி வேய்ந்த
குஞ்சிநான் றசையத் தானைச்
        சொருக்குமுன் கொய்து தூங்கப்
[1]பஞ்சினான் கலைத்தோன் மார்பும்
        பலாசக்கோல் கையுந் தாங்கி
[2]எஞ்சினாண் மறைநூல் கற்போர்
        கிடைகளே இல்ல மெல்லாம். (83)

தீவினை யந்த ணாளர்
        சிறார்பயி றெய்வ வேதம்
நாவுரு வேற்றக் கேட்டுக்
        கிளிகளோ நவிலும் வேற்றுப்

1. பஞ்சிநாண் என்பதும் பாடம். 2. எஞ்சிநாண் என்பதும் பாடம்.

பூவையும் பயின்று புத்தே
ளுலகுறை புதுமந் தாரக்
காவுறை கிளிகட் கெல்லாம்
கசடறப் பயிற்று மன்னோ. (84)

வேதமு மங்க மாறு
மிருதியும் புராண நூலின்
பேதமுந் தெரிந்தோ ராலும்
பிறர்மதங் களைய வல்ல
வாதமு மதமேற் கொண்டு
மறுத்தலு நிறுத்த வல்ல
போதமு முடையோ ராலும்
பொலிந்தன கழக மெல்லாம். (85)

உறிபொதி கரகக் கைய
ரொளிவிடு செங்கற் றோய்த்த
அறுவைய ருயிர்க்கூ றஞ்சு
நடையினர் ரவிச்சை மான
எறிசுடர் மழுவா ளென்னக்
கோவணம் [1]யாத்த கோலர்
மறைமுடி வன்றித் தேறா
மாதவர் மடங்க ளெங்கும். (86)

அட்டில்வாய்ப் புகையு மாடத்
தகில்படு புகையும் வேள்வி
விட்டெழு புகையு மொன்றி
விரிசுடர் விழுங்கக் கங்குல்
பட்டது பலருந் தத்தம்.
பயில்வினை [2]யிழக்க நங்கை
மட்டவிழ் கடுக்கை யான்கண்
புதைத்த நாண் மானு மன்னோ ! (87)

.................................................................

1. ஆர்த்த – என்பது பாட வேறுபாடு. 2. யிழப்ப என்பதும் பாடம்

வேறு

தேசவிர் நீல மாடஞ்
செம்மணிச் சென்னி மாடங்
காசறு கனக மாடஞ்
சந்திர கரந்த மாடம்
மாசற விளங்கு மின்ன
மாடநீண் மாலை கூடற்
பாசிழை மடந்தை பூண்ட
பன்மணிக் கோவை யன்ன! (74)

விரையகல் கதுப்பி னல்லார்
வீங்கிளங் கொங்கை போழ்ந்த
வரையகன் மார்ப மன்றி
வடுப்படார் தமக்கன் பில்லார்
உரையகன் மான வாற்றா
லொழுகுவார் பலகை யொள்வாட்
கரையகல் விஞ்சை வீரர்
கணம்பயில் காட்சித் தெங்கும். (75)

மின்னைவா ளென்ன வீசி
வீங்குகார் தம்மிற் போர்மூண்
டென்னவான் மருப்பு நீட்டி
யெதிரெதிர் புதையக் குத்தி
அன்னவா னென்ன வாய்விட்
டதுவெனச் செந்நீர் சோரப்
பொன்னவா மகன்ற மார்பர்
பொருகளி றாட்டு வார்கள். (76)

தூண்டுவா ருளமுந் தங்கள்
பின்னிடத் துவக்குண் டீர்த்துத்
தாண்டுமா னொற்றை யாழித்
தேரினும் தள்ளித் துள்ளப்
பாண்டில்வாய்ப் பசும்பொன் றேயப்
பார்மகண் முதுகு கீண்டு

சேண்டிசை போய்ம டங்கச்
செல்வதேர் நடாத்து வார்கள் (77)

மைந்தர்தந் நெருக்கிற் சிந்து
கலவையு மகளிர் கொங்கைச்
சந்தமுங் கூந்தல் சோர்ந்த
தாமமுஞ் சிவிறி வீசு
சிந்துரப் பொடியு நாறத்
தேனொடு [1]மெழுந்து செந்தூள்
அந்தர வயிறு தூர்ப்ப
வடுபரி நடத்து வார்கள். (78)

தம்முயிர்க் கிரங்கா ராகித்
தருக்கொடு மான மீர்ப்பத்
தெம்முனை யெதிர்ந்தா ராற்றுஞ்
செருவெனக் குருதிச் செங்கேழ்க்
கொய்ம்மலர் குடுமிச் சேவல்
கோழிளந் தகர்போர் மூட்டி
வெம்முனை நோக்கி நிற்பார்
வேறவற் றூது நோக்கார். (79)

பெண்முத்த மனைய பேதைச்
சிறுமியர் பெருநீர் வைகை
வெண்முத்த மிழைத்த சிற்றில்
சிதைபட வெகுண்டு நோக்கிக்
கண்முத்துஞ் சிதறச் சிந்தும்
கதிர்முத்த மாலை தட்பத்
தெண்முத்தி னகைத்துச் செல்வச்
சிறார்கடே ருருட்டு வார்கள். (80)

கொடிமுகி றுழாவு மிஞ்சிக்
கோநகர் வடகீழ் ஞாங்கர்

.........................................

1. மெழுந்த என்பது பாடவேறுபாடு

முடிமிசை வேம்பு நாற
முருகவி ழாரும் போந்தும்
அடிமிசை நாறத் தென்னர்
வழிவழி யரசு செய்யும்
இடிமுர சுறங்கா வாயி
லெழுநிலை மாடக் கோயில். (81)

## அந்தணர் வீதி

ஆத்திக ருண்டென் றோது
மறமுதற் பொருள்க ணான்கும்
நாத்திகம் பேசும் வஞ்சர்
நாவிரி கருவி யாக
ஆத்தனா லுரைத்த வேத
வளவுகண் டுள்ளந் தேறித்
தீர்த்தராய் முத்தீ வேட்குஞ்
செல்வர்தம் மிருக்கை சொல்வாம். (82)

முஞ்சிநாண் மருங்கின் மின்னப்
பொன்செய்த முளரி வேய்ந்த
குஞ்சிநான் றசையத் தானைச்
சொருக்குமுன் கொய்து தூங்கப்
[1]பஞ்சினாான் கலைத்தோன் மார்பும்
பலாசக்கோல் கையுந் தாங்கி
[2]எஞ்சினாண் மறைநூல் கற்போர்
கிடைகளே இல்ல மெல்லாம். (83)

தீவினை யந்த ணாளர்
சிறார்பயி றெய்வ வேதம்
நாவுரு வேற்றக் கேட்டுக்
கிளிகளோ நவிலும் வேற்றுப்

1. பஞ்சிநாண் என்பதும் பாடம். 2. எஞ்சிநாண் என்பதும் பாடம்.

பூவையும் பயின்று புத்தே
　　ளுலகுறை புதுமந் தாரக்
காவுறை கிளிகட் கெல்லாம்
　　கசடறப் பயிற்று மன்னோ. (84)

வேதமு மங்க மாறு
　　மிருதியும் புராண நூலின்
பேதமுந் தெரிந்தோ ராலும்
　　பிறர்மதங் களைய வல்ல
வாதமு மதமேற் கொண்டு
　　மறுத்தலு நிறுத்த வல்ல
போதமு முடையோ ராலும்
　　பொலிந்தன கழக மெல்லாம். (85)

உறிபொதி கரகக் கைய
　　ரொளிவிடு செங்கற் றோய்த்த
அறுவைய ருயிர்க்கு றஞ்சு
　　நடையின ரவிச்சை மாண
எறிசுடர் மழுவா ளென்னக்
　　கோவணம் [1]யாத்த கோலர்
மறைமுடி வன்றித் தேறா
　　மாதவர் மடங்க ளெங்கும். (86)

அட்டில்வாய்ப் புகையு மாடத்
　　தகில்படு புகையும் வேள்வி
விட்டெழு புகையு மொன்றி
　　விரிசுடர் விழுங்கக் கங்குல்
பட்டது பலருந் தத்தம்.
　　பயில்வினை [2]யிழக்க நங்கை
மட்டவிழ் கடுக்கை யான்கண்
　　புதைத்த நாண் மானு மன்னோ! (87)

........................................................................

1. ஆர்த்த – என்பது பாட வேறுபாடு. 2. மிழப்ப என்பதும் பாடம்

## சைவர் வீதி

தெய்வ நீறுமைந் தெழுத்துமே சிதைக்கல னாக
எவ்வ மாசிரு வினையுடம் பெடுத்துழல் பிறவிப்
பௌவ மேழையுங் கடந்தரன் பதமலர்க் கரைசேர்
சைவ மாதவ ருறைமடத் தனிமறு குரைப்பாம். (88)

எங்கு மீசனைப் பூசைசெய் திகபர மடைவார்
எங்கு மன்பரைப் பூசைசெய் தெழுபிறப் பறுப்பார்
எங்கு மாகமஞ் செவிமடுத் ததெிர்வினை தடுப்பார்
எங்கு நாயகன் வடிவுணர்ந் திருண்மலங் களைவார். (89)

அழிவி லானுரை யாகம மிலக்கமாய்ந் தவற்றுள்
விழுமி தாகிய விதியினும் விலக்கினு [1]மடியைத்
தழுவி தொண்டர்கண் மைந்தர்கள் சாதகர் பாசங்
கழுவி வீடருள் போதகக் காட்சியர் பலரால். (90)

மறைக ளாகமம் பொதுச்சிறப் பெனச்சிவன் [2]வகுத்து
முறையி னோதிய விதிவிலக் குரைகளு முடிவில்
அறையும் வீடுமொன் றிரண்டெனும் பிணக்கற வமைந்த
குறைவி லாச்சிவ யோகியர் குழாங்களும் பலவால். (91)

## திருக்கோயில்

குழலுந் தும்புரு நாரதர் பாடலுங் குனித்துச்
சுழலுங் கொம்பனா ராடலு மூவர்வாய்த் துதியும்
விழவின் செல்வமுஞ் சுருதியுந் திசையெலாம் விழுங்கும்
முழவுங் கண்டுயி லாதது முன்னவன் கோயில். (92)

மடங்க லின்றிவிண் பிளந்துமேல் வளர்ந்துவெள் ளேற்று
விடங்கர் வெள்ளிமன் றிமைத்தெழு வெண்சுடர் நீட்டம்
முடங்கல் வெண்பிறைக் கண்ணியான் கயிலைமூ வுலகும்
ஒடுங்கு கின்றநா ளோங்கிய வோக்கமே யொக்கும். (93)

.....................................................................................

1. மடியில் என்பது பாடவேறுபாடு. 2. வகுத்த முறையும் என்பது பாடம்.

சுரந்து தேன்றுளித் தலர்களுஞ் சொரிந்துவண் டரற்ற
நிரந்து சுந்தரற் கொருசிறை [1]நின்றபூங் கடம்பு
பரந்து கட்புன லுகப்பல மலர்கடூய்ப் பழிச்சி
இரந்து நின்றருச் சனைசெயு மிந்திர னிகரும். (94)

உழல்செய் தீவினை யுருப்பற வுயிர்க்கெலாம் மடியின்
நிழல்செய் வார்க்குநீ ணிழல்செயா நின்றபூங் கடம்பின்
குழல்செய் வண்டுகற் பகமதுக் கொணர்ந்துவந் தூட்டித்
தழல்செய் காமமென் பேடையி னூடனோய் தணிக்கும் (95)

ஆரு நீர்க்கட லன்றது வெனநிறை யகழ்கார்
ஊரு மாழியின் றதுவென வோங்கெயி லெட்டாய்ச்
சாரு நேமியன் றதுவெனச் சமைத்தகோ புரம்பொன்
மேரு வன்றது வெனச்சுடர் விசும்பிழி விமானம். (96)

வேத வந்தமுந் துளக்கற மெய்ப்பொருள் விளங்கும்
நாத வந்தமுங் கடந்ததோர் நடுநிலைப் பொருளின்
பாத வந்தனைப் பத்தியின் பாலராய்ப் பயில்வோர்
மாத வந்தரு பயனெனத் தழைத்தபல் வளனும். (97)

பொறிக ளைந்தினுக் கூட்டுபல் போகமு மிதப்பச்
செறிகொ ணீரவா [2]லுவர்ப்பவத் திருநகர் மாக்கள்
நெறிகொள் செஞ்சடைப் பிறைமுடி நிருமலக் கொழுந்தின்
வெறிகொ ணாண்மல ரடிதழீஇ வீடுபெற் றார்போல். (98)

முன்ன வன்னர சிருக்கையா லந்நகர் முளரிப்
பொன்னை யீன்றதா லதுபல பொருணிறை செல்வந்
தன்னை யீன்றதா லதுபல தருமமென் றுரைக்கும்
மின்னை யீன்றதஃ தீன்றதால் விழுத்தகு புகழே ! (99)

எழுக்க டந்ததோ ளுருத்திர வுலகமென் றியாரும்
வழுத்த நின்றவிந் நகர்வயி னும்பரின் மாண்ட

1. நின்றவர் கடம்பு என்பது பா.வே. 2. லுவப்ப என்பது பா.வே.

விழுத்த கும்பல செல்வமும் வியந்துபார்த் துள்ளத்
தழுக்க றாமையா லின்னமு மமரர்கண் ணுறங்கார். (100)

விரைய விழ்ந்ததார் மீனவர் வாகைவேல் விடுத்துத்
திரையை வென்றது முடிதகர்த் திந்திரன் செருக்குக்
கரைய வென்றதுங் கார்தனை யிட்டதுங் கனக
வரையை வென்றது மிந்நகர் வலியினா லன்றோ ! (101)

எங்கு நாவுமா யெங்கணுங் கண்ணுமா யெங்குந்
தங்கு பேரொளி யல்லதித் தனிநகர்ச் செல்வஞ்
செங்க ணாயிர நாவினான் செப்பவு மெதிர்கண்
டங்க ணாயிர முடையவ னளக்கவும் படுமோ ! (102)

புண்ணி யம்புரி பூமிபா ரதில்வரு போகம்
நண்ணி யின்புறு பூமிவா னாடென்ப நாளும்
புண்ணி யம்புரி பூமியு மதில்வரு போகம்
நண்ணி யின்புறு பூமியு மதுரைமா நகரம். (103)

வேறு

பண்கனிந் தனைய சொல்லார்
நரப்பிசைப் பாணி தேவர்
உண்கனி யமுதுங் கைப்பச்
செவிதுளைத் தூட்ட வுண்டும்
பெண்களி னமுத மன்னார்
பெருமித நடன முண்ணக்
கண்களை விடுத்துங் காலங்
கழிப்பவ ரளவி லாதார். (104)

கலவித் தாக வூடிக்
கட்புனல் குளிக்கு நல்லார்
புலவிதீர் செவ்வி நோக்கிப்
புணர்முலைப் போகந் துய்த்தும்

நிலைநிலை யாமை நோக்கி
நெறிப்படு தரும தானங்
கலைஞர் கைப் பெய்துங் காலங்
கழிப்பவ ரெண்ணி லாதார். (105)

சந்தித்து மீன நோக்கி
தலைவனை மூன்று போதும்
வந்தித்து மீசன் பூசை
மரபுளி முடித்தும் வேதம்
அந்தித்து மறியான் செய்த
திருவிளை யாடல் கேட்டுஞ்
சிந்தித்து மன்பர் பூசை
செய்துநாள் கழிப்பார் பல்லோர்.

கற்பவை கற்றுங் கேட்டுங்
கேட்டவை கருத்து ளூறச்
சொற்பொரு ணினைந்துங் கேட்போர்க்
குணர்த்தியுட் டுளக்கந் தீர்த்தும்
எற்பக லிரவு நீங்கு
மிடத்துமெய் யறிவா னந்த
அற்புத வெள்ளத் தாழா
தாழ்ந்துநாள் கழிப்பார் சில்லோர். (107)

தன்னிக ருயர்ச்சி யில்லான்
காப்பியத் தலைவ னாக
முன்னவர் மொழிந்த தேனோர்
தமக்கெலா முகம னன்றோ !
அன்னது தனதே யாகு
மண்ணலே பாண்டி வேந்தாய்
இந்நகர்க் கரச னாவா
னிக்கவிக் கிறைவ னாவான். (108)

என்னென வுரைப்பே னிந்த
விறைமகன் பண்பை யேனை

மன்னவர் வானோர் போல
மதித்துரை விரிக்கற் பாற்றோ
அன்னவ னாணை யாற்றா
னடப்பதிவ் வகில மென்னான்
முன்னவன் செய்த வாடல்
வரவினை முறையிற் சொல்வேன். (107)

திருநகரச் சிறப்பு முற்றும்.

ஆகத் திருவிருத்தம் 197.

*(ஆறுமுகநாவலர் பதிப்பிலும், திருப்பணந்தாள் பதிப்பிலும் ஆகத் திருவிருத்தம் 200 என்றுளது.)*

## திருக்கைலாய வருணனை[1]

வரங்க டந்தரு ளெனமுது வானவர் முனிவோர்
கரங்க டந்தலை முகிழ்த்திடக் கருணைசெய் தவிச்சை
உரங்க டந்துரை யுணர்வெலாங் கடந்தரு மறையின்
சிரங்க டந்தவ னிருப்பது திருக்கயி லாயம். (1)

புரந்த ராதிவா னவர்பதம் போதுறை புத்தேள்
பரந்த வான்பதுஞ் சக்கரப் படையுடைப் பகவன்
வரந்த வாதுவாழ் பதமெலா நிலைகெட வருநாள்
உரந்த வாதுநின் றூழிதோ றோங்குமவ் வோங்கல். (2)

அரம்பை மாதரா ராடலி னரவமும் பாடல்
நரம்பி னோசையு முழவதிர் சும்மையு நால்வாய்
வரம்பி லோதையு மருவிவீ ழொலியுமா றாது
நிரம்பி வானமுந் திசைகளு நிமிர்வன மாதோ. (3)

---

1. இது ஆறுமுகநாவலர் அச்சுநூலில் 'திருவிளையாடல் வரலாறு" என்றுளது. திருப்பணந்தாள் பதிப்பில் 'திருக்கயிலாயச் சிறப்பு' என்றுளது.

வெந்த நீற்றொளி வெண்மையும் விமலனை யகங்கொண்
டந்த மின்றியே யசைவற விருக்கையு மருவி
வந்த கண்களுங் கொண்டவ ணிருக்குமா தவர்க்குத்
தந்த தாலரன் கயிலையுந் தனதுசா ரூபம். (4)

ஆங்கு வெண்டுகில் விரித்தெனக் கல்லென வார்த்து
வீங்கு காலரு வித்திரள் வெள்ளமே யன்றி
ஓங்கு நான்மறைக் குடுமியி னுள்ளொளி நோக்கித்
தூங்கு மாதவர் கண்களுஞ் சொரிவன வெள்ளம். (5)

கோட்டு மாமலர் நிலமலர் குண்டுநீ ரெடுத்துக்
காட்டு மாமலர் கொடிமலர் கொண்டுமுட் கரைந்த
பாட்டு மாமலர் கொண்டுநம் பரஞ்சுட ரடியிற்
சூட்டு மாதவர் தொகுதியுஞ் சூழ்வன வொருபால். (6)

கையு நாகமுங் காய்சின வுழுவையுங் கருவாய்ப்
பைய நாகமுந் தங்கிளை பரவிய முக்கண்
ஐய னாகமெய் யருந்தவர் தமையடைந் தன்பு
செய்ய நாகமும் வையமும் புகழ்வதச் சிலம்பு. (7)

திருக்கயிலாய வருணனை முற்றும்.

அகத்திருவிருத்தம் 204.



## புராணவரலாறு

## சூதமுனி சொன்னது!

அளந்தி டற்கரி தாயவக் குன்றின்மேற்
களங்க றுத்துவிண் காத்தவன் கோயின்முன்
விளம்ப ருஞ்சிவ தீர்த்தத்தின் மிக்கதாய்
வளம்பெ ருஞ்சிவ தீர்த்தத்தின் மாடது. (1)

தண்ட ருங்கதிர்ச் சந்திர காந்தத்திற்
[1]பண்ட யங்க நவமணி பத்திசெய்
தண்டர் தச்ச னநேக தவஞ்செய்து
கண்ட தாயிரக் கான்மண் டபமரோ! (2)

ஆன பான்மையி னாலந்த மண்டபம்
ஞான நாயக னாண்மலர்த் தாடொழ
வான மீனொடு வந்து பதங்குறித்
தூன மின்மதி வைகுவ தொத்ததே! (3)

அன்ன மண்டபந் தன்னு ளருந்தவம்
என்ன வேங்கை யதண்மே லிருந்தனன்
பன்னு கேள்விப் பதினெண் புராணமுஞ்
சொன்ன மாதவச் சூத முனிவனே! (4)

அந்த வேலையி லச்சிவ தீர்த்தத்தில்
வந்து மூழ்கியம் மண்டபத் தேறியே
சந்தி யாதி தவமுடித் தீறிலா
இந்து சேகரன் றாணினைந் தேத்தியே! (5)

சம்பு பத்தன் சதானந்த னுத்தமன்
அம்பு யத்த னனைய மகோதரன்
உம்ப ரஞ்சிய வுக்கிர வீரியன்
நம்பு கேள்விப் பிரசண்ட நற்றவன். (6)

1. பண்டயங்கு – பா.வே.

ஆதி மாதவர் யாவரு மன்புமை
பாதி யாய்முற்று மாகும் பராபரச்
சோதி பால்வைத்த சூதனைத் தோத்திரம்
ஓதி யஞ்சலித் தொன்று வினாவினார். (7)

வேறு

வேத வாகம புராணமே மிருதியே முதலா
ஓது நூல்களின் நுணிபொரு ளுலகெலாம் பயந்த
பேதை பாகனே பரமெனத் தேர்ந்துணர் பெரிய
போத மாதவ வுனக்கியாம் புகல்வதொன் றுளதால். (8)

மேரு மந்தரங் கயிலைபர்ப் பதமுதல் விடைமேல்
ஊரு மந்தர நாடவ னுரைபதி யனந்தம்
ஆரு மந்தமில் போகம்வீ டடைவதென் றவற்றின்
கார ணங்களோ டுரைத்தனை கருத்தினுக் கிசைய. (9)

ஐய மாதிமுக் குற்றமு மகலநீ யருளிச்
செய்ய வுந்தெளிந் திலோங்கள்யாஞ் சிற்றறி வுடையேம்
மைய னெஞ்சினே மாகையான் மயக்கற வின்னம்
உய்யு மாறருள் செய்தியென் றுரைத்தனர் மன்னோ ! (10)

தலங்க டம்மின்மிக் குள்ளதாய்த் தகுதிசா ற்ீர்த்தக்
குலங்க டம்மின்மிக் [1]குள்ளதாய்க் குறையிரந் தோர்க்கு
நலங்க டந்தருண் மூர்த்தியாய் நாதவே தாந்தப்
புலங்க டந்தபே ரொளியுறை தலனொன்று புகலாய். (11)

என்ற போதெதிர் முகமலர்ந் திருண்மல வலியை
வென்ற சூதனுந் தலங்களின் விசேடமாய்ந் தம்பொற்
குன்ற வார்சிலை யானிடங் கொண்டுறை பதியுள்
ஒன்று கேட்கவீ டளிப்பதா யுளதுமற் றதுதான். (12)

1. குடையதாய்க். பா.வே.

## சங்கர சங்கிதையின் பெருமை

முற்ற வேதிய புராணமூ [1]வாறினுட் காந்தம்
பெற்ற தாறுசங் கிதையவை யாறுந்தம் பெயராற்
சொற்ற பேர்சனற் குமரமா முனிவரன் சூதன்
கற்றை வார்சடைச் சங்கரன் மாலயன் கதிரோன். (13)

இன்ன வாறனுட் சங்கர சங்கிதை யென்று
சொன்ன நூலினை யுணர்த்தினான் சங்கரன் றுணைவிக்
கன்ன போதவன் மடியினி லிருந்துகேட் டதனை
மின்னு வேல்பணி கொண்டவேள் வெளிப்பட வுணர்ந்தான் (14)

குன்றெ றிந்தவேள் வழிபடு குருமுனிக் குரைத்தான்
அன்று தொட்டஃ தகத்திய சங்கிதை யாகி
நின்ற தன்னது கேட்பவர்க் கரனடி நீழல்
ஒன்று மின்பவீ டளிப்பதா வொருதல னுரைக்கும். (15)

அதிக வப்பதி யாதெனி னாலவாய் கேட்கக்
கதிய ளிப்பதென் றோதிய சூதனைக் கதியின்
மதியை வைத்தவ ரன்னதைப் பகரென வந்த
விதியி னிற்புகல் கின்றனன் வியாதன்மா ணாக்கன். (16)

புதிய தாமரை மேவிய பழமறைப் புத்தேள்
விதியி னாற்கடு நடைப்பரி மகஞ்செய்வான் வேண்டிக்
கதியை மாயந்தவர்க் குதவுதண் டுறைகெழு காசிப்
பதியின் மைந்தரோ டெய்தினான் பண்டொரு வைகல். (17)

வேறு

அகத்தியன் வியாத னாரதன் சனக
னாதிநான் முனிவர்கோ தமனூற்
சிகைத்தெளி வுணர்ந்த பராசரன் வாம
தேவன்வான் மீகியே வசிட்டன்

..........................................

1. வாறனுட் – பா.வே.

சகத்தியல் கடந்த சுகன்முதன் முனிவர்
தம்மொடும் பத்துவெம் பரிமா
மகத்தொழின் முடித்து மற்றவர்க் குள்ள
மகிழ்வுற வழங்குந வழங்கா. (18)

## முனிவர்கள் நாரதமுனியைப் பார்த்துக் கேட்பது

சத்திய வுலகிற் சரோருகக் கிழவன்
சார்ந்தபின் புலப்பகை சாய்த்த
அத்திரு முனிவ ரனைவருங் காசி
யடிகளை யடைந்தனர் பணிந்து
முத்திமண் டபத்தின் அறமுத னான்கு
மொழிந்தருண் மூர்த்திசந் நிதியிற்
பத்தியா யிருந்து நாரத முனியைப்
பார்த்தொரு வினாவுரை பகர்வார். (19)

தலமுதன் மூன்றுஞ் சிறந்ததோர் சைவத்
தலமுறை யென்னநா ரதன்றான்
கலைமுழு துணர்ந்த சனற்குமா ரன்பாற்
கற்றவன் வியாதனா மவன்பால்
நலமுறக் கேண்மி னெனவவன் கதிர்வே
ணம்பிபான் மறைமுத லனைத்தும்
[1]அலைவற வுணர்ந்தோன் குறுமுனி யாகு
மவனிடைக் கேண்மென விடுத்தான். (20)

## அகத்தியரைத் துதிப்பது

மலயமா தவனை யடைந்துகை தொழுது
வாழ்த்திவா தாவிவில் வலனைக்
கொலைபுரி தரும மூர்த்தியே விந்தக்
குன்றடக் கியதவக் குன்றே

1. அலமற – பா.வே.

அலைகடல் குடித்த வருட்பெருங் கடலே
அருந்தமிழ்க் கொண்டலே தென்பார்
துலைபெற நிறுத்த களைகணே யென்று
சுருதியா யிரமெனத் துதித்தார். (21)

மூவகைச் சிறப்பு முள்ளதோர் தான
மொழிகென முகமலர்ந் தருள்கூர்ந்
தியாவையு முணர்ந்தோன் முத்திமண் டபத்தின்
ஈரிரு தொகையின்வந் திறக்குஞ்
சேவல்க டமையு மைங்கரன் றனையுஞ்
சேவலங் கொடியுடை வடிவேற்
காவலன் றனையும் வடநிழ லமர்ந்த
கண்ணுதற் பரனையும் பணியா. (22)

அங்கயற் கண்ணி தன்னையு மெந்தை
யாலவா யானையு மிதய
பங்கயத் திருத்திச் சமாதியி லிருந்து
பரவச மடைந்துபார்ப் பதிக்குச்
சங்கர னருளிச் செய்தசங் கிதையைத்
தாரக னுடலிரண் டாகச்
செங்கைவேல் விடுத்த சேவக னெனக்குத்
தெருட்டினா னனையசங் கிதையில். (23)

பெறற்கருந் தவஞ்செய் தகந்தெளிந் தரிதிற்
பெறுங்கதி வேட்பவர்க் கெளிதாய்
உறப்படுந் தலநீர் வினாயமுச் சிறப்பு
முள்ளதெத் தலத்தினுங் கழிந்த
சிறப்பினாங் கெண்ணெண் டிருவிளை யாடல்
செய்தருள் வடிவெடுத் தென்றும்
மறைப்பொருள் விளங்கு மாலவா யதனை
மண்ணின்மேற் சிவனுல கென்னும். (24)

அத்தலத் தனைய மூவகைச் சிறப்பு
மளவிலா வுயிர்க்கெலாங் கருணை

வைத்தவன் செய்த திருவிளை யாட்டும்
வரையுரங் கிழியவே லெடுத்த
வித்தக னெனக்கு விளம்பிய வாறே
விளம்புவ னுமக்கென வந்த
உத்தம முனிவர் யாவருங் கேட்க
உணர்த்துவான் கடலெலா முண்டான். (25)

புராண வரலாறு முற்றும்.

ஆக விருத்தம் 230.

**முதலாவது**

**மதுரைக்காண்டம்**

தல விசேடம்

**அகத்தியர் சொல்வது**

நாட்டமொரு மூன்றுடைய நாயகனுக் கன்வுடையீர்
நயந்து நீவிர்
கேட்டதல மீண்டுரைத்த திருவால வாயதனுட்
கிளைத்துப் பொன்னந்
தோட்டலர்தா மரைமுளைத்த தொருதடமுஞ் சுந்தரச்செஞ்
சோதி ஞான
ஈட்டமென முளைத்தசிவ லிங்கமொன்று முளவின்னு
மிசைப்பக் கேண்மின். (1)

திருவால வாய்க்கிணையா மொருதலமுந் தெய்வமணஞ்
செய்யப் பூத்த
மருவார்பொற் கமலநிகர் தீர்த்தமுமத் தீர்த்தத்தின்
மருங்கின் ஞான
உருவாகி யுறைசோம சுந்தரன்போ லிகபரந்தத்
துலவா வீடு
தருவானு முப்புவனத் தினுமில்லை யுண்மையிது
சாற்றின் மன்னோ! (2)

அவ்வகைய மூன்றின்முதற் றலப்பெருமை தனைச்சுருக்கி
யறையக் கேண்மின்
எவ்வகைய வுலகத்துந் தருமதல மதிகமவற்
றீறி லாத
சைவதல மதிகமவற் றறுவத்தெட் டதிகமவை
தமிலீ ரெட்டுத்
தெய்வதல மதிகமவற் றதிகதல நான்கவற்றைச்
செப்பக் கேண்மின். (3)

## தலங்களின் பெயர்

அன்னமலி வயற்புலியூர் காசிநகர் காளத்தி
யால வாயாம்
இன்னவளம் பதிநான்கிற் றிருவால வாயதிக
மெவ்வா றென்னின்
மின்னவிரம் பலக்காணக் காசிநகர் வதிந்திறக்க
வியன்கா ளத்திப்
பொன்னகரம் பத்தியினால் வழிபாடு செயவளிக்கும்
போகம் வீடு. (4)

அறந்தழையுந் திருவாலவாய் கேட்டவுடன் போக
மளிக்கு மீண்டு
பிறந்திறவாப் பேரின்பக் கதியளிக்கு மிதுவன்றிப்
பிறழா தெங்கும்
நிறைந்தபர னெத்தலமும் படைப்பானித் தலத்தைமுத
னிருமித் [1]திங்ஙன்
உறைந்தருளி னானன்றி யின்னமுள திதன்பெருமை
யுரைப்பக் கேண்மின். (5)

1. இங்ஙண், அங்கண் – பா. வே.

## திருவாலவாய் மகத்துவம்

திருவால வாயென்று கேட்டவரே அறம்பெறுவர்
செல்வ மோங்குந்
திருவால வாயென்று நினைத்தவரே பொருளடைவர்
[1]தேவ தேவைத்
திருவால வாயிடத்துக் கண்டவரே இன்பநலஞ்
சேர்வ ரென்றுந்
திருவால வாயிடத்து வதிந்தவரே [2]வீட்டுநெறி
சேர்வ ரன்றே. (6)

## நதியின் பெருமை

சுரநதிசூழ் காசிமுதற் பதிமறுமைக் கதியளிக்குந்
தூநீர் வைகை
வரநதிசூழ் திருவால வாய்சீவன் முத்திதரும்
வதிவோர்க் கீது
திரனதிகம் பரகதியும் பின்கொடுக்கு மாதலினிச்
சீவன் முத்தி
புரனதிக மென்பதெவ னதற்கதுவே யொப்பாமெப்
புவனத் துள்ளும். (7)

ஆதலினிப் பதிவிட்டுப் பிறபதியிற் போய்நோற்போர்
அங்கை கொண்ட
சீதளவா னமுதேய்ப்பத் தித்திக்கத் தேம்பெய்து
செய்த தீம்பால்
ஓதனத்தைக் கைவிட்டுப் புறங்கையை நக்குவா
ரொப்பா ரிந்த
மாதலத்தின் பெருமைதனை யாவரே யளவிட்டு
வழுத்தற் பாலார். (8)

1. தேவதேவன் திருவால வாயதனைத் – பா.வே.
2. பரவீடு சேர்வர் – பா.வே.

### யாகங்கள் செய்தது.

மற்றைய தலங்க டம்மிற்
பரிமகம் வாச பேயம்
அற்றமில் சோட சாக
மக்கினிட் டோமம் யார்க்கும்
முற்றரு மிராச சூய
முதன்மக முடித்த பேறுஞ்
செற்றமி றெரிச பூர்ண
முதலிட்டி செய்த பேறும். (9)

எள்ளிழு தன்னங் கன்னி
யிவுளிதே ரியானை யில்லம்
வெள்ளியான் பொன்பூ ணாடை
விளைவொடு பழன முன்னாத்
தள்ளரு மடிமை யாதி
தானங்கள் செய்த பேறும்
வள்ளறன் காசி யாதிப்
பதிகளில் வதிந்த பேறும். (10)

கங்கைகா ளிந்தி வாணி
காவிரி கண்ண வேணி
துங்கபத் திரைதீம் பாலி
தூயதண் பொருநை முன்னாச்
சங்கையி னதிகண் முற்று
மாடிய தவத்தின் பேறும்
மங்கல மதுரை தன்னில்
வைகலும் வதிவோர்க் கெய்தும். (11)

### பாவம் போகுமென்றது

அன்னிய தலங்க டம்மி
லாற்றிய பிரம கத்தி
பொன்னினைக் களவு செய்தல்
கள்ளுண்டல் புனித வாசான்

பன்னியைப் புணர்த லின்ன
பாதக மனைத்து மென்றுந்
தன்னிக ரால வாயில்
வதிபவர் தமைவிட் டேகும். (12)

## தலச்சிறப்பு

மற்றைய தலத்திற் சாந்தி
ராயண மதியந் தோறும்
உற்றபே றிங்குக் கங்கு
லுண்டியா லடைபே றாகும்
மற்றைய தலத்தின் மாதப்
பட்டினிப் பலத்தின் பேறிங்
குற்றொரு வைக லுண்டி
யொழிந்தவர் பெறும்பே றாகும். (13)

அயனக ரடைந்து நான்கு
திங்கணோன் பாற்றும் பேறிவ்
வியனகர் அடைந்து நோற்கு
மட்டமி விரத நல்கும்
அயனக ரெய்தி யாறு
திங்கணோன் பாற்றும் பேறிவ்
வியனகர்ச் சோம வார
விரதமே யளிக்கும் மன்றே! (14)

ஏனைய தலத்தி லோராண்
டுணவொழிந் தியற்று நோன்பால்
ஆனபே றிங்கு நோற்குஞ்
சிவனிரா வளிக்கு மிங்கே
ஊனவைம் பொறியும் வென்றோன்
முப்பொழு துண்டு வைகித்
தானமர்ந் தாலுங் காலுண்
டியற்றுமா தவத்தோ னாகும். (15)

இந்தநான் மாட மோங்கு
மாலவா யிடத்தியா ரேனும்
அந்தணர் தமக்கோர் முட்டி
யருந்தவர் தமக்கோர் பிச்சை
தந்தவர் புறம்பு செய்த
சோடச தானந் தம்மால்
வந்தபே றடைவர் பல்வே
றுரைப்பதென் மதியான் மிக்கீர். (16)

## தீர்த்தச் சிறப்பு

பல்வகைத் தலங்க ளெல்லாம்
வைகிய பயனு மென்றும்
பல்வகைத் தீர்த்த மெல்லா
மாடிய பயனு மென்றும்
பல்வகைத் தான மெல்லா
நல்கிய பயனு மென்றும்
பல்வகைத் தான பூசை
பண்ணிய தவத்தின் பேறும். (17)

பல்வகைத் தவங்க ளெல்லா
முற்றிய பயனுந் தூய
பல்வகை மந்தி ரத்தி
லெய்திய பயனு நூலின்
பல்வகைக் கேள்வி யெல்லா
மாய்ந்துணர் பயனும் யோகம்
பல்வகை ஞான மெல்லாம்
பயின்றுணர்ந் தடங்கும் பேறும். (18)

அனையதொல் பதியி லென்றும்
வைகுவ ரடைவ ரென்றால்
இனையதொல் பதிக்கு நேர்வே
றில்லையிப் பதியின் மேன்மை
தனையறி பவரா ரீசன்
றானன்றி யாத லாலே

வினையைவெல் பவராங் கெய்தி
வதிவதே வேண்டு மாதோ! (19)

வேறு

கைத்தலநான் கிரண்டுடை மலர்க்கடவுண் மோலொருநாட்
கயிலை யாதி
எத்தலமு மொருதுலையிட் டித்தலமு மொருதுலையிட்
டிரண்டுந் தூக்க
உத்தமமாந் திருவால வாய்மிகவுங் கனத்ததுகண்
டுலகின் மேலா
வைத்ததல மிதுவென்றா லிதன்பெருமை யாவரே
வழுத்தற் பாலார். (20)

அத்திருமா நகரின்பேர் சிவநகரங் கடம்பவன
[1]மமர்ந்த சீவன்
முத்திபுரங் கன்னிபுரந் திருவால வாய்மதுரை
முடியா ஞானம்
புத்திதரும் பூவுலகிற் சிவலோகம் சமட்டிவிச்சா
புரந்தென் கூடல்
பத்திதரு துவாதசாந் தத்தலமென் றேதுவினாற்
பகர்வர் நல்லோர் (21)

என்றுதலச் சிறப்புரைத்த குறுமுனிவ னெதிரறவோ
ரிறும்பூ தெய்தி
நன்றுதலப் பெருமையருள் செய்தனைகேட் டுடலெடுத்த
நயப்பா டெல்லாம்
இன்றடைந்தே மினிச்சுவண புண்டரிகச் சிறப்பதனை
யிசைத்தி யென்னக்
குன்றமடக் கியகருணைக் குன்றனையான் வரன்முறையாற்
கூறு கின்றான். (22)

.............................................

1. அமர்ந்தோர் சீவன் – பா.வே.

வேறு

விரதமா தவத்தீர் காணின்
வெவ்வினை யெல்லாம் வீட்டிச்
சரதமாய்ப் போக நல்குந்
தபனிய முளரி வந்த
வரவுமக் கனக கஞ்சப்
பெருமையும் வளனு நன்கா
உரைசெய்துங் கேண்மி னென்னா
முனிவர னுரைக்கு மன்னோ. (23)

தலவிசேஷ முற்றும்.

ஆகத் திருவிருத்தம். 253

**தீர்த்த விசேடம்**

கண்ணகன் குடுமி மாடக்
கடிபொழி லால வாயில்
அண்ணலம் பெருமை யாரே
யளப்பவ [1]ரவிர்தண் முத்த
வெண்ணகை யுமையா ளன்பு
வினைமுகச் செல்வி போலத்
தண்ணறுங் கமலம் பூத்த
தடப்பெருந் தகைமை சொல்வாம். (1)

ஆற்றினுக் கரசாங் கங்கை
காவிரி யாதி யாறும்
வேற்றுரு வாய முந்நீர்
வேலையும் பிறவுங் காருந்
தோற்றுமுன் தன்னை யாட்டச்
சுந்தர மூர்த்தி செங்கண்
ஏற்றினன் கண்ட தீர்த்த
மாகுமீ தெவ்வா றென்னின். (2)

1. ரவிர்ந்த முத்த . பா.வே.

அகளமா யுலக மெல்லா
மொடுக்கியந் நெறியே யார்க்கும்
[1]நிகளமாம் விருத்தி தோன்ற
நினைவற நினைந்து நிற்குந்
துகளிலா வறிவா னந்த
சுந்தரச் சோதி மேனாட்
சகளமா முருவங் கொண்டு
தானொரு விளையாட் டாலே! (3)

முக்கண னரவப் பூண
நூலினன் முகிழ்வெண் டிங்கட்
செக்கரஞ் சடையன் சூல
கபாலத்தன் செங்க ணேற்றன்
மைக்கருங் கயலுண் கண்ணி
வாமத்தன் முன்னும் பின்னும்
பக்கமு நந்தி யாதி
கணாதிபர் பரவிச் சூழ (4)

சென்றுதன் மேனித் தேசாற்
றிசையெலாம் விளங்கச் செங்கண்
வென்றிகொ ளுரக வேந்த
னகரமும் விபுதர் வேந்தன்
பொன்றிகழ் நகரும் வேதன்
புரமுமால் புரமு மேலைத்
தன்றிரு நகருஞ் சென்று
சஞ்சரித் தாடி மீள்வான். (5)

அன்னபோ தயனுந் தேவர்க்
கரசனு மாழி வேந்தும்
முன்னர்வந் திறைஞ்சி யேத்த
முனிவரும் பேறு நல்கித்

........................................................

1. நிகளமாய் – பா.வே.

தன்னைக ரடைந்து நீங்காத்
துன்பமொடுங் கனைத்தி னோடே
இன்னருளா லுற்று நோக்கி
யிலிங்கத்திற் புகுது மெல்லை (6)

வேத்திரப் படையோ னாதி
கணாதிபர் வீழ்ந்து பாவ
நேத்திர வளைபர்க் கன்ப
நிரஞ்சன நிருத்த னந்த
சாத்திர முடிவுந் தேறாத்
தனிமுத லொருவ வென்னாத்
தோத்திர வகையா லேத்தித்
தொழுதொன்று வினவல் செய்வார். (7)

**தீர்த்தமுண்டாக்கச் சொன்னது**

ஐயவிவ் விலிங்க மூர்த்திக்
காட்டவு மடியே மூழ்கி
உய்யவுங் கங்கை யாதி
நதிகளு முலகத் [1]துள்ளோர்
மையறு தடாக நீரு
மற்றிலை யிருமைப் பேறுஞ்
செய்யவோர் தீர்த்த மிங்குண்
டாக்கெனச் செப்ப லோடும். (8)

அத்தகை யிலிங்க மூர்த்திக்
கடுத்ததென் கீழ்சா ராக
முத்தலை வேலை வாங்கி
நாட்டினான் முதுபார் கீண்டு
பைத்தலைப் பாந்தள் வேந்தன்
பாதலங் கீண்டு போயெண்
கைத்தலப் பிரம னண்ட
கடாகமுங் கீண்ட தவ்வேல். (9)

---

1. துள்ள – பா.வே. (உள்ள – மதிக்க ; உள்ளம் – ஆன்மா)

அவ்வழிப் புறம்பு சூழ்ந்து
கிடந்தபே ராழி யூழிப்
பௌவநீ ரென்ன வோங்கப்
பாணியா லமைத்து வேணித்
தெய்வநன் னீரைத் தூவிக்
கலந்துமா தீர்த்த மாக்கிக்
கைவரை கபாலி நந்தி
கணத்தினை நோக்கிக் கூறும். (10)

இன்னமா தீர்த்தந் தன்னை
யெனைப்பல தீர்த்தங் கட்கு
முன்னம்யா மிங்குக் கண்ட
முதன்மையா லாதி தீர்த்தம்
என்னலா மினியுண் டாக்குந்
தீர்த்தங்க ளெவைக்கு மேலாய்
மன்னலாற் பரம தீர்த்த
மெனப்பெயர் வழங்க லாகும். (11)

மருட்கெட மூழ்கி னோர்கள்
மங்கலம் பெறலா னாமம்
அருட்சிவ தீர்த்த மாகும்
புன்னெறி யகற்றி யுள்ளத்
திருட்கெட ஞானந் தன்னை
யீதலான் ஞான தீரத்தந்
தெருட்கதி தரலான் முத்தி
தீர்த்தமென் றிதற்கு நாமம். (12)

குடைந்துதற் பணமுஞ் செய்து
தானமும் கொடுத்தம் மாடே
அடைந்தெழுத் தைந்து மெண்ணி
யுச்சரித் தன்பா லெம்மைத்
தொடர்ந்துவந் திறைஞ்சிச் சூழ்ந்து
துதித்தெமை யுவப்பச் செய்தோர்
உடம்பெடுத் ததனா லெந்த
வுறுதியுண் டதனைச் செய்வார். (13)

இந்தநீ ரெம்மை யாட்டி
னேழிரண் டுலகின் மிக்க
அந்தமி றீர்த்த மெல்லா
மாட்டிய பயன்வந் தெய்தும்
வந்ததின் மூழ்சி யிங்கு
வைகுநங் குறியை யுங்கள்
சிந்தையி லார்வம் பொங்கப்
பூசனை செய்மி ன்னா. (14)

விண்ணவர் தம்மின் மேலாம்
வேதிய னாகி நின்று
பண்ணவன் றானந் நீரிற்
படிந்துதன் [1]னனுஞை யாலே
அண்ணலங் கணத்தி னோரை
மூழ்குவித் தனாதி யாய
புண்ணிய விலிங்கந் தன்னுட்
புகுந்தினி திருந்தான் மன்னோ! (15)

அந்தமா நீரா னந்தி
யாதியாற் சோம
சுந்தரன் முடிமே லாட்டித்
சிந்தையில் விழைந்த வெல்லா
மடைந்தனர் செம்பொற் கஞ்சம்
வந்தவா றிதுவத் தீர்த்த
மகிமையு முரைப்பக் கேண்மின். (16)

வளையெறி தரங்க ஞான
வாவியை நோக்கிற் பாவத்
தளையறு மூழ்கின் வேண்டுங்
காமிய மெல்லாஞ் சாரும்
உளமுற மூழ்கு மெல்லை
முழுக்கொன்றற் குலகத் துள்ள

*சுவடியில் எண் 16-க்குப் பதில் 17 என்று தொடர்கிறது அதனால் பாடல் 36-க்குப் பதில் 37 என்றுளது. 1. அனுச்சை யாலே. பா.வே.*

அளவறு தீர்த்த மெல்லா
மாடிய பயன்வந் தெய்தும். (17)

மெய்யைமண் ணாதி கொண்டு
விதிவழி சுத்தி செய்து
மையறு வருண சூத்த
மந்திர நவின்று மூழ்கிற்
றுய்யமா தீர்த்த மெல்லாந்
தோய்ந்துநான் மறையு மாய்ந்தோர்
கையிலெப் பொருளு மீந்த
காசறு பேறு நல்கும். (18)

தெய்வவித் தீர்த்தந் தன்னை
நினைவின்றித் தீண்டி னாலும்
அவ்விய வினையி னீந்தி
யரும்பெறல் வீடு சேர்வர்.
இவ்வுரை மெய்யே யாகும்
என்னெனின் மனத்தா றன்றி
வெவ்வழ றீண்டி னாலுஞ்
சுடுமன்றி விடுமோ வம்மா. (19)

ஆருமந் நீரி லென்று
மாடினார் சீவன் முத்தி
சேருவ ரந்நீர் ஆடுஞ்
சிறப்புறு பயனுக் கொவ்வா
வாருண மாக்கி னேய
மந்திர மிவைமுன் னான
பேருணர் வளிக்கு நானஞ்
செய்தவர் பெறும்பே றெல்லாம். (20)

அன்னநீர் தனையு மாடி
யாலவா யுடைய நாதன்
தன்னையும் பணிவோன் மேலைப்
பரகதி தன்னைச் சாரும்

[1]என்னநன் னூலிற் சொன்ன
பவித்திர மெவைக்கு மேலாய்ப்
பன்னரும் புனித மான
பவித்திர மாகி நிற்கும். (21)

ஆதர விலனா யந்நீ
ராடினோன் சுவர்க்கஞ் சேரும்
ஆதர வுளனாய் மூழ்கி
வானவ ராதி யானோர்க்
காதர வரிசி யெள்ளுத்
தருப்பண மமையச் செய்தோன்
ஆதர வேள்வி முற்று
மாற்றிய பயனைச் சேரும். (22)

ஏனைய தலங்க டம்மி
லிருந்துசெய் விரதம் பூசை
தானமா தரும மோமந்
தவஞ்செபந் தியானந் தம்மால்
ஆனமா பயனிற் கோடி
யதிகமா மடைந்து மூழ்கி
ஞானமா தீர்த்த ஞாங்க
ரிருந்தவை நயந்து செய்யில். (23)

பிறந்தநா ளந்நீர் மூழ்கின்
மேலைவெம் பிறவிப் பௌவம்
மறிந்திடு மறிதேள் கும்ப
மதிகளின் மூழ்கித் தென்பால்
உறைந்தவர் பொருட்டுப் பிண்ட
முதவினா லவர்தா மாழ்ந்து
நிறைந்திடு பிறவிப் பௌவ
நின்றுமே லெழுவ ரன்றே! (24)

---

1. இன்னம். பா.வே.

அத்தட மருகின் யாவர்
தென்புல மடைந்தோர் தங்கள்
சித்தமா சகற்ற வேண்டிச்
செய்கடன் முடிக்கி னன்னோர்
எத்தனை யெண்ணோர்ந் தாலு
மௌ்ளுக்கா யிரமாண் டாக
அத்தனை யாண்டு மட்டு
மவரைவிண் ணாள வைப்பார். (25)

மூவகை யுலகி லுள்ள
தீர்த்தமு முறையா லென்றுஞ்
சேவகஞ் செய்யு மிந்தத்
தீர்த்தமெந் நாளு மூழ்கி
ஏவரந் நீரா லென்று
மீசனைப் பூசை செய்வோர்
ஆவரிப் பிறவி தன்னி
[1]லவர்கதிக் கரையைச் சார்வார். (26)

விடுத்திட லரிய நித்த
வேள்விமா விரதம் வேதந்
தடுத்திட லரிய தானந்
தவமிவை தரும்பே றெல்லாம்
அடுத்ததன் கரையில் வைகி
யீசனை யருச்சிப் போர்க்குக்
கொடுத்திடு புண்ணி யத்திற்
கோடியி லொன்றுக் கொவ்வா. (27)

உம்மையிற் பிறவி தோறு
நியமநல் லொழுக்கம் பூண்டு
பொய்ம்மையில் விரதந் தானந்
தவஞ்செய்து புனித ராகிச்
செம்மைநன் னெறியி னின்ற
சித்தருக் கலதித் தீர்த்தம்

1. லவர்கதிக்கரசராவார்

இம்மையி லடைந்து நித்த
மாடுதற் கெய்தா தன்றே! (28)

வேறு

மதிகதிரோ னிடத்தொடுங்கு தினந்திங்கட் பிறப்பரவம்
வாயங் காந்து
கதிர்கடமை விழுங்கிதினம் விதிபாத மிந்நாளிற்
கருதி மூழ்கி
துதிகடருப் பணந்தானம் புரிதன்மனு வோதுதலத்
தொகையொன் றற்கொன்
றதிகபல னம்முறைநூ றாயிரநூ றாயிரமோ
ரனந்த மாகும். (29)

பொருவரிய தகர்த்திங்க டுலாத்திங்க ளிவையுதிக்கும்
போது மூழ்கின்
ஒருபதினா யிரமடங்காஞ் சுறவுகவைத் தாளலவ
னுதிப்பின் மூழ்கின்
இருபதினா யிரமடங்கா மிந்திரவி யிடத்தொடுங்கு
மிந்து வாரம்.
வருவதறிக் தாடிமனு வேதன்முதற் செயினனந்த
மடங்குண் டாகும் (30)

## மலடிக்கும் மகப்பேறுண்டாகு மென்பது

பிரயாகை தனின்மகர மதிநாண்முப் பதுங்குடைந்து
பெறும்பே ரிந்தத்
திரையார்பைந் தடத்தொருநாள் மூழ்குவோன் பெறும்விரத
சீலம் பூண்டு
வரையாம லொருவருடம் படிந்துமையை யமரர்சிகா
மணியாம் வேத
உரையானை வழிபடுமேன் மலடிக்கு நன்மகப்பே
றுண்டா மன்னோ. (31)

எண்டிசைய நதிவாவி வடிவான மாதீர்த்த
மெல்லா மிப்பொற்
புண்டரிக தடத்திலொரு கோடியிலோர் கூறுநிகர்
போதா வீது
கண்டதனா லறந்தீண்டப் பெற்றதனா னற்பொருளாங்
கையா லள்ளிக்
கொண்டதனா லின்பநலங் குடைந்ததனாற் பேரின்பங்
கொடுக்கு மனறே! (32)

வேறு

முன்னவ னருளிச் செய்த
காரண முறையா லன்றி
இன்னமிப் புனித வாவிக்
கேதுவா லெய்து நாமம்
பின்னவிர் சடையான் சென்னி
மேவிய கங்கை நீரிற்
பின்னது கலந்த நீராற்
பெறுஞ்சிவ கங்கை யென்றும். (33)

அலகிலாத் தீர்த்தந் தம்மு
ளதிகவுத் தமமாய்த் தோன்றி
இலகலா லிதனைத் தீர்த்த
வுத்தம மென்ப ராய்ந்தோர்
பலவிதழ் விரித்துச் செம்பொற்
பங்கய மலர்ந்த நீரால்
உலகவர் யாரும் பொற்றா
மரையென வுரைப்ப ரன்றே! (34)

தருமமுன் னாகு நான்குந்
தருதலாற் றரும தீர்த்தம்
அருமைசா லருத்த தீர்த்த
மரும்பெறற் காம தீர்த்தம்

இருமைசேர் முத்தி தீர்த்த
மென்பதா மினைய தீர்த்தம்
வெருவரு பாவ மென்னும்
விறகினுக் கெரியா மன்றே! (35)

இவ்வருந் தலத்தி னான்ற
பெருமையு மெரிகால் செம்பொற்
றெய்வத பதும தீர்த்தப்
பெருமையுஞ் செப்பக் கேட்டோர்
எவ்வமில் போகம் வீடு
பெறுவரென் றிசைத்தான் முந்நீர்ப்
பௌவமுண் டமரர் வேந்தன்
பரிபவ விழுமந் தீர்த்தோன் (36)

தீர்த்த விசேட முற்றும்

ஆகத் திருவிருத்தம் 289

**மூர்த்தி விசேடம்**

ஆலவா யலர்ந்த செம்பொ
னம்புயப் பெருந்தீர்த் தத்தின்
மேலவாம் பெருமை தன்னை
விளம்புவா ரெவரே யங்கண்
நீலமா மிடற்று முக்க
ணிராமய னறிவா னந்த
மூலமா விலிங்க மேன்மை
முறையினா லறைய லுற்றாம். (1)

**இலிங்கத்தின் பெருமை**

பொன்னொடு மேரு வெள்ளிப்
பொருப்புமந் தரங்கே தாரம்

வன்னெடும் புரிசை சூழ்ந்த
வாரண வாசி யாதிப்
பன்னருந தலங்க டம்மிற
பராபர விலிங்கந் தோன்று
முன்னரிக் கடம்பின் மாடே
முளைத்ததிச் சைவ லிங்கம். (2)

அப்பதி யிலிங்க மெல்லா
மருட்குறி யிதனிற் பின்பு
கப்புவிட் டெழுந்த விந்தக்
காரண மிரண்டி னாலும்
ஒப்பரி தான ஞான
வொளிதிரண் டன்ன விந்தத்
திப்பிய விலிங்க மூல
விலிங்கமாய்ச் சிறக்கு மன்னோ. (3)

**பேரிட்டது**

இந்தமா லிங்கத் தெண்ணான்
கிலக்கண விச்சை மேனி
அந்தமி லழகன் பாகத்
துமையொடு மழகு செய்து
சந்ததம் விளக்கஞ் செய்யுந்
தகைமையை நோக்கிச் சோம
சுந்தர னென்று நாமஞ்
சாத்தினார் துறக்க வாணர். (4)

திறப்படு முலக மெங்கும்
வியாபியாய்ச் சிறந்து நிற்கும்
அறப்பெருங் கடவுள் சோம
சுந்தர னதனா லன்றோ
கறைக்கதிர் வடிவேற் றென்னன்
கையிற்பொற் பிரம்பு பட்ட
புறத்தடித் தழும்பு மூன்று
புவனமும் பட்ட தன்றே. (5)

சொற்றவிச் சமட்டி யானை
சோமசுந் தரனைக் காணப்
பெற்றவர் வியட்டி யானை
பிறபதி யிலிங்கங் காணலை
உற்றவ ராவ ரெனவென்
றுரைக்கின்வே ரூட்டு நீர்போய்
மற்றைய சினைக ளெல்லாந்
தழைவிக்கு மரத்தின் மாதோ. (6)

எத்தலத் தியாவ ரெண்ணெண்
டிருவிளை யாடல் செய்தான்
அத்தலத் தவனுக் கொப்பு
மதிகமாஞ் சிறப்பும் பெற்ற
உத்தம னென்று மெந்த
வுலகிலு மில்லை யந்த
வித்தக னதிகத் தன்மை
யெனைத்தெனின் விளம்பக் கேண்மின். (7)

பொருப்பினுட் டலைமை யெய்தும்
பொன்னெடுங் குடுமி மேரு
தருக்களிற் றலைமை சாருந்
தண்ணருந் தெய்வ தாரு
விருப்புறு வேள்வி தம்முண்
மேம்படும் புரவி மேதம்
அருட்படு தானந் தம்முள்
விழுமிதா மன்ன தானம். (8)

**சோமவார விரதம்**

மனிதரி லுயர்ந்தோ ராதி
மறையவர் தேவர் தம்மிற்
பனிதரு திங்கள் வேணிப்
பகவனே யுயர்ந்தோன் வேட்டோர்க்
கினிதருள் விரதந் தம்மு
ளதிகமா மிந்து வாரம்

புனிதமந் திரங்க டம்முட்
போதவைந் தெழுத்து மேலாம். (9)

மின்மைசான் மணியிற் சிந்தா
மணிவரம் விழுப்ப நல்குந்
தன்மைசா லறங்க டம்மின்
மிகுஞ்சிவ தரும மென்ப
இன்மைசா னெறிநின் றோருக்
கேற்குநற் கலங்க டம்மின்
நன்மைசான் றவரே முக்க
ணாதனுக் கன்பு பூண்டோர். (10)

## (சோம) சுந்தரர் சிறந்தோரென்பது

தீயவாஞ் சுவைப்பா லாவிற்
றேவரா வதிகம் பல்வே
றாயமா தீர்த்தந் தம்மு
ளதிகமாஞ் சுவண கஞ்சம்
மாயமா சறுக்க வெல்லாத்
தலத்திலும் வதிந்து மன்னுந்
தூயவா னவரிற் சோம
சுந்தரன் சிறந்தோ னாகும். (11)

அந்தமு முதலு மில்லா
வகண்டபூ ரணமா யார்க்கும்
பந்தமும் வீடு நல்கும்
பராபரச் சோதி தானே
வந்தனை புரிவோர்க் கிம்மை
மறுமைவீ டளிப்பா னிந்தச்
சுந்தர விலிங்கத் தென்றும்
விளங்குவான் சுருதி யேத்த. (12)

இத்தகு சுயம்பு தன்னை
யேனைய சுயம்பு வெல்லாம்
நித்தமுந் தரிசித் தேகு
நிருமல வொளியா மிந்த
உத்தம விலிங்கங் கண்டோ
ருரையுணர் வொருங்க வுள்ளே
சித்தமா சொழியத் தோன்றுஞ்
சிவபரஞ் சுடரைக் கண்டோர். (13)

**உத்தமகுணம் லோபத்தாலழியுமென்பது**

இத்தனிச் சுடரை நேர்கண்
டிறைஞ்சினோர் பாவ மெல்லாங்
கொத்தழற் பொறிவாய்ப் பட்ட
பஞ்சுபோற் கோப மூள
மெய்த்தவஞ் சிதையு மாபோன்
மருந்தினால் வீயு நோய்போல்
உத்தம குணங்க ளெல்லா
முலோபத்தா லழியு மாபோல். (14)

**வினைதீரும் என்பது**

கலிகட லிரவி தோன்றக்
கருகிரு ளுடையு மாபோல்
ஒலிகெழு பெருங்கா றள்ள
வுடைபடு மேகம் போல
வலிகெழு மடங்கல் சீற
மாயுமால் யானை போலக்
குலிசவல் லேறு தாக்கப்
பொடிபடுங் குன்றம் போல. (15)

மருட்சிசெய் காம நோயான்
மதிகெடு மாறு போல
அருட்சிவ ஞான நோக்கால்
வலிகெடு மவிச்சை போலத்

தருக்குறு முவணஞ் சீறத்
தழலரா விளியு மாபோற்
செருக்குற வழியுங் கற்ற
கல்விபோற் சிதையு மன்றே! (16)

புலரியிற் சீவன் முத்தி
புரேசனைக் காணப் பெற்றால்
அலைகட னான்குட் பட்ட
வவனிமா தானஞ் செய்த
பலனுறுங் கதிர்கா லுச்சி
வைகலிற் பணியப் பெற்றால்
கலைஞர்பா னூற்றுப் பத்துக்
கபிலைமா தானப் பேறாம். (17)

### ஆயிரம் ராசசூயயாகம் செய்த பலன்

விண்ணிடைப் பரிதிப் புத்தேண்
மேலைநீர் குறிக்கு மெல்லை
அண்ணலை வணங்கிற் கோடி
யானினத் தானப் பேறாம்
பண்ணவர் பரவும் பாதி
யிருள்வயிற் பணியப் பெற்றால்
வண்ணவெம் புரவி மேத
மகம்புரி பெரும்பே றெய்தும். (18)

இன்னன வதிக மாம்பே
றறிந்துபோ யெத்தே வர்க்கும்
முன்னவன் சமட்டி விச்சா
புரமுறை முதல்வன் றன்னைச்
சொன்னவிக் காலந் தோறு
மிறைஞ்சியுந் தொழுதுஞ் சூழ்ந்தும்

பொன்னடிக் கன்ப ராகி
வழிபடும் புனித சீலர் (19)

உம்மையில் வினைக ளென்னும்
பிணியவிழ்ந் தொருவித் தூய
செம்மைய ராகி யானாத்
திருவொடு செல்வ மோங்க
வெம்மையில் போக மூழ்கி
மலவிருள் வீக்க நீந்தி
மைம்மலி கண்டத் தெங்கோன்
மலரடி நீழல் வாழ்வார். (20)

### ஆயிரம் குற்றம் பொறுப்பது

வேறு

அறவுருவ னாலவா யானாமஞ்
செவிமடுத்தா லடைந்த பத்துப்
பிறவிவினை யறுநினைந்தா னூறுபெரும்
பவப்பாவப் பிணிபோங் கூடல்
இறைவனையின் றிறைஞ்சுதுமென் றெழுந்துமனைப்
புறம்போந்தா லீரைந் நூறு
மறமுறுவெம் பவத்திழைத்த பாதகவல்
வினையனைத்து மாயு மன்னோ! (21)

புழைக்கைவரை தொலைத்தானைத் தரிசித்தோ
ராயிரவாம் புரவி வேள்வி
தழைத்தபெரும் பயன்பெறுவ ருருத்திர
[1]சூத்தம் மதனாற் றவவானோர்க
டொழற்கரியான் றனைத்துதித்தோர் கணத்துக்கா
யிரராச சூய யாகம்
இழைத்தபெரும் பயன்பெறுவர் சமட்டிவடி
வாகியவவ் விலிங்கந் தன்னை. (22)

1. சூக்தம் எனும் வடசொல்.

அங்கையள வாகியநன் னீராட்டிப்
பூசித்தோ ரளவி லேனைத்
துங்கதலத் துறையிலிங்க மூர்த்திகளைச்
சிவாகமநூல் சொன்ன வாற்றான்
மங்கலமா கியமுகம னீரெட்டும்
வழுவாது வாசந் தோய்ந்த
செங்கனக மணிக்கலசப் புனலாட்டி
மாபூசை செய்தோ ராவார். (23)

அவ்வணஞ் சுந்தரனை யைந்தமுத
மானுதவு மைந்து தீந்தேன்
செவ்வண்ணக் கனிசாந்தச் சோறு முதன்
மட்டித்துத் தேவர் தேறா
மெய்வ்வண்ணங் குளிரவிரைப் புனலாட்டி
மாபூசை விதியாற் செய்தோர்
மைவ்வண்ண வினைநீந்தி யறமுதனாற்
பொருளடைந்து மன்னி வாழ்வார். (24)

**நூறாயிரம் யாகம் செய்தபலன்**

நல்லவகை முகமனீ ரெட்டுள்ளும்
வடித்தவிரை நன்னீ ராட்ட
வல்லவர்நூ றாயிரமா மேதமகப்
பயன்பெறுவர் வாச நானம்
எல்லவிர்குங் குமஞ்சாந்த மிவைபலவு
மட்டித்தோ ரெழிலார் தெய்வ
முல்லைநகை யாரோடும் விரைக்கலவை
குளித்தின்ப மூழ்கி வாழ்வார். (25)

**ஆயிரம் குற்றம் பொறுப்பது**

நல்மலரோன் றாலவா யான்முடிமேற்
சாத்தினா னயந்து நூறு
பொன்மலர்கொண் டயற்பதியிற் பூசித்த
பயனெய்தும் புனித போகத்

தன்மைதரு சுந்தரற்குத் தூபமொரு
காற்கொடுப்போர் தமக்குத் தாங்கள்
சொன்மனமெய் யுறச்செய்த குற்றமா
யிரம்பொறுப்பன் சுருதி நாதன். (26)

திருவமுது நிவேதிப்போ ரவிழொன்றற்
குகமொன்றாச் சிவலோ கத்தின்
மருவிநிறை போகமுடன் வைகுவர்தாம்
பூலமுக வாச மீந்தோர்
பொருவரிய கடவுளரான் டொருநூறு
கோடிசிவ புரத்து வாழ்வார்
ஒருபளித விளக்கிடுவோர் வெண்ணிறமுங்
கண்ணுதலு முடைய ராவர். (27)

நறுந்திருமஞ் சனமெடுக்கக் குடமாட்ட
மணிக்கலச நல்ல வாசம்
பெறுந்தகைய தூபக்கா றிபக்கான்
மணியின்ன பிறவுங் கங்குற்
றெறுங்கதிர்கான் மணிமாட மதுரைநா
யகர்க்கீந்தோர் செய்த பாவம்
வெறுந்துகள்செய் தைம்பொறிக்கும் விருந்தூட்டும்
பெருங்காம வெள்ளத் தாழ்வார். (28)

கயலிசையங் கண்ணுமைகோன் றிருமுன்னர்ப்
பல்லியமுங் கல்லென் றார்ப்ப
இயலிசைய பாடலினோ டாடலிவை
செய்விப்போ ரிறுமாப் பெய்திப்
புயலிசைய வியங்கலிப்ப மூவுலகுந்
தொழவரசாய்ப் பொலங்கொம் பாடுஞ்
செயலிசைய வணங்கனையா ராடரங்கு
கண்டின்பச் செல்வத் தாழ்வார். (29)

ஒருகாலட் டாங்கமுடன் பஞ்சாங்க
முடனாக வொண்செங் கால்வெண்

குருகாலு மலர்த்தடஞ்சூழ் கூடனா
யகற்பணிவோர் கோலொன் றோச்சிப்
பொருகாலின் வருபரித்தேர் மன்னவரா
யாவருந்தம் புடைவந் தெய்தி
இருகாலுந் தலைவருட வெக்காலுந்
தமைவணங்க விருப்ப ரன்றே! (30)

## மூர்த்தி மகத்துவம்

இத்தகைய திருவால வாயுடையான்
றிருமுன்ன ரியற்று மோமம்
மெய்த்தவமந் திரந்தான மின்னவனு
வளவெனினு மேரு வாகும்
உத்தமமா மிவ்விலிங்கப் பெருமையெலாம்
யாவரளந் துரைப்பர் வேத
வித்தகரே சிறிதறிந்த வாறுரைத்தே
மினிப்பலகால் விளம்பு மாறென். (31)

இத்தலத்துக் கொப்பாக வொருதலமும்
பொற்கமல மென்னு மிந்த
உத்தமமா தீர்த்தத்துக் கொப்பதொரு
தீர்த்தமுமெய் யுணர்வா னந்த
வித்தனைய விலிங்கமிதற் கொப்பாவோ
ரிலிங்கமும்பார் விண்மே லென்னும்
முத்தலத்து மிலையந்த மூர்த்திதிரு
நாமங்கண் மொழியக் கேண்மின். (32)

## மூர்த்திநாமதேய மகத்துவம்

கற்பூர சுந்தரன்பூங் கடம்பவன
சுந்தரனுட் கரவாத் தொண்டர்
விரும்பூருங் கலியாண சுந்தரனல்
லறவடிவாய் விளங்கு மேற்றுப்

பொருப்பூரு மபிராம சுந்தரன்றேன்
புடைகவிழப் பொன்றிற் பூத்த
மருப்பூசு சண்பகசுந் தரன்மகுட
சுந்தரன்றான் வாழி மன்னோ! (33)

மான்மதசுந் தரன்கொடிய பழியஞ்சு
சுந்தரனோர் மருங்கின் ஞானத்
தேன்மருவி யுறைசோம சுந்தரன்றேன்
செவ்வழியாழ் செய்யப் பூத்த
கான்மருவு தடம்பொழில்சூ ழாலவாய்ச்
சுந்தரன்மீன் கணங்கள் சூழ்ப்
பான்மதிசூழ் நான்மாடக் கூடனா
யகன்மதுரா பதிக்கு வேந்தன். (34)

சிரநாலோன் பரவரிய சமட்டிவிச்சா
புரநாதன் சீவன் முத்தி
புரநாதன் பூவும்பக சிவலோகா
திபன்கன்னி புரேசன் யார்க்கும்
வரநாளுந் தருமூல விலிங்கமென
விவைமுதலா மாடக் கூடல்
அரனாம மின்னமளப் பிலவாகு
முலகுய்ய வவ்வி லிங்கம். (35)

## திருவிளையாடல் தொகை

பாதாள மேழுருவ முளைத்தெழுந்த
தல்லிங்கப் படிவந் தன்னுள்
ஆதார மாகவமர்ந் தறுபத்து
நாலுவிளை யாடல் செய்த
போதானந் தனபெருமை நங்குரவன்
மொழிப்படியே புகன்றோ மென்றான்
வேதாதி கலைதெரிந்த மலையமுனி
கேட்டறவோர் வினாதல் செய்வார். (36)

அருட்கடலே யிறைவிளையாட் டறுபத்து
நான்கென்றா யவையா னந்தப்
பொருட்கடவு ளெக்காலத் தியாவர்பொருட்
டாடினனெம் போதந் தேறித்
தெருட்படர வரன்முறையாற் செப்புகெனக்
கரங்குவித்தார் தென்பால் வெற்பில்
இருப்பவனும் வினாயபடிக் கிறைநிரம்பத்
தொகுத்துவிரித் தியம்பு கின்றான். (37)

மூர்த்தி விசேஷம் முடிந்தது.

ஆகத்திருவிருத்தம் 326

**திருவிளையாடல்**
**அறுபத்து நாலுக்கும் விபரம்**[1]

வானவர்கோன் பழிதொலைத்த விளையாட்டுங்
கரிசாப மாய்த்த வாறும்
மீனர்வர்கோன் காடெறிந்து புரங்கண்ட
பெருஞ்சிறப்பு மீன நோக்கி
ஆனதடா தகையழல்வா யவதரித்துப்
பாராண்ட வருளு மீசன்
தானவளை மணஞ்செய்து முடிதரித்து
மண்காத்த தகைமைப் பாடும்.

புலிமுனியும் பணிமுனியும் தொழவெள்ளி
மன்றுணடம் புரிந்த வாறும்
வலிகெழுதோட் குண்டகட்டுக் குறட்கன்னக்
குன்றளித்த வகையும் பின்னும்

1. அச்சு நூல்களில் பதிகம் என்றுளது.

நலிபசிநோய் கெடவன்னக் குழியழைத்துக்
கொடுத்துநீர் நசைக்கு வைகை
அலைபுனல்கூ யருத்தியதும் பொன்மாலைக்
கெழுகடலு மழைத்த வாறும். (2)

அந்தரர்கோ னாதனத்தி லுறைமலயத்
துவசனைமீண் டழைத்த வாறும்
சுந்தரவுக் கிரகுமர னவதரித்த
வாறும்வளை சுடர்வேல் செண்டு
தந்தையிடத் தவன்பெற்ற வாறுமவ
னவ்வடிவேல் சலதி வீறு
சிந்தவிடுத் ததுமகவான் முடியைவளை
யெறிந்திறைவன் சிதைத்த வாறும். (3)

பொன்னசலந் தனைக்கொண்டாற் புடைத்துநிதி
யெடுத்ததுவும் புனிதர்க் கீசன்
பன்னரிய மறைப்பொருளைப் பகர்ந்ததுவு
மாணிக்கம் பகர்ந்த வாறும்
தொன்னகர்மே னீர்க்கிழவன் வரவிடுத்த
கடல்சுவறத் தொலைத்த வாறும்
அன்னதனித் தென்மதுரை நான்மாடக்
கூடனக ரான வாறும். (4)

வட்டங்கொள் சடையுடைய சித்தர்விளை
யாடியதோர் வனப்புங் கையிற்
கட்டங்கந் தரித்தபிரான் கல்லானை
கரும்பருந்தக் காட்டு மாறும்
உட்டங்கு வஞ்சனையா லமணர்விடு
வாரணத்தை யொழித்த வாறும்
இட்டங்கொள் கௌரிமுனம் விருத்தனிளை
யோன்குழவி யான வாறும். (5)

செய்யதாண் மாறிநட மாடியதும்
பழியஞ்சு திறனுந் தாயை

மையலாற் புணர்ந்தமகன் பாதகத்தை
மாற்றியது மதியா தாசான்
தையலா டனைவிரும்பு மாணவனை
வாளமரிற் றடிந்த வாறும்
பையரா வெய்ததுவும் படிற்றமணர்
விடுத்தபசுப் படுத்த வாறும். (6)

அறவேற்றுப் பரியுகைத்து மெய்க்காட்டுக்
கொடுத்தவிளை யாட்டுங் [1]காட்டுச்
சுறவேற்றுக் கொடியரசன் றனக்குலவாக்
கிழிகொடுத்த தொடர்பு நாய்கர்
நறவேற்ற மலர்க்குழலார் மணங்கவர்ந்து
வளைபகர்ந்த நலனு மாறு
மறவேற்கண் மாதரார்க் கட்டமா
சித்தி[2]பெற வகுத்த வாறும். (7)

சென்னிபொருட் டெயில்வாயி லிழுந்தடைந்து
விடைபொறித்த செயலுஞ் சென்னி
மன்னிகலிட் டமர்விளைப்ப மீனவற்கு
நீர்ப்பந்தர் வைத்த வாறும்
பொன்னனையாள் பொருட்டிரத வாதவினை
முடித்ததுவும் புகார்க்கு வேந்தன்
தன்னையகன் குழிவீட்டித் தென்னவற்கு
மறவாகை தந்த வாறும். (8)

மனக்கவலை கெடவுலவாக் கோட்டையடி
யாற்களித்த வகையு மாமன்
எனக்கருணை வடிவாகி வழக்குரைத்துப்
பொருள்வணிகற் கீந்த வாறும்
சினக்கதிர்வேல் வரகுணற்குச் சிவலோகங்
காட்டியதுந் திவவுக் கோலான்
தனக்கடிமை யெனவிறகு திருமுடிமேற்
சுமந்துபகை தணித்த வாறும். (9)

1. நாட்டுந் - பாடபேதம் 2. புறமதித்த - பா. பே

அப்பாணற் கிருநிதியஞ் சேரனிடைத்
திருமுகமீந் தளித்த வாறும்
அப்பாணன் பாடமழை யரைபிரவிற்
பொற்பலகை யளித்த வாறும்
அப்பாணன் மனைவியிசைப் பகைவெல்ல
வண்ணலவளை யடைந்த வாறும்
அப்பாண னாளென்றோன் முலையருத்திப்
பன்றியுயி ரளித்த வாறும். (10)

வயவேனக் குருளைகளை யமைச்சர்க
ளாக்கியதும் வலியுண் டாகக்
கயவாய்க்குக் குருமொழிவைத் தருளியது
நாரைக்குக் கருணை நாட்டந்
தயவால்வைத் தருண்முத்தி நல்கியதுங்
கூடனகர் தன்னைச் சித்தர்
புயநாகம் போய்வளைந்து திருவால
வாயாக்கிப் போந்த வாறும். (11)

சுந்தரனென் றெழுதியகூ ரம்பெய்து
செம்பியன்போர் தொலைத்த வாறும்
செந்தமிழோர்க் கியற்பலகை யருளியதுந்
தருமிக்குச் செம்பொன் பாடித்
தந்ததுவு மாறுபடு கீரற்குக்
கரையேற்றம் தந்த வாறும்
விந்தமடக் கியமுனியாற் கீரனியற்
றமிழ்தெளிய விடுத்த வாறும். (12)

ஊமனாற் புலவர்க லகற்றியது
மிடைக்காட னுடன்போய்க் கொன்றைத்
தாமனார் வடவால வாயமர்ந்த
பரிசும்வலை சலதி வீசிப்
பூமனாய் குழலியைவேட் டருளியதும்
வாதவூர்ப் புனிதற் கேறத்
தேமனாண் மலரடிகண் முடிசூட்டி
யுபதேசஞ் செய்த வாறும். (13)

நரிகள்பரி யாக்கியதும் பரிகணரி
யாக்கியது நாகம் பூண்டோன்
அரியதிரு மேனியின்மே லடிசுமந்து
மண்சுமந்த வருளுந் தென்னன்
எரியடுவெஞ் சுரந்தணிந்த வாறுமம
ணரைக்கழுவி லிட்ட வாறும்
கரியதென வன்னிகிண றிலிங்கங்கூய்
வணிகமகட் காத்த வாறும். (14)

எனத்தொகையா லறுபத்து நான்கிவற்றை
நிறுத்தமுறை யீறி லாத
வினைத்தொகையா றகன்றீரெக் காலமெவர்
பொருட்டெனநீர் வினாய வாற்றான்
மனத்தளவி லன்புமடை யுடைத்தொழுகத்
திருவால வாயான் றாளை
நினைத்தளவி லானந்தம் பெருகவிரித்
துரைப்பலென நெறியாற் கூறும். (15)

திருவிளையாடல் துகை முற்றும்
ஆகத் திருவிருத்தம் 341.

## 1. இந்திரன் பழிதீர்த்த படலம்

மின்பயில் குலிசப் புத்தேள்
விருத்திரா சுரனைக் கொன்ற
வன்பழி விடாது பற்றக்
கடம்பமா வனத்தி லெய்தி
என்பர வாரம பூண்ட
இறைவனை யருச்சித் தேத்திப்
பின்பது கழிந்து பெற்ற
பேற்றினை யெடுத்துச் சொல்வாம். (1)

முன்னதா முகத்தில் வண்டு
மூசுமந் தார நீழற்

பொன்னவிர் சுணங்குண் கொங்கைப்
புலோமசை மணாளன் பொற்பூண்
மின்னவிர்ந் திமைப்பச் சிங்கஞ்
சுமந்தமெல் லணைமேல் மேவி
அன்னமென் னடையா ராடு
மாடன்மே லார்வம் வைத்தான். (2)

மூவகை மலரும் பூத்து
வண்டுளே முழங்கத் தெய்வப்
பூவலர் கொடிபோர்ந் தன்ன
பொன்னனார் கூத்து மன்னார்
நாவல ரமுத மன்ன
பாடலு நாக நாட்டுக்
காவலன் கண்டு கேட்டுக்
களிமதுக் கடலு லாழ்ந்தான். (3)

**தையலார் மையலிற்பட்டோர்க்கு மதியில்லை என்பது**

பையரா வணிந்த வேணிப்
பகவனே யனைய தாங்கள்
ஐயனாம் வியாழப் புத்தேள்
ஆயிடை யடைந்தா னாகச்
செய்யதாள் வழிபா டின்றித்
தையலார் மயலிற் பட்டோர்
தமக்கொரு மதியுண் டாமோ! (4)

ஒல்லெனக் குரவ னேக
உம்பர்கோன் திருவி னாக்கம்
புல்லெனச் சிறிது குன்றப்
புரந்தர னறிந்திக் கேடு
நல்லதொல் குரவற் பேணா
நவையினால் விளைந்த தென்னா
அல்லலுற் றறிவன் றன்னைத்
தேடுவா னாயி னானே! (5)

அங்கவ னிருக்கை புக்கான்
கண்டில னவித்த பாசப்
புங்கவ ருலகு மேனோர்
பதவியும் புவன மூன்றில்
எங்கணுந் துருவிக் காணான்
எங்குற்றான் குரவ னென்னுஞ்
சங்கைகொண் மனத்த னாகிச்
சதுர்முக னிருக்கை சார்ந்தான். (6)

துருவின னங்குங் காணான்
திசைமுகற் றெழுது தாழ்ந்து
பரவிமுன் பட்ட வெல்லாம்
பகர்ந்தனன் பகரக் கேட்டுக்
குரவனை யிகழ்ந்த பாவங்
கொடுந்துபட் டருந்துஞ் செவ்வி
வருவது நோக்கிச் சூழ்ந்து
மலர்மக னிதனைச் சொன்னான். (7)

அனையதொல் குரவற் காணு
மளவுநீ துவட்டா வீன்ற
தனையன்முச் சென்னி யுள்ளான்
தானவர் குலத்தில் வந்தும்
வினையினா லறிவான் மேலான்
விச்சுவ வுருவ னென்னும்
இனையனைக் குருவாக் கோடி
யென்னலு மதற்கு நேர்ந்தான். (8)

அழலவிர்ந் தனைய செங்கே
ழடுக்கிதழ் முளரி வாழ்க்கைத்
தொழுதகு செம்மல் தன்னைத்
தொழுதுமீண் டகன்று நீங்கா
[1]விழைதகு காதல் கூர
விச்சுவ வுருவன் தன்னை

.................................................................

1. விழைதகு. பா.வே (விளைதகு – உண்டாகின்ற)

வழிபடு குருவாக் கொண்டான்
மலர்மகன் சூழ்ச்சி தேறான். (9)

**இந்திரன் வேள்வி செய்தது.**

கைதவக் குரவன் மாயங்
கருதிலன் வேள்வி யொன்று
செய்திடல் அடிக ளென்னத்
தேவர்கட் காக்கங் கூறி
வெய்தழல் வளர்ப்பா னுள்ளம்
வேறுபட் டவுணர்க் கெல்லாம்
உய்திற நினைந்து வேட்டான்
தனக்குமே லுறுவ தோரான். (10)

வாக்கினான் மனத்தால் வேறாய்
மகஞ்செய்வான் செயலை யாக்கை
நோக்கினா னோதி தன்னா
னோக்கினான் குலிச வேலால்
தாக்கினான் தலைகண் மூன்றுந்
தனித்தனி பறவை யாகப்
போக்கினா னலகை வாயிற்
புகட்டினான் புலவுச் சோரி. (11)

தெற்றெனப் பிரம பாவஞ்
சீறிவந் தமரர் வேந்தைப்
பற்றலு மதனைத் தீர்ப்பான்
பண்ணவர் மரமேன் மண்மேற்
பொற்றொடி யார்மே னீர்மேல்
வேண்டினர் புகுத்த லோடும்
மற்றவ ரிஃதியாந் தீர்க்கும்
வண்ணம்யா தென்ன விண்ணோர். (12)

அப்பிடை நுரையாய் மண்ணில்
அருவருப் புவரா யம்பொற்
செப்பிளங் கொங்கை யார்பாற்
றீண்டுதற் கரிய பூப்பாய்க்

கப்பிணர் மரத்திற் காலும்
பயினதாய்க் கழிக வென்றார்
இப்பழி சுமந்த வெங்கட்
கென்னல மென்றார் பின்னும் (13)

கருவின் மாதர் கருவுயிர்க்கு
மளவு முறையாற் கணவர்தோள்
மருவி வாழ்க மண்ணகழ்ந்த
குழியு மதனால் வடுவொழிக
பொருவி னீரு மிறைதோறு
மூறிப் பொலிக மரங்குறைபட்
டொருவி னாலுந் தழைகவென
வொழியா நலனு முதவினார். (14)

மாசிற் கழிந்த மணியே போல்
வந்த பழிதீர்ந் திந்திரனுந்
தேசிற் றகழத் துவட்டாதன்
செல்வன் றன்னைத் தேவர்பிரான்
வீசிக் குலிசத் துயிருண்ட
விழுமங் கேட்டு வெகுண்டுயிர்த்துக்
கூசப் பழிகோள் கருதியொரு
கொடிய வேள்வி கடிதமைத்தான். (15)

அந்தக் குண்டத் தெரி [1]சிகைபோ
லழலுங் குஞ்சி யண்டமுக
டுந்தக் கொடிய தூமம்போ
லுயிர்த்துச் செங்கண் சினச்செந்தீச்
சிந்தப் பிறவா ளெயிறதுக்கித்
திசைவான் செவிடு படநகைத்து
வந்தக் கொடிய விடம்போல
வெழுந்தா னொருவாண் மறவீரன் (16)

1. சிகைகளின் றனலுங் – பா.வே.

வேறு

ஈங்குவன் விருத்திர னென்ப வாரழற்
றூங்குவன் கணைவிடு தூர நீண்டுநீண்
டோங்குவ னோங்குதற் கொப்ப வைகலும்
[1]வீங்குவ னறிலார் வினையி னென்பவே. (17)

வீங்குடல் விருத்திரன் றன்னை விண்ணவர்
ஏங்குற வருதுவட் டாவெ னும்பெயர்த்
தீங்குற மனத்தினோன் றேவர் கோனுயிர்
வாங்குதி பொருதென வரவிட் டானரோ. (18)

மதித்துணி யெயிற்றினோன் வடவை [2]போற்சினைஇக்
கொதித்தெதிர் குறுகினான் கொண்ட லூர்த்தியும்
எதிர்த்தனன் களிற்றின்மே லிமயத் துச்சிமேல்
உதித்ததோர் கருங்கதி ரொக்கு மென்னவே. (19)

அறத்தொடு பாவநேர்ந் தென்ன வார்த்திரு
திறத்தரு மூண்டமர் செய்யக் கற்சிறை
குறைத்தவன் றகுவன்மேற் குலிச வேலெடுத்
துறைத்திட வீசினா னுடன்று கள்வனும். (20)

[3]இடித்தனன் கையிலோ ரிருப்பு லக்கையைப்
பிடித்தனன் வரையெனப் பெயர்ந்து தீயெனத்
துடித்தனன் சசிமுலைச் சுவடு தோய்புயத்
தடித்தன னிந்திர னவச மாயினான். (21)

அண்டரே றனையவ னவச மாறிப்பின்
கண்டகன் கைதவ நினைந்திக் கள்வனோர்
மண்டம ராற்றுவான் வலியி லோமெனப்
புண்டரீ கத்தவ னுலகிற் போயினான். (22)

1. வீங்குவன் றறிலரா வினையி னென்பவவே – பா.வே. 2.போற்றின்ன. – பா.வே. 3. எடுத்தனன் – பா.வே.

[1]தாழ்ந்துதான் படுதுயர் விளம்பத் தாமரை
வாழ்ந்தவன் வலாரியோ டணைந்து மாமகள்
வீழ்ந்தமார் பினனடி வீழ்ந்து செப்பமால்
சூழ்ந்துவா னாடனை நோக்கிச் சொல்லுவான். (23)

ஆற்றவும் பழையதுன் னங்கை வச்சிரம்
மாற்றவ ருயிருண வலியின் றாதலால்
வேற்றொரு புதியது வேண்டு மாலினிச்
சாற்றுது மதுபெறுந் தகைமை கேட்டியால். (24)

தொடையகன் மார்பநாந் தூய பாற்கடல்
[2]கடையுநாள் அசுரருஞ் சுரருங் கையில்வெம்
படையயொடு மடையன்மின் பழுதென் றப்படை
அடையவுந் ததீசிபா லடைவித் தாமரோ. (25)

சேட்படு நாணனி செல்லத் தேவரா
வாட்படை யவுணரா வந்து கேட்டிலர்
ஞாட்படை படையெலா ஞான நோக்கினால்
வேட்படை வென்றவன் விழுங்கி னானரோ. (26)

விழுங்கிய படையெலாம் வேற றத்திரண்
டொழுங்கிய தான்முது கந்தண் டொன்றியே
எழுங்கதிர்க் குலிசமா [3]மதனை யெய்துமுன்
வழங்குவன் கருணையோர் வடிவ மாயினான். (27)

வேறு

என்று மாதவ னியம்ப வும்பர்கோன்
ஒன்றும் வானவர் தம்மொ டொல்லெனச்
சென்று மாயையின் செயலை [4]நோன்பினால்
வென்ற மாதவ னிருக்கை மேவினான். (28)

1.தாழ்ந்துதன் – பா.வே. 2. கடையுநர். பா.வே. 3. மிதனை. பா.வே. 4. அன்பினால் –பா.வே.

### வேறு

அகமலர்ந் தருந்தவ னமரர்க் கன்புகூர்
முகமலர்ந் தின்னுரை முகமன் கூறிநீர்
மிகமெலிந் தெய்தினீர் விளைந்த தியாதது
தகமொழிந் திடலென வலாரி சாற்றுவான். (29)

அடிகணீர் மறாததொன் றதனை வேண்டியிம்
முடிகொள்வா னவரொடு [1]முந்தி னேனது
செடிகொள்கா ரிருளுட லவுணர்த் தேய்த்தெமர்
குடியெலாம் புரப்பதோர் கொள்கைத் தாயாது. (30)

யாதெனி னினயதுன் யாக்கை யுள்ளதென்
றோதலும் யாவையு முணர்ந்த மாதவன்
ஆதவற் கண்டதா மரையி னானனப்
போதலர்ந் தின்னன புகல்வ தாயினான். (31)

நாய்நம தெனநரி நமதெ னப்பிதா
தாய்நம தெனநமன் றனதெ னப்பிணி
பேய்நம தெனமன மதிக்கும் பெற்றிபோ
லாய்நம தெனப்படும் யாக்கை யாரதே. (32)

விடம்பயி லெயிற்றர வுரியும் வீநுழை
குடம்பையுந் [2]தானெனுங் கொள்கைத் தெகொலாம்
நடம்பயில் கூத்தரி னடிக்கு மைவர்வாழ்
உடம்பையும் யானென வுரைத்தற் பாலதோ. (33)

நடுத்தயா விலார்தமை நலியத் துன்பநோய்
அடுத்தயா விருந்திரு வடைய யாக்கையைக்
கொடுத்தயா [3]வறம்புகழ் கொள்வ னேயெனின்
எடுத்தயாக் கையின்பய னிதனின் யாவதே. (34)

1. முன்னி – பா.வே. 2. நானெனும் – பா.வே. 3. அரும்புகழ் – பா.வே.

வேறு

என்றனன் கரண மொன்றி
யெழுகருத் தறிவை யீர்ப்ப
நின்றனன் பிரம நாடி
நெறிகொடு கபாலங் கீண்டு
சென்றனன் விமான மேறிச்
சேர்ந்தன னுலகை நோன்பால்
வென்றவன் துறக்கம் புக்கு
வீற்றினி திருந்தா னம்மா. (35)

அம்முனி வள்ள லீந்த
வடுபடை முதுகந் தண்டைத்
தெம்முனை யடுபோர் சாய்க்குந்
திறல்கெழு குலிசஞ் செய்து
கம்மியப் புலவ னாக்கங்
கரைந்துகைக் கொடுப்ப வாங்கி
மைம்முகி லூர்தி யேந்தி
மின்விடு மழைபோ னின்றான். (36)

மறுத்தவா வஞ்சப் போரால்
வஞ்சித்து வென்று போன
கறுத்தவா ளவுணற் கொல்வான்
கடும்பரி நெடுந்தேர் நீழல்
வெறுத்தமால் யானை மள்ளர்
வேலைபுக் கெழுந்து குன்றம்
அறுத்தவா னவர்கோ னந்த
வவுணர்கோ மகனைச் சூழ்ந்தான். (37)

வானவர் சேனை மூண்டு
வளைத்தலும் வடவைச் செந்தீ
யானது வரையி னோங்கி
யழன்றுருத் தெழுந்தா லென்னத்
தானவர் கோனு மானந்
தலைக்கொள வெழுந்து பொங்கிச்

சேனையுந் தானு மூண்டு
சீறிநின் றடுபோர் செய்வான். (38)

அடுத்தன னிடியே றென்ன
வார்த்தன ராக்கங் கூறி
எடுத்தனர் கையிற் சாப
மெறிந்தனர் சிறுநா ணோசை
தொடுத்தனர் [1]மீளி வாளி
தூர்த்தனர் குந்த நேமி
விடுத்தனர் வானோர் சேனை
வீரர்மே லவுண வீரர். (39)

கிட்டினர் கடகக் கையாற்
கிளர்வரை யனைய திண்டோள்
கொட்டினர் சாரி மாறிக்
குதித்தனர் பலகை நீட்டி
முட்டின ரண்டம் விள்ள
முழங்கினர் வடிவா ளோச்சி
வெட்டின [2]ரவுணச் சேனை
வீரரை வான வீரர். (40)

வீழ்ந்தனர் தோளுந் தாளும்
விண்டனர் சோரி வெள்ளத்
தாழ்ந்தனர் போருந் தாரு
மகன்றன ரகன்ற மார்பம்
போழ்ந்தனர் சிரங்க ளெங்கும்
புரண்டனர் கூற்றூர் புக்கு
வாழ்ந்தன ரடுபோ ராற்றி
வஞ்சகன் சேனை மள்ளர். (41)

தாளொடு கழலு மற்றார்
தலையொடு முடியு மற்றார்

1. மீள. பா.வே. 2. ரவுணர் சேனை. பா.வே.

தோளொடு வீர மற்றார்
　　　　தும்பையொ டமரு மற்றார்
வாளொடு கரமு மற்றார்
　　　　மார்பொடு கவச மற்றார்
கோளொடு மாண்மை யற்றார்
　　　　குறைபடக் குறையா மெய்யர். (42)

தொக்கன கழுகு சேனஞ்
　　　　சொரிகுடர் பிடுங்கி யீர்ப்ப
உக்கன குருதி மாந்தி
　　　　யொட்டல்வாய் நெட்டைப் பேய்கள்
நக்கன பாடல் செய்ய
　　　　ஞாட்பினுட் கவந்த மாடப்
புக்கன பிணத்தின் குன்றம்
　　　　புதைத்தபார் சிதைத்த தண்டம். (43)

இவ்வகை மயங்கிப் போர்செய்
　　　　திறந்தவ ரொழியப் பின்னுங்
கைவ்வகை யடுபோ ராற்றிக்
　　　　கரையிறந் தார்கண் மாண்டார்
அவ்வகை யறிந்து வானத்
　　　　தரசனு மவுணர் வேந்துந்
தெய்வதப் படைகள் வீசிச்
　　　　சீறிநின் றடுபோர் செய்வார். (44)

அனற்படை விடுத்தான் விண்ணோ
　　　　ராண்டகை யதனைக் கள்வன்
புனற்படை விடுத்துச் [1]சீற்றந்
　　　　தணித்தனன் புனிதன் காற்றின்
முனைப்படை விடுத்தான் வெய்யோன்
　　　　முழங்குகால் விழுங்கு நாகச்

1. சித்தஞ் துணித்தனன். பா.வே.

சினப்படை தொடுத்து வீசி
விலக்கினான் தேவ ரஞ்ச. (45)

நாகமாப் படைவிட் டார்த்தா
னாகர்கோ னுவணச் செல்வன்
வேகமாப் படையை வீசி
விலக்கினான் றகுவர் வேந்தன்
மோகமாப் படையைத் தொட்டு
முடுக்கினான் முனைவ னன்ன
தேகமாப் படிறன் ஞானப்
படைவிடுத் திருள்போ னின்றான். (46)

மட்டிடு தாரான் விட்ட
வானவப் படைக்கு மாறு
விட்டுடன் விலக்கி வேறும்
விடுத்திடக் கனன்று வஞ்சன்
முட்டிட மான வெங்கான்
மூட்டிடக் கோபச் செந்தீச்
சுட்டிடப் பொறாது பொங்கிச்
சுராதிப னிதனைச் செய்தான். (47)

வீங்கிரு ளொதுங்க மேக
மின்விதிர்த் தென்னக் கையில்
ஓங்கிருங் குலிச வேலை
ஒல்லென விதிர்த்த லோடுந்
தீங்குளம் போன்றி ருண்ட
திணியுடற் கள்வ னஞ்சி
வாங்கிருங் கடலில் வீழ்ந்தான்
மறைந்தமை நாக மொத்தான். (48)

ஒக்கவிந் திரனும் வீழ்ந்தா
னுடல்சின வுருமே றன்னான்
புக்கிடந் தேடிக் காணான்
புண்ணிய முளரி யண்ணல்

பக்கம்வந் தனைய செய்தி
பகர்ந்தனன் பதகன் மாளத்
தக்கதோர் சூழ்ச்சி முன்னிச்
சராசர மீன்ற தாதை. (49)

விந்தவெற் படக்கி னாற்கீ
துரையென விடுப்ப மீண்டு
சந்தவெற் படைந்தான் வானோர்
தலைவனை முகமன் கூறிப்
பந்தவெற் பறுத்தான் வந்த
தெவனெனப் [1]பறைக ளெல்லாஞ்
சிந்தவெற் பறுத்தான் வந்த
செயலெலா முறையாற் [2]செப்பி. (50)

யாவையு முணர்ந்த வெந்தைக்
கியானெடுத் துணர்த்து கின்ற
தாவதென் னமருக் காற்றா
தாழிபுக் கொளித்தா னாவி
வீவது மவனால் வந்த
விழுமநோ யெல்லா மின்று
போவதுங் கருதி நும்பாற்
புகுந்தன மடிக ளென்றான். (51)

என்றவ னிடுக்கண் டீர்ப்பா
னிகல்புரி புலன்க ளைந்தும்
வென்றவ னெடியோன் றன்னை
விடையவன் வடிவ மாக்கி
நின்றவ னறிவா னந்த
மெய்ம்மையாய் நிறைந்த வெள்ளி
மன்றவ னூழிச் செந்தீ
வடிவினை மனத்துட் கொண்டான். (52)

1. பறைகளெல்லாம். பா.வே. 2. செப்பி; சொல்வான். பா.வே.

கைதவன் கரந்து வைகுங்
கடலைவெற் படக்குங் கையிற்
பெய்துமுந் தெல்லைத் தாக்கிப
பருகினான் பிறைசேர் சென்னி
ஐயன தருளைப் பெற்றார்க்
கதிசய மிதென்கொன் மூன்று
வையமுத் தொழிலுஞ் செய்ய
வல்லவ ரவரே யன்றோ. (53)

அறந்துறந் தீட்டு வார்த
மரும்பெறற் செல்வம் போல
வறந்தன படுநீர்ப் பௌவம்
வடவைகட் புலப்பட் டாங்கு
நிறைந்தசெம் மணியு மத்தீ
நீண்டெரி சிகைபோ னீண்டு
சிறந்தெழு பவளக் காடுந்
திணியிருள் [1]விழுங்கிற் றம்மா. (54)

பணிகளின் மகுட கோடிப்
பரப்பென விளங்கிப் பல்கா
சணிகலப் பேழை பேழ்வாய்
திறந்தனைத் தாகி யொன்பான்
மணிகிடந் திமைக்கு நீரான்
மகபதி வேள்விக் காவாய்த்
திணியுட லவுணன் பட்ட
செங்கள மனைய தன்றே! (55)

வற்றநீர் தன்னின் மின்னு
வான்விதிர்த் தென்னப் பன்மீன்
எறிந்தன நெளிந்த நாக
மிமைத்தன வளையு முத்துஞ்

1. விழுங்குமன்றோ. – பா.வே.

செறிந்தன கரந்த யாமை
சேர்ந்தபல் பண்டஞ் சிந்தி
முறிந்தன வங்கங் கங்க
[1]முக்கின சிறுமீ னெல்லாம். (56)

செருவினி லுடைந்து போன
செங்கண்வா ளவுண னங்கோர்
அருவரை முதுகிற் கார்போ
லடைந்துவா னாடர் செய்த
உருகெழு பாவந் தானோ
ருருவெடுத் திருந்து நோற்கும்
பரிசென நோற்றா [2]னின்னும்
பரிபவ விளைவு பாரான். (57)

கைதவ நோன்பு நோற்குங்
கள்வனைக் கண்டு வானோர்
செய்தவ மனையான் யாணர்
வச்சிரஞ் சீரிப் பான்போற்
பொய்தவன் றலையைக் கொய்தான்
புணரிவாய் நிறையச் சோரி
பெய்தது வலாரி தன்னைப்
பிடித்தது [3]பிரமச் சாயை. (58)

**பிரமகத்தி செய்யும் குணம்**

உம்மெனும் மார்பைத் தட்டு
முருத்தெழு மதிர்க்கும் போர்க்கு
வம்மெனும் வாய்ம டிக்கும்
[4]வாளெயி றதுக்கும் வீழுங்
கொம்மென வோடு மீளுங்
கொதித்தழுஞ் சிரிக்குஞ் சீறும்

1. மூக்கின – பா.வே. 2. னின்னம்–பா.வே. 3. பிரமசாயை – பா.வே.
4. வாளெளி – பா.வே.

இம்மெனு மளவு நீங்கா
தென்செய்வா னஞ்சி னானே. (59)

விரைந்தரன் றிசையோர் வாவி
வீழ்ந்தொரு கமல நூலுட்
கரந்தனன் மகவா னிப்பாற்
கற்பக நாடு புல்லென்
றிருந்ததா லிருக்கு மெல்லை
யிம்பரி னகுட னென்போன்
அரும்பரி மேத வேள்வி
யாற்றினா னாற்று மெல்லை. (60)

அரசிலா வறுமை நோக்கி
யவனைவா னாடர் யாரும்
விரைசெய்தார் மகுடஞ் சூட்டி
வேந்தனாக் கொண்டார் வேந்தாய்
வருபவன் சசியை யீண்டுத்
தருகென மருகு ளார்போய்த்
திரைசெய்நீ ரமுத னாட்குச்
செப்பவக் கற்பின் மிக்காள். (61)

பொன்னுயிர்த் தனைய காட்சிப்
புண்ணிய குரவன் முன்போய்
மின்னுயிர்த் தனையா ணின்று
விளம்புவா ளிதென்கொல் கெட்டேன்
என்னுயிர்த் துணைவ னாங்கே
யிருக்கமற் றொருவ னென்னைத்
தன்னுயிர்த் துணையாக் கொள்கை
தருமமோ வடிக ளென்றாள். (62)

**முனிவர்கள் பல்லக்கு சுமந்தது.**

மாதவ ரெழுவர் தாங்க
மாமணிச் சிவிகை மீது

போதரி னவனே வானோர்
        புரந்தர னவனே யுன்றன்
காதல னாகு மென்றான்
        கைதொழு ததற்கு நேர்ந்தம்
மேதகு சிறப்பா லிங்கு
        வருகென விடுத்தா ருது. (63)

மனிதரின் மகவா னாகி
        வருபவன் சிவிகை தாங்கும்
புனிதமா தவரை யெண்ணான்
        புன்கணோய் விளைவும் பாரான்
கனிதரு காமந் தூய்க்குங்
        காதலால் விரையச் [1]செல்வான்
இனிதயி ராணி பாற்கொண்
        டேகுமின் [2]சர்ப்ப வென்றான். (64)

சர்ப்பமா கெனமுற் கொம்பு
        தாங்கிமுன் னடக்குந் தென்றல்
வெற்பனா முனிவன் சாபம்
        விளைத்தனன் விளைத்த லோடும்
பொற்பமா கணமே யாகிப்
        போயினா னறிவி லாத
அற்புரா னவர்க்குச் செல்வ
        மல்லது பகைவே றுண்டோ. (65)

பின்னர்த்தங் குரவ னான
        பிரானடி பணிந்து வானோர்
பொன்னகர் வேந்த னின்றிப்
        புலம்படை கின்ற தைய
என்னலுங் குரவன் போயவ்
        விலஞ்சியு ளொளித்தாற் கூவித்

1. சொல்வான்– பா.வே. 2. சர்ப்ப – என்பது விரைந்து நட என ஏவுதல்

தன்னுரை யறிந்து போந்த
சதமகற் கொண்டு மீண்டான். (66)

கொடும்பழி கோட்பட் டான்றன்
குரவனை வணங்கி யென்னைச்
சுடும்பழி கழிவ தெங்ஙன்
சொல்லெனத் தொலைவ தோர்ந்தான்
அடும்பழி மண்மே லன்றி
யறாதுநீ வேட்டைக் கென்னப்
படும்பழி யிதனைத் தீர்ப்பான்
பார்மிசை வருதி யென்றான். (67)

ஈசனுக் கிழைத்த குற்றந்
தேசிக னெண்ணித் தீர்க்குந்
தேசிகற் கிழைத்த குற்றங்
குரவனே தீர்ப்பதன்றிப்
பேசுவ தெவனோ தன்பாற்
பிழைத்தகா ரணத்தால் வந்த
வாசவன் பழியைத் தீர்ப்பான்
குரவனே வழியுங் கூற. (68)

வாம்பரி யுகைத்துத் தன்னால்
வழிபடு குரவன் வானோர்
தாம்பரி வோடுஞ் சூழத்
தராதலத் திழிந்து செம்பொற்
காம்பரி தோளி பங்கன்
கயிலைமால் வரையைத் தாழ்ந்து
தேம்பரி யலங்கன் மார்பன்
றென்றிசை நோக்கிச் செல்வான். (69)

வேறு

கங்கைமுத லளவிறந்த தீர்த்த மெலாம்
போய்ப்படிந்து காசி காஞ்சி
அங்கனக கேதார முதற்பதிகள்
பலபணிந்து மவுணற் கொன்ற

பொங்குபழி விடாதழுங்கி யராவுண்ண
மாசுண்டு பொலிவு மாழ்குந்
திங்களனை யான்கடம்ப வனத்தெல்லை
யணித்தாகச் செல்லு மேல்வை. (70)

**கடம்பவனத்தில் நிகழ்ந்தது.**

தொடுத்தபழி வேறாகி விடுத்தகன்ற
திந்திரன்றான் சுமந்த பாரம்
விடுத்தவனொத் தளவிறந்த மகிழ்வெய்தித்
தேசிகன்பால் விளம்பப் பாசங்
கெடுத்தவன்மா தலம்புனித தீர்த்தமள
விவணமக்குக் கிடைத்தல் வேண்டும்
அடுத்தறிக வெனச்சிலரை விடுத்தவ்வே
றாநிலைநின் றப்பாற் செல்வான். (71)

அருவிபடிந் தருவியெறி மணியெடுத்துப்
பாறையிலிட் டருவி நீர்தூய்க்
கருவிரல்கொய் தலர்சூட்டிக் கனியூட்டி
வழிபடுவ கல்லா மந்தி
ஒருதுறையில் யாளிகரி புழைக்கைமுகந்
தொன்றற்கொன் றூட்டி யூட்டிப்
பருகுவன புலிமுலைப்பால் புல்வாய்க்கன்
றருத்தியிடும் பசிநோய் தீர. (72)

நெளியராக் குருளைவெயில் வெள்ளிடையிற்
கிடந்துயங்கி நெளியப் புள்ளே
றொளியறாச் சிறைவிரித்து நிழல்பரப்பப்
பறவைநோ யுற்ற தேகொல்
அளியவா யச்சோவென் றோதியயன்
மடமந்தி யருவி யூற்றுந்
துளியநீர் வளைத்தசும்பின் முகந்தெடுத்துக்
கருங்கையினாற் சொரிவ மாதோ. (73)

படவரவ மணியீன்று நொச்சிப்பா
சிலையன்ன பைந்தாண் மஞ்ஞை
பெடைதழுவி மணஞ்செய்ய மணவறையில்
விளக்கிடுவ பெருந்தண் கானத்
தடர்சிறைமென் குயிலோமென் றார்ப்பமடக்
கிள்ளையெழுத் தைந்து மோசைத்
தொடர்புபெற வுச்சரிப்பக் குருமொழிகேட்
டாங்குவப்ப தொடிக்கட் பூவை. (74)

இன்னவிலங் கொடுபுள்ளின் செயற்கரிய
செயனோக்கி யிறும்பூ தெய்திப்
பொன்னகரான் புளகமுடல் புதைப்பநிறை
மகிழ்ச்சியுளம் புதைப்பப் போவான்
அன்னபொழு தொற்றுவர்மீண் டடிவணங்கி
யின்சுவைப்பா லருந்து வான்முன்
பின்னரிய தேன்சொரிந்தாங் குவகைமேற்
பேருவகை பெருகச் சொல்வார். (75)

எப்புவனத் திலுமென்றுங் கண்டறியா
வதிசயமு மெண்ணுக் கெய்தாத்
திப்பியமு மிக்கடம்ப வனத்தின்று
கண்டுவகை திளைத்தே மங்கண்
வைப்பினைய வொருபுனித வாவிமருங்
கொருகடம்ப வனத்தி னீழல்
ஒப்பிலொளி யாய்முளைத்த சிவலிங்க
மென்றுளதென் றுரைப்பக் கேட்டான். (76)

செவித்துளையி லமுதொழுக்கு முழையரொடும்
வழிக்கொண்டு சென்னி மேற்கை
குவித்துளமெய் மொழிகரணங் குணமூன்று
மொன்றித்தன் கொடிய [1]பாவம்
அவித்துளயர் வொழிக்கமுளைத் தருள்குறிமே
லன்பீர்ப்ப வடைவான் கானங்

..................................................

1. பாசம். பா.வே.

கவித்துளபூந் தடம்படிந்து கடம்பவனத்
துழைநுழைந்தான் கவலை தீர்வான். (77)

அருவாகி யுருவாகி யருவுருவங்
கடந்துண்மை யறிவா னந்த
உருவாகி யளவிறந்த வுயிராகி
யவ்வுயிர்க்கோ ருணர்வாய்ப் பூவின்
மருவாகிச் சராசரங்க ளகிலமுந்தன்
னிடையுதித்து மடங்க நின்ற
கருவாகி முளைத்தசிவக் கொழுந்தையா
யிரங்கண்ணுங் களிப்பக் கண்டான். (78)

**அருச்சனை செய்தது**

கண்டுவிழுந் தெழுந்துவிழி துளிப்பவெழு
[1]களிப்பென்னுங் கடலி லாழ்ந்து
விண்டுமொழி தழுதழுப்ப வுடல்பனிப்ப
வன்புருவாய் விண்ணோர் வேந்தன்
அண்டர்பிரா னருச்சனைக்கு வேண்டுமுப
கரணமெலா மகல்வா னெய்திக்
கொண்டுவரச் சிலரைவிடுத் தவரேகப்
பின்னுமொரு குறைவு தீர்ப்பான். (79)

தங்குடிமைத் தச்சனையோர் விமானமமைத்
திடவிடுத்தத் தடத்தின் பாற்போய்
அங்கணனைக் கடிதருச்சித் திடநறிய
மலர்கிடையா தயர்வா னந்தச்
சங்கெறிதண் டிரைத்தடத்தி லரனருளாற்
பலபரிதி சலதி யொன்றிற்
பொங்குகதிர் பரப்பிமுளைத் தாலென்னப்
பொற்கமலம் பூப்பக் கண்டான். (80)

1. களியென்னுங் .பா.வே

அன்புதலை சிறப்பமகிழ்ந் தாடினான்
காரணத்தா [1]லதற்கு நாமம்
என்பதுபொற் றாமரையென் றேழுலகும்
பொலிகவென விசைத்துப் பின்னும்
மின்பதுமத் தடங்குடைந்து பொற்கமலங்
கொய்தெடுத்து மீண்டு நீங்காத்
தன்பிணிநோய் தணியமுளைத் தெழுந்தமுழு
முதன்மருந்தின் றன்பால் வந்து. (81)

**விமானம் உண்டானது**

மொய்த்தபுனக் காடெறிந்து நிலத்திருத்தி
வருமளவின் முளைத்த ஞான
வித்தனைய சிவக்கொழுந்தின் றிருமுடிமேற்
பரிதிகர மெல்லத் தீண்டச்
சித்தநெகிழ்ந் திந்திரன்றன் வெண்கவிகைத்
திங்கணிழல் செய்வா னுள்ளம்
வைத்தனனப் போதிரவி மண்டல்போ
லிழிந்ததொரு மணிவி மானம். (82)

**அமரர்கோன் துதிப்பது**

கிரியெட்டு மெனமழையைக் கிழித்தெட்டும்
புழைக்கைமதிக் கீற்றுக் கோட்டுக்
கரியெட்டுஞ் சினமடங்க னாலெட்டு
மெட்டெட்டுக் கணமுந் தாங்க
விரியெட்டுத் திசைபரப்ப மயனிருமித்
துதவியவவ் விமானஞ் சாத்தி
அரியெட்டுத் திருவுருவப் பரஞ்சுடரை
[2]யருச்சிப்பா னாயி னானே! (83)

முந்தவம ருலகடைந்து பூசனைக்கு
வேண்டுவன முழுதுந் தேர்வார்

..................................................................

1. விதற்கு .பா.வே. 2. யருச்சிப்பதாயினான். பா.வே.

வந்துதரு வைந்தீன்ற பொன்னடை
மின்னுமிழு மணிப்பூண் வாசச்
சந்தனமந் தாகினிமஞ் சனந் [1]தூபந்
திருப்பள்ளித் தாமம் தீபம்
அந்தமிலா னைந்துநறுங் கனிதீந்தேன்
றிருவமுத மனைத்துந் தந்தார். (84)

தெய்வத்தா மரைமுளைத்த தடம்படிந்து
பவந்தொலைக்குந் திருநீ றாடிச்
சைவத்தாழ் வடந்தாங்கி யன்புருவா
யருளுருவந் தானாய்த் தோன்றும்
பைவைத்தா டரவார்த்த பசுபதியை
யவனுரைத்த பனுவ லாற்றின்
மெய்வைத்தா தரம்பெருக வருச்சனைசெய்
தானந்த வெள்ளத் தாழ்ந்தான். (85)

பாரார வட்டாங்க பஞ்சாங்க
விதிமுறையாற் பணிந்துள் வாய்மெய்
நேராகச் சூழ்ந்துடலங் கம்பித்துக்
கும்பிட்டு நிருத்தஞ் செய்து
தாராருந் தொடைமிதப்ப வானந்தக்
கண்ணருவி ததும்ப நின்றன்
பாராமை மீக்கொள்ள வஞ்சலித்துத்
துதிக்கின்றா னமரர் கோமான். (86)

**அருச்சனை**

வேறு

அங்கணா போற்றி வாய்மை
யாரணா போற்றி நாக
கங்கணா போற்றி மூல
காரணா போற்றி நெற்றிச்

............................................

1. தூமம் – பா.வே.

செங்கணா போற்றி யாதி
சிவபரஞ் சுடரே போற்றி
எங்ஙணா யகனே போற்றி
யீறிலா முதலே போற்றி! (87)

யாவையும் படைப்பாய் போற்றி
யாவையுந் துடைப்பாய் போற்றி
யாவையு மானாய் போற்றி
யாவையு மல்லாய் போற்றி
யாவையு மறிந்தாய் போற்றி
யாவையு மறந்தாய் போற்றி
யாவையும் புணர்ந்தாய் போற்றி
யாவையும் பிரிந்தாய் போற்றி! (88)

இடருறப் பிணித்த விந்தப்
பழியினின் றென்னை யீர்த்துன்
அடியிணைக் கன்ப னாக்கு
மருட்கடல் போற்றி சேற்கண்
மடவரன் மணாள போற்றி
கடம்பமா வனத்தாய் போற்றி
சுடர்விடு விமான மேய
சுந்தர விடங்க போற்றி! (89)

பூசையும் பூசைக் கேற்ற
பொருள்களும் பூசை செய்யும்
நேசனும் பூசை கொண்டு
[1]நியதியிற் பேறு நல்கும்
ஈசனு மாகிப் பூசை
யான்செய்தே னெனுமென் போத
வாசனை யதுவு மான
மறைமுத லடிகள் போற்றி! (90)

1. நியதியின் பேறு. பா.வே.

என்னநின் றேத்தி னானை
யின்னகை சிறிது தோன்ற
முன்னவ ரடியா ரெண்ண
முடிப்பவ னருட்க ணோக்கால்
உன்னது வேட்கை யாதிங்
குரையென விரையத் தாழ்ந்து
சென்னிமேற் செங்கை கூப்பித்
தேவர்கோ னிதனை வேண்டும். (91)

ஐயநின் னிருக்கை யெல்லைக்
கணியனா மளவி னீங்கா
வெய்யவென் பழியி னோடு
மேலைநா ளடியேன் செய்த
மையல்வல் வினையு மாய்ந்துன்
மலரடி வழுத்தில் பூசை
செய்யவு முரிய னானேன்
சிறந்தபே ரிதனின் யாதோ! (92)

இன்னநின் பாதப் போதே
யிவ்வாறே யென்றும் பூசித்
துன்னடி யாருள் யானு
மோரடித் தொண்ட னாவேன்
அன்னதே யடியேன் வேண்டத்
தக்கதென் றடியில் வீழ்ந்த
மன்னவன் றனக்கு முக்கண்
வரதனுங் கருணை பூத்து. (93)

## சிவபரஞ்சுடர் விடை கொடுத்தது

வேறு

இருதுவிற் சிறந்த வேனிலு மதியா
றிரண்டினிற் சிறந்தவான் றகரும்
பொருவிறா ரகையிற் சிறந்தசித் திரையுந்
திதியினிற் சிறந்தபூ ரணையும்

மருவுசித் திரையிற் சித்திரை தோறும்
வந்துவந் தருச்சியோர் வருடந்
தெரியுநாண் முந்நூற் றறுபது மைந்துஞ்
செய்தவர்ச் சனைப்பய னெய்தும். (94)

துறக்கநா டணைந்து சுத்தபல் போகந்
துய்த்துமேன் மலபரி பாகம்
பிறக்கநான் முகன்மான் முதற்பெருந் தேவர்
பெரும்பதத் தாசையும் பிறவும்
மறக்கநாம் வீடு வழங்குது மென்ன
வாய்மலர்ந் தருளிவான் கருணை
சிறக்கநால் வேதச் சிகையெழு மனாதி
சிவபரஞ் சுடர்விடை கொடுத்தான். (95)

மூடினான் புளகப் போர்வையால் யாக்கை
முடிமிசை யஞ்சலிக் கமலஞ்
சூடினான் வீழ்ந்தா னெழுந்துகண் ணருவி
துளும்பினான் பன்முறை துதிசெய்
தாடினா னைய னடிபிரி வாற்றா
தஞ்சினா னவனரு ளாணை
நாடினான் பிரியா விடைகொடு துறக்க
நண்ணினான் விண்ணவர் நாதன். (96)

வந்தரமங் கையர்கவரி மருங்கு வீச
மந்தாரங் கற்பகப்பூ மாரி தூற்ற
அந்தரநாட் டவர்முடிக ளடிகள் சூட
வயிராணி முலைத்தடந்தோய்ந் தகலந்
திண்டோள்
விந்தமெனச் செம்மாந்து விம்மு காம
வெள்ளத்து ளுடலழுந்த வுள்ளஞ் சென்று
சுந்தரநா யகன்கருணை வெள்ளத் தாழ்ந்து
தொன்முறையில் முறைசெய்தான் துறக்க
நாடன். (97)

இந்திரன் பழிதீர்த்த படலம் முற்றும்.

ஆகத் திருவிருத்தம். 438

## இரண்டாவது
## வெள்ளானை சாபந் தீர்த்த படலம்

மட்டவிழுங் கொன்றைச் சடையான் மகவானைத்
தொட்ட பழியின் றொடக்கறுத்த [1]வாறீது
பட்டமத வேழம் பரனைப் பராய்முனிவன்
இட்டகொடுஞ் சாபநீத் தேகியவா றோதுவாம். (1)

கருவா சனைகழிக்குங் காசிநகர் தன்னில்
துருவாச வேதமுனி தொல்லா கமத்தின்
பெருவாய்மை யாற்றன் பெயர்விளங்க வீசன்
ஒருவா விலிங்க வொளியுருவங் கண்டான். (2)

இன்புற் றருச்சனைசெய் தேத்துவா னவ்வேலை
அன்புக் கெளிய னருளாற் றிருமுடிமேன்
மின்பொற் கடிக்கமலப் போதொன்று [1]வீழ்த்திடலுந்
தன்பொற் கரகமலப் போதலர்த்தித் தாங்கினான். (3)

தாங்கிக்கண் சென்னி தடமார் பணைத்துடலம்
வீங்கித் தலைசிறந்த மெய்யுவகை மேறகொள்ள
நீங்கிக் கழிந்த கருணை நிதியனையான்
பூங்கற் பகநாட்டிற் போகின்றா னவ்வேலை. (4)

சங்கலறச் செங்களத்துத் தானவரைத் தேய்த்துவிறற்
கொங்கலர்தார் வேய்ந்தமரர் கோமான்றன் கோநகரிற்
செங்க ணமரர்பெருஞ் சேனைக் கடல்கலிப்ப
மங்கலப்பல் லாண்டு மறைமுழங்க வந்தணைவான். (5)

எத்திக்குங் கல்லென் றியங்கலிப்ப வேந்திழையார்
தித்தித் தமுதொழுக்குங் கீதஞ் செவிமடுப்பப்
பத்திக் கவரிநிரை தானைப் படுகடலில்
தத்திப் புளளுந் திரைபோற் றலைபனிப்ப. (6)

1. வீழ்ந்திடலும். பா.வே.

அங்கட் கடலி னெடுங்கூம் பகறிமிர்ந்த
வங்கத் தலையுய்க்கு மீகான் றனைமானத்
திங்கட் குடைநிழற்றத் தீந்தே மதங்கவிழ்க்கும்
வெங்கட் களிற்றின் மிசைப்பவனி போந்தணைந்தான். (7)

அத்தலைவிண் ணாட ரருகணைந்து வெவ்வேறு
தத்த மனக்கிசைந்த கையுறைக டாங்கொடுத்துக்
கைத்தலங்கள் கூப்பினார்[1]கண்டான் கடவுளிரில்
உத்தமனை யர்ச்சித்துப் போந்தமுனி யுத்தமனும். (8)

தீங்கரிய வாசிமொழி செப்பித்தன் செங்கரத்தின்
நீங்கரிய தாமரையை நீட்டினான் மற்றதனைத்
தாங்கரிய செல்வத் தருக்காலோர் கையோச்சி
வாங்கிமத யானையின்மேல் வைத்தான் மதியில்லான். (9)

கீறிக் கிடந்த மதியனைய கிம்புரிக்கோட்
டூறிக் கடாங்கவிழ்க்கு மால்யானை யுச்சியின்மேல்
நாறிக் கிடந்த நறுமலரை வீழ்த்தியுரற்
சீறிக் கிடந்தநெடுந் தாளாற் சிதைத்தன்றே. (10)

கண்டான் முனிகாமற் காய்ந்தா னுதற்கண்போல்
விண்டா ரழல்சிதற நோக்கினான் வெங்கோபங்
கொண்டா னமர ரொதுங்கக் கொதித்தாலம்
உண்டா னெனநின் றுருத்தா னுரைக்கின்றான். (11)

புள்ளியதோ லாடை புனைந்தரவப் பூணணிந்த
வெள்ளிய செங்கண் விடையா னடிக்கமலம்
உள்ளிய மெய்யன் புடையா ரருவருத்துத்
தள்ளிய செல்வத் தருக்கினா யென்செய்தாய்.. (12)

கதிர்த்தார் முடியமரர் கையுறையே நன்கு
மதித்தா யெம்மீசன் மதிமுடிமேற் சாத்தும்

..................................

1. கண்டார் பா.வே.

பொதித்தா தவிழ்மலரைப் போற்றாது வாங்கி
மிதித்தானை சிந்தவதன் மேல்வைத்தாய் பேதாய். (13)

வண்டுளருந் தண்டுழாய் மாயோ னிறுமாப்பும்
புண்டரிகப் போதுறையும் புத்தே ளிறுமாப்பும்
அண்டர்தொழ வாழுன் னிறுமாப்பு மாலாலம்
உண்டவனைப் பூசித்த பேறென் றுணர்ந்திலையால். (14)

சேட்டானை வானவநின் சென்னி செழியரிலோர்
வாட்டானை வீரன் வளையாற் சிதறுகநின்
கோட்டான [1]நாற்கோட்டு வெண்ணிறத்த குஞ்சரமுங்
காட்டானை யாகவென விட்டான் கடுஞ்சாபம். (15)

சவித்தமுனி பாதந் தலைக்கொண்டு செங்கை
குவித்தமரர் தங்கோன் குறையிரப்பா ரைய
அவித்தபொறி யாயெம் மரசுங்கா றள்ளுஞ்
செவித்தறுகண் வேழமுந் தீங்குடைய ரன்றோ. (16)

அத்தகைய நீராற் சபித்தீ ரடிகேண்மற்
றித்தகைய சாப மினிவிடுமி னென்றிரந்து
கைத்தலங்கள் கூப்பிக் கரைந்தார்க் கிரங்கியருள்
வைத்த முனிபிறிது சாபம் வகுக்கின்றான். (17)

வேறு

சிந்தனை வாக்கிற் கெட்டாச்
சிவனரு ளளித்த சேட
நிந்தனை பரிகா ரத்தா
னீங்காது தலைமட் டாக
வந்தது முடிமட் டாக
மத்தமா வனமா வாகி
ஐந்திரு பஃதாண் டெல்லை
யகன்றபின் பண்டைத் தாக. (18)

1. நாற்கோட்ட. பா.பே.

என்றனன் பிறிது சாப
　　மித்திரன் மகுட பங்கம்
ஒன்றிய செய்கை பின்ன
　　ருரைத்துமற் றஃது நிற்க
நின்றவெள் ளானை வான
　　நீத்தறி விழந்து நீலக்
குன்றென வனத்து வேழக்
　　குழாத்தொடு குழீஇய தன்றே. (19)

## கடம்பவனங் கண்டது

மாவொடு மயங்கிச் செங்கண்
　　மறம்பயில் காடு முல்லைப்
பூவொடு வழங்கு நீத்தப்
　　புறவமுங் குறவர் தங்கள்
தேவொடு பயிலுங் கல்லுந்
　　திரிந்துநூ றாண்டுஞ் செல்லக்
காவொடு பயிலுந் தெய்வக்
　　கடம்பமா வனம்புக் கன்றே! (20)

புக்குரல் வட்டத் திண்கால்
　　பொருவிறே வியலிற் றீர்ந்த
மைக்கருங் களிறு முக்கண்
　　மாதவ னருள்வந் தெய்தத்
தக்கதோ ரமையுஞ் சார
　　மரகதந் தழைத்து மின்னு
நக்கபொன் முளரி பூத்த
　　நளிர்கயந் [1]தலைக்கண் டன்றே! (21)

கண்டபோ தறிவு தோன்றக்
　　[2]கயந்தலை குடைந்த போது

1. தலைகண்டன்றே – பா.வே. 2. கயந்தலைக் குடைந்த – பா.வே.

பண்டைய வடிவந் தோன்றப்
பரஞ்சுட ரருட்கண் டோன்றக்
கொண்டதோர் பரமா னந்தக்
குறியெதிர் தோன்றக் கும்பிட்
டண்டர்நா யகனைப் பூசை
செய்வதற் கன்பு தோன்ற. (22)

தூம்புடைக் கையான் மொண்டு
மஞ்சனத் தூநீ ராட்டித்
தேம்புடை யொழுகப் பள்ளித்
தாமமுந் தெரிந்து சாத்திப்
பாம்புடைத் தூய வேணிப்
பரனையர்ச் சிக்க வுள்ளத்
தாம்புடை யறிந்த வெந்தை
யானையை நோக்கிக் கூறும். (23)

வந்ததை யெவனீ வேண்டும்
வரமெவ னுரைத்தி யென்னச்
சிந்தையி லன்பு கூர்ந்த
தெய்வத வேழந் தாழ்ந்து
முந்தையில் விளைவும் வந்த
முறைமையு முறையாற் கூறி
எந்தையை யடையப் பெற்றேற்
கினியொரு குறையுண் டாமோ. (24)

## விமானங்கண்டது

[1]என்பதா மாரம் பூண்ட
வெந்தையிக் கரிக ளெட்டோ
டொன்பதா யடிய னேனு
முன்னடி பிரியா துன்றன்

1. என்பராவராரம் – பா.வே.

முன்பதா யிவ்வி மான
முதுகுறச் சுமப்ப லென்றோர்
அன்பதா யென்றென் னுள்ளத்
தடுத்ததா லஃதே வேண்டும். (25)

இடையறா வன்பின் வேழ
மிங்ஙனங் கூற விண்ணா
டுடையவ னம்பால் மெய்யன்
புடையவ னவனைத் தாங்கி
அடைவதே நமக்கு வேண்டு
மகமகிழ் வென்னாப் பின்னும்
விடையவன் வரங்க ணல்கி
விடைகொடுத் தருளி னானே! (26)

வேறு

விடைகொடு வணங்கி யேகும்வெள் ளானை
மேற்றிசை யடைந்துதன் பெயரால்
தடமுமற் றதன்பா லரனையுங் கணேசன்
றன்னையுங் கண்டருச் சனைசெய்
திடையறா வன்புந் தானுமங் கிருக்கு
மெல்லையிச் செய்திகேட் டருள்கூர்
கடவுளர் பெருமா னுழையரை விளித்தெங்
களிற்றினைக் கொணர்கென விடுத்தான். (27)

**இந்திரேச்சுரங் கண்டது**

வல்லவந் தழைத்தார் தம்மைமுன் போக்கி
வருவலென் றெழுந்துகீழ்த் திசையோர்
எல்லைவந் தோரூர் [1]தன்பெய ராற்கண்
டிந்திரேச் [2]சுரனென விறைவன்
றொல்லைவண் பெயரா லொன்றுகண் டரனைத்
தூயபூ சனைசெய்தங் கிருப்பக்

1. தனதுபேரால்கண். பா.வே. 2. சுரமென. பா.வே.

கல்லைவன் சிறகு தடிந்தவ னின்னுங்
களிறுவந் திலதெனப் பின்னும். (28)

மனத்தினுங் கடிய தூதரை விடுப்ப
வானடைந் திறைவனை வணங்கிப்
புனத்தினுங் கடிய கல்லினும் பன்னாட்
புண்கணோ யுறவரு சாபங்
கனத்தினுங் கரிய கண்டனைக் கண்டு
களைந்ததுங் கிளந்துதிக் கயத்தில்
இனத்தினுங் கழிந்த தெய்வத வேழ
மினிதுவீற் றிருந்தது மாதோ. (29)

குடவயி னயிரா வதப்பெருந் தீர்த்தங்
குடைந்தயி ராவத கணேசக்
கடவுளைத் தொழுதை ராவதேச் சுரத்துக்
கடவுளைப் பணிந்தவர் சரபத்
தொடர்பினும் பாவத் தொடர்பினும் கழிவர்
சுராதிபன் களிறுசென் னெறிபோய்
இடர்கெட வைகை படிந்துதென் கரையி
லிந்திரேச் சுரனடி பணிவோர். (30)

வேறு

இம்மையி லறமுன் மூன்றா
லெய்திய பயனை யெய்தி
அம்மையின் மகவா னீரே
ழுரும்பத மளவும் வானில்
வெம்மையில் போக மூழ்கி
வெறுப்புவந் தடைய வுள்ளச்
செம்மையில் விளைபே ரின்பச்
சிவகதி செல்வ ராவர். (31)

வெள்ளானை சரபந்தீர்த்த படலம்
முற்றும்
ஆகத் திருவிருத்தம் 469.

மூன்றாவது

## திருநகர் கண்ட படலம்

தான வாறிழி புகர்முகத் தடுகரி சாபம்
போன வாறுரை செய்துமேற் புதுமதி முடிமேல்
வான வாறினன் கடம்பமா வனமுது நகரம்
ஆன வாறது தனைச்சிறி தறிந்தவா றறைவாம். (1)

இன்ன ரம்புள ரேழிசை யெழான்மிடற் றளிகள்
கின்ன ரம்பயில் கடம்பமா வனத்தினின் கீழ்சார்த்
தென்னர் சேகர னெனுங்குல சேகர னுலக
மன்னர் சேகர னரசுசெய் திருப்பது மணவூர். (2)

குலவு மப்பெரும் பதியிளங் கோக்களி லொருவன்
நிலவு மாநிதி போலருச் சனைமுத னியதி
பலவு மாஞ்சிவ தருமமுந் தேடுவான் பரன்பாற்
றலைமை சான்றமெய் யன்பினான் றனஞ்சய னென்பான் (3)

### வணிகன் கண்டது

செல்வ மாநக ரிருந்துமேற் றிசைப்புலஞ் சென்று
மல்லல் வாணிகஞ் செய்துதன் வளம்பதி மீள்வான்
தொல்லை யேழ்பவக் கடற்கரை தோற்றுவித் தடியார்
அல்ல றீர்ப்பவன் கடம்பமா வனம்புகு மளவில். (4)

இரவி கண்மறைந் தேழ்பலி யிரதமுந் தானும்
உரவு நீர்க்கருங் கடலில்வீழ்ந் தொளித்தன னாக
[1]இரவு நீண்மயங் கிருள்வயிற் றமியனாய் மெலியும்
அரவு நீர்ச்சடை யண்ணலுக் கன்பினோ னங்கண். (5)

.................................................................

1. விரவுநீன் மயங்கு – பா.வே.

வாங்கு நான்மருப் பேந்திய மதமலை யெருத்தந்
தாங்கிய யாயிரங் கரங்களாற் றடவியெண் டிசையுந்
தூங்கு காரிரு டுரத்துசெஞ் சுடரெனச் சூழ்போய்
வீங்க காரிரு ளொதுக்கிய விமானனேர் கண்டான். (6)

அடுத்த ணைந்தன னவிர்சுடர் விமானமீ தமர்ந்த
கடுத்த தும்பிய கண்டனைக் கண்டுதாழ்ந் துவகை
மடுத்த நெஞ்சினா னங்ஙனம் வைகிருள் கழிப்பான்
எடுத்த சிந்தையி னிருந்தன னிருக்குமவ் விருள்வாய் (7)

## கடம்பவனத்திலதிசயங் கண்டது

சோம வாரமன் றாதலாற் சுரர்களங் கெய்தி
வாம மேகலை மலைமக டலைமகள் மலர்ந்த
காமர் சேவடி பணிந்தவன் கங்குல்போல் கருதி
யாம நான்கினு மருச்சனை யின்புறப் புரிவார். (8)

அண்டர் வந்தது மருச்சனை புரிவது மனைத்துந்
தொண்ட ரன்பினுக் கெளியவன் சுரர்தொழக் கறுத்த
கண்ட னின்னருட் கண்ணினாற் கண்டன னுதலிற்
புண்ட ரம்பயி லன்புடைப் புண்ணிய வணிகன். (9)

நான மென்பனி நறம்புன னாயகன் பூசைக்
கான நல்விரை வருக்கமு மமரர்கைக் கொடுத்து
ஞான வெண்மதிச் சடையவன் கோயிலின் ஞாங்கர்த்
தான மர்ந்தருச் சனைசெய்வான் றங்க ணாயகனை. (10)

வள்ள றன்னைமெய் யன்பினா லருச்சிசெய் வானோர்
உள்ள வல்வினை யீட்டமுங் கங்குலு மொதுங்கக்
கள்ள மில்லவன் யாரையுங் கண்டிலன் கண்டான்
தள்ள ருஞ்சுடர் விமானமேற் றனித்துறை தனியை (11)

ஆழ்ந்த சிந்தைய னதிசய மடைந்துசே வடிக்கீழ்த்
தாழ்ந்தெ ழுந்திரு கைகளுந் தலைமிசைக் கூப்பிச்
சூழ்ந்து தன்பதிக் கேகுவா னொருதலை துணிந்து
வாழ்ந்த வன்பினான் விடைகொடு வழிக்கொடு வந்தான். (12)

முக்க டம்படு களிற்றினான் முகிறவழ் கோயில்
புக்க டங்கலர் சிங்கமன் னானெதிர் புகல்வான்
திக்க டங்கலுங் கடந்தவெந் திகிரியாய் நெருநல்
அக்க டம்பமர் வனத்திலோ ரதிசயங் கண்டேன். (13)

வல்லை வாணிகஞ் செய்துநான் வருவழி மேலைக்
கல்ல டைந்தது வெங்கதிர் கங்குலும் பிறப்பும்
எல்லை காணிய கண்டன னிரவிமண் டலம்போல்
அல்ல டுஞ்சுடர் விமானமு மதிற்சிவக் குறியும். (14)

மாவ லம்புதார் மணிமுடிக் கடவுளர் வந்தத்
தேவ தேவனை யிரவெலா மருச்சனை செய்து
போவ தாயினார் யானுமப் பொன்னெடுங் கோயின்
மேவு மீசனை விடைகொடு மீண்டன னென்றான். (15)

மூளு மன்பினான் மொழிந்திட முக்கணெம் பெருமான்
தாளு மஞ்சலி கரங்களுந் தலையில்வைத் துள்ளம்
நீளு மன்புமற் புதமுமே நிரம்பநீர் ஞாலம்
ஆளு மன்னவ னிருந்தனன் போயினா னருக்கன். (16)

### சித்தராயக் கனவில் தோன்றியது

ஈட்டு வார்வினை யொத்தபோ திருண்மலங் கருக
வாட்டு வாரவர் சென்னிமேன் மலரடிக் கமலஞ்
சூட்டு வார்மறை கடந்ததத் தொல்லுரு விளங்கக்
காட்டு வாரொரு சித்தராய்த் தோன்றினார் கனவில். (17)

வடிகொள் வேலினாய் கடம்பமா வனத்தினைத் திருந்தக்
கடிகொள் காடகழ்ந் தணிநகர் காண்கென வுணர்த்தி

அடிக ளேகினார் கவுரிய ராண்டகை கங்குல்
விடியும் வேலைகண் விழித்தனன் பரிதியும் விழித்தான். (18)

கனவிற் றீர்ந்தவ னியதியின் கடன்முடித் தமைச்சர்
சினவிற் றீர்ந்தமா தவர்க்குந்தன் கனாத்திறஞ் செப்பி
நனவிற் கேட்டதுங் கனவிற் கண்டது நயப்ப
வினவித் தேர்ந்துகொண் டெழுந்தனன்
மேற்றிசைச் செல்வான் (19)

அமைச்ச ரோடுந் நீபமா வனம்புகுந் தம்பொன்
சமைச்ச வீழ்ந்தபொற் றாமரைத் தடம்படிந் தொளிவிட்
டிமைச்ச லர்ந்தபொன் விமானமீ தினிதுவீற் றிருந்தோர்
தமைச்ச ரண்பணிந் தஞ்சலி தலையின்மேல்
முகிழ்த்தான். (20)

அன்பு பின்றள்ள முன்புவந் [1]தருட்கணீர்த் தேக
என்பு நெக்கிட வேகிவீழ்ந் திணையடிக் கமலம்
பொன்பு னைந்ததார் மௌலியிற் புனைந்தெழுந் திறைவன்
முன்பு நின்றுசொற் பதங்களாற் றோத்திர மொழிவான். (21)

சரண மங்கையோர் பங்குறை சங்கர சரணஞ்
சரண மங்கல மாகிய தனிமுதல் சரணஞ்
சரண மந்திர வடிவமாஞ் சதாசிவ சரணஞ்
சரண மும்பர்க ணாயக பசுபதி சரணம். (22)

ஆழி ஞாலமே லாசையு மமரர்வான் பதமேல்
வீழு மாசையும் வெறுத்தவர்க் கன்றிமண் ணாண்டு
பீழை மூழ்கிவா னரகொடு பிணிபடச் சுழலும்
ஏழை யேங்களுக் காவதோ வெந்தைநின் கருணை. (23)

சூள தாமரைச் சென்னியுந் தொடத்தொட நீண்ட
[2]நீள நீயுனக் கன்பில மாயினு நீயே

.................................................................

1. தருட்சணீர்தேங்க. பா.வே. 2. நீளா பா.வே.

மூள வன்புதந் தெங்குடி முழுவதும் பணிகொண்
டாள வேகொலிக் கானகத் தமர்ந்தனை யென்னா. (24)

சுரந்த வன்பிரு கண்வழிச் சொரிவபோற் சொரிந்து
பரந்த வாறொடு சிவானந்தப் பரவையுட் படிந்து
வரந்த வாதமெய் யன்பினால் வலங்கொடு புறம்போந்
தரந்தை தீர்ந்தவ [2]னொருசிறை யமைச்சரோ டிருந்தான்.(25)

ஆய வேலையின் மன்னவ னாணையா லமைச்சர்
மேய வேவலர் துறைதுறை மேவினர் விடுப்பப்
பாய வேலையி னார்த்தனர் வழிக்கொடு படர்ந்தார்
சேய காடெறிந் தணிநகர் செய்தொழின் மாக்கள். (26)

வட்ட வாய்மதிப் பிளவின்வெள் வாய்க்குய நவியம்
இட்ட தோளினர் யாப்புடைக் கச்சின ரிரும்பின்
விட்ட காரொளி மெய்யினர் வீசிகொள்வார் வன்றோல்
தொட்ட காலினர் வனமெறி தொழிலின ரானார். (27)

மறியு மோதைவண் டரற்றிட மரந்தலை பனிப்ப
எறியுமோதையு மெறிபவ ரோதையு மிரங்கி
முறியு மோதையு முறிந்துவீ ழோதையு முகில்வாய்ச்
செறியு மோதையுங் கீழ்ப்பட மேற்படச் செறியும். (28)

ஒளிறு தாதொடு போதுசெந் தேனுக வொலித்து
வெளிறில் வன்மரஞ் சினையிற வீழ்வசெங் களத்துப்
பிளிறு வாயவாய் நிணத்தொடு குருதிநீர் பெருகக்
களிறு கோடிற மாய்ந்துவீழ் காட்சிய வனைய. (29)

பூவ டைந்தவண் டிமையற் புறவொடும் பழனக்
காவ டைந்தன பறவைவான் கற்பக மடைந்த
கோவ டைந்திட வொதுங்குறுங் குறும்புபோற் செறிந்து
மாவ டைந்தன மாடுள வரைகளுங் காடும். (30)

இருணி ரம்பிய வனமெலா மெறிந்துமெய் யுணர்ந்தோர்
தெருணி றைந்தசிந் தையின்வெளி செய்துபல் லுயிர்க்கும்
அருணி றைந்துபற் றறுத்தர னடிநிழ லடைந்த
கருணை யன்பர்தம் பிறப்பென வேரொடுங் [1]களைந்தார்.(31)

களைந்து நீணிலந் திருத்திச்[2]செந் நெறிபடக் கண்டு
வளைந்து நன்னக ரெடுப்பதெவ் வாறெனத் தேறல்
விளைந்து தாதுகு தார்முடி வேந்தன்மந் திரரோ
டளைந்த ளாவிய சிந்தையோ டிருந்தன னங்கண். (32)

மெய்ய ரன்புதோய் சேவடி வியனிலந் தீண்டப்
பொய்ய கன்றவெண் ணீறணி மேனியர் பூதிப்
பையர் நள்ளிருட் கனவில்வந் தருளிய படியே
ஐயர் வல்லவந் தருளினா ரரசுளங் களிப்ப. (33)

கனவி லும்பெருங் கடவுளர் காண்பதற் கரியார்
நனவி லும்வெளி வந்தவர் தமையெதிர் நண்ணி
நினைவி னின்றதா ளிறைஞ்சிநேர் நின்றுநல் வரவு
வினவி யாதனங் கொடுத்தனன் மெய்யுணர் வேந்தன். (34)

தென்ன ரன்பினி லகப்படு சித்தர்தா முன்னர்ச்
சொன்ன வாதிநூல் வழிவரு சார்புநூல் தொடர்பால்
நன்ன ராலய மண்டபங் கோபுர நகரம்
இன்ன வாறுசெய் யெனவகுத் திம்மென மறைந்தார். (35)

## ஆலயங்கட்டினது

மறைந்தெ வற்றினு நிறைந்தவர் மலரடிக் கன்பு
நிறைந்த நெஞ்சுடைப் பஞ்சவ னிலத்துமேம் பட்டுச்
சிறந்த சிற்பநூற் புலவராற் சிவபரஞ் சுடர்வந்
தறைந்து வைத்தவா றாலய மணிநகர் காண்பான். (36)

1. மலைந்தான் பா.வே. 2. சென்னெறி பா.வே.

வேறு

மறைபயில் பதும மண்டப மருத்த
மண்டப மழைநுழை வளைவாய்ப்
பிறைபயில் சிகைமா மண்டப மறுகாற்
பீடிகை திசையெலாம் பிளக்கும்
பறைபயி னிருத்த மண்டபம் விழாக்கொள்
பன்மணி மண்டபம் வேள்வித்
துறைபயில் சாலை திருமடைப் பள்ளி
சூழுறை தேவர்தங் கோயில் (37)

வலவயி னிமய வல்லிபொற் கோயின்
மாளிகை யடுக்கிய மதில்வான்
நிலவிய கொடிய நெடிய சூளிகைவா
னிலாவிரி தவளமா ளிகைமீன்
குலவிய குடுமிக் குன்றிவர் செம்பொற்
கோபுரங் கொண்டல்கண் படுக்குஞ்
சுலவெயி லகழிக் கிடங்குகம் மியநூற்
றொல்வரம் பெல்லைகண் டமைத்தான். (38)

சித்திர நிரைத்த பீடிகை மறுகு
தெற்றிகள் வாணிலாத் தெளிக்கும்
நித்தில நிரைத்த விழாவரு வீதி
நிழல்மணிச் சாளர வொழுக்கப்
பித்திகை மாடப் பெருந்தெருக் கவலை
பீடுசால் சதுக்கநற் பொதியில்
பத்தியிற் குயின்ற மன்றுசெய் குன்று
பருமணி மேடையா டரங்கு. (39)

அருந்தவ ரிருக்கை யந்தண ருறையு
ளரசரா வணங்குல வணிகப்
பெருந்தெரு நல்வே ளாளர்பே ரறஞ்சால்
பெருங்குடி யேனைய கரிதேர்
திருந்திய பரிமா நிலைக்களங் கழகந்
தீஞ்சுவை யாறுநான் குண்டி

இரந்தவர்க் கருத்து நல்லறச் சாலை
யினையன பிறவுநன் கமைத்தான். (40)

துணிகயங் கீழ்நீர்க் கூல்பூ வோடை
தொடுகுளம் பொய்கைநந் தவனந்
திணிமலர்ச் சோலை துடைவையுய் யானந்
திருநகர்க் கணிபெறச் செய்து
மணிமலர்த் தாரோன் மாளிகை தனக்கம்
மாநகர் வடகுண பாற்கண்
டணிநகர் சாந்தி செய்வது குறித்தா
னண்ணலா ரறிந்திது செய்வார். (41)

**மதுரைமாநகரென் றுரைத்தது**

பொன்மய மான சடைமதிக் கலையின்
புத்தமு துகுத்தன ரதுபோய்ச்
சின்மய மான தம்மடி யடைந்தார்ச்
சிவமய மாக்கிய செயல்போற்
றன்மய மாக்கி யந்நகர் முழுதுஞ்
சாந்திசெய் தநுவது மதுர
நன்மய மான தன்மையான் மதுரா
நகரென வுரைத்தனர் நாமம். (42)

கீட்டிசைக் கரிய சாத்தனுந் தென்சார்
கீற்றுவெண் பிறைநுதற் களிற்றுக்
கோட்டிளங் களபக் கொங்கையின் னையருங்
குடவயின் மதுமடை யுடைக்குந்
தோட்டிளந் தண்ணந் துழாயணி மௌலித்
தோன்றலும் வடவயிற் றோடு
நீட்டிரும் போந்தி னிமிர்குழ லெண்டோ
ணீலியுங் காவலா நிறுவி. (43)

கைவரை யெருத்திற் கனவரை கிடந்த
காட்சியிற் பொலிந்தொளிர் கோயின்
மைவரை மிடற்று மதுரைநா யகரை
மரபுளி யருச்சனை புரிவான்

பொய்வரை மறையா கமநெறி யொழுகும்
புண்ணிய முனிவரை யாதி
சைவரைக் காசிப் பதியினிற் கொணர்ந்து
தலத்தினிற் றாபனஞ் செய்தான். (44)

உத்தம குலத்து நாற்பெருங் குடியு
முயர்ந்தவு மிழிந்தவு மயங்க
வைத்தவு மான புறக்குடி மூன்று
மறைவழுக் காமனு வகுத்த
தத்தம நெறிநின் றொழுகவை திகமுஞ்
சைவமுந் தருமமுந் தழைப்பப்
பைத்தெழு திரைநீர் ஞாலமேற் றிலகம்
பதித்தென நகர்வளம் படுத்தான். (45)

அன்றுதொட் டரச னந்நக ரெய்தி
யணிகெழு மங்கல மியம்ப
என்றுதொட் டிமைக்கு மனையின்மங் கலநா
ளெய்தினா னிருந்துமுப் புரமுங்
குன்றுதொட் டெய்தான் கோயில்முன் றுறுப்புங்
குறைவில்பூ சனைவழா தோங்கக்
கன்றுதொட் டெறிந்து கனியுகுத் தான்போற்
கலிதுரந் தரசுசெய் நாளில். (46)

பவநெறி கடக்கும் பார்த்திவன் கிரணம்
பரப்பிளம் பரிதிபோன் மலயத்
துவசனைப் பயந்து மைந்தன் மேன் ஞாலஞ்
சுமத்திநாள் பலகழித் தொருநாள்
நவவடி விறந்தோ னாலயத் தெய்தி
நாதனைப் பணிந்துமூ வலஞ்செய்
துவமையி லின்ப வருணிழ லெய்தி
யொன்றியொன் றாநிலை நின்றான். (47)

மூன்றாவது திருநகர் கண்ட படல முற்றும்
ஆகத் திருவிருத்தம் 516.

## நான்காவது

## தடாதகைப் பிராட்டியார் திருஅவதாரப் படலம்

கன்னியொரு பங்கினர் கடம்பவன மெல்லாம்
நன்னகர மானது நவின்றுமுல கீன்ற
அன்னைமக ளாகிமல யத்துவச னாகுந்
தென்னனிடை வந்துமுறை செய்ததுரை செய்வாம். (1)

மனுவற முவந்துதன் வழிச்செல நடத்தும்
புனிதன்மல யத்துவசன் வென்றிபுனை பூணான்
கனியமுத மன்னகரு ணைக்குறையுள் காட்சிக்
கினியன்வட சொற்கட றமிழ்க்கட லிகந்தோன். (2)

வேனில்விறல் வேள்வடிவன் வேட்கைவிளை பூமி
ஆனமட வார்கள்பதி னாயிரவ ருள்ளான்
வானொழுகு பானுவழி வந்தொழுகு சூர
சேனன்மகள் காஞ்சனையை மன்றல்வினை செய்தான். (3)

கண்ணுதலை முப்பொழுதும் வந்துபணி கற்றோன்
எண்ணில்பல நாண்மகவி லாவறுமை யெதிப்
பண்ணரிய தானதரு மம்பலவு மாற்றிப்
புண்ணிய நிரம்புபுரி வேள்விபுரி குற்றான். (4)

ஈறின்மறை கூறுமுறை யெண்ணியொரு தொண்ணூற்
றாறினொடு மூன்றுமக மாற்றவம ரேசன்
நூறுமக மும்புரியி னென்பதநொ டிப்பின்
மாறுமென மற்றதனை மாற்றியிது சாற்றும். (5)

நன்பொருள் விரும்பினை யதற்கிசைய ஞாலம்
இன்புறு மகப்பெறு மகத்தினை யியற்றின்
அன்புறு மகப்பெறுதி யென்றமரர் நாடன்
தன்புல மடைந்திடலு நிம்பநகு தாரான். (6)

மிக்கமக வேள்விசெய் விருப்புடைய னாகி
அக்கண மதற்குரிய யாவையு மமைத்துத்
தக்கறிய மத்துரிய தேவியொடு சாலை
புக்கன னிருந்துமக வேள்விபுரி கிற்பான். (7)

[1]ஆசறம மறைப்புலவ ராசிரியர் காட்டும்
மாசறுச டங்கின்வழி மந்திரமு தாத்த
ஓசையறு தாத்தசொரி தந்தமுவ வோதி
வாசவ னிருக்கையி [2]லிருந்தெரி வளர்ப்பான். (8)

விசும்புநில னுந்திசையும் வேள்வியடு சாலைப்
பசும்புகை படர்ந்தொரு படாமென மறைப்பத்
தசம்புபடு நெய்பொரி சமித்தினொடு வானோர்க்
கசும்புபடு மின்னமுதி னாகுதி மடுத்தான். (9)

ஐம்முக னநாதிபர மாத்தனுரை யாற்றால்
நெய்ம்முக நிறைந்தழ[2] னிமிர்த்துவரு மெல்லை
பைம்முக வராவணி பரஞ்சுடர் தனிப்ப
மைம்முக நெடுங்கணிம வான்மனைவி நாண. (10)

வள்ளன்மல யத்துவச மீனவன் வலத்தோள்
துள்ளமனை காஞ்சனை சுருங்கிய மருங்குல்
தள்ளவெழு கொங்கைக டதும்பநிமிர் தீம்பால்
வெள்ளமொழு கக்கரிய வேற்கணிட னாட. (11)

இவ்வுலக மன்றியுல கேழுமகிழ் வெய்தச்
சைவமுத லாயின தவத்துறை நிவப்ப
ஔவிய மறங்கெட வறங்குது கலிப்பத்
தெய்வமறை துந்துபி திசைப்புல னிசைப்ப. (12)

மைம்மலர் நெடுங்கணர மங்கையர் நடிப்ப
மெய்ம்மன மொழிச்செயலின் வேறுபட லின்றி

1. அசறும். பா.வே. 2. னிருந்தெரி. பா.வே.

அம்மதுரை மாநகரு ளாரக மகிழ்ச்சி
தம்மையறி யாதன தலைத்தலை சிறப்ப. (13)

மாந்தர்பயின் மூவறுசொன் மாநில வரைப்பிற்
றீந்தமிழ் வழங்குதிரு நாடது சிறப்ப
ஆய்ந்ததமிழ் நாடர சளித்துமுறை செய்யும்
வேந்தர்களின் மீனவர் விழுத்தகைமை யெய்த. (14)

நொய்தழ லெரிக்கடவு ணோற்றபய னெய்தக்
கொய்தளி ரெனத்தழல் கொழுந்துபடு குண்டத்
தைதவ ழிதழ்க்கமல மப்பொழு தலர்ந்தோர்
மொய்தளிர் விரைக்கொடி முளைத்தெழுவ தென்ன. (15)

விட்டிலகு சூழியம் விழுங்குசிறு கொண்டை
வட்டமதி வாய்குறு முயற்கறையை மானக்
கட்டியதி னாற்றிய கதிர்த்தரள மாலை
சுட்டியதில் விட்டொழுகு சூழ்கிரண மொப்ப. (16)

தீங்குதலை யின்னமுத மார்பின்வழி சிந்தி
யாங்கிள நிலாவொழுகு மாரவட மின்ன
வீங்குட லிளம்பரிதி வெஞ்சுடர் விழுங்கி
வாங்குகடல் வித்துரும மாலையொளி கால. (17)

சிற்றிடை வளைந்தசிறு மென்றுலகில் புறஞ்சூழ்
பொற்றிரு மணிச்சிறிய மேகலை புலம்ப
விற்றிரு மணிக்குழை விழுங்கிய குதம்பை
சுற்றிருள் கடிந்துசிறு தோள்வருடி யாட. (18)

தெள்ளமுத மென்மழலை சிந்துவிள மூரல்
முள்ளெயி றரும்பமுலை மூன்றுடைய தோர்பெண்
பிள்ளையென மூவொரு பிராயமொடு நின்றாள்
எள்ளரிய பல்லுயிரு மெவ்வுலகு மீன்றாள். (19)

வேறு

குறுந்தளிர்மேல் லடிக்கிடந்த சிறுமணிநூ புரஞ்சதங்கை
குழறி யேங்க
நறுந்தளிர்போ லசைந்துதகளர் நடையொதுங்கி மழலையிள
நகையுந் தோன்றப்
பிறந்தபெரும் பயன்பெறுபொன் மாலைமடி யிருந்தொருபெண்
பிள்ளை யானாள்
அறந்தழுவு நெறிநின்றோர்க் [1]கிகம்போகம் வீடளிக்கு
மம்மை யம்மா. (20)

செய்யவாய் வெளிறாது துணைமுலைக்கண் கருகாது
சேல்போ னீண்ட
மையவாய் மதர்த்தகருங் கண்பசவா தையிரண்டு
மதியந் தாங்கா
தையவா லிலைவருந்தப் பெறாதுபெறு மகவையெடுத்
தணைத்தாள் மோந்தாள்
துய்யவாய் முத்துங்கொண் டின்புற்றாண் முன்பெற்ற
தோகை யன்னாள். (21)

பரையாதி விருப்பறிவு தொழிலாகி யுலகமெலாம்
படைத்துக் காத்து
வரையாது துடைத்துமறைத் தருளியவை நின்றுந்தன்
வடிவு வேறாய்
உரையாதி மறைகடந்த வொருமுதல்வி திருமகளா
யுதித்தற் கிந்தத்
தரையாளு மன்னவன்செய் தவமிதுவோ வதற்குரிய
தவந்தான் மன்னோ. (22)

கள்ளமா நெறியொழுகும் பொறிகடந்து கரணமெலாங்
கடந்தா னந்த

வெள்ளமாம் பரஞான வடிவுடையா டன்னன்பின்
வெளிவந் தின்றோர்
பிள்ளையா யவதரித்த கருணையுந்தன் மணாட்டிதவப்
பேறுந் தேறான்
பள்ளமா கடற்றானைப் பஞ்சர்கோ னெஞ்சத்துப்
பரிவு கூர்ந்தான். (23)

மகவின்றிப் பலபகல்யான் வருந்தியருந் தவம்புரிந்தேன்
மைந்தற் பேறு
தகவிந்த மகஞ்செய்தேன் அதுவுமொரு பெண்மகவைத்
தந்த தந்தோ.
முகவிந்து நிலவொழுக வருபெண்ணு முலைமூன்றாய்
முகிழ்ந்து மாற்றார்
நகவந்த தென்னேயோ வென்றுவகை யிலனாகி
நலியு மெல்லை. (24)

## மும்முலைத் தடாதகி.

மன்னவநின் றிருமகட்கு மைந்தர்போற் சடங்கனைத்தும்
வழாது வேதஞ்
சொன்னமுறை செய்துபெயர் தடாகையென் றிட்டுமுடி
சூட்டு வாயிப்
பொன்னனையா டனக்கிறைவன் வரும்பொழுதோர்
முலைமறையும்
புந்தி மாழ்கேல்
என்னவர னருளாலோர் திருவாக்கு விசும்பிடைநின்
றெழுந்த தன்றே! (25)

அவ்வாக்குச் செவிநிரம்ப வன்புவகை யகநிரம்ப
வகல மெல்லாம்
மெய்வாக்கு மனமொன்ற விழிவாக்கும் புனனிரம்ப
விமலற் போற்றி

நெய்வாக்கு மிகநிரப்பி யெழுந்துமனை யொடுஞ்சாலை
நீத்தி ரண்டு
கைவாக்கு மியங்கலிப்பக் கடிமாட மனைபுகுந்தான்
கழற்கால் வேந்தன். (26)

முரசதிர்ப்ப மங்கலங்கொண் டெதிர்வருவார் முகத்துவகை
முருவல் பூப்ப
அரசிருக்கு மண்டபம்புக் கினிதமர்ந்து கனகமழை
யான்ற கேள்வி
விரசிருக்கு மறையவர்கைப் பெய்தெவர்க்கு மம்முறையால்
வெறுப்ப நல்கிப்
பரசிருக்குங் கரதலத்தெம் பரன்கோயி லனிசிறப்புப்
பல்க நல்கா. (27)

சிறைவிடுமின் சிறைக்களமுஞ் சீத்திடுமி னேழாண்டு
தேயத் தீட்டும்
இறைவிடுமி னயல்வேந்தர் திறைவிடுமி னிறைநிதிய
மீட்டு மாயத்
துறைவிடுமி னறப்புறமு மாலயமும் பெருக்குமெனத்
தொழாரைக் காய்ந்த
கறைவிடுமின் னயில்வேலான் வள்ளுவனைக் கூய்முரசங்
கறங்கச் சாற்றி. (28)

கல்யாண மணிமௌலி வேந்தரையுங் கால்யாப்புக்
கழல நீத்துக்
கொல்யானை பரிநெடுந்தே ரரசுரிமை தொன்முறையாற்
கொடுத்துப் போக்கிப்
பல்லாருங் கொள்கவெனப் பண்டாரந் தலைதிறந்து
பசும்பொன் னாடை
வில்லாரு மணிக்கொடும்பூண் வெறுக்கைமுத லெனைப்பலவும்
வெறுப்ப வீசி. (29)

தூமரபின் வருபெருமங் கலகவிகட் கிருநிதியந்
துகில்பூண் பாய்மா
காமர்கரி [1]பரித்தடந்தேர் முதலாய பலபொருளுங்
களிப்ப நல்கிக்
கோமறுகு களிதூங்கச் சுண்ணமொடு மெண்ணெய்விழாக்
குறிப்ப நல்கி
மாமதுரா நகரன்றி மற்றுமுள நகரெங்கு
மகிழ்ச்சி தூங்க. (30)

இவ்வண்ண நகர்களிப்ப விறைமகனுங் களிப்பெய்தி
யிறைவர் சொன்ன
அவ்வண்ணஞ் சாதமுதல் வினைநிரப்பித் தடாதகையென்
றழைத்துத் தேவி
மெய்வண்ண மறையுணரா விறைவிதனை மேனைபோன்
மேனா ணோற்ற
கைவண்ணத் தளிர்தீண்டி வளர்ப்பவிம வான்போலக்
களிக்கு நாளில். (31)

திருந்தாத விளங்குதலை யாயமொடு புறம்போந்து
சிறார்க்குச் சிற்றில்
விருந்தாக மணற்சிறுசோ றட்டும்வரை யுரங்கிழித்த
வேளும் வாய்வைத்
தருந்தாத விளமுலைவாய் வைத்தருந்தப் பாவைதனக்
களித்தும் போதில்
வருந்தாதை யண்டமெலாஞ் சிற்றிலிழைப் பாளாய்க்கு
மகிழ்ச்சி செய்தாள். (32)

தீட்டுவா ளிரண்டனைய கண்களிப்பத் தோழியர்க்குத்
தெரிய வாடிக்
[2]காட்டுவா ளெனக்கழங்கு பந்துபயின் றம்மனையுங்
கற்றுப் பாசம்

1. பரிநெடுந்தேர். பா.வே. 2. காட்டுவாள் பேறுகழங்கு. பா.வே.

வீட்டுவாண் மேலொடுகீழ் தள்ளவெமை வினைக்கயிறு
வீக்கி யூசல்
ஆட்டுவாள் காட்டுதல்போ லாடினா ணித்திலத்தாம்
பசைத்த வூசல். (33)

இம்முறையாற் றாயர்க்குந் தோழியர்க்கு மகத்துவகை
யீந்தா ளாகி
அம்முறையாற் றாதைக்கு மகத்துவகை யீவாளா
யாத்த வாய்மைச்
செம்மறையா ரணமுதனா லீரெட்டுக் கலைமுழுதுந்
தெளிந்தா ளந்த
மெய்ம்மறையார் கலையனைத்து மேகலையா மருங்கசைத்த
விமலை யம்மா. (34)

சொல்வாய்மைக் கலைத்தெளிவு முழுமதியைப் பிளந்திருபாற்
சொருகி யன்ன
பல்வாய்மைக் கடகரிதேர் பரியுகைக்குந் திறனுமழற்
பகழி தூர்க்கும்
வில்வாள்வச் சிரமுதற்பல் படைத்தொழிலுங் கண்டிளமை
விழுங்கு மூப்பிற்
செல்வாய்மைத் திறலரசன் றிருமகட்கு முடிசூட்டுஞ்
செய்கை பூண்டான். (35)

**மௌலிசூட்டினது**

முடிகவிக்கு மங்கலநாள் வரையறுத்துத் திசைதோறு
முடங்கல் போக்கிக்
கடிகெழுதார் மணிமௌலிக் காவலரை வருவித்துக்
காவல் சூழ்ந்த
கொடியணிமா நகரெங்கும் விழாவெடுப்ப வழகமைத்துக்
குன்ற மன்ன
தொடிகெழுதோட் சுமதிதிரு மணத்தினுக்கு வேண்டுவன
சூழ்ந்து செய்தான். (36)

மங்கலதூ ரியமுழங்க மால்யானை யுச்சிமிசை
        வந்த பூத
கங்கைமுத லொன்பதுதீர்த் தமுநிரப்பிக் கதிர்விடுபொற்
        கடம்பூ சித்துப்
புங்கவரை மந்திரத்தீ வளர்த்தமுத மருத்தியெரி
        பொன்னாற் செய்த
சிங்கமணி யாதனத்தை நேசித்துப் பூசித்துத்
        [1]தெய்வ மேற்றி (37)

திருமுடியை மதயானை மிசைவைத்து நகரைவலஞ்
        செய்து பூசித்
தருமணியாற் சுடிகையிழைத் தாடகத்தாற் குயிற்றியதோ
        ரைவாய் நாகம்
பெருமணிநீள் படம்பரப்பி மிசைகவிப்ப வச்சிங்க
        பீடத் தேற்றிக்
குருமணிவா ணகைமயிலைக் கும்பத்துப் புண்ணியநீர்
        குளிர வாட்டி. (38)

புங்கவர்மந் தாரமழை பொழியவருந் தவராக்கம்
        புகலத் தெய்வப்
பங்கயமென் கொம்பனையா ராடமுனி பன்னியர்பல்
        லாண்டு பாட
மங்கலதூ ரியமுழங்க மறைதழங்க மாணிக்க
        மகுடஞ் சூட்டி
எங்கருணைப் பெருமாட்டிக் கரசமைச்சர் பணியுந்தன்
        னிறைமை நல்கா. (39)

பாலனைய மதிக்கவிகை மிசைநிழற்ற [2]மதிகிரணம்
        பரப்பி யன்ன
கோலமணிக் கவரிபுடை யிரட்டமலர் மழைதேவர்
        குழாங்க ணூற்றக்

........................................................................

*1. தெய்வமேத்தி. பா.வே. 2. மதிக்கிரணம். பா.வே.*

காலையிளங் கதிர்கயிலை யுதித்தெனவெண் கடாயானைக்
கழுத்தில் வேப்ப
மாலைமுடிப் பெண்ணரசை மங்கலதூ ரியமுழங்க
வலஞ்செய் வித்தான். (39)

விண்ணாடு மொழிகேட்ட மகிழ்ச்சியினுந் திருமகடன்
விளக்க நோக்கி
உண்ணாடு பெருங்களிப்புத் தலைசிறப்பச் சிலபகல்சென்
றொழிய மேனாட்
புண்ணாடு வேன்மங்கை குதுகலித்து நடிப்பத்தன்
புயமேல் வைத்த
மண்ணாடு மகட்களித்து வானாடு பெற்றானம்
மகவு பெற்றான். (40)

விரதநெறி யடைந்தீற்றுக் கடன்பிறவுந் தாதைக்கு
விதியா லாற்றி
அரதனமெல் லணைமேற்கொண் டுலகமெலா மொருகுடைக்கீ
ழாள்வா ளானாள்
சரதமறை யாய்மறையின் பொருளாய்ப் பொருண்முடிவு
தானாய்த் தேனின்
இரதமெனப் பூவின்மண மெனப்பரம னிடம்பிரியா
வெம்பி ராட்டி. (42)

வேறு

மண்ணர சிறைஞ்ச ஞால
மநுவழி புரத்து மாறன்
விண்ணர சிருக்கை யெய்தப்
பெற்றபின் விடையோ னுள்ளத்
தெண்ணர சன்ன மென்னத்
தென்னவ னீன்ற கன்னிப்
பெண்ணர சிருந்து நேமி
யுருட்டிய பெருமை சொல்வாம். (43)

இன்னிய [1]மியம்பு மாக்க
ளெழுப்பவா னிரவி தோன்றக்
கன்னலைந் தென்னப் பள்ளித்
துயிலெழீஇக் கடிநீ ராடித்
தன்னிரை மரபுக் கேற்ற
நிதியமா தான மன்பு
துன்னிய கடவுட் பூசைத்
தொழின்முத லனைத்து முற்றா. (44)

திடம்படு மறிஞர் சூழச்
சிவபரன் கோயின் முன்னிக்
கடம்படி முளைத்த முக்கட்
கரும்பினை மறைவண் டார்க்கும்
விடம்பொதி [2]கண்டத் தேனை
விதிமுறை வணங்கி மீண்டு
குடம்பயில் குடுமிச் செம்பொற்
குருமணிக் கோயி னண்ணி. (45)

அரசிறை கொள்ளுஞ் செம்பொ
னத்தாணி யிருக்கை யெய்தி
நிரைசெறி மடங்க லாறு
முடங்கின நிமிர்ந்து தாங்க
விரைசெறி மலர்மீப் பெய்த
வியன்மணித் தவிசின் மேவித்
திரைசெறி யமுதிற் செய்த
பாவைபோற் சிறந்து மாதோ. (46)

அனிந்திதை யமுதின் சாயற்
கமலினி யணங்குங் காதல்
கனிந்தபார் மகளி ராய்வந்
தடைப்பைபொற் களாஞ்சி யேந்த

........................................................................

1. மியக்குமாக்கள். பா.வே. 2. கண்டத்தோனை. பா.வே.

இனந்திரி பதுமக் கோயி
லிருவரு மனைய ராகிப்
புனைந்தவெண் கவரிக் கற்றை
யிருபுடை புரட்டி வீச. (47)

செடியுட லெயினச் செல்வன்
சென்னிமேற் சுமந்து சாத்துங்
கடியவிழ் மலரிற் பொன்னிக்
காவலன் குடக்கோ னேனை
முடிகெழு வேந்த ருள்ளார்
முடிமிசை மிலைந்த தாமம். (48)

வையுடை வாள ராகி
மார்புறப் பின்னி யார்த்த
கையின ராகி யன்னை
யென்றுதன் கருணை [1]நோக்கஞ்
செய்யுமென் [2]றிமையார் நோக்கி
நோக்குமேற் செங்கை கூப்பி
உய்குந மெனவாய் பொத்தி
யுழையர்தம் பணிகேட் டுய்ய. (49)

ஆங்கவன் மராடர் வேந்த
னவன்கரு நாடர் வேந்தன்
ஈங்கிவன் விராடர் வேந்த
னிவன்குரு நாடர் வேந்தன்
ஊங்குவன் சேரன் சென்னி
யுவனெனக் கோலாற் கட்டிப்
பாங்கிரு மருங்குங் காட்டக்
கஞ்சுகப் படிவ மாக்கள். (56)

செந்தமிழ் வடநூ லெல்லை
தெரிந்தவர் மறைநூ லாதி

1. நாட்டஞ். பா.வே; 2. றிமையா. பா.வே.

அந்தமி லெண்ணெண் கேள்வி
யளந்தவர் சமய மாறும்
வந்தவர் துறந்தோர் சைவ
மாதவர் போத மாண்ட
சிந்தனை யுணர்வான் மாயை
வலிகெடச் செற்ற வீரர். (51)

முன்னிருந் தினிய தேற்று
மூத்தவ ரெண்ணி யெண்ணிப்
பன்னுமைந் துறுப்பிற் கால
மளந்தறி பனுவன் மாந்தர்
பின்னுமுன் னோக்குஞ் சூழ்ச்சிப்
பெருந்தகைச் சுமதி யோடும்
இன்னமு தனைய கேள்வி
மந்திரர் யாருஞ் சூழ. (52)

கற்றறி யந்த ணாளர்
விருத்திகள் கடவுட் டானத்
தற்றமில் பூசைச் செல்வ
மறப்புற நடக்கை யேனைச்
செற்றமில் குடிகண் மற்று
மமைச்சராற் றெளிந்தும் வெவ்வே
றெட்டுவிட் டுணர்த்தும் வேறு
குறையுண்டே லொறுத்துத் தீர்த்தும். (53)

ஆதியுத் தேசத் தானு
மிலக்கண வமைதி யானுஞ்
சோதனை வகைமை யானுஞ்
சொன்னநூ லனுவாதித்து
நீதியி னவற்றாற் கண்டித்
தவ்வழி நிறுத்தித் தம்மில்
வாதிகள் வாதஞ் செய்யுங்
கோட்டிமேன் மகிழ்ச்சி கூர்ந்தும். (54)

பையுள பகுவாய் நாகப்
பள்ளியோ னாதி வானோர்
கையுள வலியா லட்ட
கடலமு தனைத்தும் வாரிப்
பொய்யுள மகலக் கற்ற
புனிதநூற் புலவர் நாவிற்
செய்யுளின் விளைவித் தூட்டத்
திருச்செவி தெவிட்ட வுண்டும். (55)

தொல்லைநான் மறையோர் சைவர்
துறந்தவர் யார்க்கு மின்பம்
புல்லவா னதுமுங் கைப்பப்
பாகநூற் புலவ ரட்ட
முல்லைவான் முகையி னன்ன
வறுசுவை முறியா மூரல்
நல்லுவூ ணருத்தி யன்னார்
நாலிருந் தமுது செய்தும். (56)

எல்லவ னுச்சி நீந்து
மெல்லையி னான்கு மாறும்
வல்லவர் சூத னோதி
வகுத்தமூ வாறு கேள்வி
சொல்லவுண் மலர்ந்து மேனை
மநுமுதற் றுறைமாண் கேள்வி
நல்லன நயந்து கேட்டு
நன்பகற் போது நீத்தும். (57)

கலைக்குரை விரிப்பா ரென்ன
வறுமையிற் கல்வி போலப்
புலப்படா மருந்து னல்லா
ரெந்திரப் புலவன் பூட்டி
அலைத்திடு பாவை போனின்
றாடல்செய் யாடற் கண்ணும்
நலத்தகு பாடற் கண்ணு
நல்லரு ணாட்டஞ் செய்தும் (58)

இன்னிலை யொழுகுந் தொல்லோ
ரியற்றிய தருமம் வேறும்
அந்நிலை நிறுத்தும் வேள்வி
யறம்பல வாக்கஞ் செய்ய
நன்னிதி யளித்தும் வேள்வி
நடாத்தியுஞ் செல்வங் கல்வி
தன்னிரு கண்க ளாகத்
தழைத்திட வளர்க்கு நாளும். (59)

ஒப்புரு முதலீ றில்லா
வொருத்திதன் சத்தி பெற்ற
முப்பெருந் தேவ ராலே
முத்தொழி னடாத்து மென்று
செப்பலும் புகழன் றென்னிற்
றென்னவன் கன்னி யாகி
இப்புவி மனுவிற் காக்கு
மென்பதென் பேதை மைத்தே! (60)

வேறு

வரைசெய் பூண்முலைத் தடாதகை
மடவரற் பிராட்டி
விரைசெய் தார்முடி வேய்ந்துதண்
குடைமனு வேந்தன்
கரைசெய் நூல்வழி கோல்செலக்
கன்னியாம் பருவத்
தரசு செய்தலாற் கன்னிநா
டாயதந் நாடு. (61)

இன்ன வாறுமை யவதரித்
திருந்தன ளென்னாப்
பொன்ன வாவினர் பெறவெறி
பொருநைகால் பொருப்பன்
சொன்ன வாய்மைகேட் டகங்களி
தூங்கினர் தொழுது

மின்னு வார்சடை முனிவரோர்
வினாவுரை செய்வார். (62)

திருந்து நான்மறைச் சென்னியுந்
தீண்டுதற் கரிதாய்
இருந்த நாயகி யாவையு
மீன்றவெம் பிராட்டி
விரிந்த வன்புகூர் தக்கனும்
வெற்பனும் பன்னாள்
வருந்தி நோற்றலா லவர்க்கொரு
மதலையாய் வந்தாள். (63)

மனித்த னாகிய பூழியன்
மகளென வீங்குத்
தனித்த காரணம் யாதெனத்
தமனியப் பொதுவிற்
குனித்த சேவடிக் கன்புடைக்
குடமுனி யருள்கூர்ந்
தினித்த தோர்கதை கேண்மினென்
றெடுத்துரை செய்வான். (64)

விச்சு வாவசு வெனுமொரு
விச்சையன் பயந்த
நச்சு வாள்விழி மடந்தைவிச்
சாவதி நாமம்
அச்சு வாகத மொழியினா
ளம்பிகைக் கன்பு
வைச்சு வாழ்வுறு மனத்தினா
டாதையை வணங்கா. (65)

ஐய வம்பிகை தன்னையா
னன்பினால் வழிபட்
டுய்ய வேண்டுமென் றாளவ
னுலகெலாம் பயந்த

தையல் மந்திரந் தனைமக
டனக்குப தேசஞ்
செய்ய வந்நெறி யொழுகுவான்
செப்புவாள் பின்னும். (66)

இறைவி தன்னையா தரிப்பதற்
கிம்பரிற் சிறந்த
குறைவி னன்னகர் யாதெனக்
கூறுவான் கேள்வித்
துறைவி ளங்கினோர் பயில்வது
துவாதச முடிவென்
றறைவ னம்பதி யவனிமேற்
சிவபுர மாமால். (67)

சேடு தாங்குமூ வுலகினுட்
சிறந்தன சத்தி
பீட மூவிரு பத்துநான்
கவற்றின்முற் பீடம்
மாட மோங்கிய மதுரையா
மற்றது போகம்
வீடும் வேண்டிய சித்தியும்
விளைப்பதென் றெண்ணா. (68)

அல்லு மெல்லும்வா னகர்க்கத
வடைப்பின்றிச் சுவர்க்கச்
செல்வ ரங்கடைந் துமையருள்
சித்தியால் வினையை
வெல்லு வாரதான் றெந்தையோ
டைவர்கள் வேண்டி
நல்வ ரம்பல வடைந்தனர்
நமர்களந் நகரில். (69)

எம்மை யாரையும் யாவையு
மீன்றவங் கயற்கண்

அம்மை யாவரே யாயினு
மன்பினா தரிப்போர்
இம்மை யாகிய போகம்வீ
டெண்ணியாங் கெய்தச்
செம்மை யாகிய வின்னருள்
செய்துவீற் றிருக்கும். (70)

என்ற தாதையை யிறைஞ்சினா
[1]ளனுச்சைகொண் டெழுந்தாள்
மன்றன் மாமலர் வில்லிபோல்
வழிக்கொடு கானங்
குன்ற மாறுபின் கிடப்பமுன்
குறுகினா ளன்பின்
நின்ற வாதியெம் பரையரு
ணிறைந்தவந் நகரில் (71)

அடைந்தி ளம்பிடி யாடல்போ
லாடக கமலங்
குடைந்து நான்மறைக் கொழுந்திடங்
கொண்டுறை குறிப்பாற்
படர்ந்த பொன்மலை வல்லியைப்
பணிந்துவெங் கதிரோன்
தொடர்ந்த வான்சுறா மதியமே
யாதியாத் தொடங்கா. (72)

வேறு

பெரும்பக னல்லூண் கங்குலூ ணுதவப்
பெற்றவூ ணிலைமுதற் பல்லூண்
அரும்பொடி யெள்ளுண் சாந்திரா யணமா
னைந்துபா னறியநீர் தருப்பை
இரும்புத னுனிநீர் காலிவை நுகர்ந்து
மியற்றரும் பட்டினி யுற்றும்

1. அறுவை. பா.வே.

வரம்புற விராறு திங்களு நோற்று
வாடிமேல் வருஞ்சுறா மதியில். (73)

சந்நிதி யடைந்து தாழுந்துநின் றிளமாந்
தளிரடிக் காஞ்சிசூழ் கிடந்த
மின்னிகர் மருங்கு லிழையிடை நுழையா
வெம்முலைச் செம்மலர்க் காந்தட்
பொன்னிரை வளைக்கை மங்கலக் கழுத்திற்
பூரண மதிக்கலை முகத்தின்
இன்னிசை யளிசூ ழிருட்குழற் கற்றை
யிறைவியை யிம்முறை நினையா. (74)

கோலயாழ்த் தெய்வம் பராய்க்கரங் குவித்துக்
கொழுஞ்சுடர்ப் பசுங்கதிர் விளக்கம்
போலநூற் பெல்லாம் பொத்துபொன் னிறத்து
போர்வைநீத் தவிழ்கடி முல்லை
மாலைமேல் வீக்கிப் பத்தர்பின் கிடப்ப
மலர்க்குழ றோய்சுவற் கிடத்திச்
சேலைநேர் விழியாண் மாடகந் திரித்துத்
தெறித்தனள் பண்ணறிந் திசைப்பாள். (75)

வேறு

ஒளியா லுலகீன் றுயிரனைத்து
மீன்போற் செவ்வி யுறநோக்கி
அளியால் வளர்க்கு மங்கயற்க
ணன்னே கன்னி யன்னமே
அளியா லிமவான் றிருமகளா
யாவி யன்ன மயில்பூவை
தெளியா மழலைக் கிளிவளர்த்து
விளையாட் டயருஞ் செயலென்னே! (76)

அண்டக் குவைவெண் மணற்சிறுசோ
றாக்கித் தனியே விளையாடுங்
கொண்டற் கோதாய் படியெழுத
லாகா வுருவக் கோகிலமே

கொண்டற் குடுமி யிமயவரை
யருவி கொழிக்குங் குளிர்முத்தால்
வண்டற் குதலை மகளிரொடும்
விளையாட் டயரும் வனப்பென்னே. (77)

வேத முடிமே லானந்த
வுருவாய் நிறைந்து விளையாடும்
மாத ரரசே முத்தநகை
மானே யிமய மடமயிலே
மாத விமவான் றேவிமணி
வடந்தோய் மார்பூந் தடந்தோளும்
பாத மலர்சேப் புறமிதித்து
விளையாட் டயரும் பரிசென்னே. (78)

வேறு

யாழியன் [1]மொழியா லிவ்வழி பாடி
யேத்தினா ளாகமெய் யுள்ளத்
தாழிய வன்பின் வலைப்படு கருணை
யங்கடற் கண்மட மானோர்
சூழிய நுழைமெய் லிளங்குழற் குதலைத்
தொண்டைவா யகவேழுன் றெய்தி
வாழிளங் குழவி யாகியா லயத்து
வந்துநின் றாள்வரங் கொடுப்பாள். (79)

இறைஞ்சியஞ் சலித்தா டன்னையெம் மன்னை
யாதுவேண் டினை வென்றும்
நிறைந்தபே ரன்பு நின்னடிப் போதி
னீங்கலா நிலைமைதந் தருளென்
றறைந்தன ளின்னும் வேண்டுவ தேதென்
றருளவிம் மகவுரு வாகிச்
சிறந்துவந் தென்பா லருள்சுரந் திருக்கத்
திருவுளஞ் செய்யெனப் பணிந்தாள். (80)

---

1. மொழியாள். பா.வே.

சிவபரம் பரையு மதற்குநேர்ந் தருள்வா
டென்னவர் மன்னனாய் மலயத்
துவசனென் றொருவன் வருமவன் கற்பின்
றுணைவியாய் வருதியப் போதுன்
தவமக வாக வருவலென் றன்பு
தந்தனள் வந்தவா றிதுவென்
றுவமையில் பொதியத் தமிழ்முனி முனிவர்க்
கோதினா னுள்ளவா றுணர்ந்தார். (81)

நான்காவது தடாதகைப் பிராட்டியார்
திருஅவதாரப் படல முற்றும்.
ஆகத் திருவிருத்தம் - 597.

ஐந்தாவது
**திருமணப் படலம்**

தரைபுகழ் தென்னன் செல்வத்
தடாதகைப் பிராட்டி தானே
திரைசெய்நீர் ஞாலங் காத்த
செயல்சிறி துரைத்தேன் றெய்வ
விரைசெய்பூங் கோதை மாதை
விடையவன் மணந்து பாராண்
டரசுசெய் திருந்த தோற்ற
மறிந்தவா றியம்ப லுற்றேன்.

காயிரும் பரிதிப் புத்தேள்
கலியிரு டுமியச் சோதி
பாயிருங் குடைவெண் டிங்கட்
படரொளி நீழல் செய்ய
மாயிரும் புவன மெல்லா
மனுமுறை யுலக மீன்ற

தாயிளங் குழவி யாகித்
தனி[1]யர சளிக்கு நாளில். (2)

மருங்குறேய்ந் தொளிப்பச் செம்பொன்
வனமுலை யிறுமாப் பெய்தக்
கருங்குழற் கற்றை பானாட்
கங்குலை வெளிறு செய்ய
இரங்குநல் யாழ்மென் றீஞ்சொ
லின்னகை யெம்பி ராட்டிக்
கருங்கடி மன்றல் செய்யுஞ்
செவ்விவந் தடுத்த தாக. (3)

பனிதரு மதிக்கொம் பன்ன
பாவையைப் பயந்தா ணோக்கிக்
குனிதர நிறையப் பூத்த
கொம்பனாய்க் கின்னுங் கன்னி
கனிதரு செவ்வித் தாயுங்
கடிமணப் பேறின் றென்னாத்
துனிதரு நீர ளாகிச்
சொல்லினாள் சொல்லக் கேட்டாள். (4)

அன்னைநீ நினைந்த வெண்ண
மாம்பொழு தாகும் வேறு
பின்னைநீ யிரங்கல் யான்போய்த்
திசைகளும் பெருநீர் வைப்பும்
என்னது கொற்ற நாட்டி
[1]மீள்வலிங் கிருத்தி யென்னாப்
பொன்னவிர் மலர்க்கொம் பன்னாள்
பொருக்கென வெழுந்து [2]போனாள். (5)

தேம்பரி கோதை மாதின்
திருவுளச் செய்தி நோக்கி
ஆம்பரி சுணர்ந்த வேந்த
ரமைச்சரும் பிறரும் போந்தார்

1. யரசிருக்கு நாளில் பா.வே. 2. மீண்டுவலிருத்தி. பா.வே. 3. போந்தாள். பா.வே.

வாம்பரி கடாவித் திண்டேர்
வலவனுங் கொணர்ந்தான் வையந்
தாம்பரி வகல வந்தா
ளேறினாள் சங்க மார்ப்ப. (6)

**வாத்தியங்கள் விபரம்**

ஆர்த்தன தடாரி பேரி
யார்த்தன முருடு மொந்தை
ஆர்த்தன வுடுக்கை தக்கை
யார்த்தன படகம் பம்பை
ஆர்த்தன முழவந் தட்டை
யார்த்தன சின்னந் தாரை
ஆர்த்தன காளந் தாள
மார்த்தன திசைக ளெங்கும். (7)

வீங்கி கொங்கை யார்த்த
கச்சினர் விழிபோற் றைப்ப
வாங்கிய சிலையே றிட்ட
கணையினர் வட்டத் தோல்வாள்
தாங்கிய கையர் வைவேற்
றளிர்க்கையர் பிணாத்தெய் வம்போல்
ஓங்கிய வாயத் தாரு
மேறினா ருடனத் திண்டேர். (8)

கிடைப்பன வுருளாற் பாரைக்
கீண்டுபா தலத்தி னெல்லை
அடைப்பன பரந்த தட்டா
லடையவான் றிசைக ளெட்டும்
உடைப்பன வண்ட முட்டி
யொற்றிவான் கங்கை நீரைத்
துடைப்பன கொடியாற் சாரி
சுற்றுவ பொற்றிண் டேர்கள். (9)

செருவின்மா தண்டந் தாங்கிச்
செல்லும்வெங் கூற்ற மென்ன
அருவிமா மதநீர் கால
வரத்தவெங் குருதிக் கோட்டாற்
கருவிவான் வயிறு கீண்டு
கவிழுநீர் வாயங் காந்து
பருகிமால் வரைபோற் செல்வ
பரூஉப்பெருந் தடக்கை யானை. (10)

ஒலியவார் திரையி னன்ன
வொழுங்கின யோக மாக்கள்
வலியகா லடக்கிச் செல்லு
மனமெனக் கதியிற் செல்வ
கலியநீர் ஞாலங் காப்பான்
கடையுக முடிவிற் றோற்றம்
பொலியும்வாம் புரவி யொன்றே
போல்வன புரவி வெள்ளம். (11)

காலினுங் கடிது செல்லுஞ்
செலவினர் கடுங்கட் கூற்ற
மேலினு மிகையுண் டாயின்
வெகுண்டுவெந் கண்டு மீளும்
பாலினர் பகுவாய் நாகப்
பல்லினும் பில்கு மால
வேலினர் வீயா வென்றி
வீக்கிய கழற்கால் வீரர். (12)

எண்புதைத் தெழுந்த வீர
ரிவுளதேர் யானை வெள்ளம்
மண்புதைத் தனப தாகை
மாலைவெண் கவிகை பீலி
விண்புதைத் தனநுண் டூளி
வெயில்விடு பரிதிப் புத்தேள்

கண்புதைத் தனபே ரோதை
கடலொலி புதைத்த தன்றே. (13)

தேரொலி கலினப் [1]பாய்மான்
செலவொலி கொலைவெண் கோட்டுக்
காரொலி வீர ரார்க்குங்
கனையொலி, புனைதார்க் குஞ்சி
வாரொலி கழற்காற் செங்கண்
மள்ளர்வன் றிண்டோள் கொட்டும்
பேரொலி யண்ட மெல்லாம்
பிளந்திடப் பெருத்த வன்றே. (14)

பரந்தெழு பூழி போர்ப்பப்
பகலவன் மறைந்து முந்நீர்
கரந்தவன் போன்றா னாகக்
கங்குல்வந் திறுத்த தேய்ப்பச்
சுரத்திரு ணிறைய முத்தின்
சோதிவெண் குடையும் வேந்தர்
நிரந்தபூண் வயிர வாளு
நிறைநிலா வெறிக்கு மன்றோ. (15)

தேர்நிறை கலனாய்ச் செல்லப்
பரிநிரை திரையாய்த் துள்ள
வார்முர சொலியாய்க் கல்ல
வாட்கலன் மீனாய்க் கொட்பத்
தார்நிரை கவரிக் காடு
நுரைகளாய்த் ததும்ப வேழங்
கார்நிரை யாகத் தானைக்
கடல்வழிக் கொண்ட தன்றோ! (16)

கள்ளவிழ் கோதை மாத
ரெடுத்தெறி கவரிக் காடு
துள்ளவந் தணர்வா யாகி
யொருபுறந் துவன்றி யார்ப்பத்

1. பாய்மாச்செலவொலி. பா.வே.

தெள்விளி யமுத கீத
மொருபுறந் திரண்டு விம்ம
வள்ளைவார் குழையெம் மன்னை
மணித்திண்டேர் நடந்த தன்றே. (17)

மீனவன் கொடியுங் கான
வெம்புலிக் கொடியுஞ் செம்பொன்
மானவிற் கொடியும் வண்ண
மயிற்றழைக் காடுந் தோட்டுப்
பானலங் கருங்கட் செவ்வாய்
வெண்ணகைப் பசுந்தோ ணிம்பத்
தேனலம் பலங்கல் வேய்ந்த
செல்விதேர் மருங்கிற் செல்ல. (18)

மறைபல முகங்கொண் டேத்தி
வாய்தடு மாறி யெய்பப்
நிறைபரம் பரைநீ யெங்க
ணிருபர்கோன் மகளாய் வையம்
முறைசெய்து மாசு தீர்ப்பா
யடியனேன் முகத்து மாசுங்
குறையன நிழற்றுந் திங்கட்
கொள்கைபோற் கவிகை காப்ப. (19)

அங்கய னோக்கி மான்றேர்க்
கணித்தொரு தடந்தே ரூர்ந்து
வெங்கதிர் வியாழச் சூழ்ச்சி
மேம்படு சுமதி யென்போன்
நங்கைதன் குறிப்பு நோக்கி
நாற்பெரும் படையுஞ் செல்லச்
செங்கையிற் பிரம்பு நீட்டிச்
சேவகம் செலுத்திச் செல்ல. (20)

அலகினாற் கருவிச் சேனை
　　யாழ்கட லனைத்துங் தன்போல்
மலர்தலை யுலக மன்றி
　　மகபதி யுலக மாதி
உலகமும் பிறவுஞ் செல்ல
　　வுலப்பிலா [1]வலிய தாக்கித்
திலகவா ணுதலாண் மன்னர்
　　திருவெலாங் கவரச் செல்வாள். (21)

கயபதி யாதி யாய
　　வடபுலக் காவல் வேந்தர்
புயவலி யடங்க வென்று
　　புழைக்கைமான் புரவி மான்றேர்
பயன்மதி நுதல்வே லுண்கட்
　　பாவைய ராய மோடு
நயமலி திறையுங் கொண்டு
　　திசையின்மே னாட்டம் வைத்தாள். (22)

வார்கழல் வலவன் றேரை
　　வலியகா லுதைப்ப முந்நீர்
ஊர்கல னொப்பத் தூண்ட
　　வும்பர்கோ னனிகத் தெய்திப்
போர்விளை யாடு முன்னர்ப்
　　புரந்தரன் மிலைந்த தும்பைத்
தார்விழ வாற்றல் சிந்தத்
　　தருக்கழிந் தகன்று போனான். (23)

இழையிடை நுழையா வண்ண
　　மிடையிற வீங்கு கொங்கைக்
குழையிடை நடந்து மீளுங்
　　கொலைக்கணார் குழுவுந் தான
மழைகவிழ் கடாத்து வெள்ளை
　　வாரண மாவுங் கோவுந்

1. வலியவாக்கத். பா.வே.

தழைகதிர் மணியுந் தெய்வ
தருக்களுங் கவர்ந்து மீண்டாள். (24)

வேறு

இவ்வா றுமற்றைத் [1]திசைகாவலர் யாரை யும்போய்த்
தெவ்வாண் மைசிந்தச் செருச்செய்து திரையுங் கைக்கொண்
டவ்வா றுவெல்வா ளெனமூன்றர ணட்ட மேருக்
கைவார் சிலையால் கயிலைக்கிரி நோக்கிச் செல்வாள். (25)

சலிக்கும் புரவித் தடந்தேருடைத் தம்பி ராட்டி
கலிக்கும் பலதூ ரியங்கைவரை தெய்வத் திண்டேர்
வலிக்கும் பரிமள் ளர்வழங்கொலி வாங்கி நேரே
ஒலிக்கும் படிகிட் டினளூழிதோ றோங்கு மோங்கல். (26)

வானார் கயிலை மலையான்மக டன்னை நீத்துப்
போனாள் வந்தாளென் றருவிக்கட் புனலுக் கந்நீர்
ஆனா வொலியா லனைவாவென் றழைஇத்தன் றேசு
[2]தானா நகையாற் றழீஇயெதி ரேற்பச் சென்றாள். (27)

கிட்டிப் பொருப்பைக் கிரியோடு கிரிக டாக்கி
முட்டிப் பொருதா லெனவேழ முழங்கிப் பாயப்
புட்டிற் புறத்தார் மறத்தார்கணை பூட்டு வில்லார்
வட்டித் துருமே ரெனவார்த்து வளைந்து கொண்டார். (28)

ஓடித் திருமா மலைகாவல ரும்ப ரார்க்கும்
நாடிப் பணிதற் கரிதாகிய நந்தி பாதங்
கூடிப் பணிந்தித் திறங்கூறலுங் கொற்ற வேனந்
தேடிக் கிடையா னுளந்தேர்ந்தன னந்தி யெந்தை. (29)

வென்றிக் கணத்தை விடுவித்தான் [3]கனன்மீது பெய்த
குன்றிக் கணம்போற் சுழல்கண்ணழல் கொப்ப ளிப்பச்
சென்றிக் கனைய மொழியாள்பெருஞ் சேனை யோடும்
ஒன்றிக் கடலுங் கடலும்பொரு தொத்த தன்றே. (30)

1. திசைக்காவல். பா.வே. 2. தானானகையால். பா.வே. 3. கனமீது. பா.வே.

சூலங் கண்மழுப் படைதோமர நேமி பிண்டி
பாலங் கள்கழுக் கடைவாட்படை தண்ட நாஞ்சில்
ஆலங் கவிழ்க்கின் றவயிற்படை வீசி யூழிக்
காலங் கலிக்குங் கடல்போன்ற களம ரார்ப்பு. (31)

எறிகின் றனவோச் சுவவெய்வன வாதி யாகச்
செறிகின் றனபல் படைசெந்நிறப் புண்ணீர் மூழ்கிப்
பறிகின் றனவும் பிழைக்கின்றனவும் பட்டுத் தாக்கி
முறிகின்றனவு முயன்றார்வினைப் போக மொத்த. (32)

தெரிசிக் கவந்த சிலதேவர் சிறைப்பு ளூர்தி
வெருவிப் பரந்த வொழிந்தோர்விலங் கூர்தி மானங்;
கருவிப் படையாற் சிதைபட்டன கால னூர்தி
குருதிப் புனலுக் கதுகொற்றவை யுண்ட தென்ன. (33)

பொருகின் றதுகண் டுவிச்சாதரர் போகம் வீடு
தருகின்ற வனைத் தொழவானெறி சார்ந்து நேரே
வருகின் றவர்வே றுவழிக்கொடு போவ ரன்புக்
குருகின் றளிர்மெல் லடியாரொடு மூற்ற மஞ்சா. (34)

திங்கட் படைசெங் கதிரோன்படை சீற்ற மேற்ற
அங்கிப் படைதீம் புனலான்படை நார சிங்க
துங்கப் படைசிம் புணெடும்படை சூறைச் செல்வன்
வெங்கட் படைபன் னகவெம்படை மாறி விட்டார். (35)

கொட்புற் றமரா டுமிக்கொள்கையர் தம்மி னந்தி
நட்புற் றவர்கைப் படைதூட்பட ஞான மூர்த்தி
பெட்புற் றருள வருமெங்கள் பிராட்டி வெய்ய
கட்புற் றரவிற் கணைமாரிக டூற்றி நின்றாள். (36)

கையிற் படையற் றனர்கற்படை தொட்டு வீரர்
மெய்யிற் படுகென் றுவிடுக்குமுன் வீரர் கன்னி
பொய்யிற் படுநெஞ் சுடையார்தவம் போல மாய
நெய்யிற் படுவச் சிரவேலைநி மிர்த்து வீசி. (37)

## தண்டங்கொடு தாக்கினள் சாய்ந்தவர்

துண்டம் படவே துணித்தக்கண வீரர் தம்மைத்
தண்டங் கொடுதாக் கினள்சாய்ந்தவர் சாம்பிப் போனார்
அண்டங் கள்சரா சரம்யாவையுந் தானே யாக்கிக்
கொண்டெங் குநின்றாள் வலிகூறிவ ரம்பிற் றாமோ. (38)

படையற் றுவிமானமும் பற்றற வற்றுச் சுற்றுந்
தொடையற் றிகள்மூண் டெழுதோள்வலி யற்றுச் செற்றம்
இடையற் றுவீர நகையற்றட லேறு போலும்
நடையற் றடைவார் நிலைகண்டன னந்தி யண்ணல். (39)

உடையா னடிதாழ்ந் திவையோதலு மோத நீத்தச்
சடையா னிளவா ணகைசெய்து தருமச் செங்கண்
விடையான் சிலையா னகல்வென்றி விளைக்குந் தெய்வப்
படையா னெழுந்தா னமராடிய பாரிற் சென்றான். (40)

வேறு

மேவி யாகவப் பாரிடைப்
பாரிட வீரரை யமராடி
ஓவி லாவலி கவர்ந்தது
மன்றினி யுருத்தெவ ரெதிர்ந்தாலுந்
தாவி லாவலி கவரவு
மடங்கலின் றனிப்பிணா வெனநிற்குந்
தேவி யார்திரு வுருவமுஞ்
சேவகச் செய்கையு மெதிர்கண்டான். (41)

வேறு

ஒற்றை வார்கழற் சரணமும்
பாம்பசைத் துடுத்தவெம் புலித்தோலும்
கொற்ற வாண்மழுக் கரமும்வெண்
ணீறணி கோலமுந் நூன்மார்புங்
கற்றை வேணியுந் தன்னையே
நோக்கிய கருணைசெய் திருநோக்கும்

பெற்ற தன்வலப் பாதியைத்
தடாதகைப் பிராட்டியு மெதிர்கண்டாள். (42)

கண்ட வெல்லையி லொருமுலை
மறைந்தது கருத்தினாண் மடனச்சங்
கொண்ட மைந்திடக் குனிதர
மலர்ந்தபூங் கொம்பரி னொசிந்தொல்கிப்
பண்டை யன்புவந் திறைகொளக்
கருங்குழற் பாரமும் பிடர்தாழக்
கெண்டை யுண்கணும் புறவடி
நோக்கமண் கிளைத்துமின் னெனநின்றாள்.(43)

நின்ற மென்கொடிக் ககல்விசும்
பிடையர னிகழ்த்திய திருமாற்றம்
அன்ற றிந்தமூ தறிவனாஞ்
[1]சுமதிசீ றடிபணிந் தன்னாயிக்
கொன்றை யஞ்சடைக் குழகனே
நின்மணக் குழகனென் றலுமன்பு
துன்ற நின்றவட் பார்த்தருட்
சிவபரஞ் சோதிமற் றிதுகூறும். (44)

என்று தொட்டுநீ திசையின்மேற்
சயங்குறித் தெழுந்துபோந் தனையாமும்
அன்று தொட்டுநம் மதுரைவிட்
டுனைவிடா தடுத்துவந் தனமுன்னைத்
தொன்று தொட்டநான் மறையுரை
வழிவரு சோமவா ரத்தோரை
நன்று தொட்டநாண் மணஞ்செய
வருதுநின் னகர்க்குநீ யேகென்றான். (45)

என்ற நாதன்மே லன்பையு
முயிரையு மிருத்தியா யஞ்சூழக்

1. சுமதி சென்றடி. பா.பே.

குன்ற மன்னதேர் மேற்கொடு
 தூரியங் குரைகட லெனவார்ப்ப
நின்ற தெய்வமால் வரைகளும்
 புண்ணிய நீததமு நீத்தேகி
மன்றன் மாமது ராபுரி
 யடைந்தனள் மதிக்குல விளக்கன்னாள். (46)

மங்கை நாயகி மங்கல
 மெதிர்கொள வந்துவா னிழிசெல்வம்
பொங்கு மாளிகை புகுந்தன
 ளாகமேற் புதுமணத் திறந்தீட்டி
எங்கு மோலையுய்த் தமைச்சர்மங்
 கலவினைக் கியைவன வமைக்கின்றார்
அங்கண் மாநக ரெங்கணுங்
 கடிமுர சானைமே லறைவித்தார். (47)

வேறு

கன்னிதன் மணமுர சறைதலுங்
 கடிநக ருறைபவர் கரைகெடத்
துன்னிய வுவகையர் கடவுளைத்
 தொழுகைய ருடல முகிழ்ப்பெழப்
பன்னிய துதியின ரியலெழின்
 மகளிரை யழகுசெய் பரிசென
இன்னிய லெழில்வள நகரெலாஞ்
 செயல்வினை யணிபெற வெழில்செய்வார்.(48)

கோதையோ டும்பரி சந்தனக்
 குப்பை களைந்தனர் வீசுவார்
சீதள மென்பனி நீர்கடுய்ச்
 சிந்தின பூழி யடக்குவார்
மாதரு மைந்தரு மிறைமகண்
 மன்றல் மகிழ்ச்சி மயக்கினாற்
காதணி குழைதொடி கண்டிகை
 கழல்வன தெரிகிலர் தொழில்செய்வார். (49)

மங்கல மென்றென வினவுவார்
வருமதி நாளென வுரைசெய்வார்
தங்களை யொல்லை தழீஇக்கொள்வார்
தாங்கரு மோகை தலைக்கொள்வார்
திங்களி னெல்லையு மாறுநா
ளாறுக மென்று செலுத்துவார்
நங்கைய ருங்கடி காணவோ
துடித்தன தோள்க ணமக்கென்பார். (50)

பித்திகை வெள்ளை புதுக்குவார்
பெட்புறு வார்களும் பெட்புறச்
சித்திர பந்தி நிறுத்துவார்
தெற்றிகள் குங்கும நீவுவார்
வித்திய பாலிகை மென்றழை
விரிதலை நீர்நிறை பொற்குடம்
பத்தியின் வேதி நிரப்புவார்
தோரணம் வாயில் பரப்புவார். (51)

நீளிடை மணிமறு கெங்கணு
நெடுநடைக் காவண நாட்டுவார்
பாளைகொள் கமுகு சுவைக்கழை
பழுக்குலை வாழை யொழுக்குவார்
கோளிறை கொண்டென வாடிகள்
கோத்தணி வார்மிசை கொடிநிரை
வாளரி யெழுபரி யடிபட
மத்திகை நிரையென வைப்பரால். (52)

பூவொடு தண்பனி சிந்துவார்
பொரியொடு பொற்சுணம் வீசுவார்
பாவை விளக்கு நிறுத்துவார்
பைந்தொடை பந்தரி னாற்றுவார்
ஆவண மென்ன வயிர்ப்புற
வணிமறு கெங்கணு மரதனக்
கோவையு மரகத மாலையுங்
கோப்பமை யாரமுந் தூக்குவார். (53)

அடுகரி சிந்துர மப்புவா
ரழன்மணி யோடை மிலைச்சுவார்
கடுநடை யுவுளி கழுத்தணி
காலணி கலனை திருத்துவார்
சுடர்விடு தேர்பரி பூட்டுவார்
தொடையொடு கவரிக டூக்குவார்
வடுவறு பொற்கல நவமணி
மங்கல தீப மயிற்றுவார். (54)

பழையன கலனை வெறுப்பராற்
புதியன பணிகள் பரிப்பராற்
குழைபனி நீரளை குங்குமங்
குவிமுலை புதைபட மெழுகுவார்
மெழுகிய வீரம் புலர்த்துவார்
விரைபடு கலவைக ளப்புவார்
அழகிய கண்ணடி நோக்குவார்
மைந்தரை யாகுல மாக்குவார். (55)

அஞ்சனம் வேல்விழி தீட்டுவா
ராடவர் மார்பிடை நாட்டுவார்
பஞ்சுகள் பாத மிருத்துவார்
பரிபுர மீது திருத்துவார்
வஞ்சியர் தேற லருந்துவார்
மருங்கு றளாட வருந்துவார்
கொஞ்சிய கனிமொழி கழறுவார்
குழுவொடு குரவைகள் குழறுவார். (56)

கின்னர மிதுன மெனச்செல்வார்
கிளைகெழு பாணொடு விறலியர்
கன்னிய ரரசை வணங்குவார்
கடிமண மெய்து களிப்பினால்
இன்னிசை யாழொடு பாடுவா
ரீந்தன துகில்விரித் தேந்துவார்
சென்னியின் மீதுகொண் டாடுவார்
தேறலை யுண்டு செருக்குவார். (57)

மன்னவர் மகளிரு மறையவர்
மகளிரும் வந்துபொன் மாலையைத்
துன்னினர் சோபனம் வினவுவார்
தோகைதன் மணவணி நோக்குவார்
கன்னித னேவலர் வீசிய
காசறை கர்ப்புர வாசமென்
பொன்னறுங் கலவையின் மெய்யெலாம்
புதைபட வளனொடும் போவரால். (58)

அங்கன கஞ்செய் தசும்பின
வாடை பொதிந்தன தோடவிழ்
தொங்கல் வளைந்தன மங்கையர்
துள்ளிய கவரியி னுள்ளன
கங்கையும் வாணியும் யமுனையுங்
காவிரி யும்பல துறைதொறும்
மங்கல தூரிய மார்ப்பன
மதமலை மேலன வருவன. (59)

### சங்கரன் அடியரை எதிர்கொள்வது

அங்கவர் மனைதொறு மணவினை
யணுகிய துழனிய ரெனமறைப்
புங்கவ ரினிதுண வறுசுவைப்
போனக மடுவினை புரிகுவார்
இங்கடு வனபலி யடிகளுக்
கெனயதி களையெதிர் பணிகுவார்
சங்கர னடியரை யெதிர்கொள்வார்
சபரியை விதிமுறை புரிகுவார். (60)

இன்னண நகர்செய லணிசெய
விணையிலி மணமகன் மணவினைக்
கன்னியு மனையவ ளென்னினிக்
கடிநகர் செயுமெழில் வளனையாம்
என்னவ ரியநகர் செயலெழி
லிணையென வுரைசெய்வ தெவனிதன்

முன்னிறை மகடமர் மணவணி
மண்டப வினைசெயு முறைசொல்வாம். (61)

வேறு

கருவி வான்முகி லூர்தியைப்
பொருதநாட் கலைமதி மருமாட்டி
செருவில் வாங்கிய விமானமா
லைகளெனத் தெய்வத வரையெல்லாம்
மருவி யந்நகர் வைகிய
தம்மிறை மடமக டனைக்காண்பான்
துருவி நின்றென நட்டன
ரெட்டிவான் றொடுநிலை நெடுந்தேர்கள். (62)

பளிக்கி னேழுயர் களிறுசெய்
தமைத்தபொற் படியது பசுஞ்சோதி
தெளிக்கு நீலத்தி னாளிக
ணிரைமணித் தெற்றிய துற்றோர்சாய்
வெளிக்கு ளாடிய வோவியப்
பாவைபோன் மிளிர்பளிங் காற்சோதி
தளிர்க்கும் பித்திய திடையிடை
மரகதச் சாளரத் ததுமாதோ. (63)

**வேள்விமண்டபஞ் செய்தது**

பல்லு ருச்செய்த பவளக்கா
லாயிரம் படைத்ததிந் திரநீலக்
கல்லு ருத்தலைப் போதிய
[1]தடாகக் கவின்கொ ளுத்தரமேல
தல்லு ருக்கிய செம்மணித்
துலாத்ததா லமுதுடற் பசுந்திங்கள்
வில்லு ருக்குகன் மாடம
தாகிய வேள்விமண் டபஞ்செய்தார். (64)

1. தாடாகக். பா.வே.

முத்திற் பாளைசெய் தவிர்மர
கதத்தினான் மொய்த்தபா சிலைதுப்பின்
கொத்திற் றீம்பழம் வெண்பொனாற்
கோழரை குயின்றபூ கமுந்துப்பின்
றொத்திற் றூங்குபூச் செம்பொனாற்
பழுக்குலை தூக்கிப்பொன் னாற்றண்டு
வைத்துப் பாசொளி மரகத
நெட்டிலை வாழையு நிரைவித்தார். (65)

பித்தி மாதவி சண்பகம்
பாதிரி பிறவுமண் டபஞ்சூழப்
பத்தி யாவளர்த் தளிகள்வாய்
திறந்துபண் பாடவின் மதுக்காலத்
தத்தி யாய்மணங் கவர்ந்துசா
ளரந்தொறுந் தவழ்ந்தொழு கிளந்தென்றல்
தித்தி யாநிற்கு மதுத்துளி
தெளித்திடச் செய்தன ருய்யானம். (66)

வேள்விச் சாலையும் வேதியுங்
குண்டமு மேகலை யொடுதொன்னூற்
கேள்விச் சார்பினாற் கண்டுகண்
ணடிவிடை கிளர்சுடர் சீவற்சம்
நீள்விற் சாமரம் வலம்புரி
சுவத்திக நிறைகுட மெனவெட்டு
வாள்விட் டோங்குமாங் கலந்தொழில்
செய்பொறி வகையினா னிருமித்தார். (67)

மணங்கொள் சாந்தொடு குங்குமப்
போதளாய் மான்மதம் பனிநீர்தோய்த்
திணங்கு சேறுசெய் திருநிலந்
தடவிவா னிரவிமண் டலநாணப்
பணங்கொ ணாகமா மணிவிளக்
கிருகையும் பாவைக ளெடுத்தேந்தக்
கணங்கொ டாரகை யெனநவ
மணிகுயில் கம்பலம் விதானித்தார். (68)

செம்பொற் கோயின்முன் சேண்டொடு
காவணந் திசையெலாம் விழுங்கச்செய்
தம்பொற் பாலிகைப் பாண்டில்வாய்
முளைத்தெளித் தம்புயத் தவனாதி
உம்பர்க் கேற்றபொற் கம்பல
மேல்விரித் துள்ளுறத் தவிசிட்டுத்
தும்பைத் தாழ்சடை யான்றமர்க்
காதனஞ் சூழவிட் டதனாப்பண். (69)

கற்ப கந்தரு வயிரவா
ளரிப்பிடர் சுதுவப்பொற் குறடேற்றி
எற்ப டுந்துகி ராற்குடஞ்
சதுரமா வியற்றிய வெருத்தத்தூண்
விற்ப டும்பளிக் குத்தரந்
துப்பினால் விடங்கமே னிலமூன்றாய்
பொற்ப நூல்வழி விமானம்பன்
மணிகளாற் பொலியச் செய்துள்ளாக. (70)

அங்க மாறுமே கால்களாய்
முதலெழுத் தம்பொற்பீ டிகையாகித்
துங்க நான்மறை நூல்களே
நித்திலந் தொடுத்தசை தாம்பாகி
எங்க ணாயக னெம்பெரு
மாட்டியோ டிருப்பதற் குருக்கொண்டு
தங்கி னாலென நவமணி
குயின்றபொற் றவிசது சமைத்திட்டார். (71)

புரந்த ரன்றரு கற்பகம்
பொலந்துகில் பூண்முத லியநல்கச்
சுரந்த ரும்பெற லமுதமை
வகையறு சுவையுணா முதலாகப்
பரந்த தெய்வவான் பயப்பச்சிந்
தாமணி பற்பல வுஞ்சிந்தித்
திரந்து வேண்டுவ தரத்தர
வீட்டினா ரிந்திர நகர்நாண. (72)

தென்னர் சேகரன் றிருமக
டிருமணத் திருமுகம் வரவேற்று
மன்னர் வந்தெதிர் தொழுதுகைக்
கொண்டுதம் மணிமுடி மிசையேற்றி
அன்ன வாசகங் கேட்டனர்
கொணர்ந்தவர்க் கருங்கலந் துகினல்கி
முன்ன ரீர்த்தெழு களிப்புற
மனத்தினு முந்தினர் வழிக்கொள்வார். (73)

**தேசத்துராசாக்கள் வருவது**

கொங்கர் சிங்களர் பல்லவர் வில்லவர்
கோசலர் பாஞ்சாலர்
வங்கர் சோனகர் சீனர்கள் சாளுவர்
மாளவர் காம்போசர்
அங்கர் மாகத ராரியர் நேரிய
ரவந்தியர் வைதர்ப்பர்
காங்கர் கொங்கணர் விராடர்கள் மராட்டர்கள்
கருநடர் குருநாடர். (74)

கலிங்கர் சாவகர் கூவிள ரொட்டியர்
கடாரர்கள் காந்தாரர்
குலிங்கர் கேகயர் விதேகர்கள் பௌரவர்
கொல்லர்கள் கல்யாணர்
தெலுங்கர் [1]கூர்ச்சரர் மச்சர்கண் மிலேச்சர்கள்
செஞ்சையர் முதலேனைப்
புலங்கொண் மன்னருந் துறைதொறு மிடைந்துபார்
புதைபட வருகின்றார். (75)

இத்த கைப்பல தேயமன் னவர்களு
மெண்ணிடம் பெறாதீண்டிப்
பைத்த வாழிபோ னிலமகண் முதுகிறப்
பரந்ததா னையராகித்

1. குர்ச்சரர். பா.வே.

தத்த நாட்டுள பலவகை வளனொடுந்
தழீஇப்பல நெறிதோறும்
மொய்த்து வந்தனர் செழியர்கோன் றிருமகண்
முரசதிர் மணமூதூர். (76)

வந்த காவல ருழையர்சென் றுணர்த்தினர்
வருகென வருகுய்ப்பச்
சந்த வாளரிப் பிடரணை மீதறந்
தழைத்தருள் பழுத்தோங்குங்
கந்த நாண்மலர்க் கொம்பினைக் கண்டுகண்
களிப்புற முடித்தாமஞ்
சிந்த வீழ்ந்தருள் சுரந்திடத் தொழுதுபோய்த்
திருந்துதும் மிடம்புக்கார் (77)

## திருமணம் செய்கின்ற காட்சிப் பெருமை

வரைவ ளங்களும் புறவினில் வளங்களு
மருதத்தண் பணைவேலித்
தரைவ ளங்களுஞ் சலதிவாய் நடைக்கலந்
தருவளங் களுமீண்டி
உரைவ ரம்பற மங்கலம் பொலிந்ததிவ்
வூரினி நால்வேதக்
கரைக டந்தவன் றிருமணஞ் செயவரு
காட்சியைப் பகர்கின்றேன். (78)

ஏக நாயகி மீண்டபின் ஞாட்பிகந்
திரசத கிரியெய்தி
நாக நாயக மணியணி சுந்தர
நாயக னுயிர்கொல்லாம்
போக நாயக னாகிப்போ கம்புரி
புணர்ப்பறிந் தருணந்தி
மாக நாயகன் மாலய னுருத்திரர்
வரவின்மேல் மனம்வைத்தான். (79)

சங்கு கன்னனை யாதிய கணாதிபர்
தலைவிடுத் தனன்னார்
செங்க ணேற்றவர் மாலயன் முதற்பெருந்
தேவர்வான் பதமெய்தி
எங்க ணாயகன் றிருமணச் சோபன
மியம்பினா ரதுகேட்டுப்
பொங்கு கின்றபே ரன்புபின் றள்ளூறப்
பொள்ளென வருகின்றார். (80)

அஞ்சு கோடியோ சனைபுகைந் திருமடங்
கழன்றவர் தலைப்போலீ
ரஞ்சு தீயுருத் திரர்புடை யுடுத்தவ
ரழற்கணாற் பூதங்கள்
அஞ்சு நூறுருத் திரரண்டத் துச்சிய
ரரியயன் முதற்றேவர்
அஞ்சு மாணையு மாற்றலும் படைத்தவ
ரடுகுறட் படைவீரர். (81)

புத்தி யட்டகர் நாலிரு கோடிமேற்
புகப்பெய்த நரகங்கள்
பத்தி ரட்டியுங் காப்பவர் பாரிடப்
படையுடைக் கூர்மாண்டர்
சத்தி யச்சிவ பரஞ்சுட ருதவிய
சதவுருத் திரரன்னார்
உய்த்த ளித்தவீ ரைம்பது கோடிய
ருருத்திரர் கணநாதர். (82)

பட்ட காரிவா யரவணி பவர்பசு
பதியுருத் திரராதி
அட்ட மூர்த்திகண் மேருவி னவிர்சுட
ராடகர் தோடேந்தும்
மட்ட றாமலர் மகன்செருக் கடங்கிட
மயங்கிய விதிரேதற்ற
நிட்டை யாலவ னெற்றியிற் றோன்றிய
நீலலோ கிதநாதர். (83)

பால மேற்றசெந் தழல்விழி யுருத்திரர்
பதினொரு பெயர்வாகைச்
சூல மேற்றகங் காளக பாலியர்
துரகத நெடுங்கரி
நீல மேற்றபைங் கஞ்சுகப் போர்வையி
னெடியவர் நிருவாணக்
கோல மேற்றவ ரெண்மர்ஞா ளிப்புறங்
கொண்டகேத் திரிபாலர். (84)

செய்ய தாமரைக் கண்ணுடைக் கரியவன்
செம்மலர் மணிப்பீடத்
தையன் வாசவ னாதியெண் டிசைப்புலத்
தமரரெண் வசுதேவர்
மையில் கேள்விசா லேழெழு மருத்துகண்
மருத்துவ ரிருவோர்வான்
வெய்ய வாள்வழங் காறிரண் டருக்கரோர்
வெண்சுடர் மதிச்செல்வன். (85)

கையுங் கால்களுங் கண்பெற்றுக் கதிபெற்ற
கடும்புலி முனிச்செல்வன்
பைய ராமுடிப் பதஞ்சலி பாற்கடல்
பருகிமா தவன்சென்னி
செய்ய தாள்வைத்த சிறுமுனி குறுமுனி
சிவமுணர் சனகாதி
மெய்யு ணச்சியோர் வாமதே வன்சுகன்
வியதனா ரதன்மன்னோ ! (86)

எழுவ ரன்னையர் சித்தர்விச் சாதர
ரியக்கர்கின் னரர்வேத
முழுவ ரம்புணர் முனிவர்யோ கியர்மணி
முடித்தலைப் பலநாகர்
வழுவில் வான்றவ வலியுடை நிருதர்வாள்
வலியுடை யசுரேசர்
குழுவொ டும்பயில் பூதவே தாளர்வெங்
கூளிக ளரமாதர். (87)

ஆண்டி னோடய னம்பரு வந்திங்க
ளாரிரண் டிருபக்கம்
ஈண்டு மைம்பொழு தியோகங்கள் கரணங்க
ளிராப்பக லிவற்றொடும்
பூண்ட நாழிகை கணமுதற் காலங்கள்
பொருகட னதிதிக்கு
நீண்ட மால்வரை திக்கய மேசுமின்
னிமிர்ந்தவைம் பெரும்பூதம். (௮௮)

மந்தி ரம்புவ னங்கடத் துவங்கலை
வன்னங்கள் பதம்வேதம்
தந்தி ரம்பல சமயநூல் புறந்தழீஇச்
சார்ந்தநூ றருமாதி
முந்தி ரங்கிய சதுர்விதஞ் சரியையே
முதலிய சதுட்பாதம்
இந்தி ரங்குநீர் முடியவ ரடியவ
ரிச்சியா வெண்சித்தி. (௮௯)

ஆயி ரங்கட லனையவாய்ப் பரந்தெழு
மாயிர மனிகத்துள்
ஆயி ரங்கதி ரனையரா யுருத்திர
ரந்தரத் தவரண்டம்
ஆயி ரந்தகர் பட்டெனத் துந்துபி
யாயிரங் கலந்தார்ப்ப
ஆயிர ரஞ்சத கோடியோ சனைவழி
யரைக்கணத் திடைச்செல்வார். (௯0)

சித்தந் தேர்முனி வேந்தருந் தேவருந்
சிவனுருத் தரித்தோருந்
தத்தந் தேர்முத லூர்தியர் வார்திகழ்
சந்தன மணிக்கொங்கைக்
கொத்தந் தேமலர்க் குழன்மனை யாரொடுங்
குளிர்விசும் பாறாச்சென்
றத்தந் தேரிடை யாள்பங்க னணிவரைக்
கணியராய் வருகின்றார். (௯௧)

இழிந்த வூர்தியர் பணிந்தெழும் யாக்கைய
ரிழைபுகழ் திருநாமம்
மொழிந்த நாவினர் பொடிப்பெழு மெய்யினர்
முகிழ்த்தகை முடியேறக்
கழிந்த வன்பினர் கண்முதற் புலங்கட்குங்
கருணைவான் சுவையூறப்
பொழிந்த வானந்தத் தேனுறை திருமலைப்
புறத்துவண் டெனமொய்த்தார். (92)

விரவு வானவர் நெருக்கற வொதுக்குவான்
வேத்திரப் படையோச்சி
அரவு வார்சடை நந்தியெம் பிரானவ
ரணிமணி முடிதாக்கப்
பரவு தூளியிற் புதைபடு கயிலையம்
பருப்பதம் பகல்காலும்
இரவி மண்டலத் தொடுங்குநா ளொடுங்கிய
விந்துமண் டலமாலும். (93)

வந்த வானவர் புறநிற்ப நிந்தியெம்
வள்ளலங் குள்ளெய்தி
எந்தை தாள்பணிந் தையவிண் ணவரெலா
மீண்டினா ரெனவீண்டுத்
தந்தி டென்னவந் தழைத்துவேத் திரத்தினாற்
றராதரந் தெரிந்துய்ப்ப
முந்தி முந்திவந் திறைஞ்சினார் சேவடி
முண்டக முடி[1]சூட (94)

தீர்த்தன் முன்பணிந் தேத்துகின் றார்களிற்
சிலர்க்குத்தன் றிருவாயின்
வார்த்தை நல்கியுஞ் சிலர்க்கருண் முகிழ்நகை
வழங்கியுஞ் சிலர்க்குக்கண்
பார்த்து நீண்முடி துளக்கியுஞ் சிலர்க்கருட்
பரிசிறந் தெழுந்தண்டங்
காத்த கண்டனோர் மண்டபத் திடைபுக்குக்
கடிமணக் கவின்கொள்வான். (95)

ஆண்ட நாயகன் றிருவுளக் குறிப்புணர்ந்
தளகைநா யகனுள்ளம்
பூண்ட காதன்மேற் கொண்டெழு மன்புந்தன்
புனிதமெய்த் தவப்பேறும்
ஈண்ட வாங்கணைந் தெண்ணிலா மறைகளு
மிருவரு முனிவோருந்
தீண்ட ருந்திரு மேனியைத் தன்கையாற்
றீண்டிமாங் கலஞ்[1]செய்வான். (96)

பூந்து கிற்படாங் கொய்சகத் தானைபின்
போக்குகோ வணஞ்சாத்தி
ஏந்தி ரட்டைஞாண் பட்டிகை யிறுக்கிவண்
டிரைக்குநாண் மலர்க்குஞ்சி
வேய்ந்து கற்பகப் புதுமலர்ச் சிகழிகை
மிலைந்துநீ றணிமெய்யிற்
சாந்த மான்மதந் தண்பனி நீரளாய்த்
தடக்கையான் மட்டித்தான். (97)

இரண்டு செஞ்சுடர் நுழைந்திருந் தாலென
விணைமணிக் குழைக்காதிற்
சுருண்ட தோடுபொற் குண்டலந் திணியிறா
டுரந்துதோட் புறந்துள்ள
மருண்ட தேவரைப் பரமென மதிப்பவர்
மையல்வல் லிருண்[1]மான
இருண்ட கண்டமேன் முழுமதி கோத்தென
விணைத்தகண் டிகைசாத்தி. (98)

வலங்கி டந்தமுந் நூல்வரை யருவியின்
வயங்குமார் பிடைச்சென்னித்
தலங்கி டந்தவெண் டிங்களூற் றமுதெனத்
தரளமா லிகைசாத்தி
இலங்கி டந்தமா லிகைப்பரப் பிடை[2]யிமைத்
திருண்முகம் பிளந்தாரங்

1. மான. பா.வே. 2. மிமைத். பா.வே.

கலங்கி டந்தபாற் கடன்முளைத் தெழுமிளங்
கதிரெனக் கவின்செய்து. (99)

திசைக டந்தநாற் புயங்களிற் பட்டிகை
சேர்த்துவா ளெறிக்குந்தோள்
நசைக டந்தநல் லார்மனங் கவர்ந்துயிர்
நக்கவங் கதஞ்சாத்தி
அசைக டங்கலுழ் வாரண வுரிவைநீத்
தணிகொளுத் தரீயம்பெய்
திசைக டந்தமந் திரபவித் திரமெடுத்
தெழில்விர னுழைவித்து. (100)

உடுத்த கோவண மிசைப்பொலந் துகிலசைத்
துரகமைந் தலைநால
விடுத்த போல்வெயின் மணித்தலைக் கொடுக்குமின்
விடவிரு புறந்தூக்கித்
தொடுத்த தார்புயந் தூக்கிநூா புரங்கழல்
சொற்பதங் கடந்தன்பர்க்
கடுத்த தாளிலிட் டிருநிதிக் கோமக
னருந்தவப் பயன்பெற்றான். (101)

செங்கண் மாலய னிந்திரன் முதற்பெருந்
தேவர்க்கும் யாவர்க்கும்
மங்க லந்தரு கடைக்கணா யகனொரு
மங்கலம் புனைந்தான்போற்
சங்கை கொண்டுகும் போதரன் முதுகின்மேற்
சரணம்வைத் தெதிர்போந்த
துங்க மால்விடை மேற்கொடு நடந்தனன்
சுரர்கள்பூ மழைதூர்த்தார். (102)

அந்த ரத்தவ ரந்தர துந்துபி
யைந்துமார்த் தனர்சூழ
வந்த ரக்கரு மியக்கரும் பூதரு
மங்கல வியங்கல்லக்

கொந்த லர்க்கருங் குழலர மடந்தையர்
கொளைவல்விஞ் சையர்தாளந்
தந்த சைத்திட மலர்ந்தபூங் கொம்பர்போற்
சாய்ந்தசைந் தனராட. (103)

தூங்க மாயிரங் கருவியா யிரமலைத்
தூங்கிருண் முழைதோறுஞ்
சிங்க மாயிரம் வாய்திறந் தார்த்தெனச்
சிரங்களா யிரந்திண்டோள்
அங்க மாயிர மாயிர முடையவ
னாயிர முகந்தொறுஞ்
சங்க மாயிர மாயிர மாயிரந்
தடக்கையும் பிடித்தூத. (104)

போக்கு [1]மாயைவன் புணர்ப்பையு மிருண்மலப்
புணர்ப்பையுங் கடந்தெம்மைக்
காக்கு நாயக னருச்சனை விடாதருட்
கதியடைந் துளவாணன்
தூக்கு நேர்பட வாயிரங் கரங்களாற்
றொம்மென முகந்தோறுந்
தாக்க வேறுவே றெழுகுட முழாவொலி
தடங்கட லொலிசாய்ப்ப. (105)

முனிவ ரஞ்சலி முகிழ்த்தசெங் கையினர்
மொழியுமா சியருள்ளங்
கனிவ ரும்பிய வன்பினர் பரவவுட்
[2]கருத்தொரு வழிக்கொண்டோர்
துனிவ ருங்கண நாதர்கொட் டதிர்கரத்
துணையினர் மழைபோலப்
பனிவ ருங்கண ராடிய தாளினர்
பாடுநா வினரேத்த. (106)

........................................................

1. மாயவன் 2. கருத்தொரு. பா.வே

இந்தி ரன்மணிக் களாஞ்சிகொண் டொருமருங்
கெய்தமெல் லிலைவாசந்
தந்தி லங்குபொன் னடைப்பைகொண் டீசனோர்
சார்வர மருத்துக்கோ
வந்தி ரங்கொலி யாலவட் டம்பணி
மாறவா ரழறூபந்
தந்து நேரநீர்க் கடவுள்பொற் கோடிகந்
தாமரைக் கரந்தூக்க. (107)

நிருதி யாடிகொண் டெதிர்வர வடிக்கடி
நிதிமுகந் தளகைக்கோன்
கருதி யாயிரஞ் சிதறிடத் தண்டிநன்
காஞ்சுகர் வினைசெய்யப்
பரிதி யாயிரம் பணாடவி யுரகரும்
பன்மணி விளக்கேந்தச்
சுருதி நாயகன் றிருவடி முடியின்மேற்
சுமந்துபின் புறஞ்செல்ல. (108)

### [1]குண்டோதரன் பெருமை

கங்கை காவிரி யாதிய நவநதிக்
கன்னியர் குளிர்தூங்கப்
பொங்கு வார்திரைக் கொழுந்தெனக் கவரிகள்
புரட்டவெண் பிறைக்கீற்றுத்
துங்க வாளெயிற் றிருளுடற் குழிவிழிச்
சுடரழற் செம்பங்கிச்
சங்க வார்குழைக் குறியகுண் டோதரன்
றண்மதிக் குடைதாங்க. (109)

இடிக்கும் வானுரு மேறுயர் நெடுங்கொடி
யெகினவெண் கொடிஞாலம்
முடிக்கு மூழிநா ளுளர்கடுங் காலென
மூச்செறி விடநாகந்

1. கும்போதரனை பெருமை என்று சுவடியில் உள்ளது.

துடிக்க வாய்விடு முவணவண் கொடிமுதற்
சூழ்ந்துசே வகஞ்செய்யுங்
கொடிக்கு ழாத்தினுட் கொடியர சாய்விடைக்
கொடிபுடை பெயர்ந்தாட. (110)

கண்ணு தற்பிரான் மருங்கிரு கடவுளர்
கப்புவிட் டெனத்தோன்றும்
வண்ண முத்தலைப் படையெடுத் தொருகுட
வயிறுடைப் பெரும்பூதம்
பண்ண வப்பதி னெண்படைக் கலமுந்தன்
பக்கமாச் சேவிப்ப
அண்ணன் முச்சுடர் முளைத்தொரு வரைநடந்
தனையதோர் மருங்கெய்த. (111)

பந்த நான்மறைப் பொருட்டிரட் டெனவட
பாடல்செய் தெதிர்புட்ப
தந்த னேத்தவா னுயிருண வுருத்தெழு
தழல்விடத் தெதிர்நோக்கும்
அந்த மாதியி லானிழல் வடிவமா
யாடியி னிழல்போல
வந்த சுந்தரன் சாத்துநீ றொடுதிரு
மாலையு மெடுத்தேந்த. (112)

அன்னத் தேரின னயன்வலப் பாங்கரு
மராவலி கவர்சேன
வன்னத் தேரினன் மாலிடப் பாங்கரு
மலர்க்கரங் குவித்தேத்தப்
பொன்னத் தேமலர்க் கொன்றையான் வெள்ளியம்
பொருப்பொடு மெழீஇப் போந்தால்
என்னத் தேரணி மதுரைமா நகர்ப்புறத்
தெய்துவா னவ்வேலை. (113)

## தோத்திரம்

வேறு

தேவர்க டேவன் வந்தான்
செங்கண்மால் விடையான் வந்தான்
மூவர்கண் முதல்வன் வந்தான்
முக்கணெம் பெருமான் வந்தான்
பூவல ரயன்மால் காணாப்
பூரண புராணன் வந்தான்
யாவையும் படைப்பான் வந்தா
னென்றுபொற் சின்ன மார்ப்ப. (114)

பெண்ணினுக் கரசி வாயிற்
பெருந்தகை யமைச்ச ரேனை
மண்ணினுக் கரசர் சேனை
மன்னவர் பிறரு மீண்டிக்
கண்ணினுக் கினியான் றன்னைக்
கண்டெதிர் கொண்டு தாழ
விண்ணினுக் கரச னூரின்
வியத்தகு நகரிற் புக்கான். (115)

முகிறவழ் புரிசை மூதூர்
[1]முதற்பெரு வாயி னீந்தி
அகிறவழ் மாட வீதி
வலம்பட வணைவா னாக
நகிறழை பொலங்கொம் பன்ன
நன்னகர் மகளி ரம்பொன்
துகிறழை மருங்கு லாயத்
தொகைபுறந் தழுவச் சூழ்ந்தார். (116)

## நந்தவனம் வைத்தது

தமிழ்முதற் பதினெண் டேத்து
மகளிருந் தாரு நாட்டின்

1. முகப்பெரு. பா.வே.

அமிழ்தமன் னவரு முல்லை
யம்புயாங் குமுத நீலங்
குமிழ்நறுங் கோங்கு காந்தள்
கோழிணை ரசோகம் வாசம்
உமிழ்தர மலர்ந்த நந்த
வனமென வொருங்கு மொய்த்தார். (117)

எம்மைநீர் விடுதி ரேயோ
வென்பபோற் கலையுஞ் சங்கும்
விம்மநாண் மடனு முங்க
ணெஞ்சுடை வெளியா றாக
உம்மைநீத் தோடு மந்தோ
வுரைத்தன முரைத்தோ மென்று
தம்மைநூ புரங்கால் பற்றித்
தடுப்பபோ லார்ப்பச் சென்றார். (118)

கடியவிழ் கமலக் காடு
பூத்ததோர் கருணை வாரி
அடிமுதன் முடியீ றாக
வலர்விழிக் குவளை சாத்திக்
கொடியசெம் பதுமப் போது
குழன்மிசைச் சூடு வார்போற்
றொடியணி கரங்கள் கூப்பித்
துதியென வினைய சொல்வார். (119)

நங்கையென் னோற்றாள் கொல்லோ
நம்பியைத் திளைத்தற் கென்பார்
மங்கையை மணப்பா னென்னோ
வள்ளலு நோற்றா னென்பார்
அங்கடி மதுரை யென்னோ
வாற்றிய தவந்தா னென்பார்
இங்கிவர் வதுவை காண்பா
னென்னநா நோற்றோ மென்பார். (120)

---

1. பேற்றாற் பெற்ற. பா.பே.

தென்னவன் வருந்தி மேனாட்
செய்தவப் 'பேறாப் பெற்ற
தன்மகள் வதுவை காணத்
தவஞ்செய்தா னிலனே யென்பார்
கன்னிதன் னழகுக் கேற்ற
வழகனிக் காளை யென்பார்
மன்னவ னிவனே யன்றி
வேறில்லை மதுரைக் கென்பார். (121)

நங்கைதன் னலனுக் கேற்ப
நம்பியைத் தந்த திந்தத்
துங்கமா மதிநூல் வல்ல
சுமதிதன் சூழ்ச்சி யென்பார்
அங்கவ டவப்பே றென்பா
ரன்னைதன் கன்னிக் கன்றி
இங்கிவன் மருக னாக
வெத்தவ முடையா ளென்பார். (122)

பூந்துகி னெகிழ்ப்பர் சூழ்வர்
புணர்முலை யலைப்பர் பூசு
சாந்தினை யுகுப்பர் நாணந்
தலைக்கொண்டார் போலச் சாய்வர்
கூந்தலை யவிழ்ப்பர் வாரிக்
கூட்டுவர் முடிப்பர் மேனி
மாந்தளி ரெங்கு மாரன்
வாளிகள் புதையச் சோர்வார். (123)

தண்ணளி யொழுக்கஞ் சாந்த
குணத்தினைச் சார்ந்து மிந்த
வண்ணமென் மலர்க ளென்னே
வாளியைத் தைத்த வென்பார்
கண்ணறுங் கூந்தல் வேய்ந்த
கடியவிழ் நீலத் தாரும்
வெண்ணகை யரும்பு முல்லைத்
தாமமும் வெறுத்து வீழ்ப்பார். (124)

விம்மிச்செம் மாந்த கொங்கை
மின்னனார் சிலர்விற் காமன்
கைம்மிக்க கணையே றுண்டு
கலங்கிய மயக்காற் றங்கள்
மைம்மிக்க நெடுங்கண் மூரல்
வதனமு மவனம் பென்றே
தம்மிற்றம் முகத்தை நோக்கார்
தலையிறக் கிட்டுச் செல்வார். (125)

பற்றிய பைம்பொன் மேனிப்
பசப்பது தேறா ரண்ணல்
ஒற்றைமால் விடையின் மேற்கொண்
டிருந்துநம் முளத்து மேவப்
பெற்றன மிதென்கொன் மாயம்
பேதைமீர் பெருமா னீண்ட
கற்றைவார் சடைப்பூங் கொன்றை
யிதுவன்றோ காண்மி னென்பார். (126)

திங்களென் றெழுந்து நம்மைச்
[1]சுடுவதென் செந்தீ யென்பார்
புங்கவன் சென்னி மீதுங்
கிடப்பதே போலு மென்பார்
அங்கவற் கிந்த வெப்ப
மிலைகொலென் றயிர்ப்பா ராற்றக்
கங்கைநீர் சுமந்தா னென்பா
ரதனையுங் காண்மி னென்பார். (127)

கலையொடு நாணம் போக்கிக்
கருத்தொடு வண்ணம் வேறாய்
உலையொடு மெழுகிட் டென்ன
வுருகுகண் ணீர ராகிக்
கொலையொடு பயில்வேற் கண்ணார்
குரிசிறன் பவனி நோக்கி

..........................................................................

1. சுடுவதே. பா.வே.

அலையொடு மதியஞ் சூடு
மையன்மெய் யன்ப ரொத்தார். (128)

நட்டவர்க் கிடுக்க ணெய்த
நன்றிகொன் றவர்போற் கையில்
வட்டவாய்த் தொடியுஞ் சங்கு
மருங்குசூழ் கலையு நீங்க
இட்டபொற் சிலம்பிட் டாங்கே
நன்றியி னிகவார் போற்கால்
ஒட்டியே கிடப்ப நின்றா
ருகுத்தபூங் கொம்ப ரன்னார். (129)

மின்னகு வேற்க ணாளோர்
விளங்கிழை விடைமே லையன்
புன்னகைப் போது நோக்கப்
போதுமுப் புரமும் வேனின்
மன்னவன் புரமுஞ் சுட்ட
வல்லவோ கெட்டேன் வாளா
இன்னவை சுடாது போமோ
[1]வேழையேம் புரமு மென்றாள். (130)

உழைவிழி யொருத்தி தன்க
ணுருவெளி யாகித் தோன்றுங்
குழகனை யிரண்டு செம்பொற்
கொங்கையு மொன்றாய் வீங்கத்
தழுவுவா ளூற்றங் காணா
டடமுலை யிரண்டே யாகி
இழையிடை கிடக்க நீங்கி
யிருக்கைகண் டிடைபோ லெய்த்தாள். (131)

வாரிருங் கொள்கை யாளோர்
மாதராள் வானோ ருய்யக்

1. வேழையேன். பா.வே.

காரிருள் விடமுண் டன்று
கறுத்ததே யன்று கொன்றைத்
தாரிருஞ் சடையார் கண்டந்
தையன்மீர் தமது நெஞ்சங்
காரிரும் பென்றே காட்டக்
குறியிட்ட கறுப்பே யென்றாள். (132)

பொன்னவிர் சடையான் முன்னே
போனதென் [1]னெஞ்சு தூதாய்
அன்னது தாழ்த்த தென்னென்
றழுங்குவா ளெருத்தி கெட்டேன்
என்னது நெஞ்சும் போன
தென்றன ளொருத்தி கேட்ட
மின்னனாள் வேற்கண் சேந்தாள்
விளைத்தன ளவளும் பூசல். (133)

செப்பிளங் கொங்கை யாளோர்
தெரிவைநீர் திருநோக் கெம்பால்
வைப்பதென் மதன்போ லெம்மைச்
[2]சுடுவதே மதனுக் காவி
அப்பொழு தளித்தாற் போலெம்
மாவியு மளித்தா லின்று
மெய்ப்புக ழுமக்குண் டின்றேற்
பெண்பழி விளையு மென்றாள். (134)

கவனமால் விடையான் றன்னைக்
கடைக்கணித் திலனென் றங்கோர்
சுவணவான் கொடியோ ரோவத்
தொழில்வல்லான் குறுக நோக்கி
இவனைநீ யெழுதித் தந்தால்
வேண்டுவ வீவ னென்றாள்
அவனையா ரெழுத வல்லா
ரென்றன னாவி சோர்ந்தாள். (135)

1. னெஞ்சந். பா.வே. 2. சுடுவதென். பா.வே.

வலத்தயன் வரவு காணாண்
மாலிடங் காணாள் விண்ணோர்
குலத்தையுங் காணாண் மண்ணோர்
குழாத்தையுங் காணாண் ஞானப்
புலத்தவர் போலக் கண்ட
பொருளெலா மழுமான் செங்கைத்
தலத்தவன் வடிவாக் கண்டா
ளொருதனித் தையன் மாது. (136)

முன்பெற்றங் காலிற் செல்ல
வண்ணலை முன்போய்க் காண்பான்
பின்பற்றி யாசைப் பாசம்
பிணித்தெழ வோடு வாளோர்
பொன்பெற்ற முலையாள் கொம்ப
ருகுமலர் போலத் தாளின்
மின்பெற்ற காஞ்சி தட்ப
விலங்கொடு நடப்பா ளொத்தாள். (187)

விதுக்கலை மிலைந்து செங்கண்
விடையின்மேல் வருமா னந்த
மதுக்கட றனைக்கண் வாயான்
முகந்துண்டு மகளி ரெல்லாம்
புதுக்கலை சரிவ தோரார்
புரிவளை கழல்வ தோரார்
முதுக்குறை வகல்வ தோரார்
மூழ்கினார் காம வெள்ளம். (138)

பைத்தழ கெறிக்கு மாடப்
பந்திமே னின்று காண்பார்
கைத்தலங் கூப்பி யாங்கே
கண்களு நோக்கி யாங்கே
சித்தமுங் குடிபோய்ச் சொல்லுஞ்
செயலுமாண் டங்கண் மாண
வைத்தமண் பாவை யோடு
வடிவுவே றற்று நின்றார். (139)

அன்பட்ட புரமுங் காம
னாகமுஞ் சுட்ட தீயிம்
மின்பட்ட சடிலத் தண்ணன்
மெய்யென்ப தறியார் நோக்கிப்
பொன்பட்ட கலனு மெய்யும்
பொரிகின்றா ரவனைப் புல்லின்
என்பட்டு விடுமோ வைய
வேழைய ராவி யம்மா. (140)

கொடிகள்பூத் துதிர்ந்த போதிற்
கொம்பனார் கலையுஞ் சங்குந்
தொடிகளுஞ் சுண்ணத் தூளுஞ்
சுரர்பொழி மலரு நந்தி
யடிகள்கைப் பிரம்பு தாக்கச்
சிந்திய வண்ட வாணர்
முடிகளின் மணியுந் தாருங்
குப்பையாய் மொய்த்த வீதி. (141)

துன்னிய தருப்பை கூட
வரசிலை துழாவித் தோய்த்துப்
பொன்னியல் கலச நன்னீர்
பூசுரர் வீச வன்னார்
பன்னியர் வட்ட மாக
வானவிற் பதித்தா லென்ன
மின்னிய மணிசெய் நீரா
சனக்கலம் விதியாற் சுற்ற. (142)

கொடிமுர சாடி செம்பொற்
குடமணி நெய்யிற் பூத்த
கடிமல ரனைய தீப
மங்குசங் கவரி யென்னும்
படிவமங் கலங்க ளெட்டும்
பரித்துநேர் பதுமக் கொம்பர்
வடிவினார் வந்து காட்ட
மாளிகை மருங்கிற் செல்வான். (143)

செப்புரங் கவர்ந்த கொங்கை
யரம்பையர் தீபங் காட்டுந்
துப்புர வன்பி னார்க்குத்
தூயமெய்ஞ் ஞான நல்கும்
முப்புரங் கடந்தான் றன்னை
மும்முறை யியங்க ளோங்கக்
கப்புர விளக்கந் தாங்கி
வலஞ்செயக் கருணை பூத்தான். (144)

கோயின்முன் குறுக லோடு
மைம்புலக் குறும்பு தேய்த்த
தூயநால் வேதச் செல்வர்
வத்திக ளோத நந்தி
சேயிருந் தடக்கை பற்றிச்
செங்கணே றிழிந்து நேர்ந்து
மாயனு மயனு நீட்டு
மலர்க்கர மிருபாற் பற்றி. (145)

எதிர்ந்தரு மறைகள் காணா
திளைத்தடி சுமந்து காணும்
முதிர்ந்தவன் புருவ மான
பாதுகை முடிமேற் சத்தி
பதிந்தவர் தலைமேற் கொண்டு
பாசவல் வினைதீர்த் துள்ளம்
பொதிந்துபே ரின்ப நல்கும்
பொன்னடிப் போது சாத்தி. (146)

பையர வுரியி னன்ன
நடைப்படாம் பரப்பிப் பெய்த
கொய்யவிழ் போதி னீத்தங்
குரைகழ லடிந னைப்பத்
தெய்வமந் தார மாரி 4)
திருமுடி நனைப்பத் தென்னர்

உய்யவந் தருளு மைய
னுள்ளெழுந் தருளு மெல்லை. (147)

மங்கல மகளி ரோடுங்
காஞ்சன மாலை வந்து
கங்கையின் முகந்த செம்பொற்
கரகநீ ரனையார் வாக்கத்
திங்களங் கண்ணி வேய்ந்த
சிவபரஞ் சோதி பாத
பங்கயம் விளக்கி யந்நீர்
தலைப்பெய்து பருகி நின்றாள். (148)

பாதநாண் மலர்மே லீரம்
புலரவெண் பட்டா நீவிச்
சீதமென் பனிநீ ராட்டி
மான்மதச் சேறு பூசித்
தாதவிழ் புதுமந் தாரப்
பொன்மலர் சாத்திச் சென்னி
மீதிரு கரங்கள் கூப்பி
வேறுநின் றிதனைச் சொன்னாள். (149)

அருமையா லடியேன் பெற்ற
வணங்கினை வதுவை செய்தித்
திருநகர்த் திருவுங் கன்னித்
தேயமுங் கைக்கொண் டாள்கென்
றுரைசெய்தா ளதற்கு நேர்வா
ருண்ணகை யுடைய ராகி
மருகனா ரியங்க ளார்ப்ப
வதுவைமண் டபத்தைச் சேர்ந்தார். (150)

அருத்தநான் மறைக ளார்ப்ப
வரிமணித் தவிசி லேறி
நிருத்தனாங் கிருந்து சூழ
நின்றமா லயனை யேனை

உருத்திரா தியரைப் பின்னு
　　மொழிந்தவா னவரைத் தத்தந்
திருத்தகு தவிசின் மேவத்
　　திருக்கடை நாட்டம் வைத்தாள். (151)

விண்டல வானோ ரேனோர்
　　மிடைதலான் ஞாலச் செல்வி
பண்டைய ளன்றி யின்று
　　பரித்தனள் பௌவ மேழும்
உண்டவன் தன்னைத் தானின்
　　றுத்தரத் திருத்தி னானோ
அண்டர்நா யகன்ற னாணை
　　வலியினோ வறியே மம்மா! (152)

மாமணித் தவிசில் வைகி
　　மணவினைக் கடுத்த வோரை
தாம்வரு மளவும் வானத்
　　தபனிய மலர்க்கொம் பன்னார்
காமரு நடன நோக்கிக்
　　கருணைசெய் திருந்தா ளிப்பாற்
கோமகள் வதுவைக் கோலம்
　　புனைதிறங் கூற லுற்றேன். (153)

## திருமணக்கோலங்கொண்டது

மாசறுத் தெமையா னந்த
　　வாரிநீ ராட்டிப் பண்டைத்
தேசுரு விளக்க வல்ல
　　சிவபரம் பரையைச் செம்பொன்
ஆசனத் திருத்தி நான
　　மணிந்துகுங் குமச்சே றப்பி
வாசநீ ராட்டி னார்கண்
　　மதிமுகக் கொம்ப ரன்னார். (154)

முரசொடு சங்க மேங்க
மூழ்கிநுண் டூசு சாத்தி
அரசிய லறத்திற் கேற்ப
வந்தணர்க் குரிய தானம்
விரைசெறி தளிர்க்கை யார
வேண்டுவ வெறுப்பத் தந்து
திரைசெய்நீ ரமுத மன்னா
டிருமணக் கோலங் கொள்வாள். (155)

செம்மலர்த் திருவும் வெள்ளைச்
செழுமலர்த் திருவுந் தங்கள்
கைம்மலர்த் தவப்பே றின்று
காட்டுவார் போல நங்கை
அம்மல ரனிச்ச மஞ்சு
மடியிற்செம் பஞ்சு தீட்டி
மைம்மலர்க் குழன்மேல் வாசக்
காசறை வழியப் பெய்து. (156)

கொங்கையின் முகட்டிற் சாந்தங்
குளிர்பனி நீர்தோய்த் தட்டிப்
பங்கய மலர்மே லன்னம்
பவளச்செவ் வாய்விட் டார்ப்பத்
தங்கிய வென்ன வார
நூபுரந் ததும்பச் செங்கேழ்
அங்கதிர்ப் பாத சாலங்
கிண்கிணி யலம்பப் பெய்து. (157)

எண்ணிரண் டிரட்டி கோத்த
விரிசிகை யிருபத் தொன்றிற்
பண்ணிய கலாப மீரேழ்
பருமநா லிரண்டிற் செய்த
வண்ணமே கலையி ரண்டிற்
காஞ்சியிவ் வகையோ ரைந்தும்

புண்ணியக் கொடிவண் டார்ப்பப்
பூத்தபோற் புலம்பப் பூட்டி. (158)
பொன்மணி வண்டு வீழ்ந்த
காந்தளம் போது போல
மின்மணி யாழி கோத்து
மெல்விரல் செங்கைக் கேற்ப
வன்மணி வைர யாப்புக்
கடகமுந் தொடியும் வானத்
தென்மணிக் கரங்கள் கூப்ப
விருதடந் தோளி லேற்றி. (159)

மரகத மாலை யம்பொன்
மாலைவித் துரும மாலை
[1]நிரைபடு வான வில்லி
னிழல்பட வாரத் தாமம்
விரைபடு களபச் சேறு
மெழுகிய புளகக் கொங்கை
வரைபடு மருவி யன்றி
வனப்புநீர் நுரையு மான. (160)

உருவமுத் துடுவா யம்முத்
துடுத்தபல் காசு கோளாய்
மருவவக் காசு சூழ்ந்த
மாமணி கதிராய்க் கங்குல்
வெருவவிட் டிமைக்கு மார
மேருவின் புறஞ்சூழ்ந் தாடுந்
துருவசக் கரம்போற் கொங்கை
துயல்வர விளங்கச் சூட்டி. (161)

கொடிக்கய லினமாய் நின்ற
கோட்சுறா வேறும் வீறு
தொடிக்கலை மதியுந் தங்கோன்
றொல்குல விளக்காய்த் தோன்றும்

1. நிரையட. பா.வே.

பிடிக்கிரு காதி னூடு
மந்தணம் பேசு மாபோல்
வடிக்குழை மகரத் தோடு
பரிதிவாண் மழுங்கச் சேர்த்து. (162)

மழைக்குமா மதிக்கு நாப்பண்
வானவிற் கிடந்தா லொப்ப
இழைக்குமா மணிசூழ் பட்ட
மிலம்பக மிலங்கப் பெய்து
தழைக்குமா முகிலை மைந்தன்
றளையிடல் காட்டு மாபோற்
குழைக்குநீர்த் தகர ஞாழற்
கோதைமேற் கோதை யார்த்து. (163)

கற்பகங் கொடுத்த விந்தக்
காமரு கலன்க ளெல்லாம்
பொற்பமெய்ப் படுத்து முக்கட்
புனிதனுக் கீறி லாத
அற்புத மகிழ்ச்சி தோன்ற
வழகுசெய் தமையந் தோன்றச்
சொற்கலை யாளும் பூவின்
கிழத்தியுந் தொழுது நோக்கி. (164)

சுந்தர வல்லி தன்னைச்
சோபன மென்று வாழ்த்தி
வந்திரு கையுந் துங்கண்
மாந்தளிர்க் கைக ணீட்டக்
கொந்தவிழ் கோதை மாது
மறமெலாங் குடிகொண் டேறும்
அந்தளிர்ச் செங்கை பற்றா
வெழுந்தனண் மறைக ளார்ப்ப. (165)

அறைந்தன தூரிய மார்த்தன சங்கம்
நிறைந்தன வானவர் நீண்மலர் மாரி

எறிந்தன சாமரை யேந்திழை யார்வாய்ச்
[1]சிறந்தன மங்கல வாழ்த்தெழு செல்வம். (166)

அடுத்தனள் சுந்தரி யம்பொன டைப்பை
எடுத்துன ளாடி திலோத்தமை யேந்திப்
பிடித்தனள் விந்தை பிடித்தனள் பொற்கோல்
உடுத்த நெருக்கை யொதுக்கி நடந்தாள். (167)

கட்டவிழ் கோதை யரம்பை களாஞ்சி
தொட்டன ளூர்ப்பசி தூமணி யால
வட்ட மசைத்தனள் வன்ன மணிக்கா
சிட்டிழை கோடிக மேனகை கொண்டாள். (168)

கொடிக ளெனக்குளிர் போதொடு சிந்தும்
வடிபனி நீரினர் வீசுபொன் வண்ணப்
பொடியின ரேந்திய பூம்புகை தீபத்
தொடியணி கையினர் தோகையர் சூழ்ந்தார். (169)

தோடவி ழோதியர் சோபன கீதம்
பாட விரைப்பனி நீரொடு சாந்தம்
ஏடவிழ் மென்மல ரிட்ட படத்திற்
பாடக மெல்லடி யைப்பைய வையா. (170)

செம்மல ராளொடு நாமக டேவி
கைம்மலர் பற்றின கல்வியொ டாக்கம்
இம்மையி லேபெறு வார்க்கிது போதென்
றம்மணி நூபுர மார்ப்ப நடந்தாள். (171)

ஒல்கினண் மெல்ல வொதுங்கின ளன்பு
பில்கி யிருந்த பிரானரு கெய்தி
மெல்கி யெருத்த மிசைத்தலை தூக்கிப்
புல்கிய காஞ்சி புலம்ப விருந்தாள். (172)

............................................................

1. செறிந்தன. பா.வே.

வேறு

அற்பக விமைக்குஞ் செம்பொ
னரதன பீடத் தும்பர்ப்
பொற்பக லாத காட்சிப்
புனிதனோ டிருந்த நங்கை
எற்பகல் வலங்கொண் டேகு
மெரிகதிர் வரையி னுச்சிக்
கற்பக மருங்கிற் பூத்த
காமரு வல்லி யொத்தாள். (173)

பண்ணுமின் னிசையு நீருந்
தண்மையும் பாலும் பாலில்
நண்ணுமின் சுவையும் பூவு
நாற்றமு மணியு மங்கேழ்
வண்ணமும் வேறு வேறு
வடிவுகொண் டிருந்தா லொத்த
தண்ணலு முலக மீன்ற
வம்மையு மிருந்த தம்மா. (174)

விண்ணுளார் திசையி னுள்ளார்
வேறுளார் பிலத்தி னுள்ளார்
மண்ணுளார் பிறரும் வேள்வி
மண்டபத் தடங்கி யென்றும்
பண்ணுளா ரோசை போலப்
பரந்தெங்கு நிறைந்த மூன்று
கண்ணுளா ரடியி னீழல்
கலந்துளார் தம்மை யொத்தார். (175)

ஆயபோ தாழி யங்கை
யண்ணல்பொற் கரக நீராற்
சேயவான் சோதி யாடற்
சேவடி விளக்கிச் சாந்தந்
தூயபோ தவிழச் சாத்தித்
தூபமுஞ் சுடருங் கோட்டி

நேயமோ டருச்சித் தைய
　　னிறையருள் பெற்று நின்றான். (176)

விண்டலத் தவரு ளாதி
　　வேதியன் பாத தீர்த்தம்
முண்டகத் தவனு மாலு
　　முனிவரும் புரந்த ராதி
அண்டரு நந்தி தேவு
　　மடுகணத் தவரு மேனைத்
தொண்டரும் புறம்பு முள்ளு
　　நனைத்தனர் சுத்தி செய்தார். (177)

அத்தலை நின்ற மாயோ
　　[1]னாதிசெங் கரத்து நங்கை
கைத்தலங் கமலப் போது
　　பூத்ததோர் காந்த ளொப்ப
வைத்தரு மனுவா யோதக்
　　கரகநீர் மாரி பெய்தான்
[2]கொத்தலர் கண்ணி விண்ணோர்
　　தொழுதுபூ மாரி பெய்தார். (178)

ஆடினா ரரம்பை மாதர்
　　விஞ்சைய ரமுத கீதம்
பாடினா ரரவென் றார்த்துப்
　　பரவினார் முனிவர் வானோர்
மூடினார் புளகப் போர்வை
　　கணத்தவர் முடிமேற் செங்கை
சூடினார் பலரு மன்றற்
　　றொடுகட லின்பத் தாழ்ந்தார். (179)

புத்தனா ரெறிந்த கல்லும்
　　போதென மிலைந்த வேத

1. னனாதிஎசங். பா.வே. 2. தொத்தலர். பா.வே.

வித்தனா ரடிக்கீழ் வீழ
விண்ணவர் முனிவ ரேனோர்
சுத்தநா வாசி [1]கஉறக்
குங்குமத் தோயந் தோய்ந்த
முத்தவா லரிசி வீசி
மூழ்கினார் போக வெள்ளம். (180)

அம்மையோ டப்ப னென்ன
வலர்மணம் போல நீங்கார்
தம்மருள் விளையாட் டாலே
யாற்றநாட் டமியர் போல
நம்மனோர் காணத் தோன்றி
நன்மணம் புணர ஞாலம்
மும்மையு முய்ந்த வென்னாத்
தத்தமின் மொழிய லூற்றார். (181)

காமரு சுரபித் தீம்பால்
கற்பகக் கனிநெய் கன்னல்
நாமரு சுவைய வின்ன
நறுமது பருக்கஞ் செம்பொன்
ஆமணி வட்டத் திண்காற்
பாசனத் தமையப் பெய்து
தேமறு கொன்றை யானைத்
திருக்கைதொட் டருள்க வென்றார். (182)

அங்கைவைத் தமுது செய்தாங்
ககமகிழ்ந் தட்ட மூர்த்தி
கோங்கவிழ் குமுதச் செவ்வாய்
கோட்டிவாண் முறுவல் பூத்தான்
புங்கவர் முனிவர் கற்பின்
மகளிரும் போதின் மேய
மங்கைய ரிருவ ரோடு
மங்கலம் பாட லூற்றார். (183)

1. கஉறிக். பா.வே.

மாக்கடி முளரி வாணன்
        மைந்தரோ டொருங்கு வைகி
நாக்களி னடுநா வாரத்
        துடுவையா னறுநெ யார்த்தி
வாக்கிட வார மாந்தி
        வலஞ்சுழித் தகடு வீங்கித்
தேக்கிடு மொலியி னார்த்து
        நிமிர்ந்தது தெய்வச் செந்தீ. (184)

**சுற்றுநான் மறைக ளார்ப்பத்
        தூரியஞ் சங்க மேங்கக்
கற்றநான் முகத்தோன் வேள்விச்
        சடங்குநூல் கரைந்த வாற்றால்
முற்றமங் கலநாண் சாத்தி
        முழுதுல கீன்றாள் செங்கை
பற்றினன் பற்றி லார்க்கே
        வீடருள் பரம யோகி.** (185)

இணரெரித் தேவுந் தானே
        யெரிவளர்ப் பவனுந் தானே
உணவுகொள் பவனுந் தானே
        யாகிய வொருவன் வையம்
புணர்வுறு போக மூழ்கப்
        புருடனும் பெண்ணு மாகி
மணவினை முடித்தா னன்னான்
        புணர்ப்பையார் மதிக்க வல்லார். (186)

பின்புதன் பன்னி யோடு
        பிறைமுடிப் பெருமான் கையில்
நன்பொரி வாங்கிச் செந்தீ
        நாமடுத் தெனைத்து மான
தன்படி வுணர்ந்த வேத
        முனிவர்க்குத் தக்க தானம்

இன்பகந் ததும்ப நல்கி
யெரிவல முறையான் வந்து. (187)

மங்கலம் புனைந்த செம்பொ
னம்மிமேன் மணாட்டி பாத
பங்கய மலரைக் கையாற்
பரிபுரஞ் சிலம்பப் பற்றிப்
புங்கவன் மனுவா லேற்றிப்
புண்ணிய வசிட்டன் றேவி
எங்கெனச் செங்கை கூப்பி
யெதிர்வர வருட்கண் சாத்தி. (188)

**மணவறை புக்கினது**

விதிவழி வழாது வேள்வி
வினையெலா நிரம்ப விங்ஙன்
அதிர்கட லுலகந் தேற
வாற்றிநான் மறைக ளார்ப்பக்
கதிர்மணி நகையார் வாழ்த்தக்
காமனைக் காயந்த நம்பி
மதிநுதன் மங்கை யோடு
மணவறை தன்னிற் புக்கான். (189)

மனிதரு மிமையா தையன்
மங்கல வனப்பு நோக்கிப்
புனிதவா னவரை யொத்தா
ரவர்க்கது புகழோ வெந்தை
கனிதரு கருணை நாட்டம்
பெற்றவர் கடவு ளோராற்
பனிதரு மலரிட் டேத்தி
வழிபடற் பால ரன்றோ. (190)

............................................

1. துணைவனை. பா.வே.

மானிட ரிமையயோ ரென்னும்
வரம்பில ராகி வேள்வி
தானிட ரகல நோக்கித்
தலைத்தலை மயங்கி நின்றார்
கானிட நடனஞ் செய்யுங்
கண்ணுத லருட்க ணோக்கால்
ஊனிட ரகலு நாளி
லுயர்ந்தவ ரிழிந்தோ ருண்டோ? (191)

மணவறைத் தவிசி னீங்கி
மன்றன்மண் டபத்திற் போந்து
கணமணிச் சேக்கை மேவிக்
கருநெடுங் கண்ணன் வாணி
[1]துணைவனே முதல்வா னோர்க்குஞ்
சூழ்கணத் தொகைக்கு மென்றுந்
தணவறு செல்வந் தந்தோன்
சாறுசால் சிறப்பு நல்கி. (192)

ஏட்டுவாய் முளரி யான்மா
லேனைவா னவரும் தத்தம்
நாட்டுவாழ் பதியிற் செல்ல
நல்விடை கொடுத்து வேந்தர்க்
காட்டுவா னாடிக் காட்டுந்
தன்மைபோ லரசு செய்து
காட்டுவா னாகி யையன்
றிருவுளக் கருணை பூத்தான். (193)

## பாண்டியனாக வீற்றிருந்தது

வேறு

அதிர்விடைக் கொடியங் கயற்கொடி யாக
வராக்கலன் பொற்கல னாகப்
பொதியவிழ் கடுக்கை வேம்பல ராகப்
புலியதள் பொலந்துகி லாக

2. துணைவனை. பா.வே.

மதிமுடி வைர மணிமுடி யாக
மறைகிடந் தலம்புமா மதுரைப்
பதியுறை சோம சுந்தரக் கடவுள்
பாண்டிய னாகிவீற் றிருந்தான். (194)

வேறு

விண்டவழ் மதியஞ் சூடுஞ்
சுந்தர விடங்கப் புத்தேள்
கொண்டதோர் வடிவுக் கேற்பக்
குருதிகொப் பளிக்குஞ் சூலத்
திண்டிறற் சங்கு கன்னன்
முதற்[1]கணத் தேவர் தாமும்
பண்டைய வடிவ மாறிப்
பார்த்திபன் பணியி னின்றார். (195)

[2]தென்னவன் வடிவங் கொண்ட
சிவபர னுலகங் காக்கும்
மன்னவர் சிவனைப் பூசை
செய்வது மறையா றென்று
சொன்னது மன்ன ரெல்லாந்
துணிவது பொருட்டுத் தானும்
அந்நகர் நடுவூ ரன்றோ
ரணிநகர் சிறப்பக் கண்டார். (196)

மெய்ம்மைநூல் வழியே கோயில்
விதித்தருட் குறிநி றீஇப்போர்
இம்மையே நன்மை நல்கு
மிறையென நிறுவிப் பூசை
செம்மையாற் செய்து நீப
வனத்துறை சிவனைக் கால
மும்மையுந் தொழுது வைய
முழுவதும் கோன டாத்தும். (197)

1. கணதேவர். பா.வே. 2. தென்னவர். பா.வே.

பூவரு மயன்மா லாதிப்
புனிதரு முனிவ ரேனோர்
யாவஞ் தனையே பூசித்
திகபர மடைய நின்ற
மூவருண் மேலா முக்கண்
மூர்த்தியே பூசை செய்து
தாவர லிங்க மேன்மைத்
தகுதியா ரளக்க வல்லார். (198)

வேறு

மனித்த ருக்கர சாகித்தெவ் வேந்தர்க்கு
மடங்கலாய் மடநல்லார்க்
கினித்த வைங்கணைக் காளையாய் நிலமகட்
கிணர்த்துழா யணிமாலாய்
அனித்த நித்தமோர்ந் திகபரத் தாசைநீத்
தகந்தெளிந் தவர்க்கொன்றாய்த்
தனித்த மெய்யறி வானந்த மாம்பர
தத்துவ மாய்நின்றார். (199)

அஞ்சாவது திருமணப்படலம் முற்றும்.
ஆகத் திருவிருத்தம் 796.

ஆறாவது

**வெள்ளியம்பலத் திருக்கூத்தாடிய படலம்**

உலகிய னிறுத்து வான்வந்
தொருபரஞ் சுடர்வான் றிங்கட்
குலமணி விளக்கை வேட்டுக்
கோமுடி கவித்தப் பாராண்
டிலகுறு தோற்ற மீதான்
முனிவர ரிருவர் தேற
அலகிலா னந்தக் கூத்துச்
செய்தவா றறைய லுற்றாம். (1)

புண்ணிய மலர்மென் கொம்பை
வேட்டபின் புவனந் தாங்கும்
கண்ணுதன் மூர்த்தி யாய
கவுரியன் மணத்தில் வந்த
மண்ணியல் வேந்தர் வானோர்
மாதவர் பிறரு முண்ண
நண்ணுதி ரென்ன லோடு
நண்ணுவார் விரைவி னெய்த. (2)

பொன்னவிர் கமலம் பூத்த
புனிதநீ ராடித் தத்தம்
நன்னெறி நியம முற்றி
நண்ணினார் புலிக்கா லோனும்
பன்னக முனியுந் தாழ்ந்து
பரவியம் பலத்து ளாடும்
நின்னரு ணடங்கண் டுண்ப
தடியேங்க ணியம மென்றார். (3)

## துவாதசாந்தப் பெருமை

என்னலு மந்தக் கூத்தை
யிங்குநாஞ் செய்துந் தில்லைப்
பொன்னக ருலக மெல்லா
முருவமாம் புருடற் குள்ளம்
[1]இன்னதாந் துவாத சாந்த
மென்றிறை யருளிச் செய்ய
மன்னவ வேனை யங்கம்
யாவென மன்னன் சொல்வான். (4)

அரைக்குமே லுலகே ழென்று
மரைக்குக்கீ ழுலகே ழென்றும்
உரைக்கலா லுலக மெல்லா
முருவமாம் புருடற் கிந்தத்

1. இன்னது . பா.வே.

தரைக்குமே லனந்தந் தெய்வத்
தானமுண் டனைத்துங் கூறின்
வரைக்குறா சிலதா னங்கள்
வகுத்துரை செய்யக் கேண்மின். (5)

**துவாதசாந்தத் தலங்கள்**

திருவள ராரூர் மூலந்
திருவானைக் காவே குய்யம்
மருவளர் பொழில்சூ ழண்ணா
மலைமணி பூர நீவிர்
இருவருங் கண்ட மன்ற
மிதயமாந் திருக்கா ளத்தி
பொருவருங் கண்ட மாகும்
புருவமத் தியமாம் காசி. (6)

பிறைதவழ் கயிலைக் குன்றம்
பிரமரந் திரமாம் வேதம்
அறைதரு துவாத சாந்த
மதுரையீ ததிக மெந்த
முறையினா லென்னின் முன்னர்த்
தோன்றிய முறையா லென்றக்
கறையறு தவத்த ரோடு
கவுரியன் கோயில் புக்கான். (7)

தன்னரு ளதனா னீத்த
தன்னையே தேடிப் போந்த
மின்னவிர் கயிலை தானோ
விடையுரு மாறி மன்றாய்
மன்னிய தேயோ திங்கண்
மண்டல மேயோ வென்னப்
பொன்னவிர் விமானக் கீழ்பால்
வெள்ளியம் பொதுவுண் டாக. (8)

மின்பயில் பரிதிப் புத்தேள்
பாற்கடல் விளங்கி யாங்குப்
பின்பதன் மிசைமா ணிக்கப்
பீடிகை தோன்றிற் றன்ன
தன்பர்த முளமே யாகு
மல்லது வேதச் சென்னி
என்பதா மஃதே யன்றி
யாதென விசைக்கற் பாற்றே ! (9)

அன்னதோர் தவிசி னும்ப
ராயிரங் கரத்தா லள்ளித்
துன்னிருள் விழுங்குங் கோடி
சூரிய ரொருகா லத்து
மன்னின ருதித்தா லொப்ப
மனமொழி பக்கங் கீழ்மேல்
பின்முதல் கடந்த ஞானப்
பேரொளி வடிவாய்த் தோன்றி. (10)

முந்துறு கணங்கண் மொந்தை
தண்ணுமை முழக்கஞ் செய்ய
நந்திமா முழவந் தாக்க
நாரண னிடக்கை யார்ப்ப
வந்துகந் தருவ நூலின்
மரபுளி யிருவர் பாட
வைந்துதுந் துபியுங் கல்லென்
றார்கலி முழக்கங் காட்ட. (11)

மதுமுகத் தலர்ந்த வெண்டா
மரைமகள் சுருதி கூட்டச்
சதுமுகத் தொருவன் சாம
கீதயாழ் தடவிப் பாட
விதுமுகத் தருகு மொய்க்கு
மீனென ஞான வெள்ளிப்
பொதுமுகத் தமரர் தூற்றும்
பூமழை யெங்கும் போர்ப்ப. (12)

பொருங்கட னிறத்த செந்தீப்
பொங்குளைக் குறளன் மீது
பெருங்கடல் வடவைச் செங்கண்
பிதுங்கமேற் றிரிந்து நோக்கி
முருங்கட லெரியிற் சீற
முதுகிற வலத்தா ளூன்றிக்
கருங்கடன் முளைத்த வெய்யோன்
காட்சியிற் பொலிந்து நின்று. (13)

கொய்யுஞ்செங் கமலப் போது
குவிந்தென வெடுத்துக் கூத்துச்
செய்யும்புண் டரிகத் தாளுந்
திசைகடந் துளவீ ரைந்து
கையுந்திண் படையுந் தெய்வ
மகளிர்மங் கலநாண் காத்த
மையுண்ட மிடறுஞ் சங்க
வார்குழை நுழைந்த காதும். (14)

செக்கரஞ் சடையுந் தேசார்
வெண்டிரு நீறுந் தெய்வ
முக்கணு முரகக் கச்சு
முள்ளெயி றிமைக்கு மார்பும்
மைக்கருங் கயற்க ணங்கை
வல்லியி னொதுங்கி நிற்கும்
பக்கமு மவண்மேல் வைத்த
பார்வையு நகையுந் தோன்ற. (15)

கங்கையா றலம்பு மோசை
கடுக்கைவண் டிரங்கு மோசை
மங்கல முழவி னோசை
மந்திர வேத வோசை
செங்கையா டெரியி னோசை
திருவடிச் சிலம்பி னோசை
எங்கணு நிரம்பி யேன்ப
ரிருசெவிக் கமுத மூற்ற. (16)

ஆடினா னமல மூர்த்தி
யஞ்சலி முகிழ்த்துச் சென்னி
சூடினா ரடியில் வீழ்ந்தார்
சுருதியா யிரநா வாரப்
பாடினார் பரமா னந்தப்
பரவையிற் படிந்தா ரன்பு
நீடினார் நிருத்தா னந்தங்
காண்பது நியமம் பூண்டார். (17)

முனிவர்கந் தருவர் வானோர்
தானவர் மோன யோகர்
புனிதகிம் புருட ராதிப்
புலவரு மிறைஞ்சி யன்பிற்
கனிதரு மின்பத் தாழ்ந்தார்
திருமணங் காண வந்த
மனிதருங் காணப் பெற்றார்
மாதவர் பொருட்டான் மன்னோ. (18)

**நாதனைப் பாடுந்திறம்**

அனந்தனா முனிவர் வேந்த
னளவிலா னந்த மூறி
மனந்தனி னிரம்பி மேலும்
வழிவது போல மார்பம்
புனைந்தபுண் ணியவெண் ணீறு
கரைந்திடப் பொழி[1]கண் ணீருள்
நனைந்திரு கரமுங் கூப்பி
நாதனைப் பாடு கின்றான். (19)

பராபர முதலே போற்றி
பத்தியில் விளைவாய் போற்றி
சராசர மாகி வேறாய்
நின்றதற் பரனே போற்றி

1. கண்ணீரும். பா.வே.

கராசல வுரியாய் போற்றி
　　கனகவம் பலத்து ளாடும்
நிராமய பரமா னந்த
　　நிருத்தனே போற்றி போற்றி ! (20)

ஒன்றாகி யைந்தா யையைந்
　　துருவாகி வருவாய் போற்றி
இன்றாகிச் சென்ற நாளா
　　யெதிர்நாளா யெழுவாய் போற்றி
நன்றாகித் தீய தாகி
　　நடுவாகி முடிவாய் மன்றுள்
நின்றாடும் பரமா னந்த
　　நிருத்தனே போற்றி போற்றி ! (21)

அடியரேம் பொருட்டு வெள்ளி
　　யம்பலத் தாடல் போற்றி
பொடியணி தடந்தோள் போற்றி
　　புரிசடை மகுடம் போற்றி
கடியவிழ் மலர்மென் கூந்தற்
　　கயல்விழி பாகம் போற்றி
[1]நெடியநற் பரமா னந்த
　　நிருத்தனே போற்றி போற்றி ! (22)

என்றுநின் றேத்தி னான்பின்
　　னிருவரை நோக்கி வெள்ளி
மன்றுணின் றாடா நின்ற
　　மறைமுதல் கருணை கூர்ந்து
நன்றுநீர் வேட்ட தென்னென்
　　றருள்செய நாதன் பாதந்
துன்றுமெய் யன்பிற் றாழ்ந்து
　　தொழுதுநின் றிதனைச் சொல்வார். (23)

---

1. நெடியவ பரமானந்த. பா.வே. நெடியதற் பரமானந்த. பா.வே

எந்தையித் திருக்கூத் தென்று
மிந்நிலை நின்றி யார்க்கும்
பந்தவெம் பாச நீங்கப்
[1]பரித்தருள் செய்தி யென்னச்
செந்தமிழ்க் கன்னி நாடு
செய்தமா தவப்பே றெய்தத்
தந்தன மென்றான் வேதந்
தலைதடு மாற நின்றான். (24)

[2]அராமுனி யீது வேண்டு
மாதியெம் பெரும விந்த
நிராமய பரமா னந்த
நிருத்தநேர் கண்டோ ரெல்லாந்
தராதல மிசைவந் தெய்தாத்
தனிக்கதி பெறுதல் வேண்டும்
பராபர வென்று தாழ்ந்தான்
பகவனு மதற்கு நேர்ந்தான். (25)

ஆர்த்தனர் கணத்தோர் கைகோத்
தாடின ரலர்பூ மாரி
தூர்த்தனர் விண்ணோர் கண்ணீர்
துளம்பினர் முனிவ ராகம்
போர்த்தனர் புளக மன்பிற்
புதைந்தனர் விழுங்கு வார்போற்
பார்த்தனர் புல்லிக் கொண்டார்
பரவியவ் விருவர் தம்மை. (26)

வேறு

அனித்த மாகிய பூதமைம் பொறிபுல
னாதியா றாறாகி
இனித்த மாயையோ டிருவினைத் தொடக்கினு
மிருளினும் வேறாகித்

---

*1. பரித்தருள் செய்தி. பா.வே. 2. அராமுனி மீது . பா.வே. (மீது – பின்னும்; மேலும்.)*

தனித்த யோகிக ளகநிறைந் தாடிய
தனிப்பெருந் திருக்கூத்தைக்
குனித்த வண்ணமாக் கண்டவர்க் கிகபரங்
கொடுத்தவ னுறைகின்றான். (27)

குனிவி லாதிரைத் தினந்தொடுத் தெதிர்வரு
கொடுவிலாதிரை யெல்லை
புனித வாடக முளரிதோய்ந் தத்தனிப்
பொதுநடந் தரிசித்தங்
கினித மர்ந்துநூற் றெண்மடங் கைந்தெழுத்
தெண்ணியிந் நிலைநிற்குங்
கனியு மன்பினா ரெண்ணியாங் கெய்துவர்
கருதிய வரமெல்லாம். (28)

ஆறாவது
வெள்ளியம்பலத் திருக்கூத் தாடிய படலம்
முற்றும்.
ஆகத் திருவிருத்தம். 824.

ஏழாவது
## குண்டோதரனுக்கு அன்னமிட்ட படலம்

பன்ன கேசனு மடுபுலிப் பாதனும் பணிய
மின்னு வார்சடை மன்னவன் வெள்ளிமன் றாடல்
சொன்ன வாறிது பசித்தழல் சுடவொரு பூதம்
அன்ன மாமலை தொலைத்தவா றெடுத்தினி [1]யறைவாம். (1)

கன்னி யர்க்கர சாயினாள் கடிமனை புகுந்த
மின்னி யற்சடை மாதவர் வேதிய ரேனோர்
எந்நி லத்துள மன்னவர் யாவர்க்கு முறையே
பொன்னி யற்கலத் தறுசுவைப் போனக மருத்தா. (2)

1. தறைவாம்

பூசு கின்றவு முடுப்பவும் பூண்பவும் பழுக்காய்
வாச மெல்லிலை யேனவு மம்முறை வழங்காத்
தேச மன்னவ ரேனையோர் செல்லுநர்ச் செலுத்தி
ஈச னன்புறு கற்பினா ளிருக்குமவ் வேலை. (3)

மடைவ ளத்தொழிற் புலவர்வந் தடியிணை வணங்கி
அடிய ரேமட்ட போனக மாயிரத் தொன்றின்
இடைய தாயினுந் தொலைந்தில தியாங்கண் மேற்செய்யக்
கடவ தேதெனப் பிராட்டிதன் கணவர்முன் குருகா. (4)

பணிந்தொ துங்கிநின் றடிகண்முப் பத்துமுக் கோடி
கணங்க டம்மொடு மிங்கெழுந் தருள்வது கருதி
இணங்கு மின்சுவைப் போனக மெல்லையின் றாக்கி
உணங்கு கின்றதுண் டெஞ்சிய தெனைத்தென வுரைக்கின். (5)

இமையக் குன்றமு மடைகலா யிதன்புறங் கிடந்த
சிமையக் குன்றுக ளீட்டமுஞ் சேர்ந்தென நிமிரச்
சமையக் கொட்டிய வாலரிப் புழுக்கலுஞ் சாதக்
கமையக் கொட்டிய கறிகளின் வருக்கமு மனைத்தே. (6)

என்ற போதிறை யெம்பிரான் றேவியா ரிடத்தில்
ஒன்று மன்பினா லொருவிளை யாடலை நினைத்தோ
தன்ற னிக்குடைப் பாரிடத் தலைவன தாற்றல்
அன்றி யாவரு மறிந்திடக் காட்டவோ வறியேம். (7)

சிறிது வாணகை செய்துமூ வேந்தரிற் சிறந்த
மறுவில் மீனவ னரும்பெறன் மகளுனக் கரிதிற்
பெறுவ தேதுவான் றருவுநின் பணிசெயப் பெற்றிங்
குறைவ தேற்பிறர் திருவெலா முன்னதே யன்றோ. (8)

அளவி லாதநின் செல்வத்தின் பெருக்கைநா மறிய
விளைவு செய்தனை போலுநின் விருந்துணப் பசியாற்
களைய டைந்தவ ராகிநங் கணத்தினுட் காணேந்
தளவ மூரலா யாஞ்செயத் தக்கதே தென்றான். (9)

## குண்டோதரன் பசியினால் வாடியது

அடுக்க நின்றகுண் டோதர னகட்டிடை வடவை
மடுக்க வுன்னினா னதுவந்து வயிற்றெரி பசியாய்த்
தொடுக்க வாலமுண் டாங்குடல் சோர்ந்துவேர்த் தாவி
ஒடுக்க முற்றைய பசியினா லுயங்கினே னென்றான். (10)

குடையெ டுக்குமிக் குறியதாட் குறட்கொரு பிடிசோ
றிடுமி னப்புறஞ் சோறுமா லெனத்தொழு தெல்லாம்
உடைய நாயகி போயினாள் குறியனு முடனே
நடைத ளர்ந்துகண் புதைந்துவாய் புலர்ந்திட நடந்தான். (11)

படைக்க ணேவல ரிறைமகள் பணியினாற் பசிநோய்
தொடுத்த வன்றனைக் கொண்டுபோய்ச் சொன்றிமுன் விடுத்தார்
அடுத்தி ருந்ததே கண்டன ரன்னமா மலையை
எடுத்த யின்றது மடிசிலங் கிருந்ததுங் காணார். (12)

சிலம்பு நூபுரச் சீறடிச் சேடியர் சில்லோர்
அலம்பு வால்வளைக் கைநெரித் ததிசய மடைந்தார்
புலம்பு மேகலை யார்சிலர் பொருக்கென வெகுண்டார்
கலம்பெய் பூண்முலை யார்சிலர் [1]கண்புதைத் திரிந்தார். (13)

முரவை போகிய முரிவில்வா னூரல்பால் வறையல்
கருனை தீம்பய றடுதுவை பல்வகைக் கறிகள்
விரவு தேம்படு பாறயி ரிழுதுதேன் வெள்ளம்
வரைவி லாதன மிடாவொரு வாரிவாய் மடுத்தான். (14)

பல்ப ழக்குவை வேற்றுப் பண்ணியங் கன்னல்
மெல்சு வைத்தண்டு தெங்கிவை யன்றியும் வேவா
வல்சி காய்களின் வருக்கமு நுகர்ந்துமா றாமல்
எல்லை தீர்நவ பண்டமு மெடுத்துவாய் மடுத்தான். (15)

.........................................

1. கண்புதைத் திருந்தார். பா.வே.

பாரித் துள்ளவிப் பண்டமும் பரூஉக்குறுங் கையால்
வாரித் தன்பெரு வயிற்றிடை வைப்பவுந் துடுவை
பூரித் தாகுதி பண்ணிய தழலெனப் பொங்கிக்
கோரித் தொன்பது வாயிலும் பசித்தழல் கொளுத்த. (16)

அலங்க லோதிகண் டதிசய மடைந்துதன் னன்பின்
நலங்கொ ணாயகன் முன்புபோய் நாணமுட் கிடப்ப
இலங்கு பூங்குழல் சுவன்மிசை யிறக்கியிட் டொல்கி
நிலங்கி ளைத்துநின் றாணிலை கண்டன னிருபன். (17)

அஞ்சி லோதியை வினவுவா னறிகலான் போலக்
குஞ்சி யாரழ லன்னவக் குடவயிற் றவனுண்
டெஞ்சி யுள்ளவேற் பூதங்க ளின்னமும் விடுத்துன்
நெஞ்சு வப்பவே யருத்துது மென்னலு நிமலை. (18)

ஐய வின்னுமிக் குறட்பசி யடங்கிடா வேறு
வெய்ய பாரிட வீரரை விடுத்தியே லெடுத்து
வையம் யாவையும் வயிற்றிடை வைப்பரே யதனாற்
செய்ய காலருத் திரப்பெயர் தேற்றமா முனக்கே ! (19)

சங்க வார்குழைக் குறண்மகன் றன்செய றானே
இங்கு வந்துரை செய்திட வறிதியென் றிறைமுன்
மங்கை நாயகி குமுதவாய் மலர்பொழு தெயிற்றுத்
திங்கள் வாய்முழை யான்பசித் தீச்சுட வந்தான். (20)

நட்ட மாடிய சுந்தர நங்கையெம் பிராட்டி
அட்ட போனகம் பனிவரை யனையவாய்க் கிடந்த
தொட்டு வாய்மடுத் திடவுமென் சுடுபசி தணியா
திட்டு ணாதவர் வயிறுபோற் காந்துவ தென்றான். (21)

கையர் முப்புரத் திட்டதீக் கடும்பசி யுருவாய்ப்
பொய்ய னேன்வயிற் றிடைக்குடி புகுந்ததோ வென்னுங்

கையெறிந்திடு மண்டங்கள் வெடிபடக் கதறும்
ஐய கோவெனு முயிர்த்திடு மாவிசோர்ந் தயரும். (22)

ஏழாவது
குண்டோதரனுக்கு அன்னமிட்ட படலம்
முற்றும்

ஆகத் திருவிருத்தம் 846.

எட்டாவது

**அன்னக்குழியும் வைகையும் அழைத்த படலம்**

வேத நாயகன் பாரிட வேந்தனுக் கமையா
ஓத னாதிக ளருத்திய தன்மையீ துவையும்
போத ராமையா லமைவுறப் போனகக் குழிதந்
தோத மாநதி யருத்திய செய்தியு முரைப்பாம். (1)

கவன மால்விடை யாளிபின் கடிகமழ் தென்றற்
பவள மாமலை யாட்டியைப் பார்த்துளே நகைத்துத்
தவள மாபசி யுடையவன் றன்பொருட் டன்ன
புவன மாதினை நினைத்தன னினைக்குமுன் போந்தாள். (2)

நாற்ற டந்திசைத் தயிர்க்கட னனந்தலை நிலங்கீண்
டூற்றெ முந்துநாற் கிடங்கரா யுதித்தெழுந் தாங்கு
மாற்ற ருஞ்சுவைத் தீந்தயிர் வாலரிப் பதத்தோ
டேற்றெ முந்தது நாற்குழி யிடத்திலும் பொங்கி. (3)

குரும திக்குல மன்னவன் மருகனக் குண்டப்
பெருவ யிற்றிரு பிறையெயிற் றெரிசிகைப் பேழ்வாய்
ஒருகு றட்குடை வீரனை யுள்பசி தணியப்
பருகெ னப்பணித் தருளலும் பாரிடத் தலைவன். (4)

அத்த யிர்ப்பதக் கிடங்கரி லலைகடல் கலக்கும்
மத்தெ னக்கரம் புதைத்தெடுத் தெடுத்துவாய் மடுத்துத்
துய்த்தி டப்பசி விடுத்தது சுருதிநா யகன்றாட்
பத்தி வைத்துவீ டுணர்ந்தவர் பழவினைத் தொடர்போல். (5)

வாங்கி வாங்கிவாய் மடுத்தது முடம்பெலாம் வயிறாய்
வீங்கி னான்றரை கிழிபடப் பொருப்பென வீழ்ந்தான்
நீங்கு நீளுயிர்ப் பிலனுடல் புரண்டன னீர்வேட்
டாங்கு நீர்நிலை தேடுவா னாயினா னெழுந்தான். (6)

ஆவி யன்னவர்ப் பிரிந்துறை யணங்கனார் போலக்
காவி நாண்மலர் தாமரைக் கடிமலர் வாட
வாவி யோடையுங் குளங்களும் வறப்பவாய் வைத்துக்
கூவ நீணிலை நீர்களும் பசையறக் குடித்தான். (7)

அனைய னாகியு நீர்நசை யாற்றலன் வருந்தும்
வினைய னாகிவா னதிச்சடை வேதியன் பாதத்
தினைய நாதனுந் தன்றிரு முடியின்மீ திருக்கும்
[1]நனைய நாண்மல ரோதியைப் பார்த்தொன்று நவில்வான் (8)

தேங்கு நீர்த்திரை மாலிகைச் செல்விநீ யிந்த
வாங்கு நீர்த்தடம் புரிசைசூழ் மதுரையின் மாடோர்
ஓங்கு நீத்தமா யொல்லென வருதியென் றுரைத்தான்
நீங்கு நீர்த்திரு [2]மாதவ ணொருமொழி நிகழ்த்தும். (9)

அன்று மெம்பிரா னாணையாற் பகீரதன் பொருட்டுச்
சென்று நீயொரு தீர்த்தமாய்த் திளைப்பவர் களங்கம்
ஒன்று தீவினைத் தொடக்கறுத் தெழுகெனப் பணித்தாய்
இன்று மோர்நதி யாகெனப் பணித்தியே லென்னை. (10)

தெரிசித் தோர்படிந் தாடினோர் செங்கையா லேனும்
பரிசித் தோர்பவத் தொடர்ச்சியின் பற்றுவிட் டுள்ளத்

1. நனையவார்குழ லோதியைப் பா.வே. 2. மாதகு மொதுமொழி. பா.வே.

துருசித் தோர்வுறு பத்தியும் விச்சையு முணர்வாய்
விரிசித் தோர்வுறு மெய்யுணர் வால்வரும் வீடும். (11)

தந்தி டப்பணித் தருளெனாத் தடம்புனற் செல்வி
சுந்த ரப்பெருங் கடவுளை வரங்கொண்டு தொழுது
வந்த ளப்பிலா வேகமோ டெழுந்துமா நதியாய்
அந்த ரத்துநின் றிழிபவ ளாமென வருமால். (12)

## வைகையாற்றுப் பெருமை

வேறு

திரைவளை யணிகர முடையவள்
செழுமணி நகையுடையாள்
நுரைவளை துகிலுடை யவள்கொடி
நுணுகிடை யவளறனீள்
விரைவளை குழலுடை யவள்கயல்
விழியுடை யவள்வருவாள்
வரைவளை சிலையவள் முடிமட
வரனதி வடிவினுமே. (13)

விரைபடு மகிலரை பொரிதிமில்
வெயில்விடு மணிவரையோ
டரைபட முதுகினை யலறிட
வடியொடு கடிதகழாக்
குரைபடு கழலிற வுளர்சிறு
குடியடி யொருபறியாக்
கரைபட வெறிவது வருவது
கடுவிசை வளியெனவே. (14)

பிணையொடு கலைபிடி யொருகரி
பிரிவில வொடுபழுவப்
பணையொடு கருமுக வயிறணை
பறழொடு தழுவியதன்
துணையொடு கவிபயின் மரநிரை
தொகையொடு மிறவுளர்வெங்

கணையொடு சிலையித ணொடுமெறி
கவணொடு கொடுவருமால். (15)

அடியிற நெடுவரை யுதைவன
வகழ்வன வகழ்மடுவைத்
திடரிடு வனமழை செருகிய
சினைமர நிரைதலைகீழ்
படவிடி கரைதொறு நடுவன
படுகட லுடைமுதுபார்
நெடுமுது கிருபிள வுறவரு
நெடுநதி யினவலையே. (16)

பிளிறொலி யினமுது மரமகழ்
பெருவலி யினவசையா
வெளிறடி வனவெறி மணியின
விரைசெல வினமதமோ
டொளிறளி யினநுரை முகபட
முடையன வெனவரலாற்
களிறனை யதுமது விதழிகள்
கவிழ்சடை யணிகுடிஞை. (17)

நீடிய பிலமுறு நிலையின
நிருமலன் மதிமுடிமீ
தாடிய செயலின வெயிலுமி
ழுருமணி தலையினநீள்
கோடிய கதியின நிரைநிரை
குறுகிய பலகாலின்
ஓடிய வலியின வளையுட
லுரகமு மெனவருமால். (18)

மண்ணகழ் தலின்வளை யணிகரு
மாவனை யதுமிசை போய்
விண்ணள வலினவு ணர்களிறை
விடுபுன லொடுநெடுகும்

அண்ணலை யனையது சுவையிழு
தளையளை வுறுசெயலாற்
கண்ணனை யனையது நெடுகிய
கடுகிய கதிநதியே! (19)

திகழ்தரு கரிபரி கவரிகள்
செழுமணி யொடுவருமா
றிகழ்தரு குடபுல வரசர்க
ணெறிசெய்து கவர்திருவோ
டகழ்தரு பதிபுகு மதிகுல
வரசனை யதையலதேற்
புகழ்தரு திறையிட வருகுட
புலவர சனுநிகரும். (20)

ஆரொடு மடலவிழ் பனையொடு
மரநிக ரிலைநிம்பத்
தாரொடு புலியொடு சிலையொடு
தகுகய லொடுதழுவாப்
பாரொடு திசைபர வியதமிழ்
பயிலர சர்கள்குழுமிச்
சீரொடு பலதிரு வொடுவரு
செயலனை யதுநதியே! (21)

கல்லார் கவிபோற் கலங்கிக்கலை
மாண்ட கேள்வி
வல்லார் கவிபோற் பலவான்றுறை
தோன்ற வாய்த்துச்
செல்லாறு தோறும் பொருளாழ்ந்து
தெளிந்து தேயத்
தெல்லாரும் வீழ்ந்து பயன்கொள்ள
விறுத்த தன்றே! (22)

வண்டோதை மாறா மலர்வேணியின்
வந்த நீத்தங்

கண்டோத நஞ்சுண் டருள்கண்ணுதல்
மூர்த்தி பேழ்வாய்
விண்டோ தணியா தென்விடாயென
வெம்பி வீழ்ந்த
குண்டோ தரனை விடுத்தானைக்
குடிலைஞ் ஞாங்கர். (23)

அடுத்தா னதியின் னிடைபுக்கிருந்
தாற்ற லோடும்
எடுத்தான் குறுங்கை யிரண்டுங்கரை
யேற நீட்டித்
தடுத்தான் மலைபோ னிமிர்தண்புனல்
வாயங் காந்து
மடுத்தான் விடாயுங் கடலுண்ணு
மழையு நாண. (24)

தீர்த்தன் சடைநின் றிழிதீர்த்த
மருந்தி வாக்குக்
கூர்த்தின்பு கொண்டு குழகன்றிரு
முன்ன ரெய்திப்
பார்த்தன் பணிந்த பதிமுன்பணிந்
தாடிப் பாடி
ஆர்த்தன் புருவாய்த் துதித்தானள
வாத கீதம். (25)

பாட்டின் பொருளா னவன்பாரிட
வீரன் பாடல்
கேட்டின்ப மெய்திக் கணங்கட்குக்
கிழமை நல்கி
மோட்டின் புனன்மண் முறைசெய்
திருந்தா னளகக்
காட்டின் புறம்போய் மடங்குங்கயற்
கண்ணி யோடும். (26)

வேறு

தீர்த்த னிதழிச் சடைநின்று
மிழிந்து வரலாற் சிவகங்கை
தீர்த்த னுருவந் தெளிவோர்க்கு
ஞானந் தரலாற் சிவஞான
தீர்த்தங் காலிற் கடுகிவருஞ்
செய்தி யாலே வேகவதி
தீர்த்தங் கிருத மாலையென
வைகை நாமஞ் செப்புவரால். (27)

எட்டாவது அன்னக் குழியும் வையையு மழைத்த
படலம் முற்றும்
ஆகத் திருவிருத்தம். 873

ஒன்பதாவது
## எழுகட லழைத்த படலம்

முடங்கன்மதி முடிமறைத்த முடித்தென்னன் குறட்கன்னக்
கிடங்கரொடு நதியழைத்த கிளர்கருணைத் திறனிதுமேல்
மடங்கல்வலி கவர்ந்தான்பொன் மாலைபடிந் தாடவெழு
தடங்கடலு மொருங்கழைத்த தன்மைதனைச் சாற்றுவாம். (1)

ஓதவரும் பொருள்வழுதி யுருவாகி யுலகமெலாஞ்
சீதளவெண் குடைநிழற்றி யறச்செங்கோல் செலுத்துநாள்
போதவரும் பொருணர்ந்த விருடிகளும் புனிதமுனி
மாதவரும் வரன்முறையாற் சந்தித்து வருகின்றார். (2)

வேதமுனி கோதமனுந் தலைப்பட்டு மீள்வானோர்
போதளவில் கற்புடைய பொன்மாலை மனைபுகுந்தான்
மாதவளும் வரவேற்று முகமனுரை வழங்கிப்பொன்
ஆதனமிட் டஞ்சலிசெய் தரியதவத் திறங்கேட்பாள். (3)

கள்ளவினைப் பொறிகடந்து கரைகடந்த மறைச்சென்னி
உள்ளபொருள் பரசிவமென் றுணர்ந்தபெருந் தகையடிகேள்
தள்ளரிய பவமகற்றுந் தவமருள்செய் கெனக்கருணை
வெள்ளமென முகமலர்ந்து முனிவேந்தன் விளம்புமால். (4)

தவவலியா லுலகீன்ற தடாதகைக்குத் தாயானாய்
சிவபெருமான் மருகனெனுஞ் சீர்பெற்றாய் திறன்மலயத்
துவசனருங் கற்புடையாய் நீயறியாத் தொல்விரதம்
அவனியிடத் தெவ றிவரானாலு மியம்பக்கேள். (5)

மானதமே வாசிகமே காயிகமெ யெனவகுத்த
ஈனமில்சீர்த் தவமூன்றா மிவற்றின்மா னதந்தரும
தானமிசை மதிவைத்த றயவுபொறை மெய்சிவனை
மோனமுறத் தியானித்த லைந்தடங்கன் முதலனந்தம். (6)

வாசிகமைந் தெழுத்தோதன் மனுப்பஞ்ச சாந்திமறை
பேசுசத வுருத்திரந்தோத் திரமுரைத்தல் பெருந்தருமங்
காசகல வெடுத்தோதன் முதலனந்தங் காயிகங்கள்
ஈசனருச் சனைகோயில் வலஞ்செய்கை யெதிர்வணங்கல்.(7)

நிருத்தனுறை பதிபலபோய்ப் பணிதல்பணி நிறைவேற்றல்
திருத்தன்முடி நதியாதி தீர்த்தயாத் திரைபோய்மெய்
வருத்தமுற வாடலிவை முதற்பலவவ் வகைமூன்றிற்
பொருத்தமுறு காயிகங்கள் சிறந்தனவிப் புண்ணியத்துள்.(8)

திருத்தயாத் திரையதிக மவற்றதிகஞ் சிவனுருவாந்
திருத்தமாங் கங்கைமுதற் றிருநதிக டனித்தனிபோய்த்
திருத்தமா டுவதரிதத் திருநதிக ளவைவந்து
திருத்தமாய் நிறைதலினா லவற்றதிகந் திரைமுந்நீர். (9)

என்றுமுனி விளம்பக்கேட் டிருந்தகாஞ் சனமாலை
துன்றுதிரைக் கடலாடத் துணிவுடைய விருப்பினளாய்த்
தன்றிருமா மகட்குரைத்தாள் சிறிதுள்ளந் தளர்வெய்திச்
சென்றிறைவற் குரைப்பலெனச் செழியர்தவக்
கொழுந்தனையாள். (10)

தன்றன்னை யுடையபெருந் தகைவேந்தர் பெருமான்முன்
சென்றன்ன மெனநின்று செப்புவாள் குறள்வீரற்
கன்றன்னக் குழியினொடு மாறழைத்த வருட்கடலே
இன்றன்னை கடலாட வேண்டினா ளென்றிரந்தாள். (11)

தேவிதிரு மொழிகேட்டுத் தென்னவராய் நிலம்புரக்குங்
காவிதிகழ் மணிகண்டர் கடலொன்றோ வெழுகடலுங்
கூவிவர வழைத்துமென வுன்னினார் குணபாலோர்
வாவியிடை யெழுவேறு வண்ணமொடும் வருவனவால். (12)

துண்டமதித் திரளனைய சுரிவளைவாய் விடவுதைத்து
வெண்டவள நுரைததும்பச் சுறாவேறு மிசைக்கொட்பத்
தண்டரள மணித்தொகுதி யெடுத்தெறியுஞ் தரங்கநிரை
அண்டநெடு முகடுரிஞ்ச வார்த்தெழுந்த கடலேழும். (13)

காணுமா நகர்பனிப்பக் கலிமுடிவி லயன்படைப்புக்
கோணுமா றெழுந்ததெனக் கொதித்தெழுந்த கடலரவம்
பூணுநா யகனகில புவனமெலாங் கடந்ததிரு
ஆணையா லவனடிசென் றடைந்தார்போ லடங்கியதால். (14)

தன்வண்ண மெழுகடலின் றனிவண்ண மொடுகலந்து
பொன்வண்ண நறும்பொகுட்டுப் பூம்பொய்கை பொலிவெய்தி
மின்வண்ணச் சடைதாழ வெள்ளிமணி மன்றாடும்
மன்வண்ண மெனவெட்டு வண்ணமொடும் வயங்கியதால்.(15)

ஒன்பதாவது
எழுகடலழைத்த படலம் முற்றும்
ஆகத் திருவிருத்தம் - 888

பத்தாவது

## மலையத்துவசனை அழைத்த படலம்

எழுகட லழைத்தவா றியம்பி னாமினிச்
செழுமதி மரபினோன் சேணி ழிந்துதன்
பழுதில்கற் பில்லொடும் பரவை தோய்ந்தரன்
அழகிய திருவுரு வடைந்த தோதுவாம். (1)

புரவலன் றடாதகைப் பூவை யோடும்வந்
துரவுநீர்க் கடன்மருங் குடுத்த சந்தனம்
மரவமந் தாரமா வகுளம் பாடலம்
விரவுநந் தனத்தரி யணையின் மேவினான். (2)

தாதவிழ் மல்லிகை முல்லை சண்பகப்
போதுகொய் திளையருஞ் சேடிப் பொற்றொடி
மாதருங் கொடுத்திட வாங்கி மோந்துயிர்த்
தாதர மிரண்டற வமரு மெல்லையில். (3)

தன்னமர் காதலி தன்னை நோக்கியே
மன்னவ னுன்பொருட் டேழு வாரியும்
இந்நக ரழைத்தன மீண்டுப் போந்துநின்
அன்னையை யாடுவா னழைத்தி யாலென. (4)

மடந்தையு மன்னையைக் கொணர்ந்து வாவிமா
டடைந்தன ளாகமற் றவள்பு ராணநூற்
படர்ந்தகேள் வியர்தமை நோக்கிப் பௌவநீர்
குடைந்திடும் விதியெவன் கூறு மென்னவே. (5)

கோதறு கற்பினாய் கொழுநன் கைத்தலங்
காதலன் தைத்தல மன்றிக் கன்றின்வால்
ஆதலிம் மூன்றிலொன் றங்கை பற்றியே
ஓதநீ ராடுதன் மரபென் றோதினார். (6)

மறையவர் வாய்மைபொன் மாலை கேட்டுமேற்
குறைவறத் தவஞ்செயாக் கொடிய பாவியேற்
கிறைவனுஞ் சிறுவனு மில்லை யேயினிப்
பெறுவது கன்றலாற் பிறிதுண் டாகுமோ ? (7)

ஆதலாற் கன்றின்வால் பற்றி யாடுகோ
மாதரா யென்றுதன் மகட்குக் கூறலும்
வேதன்மால் பதவியும் வேண்டி னார்க்கருள்
நாதனா ருயிர்த்துணை யாய நாயகி. (8)

தன்னுயிர்க் கிழவனை யடைந்து தாழ்ந்துதன்
அன்னைதன் குறையுரை யாட வாண்டகை
மன்னவன் வலாரியோ டொருங்கு வைகிய
தென்னவன் மேன்மனஞ் செலுத்தி னானரோ ! (9)

வேறு

சிலையத் திரியார் திருவுள் ளமுணர்ந்
தலையத் திரியட் டவனா தனநீத்
துலையத் திரியொத் தவிமா னமொடு
மலையத் துவசச் செழியன் வருமால். (10)

மண்பே றடைவான் வருமேழ் கடல்வாய்
எண்பே றடையா வருளின் னமுதைப்
பெண்பே றதனாற் பெறுபே றிதெனாக்
கண்பே றடைவா னெதிர்கண் டனனே ! (11)

வந்தான் மருகன் சரணம் பணிவான்
முந்தா முனமா மனெனும் முறையால்
அந்தா மரையங் கையமைத் துமகட்
டந்தா னையெதிர்ந் துதழீஇ யினனால். (12)

ஆத்தன் றிருவுள் ளமகிழ்ந் தருளாற்
பார்த்தன் புறிரம் பியபன் னியொடுந்

தீர்த்தம் புகுந்தா டியசெல் கவெனப்
பூத்தண் பொருனைப் புனனா டவனும். (13)

முன்னைத் தவமெய் திமுயன் றுபெறும்
அன்னப் பெடையன் னவள்வந் தெதிரே
தன்னைத் தழுவத் தழுவிக் கிரிவேந்
தென்னக் குறையா மகிழ்வெய் தினனே! (14)

தண்டே மொழிவேள் விதவக் குறையாற்
கண்டே னிலனென் றுகருத் தவலம்
உண்டே யஃதிவ் வுவகைக் களிதேன்
வண்டே யெனவுண் டுமறந் தனனால். (15)

சேணுற் றவனைச் சிலநாள் கழியக்
காணுற் றவள்போ னிறைகற் புடையாள்
பூணுற் றுமலர்ந் ததொர்பொற் கொடிபோல்
நாணுற் றெதிர்நண் ணியிறைஞ் சினளால். (16)

**எழுகடலில் நீராடியது**

மஞ்சோ தியகாஞ் சனமா லைகையிற்
பைஞ்சோ திவிளங் குபவித் திரையாய்ச்
செஞ்சோ திமுடிச் சிவநா மவெழுத்
தஞ்சோ திநெடுங் கடலா டுமரோ! (17)

துங்கக் கலைவே தியர்தொன் மறைநூற்
சங்கற் பவிதிப் படிதன் றுணைகை
அங்கைத் தளிர்பற் றியகத் துவகை
பொங்கப் புணரிப் புனலா டினளே!

குடைந்தார் கரையே றினர்கொன் றைமுடி
மிடைந்தார் கருணைக் கண்விழிக் கமலம்
உடைந்தா ரனைமா ருதரங் குறுகா
தடைந்தா ருமைபா கரருட் படிவம். (19)

ஒண்கொண் டன்மிடற் றொளியும் மொருகால்
எண்கொண் டபுயத் தெழிலும் மழல்சேர்
கண்கொண் டநுதற் கவினும் பொலியா
மண்கண் டுவியப் ப[1]வயங் கினனால். (20)

விண்ணின் றுவழுக் கிவிழுங் கதிர்போற்
கண்ணின் றுநுதற் கருணா கரன்வாழ்
எண்ணின் றபுரத் தினிழிந் திமையா
மண்ணின் றதொர்தெய் வவிமா னமரோ. (21)

அத்தெய் வவிமா னமடுத் திடலும்
முத்தெய் வதமுக் கணவன் பணியால்
நத்தெய் வதருக் கரனங் கையொடும்
எத்தெய் வதமுந் தொழவே றினனால். (22)

தேமா ரியெனும் படிசிந் தநறும்
பூமா ரிபொழிந் ததுபொன் னுலகந்
தூமா மறையந் தரதுந் துபிகார்
ஆமா மெனவெங் குமதிர்ந் தனவால். (23)

வேறு

எழுந்தது விமானம் வான
மெழுந்ததுந் துபியு நாணி
விழுந்தது போலு மென்ன
வரவொலி யெங்கும் விம்மத்
தொழுந்தகை முனிவ ரேத்தச்
[2]சுராதிகள் பரவத் திங்கட்
கொழுந்தணி வேணிக் கூத்தர்
கோநகர் குறித்துச் செல்வார். (24)

[3]முன்புதம் முருவாய் வைய
முறைபுரி கோல்கைக் கொண்டு

1. வயங்கினரால் 2. சுராதிபர். பா.வே. 3. முன்புதன்னு. பா.வே.

[1]பின்புதும் முருவந் தந்த
மருகனும் பெருகு கேண்மை
அன்புதந் தருகு நின்ற
தடாதகை யணங்கு மீண்டு
பொன்புனை குடுமிக் கோயில்
புகுந்துநன் கிருப்பக் கண்டார். (25)

முன்னைவல் வினையால் யாக்கை
முறைதடு மாறித் தோற்றம்
மன்னிய மனிதர் போலப்
பண்டைய வடிவ மாறி
அன்னையே மகளா வீன்ற
வப்பனே மருக னாக
என்னயா நோற்றே மியார்க்கு
மியற்றருந் தவந்தா னென்னா. (26)

கன்றக லான்போ லையன்
கனைகழல் விடாது பற்றி
ஒன்றிய வன்பு பின்னின்
றீர்த்தெழ வுள்ளத் தோடுஞ்
சென்றிரு கண்ணு முட்டி
யடிக்கடி திரும்பி நோக்கக்
குன்றுறழ் விமானந் தன்னை
யஞ்சலி கூப்பிச் செல்வார். (27)

**சிவலோகம் நண்ணியது**

வேறு

புவலோகங் கடந்துபோய்ப் புண்ணியருக் கெண்ணிறந்த
போக மூட்டுஞ்
சுவலோகங் கடந்துபோய் மகலோகஞ் சனலோகந்
துறந்து மேலைத்
தவலோகங் கடந்துபோய்ச் சத்தியலோ கங்கடந்து
தண்டு ழாயோன்

.....................................................

1. பின்புதன்று. பா.வே.

நவலோகங் கடந்துலக நாயகமாஞ் சிவலோக
நண்ணி னாரே ! (28)

அறக்கொடியின் னிறைமகனை யடிபணிந்து தனையீன்றார்க்
காதி வேத
மறைப்பொருடன் வடிவளித்த வருளின்மன நிறைமகிழ்ச்சி
வாய்கொள் ளாமற்
புறப்படுவ தெனவிரண்டு திருச்செவிக்குஞ் செங்குமுதம்
பொதிந்த தீந்தேன்
நிறைப்பதெனப் பன்முறையாற் றுதிசெய்து தொழுதொன்று
நிகழ்த்தா நின்றாள். (29)

எண்ணிறந்த தேவர்க்கும் யாவர்க்கும் பயன்சுரக்கு
[1]மிமையோர் நாட்டுப்
புண்ணியவான் றன்புனிற்றுக் கன்றுக்குக் குறைவேதென்
பொருட்டென் னீன்றாள்
எண்ணியது கடலொன்றே யெழுகடலு மீண்டழைத்தா
யீன்றா ளாட
விண்ணிருந்த கணவனையும் விளித்துனருள் வடிவளித்துன்
மேனா டீந்தாய். (30)

தென்னர்மர பிறந்ததெனப் படுபழியி லாழவருஞ்
செவ்வி நோக்கிப்
பொன்னவிர்தார் முடிபுனைந்து கோலோச்சி வருகின்றாய்
போலு மேலும்
இந்நிலைமைக் கிடையூறு மினியின்றே யெனத்தலைவி
யியம்ப லோடுந்
தன்னிறைவி யுட்கோளை யகங்கொண்டு மகிழ்ந்திருந்தான்
தமிழர் கோமான். (31)

பத்தாவது மலையத்துவசனை அழைத்த படலம்
முற்றும்.
ஆகத் திருவிருத்தம் 919.

1. மிமையா நாட்டப். பா.வே.

பதினோராவது

## உக்கிர பாண்டியன் திருஅவதாரப் படலம்

மன்ன வன்குல சேகரன் றிருமகன் மனைவி
தன்னோ டுங்கட லாடிய தகுதியீ தந்தத்
தென்ன வன்றனித் திருமக டிருவுளங் களிப்ப
உன்ன ருந்திற லுக்கிர னுதித்தவா றுரைப்பாம். (1)

வேறு

தண்ணிலா மௌலி வேய்ந்த
சுந்தர சாமி ஞாலத்
தெண்ணிலா வைக றன்ன
திணையடி நிழல்போல் யார்க்குந்
தெண்ணிலாக் கவிகை நீழல்
செய்தருட் செங்கோ லோச்சி
உண்ணிலா வுயிர்தா னாகி
முறைபுரிந் தொழுகு நாளில். (2)

கரியவன் கமலச் செம்மன்
மறைமுதற் கலைகள் காண்டற்
கரியவ னன்பர்க் கென்று
மெளியவ னாகு மேன்மை
தெரியவன் பகன்ற சிந்தைத்
குரியவ டனக்குங் காதன்
மகளென வுமையைத் தந்தான். (3)

மற்றதற் கிசையத் தானு
மருமக னாகி வைய
முற்றும்வெண் குடைக்கீழ் வைக
முறைசெய்தா னாக மூன்று
கொற்றவர் தம்மிற் றிங்கட்
கோக்குடி விழுப்ப மெய்தப்

பெற்றது போலு மின்னும்
பெறுவதோர் குறைவு தீர்ப்பான். (4)

ஒன்றினைச் செய்கை செய்யா
தொழிகைவே றொன்று செய்கை
என்றிவை யுடையோ னாதி
யீறிலாப் பரம யோகி
நன்றுதீ திகழ்ச்சி வேட்கை
நட்பிகல் விளைக்கு மாயை
வென்றவன் செய்யு மாயை
விருத்தியா ரளக்க வல்லார். (5)

இந்திர சால விச்சை
காட்டுவா னென்னத் தன்பாற்
செந்தழ னாட்ட மீன்ற
செல்வனைக் கருப்ப மெய்தா
தந்தமி லுயிரு ஞால
மனைத்தையு மீன்ற தாயாஞ்
சுந்தர வல்லி தன்பாற்
றோன்றுமா றுள்ளஞ் செய்தான். (6)

அங்கவன் வரவுக் கேற்ப
வாயமும் பிறருந் தாழ்ந்து
மங்கைநின் வடிவுக் கேற்பக்
கருவுரு வனப்புஞ் சீருந்
திங்கடோ றாற்று மன்றற்
செவ்வியுங் காண வாசை
பொங்கிய தெங்கட் கென்றார்
புனிதையப் படிபோ லானாள். (7)

கருமணிச் சிகரச் செம்பொற்
கனவரை யனைய காட்சித்
திருமுலை யமுதம் பெய்த
செப்பிரண் டனைய வாக

வருமுலை சுமந்து மாய்ந்த
மருங்குலும் வந்து தோன்ற
அருள்கனிந் தனையா ணாவிற்
கின்சுவை யார்வம் பொங்க. (8)

என்னவு மெளிய வேனு
மரியன வென்ன வேட்டாள்
அன்னவும் போக பூமி
யரும்பெற லணவு நல்கிப்
பன்னக ரமுதுந் திங்கட்
படுசுவை யமுதுந் தெய்வப்
பொன்னக ரமுது மாசை
புதைபடக் கணங்க ணல்க. (9)

புண்ணிய முனிவர் வேத
பண்டிதர் போந்து வேந்தர்க்
கண்ணிய சடங்கு மூதா
ரருங்கடி வெள்ளத் தாழ
எண்ணிய திங்க டோறு
மியற்றவிக் கன்னித் தேயம்
பண்ணிய தருமச் சார்பாற்
படுபயன் றலைப்பா டெய்த. (10)

மாசறத் துறந்தோ ருள்ள
மானவான் களங்க நீங்க
ஈசர்தங் கிழமை யென்னு
மிந்துவா திரைநாட் செய்த
பூசையின் பயன்றா னெய்த
வெரிபசும் பொற்கோள் வந்து
தேசொடு கேந்தி ரத்திற்
சிறந்தநல் லோரை வாய்ப்ப. (11)

முந்தைநான் மறைக டாமே
முழங்கமந் தார மாரி

சிந்தநாண் மலர்பூத் தாடு
மின்னெனத் திசைக டோறும்
அந்தர மகளி ராடத்
துந்துபி யைந்து மார்ப்ப
விந்தையுந் திருவும் வெள்ளைக்
கிழத்தியும் வீறு வாய்ப்ப. (12)

அந்தணர் மகிழ்ச்சி தூங்க
வடுத்தவர் வளர்க்கு முன்னர்
மந்திர வேள்விச் செந்தீ
வலஞ்சுழித் தெழுந்தார்த் தாடச்
சிந்தூர நுதன்மா வெட்டுஞ்
சேடனும் பொறையெய்ப் பாற
இந்திரன் மேருப் புத்தேள்
புனலிறைக் கிடத்தோ ளாட. (13)

ஆலத்தை யமுத மாக்கு
மண்ணலு மணங்குங் கொண்ட
கோலத்துக் கேற்பக் காலைக்
குழந்தைவெங் கதிர்போ லற்றைக்
காலத்தி லுதித்த சேய்போற்
கண்மழை பிலிற்று நிம்ப
மாலைத்தோட் செழியன் செல்வ
மகள்வயிற் றோன்றி னானே. (14)

எடுத்தனண் மோந்து புல்லி
யேந்தினள் காந்தன் கையிற்
கொடுத்தனள் வாங்கி வீங்கு
கொங்கைநின் றிழிபால் வெள்ளம்
விடுத்தனள் குமுதப் போதில்
வெண்ணிலா வெள்ளம் போல்வாய்
மடுத்தன ளருத்தி னாடன்
மைந்தனை யெம்பி ராட்டி. (15)

சலத்தலைக் கிடக்கைப் புத்தே
டருநிழல் வாழ்க்கைப் புத்தேள்
அலர்த்தலை யிருக்கைப் புத்தே
ளாதிப்புத் தேளிர் வேதப்
புலத்தலைக் கேள்வி சான்ற
புண்ணிய முனிவ ரேனோர்
குலத்தலை மகளி ரோடுங்
கோமகள் கோயில் புக்கார். (16)

குடபுலத் தரசும் பொன்னிக்
குளிர்புனற் கோழி வேந்தும்
வடபுலத் தரசர் யாருங்
குறுநில வாழ்க்கைச் செல்வத்
தடல்கெழு தொண்டை தண்டா
ரரசொடு மனிகளுஞ் சூழக்
கடல்கணாற் றிசையும் பொங்கி
வருவபோற் கலிப்ப வந்தார். (17)

மன்னனைத் தேவி தன்னை
முறையினால் வழுத்தி வாழ்த்தி
நன்னர்கோ ளாகி யோகை
நவின்றுவெண் மழுமா னீத்த
தென்னவர் பெருமான் றேவி
திருமுகக் கருணை பெற்றுப்
பொன்னடி பணிந்து தம்மூர்
போகுவா ரினைய சொல்வார். (18)

வழுதியர் பெருமான் றன்பாற்
கந்தனே வந்தா னென்பார்
பழுதறு கற்பி னாடன்
பாக்கிய மிதுவே யென்பார்
அழகினான் மதனும் பெண்மை
யவாவுறு மிவன்கோ லாணை
எழுகட லுலகோ வைய
மேழையுங் காக்கு மென்பார். (19)

மனிதர்வான் றவமோ தென்பார்
வைகுவோர் தவமோ வானப்
புனிதர்வான் றவமோ வேள்விப்
பூசுரர் தவமோ கேள்வி
முனிவர்வான் றவமோ வீறு
முதலிலா முதல்வ னுள்ளக்
கனிதரு கருணை போலிக்
காதலன் றோற்ற மென்பார். (20)

தருமா தவத்தின் பேறோ
வருத்தமா தவத்தின் பேறோ
பெருமைசால் காம நோற்ற
பெருந்தவப் பேறோ வெய்தற்
கருமையாம் வீடு நோற்ற
வருந்தவப் பேறோ விந்தத்
திருமக னென்று தம்மில்
வினாய்மகிழ் சிறப்பச் சென்றார். (21)

அவ்வவர் மனைக டோறு
மங்கல வணிக ளாகக்
கௌவைமங் கலங்க ளார்ப்பக்
கடிநக ரெங்கும் பொங்க
நெய்விழா வெடுப்பக் கேள்வி
நிரம்பிய மறையோர்க் கீந்த
தெய்வமா தான நீத்தந்
திரைக்கடன் மடுத்த தம்மா. (22)

சுண்ணமும் பொரியுந் தூவெள்
ளரிசியுந் தூர்வைக் காடுந்
தண்ணறுஞ் சிவிறி வீசு
தண்பனி நீருஞ் சாந்தும்
எண்ணெயு நானச் சோறும்
பலசயற வெடுத்து வாரிக்
கண்ணக நகர மெங்குங்
கழுவின தான வெள்ளம். (23)

செம்பொன்செய் துருத்தி தூம்பு
செய்குழல் வட்ட மாக
அம்பொன்செய் சிவிறி வெண்பொ
னண்டைகொண் டாரந் தூங்கும்
வம்பஞ்சு முலையி னாரு
மைந்தரு மாறி யாட
அம்பஞ்சு மாறி மாறி
யனங்கனு மாடல் செய்தான். (24)

**சாதகமெழுதினது**

இன்னணங் களிப்ப மூதூ
ரிந்துவா திரைநன் னாளிற்
பொன்னவன் கேந்தி ரித்த
புனிதலக் கினத்திற் போந்த
தென்னவர் பெருமான் சேய்க்குச்
சாதகச் செய்தி யாதி
மன்னவர்க் கியன்ற வேத
மரபினால் வயங்க வாற்றி. (25)

கரியவெண் டிரைநீர்ச் செல்வன்
கல்விற கரிந்த வென்றித்
தெரியல னுலகந் தாங்கு
தெய்வத வரைக்கோ னாதித்
தரியலர் வீரஞ் சிந்தத்
தருக்கழிந் தச்சந் தோற்றற்
குரியகா ரணத்தா னாம
முக்கிர வரும னென்றார். (26)

நாலாகு மதியிற் சந்தி
மிதிப்பது நடாத்தி யாறாம்
பாலாகு மதியி லன்ன
மங்கலம் பயிற்றி யாண்டின்
மேலாகு மதியிற் கேச
வினைமுடித் தைந்தா மாண்டின்

நூலாறு தெரிந்து பூண
நூற்கடி முடித்துப் பின்னர். (27)

பதநிரை பாழி சாகை
யாரணம் பணைத்த வேத
முதனிரைக் கலையும் வாளும்
மூரிவிற் கலையும் வாளும்
மதநிரை யொழுகு மையன்
மாநிரை வையம் பாய்மா
விதநிரை யேற்ற மற்று
முணர்த்தினான் வியாழப் புத்தேள். (28)

## குருமுகமறிய வேண்டியது

குருமுகத் தறிய வேண்டு
மென்பதோர் கொள்கை யாலே
ஒருமுறை கேட்டாங் கெண்ணெண்
கலைகளு மொருங்கு தேறி
அரனல தொருவ ராலுந்
தேற்றுவ தருமை யாலப்
பரனிடைத் தெளிந்தான் பாசு
பதாத்திரப் படையு மன்னோ. (29)

எல்லையில் கலைக ளெல்லா
மகவைநா விரண்டின் முற்றத்
தொல்லறி வுடைய னாகிக்
குரவரைத் தொழுது போற்ற
வல்லவ னாகி யன்னார்
மகிழ்ச்சிகொள் கலனாய் வென்றிச்
செல்வவேற் கிளைய ரோடுந்
திருவிளை யாடல் செய்வான். (30)

புகர்மத வேழ முட்டிப்
போர்வளை யாடி வென்றுந்

தகரொடு தகரைத் தாக்கித்
தருக்கம ராடி வென்றும்
வகிர்படு குருதிச் சூட்டு
வாரண மாடி வென்றும்
நகைமணிப் பலகை செம்பொ
னான்குறுப் பாடி வென்றும். (31)

காற்றினுங் கடிய மாவிற்
காவதம் பலபோய் மீண்டுங்
கூற்றினுங் கொடிய சீற்றக்
குஞ்சர முகைத்தும் வைகை
யாற்றினுய் யானத் தாவி
யகத்தினு ளின்பந் துய்த்தும்
வேற்றிறன் மைந்த ரோடு
மல்லமர் விளைத்து வென்றும். (32)

சந்தவெற் படைந்து வேட்டஞ்
செய்துமச் சைல வாழ்க்கை
அந்தண ராசி கூற
வவர்தொழில் வினாயு மன்னார்
கந்தமென் கனிவி ருத்தூண்
கைதழீஇக் களித்து மீண்டும்
இந்தவா றைம்மூ வாண்டு
கழியமே லெய்து மாண்டில். (33)

சூர்முத றடிந்த தங்க
டோன்றலே யிவனென் றெண்ணிக்
கார்முக மயிலும் வேலுங்
கைவிடாக் காக்கு மாபோல்
வார்முக முலையி னாரும்
வடிக்கணு மருங்கு மொய்ப்பக்
கூர்முக வேலா னின்ன
கொள்கைய னாகத் தாதை. (34)

பங்கயச் செல்வித் தாகிக்
கண்மனம் பருகு காந்தி
அங்கழற் காலுஞ் சொன்ன
வடைவினிற் றிரண்டு நீண்ட
[1]சங்கமும் வட்டந் தோன்றாச்
செழுமுழந் தாளு நால்வாய்த்
துங்கவீங் கவுண்மால் யானைத்
துதிக்கைபோற் றிரள்க வானும். (35)

சிறுகிய வயிறுந் தாழ்ந்த
நாபியுஞ் செவ்வி நோக்கும்
மறுவில்கண் ணடியி னன்ன
கடியகல் வரைகொண் மார்பும்
எறியிசை வீணைத் தண்டி
னிணைந்துநீண் டிழிந்த கையும்
வெறியதார் கிடந்த மேரு
வெற்பிரண் டனைய தோளும். (36)

வலம்புரி யென்ன வாய்ந்த
கண்டமு மலராண் மன்னும்
பொலம்புரி கமல மன்ன
வதனமும் பொதுவா னோக்கி
நிலம்புரி தவப்பே றன்னான்
வடிவெலா நின்று நின்று
நலம்புரி நூலா னோக்கிச்
சோதிப்பா னடிக்க வல்லான். (37)

உன்னத மாறு நீண்ட
வுறுப்பைந்து சூக்கந் தானும்
அன்னது குறுக்க நான்கா
மகலுறுப் பிரண்டே ழாகச்
சொன்னது சிவப்பு மூன்று
கம்பீரந் தொகுத்த வாறே

1. சங்கையும். பா.வே. (சங்கை – கணைக்கால்)

இன்னவை விரிக்கி லெண்ணான்
கிலக்கண வுறுப்பா மென்ப. (38)

வயிறுதோ ளெற்றி நாசி
மார்புகை யடியிவ் வாறும்
உயரில்வான் செல்வனாகு
மொளிகவர் கண்க போலம்
புயல்புரை வள்ளற் செங்கை
புதுமணங் கவருந் துண்டம்
வியன்முலை நடுமார் பைந்து
நீண்டவேல் விளைக்கு நன்மை. (39)

நறியபூங் குஞ்சி தொக்கு
விரற்கணு நகப்பல் லைந்துஞ்
சிறியவே லாயுள் கோசஞ்
[1]சங்கநா முதுகிந் நான்கும்
குறியவேற் பாக்கி யப்பே
றாஞ்சிரங் குளமென் றாய்ந்தோர்
அறியுமிவ் வுறுப்பி ரண்டு
மகன்றவே லதுவு நன்றாம். (40)

அகவடி யங்கை நாட்டக்
கடையித ழுண்ண நாக்கு
நகமிவை யேழுஞ் சேந்த
நன்மையாற் பெறுமா வின்பம்
இகல்வலி யோசை நாபி
யென்றிவை மூன்று மாழ்ந்த
தகைமையா லெவர்க்கு மேலா
நன்மைசா றக்கோ னென்னா. (41)

..............................

1. சங்கைகநா. பா.வே.

எல்லையின் மூர்த்தி மைந்த
னிலக்கண நிறைவி னோடு
நல்லவாங் குணனு நோக்கிப்
பொதுவற ஞாலங் காக்க
வல்லவ னாகி வாழ்நா
ணனிபெற வல்ல னென்னா
அல்லணி மிடற்றான் பின்னு
மனத்தினா லளந்து சூழும். (42)

இத்தகு பண்பு சான்ற
நீர்மையா லிசைமை நீதி
வித்தக நல்ல வுள்ள
முடைமைமெய் வீறு தெய்வ
பத்திமை யுலகுக் கெல்லா
மகிழ்ச்சிசெய் பண்பு சாந்த
சித்தமெவ் வுயிர்க்கு மன்பு
செய்கைநல் லீகை கல்வி. (43)

வெல்லுதற் கரியார் தம்மை
வெல்லுத றேவ ராலுஞ்
சொல்லுதற் கரிய தேத்துஞ்
சென்றிடு திறையுங் கோடல்
புல்லுதற் கரிய ஞால
மாலைபோற் புயத்தி லேந்திச்
சொல்லுதற் கரிய [1]சீர்த்தி
யுலகெலாஞ் சுமப்ப வைத்தல். (44)

என்றிவை யாதி யாய
வியற்குண முடைய னாகி
நன்றிசெய் துலகுக் கெல்லா
நாயக னொருவ னாகி
நின்றிடு மிவற்குப் பின்னர்
நீண்முடி கவித்து முன்னர்

..............................

1. கீர்த்தி. பா.வே. (வீரம்)

மன்றல்செய் கென்று சூழ்ந்து
மதிஞரோ டுசாவி னானே! (45)

பதினோராவது உக்கிரபாண்டியன் திருவவதாரப் படலம்
ஆகத் திருவிருத்தம் 964.
முற்றும்

## பன்னிரண்டாவது உக்கிர பாண்டியனுக்கு வேல் வளை செண்டு கொடுத்த படலம்.

உருக்குந் திறலுக் கிரகுமர
னுதய மிதுவான் மதியுநதிப்
பெருக்குங் கரந்த சடைக்கற்றைப்
பெருந்தேர்ச் செழியர் பிரானவர்க்குச்
செருக்குஞ் செல்வ மணமுடித்துச்
செவ்வேல் வளைசெண் டளித்துள்ளந்
தருக்கு முடிதந் தரசுரிமை
தந்த செயலுஞ் சாற்றுவாம். (1)

வையைக் கிழவன் றன்னருமைக்
குமரன் றனக்கு மணம்புணர்ச்சி
செய்யக் கருதுந் திறனோக்கி
யறிஞ ரோடுந் திரண்டமைச்சர்
மையற் றழியா நிலத்திருவு
மரபுங் குடியும் புகழ்மையுநம்
ஐயற் கிசையத் தக்ககுலத்
தரசர் யாரென் றளக்கின்றார். (2)

தீந்தண் புனல்சூழ் வடபுலத்து
மணவூ ரென்னுந் திருநகர்க்கு
வேந்தன் பரிதி திருமரபின்
விளங்குஞ் சோம சேகரனென்

றாய்ந்த கேள்வி யவனிடத்துத்
திருமா தென்ன வவதரித்த
காந்தி மதியை மணம்பேச
விருந்தா ரற்றைக் கனையிருள்வாய். (3)

வெள்ளைக் களிற்றின் பிடர்சுமந்த
குடுமிக் கோயின் மேயவிளம்
பிள்ளைக் கதிர்வெண் மதிமௌலிப்
பெருமா னிரவி மருமானாம்
வள்ளற் கரத்தான் கனவிலெழுந்
தருளி வானோர் நனவிற்குங்
கள்ளத் துருவாந் திருமேனி
காட்டி யிதனை விளம்புவார். (4)

அன்ன மிறைகொள் வான்மதுரைச்
சிவன்யா மரச நீயீன்ற
பொன்னை யனையா டனைமதுரா
புரியிற் கொடுபோய் மறுபுலத்து
மன்னர் மகுட மணியிடற
மழுங்குங் கழற்காற் சுந்தரனாந்
தென்னர் பெருமான் குமரனுக்குக்
கொடுத்தி யென்று செப்புதலும். (5)

உள்ளக் கமல முககமல
முடனே மலர விருதடங்கண்
அள்ளற் கமல மலர்ந்துதன
தங்கைக் கமல முகிழ்ந்தெழுந்து
வள்ளற் பரமன் கருணையெளி
வந்த செயலை நினைந்தன்பின்
வெள்ளத் தழுந்தி யெழுந்திரவி
வேலை முளைக்கும் வேலையினில் (6)

நித்த நியமக் கடனிரப்பி
நிருப னமைச்ச ரொடுநான்கு
பைத்த கருவிப் படையினொடு
பலவே றியமுங் கலிப்பத்தன்
பொய்த்த மருங்குற் றிருமகளைப்
பொன்ன னாரோ டிரதமிசை
வைத்து மணஞ்சேர் திருவினொடு
மதுரை நோக்கி வழிக்கொண்டான். (7)

### மணவூர் வருவது

நென்ன லெல்லை மணம்பேச
நினைந்த வாறே யமைச்சர்மதி
மன்னர் பெருமான் றமரோடு
மணவூர் நோக்கி வழிவருவார்
அன்ன வேந்தன் றனைக்கண்டா
ரடல்வேற் குமர னனையானெந்
தென்னர் பெருமான் குமரனுக்குன்
றிருவைத் தருதி யெனவனையான். (8)

### மதுரைக்கு வந்தது

குலனுங் குடியுங் கனவின்கட்
கொன்றை முடியார் வந்துரைத்த
நலனுங்கூறி மணநேர்ந்து
நயப்ப வதனை நன்முதியோர்
புலனென் றுழையர் தமைவிடுத்துப்
பொருனைத் துறைவற் குணர்த்திவரு
வலனுந் தயில்வேன் மன்னனொடு
மதுரை மூதூர் வந்தணைந்தார். (9)

இரவி மருமான் மதிமருமா
னெதிரே பணியத் தழீஇமுகமன்
பரவி யிருக்கை செலவுய்த்துப்
பாண்டி வேந்த னிருந்தான்மேல்
விரவி யமைச்சர் திருமுகங்கள்
வேந்தர் யார்க்கும் விடுத்துநகர்

வரைவு நாள்செய் தணிசெய்ய
மன்றன் முரச மறைவித்தார். (10)

மாடம் புதுக்கிப் பூகதமுங்
கதலிக் காடு மருகெங்கும்
நீட நிரைத்துப் பாலிகையு
நிறைபொற் குடமு முறைநிறுத்தி
ஆடு கொடியுந் தோரணமும்
புனைவித் தழகுக் கழகாகக்
கூட நெருங்கு நகரைமணக்
கோலம் பெருகக் கொளுத்தினார். (11)

தென்ற னாடன் றிருமகளைத்
தேவர் பெருமான் மணம்புரிய
மன்ற லழகா லொருநகரொப்
பதிக மின்றி மதுரைநகர்
அன்று தானே தனக்கொப்ப
தாகும் வண்ண மணியமைத்தார்
இன்று தானே தனக்கதிக
மென்னும் வண்ண மெழிலமைத்தார். (12)

வேறு

முன்னர் மாலை முடியணி சுந்தரத்
தென்ன ரேற்றின் றிருமுகங் கண்டுதாழ்ந்
தன்ன வாசக முட்கொண் டயற்புல
மன்னர் மாதவர் யாரும் வருவரால். (13)

புரவி வெள்ளமும் போர்க்கரி வெள்ளமும்
[1]வரவிற் கால்வலி மள்ளரின் வெள்ளமும்
விரவி யாழிய வெள்ளமு முள்ளுற
இரவி தன்வழித் தோன்றல்வந் தெய்தினான். (14)

1. வரைவில் – பா. வே.

கோடு வில்லொடு மேகக் குழாங்கண்மின்
நீடு வாளொடு நேர்ந்தென மார்புதாழ்ந்
தாடு குண்டலக் காதுடை யாடவர்
சேட னீகத்துச் சேரன்வந் தீண்டினான். (15)

கடலு முள்ளமுங் காற்றும்பல் வண்ணமும்
உடலுங் கொண்டன வுந்துறு வாம்பரிப்
படுக டற்குட் பரிதியிற் றோன்றினான்
அடுப ரிப்பதி யாகிய வேந்தனே. (16)

அலகி லாவுத யந்தொறு மாதவர்
அலகி லாருதித் தென்னப்பொன் னோடைசேர்
அலகி லானை யனீகமொ டெய்தினான்
அலகி லாற்றற் கயபதி யண்ணலே ! (17)

தொக்க மள்ள ரடிப்படு தூளிபோய்த்
திக்க டங்க விழுங்கித் திரைக்கடல்
எக்கர் செய்ய வெழுந்தியங் கல்லென
நக்க வேற்கை நரபதி நண்ணினான். (18)

மீன வேலையிற் கந்துக மேற்கொடு
கூனல் வார்சிலை வஞ்சக் கொடுஞ்சமர்க்
கான வாழ்க்கை யரட்டக் கரும்படை
மான வேற்குறு மன்னவர் நண்ணினார். (19)

சீனர் சோனகர் சிங்களர் கொங்கணர்
மான வேல்வல மாளவர் சாளுவர்
தான மாறிரைச் சாவக ராதியாம்
ஏனை நாட்டுள மன்னரு மீண்டினார். (20)

நூலொ டுந்துவக் குண்டு நுடங்குமான்
றோலர் தூங்கு சுருக்குடைத் தானையர்
கோல முஞ்சியர் கிஞ்சுகக் கோலினர்
நாலு நூல்பயி னாவினர் நண்ணினார். (21)

வட்ட நீர்க்கலக் கையினர் வார்ந்துதோள்
விட்ட குண்டலக் காதினர் வேட்டதீத்
தொட்ட கோலினர் வேள்வியிற் சுட்டநீ
றிட்ட நெற்றிய ரில்லொடு நண்ணினார். (22)

முண்ட நெற்றியர் வெண்ணிற மூரலர்
குண்டி கைக்கையர் கோவணம் வீக்கிய
தண்டு கையர்கற் றானையர் மெய்யினைக்
கண்டு பொய்யினைக் காய்ந்தவர் நண்ணினார். (23)

தீந்தண் பாற்கடல் செந்துகிர்க் காட்டொடும்
போந்த போன்மெயிற் புண்ணியப் பூச்சினர்
சேந்த வேணியர் வேதச் சிரப்பொருள்
ஆய்ந்த கேள்வி யருந்தவ ரெய்தினார். (24)

ஆதி சைவர் முதற்சைவ ரைவருங்
கோதி லாவகச் சைவக் குழாங்களும்
பூதி மேனியர் புண்ணிய வைந்தெழுத்
தோது நாவின ரொல்லைவந் தெய்தினார். (25)

வெண்க ளிற்றவன் வேரியந் தாமரைப்
பெண்க ளிப்புறு மார்பன் பிரமனோ
டொண்க ளிப்புற வும்பர் முதற்பதி
னெண்க ணத்தவர் யாவரு மீண்டினார். (26)

அணைந்து கோயி லடைந்தரிச் சேக்கைமேற்
குணங்க டந்தவன் கோமள வல்லியோ
டிணங்கி வைகு மிருக்கைகண் டேத்தினார்
வணங்கி னார்வணங் கும்முறை வாழ்த்தினார். (27)

விரைசெய் தார்முடிச் சுந்தர மீனவன்
சுரர்கண் மாதவர் வேந்தர்க்குத் தொன்முறை
வரிசை நல்கி யிருந்தனன் மன்னவன்
திரும கன்மணஞ் செய்திறஞ் செப்புவாம். (28)

சோம சேகரன் றோகை வணப்பெலாங்
கோம கன்கண் டுவப்பக் கொள்கைகண்
டேம மேனிய னூல்வழி யார்க்குமத்
தேமன் கோதை யுறுப்பிய றேற்றுவான். (29)

வேறு

பெருகநீண் டறவுங் குறுகிடா [1]வாகிப்
பிளந்திடாக் [2]கடையவாய்த் தழைந்து
கருவிவான் வண்டின் கணமெனக் கறுத்துக்
கடைகுழன் றியன்மணங் கான்று
புரையறச் செறிந்து நெறித்துமெல் லென்று
புந்திகண் கவரநெய்த் திருண்ட
மருமலர்க் குழலா டன்பதிக் கினிய
மல்லல்வான் செல்வமுண் டாகும். (30)

திண்மத வேழ மத்தகம் போலத்
திரண்டுயர் சென்னியா ளவடன்
உண்மகிழ் கணவ னாயுணீண் டகில
வுலகர சுரியனா மெட்டாந்
தண்மதி போன்று மயிர்நரம் பகன்று
தசைந்துமூ விரலிடை யகன்ற
ஒண்மதி நுதறன் பதிக்குநற் றிருவோ
டுலப்பிலா ரோக்கிய முண்டாம். (31)

கண்கடை சிவந்தான் பாலென வெளுத்து
நடுவிழி கழியவுங் கரிதாய்
எண்கவி னடைந்து கோமள மாகிய
யிமைகரு மயிர்த்தெனி [3]னினிய
ஒண்கரும் புருவங் குனிசிலை யொத்த
தத்தமி லொத்திரு தொளையும்
பண்கொள வுருண்டு துண்டமெட் போது
பதுமமேற் பூத்தது போலும். (32)

---

1. தாகிப். பா.வே. 2. கடையதாய்த் தழைத்துக் பா.வே. 3. னினியது. பா.வே.

வள்ளைபோல் வார்ந்து தாழ்ந்திரு செவியு
மடற்கழி நல்லவாய் முன்னர்த்
தள்ளிய காது மனோகர மாகுந்
தன்மையா னன்மையே தழைக்கும்
ஒள்ளிய கபோலம் வட்டமாய்த் தசைந்திட்
டுயர்ந்துகண் ணாடிமண் டலம்போற்
றெள்ளிய வூற்ற மினியது நன்றென்
றோதினான் றிரைகடற் செல்வன். (33)

கொவ்வைவா யதரந் திரண்டிரு புடையுங்
குவிந்துசேந் திரேகைநேர் கிடந்தால்
அவ்வணி யிழைதன் னன்பனுக் கென்று
நண்புரு வாகுமெண் ணான்கு
வல்ல[1]வா ளெயிறு மிடைவெளி யின்றி
வார்ந்துமேல் கீழிரண் டொழுங்குஞ்
செவ்வனேர்ந் தாவின் பாலென [2]வெள்கித்
திகழினன் றென்பர் நூறெளிந்தோர். (34)

மெல்லியதாய்ச் சிவந்து கோமள மான
நாவினான் வேட்டவேட் டாங்கே
வல்லைவந் தெய்த நுகர்ந்திடுந் தசைந்து
வட்டமா யங்குல மிரண்டின்
எல்லையதாகி மஞ்சுள மாகி
யிருப்பது [3]சிபுகநன் றென்பர்
அல்லியங் கமலம் போன்[4]மலர்ந் திருடீர்ந்
தவிர்மதி போல்வது முகமே. (35)

திரைவளைக் கழுத்துத் தசைந்துநால் விரலி
னளவதாய்த் திரண்டுமூன் றிரேகை
வரைபடிற் கொழுந னகிலமன் னவனா
மார்பகந் தசைந்துமூ வாறு

1. வாலெயிறு. பா.வே. 2. வெள்கிச் சிறிதுயர்ந் திருப்பினன் கென்பர். 3. சுபுக. பா.வே.
4. மணந். பா.வே.

விரலள வகன்று மயிர்நரம் பகன்று
மிதந்ததேல் விழுமிதாம் வேய்ந்தோள்
புரையறத் தசைந்து மயிரகன் றென்பு
புலப்படா மொழியகோ மளமாம். (36)

[1]செங்கைநீண் டுருண்டு கணுக்கள்பெற் றடைவே
சிறுத்திடிற் செல்வமோ டின்பந்
தங்கும்வள் ளுகிர்சேந் துருண்டுகண் ணுள்ளங்
கவர்வதாய்ச் சரசரப் பகன்றால்
அங்கவை நல்ல வகங்கைமெல் லெனச்சேந்
திடைவெளி யகன்றிடை யுயர்ந்து
மங்கல மாய்ச்சில் வரைகளி னல்ல
விலக்கண வரையுள மாதோ. (37)

முத்தணி தனங்கள் கடினமாய்த் தசைந்து
வட்டமாய் முகிழ்ந்திரு கடநேர்
ஒத்திறு மாந்தீர்க் கிடையற நெருங்கி
யுள்ளன மெலிந்தமர்ந் துரோம
பத்திபெற் றயலே மயிர்நரம் பகன்ற
பண்டியா ளுண்டிவேட் டாங்கே
துய்த்திடு நாபி வலஞ்சுழித் தாழ்ந்தாற்
றொலைவிலாத் திருவளம் பெருகும். (38)

இடைமயிர் நரம்பற் றிருபதோ டொருநான்
கெழில்விர லளவொடு வட்ட
வடிவதாய்ச் சிறுகி மெலிவது நிதம்ப
மத்தகம் யாமையின் புறம்போற்
படிவநே ரொத்த னன்றிரு குறங்கும்
படுமயி ரென்பகன் றியானைத்
தடவுடைக் கையுங் கரபமுங் கதலித்
தண்டுமொத் திருக்கினன் றென்ப. (39)

1. செங்கையங் குளிநீண் டுருண்டுகண் மரீஇநேர் சிறுத்திடல் – பா.வே.

அங்கமுண் மறைந்து வட்டமாய்த் தசைவ
தணிமுழந் தாண்மயிர் நரம்பு
தங்கிடா தடைவே யுருட்சியாய்ச் சிறுத்துச்
சமவடி வாயழ கடைந்த
[1]சங்கையாஞ் சிரையென் பறத்தசைந் திமையா
முதுகெனத் திரண்டுயர்ந் தழகு
மங்கலம் பொலிந்த புறவடி மடந்தை
மன்னவன் பன்னியா மன்னோ. (40)

அல்லியங் கமலக் கால்விர லுயர்ந்து
தூயவா யழகவாய்க் கழுநீர்
மெல்லிதழ் நிரைத்தாங் கொழுங்குறத் திரண்டு
வாலுகிர் வெண்மதிப் பிளவு
புல்லிய போன்று மெல்லிய வாகிப்
[2]புகரறத் தசைந்தன வகத்தாள்
சொல்லிய தசைவு மென்மையுஞ் சமமுந்
துகளறப் படைத்தன நன்றால். (41)

வண்ணமாந் தளிர்போற் சிவந்தெரி பொன்போல்
வைகலும் வெயர்வையற் றாகம்
உண்ணமா யிருக்கிற் செல்வமுண் டாகு
மொண்மணம் பாடலங் குவளை
தண்ணறா முளரி மல்லிகை நறுந்தண்
சண்பகம் போல்வன வாகும்
பண்ணவாய் கிளவி குயில்கிளி யாழிற்
படின்வரும் பாக்கிய மென்னா. (42)

வேறு

கருங்குழற் கற்றை தொட்டுச்
செம்மலர்க் காலி னெல்லை
மருங்குனல் கூர்ந்த கன்னி
வடிவெலாம் வாக்கின் செல்வன்

1. சங்கமாஞ் என்பது பா.வே. 2. புரைவறத். பா.வே.

ஒருங்குநூ லுணர்வாற் றெள்ளி
யிம்பரின் றும்பர் தேத்தும்
இரங்குமிக் குயிலன் னாண்மெய்
யிலக்கண மரிய தென்றான். (43)

அங்கது கேட்டோர் யாரு
மகங்களி துளும்ப விப்பாற்
கொங்கலர் நறுந்தார்க் குஞ்சி
யுக்கிர குமரன் போந்து
மங்கல வரிசை [1]மாண
மத்துமான் சுமந்த வைகைச்
சங்கெறி துறைநீ ராடித்
தகுங்கடி வனப்புக் கொள்வான். (44)

கட்டவிழ் கண்ணி வேய்ந்து
மான்மதக் கலவைச் சாந்தம்
மட்டனஞ் செய்து முத்தான்
மாண்கலன் முழுதுந் தாங்கி
விட்டவிர் கலைவான் றிங்கள்
வெண்கதிர்ச் செல்வன் போல்வந்
திட்டபூந் தவிசின் மேற்கொண்
டிருந்தனன் சங்க மோங்க. (45)

அந்நிலை மணநீ ராட்டி
யருங்கலப் போர்வை போர்த்த
கன்னியைக் கொணர்ந்து நம்பி
வலவயிற் கவின வைத்தார்
பன்னியொ டெழுந்து சோம
சேகரன் பரனும் பங்கின்
மன்னிய வுமையு மாக
மதித்துநீர்ச் சிரகந் தாங்கி. (46)

1. மாண. பா.வே.

மங்கல நீரா னம்பி
மலரடி விளக்கி வாசக்
கொங்கலர் மாலை சூட்டிக்
குளிர்மது பருக்க மூட்டி
நங்கைதன் கையைப் பற்றி
நம்பிதன் கையி லேற்றிப்
புங்கவ ரறிய நன்னீர்
மந்திரம் புகன்று பெய்வான். (47)

இரவிதன் மருமான் சோம
சேகர [1]னென்பேர் திங்கண்
மரபினை விளக்க வந்த
சுந்தர மாறன் மைந்தன்
உரவுநீர் ஞாலந் தாங்கு
முக்கிர வருமற் கின்றென்
குரவலர்க் கோதை மாதைக்
கொடுத்தன னெனநீர் வார்த்தான். (48)

மைந்துறு மடங்கற் றிண்கான்
மணிவட வயிர வூசல்
ஐந்துடன் பதஞ்செய் பஞ்சி
யணையினோ டன்னத் தூவிப்
பைந்துகி லணையீ ரைந்து
பவளவாய்ப் பசும்பொன் மேனி
இந்திர மணிக்கட் பாவை
விளங்குநான் கிரட்டி யென்ப. (49)

அட்டில்வா யடுக்குஞ் செம்பொற்
கலங்கணூ றம்பொன் வாக்கி
இட்டிழை மணிக்க ளாஞ்சி
யேழுபொற் கவரி யெட்டு
விட்டொளிர் பசும்பொற் கிண்ணப்
பந்திசூழ் விளங்க நாப்பண்

1. னென்பேன். பா.வே.

நட்டபொற் காலி னோடு
நகைமணிக் கலநூ றென்ப. (50)

பெருவிலை யாரப் பேழை
யாயிரம் பெற்ற நுண்டூ
சருவிலைப் பட்டு வெவ்வே
றமைத்தன பேழை முந்நூ
றுருவமு தெழுதிச் செய்த
வோவியப் பாவை யன்னார்
திருமணிக் கலனோ டேவற்
சேடிய ரெழுநூற் றைவர். (51)

[1]விளைவொடு மூன்று மூதூர்
மின்னுவிட் டெறியுஞ் செம்பொன்
அளவிரு கோடி யின்ன
வரும்பெறன் மகட்குச் செல்வ
வளமுற வரிசை யாக
வழங்கினான் முழங்கி வண்டு
திளைமதுக் கண்ணிச் சோம
சேகர மன்னன் மாதோ. (52)

ஆர்த்தன வியங்க ளெல்லா
மமரர்மந் தார மாரி
தூர்த்தனர் வேள்விச் செந்தீச்
சுழித்தது வலமாய்த் துள்ளி
வார்த்தன மடவார் நாவின்
முளைத்தன வாழ்த்து மன்றல்
பார்த்தனர் கண்க ளெல்லாம்
பெற்றன படைத்த பேறு. (53)

பொதியவிழ் கடப்பந் தண்டார்ப்
புயத்திளங் காளையன்னான்

1. விளைவொன்று. பா.வே.

முதியவர் செந்தீ யோம்ப
        வின்னிய முழங்கக் காந்தி
மதியையங் கலநாண் பூட்டி
        வரிவளைச் செங்கை பற்றி
விதிவழி யேனை மன்றல்
        வினையெலா நிரம்பச் செய்தான். (54)

**பவனிவருவது**

எண்ணி லாத வளத்தினொடு
        மிரவி மருமான் மடப்பிடியைப்
பண்ணி லாவு மறையொழுக்கம்
        பயப்ப வேள்வி வினைமுடித்துத்
தண்ணி லாவெண் கலைமதியுந்
        தாரா கணமுந் தவழ்ந்துழல
விண்ணி லாவு மணிமாட
        வீதி வலமாய் வருமெல்லை. (55)

மின்னேர் பொன்னந் தொடியினரு
        மென்செம் பஞ்சி யடியினரும்
பொன்னேர் மணிப்பூண் முலையினரும்
        புலம்பு மணிமே கலையினரும்
அன்னே ரோதித் தாரினரு
        மாகிக் கண்ணு மனமுமவன்
முன்னே தூது நடப்பதென
        நடப்ப நடந்தார் முகிழ்முலையார். (56)

சுருங்கு மிடையார் தன்பவனி
        தொழுது வருவார் தமக்கிரங்கி
மருங்குற் பாரங் கழிப்பான்போற்
        கலையைக் கவர்ந்தும் [1]வரைத்தோண்மேல்
ஒருங்கு பாரங் கழிப்பான்போல்
        வளையைக் கவர்ந்து முள்ளத்துள்

1. வரைத்தோண்மேல். பா. பே.

நெருங்கு பாரங் கழிப்பான்போ
னிறையைக் கவர்ந்து நெறிச்செல்வான். (57)

வான மதிசேர் முடிமறைத்த
வழுதி மகனே யிவனென்றால்
ஆனை யெருத்திற் சிங்கவிள
வடலே றென்ன வயல்வேந்தர்
சேனை தழுவ வரும்பவனிக்
கொப்பே தொப்புச் செப்புங்கால்
யானை மகளை மணந்துவரு
மிளையோன் பவனிச் செல்வமே. (58)

இம்மை தனிலு நன்மைதரு
மீசன் றனையும் வாசவற்கு
வெம்மை தருவன் பழிதவிர்த்த
விமலன் றனையு மங்கயற்கண்
அம்மை தனையும் பணிந்துமீண்
டரசன் கோயி லடைந்தீன்றோர்
தம்மை முறையா லடிக்கமலந்
தலையிற் பணிந்தான் றனிக்குமரன். (59)

ஆனா வாறு சுவையடிசி
லயில்வோர் தம்மை யயில்வித்து
நானா வரிசை வரன்முறையா
னல்கி விடையு நல்கிப்பின்
வானா டவர்க்கும் விடைகொடுத்து
மதிக்கோ னொழுகி வைகுநாட்
டேனார் கண்ணித் திருமகனுக்
கிதனைச் செப்பி யிதுசெய்வான். (60)

மைந்த கேட்டி யிந்திரனுங்
கடலு முனக்கு வான்பகையாஞ்
சந்த மேருத் தருக்கடையுஞ்
சதவேள் விக்கோன் முடிசிதற

இந்த வளைகொண் டெறிகடலி
 லிவ்வேல் விடுதி யிச்சென்டால்
அந்த மேரு தனைப்புடையென்
 றெடுத்துக் கொடுத்தா னவைமூன்றும். (61)

அன்ன மூன்று படைக்கலமுந்
 தொழுது வாங்கி யடலேறு
தன்னை நேரா யெதிர்நிற்குந்
 தனையன் றனையுக் கிரவழுதி
என்ன வாதி மறைமுழங்க
 வியங்க ளோங்க முடிகவித்துத்
தன்ன தாணை [1]யரசுரிமை
 தனிச்செங் கோலுந் தானல்கா. (62)

சூட்சி வினையிற் பொன்னனைய
 சுமதி தன்னைத் தொன்னூலின்
மாட்சி யறிஞர் தமைநோக்கி
 வம்மி னிவனைக் கண்ணிமைபோற்
காட்சி பயக்குங் கல்வியும்போற்
 காப்பீ ரிதுநுங் கடனிம்மண்
ஆட்சி யிவன தென்றிளைய
 வரியே றனையான் றனைநல்கா. (63)

வெய்யவேற் காளை யன்னான்
 றன்னையும் வேறு நோக்கி
ஐயவிவ் வையந் தாங்கி
 யளித்தன னெடுநா ளிந்த
மையறு மனத்தார் சொல்லும்
 வாய்மையா றொழுகி நீயுஞ்
செய்யகோன் முறைசெய் தாண்டு
 திருவொடும் பொலிக வென்றான். (64)

.......................................................................

1. யரசுரிமைத். பா.பே.

பன்னருங் கணங்க ளெல்லாம்
பண்டைய வடிவ மாகத்
தன்னருட் டுணையாய் வந்த
தடாதகைப் பிராட்டி யோடும்
பொன்னெடுங் கோயில் புக்குப்
பொலிந்தன னிச்சை தன்னால்
இன்னருட் படிவங் கொள்ளு
மீறிலா வின்ப மூர்த்தி. (65)

வேறு

பின்ன ருக்கிரப் பெயர்த ரித்தவத்
தென்னர் கோமகன் றெய்வ நான்மறை
மன்னு நல்லறம் வளர வையகந்
தன்ன தாணையாற் றாங்கி வைகினான். (66)

பன்னிரண்டாவது உக்கிர பாண்டியனுக்கு
வேல் வளை செண்டு கொடுத்த படலம்.
முற்றும்

ஆகத் திருவிருத்தம். 1030

பதின்மூன்றாவது
**கடல் சுவற வேல்விட்ட படலம்.**

வளையொடு செண்டுவேன் மைந்தற் கஞ்சுரும்
பளையவேம் பணிந்தகோ னளித்த வாறிதத்
தளையவிழ் தாரினான் றனயன் வேலைமேல்
இளையவ னென்னவே லெறிந்த தோதுவாம். (1)

திங்களி னுக்கிரச் செழியன் வெண்குடை
எங்கணு நிழற்றவீற் றிருக்கு நாள்வயிற்
சங்கையில் லாதமா தரும வேள்விகள்
புங்கவர் புடைதழீஇப் போற்ற வாற்றுநாள். (2)

புண்ணியன் றிருமுன் காட்டி
'வில்வத்தாற் பூசை செய்தல். (16)

புரகர னிச்சா ஞானக்
கிரியையாய்ப் போந்த வில்வ
மரமுத லைைந்து மூன்று
வைகலூ ஊறக்க மின்றி
அரகர முழக்கஞ் செய்வோ
ரைம்பெரும் பாத கங்கள்
விரகில்செய் கொலைக ளரு
மாதலால் விசேடம் வில்வம். (17)

மடங்கிதழ் சுருங்கல் வாடி
யுலர்ந்தது மயிர்ச்சிக் குண்டல்
முடிங்குகாற் சிலம்பிக் கூடு
புழுக்கடி முதலாங் குற்றம்
அடங்கினுங் குற்ற மில்லை
யுத்தம மாகம் வில்வந்
தடங்கைகொண் டீச னாம
மாயிரஞ் சாத்திச் சாத்தல். (18)

அடியனேன் செய்யுங் குற்ற
மன்றைக்கன் றனந்த மாகுங்
கொடியநஞ் சமுதாக் கொண்டாய்
குற்றமுங் குணமாக் கொண்டு
படியெழு தரிய நங்கை
பங்கனே காத்தி யென்று
முடியுறா வடியில் வீழ்ந்து
மும்முறை வலஞ்செய தேத்தி. (19)

வன்மனங் கரைய நின்று
வேண்டிய வரங்கள் வேண்ட

1. வில்லைத்தால்.பா.வே.

நன்மணைப் பேறு மக்கட்
பேறுநல் வாக்குக் கல்வி
பொன்மனக் கினிய போகந்
தெவ்வரைப் புறகு காண்டல்
இம்மையி லரசு மற்று
மெண்ணியாங் கெய்து மன்னோ. (20)

## சைவரால் பூசைசெய்தல்

ஆதியிவ் விலிங்கந் தீண்டற்
கருகரல் லாத வேத
வேதியர் முதலோ ரிட்ட
விலிங்கத்திவ் விதியா லர்ச்சித்
தோதிய விரத நோற்க
வர்ச்சனைக் குரிய ரல்லாச்
சாதியர் பொருணோர்ந் தாதி
சைவராற் பூசை செய்தல். (21)

### வேறு

பொருவிலிவ் விரத மைவகைத் துச்சிப்
போதிலூ ணிரவிலூ ணிரண்டும்
ஒருவுத லுறங்கா திருத்தலர்ச் சனைநால்
யாமமு முஞற்றுத லென்னக்
கருதினிவ் வைந்து மொன்றினுக் கொன்று
கழியவு மதிகமா நோற்கும்
வருடமொன் றிரண்டு மூன்றுபன் னிரண்டு
வருடம்வாழ் நாளள விவற்றுள். (22)

உடலள வெண்ணி நோற்பவர் முந்த
வுத்தியா பனஞ்செய்து நோற்கக்
கடவரவ் வருடக் கட்டளைக் கிறுதி
கழிப்பதுத் தாபன விதிதான்

மடலவிழ் மாலை மண்டபங் குண்ட
மண்டலம் வகுத்துமா பதியைப்
படரொளி வெள்ளி முப்பது கழஞ்சிற்
படிமையா னிருமதிஞ் செய்து. (23)

காலையி லாசான் சொல்வழி நித்தக்
கடன்முடித் துச்சிதொட் டந்தி
மாலையி னளவும் புராணநூல் கேட்டு
மாலைதொட் டியாமமோர் நான்குஞ்
சேலன கண்ணாள் பங்கனைப் பூசை
செய்கவப் பூசனை முடிவின்
மூலமந் திரநூற் றெட்டுநூற் றெட்டு
முறையினா லாகுதி முடித்தல். (24)

வில்லமா யிரங்கொண் டாயிர நாமம்
விளம்பிநால் யாமமுஞ் சாத்தல்
நல்லவைந் தெழுத்தா லைந்தெழுத் துருவி
னாதனுக் கருக்கியங் கொடுத்தல்
எல்லையின் மூல மந்திரத் தாலு
மேனைமந் திரங்களி னாலும்
வில்லழ லோம்பிப் பூரணா குதிசெய்
தீறிலான் வேள்வியை முடித்தல். (25)

புலர்ந்தபின் னித்த வினைமுடித் தரம்பைப்
பொதுளும்பா சிலைபதின் மூன்றின்
நலந்தரு தூவெள் ளரிசிபெய் தினிய
நறியகாய் கறியொடு பரப்பி
அலந்தர வான்பா னிறைகுடம் பதின்மூன்
றரிசிமேல் வைத்தர னடியிற்
கலந்தவன் பினராய்ச் சிவார்ச்சனைக் குரிய
கடவுள்வே தியர்களை வரித்து. (26)

காதணி கலனுங் கையணி கலனுங்
கவின்பெற வளித்தர னாக

ஆதரம் பெருக நினைத்தருச் சனைசெய்
தரியதக் கிணையொடும் பாதப்
போதணி காப்பு விசிறிதண் கவிகை
பூந்துகின் முதற்பல வுடனே
மேதகு தானஞ் செய்துபின் குருவைக்
கற்புடை மின்னிடை யோடும். (27)

ஆசனத் திருத்திப் பொலந்துகில் காதுக்
கணிகள்கைக் கலிகளு மணிந்து
வாசநன் மலரிட் டருச்சனை செய்து
மலைமக டலைவனை வரைந்து
பூசனை செய்த படிமையோ டம்பொன்
பூதலம் பதாதிகள் பிறவும்
தூசலர் மாலை கோட்டணி புனைந்த
சுரபிமா தானமுஞ் செய்து. (28)

இனையவா றுத்தா பனமுடித் தாசா
னேவலாற் சிவனடிக் கன்பர்
தனையரோ டொக்க லுடனமு தருந்த
றகுதியிவ் விரதமுன் கண்ணன்
[1]நனையதா மரையோ னிந்திரன் முதல்வா
னாடவர் மூவறு கணத்தோர்
அனைவரு நோற்றார் மனிதரு மனுட்டித்
தரும்பெறற் போகம்வீ டடைந்தார். (29)

ஈதுநோற் பவர்வெம் பகைமனத் துயர்தீர்ந்
தாயிரம் பிறவியி லியற்றுந்
தீதுசேர் வினைதீர்ந் தெடுத்தயாக் கையினிற்
சிவகதி யடைவரிவ் விரதம்
ஓதினோர் கேட்டோர் மனைவியர் மக்க
ளொக்கலோ டினிதுவாழ்ந் தும்பர்
மேதகு பதினா லிந்திரன் பதத்தில்
வீற்றினி திருப்பரென் றறவோன். (30)

1. அனையதா. பா.பே.

வேறு

சொல்லிய நெறியாற் சோம
சுந்தரன் விரத நோற்பான்
வில்லிடு மணிப்பூண் வேந்தர்
முனிவனை விடைகொண் டேகி
அல்லியங் கனக கஞ்சத்
தாடியங் கயற்கண் வல்லி
புல்லிய பாகன் றன்னை
வழிபடீஇப் போற்றி நோற்றார். (31)

சுந்தரன் றன்னைப் பூசைத்
தொழில்செய்து வரம்பெற் றேகி
அந்தரத் தாறு செல்வா
ரஃதறிந் தமரர் வேந்தன்
வந்தவ ரிருக்க வேறு
மடங்கன்மான் றவிசு மூன்று
தந்திடப் பணித்தா ரிட்டார்
தனதரி யணையிற் றாழ. (32)

வான்வழி வந்த மூன்று
மன்னரும் பொன்னா டெய்தி
ஊன்வழி குலிச வைவே
லும்பர்கோன் மருங்கிற் புக்கார்
தேன்வழி போந்தின் கண்ணிச்
சேரனு மார்த்தார் வேந்துங்
கான்வழி தாரு நாடன்
காட்டிய தவிசின் வைக.  (33)

மைக்கடல் வறப்ப வென்ற
வாகைவேற் செழியன் மௌலிச்
செக்கர்மா மணிவிற் காலத்
தேவர்கோன் றவிசி லேறி
ஒக்கவீற் றிருந்தா னாக
வும்பர்கோ னழுக்கா றெய்திப்

பக்கமே யிருந்த வேனைப்
பார்த்திவர் முகத்தைப் பாரா. (34)

முகமனன் கியம்பி நீவிர்
வந்ததென் மொழிமி னென்ன
மகபதி யெங்க ணாட்டின்
மழைமறுத் தடைந்தே மென்றார்
அகமலர்ந் தனையார் நாட்டி
னளவும்வான் சுரக்க நல்கி
நகைமணிக் கலன்பொன் னாடை
நல்கிநீர் போமி னென்றான். (35)

அன்னவ ரகன்ற பின்னை
யமரர்கோன் கன்னி நாடன்
தன்னரி யணைமே லொக்கத்
தருக்கினோ டிருக்கு மாறும்
பின்னரு மாரி வேண்டாப்
பெருமித வீறு நோக்கி
இன்னது புலப்ப டாமை
யினையதோர் வினய முன்னா. (36)

பொற்புற வரிசை செய்வான்
போலள விறந்தோர் தாங்கி
வெற்புறழ் திணிதோ ளாற்றன்
மெலிவதோ ராரந் தன்னை
அற்புத வளித்தான் வாங்கி
யலர்மதுத் தார்போ லீசன்
கற்புடை யுமையாண் மைந்தன்
கதுமெனக் கழுத்தி லிட்டான். (37)

கண்டனன் கடவு ணாதன்
கழியவு மிரும்பூ துள்ளங்
கொண்டன னின்று தொட்டுக்
குரையளி துழாவு நிம்பத்

தண்டலை மார்ப வாரந்
தாங்குபாண் டியனென் றுன்னை
மண்டல மதிக்க வென்றான்
வானநா டுடைய மன்னன். (38)

அன்னது சிறிது மெண்ணா
தங்குநின் றிழிந்து தென்னன்
தன்னக ரடைந்தா னிப்பாற்
சதமக னாணை யாலம்
மன்னவ ரிருவர் நாடு
மழைவளம் பெருகப் பெய்த
தென்னவ னாடு பண்டைச்
செயலதா யிருந்த தன்றே. (39)

**மலைவளத்தின் பெருமை**

ஆயதோர் வைகல் வேட்டை
யாடுவா னண்ணல் விண்ணந்
தாயதோர் பொதியக் குன்றிற்
சந்தனச் சார நண்ணி
மேயதோ லரிமா னேனம்
வேங்கையெண் கிரலை யின்ன
தீயதோர் விலங்கு வேட்டஞ்
செய்துயிர் செகுக்கு மெல்லை. (40)

பொன்றத்து மருவிக் குன்றிற்
புட்கலா வருத்த மாதி
மின்றத்து மேக நான்கும்
வீழ்ந்தன மேயக் கண்டு
குன்றத்தி னெடிய திண்டோட்
கொற்றவ னவற்றைப் பற்றிக்
கன்றத்திண் களிறு போலக்
கடுந்தளை சிக்க யாத்தான். (41)

வேட்டத்திற் பட்ட செங்கண்
வேழம்போற் கொண்டு போகிக்
கோட்டத்தி னிட்டா னாகக்
குன்றிற கரிந்த வென்றி
நாட்டத்துப் படிவத் தண்ட
நாடன்மற் றதனைக் கேட்டுக்
காட்டத்துக் கனல்போற் சீறிக்
கடுஞ்சமர் குறித்துச் செல்வான். (42)

**மீனவன் மதுரைசூழ்ந்தது**

வாங்குநீர் வறப்ப வேலை
விடுத்ததும் வலிய வாரந்
தாங்கிய செருக்குங் காரைத்
தளையிடு தருக்கு நோக்கி
ஈங்கொரு மனித யாக்கைக்
கித்துணை வலியா தென்னா
வீங்கிய மான மூக்க
மீனவன் மதுரை சூழ்ந்தான். (43)

வேறு

ஓடின ரொற்றர்போய்ச் செழிய னொண்கழல்
சூடினர் நகர்ப்புறஞ் சுரர்கள் சேனைகள்
மூடின வென்னலு முனிவு மானமும்
நீடின னரியணை [1]யிருந்து நீங்குவான். (44)

பண்ணுக தேர்பரி பகடு வீரர்முன்
நண்ணுக கடிதென நடத்தி யாவரென்
றெண்ணலன் மதமலை யெருத்த மேற்கொடு
கண்ணகன் கடிநகர்க் காப்பு நீங்குமுன். (45)

........................................

1. யிறந்து. பா.வே.

அடுத்தனர் வானவ ரார்த்துப் பல்படை
எடுத்தனர் வீசினர் சிலையி லெய்கணை
தொடுத்தன ரிறுதிநாட் சொரியு மாரிபோல்
விடுத்தனர் மதிக்குல வீரன் சேனைமேல். (46)

ஆர்த்தனர் மலையவெற் பரையன் சேனையோர்
பார்த்தனர் வேறுபல் படைக்க லக்குவை
தூர்த்தனர் குனிசிலை தொடுத்து வாளியாற்
போர்த்தன ரமரர்மெய் புதைத்த வென்பவே. (47)

தறிந்தன தாள்சிரந் தகர்ந்த தோள்கரம்
பறிந்தன குருதிநீர் கடலிற் பாய்ந்தன
செறிந்தன பாரிடஞ் சேனங் கூளிகள்
முறிந்தன வானவர் முதல்வன் சேனையே. (48)

ஆடின குறைத்தலை யவிந்த போர்க்களம்
பாடின பாரிடம் விந்தைப் பாவைதாள்
சூடின கூளிகள் கோரி சோரப்பார்
மூடின பிணக்குவை முண்ட முட்டவே. (49)

வெஞ்சின வலாரிதன் வீரச் சேனைகள்
துஞ்சின கண்டெரி சொரியுங் கண்ணனாய்ப்
பஞ்சின்முன் னெரியெனப் பதைத்துத் தெய்வத
வஞ்சினப் படைகளான் மலைவ துன்னினான். (50)

வேறு

வெங்கதிர்ப் படைவிட் டார்த்தான்
விண்ணவ னதனைத் திங்கட்
பைங்கதிர்ப் படைதொட் டோச்சி
யவித்தனன் பாராள் வேந்தன்
சிங்கவெம் படைவிட் டார்த்தான்
தேவர்கோ னதனைச் சிம்புட்
புங்கவன் படைதொட் டோச்சி
யடக்கினான் புணரி வென்றோன். (51)

தானவர் பகைவன் மோக
சரந்தொடுத் தெறிந்தா னாக
மீனவ னதனை ஞான
வாளியால் விளித்து மாய்ந்து
போனபின் மற்போ [1]ராற்றிப்
புக்கனர் புக்கார் தம்மில்
வானவன் மண்ணி னான்மேல்
வச்சிரம் வீசி யார்த்தான். (52)

காய்சின மடங்க லன்னான்
கைவளை சுழற்றி வல்லே
வீசினன் குலிசந் தன்னை
[2]வீழ்த்தது விடுத்தான் சென்னித்
தேசினன் மகுடந் தள்ளிச்
சிதைத்தது சிதைத்த லோடுங்
கூசின னஞ்சிப் போனான்
குன்றிற கரிந்த வீரன். (53)

இந்திரன் டனைய கூர்ம்பல்
லிருள்வரை நெஞ்சு போழ்ந்த
மைந்தனில் வலிய காளை
வரைந்தெறி நேமி சென்னி
சிந்திடா தாகி யம்பொன்
மணிமுடி சிதறச் சோம
சுந்தர நாதன் பூசைத்
தொழிற்பய னளித்த தென்னா. (54)

போரினுக் காற்றா தோடிப்
பொன்னகர் புகுந்த வென்றித்
தாரினுக் கிசைந்த கூர்வேற்
சதமகன் பின்பு [3]நின்னாட்
டூரினுக் கெல்லா மாரி
யுதவுவே ணிகள நீக்கிக்

---

1. ராற்றுப். பா.வே. 2. விண்டது. பா.வே. 3. தன்னாட். பா.வே.

காரினைத் தருக வென்னாக்
கவுரியற் கோலை விட்டான். (55)

முடங்கல்கொண் டணைந்த தூதன்
முடிகெழு வேந்தன் பாதத்
தொடுங்கினின் றோலை [1]நீட்ட
வுழையுளா னொருவன் வாங்கி
மடங்கலே றனையான் முன்னர்
வாசித்துக் காட்டக் கேட்டு
விடங்கலுழ் வேலான் விண்ணோர்
வேந்துரை தேறா னாகி. (56).

இட்டவன் சிறையை நீக்கி
யெழிலியை விடாது மாறு
பட்டசிந் தையனே யாகப்
பாகசா தனனுக் கென்றும்
நட்டவ னொருவே ளாள
னான்பிணை யென்று தாழ்ந்தான்
மட்டவிழ்ந் தொழுகு நிம்ப
மாலிகை மார்பி னானும். (57)

இடுக்கண்வந் துயிர்க்கு மூற்ற
மெய்தினும் வாய்மை காத்து
வடுக்களைந் தொழுகு நாலா
மரபினா னுரையை யாத்தன்
எடுத்துரை மறைபோற் சூழ்ந்து
சிறைக்களத் திட்ட யாப்பு
விடுத்தனன் பகடு போல
மீண்டன மேக மெல்லாம். (58)

தேவர்கோ னேவ லாலே
திங்கண்மும் மாரி பெய்து

.........................................................

1. காட்ட. பா.வே.

வாவியுங் குளனும் யாறு
மடுக்களு மடுத்துக் கள்வாய்க்
காவிசூழ் வயலுஞ் செய்யுஞ்
செந்நெலுங் கன்னற் காடும்
பூவிரி பொழிலுங் காவும்
பொலிந்தது கன்னி நாடு. (59)

பதினான்காவது
இந்திரன் முடிதகர்த்த படலம் முற்றும்.
ஆகத் திருவிருத்தம் 1109.

பதினைந்தாவது
**மேருவைச் செண்டாலடித்த படலம்.**

அண்ட ரஞ்ச வமரு ழந்த
வமரர் கோனை யரசர்கோன்
வண்ட லம்பு மவுலி சிந்த
வளையெ றிந்து வெந்புறங்
கண்ட வண்ண மின்ன தன்ன
கன்னி நாடன் மேருவிற்
செண்டெறிந்து வைப்பெ டுத்த
செயலு நன்கு செப்புவாம். (1)

மன்ன வன்ற னக்கு முன்னர்
மலய வெற்பின் முனிவர்கோன்
சொன்ன திங்கள் விரத மன்று
தொட்டு நோற்று வரலுமந்
நன்ன லஞ்செய் பேறு போல
நங்கை காந்தி மதிவயிற்
றுன்ன ருஞ்ச யங்கொண் மைந்த
னொருவன் வந்து தோன்றினான். (2)

வயந்த னைப்ப யந்த தென்ன
மைந்த னைப்ப யந்தபோ

தியந்து வைத்து நகர்க ளிப்ப
        வினிதி ருந்த புரவலன்
சயந்த ழைக்க விந்தி ரன்ச
        யந்த னைப்ப யந்தநாள்
வியந்த கத்த டைந்த வின்பம்
        விளைம கிழ்ச்சி செய்தினான். (3)

தென்ன ரேறு சாத காதி
        செய்து வீர பாண்டியன்
என்ன நாம வினைநி ரப்பி
        யெழுதொ ணாத கலைமுதற்
பன்னு கேள்வி கரிக டோர்கள்
        பரிப டைக்க லம்பயின்
றன்ன காத லான்வி ளங்க
        வகம கிழ்ச்சி யடையுநாள். (4)

[1]மல்கு மாறில் கோடி ரிந்து
        மழைசு ருங்கி நதியுநீர்
ஒல்கு மாறு பருவ மாறி
        யுணவு மாறி யுயிரொலாம்
மெல்கு மாறு பசியு ழந்து
        வேந்த னுக்கு விளைபொருள்
நல்கு மாறி லாமை யின்ன
        னலிய வந்த நாடெலாம். (5)

மழைவ றந்த தென்கொ லென்று
        வழுதி கூற முழுதுணர்ந்
தழிவி லாத பிரம கற்ப
        மளவு மெல்லை கண்டநூல்
உழவர் கோள்க ளிரவி தன்னை
        யுற்று நோக்கி நிற்றலால்
தழையு மாரி வருடி யாதொர்
        வருட மென்று சாற்றினார். (6)

1. மல்கு மாறு கோள் திரிந்து. பா.வே. (ஆறுகோள்: சந்திரன், புதன், வெள்ளி நீங்கலாக)

வேறு

மகவுறு நோயை நோக்கி
வருந்துறு தாய்போன் மன்னன்
பகவுறு மதியஞ் சூடும்
பரஞ்சுடர் முன்போய்த் தாழ்ந்து
மிகவுறு பசியால் வைய
மெலிவதை யைய வென்னாத்
தகவுற விரங்கிக் கண்ணீர்
[1]ததும்பநின் றிரந்து வேண்ட. (7)

திரைக்கடல் விடஞ்சேர் கண்டர்
காலத்தின் செவ்வி நோக்கி
இரக்கமில் லவர்போல் வாளா
விருத்தலு மருத்தார் மார்பன்
கரைக்கரி தாய துன்பக்
கடலில்வீழ்ந் திருக்கை புக்கான்
அரக்கர்போர்க் கடலி னீந்தி
யருக்கனீர்க் கடலில் வீழ்ந்தான். (8)

வள்ளறன் குடைக்கீழ்த் தங்கு
முயிர்ப்பசி வருத்த மெல்லாங்
கொள்ளைகொண் டிருந்த நெஞ்சிற்
குளிர்முகச் செவ்வி குன்றத்
தள்ளருந் துயரின் மூழ்கிழ்
தரையிடைத் துயின்றா னாக
வெள்ளிமன் றுடையார் சித்த
வேடராய்க் கனவில் வந்தார். (9)

அடற்கதிர் வேலோய் மாரி
யரிதிப்போ ததனை வேண்டி
இடர்ப்படல் வரைக்கு வேந்தா
யிருக்கின்ற வெரிபொன் மேருத்

........................................

1. ததும்பிநின். பா.வே.

தடப்பெரு வரையின் மாடோர்
தனிப்பெரு முழையி லிட்டுக்
கிடப்பதோ ரெல்லை யில்லாக்
கேடிலாச் சேம வைப்பு. (10)

கிடைத்தமற் றனைய மேரு
[2]கிரிசெருக் கடங்கச் சென்டாற்
புடைத்துநின் னாணைத் தாக்கிப்
பொன்னறை பொதிந்த பாறை
துடைத்துநீ வேண்டுங் காறுந்
தொட்டெடுத் ததனை மீள
அடைத்துநின் குறியிட் டைய
வருதியென் றடிகள் கூற. (11)

விழித்தன னெழுமான் றேரோன்
விழிக்குமுன் கடன்க ளெல்லாங்
கழித்தனன் மீன நோக்கி
கணவனை வலமாய்ப் போந்து
சுழித்தெறி கடல னீகத்
தொகைபுறஞ் சூழக் கொண்டல்
கிழித்தெழு வாயி னீங்கிக்
கீழ்த்திசை நோக்கிச் செல்வான். (12)

அதிர்ந்தன முரசஞ் சங்க
மதிர்ந்தன வியங்க ளண்டம்
பிதிர்ந்தன வென்ன வார்ப்பப்
பெயர்ந்துவெண் கவரி துள்ள
முதிர்ந்தநான் மறையோ ராசி
மொழியநா வல்லோ ரேத்த
பதிந்துபார் கிழியத் திண்டேர்
பாகுமுன் செலுத்த வூர்ந்தான். (13)

..........................................................

2 கிரிச்செருக். பா.வே.

பவளக்காற் பிச்சம் பொற்காற்
பன்மணிக் கவிகை முத்தத்
தவளக்காற் பதாகைக் காடுந்
தானவா னருவி தூங்குங்
கவளக்காற் பொருப்பும் பாய்மாக்
கடலுமண் மடந்தை யாகந்
துவளக்கால் வயவர் மான்றேர்த்
தொகுதியுஞ் சூழல் போக. (14)

கோழிணர் ஞாழ லன்ன
கோட்டுகிர்ப் புலவுப் பேழ்வாய்த்
தாழ்சின வுழுவை யொற்றைத்
தனிப்பெருங் கொடியுங் கூனற்
காழ்சிலைக் கொடியுஞ் சூழக்
கயற்கொடி நிலந்து ழாங்கை
ஏழுயர் வரைமேற் றோன்றி
யிருவிசும் பகடு கீற. (15)

தென்கடல் வடபா னோக்கிச்
செல்வது போலத் தென்னன்
றன்கட லனிகங் கன்னித்
தண்டமிழ் நாடு நீந்தி
வன்கட நெறிக்கொண் டேகி
வளவர்கோ னெதிர்கொண் டாற்றும்
நன்கடன் முகம னேற்று
நளிர்புன னாடு நீந்தி. (16)

தண்டக நாடு தள்ளித்
தெலுங்கநா டகன்று சாய்தாட்
கண்டகக் கைதை வேலிக்
கருநடங் கடந்து காடுந்
தொண்டகந் துவைக்குங் குன்று
[1]நதிகளுநந் துறந்து கள்வாய்

1. நதங்களுந். பா.வே. (நதம் – மேற்குநோக்கி ஓடும் ஆறு)

வண்டக மலர்க்கா வேலி
மாளவ தேச நண்ணி. (17)

அங்குநின் றெழுந்து தீவா
யருஞ்சுர நெறிப்பட் டேகி
மங்குநின் றதிருஞ் செம்பொன்
மாடநீன் விராட நண்ணிக்
கொங்குநின் றவிழுங் கானங்
குன்றொரீஇ வாளை பாயத்
தெங்குநின் றிளநீர் சிந்து
மத்திய தேயத் தெய்தி. (18)

அந்நெடு நாடு நீங்கி
யாடலே றுயர்த்த தோன்றல்
பொன்னெடுஞ் சடையிற் றாழ்ந்து
புனிதமாந் தீர்த்தக் காசி
நன்னெடு நகர மெய்தி
நளிர்புனற் கங்கை நீந்திக்
கன்னெடு நெறிய நேக
காவதங் கடந்த பின்னர். (19)

மடங்கன்மா நாகம் யாளி
வழங்கலான் மனிதர் செல்லா
இடங்கடந் தாக வைந்நூற்
றிரட்டியோ சனைத்தா மெல்லை
கடங்கெழு குமரி கண்டங்
கடந்துமற் றதுபோ லெட்டுத்
தடங்கெழு கண்டங் கொண்ட
பாரத வருடந் தள்ளி. (20)

யாவையு மீன்றா டன்னை
யீன்றபொன் னிமயந் தன்னைத்
தாவியப் புறம்போய்ப் போகந்
ததும்புகிம் புருட கண்டம்

மேவியங் கதுநீத் தேம
வெற்படைந் ததுபின்னாக
ஓவியப் புறத்துத் தோன்று
மரிவரு டத்தை யுற்று. (21)

உற்றது கழிந்தப் பாற்போய்
நிடதவெற் பொழிந்து சம்புப்
பொற்றருக் கனிகால் யாறு
போகிளா விருத கண்டத்
துற்றனன் கண்டான் மூன்றா
றொருங்கடு ஞான்று கூனி
வெற்றிவெஞ் சிலையாய் நின்ற
வெற்பினை மலைய வெற்பன். (22)

வெம்படை மறவர் சேனை
வெள்ளநீத் தேகித் தென்பாற்
சம்புவின் கனியின் சாறு
வலம்படத் தழுவி யோடும்
அம்பொனீ ராறு மாற்றி
னருகுபொன் மயமாய் நிற்கும்
பைம்புனங் [1]கான நோக்கி
வளைந்துதென் பால்வந் தெய்தா. (23)

அவ்வரை யரசை நோக்கி
வரைகளுக் கரசே யெந்தை
கைவரி சிலையே பாரின்
களைகணே யளவில் வானந்
தைவரு சுடருங் கோளு
நாள்களுந் தழுவிச் சூழுந்
தெய்வத வரையே மேலைத்
தேவரா லயமே யென்னா. (24)

1. காறு. பா.வே.

மாணிக்க மிமைக்கும் பூணான்
விளித்தலும் வரைக்கு வேந்தன்
பாணித்து வரவு தாழ்ப்பப்
பாகசா தனனை வென்றோன்
நாணித்தன் சினமு மேரு
நகைவரைச் செருக்கு மாறச்
சேணுற்ற சிகரந் தன்னிற்
செண்டினா லடித்து நின்றான். (25)

### மேருவின் மணி உதிர்ந்தது

அடித்தலு மசையா மேரு
வசைந்துபொற் பந்து போலத்
துடித்தது சிகர பந்தி
சுரர்பயில் [1]மாடப் பந்தி
வெடித்தன தருண பானு
மண்டலம் விண்டு தூளாய்ப்
படித்தலை தெறித்தா லென்னப்
பன்மணி யுதிர்ந்த வன்றே! (26)

புடைவரைக் குலங்க ளெட்டும்
புறந்தழீஇக் கிடக்குஞ் செம்பொன்
அடைக்கலோர் நான்கு நான்கு
கிடங்கரு மலர்ந்த நான்கு
தடமலர்ப் பொழிலு நான்கு
தருக்களுஞ் சலித்த வம்மா
உடையவ னிடையூ றுற்றா
லடுத்தவர்க் குவகை யுண்டோ. (27)

புடைத்தபின் மேருத் தெய்வம்
புடைக்குல வரையெட் டென்னப்

1 மாடபந்தி. பா.வே.

படைத்தவெண் டோளு நான்கு
முடியுமேற் படுவெண் சோதி
உடைத்தனிக் குடையுங் கொண்ட
வுருவினோ டெழுந்து நாணிக்
கிடைத்தது கருணை வேந்தன்
கிளர்சினந் தணிந்து நோக்கா. (28)

இத்தனை வரவு தாழ்ந்த
தென்னென மேருத் தெய்வம்
வித்தக நம்பி கேட்டி
மீனெடுங் கண்ணி யோடும்
பைத்தலை யரவம் பூண்ட
பரனையிப் படிவம் கொண்டு
நித்தலும் போகிப் போகி
வழிபடு நியமம் பூண்டேன். (29)

இன்றுகேட் டிலையோ [1]வைய
வேந்திழை யொருத்தி காமந்
துன்றுமா கடலின் மோகச்
சுழித்தலைப் பட்டு வெள்ளி
மன்றுளா டியபொற் பாதம்
வழிபடன் மறந்து [2]தாழ்த்து
நின்றுளே னினைய தீங்கி
னிமித்தினா லடியும் பட்டேன். (30)

திருவடி பிழைத்த தீங்கு
தீர்த்தனை யிதனி லையன்
தருவதோ ருறுதி தானுந்
தக்கதோர் கைம்மா றென்னால்
வருவது முண்டாங் கொல்லோ
மற்றது நிற்க மன்றற்

1. வையா. பா.வே. 2. தாழ்ந்து. பா.வே.

பருவரை மார்ப வந்த
பரிசென்கொல் பகர்தி யென்ன. (31)

மன்னவன் வெறுக்கை வேண்டி
வந்தன னென்றா னைய
உன்னது புலத்தோர்க் கேற்ப
வுரைபடு மாற்ற தாய
பொன்னவிர் தேமா நீழற்
புதைபடக் கிடக்குஞ் செம்பொன்
என்னவங் கையாற் சுட்டிக்
காட்டிய தெரிபொற் குன்றம். (32)

மின்னகு வேலான் முந்நீர்
வேலையை வணக்கங் கண்டோன்
பொன்னறை மருங்கிற் போகிப்
பொத்திய பாறை நீக்கித்
தன்னவா வளவிற் றாய
தபனிய முகந்து மூடிப்
பின்னதுந் தன்ன தாகப்
பெயரிலச் சினையுந் தீட்டா. (33)

மின்றிகழ் மணிப்பூண் மார்பன்
மீண்டுதன் றானை யோடுந்
தென்றிசை நோக்கிப் பாகன்
செலுத்தமான் றடந்தே ரூர்ந்து
பொன்றிகழ் வரையும் போக
பூமியும் பிறவு நீத்து
நன்றிகொண் மனிதர் வைப்பி
னண்ணுவா னண்ணு மெல்லை. (34)

மாத்திமர் விராட மன்னர்
மாளவர் தெலுங்க தேயப்
பார்த்திபர் பிறருந் தத்தம்
பதிதொறும் வரவு நோக்கித்

தேர்த்திக ழனிகத் தோடுஞ்
சென்றெதிர் முகமன் [1]செய்யத்
தார்த்திரு மார்பன் கன்னித்
தண்டமிழ் நாடு சார்ந்தான். (35)

கன்னிப்பொன் னெயில்சூழ் செம்பொற்
கடிநகர்க் கணிய னாகிப்
பொன்னிற்செய் திழைத்த நீள்கோ
புரத்தினைக் கண்டு தாழ
உன்னித்தே ரிழிந்தெட் டோடைந்
துறுப்பினாற் பணிந்தெ ழுந்து
வன்னிச்செஞ் சுடர்க்க ணெற்றி
மன்னவன் மதுரை சார்ந்தான். (36)

அறத்துறை அந்த ணாளர்
துறந்தவ ரரன்றாள் பற்றிப்
புறத்துறை யகன்ற சைவ
பூதியர் புனிதன் கோயிற்
றிறத்துறை யகத்துத் தொண்டர்
திரண்டெதிர் கொள்ள முத்தின்
நிறத்துறை வைகை நீத்து
நெடுமதில் வாயில் புக்கான். (37)

கொங்கலர் கோதை மாதர்
குங்குமம் பனிப்பச் சிந்தும்
மாங்கல மறுகி னேகி
மறைகள்சூழ் கோயி லெய்தித்
தங்கணா யகனைச் சூழ்ந்து
தாழ்ந்தெழுந் தேத்திப் போந்து
திங்கள்சூழ் குடுமிச் செல்வத்
திருமணிக் கோயில் புக்கான். (38)

1. செய்யத். பா.வே.

பொன்மலைக் கடவு ளீந்த
புண்ணிய நிதியை யந்த
நன்மலை மானக் கூப்பி
நல்கிப்பல் குடியு மோம்பித்
தென்மலைக் கிழவன் தெய்வந்
தென்புல வாண ரொக்கல்
தம்மனை விருந்து காத்துத்
தருக்கினா னிருக்கு நாளில். (39)

ஐவினை நடாத்து மீச
னாணையா னடக்குங் கோளுஞ்
செய்வினைத் திரிவு மாறத்
தென்னனா டெங்கு மாரி
பெய்வினை யுடைய தாகிப்
பெருவளம் பகிர்ந்து நல்க
உய்வினை யுடைய வாகி
யுயிரெலாந் தழைத்த வன்றே. (40)

வேறு

புவனியிம் முறையாற் புரந்தளித் தாரம்
பூண்டபாண் டியன்றிரு மகனுக்
கவனியே றறிய வீரபாண் டியனென்
றணிமுடி கவித்தர சளித்து
நவநிர திசய பூரண வின்ப
ஞானநோக் கருளிய மதுரைச்
சிவனடி நிழலிற் பிளப்பறப் பழைய
தேசொடு நிறைந்துவீற் றிருந்தான். (41)

பதினைந்தாவது மேருவைச் செண்டாலடித்த படலம் முற்றும்.

ஆகத் திருவிருத்தம் 1150.

பதினாறாவது

## வேதத்துக்குப் பொருளருளிச்செய்த படலம்

உலம்பெரு தடந்தோ ளுக்கிரச் செழிய
னுயரிய மேருமால் வரையைப்
பொலம்புரி செண்டாற் புடைத்துவைப் பெடுத்துப்
போந்தரு ளடைந்தவா புகன்றும்
வலம்படு திணிதோள் வீரபாண் டியன்கோல்
வழங்குநாண் மதுரையெம் பெருமான்
புலம்பொரு முனிவர் தேறநால் வேதப்
பொருளுணர்த் தியதிறம் புகல்வாம். (1)

ஐம்பெரும் பூத நிலைதிரிந் தீரே
ழுடுக்கிய வுலகொடு மயன்மால்
உம்பர்வான் பதமு முதித்தவா றொடுங்க
வுருத்ததோ ரூழிவந் தெய்தச்
செம்பொருண் மறையு மொடுங்கிய வழிநாட்
செஞ்சுடர்க் கடவுண்முன் மலரும்
வம்பவிழ் கமல மெனவரன் றிருமுன்
மலர்ந்ததா லகிலமு மாதோ. (2)

பண்டுபோற் பின்னு முத்தொழி னடாத்தப்
பராபரஞ் சுடர்திரு வுள்ளங்
கொண்டுபோர்த் திகிரி வலவனைத் தாவிக்
குரிசிறன் னாபிமுண் டகத்தில்
வண்டுபோற் பிரம னுதித்தஃழ வுலகும்
வரன்முறை படைக்குநா ணஞ்சம்
உண்டுபோற் றியவா னவர்க்குயி ரளித்த
வும்பர்நா யகன்றிரு வாக்கில். (3)

### வேதியன்வந்தது

பிரணவ முதித்த ததனிடை வேதம்
பிறந்தன நைமிசா ரணியத்

தருணிறை முனிவர் கண்ணுவர் கருக்க
ராதியோ ரதிகரித் தவற்றின்
பொருணிலை தெரியா துள்ளமு முகமும்
புலர்ந்தன ரிருப்பவர் போதத்
திருண்மல வலிவென் றவனர பத்த
னென்றொரு வேதியன் வந்தான். (4)

வந்தவே தியனை யிருந்தவே தியர்கள்
வரவெதிர்ந் திறைஞ்சிவே றிருக்கை
தந்தவே லையிலம் மறையவன் முனிவர்
தமைமுக நோக்கியீ துரைப்பான்
பந்தவே தனைசா லவாவெறுப் பிகந்த
பண்பின ராயினீர் நீவிர்
சிந்தைவே றாகி முகம்புலர்ந் திருக்குஞ்
செய்தியா தெனவவர் சொல்வார். (5)

மருட்படு மாயை கழிந்தவன் மொழிந்த
மறைபயின் றுரைசெய்தே சிகனற்
றிருட்படு மனத்தே மிருத்துமா லைய
யாதுசூ ழிதற்கெனக் கேட்ட
தெருட்படு மனத்தோன் செப்புவான் வேதஞ்
செப்பிய சிவபரஞ் சுடரே
அருட்படி வெடுத்துப் பொருளையு முணர்த்து
மல்லது சூழ்ச்சியா தறைவீர். (6)

பண்ணிய தவத்தா லன்றியா தானும்
படுபொருள் பிறிதிலை தவமும்
புண்ணிய தலத்தி னல்லது பலியா
புண்ணிய தலத்தினும் விழுப்பம்
நண்ணிய சைவ தலத்தினி லியற்றி
னல்குமச் சிவதலங் களினும்
எண்ணிய வதிக தலத்தினி லியற்றி
னிருந்தவ மெளிதுடன் பயக்கும். (7)

அத்தகு தலமற் றியாதெனி லுலக
மகிலமுந் தன்னுடம் பான
வித்தகன் சென்னிப் பன்னிரு விரன்மேல்
விளங்கிய தலமது சீவன்
முத்தரா யெண்ணில் வானவர் முனிவோர்
முயன்றுமா தவப்பய னடைந்து
சித்தமா சகன்று வதிவதென் றறநூல்
செப்பிய மதுரையந் நகரில். (8)

தெளிதரு விசும்பி னிழிந்ததோர் விமான
சிகாமணி யருகுதென் மருங்கின்
முளிதரு பராரை வடநிழல் பிரியா
முழுமுதல் வழிபடு மறவோர்க்
களிதரு கருணை முகமலர்ந் தளவா
வருங்கலை யனைத்தையுந் தெளிவித்
தொளிதரு மனைய மூர்த்தியே நுங்கட்
கோதிய மறைப்பொரு ளுணர்த்தும். (9)

**முனிவர் வந்தது**

அங்கவன் றிருமு னருந்தவ விரத
மாற்றுவான் செல்லுமி னெனவப்
புங்கவன் னருள்போல் வந்தமா தவன்பின்
புனிதமா முனிவரு நங்கை
பங்கவன் மதுரைப் பதிபுகுந் தம்பொற்
பன்மணிக் கோயில்புக் காழிச்
சங்கவன் கைபோல் வளைசெறி செம்பொற்
றாமரை தடாகநீ ராடி. (10)

கரைகடந் துள்ளங் கடந்தவன் புந்தக்
கடிதுபோய் நான்கிரு வெள்ளி
வரைகடம் பிடரிற் கிடந்ததோர் மேரு
வரைபுரை விமானமேற் காணா

உரைகடம் பொருளைக் கண்களாற் கண்டாங்
கும்பர்தம் பிரானைநேர் கண்டு
திரைகடந் திடும்பே ரின்பவா ரியிலுஞ்
சேணிலத் திலும்விழுந் தெழுந்தார். (11)

கைதலை முகிழ்த்துக் கரசர ணங்கள்
கம்பிதஞ் செய்துகண் ணருவி
பெய்தலை வெள்ளத் தாழ்ந்துவாய் குழறிப்
பிரமன்மா லின்னமுந் தேறா
மைதழை கண்ட வெள்ளிமன் றாடும்
வானவர் நாயக வானோர்
உய்தர விடமுண் டமுதருள் புரிந்த
வுத்தம போற்றியென் றேத்தா. (12)

மறைபொருள் காணா துள்ளமா லுழந்து
வாடிய வெமக்குநீ யேயந்
நிறைபொரு ளாகி நின்றனை யதற்கு
நீயலாற் பொருள்பிறி தியாதென்
றிறைவனை யிறைவன் பங்கிலங் கயற்க
ணிறைவியை யம்முறை யேத்தி
முறைவலஞ் செய்து வடநிழ லமர்ந்த
மூர்த்திமுன் னெய்தினார் முனிவோர். (13)

சீதளப் பளிக்கு மேனியும் பளிக்குச்
செழுமலை பதித்ததுப் பன்ன
பாதமுஞ் செவ்வாய் மலருமுக் கண்ணும்
பங்கயச் செங்கர நான்கும்
வேதபுத் தகமு மமுதகும் பமுந்தன்
விழிமணி வடமுமெய்ஞ் ஞான
போதமுத் திரையுந் தரித்ததோர் தனிமைப்
போதன்முன் றாழ்ந்தெழுந் தேத்தா. (14)

வடநிழ லமர்ந்த மறைமுதன் மேதா
மனுவெழுத் திருபது மிரண்டுந்

திடமுற வரபத் தன்றனாற் றெளிந்து
தேணிறை மதிமுத லடைவிற்
படுமதி யளவுந் தருப்பண மோமம்
பார்ப்பன வுண்டிமுப் போதும்
அடைவுற நுவன்று நோற்குமா தவர்மு
னருமறைப் பொருள்வெளி வருமால். (15)

மானமுனி வோரதி சயிப்பவட நீழல்
மோனவடி வாகிய முதற்குரவ னெண்ணான்
கூனமி லிலக்கண வுறுப்பகவை நானான்
கானவொரு காளைமறை யோன்வடிவ மாகி. (16)

நீண்டதிரி முண்டமழ னெற்றிவிழி பொத்தக்
காண்டகைய கண்டிகை வளைந்தொழுகு காதிற்
பூண்டகுழை கௌவிய பொலன்செய்பல காசு
சேண்டவ ழிளங்கதிர் சிரித்திருள் சிதைப்ப. (17)

உத்தரிய வெண்படம் வலம்பட வொதுங்க
முத்தவள நூலினொடு முத்தமிடை யிட்டு
வைத்தணியு மக்கவட மாலையெறி வாளாற்
பத்தரை மறைத்தமல பந்தவிருள் சிந்த. (18)

கண்டிகை தொடுத்திரு கரத்தினொடு வாகு
தண்டினிடு மாலைவிட வாளரவு தள்ள
வெண்டுகிலி னானவிரி கோவண மருங்கிற்
றண்டரிய பட்டிகை வளைந்தொளி தழைப்ப. (19)

வண்டுவரி பாடுவென போலமலர் பாத
புண்டரிக மேலுழல் சிலம்புகள் புலம்பத்
தொண்டரக மாசிரு டுணித்துமுடி சூட்டும்
முண்டக மலர்ப்புறம் விறற்கழன் முழங்க. (20)

ஏதமில் பவித்திரம் வலக்கர னிமைப்பப்
போதம்வரை புத்தக மிடக்கையது பொற்ப

ஓதியுண ராதலறி யோலமிடும் வேதம்
பாதுகைக ளாகியிரு பாதமலர் சூட. (21)

கள்ளமுள ரிக்குண்முரல் காளையறு கால
புள்ளொலியி னாவுமித மும்புடை பெயர்ந்து
துள்ளவெழு வேதவொலி தொண்டர்செவி யாற்றால்
உள்ளவயல் புக்குவகை யொண்பயிர் வளர்ப்ப. (22)

சீதமணி மூரறிரு வாய்சிறி தரும்ப
மாதவர்கள் காணவெளி வந்துவெளி நின்றான்
நாதமுடி வாயளவி னான்மறையி னந்த
[1]போதவடி வாகிநிறை பூரண புராணன். (23)

வேறு

[2]வட்டவாண் மதிகண் டார்க்கு
[3]முவாக்கடன் மான மாண்ட
சிட்டரா முனிவர் காளைத்
தேசிக வடிவ நோக்கி
ஒட்டரா வுவகை வெள்ள
மேற்கொள வுருத்த கூற்றை
அட்டதா மரைதஞ் சென்னிக்
கணிமல ராகத் தாழ்ந்தார். (24)

அளவறு கலைகட் கெல்லாம்
முறைவிட மாகி வேத
விளைபொரு ளாகி நின்ற
வேதிய சரண மென்ற
வளைவறு மனத்தி னாரைத்
தேசிக வள்ள னோக்கிப்
பளகறு தவத்தீர் வேட்கை
யாதெனப் பணிந்து சொல்வார். (25)

அடியரே முய்யு மாறு
முலகெலா மளிக்கு மாறும்

1. போதமுடி. பா.வே. 2. வட்டவான். பா.வே. 3. முவர்க்கடல். பா.வே.

படியிலா வரத்த வேதப்
　　　　பயனருள் செய்தி யென்னக்
கொடியமா பாசந் தீர்ப்பான்
　　　　குரவனம் முனிவ ரோடு
முடிவிலா விலிங்க முன்போய்
　　　　மறைப்பொருண் மொழிவ தானான். (26)

**சிவலிங்க மென்பது**

அந்தணிர் கேண்மின் சால
　　　　வருமறைப் பொருள்க ளெல்லாம்
மந்தண மாகு மிந்த
　　　　மறைப்பொரு ளறித றானே
நந்தலில் லாத போகப்
　　　　பயனுக்கு நலியும் பாச
பந்தனை கழிக்கும் வீட்டின்
　　　　பயனுக்குங் கருவி யாகும். (27)

உத்தம சயம்புக் குள்ளு
　　　　முத்தம தரமாய் மேலாந்
தத்துவ மாகு மிந்தச்
　　　　சுந்தர சுயம்பு லிங்கம்
நித்தமாய் மறைகட் கெல்லா
　　　　நிதானமாம் பொருளா யுண்மைச்
சுத்தவத் துவித மான
　　　　சுயம்பிர காச மாகும். (28)

நிறை [1]பராற் பரம்விஞ் ஞான
　　　　நிராமய மென்று நூல்கள்
அறைபரம் பிரம மாகு
　　　　மிதனுரு வாகு மேக
மறையிதன் பொருளே யிந்தச்
　　　　சுந்தர வடிவா யிங்ஙன்

1. பரம்பரம்; பராபரம். பா.வே.

உறைசிவ லிங்க மொன்றே
யென்பர்நூ லுணர்ந்த நல்லோர். (29)

ஆகையான் மறையு மொன்றே
யருமறைப் பொருளு மொன்றே
சாகையா லனந்த மாகித்
தழைத்ததச் சாகை யெல்லாம்
ஓகையா [1]லிவனை யேத்து
முலகுத யாதிக் [2]கீந்த
ஏகனா ணையினான் மூன்று
மூர்த்தியா [3]யிருந்தா னன்றே. (30)

மலர்மக னாகி மூன்று
வையமும் படைத்து மாலாய்
அலைவற நிறுத்தி முக்க
ணாதியா யழித்தம் மூவர்
தலைவனாய்ப் பரமா காச
சரீரியாய் முதலீ றின்றித்
தொலைவருஞ் சோதி யாமிச்
சுந்தர விலிங்கந் தன்னில். (31)

வேறு

ஆதியி லான்ம தத்துவ மான
வலர்மகன் பாகமு நடுவில்
நீதியில் விச்சா தத்துவ மான
நெடியவன் பாகமு [4]முடிவில்
ஓதிய சிவதத் துவமென லான
வுருத்திர பாகமு முதிக்கும்
பேதியிம் மூன்றி லெண்ணிறத் துவங்கள்
பிறக்குமிம் மூன்றினு முறையால். (32)

.................................................................

1. லிவனைச் சேகு. (சேகும் – இடைவிடாது நினைக்கும்) பா.வே.

2. கிந்த. பா.வே. 3. யிருந்த தன்றே. பா.வே. 4. முடியில். பா.வே.

## காயத்திரி மகத்துவம்

ஓதரு மகார முகாரமே மகார
முதித்திடும் பிரணவம் விந்து
நாதமோ டுதிக்கும் வியத்ததா ரகத்தி
னல்லகா யத்திரி மூன்று
பேதமாம் பதத்தாற் பிறக்குமிக் காயத்
திரியிரு பேதமாம் பேதம்
யாதெனிற் சமட்டி வியட்டியென் றிரண்டு
மேதுவாம் வேட்டவைக் கெல்லாம். (33)

இன்னவை யிரண்டு மிவனருள் வலியா
லீன்றநான் மறையையுந் நான்கும்
பின்னிவ னருளா லளவில வான
பிரணவ மாதிமந் திரமும்
அன்னவா றான தாரகத் தகார
மாதியக் கரங்களு முதித்த
சொன்னவக் கரத்திற் சிவாகம நூலிச்
சுரவர னடுமுகத் துதித்த. (34)

கீட்டிசை முகத்தொன் றடுத்தநா லைந்திற்
கிளைத்ததா லிருக்கது தென்பால்
ஈட்டிய விரண்டாம் வேதநூ றுருவோ
டெழுந்தது வடதிசை முகத்தில்
நீட்டிய சாம மாயிர முகத்தா
னிமிர்ந்தது குடதிசை முகத்தில்
நாட்டிய வொன்ப துருவொடு கிளைத்து
நடந்தது நான்கதா மறையே. (35)

## வருணமாச்சிரமம்

அருமறை நால்வே றாகையால் வருண
மாச்சிர மங்களு நான்காந்

தருமம்யா காதி கருமமு மறையின்
றகைமையிற் றோன்றின மறையுங்
கருமநூன் ஞான நூலென விரண்டாங்
கருமநூ [1]லிவனருச் சனைக்கு
வரும்வினை யுணர்ந்து ஞானநூ லிவன்றன்
வடிவிலா வடிவினை யுணர்த்தும். (36)

முதனுகர் நீராற் சினை [2]குழைத் தாங்கிம்
முழுமுதற் கருத்துநல் லவியின்
பதமிவன் வடிவப் பண்ணவர் பிறக்குந்
திருத்தியாம் பானிவன் முகத்தின்
விதமுறு நித்த மாதிமூ வினைக்கும்
வேண்டியாங் குலகவர் போகங்
கதிபெற வியற்றுஞ் சிவார்ச்சனை வினைக்குங்
காரண மிச்சிவ கோசம். (37)

மறைபல முகங்கொண் டலறிவா யிளைத்து
மயங்கவே றகண்டபூ ரணமாய்
நிறைபரம் பிரம மாகுமிக் குறியைக்
கருமநன் னெறிவழாப் பூசை
முறையினு ஞான நெறியினிப் பொருளை
யருளினான் முயக்கற முயங்கும்
அறிவினுந் தெளிவ துமக்குநா முரைத்த
வருமறைப் பொருள்பிறர்க் கரிதால். (38)

வேறு

கருமத்தான் ஞான முண்டாங்
[3]கருமத்தைச் சித்த சுத்தி
[4]தருமத்தா லிகந்த சித்த
[5]சுத்தியைத் தரும நல்கும்

..............................................................................

1. லிவனையர்ச் சிக்க. பா.வே. 2. கிளைத் பா.வே.3. கருமத்திற். பா.வே. 4. வருமத்தா. பா.வே.
5. சுத்தியில் தரும மல்கும். பா.வே.

அருமைத்தாந் தருமத் தாலே
சாந்தியுண் டாகு மாண்ட
பெருமைத்தாஞ் சாந்தி யாலே
பிறப்பதட் டாங்க யோகம். (39)

கிரியையான் ஞானந் தன்னாற்
கிளர்சிவ பத்தி பூசை
தரிசனஞ் சைவ லிங்க
தாபனஞ் செய்த லீசற்
குரியமெய் யன்பர் பூசை
யுருத்திர சின்னந் தாங்கல்
அரியதே சிகன்பாற் பத்தி
யனைத்தையுந் தெரிய லாகும். (40)

மறைவழி மதங்கட் கெல்லா
மறைபிர மாணம் பின்சென்
றறைதரு மிருதி யெல்லா
மவைக்கனு குணமா மின்ன
முறையினான் மார்த்த மென்று
மொழிவதம் மார்த்தஞ் சேர்ந்த
துறைகள்வை திகமா மேலாச்
சொல்வதிச் சுத்த மார்க்கம். (41)

வேறு

தெருட்பெறு போகம் வீடுகா ரணமாய்ச்
சிவமய மாமறைப் பொருளை
இருட்கெட வுரைத்தே மிப்பொருட் கதிக
மில்லையிப் பொருளெலா முமக்கு
மருட்கெடத் தெளிவ தாகென வினைய
வழிவழா மாதவர் புறத்தை
அருட்கையாற் றடவி யிலிங்கத்துட் புகுந்தா
னருள்பழுத் தன்னதே சிகனே! (42)

பதினாறாவது
வேதத்துக்குப் பொருளருளிச் செய்த படலம்
முற்றும்
ஆகத் திருவிருத்தம். 1192

பதினேழாவது

## மாணிக்கம் விற்ற படலம்.

சுகந்த வார்பொழின் மதுரையெம் பிரான்றன துணைத்தாள்
உகந்த வாவறு கண்ணுவ முனிமுத லோதும்
அகந்த வாதபே ரன்பருக் கருமறைப் பொருளைப்
பகர்ந்த வாறிது மாணிக்கம் பகர்ந்தவா பகர்வாம். (1)

அன்ன நாள்வயின் விரபாண் டியற்கணங் கனைய
மின்ன னாருளைம் போகமும் விளைநில மனைய
பொன்ன னார்பெறு காளைய ரைங்கணைப் புத்தேள்
என்ன வீறினார் வான்பயிர்க் கெழுகளை யென்ன. (2)

### விரதநோன்புக்கு நாள்

பின்ன ரும்பெறற் குமரனைப் பெறுவது கருதி
மன்ன னுங்குலத் தேவியுங் கயற்கணி மணாளன்
றன்னை நோக்கியட் டமிசதுர்த் தசிமதி வாரம்
இன்ன நோன்புநோற் றொழுகுவா ரிறைவனின் னருளால். (3)

சிறிது நாள்கழிந் தகன்றபின் கங்கையிற் சிறந்த
மறுவி லாவட மீன்புரை கற்பினாள் வயிற்றிற்
குறிய வாலவித் தங்குரம் போன்றொரு குமரன்
நிறையு நீருல கருட்குடை நிழற்றவந் துதித்தான். (4)

அந்த னிச்சிறு குமரனுக் ககங்களி சிறப்ப
மெய்த்த நூன்முறை சாதக வினைமுதல் வினையும்
வைத்த னான்பொலி வெய்துநாண் மன்னவ னூழ்வந்
தொத்த நாள்வர வேட்டைபுக் குழுவைகோட் பட்டான். (5)

வேங்கை வாய்ப்படு மீனவன் விண்விருந் தாக
வாங்கு நூன்மருங் கிறக்கர மார்பெறிந் தாரந்
தாங்கு கொங்கைசாந் தழிந்திடத் தடங்கண்முத் திறைப்ப
ஏங்க மாதர்பொன் னகருளார் யாவரு மிரங்க. (6)

மற்ற வேலைகா மக்கிழத் தியர்பெறு மைந்தர்
அற்ற நோக்கியீ தமையமென் றானைமா வாதி
உற்ற பல்பிற பொருணிதி யொண்கல னோடுங்
கொற்ற [1]மோலியுங் கவர்ந்தனர் கொண்டுபோய்
மறைந்தார். (7)

மன்ன னாணையா றொழுகிய மந்திரக் கிழவர்
மின்னு வேலிளங் குமரனைக் கொண்டுவிண் ணடைந்த
தென்னர் கோமகற் கிறுதியிற் செய்வினை நிரப்பி
அன்ன காதலற் கணிமுடி சூட்டுவா னமைந்தார். (8)

நாடிப் பொன்னறை [2]திறந்தனர் நவமணி மகுடந்
தேடிக் கண்டிலர் நிதிசில கண்டிலர் திகைத்து
வாடிச் சிந்தைநோ யுழந்திவை [3]மாற்றலர் கூட்டுண்
டோடிப் போயின தாகுமென் றுணர்ந்திது நினைவார். (9)

வேறு மாமுடி செய்துமா லென்னினோ விலைமிக்
கேறு மாமணி யிலையர சிருக்கையின் றின்றேல்
தேறு நீருல கலையுமென் செய்வதிங் கென்னா
ஆறு சேர்சடை யாரருள் காண்டுமென் றமைச்சர். (10)

கரைசெ யாப்பெருங் கவலைசூழ் மனத்தராய்க் கறங்கும்
முரசு கண்படாக் கடிமனை முற்றிநீத் தருமை
அரசி ளந்தனிக் கொழுந்தினைக் கொண்டுபோ யம்பொன்
வரைசெய் கோபுர வாயின்முன் வருகுவார் வருமுன். (11)

எற்ற தும்புகோ வணவுடை யிடம்படப் பிறங்கத்
துற்ற பல்கதிர் மணிப்பொதி சுவன்மிசைத் தூங்க
மற்ற டம்புய வரைமிசை வரம்பிலா விலைகள்
பெற்ற வங்கதம் பரிதியிற் [4]பேர்ந்துபேர்ந் திமைப்ப. (12)

1. மௌலியுங். பா.வே. 2. புகுந்தனர். பா.வே. 3. மாற்றவர். பா.வே.
4. பெயர்ந்து போந்திமைப்ப. பா.வே.

மந்தி ரம்புரி நூலது வலம்படப் பிறழ
இந்தி ரத்திரு வில்லென வாரமார் பிலங்கச்
சுந்த ரக்குழை குண்டலந் தோள்புரண் டாடத்
தந்தி ரத்தரு [1]மறைகழி தாணிலந் தோய. (13)

**வணிகராய்த் தோன்றியது**

வேறு

பொன்னவிர்ந் திலங்குகோ புரமுன் போதுவார்
முன்னவர் துனிவுகூர் முன்ன நீக்கிய
தென்னவர் குலப்பெருந் தெய்வ மாகிய
மன்னவர் வணிகராய் வந்து தோன்றினார். (14)

வந்தவ ரெதிர்வரு வாரை மம்மர்கொள்
சிந்தைய ராய்வரு செய்தி யாதென
முந்தையில் [2]விளைவெலா முறையிற் கூறினார்க்
கெந்தையாம் வணிகரீ தியம்பு வாரரோ. (15)

என்பட ரெய்துகின் றீர்க ளென்வயின்
ஒன்பது மணிகளு முள்ள வாலவை
பொன்பதி [3]னாயிர கோடி [4]போனவென்
றன்புற மணியெலா மடைவிற் காட்டுவார். (16)

இருந்தனர் கீழ்த்திசை நோக்கி யிட்டதோர்
கருந்துகி னடுவுமிந் திராதி காவலர்
அருந்திசை யெட்டினு மடைவிற் செம்மணி
செருந்தண்முத் தாதியெண் மணியும் பெய்தரோ. (17)

இம்மணி வலனுடற் சின்ன மென்னவக்
கைம்மறி கரந்தவர் கூறக் கற்றுநூற்
செம்மதி யமைச்சரச் செம்மல் யாரவன்
மெய்ம்மணி யாயதென் விளம்பு கென்னவே. (18)

1. மறைகளி. பா.வே. 2. விளைவெலாம். பா.வே. 3. னாயிரங். பா.வே. 4.போனதென். பா.வே.

மேவரும் வலனெனு மவுணன் மேலைநாள்
மூவரின் விளங்கிய முக்கண் மூர்த்திசெஞ்
சேவடி யருச்சனைத் தவத்தின் செய்தியால்
யாவது வேண்டுமென் றிறைவன் கூறலும். (19)

தாழ்ந்துநின் றியம்பும்யான் சமரில் யாரினும்
போழ்ந்திற வாவரம் புரிதி யூழ்வினை
சூழ்ந்திறந் தாலென்மெய் துறந்த மாந்தரும்
வீழ்ந்திட நவமணி யாதல் வேண்டுமால். (20)

என்றுவேண் டலும்வர மீச னல்கினான்
அன்றுபோ யமர்குறித் தமரர் கோனொடு
சென்றுபோ ராற்றலுந் தேவர் கோனெதிர்
நின்றுபோ ராற்றல னீங்கிப் போயினான். (21)

தோற்றவா னாடவன் மீண்டு சூழுந்தமர்
ஆற்றினும் வெல்லரி தழிவி லாவரம்
ஏற்றவ னாதலா லிவனைச் சூழ்ச்சியாற்
கூற்றினூ ரேற்றுதல் குறிப்பென் றுன்னியே. (22)

விடங்கலுழ் படைக்கல னின்றி விண்ணவர்
அடங்கலுந் தழீஇக்கொள வடுத்துத் தானவ
மடங்கலை வருகென நோக்கி வானவக்
கடங்கலுழ் யானைபோற் கரைந்து கூறுவான். (23)

விசையநின் றோள்வலி வென்றி வீக்கமெத்
திசையினும் பரந்ததச் சீர்த்தி நோக்கியுள்
நசையறா மகிழ்ச்சியா னல்கு வேனுனக்
கிசையவேண் டியவரம் யாது கேளென. (24)

கடிபடு கற்பக நாடு காவலோன்
நொடியுரை செவித்துளை நுழையத் தானவன்
நெடியகை புடைத்துட னிமிர்ந்து கார்படும்
இடியென நகைத்திகழ்ந் தினைய கூறுவான். (25)

வேறு

நன்றிது மொழிந்தா யாரு
நகைக்கநீ யெனைவெந் கண்ட
வென்றியு மதனாற் பெற்ற
புகழுநின் வீறு பாடும்
இன்றுநின் போரிற் காணப்
பட்டவே யிசைபோ யெங்கும்
நின்றதே யிதுபோ னின்கை
வண்மையு நிற்ப தன்றோ. (26)

ஈறிலா னளித்த நல்ல
வரமெனக் கிருக்க நின்பால்
வேறுநான் பெறுவ துண்டோ
வேண்டுவ துனக்கியா தென்பாற்
கூறுநீ யதனை யின்னே
கொடுக்கலே னாகி னின்போற்
பாறுவீழ் களத்திற் றோற்ற
பழிப்புகழ் பெறுவ னென்றான். (27)

மாதண்ட வவுணன் மாற்ற
மகபதி கேட்டு வந்து
கோதண்ட மேருக் கோட்டிக்
கொடும்புரம் பொடித்தான் வெள்ளி
வேதண்ட மெய்தி யாங்கோர்
வேள்வியான் [1]புரிவ னானப்
போதண்டர்க் கூட்ட வாவாய்ப்
போதுவாய் வல்லை யென்றான். (28)

அன்றொரு தவத்தோ னென்பு
வச்சிர மொன்றே யாக
ஒன்றிய கொடையாற் பெற்ற
புகழுடம் பொன்றே யென்போல்

1. புரிவனியம் பா.வே.

வென்றியி னாலும் வீயா
மெய்யெலா மணிக ளாகப்
பொன்றிய கொடையி னாலும்
புகமுடம் பிரண்டுண் டாமே. (29)

மேவல னல்லை நீயே
நட்டவன் மேலை வானோர்
யாவரு மருந்து மாற்றா
லறம்புக ழெனக்கே யாக
ஆவுரு வாதி யென்றா
யன்னதே செய்வே னென்றான்
ஈவதே பெருமை யன்றி
யிரக்கின்ற திழிபே யென்றான். (30)

அதற்கிசைந் தவுணர் வேந்த
னமரர்வேந் தனைமுன் போக்கி
மதர்க்கடுங் குருதிச் செங்கண்
மைந்தனுக் கிறைமை யீந்து
முதற்பெருங் கலையாம் வேத
மொழிமர பமைந்த வானாய்ப்
புதர்க்கடு வேள்விச் சாலைப்
புறத்துவந் திறுத்து நின்றான். (31)

வாய்மையான் மாண்ட நின்போல்
வள்ளல்யா ரென்று தேவர்
கோமகன் வியந்து கூறத்
தருக்குமேற் கொண்டு மேரு
நேமியோ டிகலும் விந்த
வரையென நிமிர்ந்து வேள்விக்
காமெனை யூபத் தோடும்
யாமினென் றடுத்து நின்றான். (32)

யார்த்தனர் தருப்பைத் தாம்பா
லூர்ணையால் யாத்த சிங்கப்
போத்தென நின்றான் வாயைப்
புதைத்துயிர்ப் படங்க வீட்டி
மாய்த்தனர் மாய்ந்த வள்ளல்
வலனுமந் தார மாரி
தூர்த்திட விமான மேறித்
தொல்விதி யுலகஞ் சேர்ந்தான். (33)

மணித்தலை மலையின் பக்க
மாய்த்தவன் வயிர வேலாற்
பிணித்துயிர் செகுத்த வள்ளற்
பெருந்தகை [1]யாவாய் வேதம்
பணித்திடும் வபையை வாங்கிப்
படரெரி சுவைமுன் பார்க்கக்
குணித்தவா னாடர்க் கூட்டிக்
கோதிலா வேள்வி செய்தான். (34)

அத்தகை யாவின் சோரி
மாணிக்க மாம்பன் முத்தம்
பித்தைவை டூய மென்பு
வச்சிரம் பித்தம் பச்சை
நெய்த்தவெண் ணிணங்கோ மேதங்
தசைதுகிர் நெடுங்க ணீலம்
எய்த்தவை புருட ராக
மிவைநவ மணியின் தோற்றம். (35)

இவ்வடி வெடுத்துத் தோன்றி
யிருண்முகம் பிளப்பக் காந்தி
தைவரு மணியொன் பானுஞ்
சார்விட நிறங்கள் சாதி
தெய்வத மொளிமா [2]சென்ணிச்
சோதனை செய்து தேசு

........................................

1. யாவை. பா.வே. 2. சென்னிச். பா.வே.

மெய்வர வணிவோ ரெய்தும்
பயனிவை விதியாற் கேண்மின். (36)

வாளவிரு மாணிக்கங் கிரேதமுத
லுகநான்கும் [1]வழியே மக்கம்
காளபுரந் [2]தும்புரஞ்சிங் களமிந்நான்
கிடைப்படுமக் கமல ராகம்
ஆளுநிற மொன்பதர விந்தமா
துளம்பூவித் தழல்கல் லாரங்
கோளரிய கச்சோத நரந்தநறும்
பலந்தீபங் கோப மென்ன. (37)

வேறு

இந்நிறத்த பொதுவாய மாணிக்க மறையவர்முன்
னியனாற் சாதி
தன்னியல்பாற் சாதரங்கங் குருவிந்தஞ் சௌகந்தி
கங்கோ வாங்கம்
என்னுமிவற் றாற்சிறந்து நான்காகு மிவ்வடைவே
யிந்நான் கிற்குஞ்
சொன்னவொளி பத்திருநான் கிருமூன்று நான்கவையுஞ்
சொல்லக் கேண்மின். (38)

சாதரங்க நிறங்கமலங் கருநெய்த லிரவியொளி
தழல்கச்சோதம்
மாதுளம்போ ததன்வித்துக் கார்விளங்குக் கோபமென
வகுத்த பத்தும்
மேதகைய குருவிந்த நிறங்குன்றி முயற்குருதி
வெள்ள லோத்தம்
போதுபலா சலர்திலகஞ் செவ்வரத்தம் விதாரமெரி
பொன்போ லெட்டு. (39)

.......................................................................

1. வகையே பா.வே. 2. தும்புருச்சிங். பா.வே.

களிதருசௌ கந்திகத்தி னிறமிலவம் போதுகுயிற்
கண்ண சோகந்
தளிரவிர்பொன் செம்பஞ்சி யைவண்ண மெனவாறு
தகுதோ வாங்க
ஒளிகுரவு குசும்பைமலர் செங்கல்கொவ் வைக்கனியென்
றொருநான் கந்த
மிளிர்பதும ராகத்தைப் பொதுமையினாற் சோதிக்க
வேண்டு மெல்லை. (40)

திண்ணியதாய் மேல்கீழ்சூழ் பக்கமுற வொளிவிடுதல்
செய்தாற் செவ்வே
அண்ணியவுத் தமமுதல்மூன் றாமென்பர் சாதரங்க
மணிவோர் விச்சை
புண்ணியவான் கன்னியறு சுவையன்ன முதலான
புனித தானம்
பண்ணியதும் பரிமேத யாகமுதல் மகம்புரிந்த
பயனுஞ் சேர்வர். (41)

குருவிந்தந் தரிப்பவர்பார் முழுதுமொரு குடைநிழலிற்
குளிப்ப வாண்டு
திருவிந்தை யுடனிருப்பர் சௌகந்தி கந்தரிப்போர்
செல்வங் கீர்த்தி
மருவிந்தப் பயனடைவர் கோவாங்கந் தரிப்போர்தம்
மனையிற் பாலும்
பெருவிந்த மெனச்சாலி முதற்பண்ட முடன்செல்வப்
பெருக்கு முண்டாம். (42)

எள்ளியிடு குற்றமெலா மிகந்துகுண னேற்றொளிவிட்
டிருள்கால் [1]சீத்துத்
தள்ளியவிச் செம்பதும ராகமது புனைதக்கோர்
தம்பா லேனைத்
தெள்ளியமுத் துள்ளிட்ட பன்மணியும் [2]வந்தோங்குஞ்
செய்யா ளோடும்

1. சீப்ப. பா.வே. 2. வந்தொதுங்கும். பா.வே.

ஒள்ளியநற் செல்வமதற் கொப்பநெடும் பாற்கடலி
னோங்கு மாலோ. (43)

வேறு

பிறநிறச் சார்பு புள்ளி
புள்ளடி பிறங்கு கீற்று
[2]மறுவறு தராச மென்ன
வகுத்தவைங் குற்றந் தள்ளி
அறைதரு பண்பு சான்ற
வரதன மணியும் வேந்தன்
செறுநர்வா ளூற்ற மின்றிச்
செருமகட் கன்ப னாவான். (44)

குறுநிலக் கிழவ னேனு
மவன்பெருங் குடைக்கீழ்த் தங்கி
மறுகுநீர் ஞால மெல்லாம்
வாழுமற் றவனைப் பாம்பு
தெறுவிலங் கலகை பூதஞ்
சிறுதெய்வம் வறுமை நோய்தீக்
[1]கறுவுகொள் கூற்றச் சீற்றங்
கலங்கிட வாதி யாவாம். (45)

முன்னவ ரென்ப கற்றோர்
வச்சிர முந்நீர் முத்தம்
மன்னவ ரென்ப துப்பு
மாணிக்கம் வணிக ரென்ப
மின்னவிர் புருட ராகம்
வயிடூரியம் வெயிற்கோ மேதம்
பின்னவ ரென்ப நீல
மரகதம் பெற்ற சாதி. (46)

பார்த்திபர் மதிக்கு முத்தம்
பளிங்கன்றி பச்சை தானுஞ்

........................................................................................

*1. மறுவறு. பா.வே. 2. கறுவுகொல். பா.வே.*

சாத்திகந் துகிர்மா ணிக்கங்
கோமேதந் தாமே யன்றி
மாத்திகழ் புருட ராகம்
வயிடூரியம் வயிரந் தாமும்
ஏத்திரா சதமா நீலந்
தாமத மென்ப ராய்ந்தோர். (47)

இனையவை யளந்து கண்டு
மதிக்குநா ளெழுமான் பொற்றேர்
முனைவனாண் முதலா வேழின்
முறையினாற் பதும ராகம்
கனைகதிர் முத்தந் துப்புக்
காருடம் புருட ராகப்
புணையொளி வயிர நீல
மென்மனார் புலமை சான்றோர். (48)

வெய்யவன் கிழமை தானே
மேதக மணிக்கு மாகும்
மையறு திங்க டானே
வயிடூரிய மணிக்கு மாகும்
ஐயற விவையொன் பானு
மாய்பவ ரகம்பு றம்பு
துய்யரா யறவோ ராய்முன்
சொன்னநா ளடைவே யாய்வர். (49)

அல்லியம் பதுமஞ் சாதி
யரத்தவா யாம்பல் கோடல்
வல்லிசேர் மௌவற் போது
நூற்றிதழ் [1]மரைகா லேயம்
மெல்லிதழ்க் கழுநீர் பேழ்வாய்
வெள்ளைமந் தார மின்ன
சொல்லிய முறையால் வண்டு
சூழத்தன் முடிமேற் சூடி. (50)

1. மரைகள்வாய. பா.வே.

தலத்தினைச் சுத்தி செய்து
தவிசினை யிட்டுத் தூய
நலத்துகில் விரித்துத் தெய்வ
மாணிக்க நடுவே வைத்துக்
குலத்தமுத் தாதி யெட்டுங்
குணதிசை முதலெண் டிக்கும்
வலப்பட முறையே பானு
மண்டல மாக வைத்து. (51)

அன்புறு பதுமராக
மாதியா மரத னங்கள்
ஒன்பதுங் கதிரோ னாதி
யொன்பது கோளு மேற்றி
முன்புரை கமலப் போது
முதலொன்பான் மலருஞ் சாத்தி
இன்புற நினைந்து பூசை
யியன்முறை வழாது செய்தல். (52)

தக்கமுத் திரண்டு வேறு
தலசமே சலச மென்ன
இக்கதிர் முத்தந் தோன்று
மிடன்பதின் மூன்று சங்கம்
மைக்கரு முகில்வேய் பாம்பின்
மத்தகம் பன்றிக் கோடு
மிக்கவெண் சாலி யிப்பி
மீன்றலை வேழக் கன்னல். (53)

கரிமருப் பைவாய் மான்கை
கற்புடை மடவார் கண்டம்
இருசிறைக் கொக்கின் கண்ட
மெனக்கடை கிடந்த மூன்றும்
அரியன வாதிப் பத்து
நிறங்களு மணங்குந் தங்கட்
குரியன நிறுத்த வாறே
யேனவு முரைப்பக் கேண்மின். (54)

மாடவெண் புறவின் முட்டை
        வடிவெனத் திறந்த [1]பேழ்வாய்
கோடுகான் முத்தம் வெள்ளை
        [2]நிறத்தன கொண்மூ முத்தம்
நீடுசெம் பரிதி யன்ன
        நிறுத்தது கிளைமுத் தாலிப்
பீடுசா னிறத்த ராவின்
        பெருமுத்த நீலத் தாமால். (55)

ஏனமா வாரஞ் சோரி
        யீர்ஞ்சுவைச் சாலி முத்தம்
ஆனது பசுமைத் தாகும்
        பாதிரி யனைய தாகும்
மீனது தரளம் வேழ
        மிரண்டினும் விளையு முத்தந்
தானது பொன்னின் சோதி
        தெய்வதஞ் சாற்றக் கேண்மின். (56)

பான்முத்தம் வருணன் முத்தம்
        பகன்முத்தம் பகலோன் முத்தம்
மான்முத்த நீல முத்த
        மாசறு குருதி முத்தங்
கான்முத்தம் பசிய முத்தங்
        காலன்றன் முத்தந் தேவர்
கோன்முத்தம் பொன்போன் முத்தங்
        குணங்களும் பயனுஞ் சொல்வாம். (57)

உடுத்திர ளனைய காட்சி
        யுருட்சிமா சின்மை கையால்

.............................................................

சுவடியில் 53-வது பாடல் எழுதப்படாமல் இடம்விடப்பட்டுள்ளது. சுவடியின் 54-வது பாடலே 53-ஆகத் தொடர்கிறது. 1. பேழ்வாய்க். பா.வே. 2. நிறத்தது. பா.வே.

எடுத்திடிற் றிண்மை பார்வைக்
கின்புறல் [1]புடித மென்ன
அடுத்திடு குணமா றின்ன
வணியின்மூ தணங்கோ டின்மை
விடுத்திடுந் திருவந் தெய்தும்
விளைந்திடுஞ் செல்வம் வாழ்நாள். (58)

மாசறு தவத்தோ ரென்பும்
வலாசுர னென்பும் வீழ்ந்த
கோசல மாதி நாட்டிற்
பட்டது குணந்தான் மாண்ட
தேசதா யிலேச தாகித்
தெள்ளிதா யளக்கி னெல்லை
வீசிய விலைய தாகி
மேம்பாடு வயிரந் தன்னை. (59)

குறுநிலத் தரசுந் தாங்கிற்
குறைவுதிர் செல்வ மெய்தி
உறுபகை யெறிந்து தங்கோன்
முழுதுல கோச்சிக் காக்கும்
வறுமைநோய் விலங்கு சாரா
வரைந்தநா ளன்றிச் செல்லுங்
[1]கறுவுகொள் கூற்றம் பூதங்
கணங்களு மணங்கு செய்யா. (60)

**வயிரமே முதன்மைச் சாதியென்பது**

மாமணி மரபுக் கெல்லாம்
வயிரமே முதன்மைச் சாதி
யாமென வுரைப்பர் நூலோ
ரதிகம்யா தென்னி னே[illegible]
காமரு மணிகட் கெல்லாந்
தமரிடு கருவி யாமத்

.............................................

*1. படிக. 2. கறுவுகொல். பா.வே.*

தூமணி தனக்குந் தானே
துளையிடுங் கருவி யாகும். (61)

மரகதத் தோற்றங் கேண்மின்
வலாசுரன் பித்தந் தன்னை
இரைதமக் காகச் கௌவிப்
பறந்தபுள் ளீர்ந்தண் டில்லித்
தரைதனிற் சிதற வீழ்ந்து
தங்கிய தோற்ற மாகும்
உரைதரு தோற்ற மின்னும்
வேறுவே றுள்ள கேண்மின். (62)

விதித்தவே லனைய வாட்கண்
வினதைமா தருணச் செல்வன்
உதித்தவான் முட்டை யோட்டை
யுவணவேற் றரையில் யாப்பக்
கதிர்த்தவோ டரையிற் றப்பி
வீழ்ந்தொரு கடல்சூழ் வைப்பில்
உதித்தவா றாகு மின்னு
முண்டொரு வகையாற் றோற்றம். (63)

முள்ளரை முளரிக் கண்ணன்
மோகினி யணங்கா யோட
வள்ளரை மதியஞ் சூடி
மந்தர வரைமட் டாகத்
துள்ளரி யேறு போலத்
தொடர்ந்தொரு விளையாட் டாலே
எள்ளரி தாய செந்தீ
யிந்தியக் கலனஞ் செய்தான். (64)

அப்பொழு தமல வித்தி
லரிகர குமரன் கான
வைப்புறை தெய்வத் தோடும்
வந்தன னந்த விந்து

துப்புறு கருடன் கௌவிக்
கடலினுந் துருக்க நாட்டும்
பப்புற விடுத்த வாறே
பட்டது கலுழப் பச்சை. (65)

## கருடப்பச்சை மகத்துவம்
### வேறு

காடமே சுப்பிரமே காளமெனக் குணமூன்றாங்
கருடப் பச்சைக்
கீடறுகி னிதழ்நிறத்த காடமது சாதியினா
லிருவே றாகுஞ்
சாடரிய சகுணமெனச் சதோடமென வவையிரண்டிற்
சகுண மாறாம்
பீடுபெறு காடமொடு முல்லசிதம் பேசலம்பித்
தகமே முத்தம். (66)

புல்லரிய பிதுகமென விவையாறிற் காடமது
புல்லின் வண்ணம்
உல்லசித மெலிதாகும் பேசலமே குளச்செநெலொண்
டரளம் போலும்
அல்லடரும் பித்தகமே பசுங்கிளியின் சிறைநிறைத்த
தாகு முத்தங்
குல்லைநிறம் பிதுகமரை யிலையினிறஞ் சதோடத்தின்
குணனைந் தாகும். (67)

தோடலே சாஞ்சிதமே துட்டமே தோடமூர்ச்
சிதமே வெய்ய
தோடலே சத்திரொடு சூழ்மந்த தோடமெனத்
தொகுத்த வைந்தில்
தோடலே சாஞ்சிதஞ்சம் பிரவிலையா மலரியிலை
துட்ட நீலத்

தோடதாம் [1]புல்லினிறந் தோடமூர்ச் சிதமுளரி
தோட லேசம். (68)

முந்தியவிந் திரநீலம் விச்சுவரு பனைமகவான்
முடித்த நாளின்
நந்தியடு பழிதவிர்ப்பான் புரியுமகப் பரிமகத்தி
னறிய தூமம்
உந்தியரும் பரியிமையா நாட்டநுழைந்
தளிசேற்றி னொழுகும் பீளை
சிந்தியவாற் றிடைப்படுமொன் றிந்திரவின்
னீலமெனத் திகழும் நீலம். (69)

மந்ததோ டங்கலப மயிலிறகி னிறமாமிவ்
வகுத்த தோடஞ்
சிந்தவா னாதகுண மணியணிவோர் நாற்கருவிச்
சேனை வாழ்நாள்
உந்தவாழ் வார்வலன்க ணீலமிரண் டரன்கண்டத்
தொளிவிட் டோங்கும்
இந்திரநீ லந்தான்[2]மா நீலமென வேறிரண்டுண்
டின்னு நீலம். (70)

சஞ்சையாம் பகற்கடவுண் மனைவியவன் கனலுடலந்
தழுவ லாற்றா
தஞ்சுவா டன்னிழலைத் தன்னுருவா நிறுவிவன
மடைந்து நோற்க
விஞ்சையா லறிந்திரவி பின்றொடர மாப்பரியா
மின்னைத் தானுஞ்
செஞ்செவே வயப்பரியாய் மையல்பொறா திந்தியத்தைச்
சிந்தி னானே. (71)

அவைசிதறும் புலந்தோன்று நீலமா நீலமிவை
யணிவோர் வானோர்

1. புல்லிநிறம். பா.வே. (புல்லி–புறவிதழ்; நீலப்புல்லி) 2. மாநீலமெனு மிரண்டினிரண் டிந்த நீலம். பா.வே.

நவையறுசீர் மானவரிந் நகைநீலஞ் சாதியினா
னால்வே றந்தக்
கவலரிய வெள்ளைசிவப் பெரிபொன்மை கலந்திருக்கிற்
கரிதாய் முற்றுந்
தவலரிதா யிருக்கிலிரு பிறப்பாளர் முதன்முதனாற்
சாதிக் காகும். (72)

இலங்கொளிய விந்நீல மெய்ப்படுப்போர் மங்கலஞ்சேர்ந்
திருப்பா ரேனை
அலங்குகதிர் நீலத்திற் பெருவிலையா யிரப்பத்தி
னளவைத் தாகித்
துலங்குவதான் பாற்கடத்தி னூறுகுணச் சிறப்படைந்து
தோற்றுஞ் சோதி
கலங்குகட லுடைவைப்பி லரிதிந்த விந்திரன்போர்க்
கரிய நீலம். (73)

மைந்துறுசெம் மணிமுத்து வாள்வயிரம் பச்சையொளி
வழங்கு நீலம்
ஐந்திவைமேற் கோமேத முதற்பவள மீறாக
வறைந்த நான்கும்
நந்தொளிய வேனுமவை சிறுவேட்கை பயப்பவழ
னகுசெங் குஞ்சி
வெந்தறுகண் வலனிணங்கள் சிதறுமிடைப் படுவனகோ
மேத மென்ப. (74)

உருக்குநறு நெய்த்துளிதேன் றுளிநல்லான் புண்ணியநீ
ரொத்துச் சேந்து
செருக்குபசும் பொன்னிறமும் பெற்றுமெலி தாய்த்தூய்தாய்த்
திண்ணி தாகி
இருக்குமது தரிக்கினிருட் பாவம்போம் பரிசுத்தி
யெய்தும் வென்றித்
தருக்குவலன் கபம்விழுந்த விடைப்புருட ராகமொளி
தழையத் தோன்றும். (75)

தாழ்ந்தபிலத் திழிந்தெரிபொற் கண்ணவுண னுயிர்குடிக்குந்
தறுகட் பன்றி
போழ்நதமுழை வாய்திறந்து திசைசெவிடு படநகைத்துப்
பொன்போற் கக்கி
வீழ்ந்தகபம் படுதீவிற் படுமுச்சி வட்டமாய்
மெலிதாய்ப் பொன்போற்
சூழ்ந்தொளிவிட் டவிர்தழல்போற் றெளிவெய்தி மனங்கவர்ந்து
தோற்றஞ் செய்யும். (76)

## பாரியாத்திரகிரியில் இருக்குமென்பது

இந்தமணி பாரியாத் திரகிரியிற் கொடுமுடியா
யிலங்குந் தெய்வ
மந்தரமால் வரைப்புறஞ்சூழ் மேகலையா மயனிந்த
மணியி னாலே
அந்தரநா டவனகரு மரசிருப்பு மண்டபமு
மமைத்தா னிந்தச்
சந்தமணி தரிப்பவரே தரியார்வெந் நிடவாகை
தரிக்க வல்லார். (77)

வலன்மயிராம் வயிடூய மிளாவிருத கண்டத்தில்
வந்து தோன்றிப்
பலர்புகழுங் கோரக்க மகதஞ்சிங் களமலயம்
பார சீகம்
இலகுதிரி கூடாதி தேயங்கள் பிறதீப
மெங்குந் தோற்றும்
அலைகடலும் படுமிறுத்க் காரிடிககும போதுநிற
மதற்கியா தென்னில். (78)

கழையிலைகார் மயிலெருத்தம் வெருகின்கண் ணிறத்ததாய்க்
கனத்த தாகி

விழைவுதரு தெளிதாகித் திண்ணிதாய் மெலிதாகி
விளங்கு மீதில்
அழகுபெற வலமிடமேல் கீழொளி[1]விட் டனமுறையே
யறவோ ராதித்
தழைவுறுநாற் சாதிகளாந் தினமிதனைப் பூசித்துத்
தரிக்க சான்றோர். (79)

வலத்தவுணன் றசைவீழ்ந்த [2]வழிப்படுதுப் பயன்சந்தி
வடிவ மாத்தென்
புலத்தவரை விதிக்குமிடத் தவனுடன்மா சிழிபுலத்தும்
புயல்போல் வண்ணன்
வலத்துமது கைடவரைக் குறைகுருதி வழிநிலத்தும்
மகவான் வெற்பின்
குலத்தையிற கரிசோரி சிதரிடத்தும் வந்துகுடி
கொண்டு தோன்றும். (80)

அவ்வழியிற் படுபவள முருக்கம்பூப் பசுங்கிளிமூக்
கலர்ந்த செவ்விச்
செவ்வரத்த மலர்கொவ்வைக் கனிபோலுங் குணங்குற்றந்
திருகிக் கோடல்
எவ்வமுறப் புழுவரித்தன் முகமொடிதல் பெரும்பாலு
மிப்பூ ணேந்தல்
பெய்வளையார் தமக்கேயாந் தரிக்கின்மகப் பேறுமுதற்
பேறுண் டாகும். (81)

இரவியெதி ரெரியிறைக்குங் கல்லுமதி யெதிர்செழுநீ
ரிறைக்குங் கல்லும்
உரையிடுமொன் பதிலொன்றி லுட்கிடையாய்க் கிடக்குமென
வொன்பான் வேறு
மரபுரைத்து வணிகரே றாகியவா னவரேறு
வடபா னோக்கிப்

1. விட்டான் பா.வே. 2.வழிபடுத்தும். பா.வே.

பரவியிருந் தருச்சித்து மணி கைக்கொண் டெதிர்மதுரைப்
பரனை நோக்கா. (82)

அஞ்சலிசெய் தகநோக்கா லிக்குமரற் களவிறந்த
வாயுள் செல்வம்
விஞ்சுகவென் றளித்தருள விறைமகனும் விண்ணிழிந்த
விமான நோக்கிச்
செஞ்சரணம் பணிந்திருகைத் தாமரையும் விரித்தேற்றான்
செல்வ நாய்கர்
மஞ்சனையும் புடைநின்ற வமைச்சரையு நோக்கிமுக
மலர்ந்து சொல்வார். (83)

இம்மணியா லிழைத்துநவ முடிசூட்டி யிச்சிங்க
விளவே றன்ன
செம்மறனை யபிடேக பாண்டியனென் றியம்புமெனச்
செம்பொன் றூக்கிக்
கைம்மறியில் வணிகருக்கு விலைகொடுப்பான் வருவார்முன்
கருணை நாட்டம்
அம்மகன்மே னிரப்பியிள நகையரும்பி நின்றாரை
யங்குக் காணார். (84)

ஓருருவாய் நேர்நின்ற வணிகேசர் விடையின்மே
லுமையா ளோடும்
ஈருருவாய் முக்கண்ணு நாற்கரமு மஞ்சமர
ரிறவா வாறு
காருருவா யெழுமிடறுங் காட்டித்தங் கோயில்புக்க
கண்டா ரின்று
பாருருவாய் நின்றவணி கேசரிவ ரெனவேபின்
பற்றிப் போவார். (85)

தேன்செய்த கொன்றைநெடுஞ் சடையார்முன் றாழ்ந்தெழுந்து
செங்கை கூப்பி
யான்செய்யுங் கைம்மாறா யெம்பிராற் கொன்றுண்டோ
யானு மென்ன
தூன்செயுட லும்பொருளு முயிருமெனி னவையாவு
முனவே யையா
வான்செய்யு நன்றிக்கு வைய கத்தோர் செய்யுங்கைம்
மாறுண் டாமோ! (86)

என்னாமுன் வழுத்தலுறும் விறன்மாறன் கோக்கொழுந்தை
யிகல்வேல் விந்தை
மன்னாகு மிவற்குமன வாக்கிறந்த பூரணமா
மதுரை நாதன்
[1]பொன்னாரு மணிமகுடஞ் சூடமணி நல்குதலாற்
புவிய நேகம்
பன்னாளு முறைபுரியத் தக்கதென வாழ்த்தினார்
பல்சான் றோரும். (87)

ஏத்திவலங் கொண்டிருநான் கிபந்தழுவப் பெற்றோங்கி
யிருக்கு மட்ட
மூர்த்திவிடை யருள்பெற்று மூவாநன் மறையாகி
முனிவர் கூறப்
பார்த்திவன்றன் பொலன்மாட மனைபுகுந்தா னிறைமணிப்பண்
பாயுங் கேள்விச்
சாத்திரரு மந்திரரு மணிநோக்கி [1]வியப்படைந்தார்
சங்கை கூர்ந்தார். (88)

வேறு

வேளென வந்த நாய்கர்
சுந்தர விடங்க ரானால்
நாள்களுங் கோளும் பற்றி
நவமணி யாக்கி னாரே

..............................................................

1. பொன்னாரும். பா.வே.

தாள்களுந் தோளு மார்புந்
தரித்தநீ ணாக மீன்ற
வாள்விடு மணியோ வீந்தார்
யாதென மதிக்கற் பாலேம். (89)

இந்திரக் கடவு ணாட்டு
மிம்மணி யரிய வென்னா
மந்திரக் கிழவர் நல்கி
மயனினு மாண்ட கேள்வித்
தந்திரக் கனகக் கொல்லர்க்
குவப்பன ததும்ப வீசிச்
செந்திரு மார்பி னாற்குத்
திருமணி மகுடஞ் செய்தார். (90)

மங்கல மரபான் மாலை
மணிமுடி சூட்டி நாமஞ்
செங்கணே றுயர்த்த நாய்கர்
செப்பிய முறையால் வேத
புங்கவ ரிசைப்ப வீதி
வலஞ்செய்து புனிதன் பாத
பங்கய மிறைஞ்சி வேந்தன்
பன்மணிக் கோயி லெய்தா. (91)

போர்மகட் குறையு ளான
புயத்தபி டேகத் தென்னன்
தேர்முதற் கருவித் தானைத்
தெவ்வர்நீண் முடியெ லாந்தன்
வார்கழற் கமலஞ் சூட
மனுமுறை பைங்கூழ் காக்கும்
காரெனக் கருணை பெய்து
வையகங் காக்கு நாளில். (92)

வேறு

தந்தைதன் காமக் கிழத்திய ரீன்ற
தனயராய்த் தனக்குமுன் னவராய்
முந்தைநா ளரசன் பொன்னறை முரித்து
முடிமுதற் பொருள்கவர்ந் துட்குஞ்
சிந்தைய ராகி மறுபுலத் தொளித்த
தெவ்வரைச் சிலர்கொடு விடுப்ப
வந்தவர் கவர்ந்த தனமெலா மீள
வாங்கினா னீர்ங்கதிர் மருமான். (93)

பதினேழாவது
மாணிக்கம் விற்ற படலம் முற்றும்
ஆகத் திருவிருத்தம் 1285

பதினெட்டாவது

## வருணன் விட்ட கடலை வற்றச் செய்த படலம்

காழ்கெழு கண்டத் தண்ணல்
கௌரியன் மகுடஞ் சூட
வீழ்கதிர் மணிக ளீந்த
வியப்பிது விடையோன் சென்னி
வாழ்கரு முகிலைப் போக்கி
மதுரைமேல் வருணன் விட்ட
ஆழ்கடல் வறப்பக் கண்ட
வாடலைப் பாடல் செய்வாம். (1)

சித்திரை மதியிற் சேர்ந்த
சித்திரை நாளிற் றென்னன்

மைத்திரண் மிடற்று வெள்ளி
　　மன்றுளாற் களவு மாண்ட
புத்திமை விதியிற் பண்டம்
　　பற்பல சிறப்ப நல்கிப்
புத்தியும் வீடு நல்கும்
　　பூசனை நடத்த லுற்றான். (2)

நறியநெய் யாதி யார
　　நறுங்குழம் பீறா வாட்டி
வெறியகர்ப் புரநீ ராட்டி
　　யற்புத வெள்ளம் பொங்க
இறைவனை வியந்து நோக்கி
　　யேத்துவா னெறிநீர் வைகைத்
துறைவநீ யென்கர்ப் பூர
　　சுந்தர னேயோ வென்றான். (3)

பூசனை புரியு மெல்லைப்
　　பொன்னகர்க் கிறைமை பூண்ட
வாசவன் வருடந் தோறும்
　　பூசித்து வருவா னன்ன
காசறு மனத்தான் பூசை
　　கழிவுறு மளவுந் [1]தாழ்த்துத்
தேசமை [2]சிறப்பார் பூசை
　　செய்துதன் னாடு புக்கான். (4)

அன்றுநீர்க் கடவுள் வேள்வி
　　நாயக னவையத் தெய்தி
நின்றவன் றன்னோய் தீருஞ்
　　செவ்வியி னிகழ்சசி தோன்றக்
குன்றவன் சிறக ரீர்ந்த
　　கொற்றவன் முகத்தை நோக்கி
இன்றுநீ சிறிது தேம்பி
　　யிருத்தியா லிதென்கொ லென்றான். (5)

1. தாழ்ந்து. பா.வே. 2. சிறப்பார்ந் பூசை. பா.வே.

சிலைப்படு முகிலூ ரண்ணல்
செப்புவா னிருடீ ரன்பின்
வலைப்படு பெருமா னெம்மான்
மதுரையெம் பிரானை யன்பு
தலைப்படு பூசை செய்யத்
தாழ்த்ததின் றதனா லிப்போ
தலைப்படச் சிறிதெ னுள்ள
மாகுல மடைந்த துண்டால். (6)

என்னவவ் விலிங்கந் தான்மா
விலிங்கமோ வென்று முந்நீர்
மன்னவன் வினவ லோடு
மகபதி மொழிவான் முன்பென்
றன்னரும் பழியும் வேழச்
சாபமுந் தொலைத்த தன்றோ
அன்னதை யறிந்தி லாய்கொ
லென்னநீ ரண்ணல் கூறும். (7)

அற்றது வாகிற் றெய்வ
மருத்துவ ராலுந் தீரச்
செற்றிட வரிதா யென்னைத்
தெறும்பெரு வயிற்று நோயை
வற்றிடு மாறு தீர்க்குங்
கொல்லென வலாரி யையம்
உற்றுநீ வினாய தென்னென்
றுண்ணகை யரும்பிச் சொல்வான். (8)

அரியய ராலுந் தீராப்
பிறவிநோ யறுக்க வல்ல
பெரியவ னிந்த யாக்கைப்
பெரும்பிணி பிறவுந் தீர்த்தற்
கரியனோ வையன் செய்யுந்
திருவிளை யாட்டை யின்னே

தெரியநீ சோதி யென்னத்
தெண்கடற் சேர்ப்பன் சொல்வான். (9)

கல்பிற கரிந்தோ யிங்கு
நான்வருங் காலை வேட்டார்க்
கெல்லையில் காம நல்குஞ்
சுரபியு மின்பால் சோரப்
புல்லிய கன்று மாற்றுப்
பட்டவப் போது கண்ட
நல்லசோ பனத்தா லிந்த
நன்மொழி கேட்டே னென்னா. (10)

வருணனு மேகி வெள்ளி
மன்றுடை யடிகள் செய்யுந்
திருவிளை யாடல் கண்டு
வயிற்றுநோய் தீர்ப்பா னெண்ணி
முரசதிர் மதுரை மூதூர்
முற்றுநீ யழித்தி யென்னாக்
குரைகட றன்னை வல்லே
கூவினா னேவி னானே. (11)

வேறு

கொதித்தெழுந்து தருக்களிறக் கொத்தியெடுத் தெத்திசையும்
அதிர்த்தெறிந்து வரைகளெல்லா மகழ்ந்துதிசைப் புறஞ்செல்லப்
பிதிர்த்தெறிந்து மாடநிரை பெயர்த்தெறிந்து பிரளயத்தில்
உதித்தெழுந்து வருவதென வோங்குதிரைக் கடல்வருமால். (12)

கந்தமலர்த் தனிக்கடவுள் கற்பத்து மழியாத
இந்தவளம் பதிக்கிடையூ றெய்தியதெம் பதிக்குமினி
வந்ததெனச் சுந்தரனை வந்திறைஞ்சி வானவருஞ்
சிந்தைகலங் கினர்வருணன் செய்தசெய றெளியாதார். (13)

சூலமோ டழலேந்துஞ் சொக்கர்திரு விளையாட்டின்
சீலமோ நாமிழைத்த தீவினையின் றிறமிதுவோ
ஆலமோ வுலகயெலா மழியவரும் பேரூழிக்
காலமோ வெனக்கலங்கிக் கடிநகரம் பனிப்பெய்த. (14)

மண்புதைக்கத் திசைபுதைக்க மயங்கிருள்போல் வருநீத்தம்
விண்புதைக்க வெழுமாட வியனகரின் புறத்திரவி
கண்புதைக்க வருமளவிற் கண்டரச னடுநடுங்கிப்
பெண்புதைக்கு மொருபாகப் பிரானடியே சரணென்னா. (15)

ஆலமெழுந் திமையவர்மே [1]லடர்க்கவரும் பொழுதஞ்சும்
மாலெனவுந் தன்னுயிர்மேன் மறலிவரும் பொழுதஞ்சும்
பாலனென வுங்கலங்கிப் பசுபதீசே வடியில்விழுந்
தோலமென முறையிட்டா னுலகுபுக முறையிட்டான். (16)

முறையிட்ட செழியனெதிர் முறுவலித்தஞ் சலையென்னாக்
கறைபிட்டு விண்புரந்த கந்தரசுந் தரக்கடவுள்
துறையிட்டு வருகடலைச் சுவறப்போய்ப் பருகுமெனப்
பிறையிட்ட திருச்சடையிற் பெயனான்கும் வரவிடுத்தான். (17)

வேறு

நிவப்புற வெழுந்த நான்கு
மேகமு நிமிர்ந்து வாய்விட்
டுவர்ப்புறு கடலை வாரி
யுறிஞ்சின வுறிஞ்ச லோடுஞ்
சிவப்பெருங் கடவுள் யார்க்குந்
தேவெனத் தெளிந்தோ ரேமு
பவப்பெரும் பௌவம் போலப்
பசையற வறந்த தன்றே. (18)

1. டைரவரும். பா.பே.

அந்நிலை நகரு ளாரும்
வானவ ராதி யோருந்
தென்னவர் பிரானு மெந்தை
திருவிளை யாட னோக்கிப்
பன்னாரு மகிழ்ச்சி பொங்கப்
பன்முறை புகழ்ந்து பாடி
இன்னறீர் மனத்த ராகி
யீறிலா வின்பத் தாழ்ந்தார். (19)

பதினெட்டாவது
வருணன் விட்ட கடலை வற்றச் செய்த படலம்
முற்றும்.

ஆகத் திருவிருத்தம் 1304.

**மதுரைக் காண்டம் முற்றிற்று.**





# திருவிளையாடற் புராணம்

## மதுரைக் காண்டம்

### பாட்டு முதற் குறிப்பு

அ


| | | | |
|---|---|---|---|
| அகத்தியன் | 57 | அடிகணீர் | 99 |
| அகமலர்ந் | 99 | அடித்தலு | 287 |
| அகவடியங்கை | 242 | அடியரேமுய்யு | 297 |
| அகளமாயு | 68 | அடியரேம் | 211 |
| அகனில வேறு | 16 | அடியனேன் | 269 |
| அகிலு மாரமு | 22 | அடியிற நெடு | 220 |
| அங்கட்கடலி | 119 | அடுகரி | 167 |
| அங்கணா போற்றி | 114 | அடுக்க நின்ற | 215 |
| அங்கதி னதிகப் | 266 | அடுத்தணைந்த | 126 |
| அங்கது கேட் | 254 | அடுத்தனரிடி | 101 |
| அங்கமாறு | 171 | அடுத்தனர் | 277 |
| அங்கமுண் | 253 | அடுத்தனள் | 197 |
| அங்கயற்கண்ணி | 59 | அடுத்தானதி | 222 |
| அங்கய னோக்கி | 159 | அடைந்திளம் | 157 |
| அங்கவர் மனை | 168 | அட்டில் வாயடுக் | 255 |
| அங்கவனிருக்கை | 94 | அட்டில்வாய்ப் | 48 |
| அங்கவன் வரவு | 233 | அணைந்து கோயி | 24 |
| அங்கவன்றிரு | 294 | அண்டக் குவை | 152 |
| அங்கனகஞ் | 168 | அண்டங்களெ | 3 |
| அங்குநின் | 285 | அண்டரஞ்ச | 280 |
| அங்கையள | 84 | அண்டரே | 97 |
| அங்கைவைத் | 200 | அண்டர்வந் | 126 |
| அஞ்சலிசெய் | 322 | அண்டவாணரு | 22 |
| அஞ்சலி முகிழ்த் | 263 | அண்ணல்பாற் | 9 |
| அஞ்சனம் வேல் | 167 | அதற்கிசைந் | 308 |
| அஞ்சிலோதியை | 216 | அதிகவப்பதி | 56 |
| அஞ்ச கோடி | 174 | அதிர்ந்தன | 283 |
| அடற்கதிர் | 282 | அதிர்விடை | 203 |

| | |
|---|---|
| அத்தகுதல | 294 |
| அத்தகைய நீ | 120 |
| அத்தகையா | 309 |
| அத்தகையிலி | 69 |
| அத்தடமருகி | 74 |
| அத்தயிர்ப் | 218 |
| அத்தலத் | 59 |
| அத்தலைநின்ற | 199 |
| அத்தலைவிண் | 119 |
| அத்தனிச்சிறு | 303 |
| அத்திருமாநக | 66 |
| அத்தெய்வ | 229 |
| அந்தக் குண்ட | 96 |
| அந்தணர்மகிழ் | 235 |
| அந்தணிர் | 298 |
| அந்தமாநீரா | 71 |
| அந்தமு முத | 80 |
| அந்தரத்தவ | 179 |
| அந்தரர்கோ | 89 |
| அந்தவேலையில் | 55 |
| அந்நிலைநகருளாரும் | 320 |
| அந்நிலைமண | 254 |
| அந்நெடுநாடு | 285 |
| அப்பதியி லிங்க | 78 |
| அப்பாணற்கிரு | 91 |
| அப்பிடைநுரை | 95 |
| அப்பொழுதமல | 317 |
| அமைச்சரோடு | 128 |
| அம்முனி | 100 |
| அம்மையோ | 200 |
| அயனக | 64 |
| அரசிலா | 107 |
| அரசிறை | 144 |
| அரம்பைமாத | 53 |
| அரம்பைமென் | 12 |
| அரவகலல்கு | 7 |
| அராமுனி | 212 |
| அரியயராலுந | 328 |
| அருட்கடலே | 88 |
| அருத்தநான் | 192 |
| அருந்தவ ரிருக்கை | 131 |
| அருந்தின | 41 |
| அருமறைநால் | 300 |
| அருமையாலடி | 192 |
| அரும்பரிமகந் | 261 |
| அரும்பவி | 13 |
| அருவாகி | 112 |
| அருவிபடிந் | 110 |
| அருவியாந் | 12 |
| அரைக்குமே | 206 |
| அலகிலாத் | 76 |
| அலகிலாவுதயந் | 248 |
| அலகினாற் | 160 |
| அலங்கலோதி | 216 |
| அல்லியங்கமல | 253 |
| அல்லியம்பது | 313 |
| அல்லு மெல்லும் | 150 |
| அல்லை யீதல்லை | 10 |
| அவமிகும் | 21 |
| அவைசிதறு | 319 |
| அவ்வகைய | 61 |
| அவ்வண்ணஞ்சுந் | 84 |
| அவ்வரையரசை | 286 |
| அவ்வவர் | 237 |
| அவ்வழிப்புறம் | 70 |
| அவ்வழியிற்படு | 322 |
| அவ்வாக்குச் | 138 |
| அழலவிர்ந் | 94 |

| | | | |
|---|---|---|---|
| அழிவிலானுரை | 49 | அன்னதோர் | 208 |
| அளந்திடற் | 55 | அன்னத் தேரின | 182 |
| அளவறுகலை | 297 | அன்னநாள் | 303 |
| அளவிலாத | 214 | அன்னநீர் | 72 |
| அறக்கொடி | 231 | அன்னபோதய | 68 |
| அறத்துறை | 290 | அன்ன மண்ட | 55 |
| அறத்தொடு | 97 | அன்ன மலி | 61 |
| அறந்தழையுந் | 61 | அன்ன மிறை | 245 |
| அறந்துறந் | 105 | அன்ன மூன்று | 259 |
| அறப்பெருஞ் | 7 | அன்ன வரகன்ற | 274 |
| அறவுருவ | 83 | அன்னிய தலங் | 63 |
| அறவேற்று | 90 | அன்னை நீ | 155 |
| அறுகாற்பீடத் | 10 | | |
| அறைந்தன | 196 | ஆ | |
| அறைந்திடப் | 9 | ஆகையான் | 299 |
| அற்பக | 198 | ஆங்கவன் | 145 |
| அற்றதுவாகிற் | 328 | ஆங்குவெண் | 54 |
| அனந்தனா | 210 | ஆசற மறை | 135 |
| அனற்படை | 102 | ஆசனத்திருத்தி | 272 |
| அனித்தமாகிய | 212 | ஆடினகுறைத் | 277 |
| அனிந்திதை | 144 | ஆடினாரரம்பை | 199 |
| அனையதொல்குர | 94 | ஆடினானமல | 210 |
| அனையதொல்பதி | 65 | ஆண்டநாயகன் | 178 |
| அனையனாகியு | 218 | ஆண்டினோடய | 176 |
| அன்பட்ட | 190 | ஆதரவிலனா | 73 |
| அன்புதலை | 113 | ஆதலாற் கன்றின் | 227 |
| அன்பு பின்றள்ள | 128 | ஆதலினிப் | 62 |
| அன்புறு பதும | 314 | ஆதிசைவர் | 249 |
| அன்புறு பத்தி | 16 | ஆதிமாதவர் | 56 |
| அன்று தொட்ட | 133 | ஆதியிலான் | 299 |
| அன்றுநீர்க் | 327 | ஆதியிவ்விலிங்க | 270 |
| அன்று மெம்பிரா | 218 | ஆதியுத்தேசத் | 146 |
| அன்றொரு | 307 | ஆத்தன்றிரு | 227 |
| அன்னது சிறிது | 275 | ஆத்திகருண் | 47 |

| | |
|---|---|
| ஆயதோர் வைகல் | 275 |
| ஆயபோதாழி | 198 |
| ஆயவேலை | 129 |
| ஆயிரங்கட | 176 |
| ஆருநீர்க்கட | 50 |
| ஆருமந்நீ | 72 |
| ஆரொடு மட | 221 |
| ஆர்த்தனதடாரி | 156 |
| ஆர்த்தனர் கணத் | 212 |
| ஆர்த்தனர் ம | 277 |
| ஆர்த்தன வியங் | 256 |
| ஆலத்தை யமுத | 235 |
| ஆலநின்ற மா | 34 |
| ஆலமெழுந்தி | 330 |
| ஆலவாயலர்ந்த | 77 |
| ஆலவாயுடையா | 40 |
| ஆவியன்ன | 218 |
| ஆழிஞாலமே | 128 |
| ஆழ்ந்த சிந்தை | 127 |
| ஆறுசூழ் | 20 |
| ஆற்றவும் | 98 |
| ஆற்றினுக்கரசா | 67 |
| ஆனபான்மை | 55 |
| ஆனாவாறு | 258 |

**இ**

| | |
|---|---|
| இடருறப் | 115 |
| இடிக்கும் | 181 |
| இடித்தனன் | 97 |
| இடித்துவாய் | 11 |
| இடுக்கண்வந் | 279 |
| இடைமயிர் | 252 |
| இடையறாவன் | 123 |
| இட்டவன்சிறை | 279 |
| இணைரெரித் | 201 |
| இத்தகு சுய | 81 |
| இத்தகு பண்பு | 243 |
| இத்தகைப் பல | 172 |
| இத்தகைய திரு | 86 |
| இத்தலத்துக் | 86 |
| இத்தனிச்சுட | 81 |
| இத்தனை வரவு | 288 |
| இந்த நான் | 65 |
| இந்த நீரெம்மை | 71 |
| இந்த மணி | 321 |
| இந்த மாவிலிங்க | 78 |
| இந்திரக் | 324 |
| இந்திர சால | 233 |
| இந்திரண் டனைய | 278 |
| இந்திரன் மணிக். | 181 |
| இந்நிறத்த | 310 |
| இமையக்குன்ற | 214 |
| இம்மணியா | 323 |
| இம்மணிவ | 305 |
| இம்முறையா | 141 |
| இம்மைதனிலு | 258 |
| இம்மையிலற | 124 |
| இரண்டு செஞ் | 178 |
| இரவிகண் | 125 |
| இரவி தன் | 255 |
| இரவி மருமான் | 246 |
| இரவி யாழி | 30 |
| இரவி யெதி | 322 |
| இருணிரம்பிய | 130 |
| இருதுவிற் | 116 |
| இருந்தனர் | 305 |
| இரும்பி னன்ன | 29 |
| இலங்கொளிய | 319 |

| | |
|---|---|
| இவ்வகை | 102 |
| இவ்வடி வெடுத் | 309 |
| இவ்வண்ண நகர் | 140 |
| இவ்வருந்தலத் | 77 |
| இவ்வாறு | 161 |
| இவ்வுலக மன்றி | 135 |
| இழிந்த மாந்தர் | 14 |
| இழிந்த வூர்தி | 177 |
| இழிபவருயர்ந் | 39 |
| இழையிடை | 160 |
| இறைஞ்சி யஞ்ச | 153 |
| இறைவிதன்னை | 150 |
| இனையவாறு | 272 |
| இனையவை | 313 |
| இன்புற்றருச்சனை | 118 |
| இன்றடம்புன | 19 |
| இன்று கேட் | 288 |
| இன்னணங் | 238 |
| இன்னண நகர் | 168 |
| இன்னறின் பாத | 116 |
| இன்ன மாதீர்த்த | 70 |
| இன்னரம்புளர | 125 |
| இன்ன வரறனுட் | 57 |
| இன்ன வாறு | 148 |
| இன்னவ ரெழுந் | 262 |
| இன்ன விலங் | 111 |
| இன்னவை | 300 |
| இன்னன வதிக | 82 |
| இன்னியமியம்பு | 144 |
| இன்னிலை யொ | 148 |

ஈ

| | |
|---|---|
| ஈங்குவன் | 97 |
| ஈசனுக்கிழைத்த | 109 |
| ஈட்டுவார் | 127 |
| ஈது நோற்ப | 272 |
| ஈறிலாதவ | 14 |
| ஈறிலா னளித்த | 307 |
| ஈறின் மறை | 134 |

உ

| | |
|---|---|
| உடலள வெண்ணி | 270 |
| உடுத்த கோ | 179 |
| உடுத்த தெண் | 11 |
| உடுத்திரளனைய | 315 |
| உடையானடி | 163 |
| உண்மையறி | 4 |
| உத்தமகுலத்து | 133 |
| உத்தம சய | 298 |
| உத்தம வானோர் | 266 |
| உத்தரிய | 296 |
| உம்மெனும் | 106 |
| உம்மையில் வினை | 83 |
| உம்மையிற் பிறவி | 74 |
| உருக்கியீய | 33 |
| உருக்குநறு | 320 |
| உருக்குந் திறலுக் | 244 |
| உருவமுத் | 195 |
| உலகம் யாவையு | 25 |
| உலகிய னிறுத்து | 205 |
| உலம் பொரு | 292 |
| உழல் செய் | 50 |
| உழை விழி | 187 |
| உள்ளக் கமல | 245 |
| உள்ளமெனு | 5 |
| உறிபொதி | 48 |
| உற்றது கழிந் | 286 |
| உன்னத மாறு | 241 |

ஊ

ஊடினாரெறி 37
ஊமனாற்புல 91
ஊறுசெய் 15

எ

எங்கு நாவுமா 51
எங்கு மீசனை 49
எடுத்த வேல் 262
எடுத்தனன் 235
எண்டிசைய 76
எண்ணிரண் 194
எண்ணிலாத 257
எண்ணிறந்த 231
எண்புதைத் 157
எதிர்ந்தரு 191
எத்தலத்தியா 79
எத்திக்குங் 118
எந்தையித் 212
எப்புவனத்திலு 111
எம்மை நீர் 184
எம்மை யாரையு 150
எரிக்குறும் 43
எல்லவனுச்சி 147
எல்லை தேர் 32
எல்லையில் கலை 239
எல்லையின் மூர்த் 243
எழுகடலழைத்த 226
எழுக்கடந்த 50
எழுதரு மறை 7
எழுந்தது 229
எழுவரன்னையர் 175
எள்ளியிடு 311
எள்ளியேறு 33
எள்ளிழுதன்ன 63
எறிகின்றன 162
எறியும் வாளை 30
எற்ற தும்பு 304
எற்று தெண்டிரை 19
எனத் தொகையா 92
என்பட ரெய்து 305
என்பதா மாரம் 122
என்ற தாதை 151
என்ற நாதன் 164
என்ற போதிறை 214
என்ற போதெ 56
என்றவ னிடுக்கண் 104
என்றவ னெதிர் 265
என்றனன் கரண 100
என்றனன் பிறிது 121
என்றிவை யாதி 243
என்று தலச் 66
என்று தொட்டு 164
என்று நின் 211
என்று மாதவ 98
என்ற முனி 224
என்று வேண்ட 306
என்னநின் றேத்தி 116
என்னலும் 206
என்னவவ் 328
என்னவு மெளிய 234
என்னாமுன் 324
என்னென 52

ஏ

ஏகநாயகி 173
ஏகமாகிய 23
ஏட்டுவாய் 203

ஏதமில் 296
ஏத்திவலங் 324
ஏனமா 315
ஏனையதலங்க 73
ஏனைய தலத் 64

ஐ

ஐந்தமுதாவி 268
ஐம்பெரும் 292
ஐம்முகனனாதி 135
ஐயநின்னிருக்கை 116
ஐயமாதி முக் 56
ஐயவம்பிகை 149
ஐயவிவ் 69
ஐயவின்னுமிக் 216
ஐயவென்னுரை 37
ஐவினை நடாத் 291

ஒ

ஒக்கவிந்திரனும் 103
ஒண்கொண்டன் 229
ஒப்புரு முதலீ 148
ஒருகாலட் 85
ஒலியவார் 157
ஒல்கினன் 197
ஒல்லெனக் 93
ஒல்லொலிக் 28
ஒழிவில் வேறு 44
ஒளியாலுல 152
ஒளிறு தாதொடு 129
ஒற்றையாழி 44
ஒற்றைவார் 163
ஒன்றாகி 211
ஒன்றினைச் 233

ஓ

ஓடித்திருமா 161
ஓடின ரொற்றர் 276
ஓதரு மகார 300
ஓத வரும் 223
ஓருருவாய் 323

ஔ

ஔவிய 40

க

கங்கை காவிரி 181
கங்கை காளிந்தி 63
கங்கை முத 109
கங்கை யாற 209
கடம்படி முளைத் 267
கடலு முள்ளமுங் 248
கடிபடு கற்பக 306
கடியவிழ் கடுக் 6
கடியவிழ் கமலக் 184
கடுக்கவின் 24
கடைசியர் 16
கட்டவிழ் கண்ணி 254
கட்டவிழ் கோ 197
கட்புலனாதி 41
கண்கடை 250
கண்டபோ 121
கண்டவெல்லையி 164
கண்டனன் 274
கண்டான் முனி 119
கண்டிகை தொடு 296
கண்டு விமுந் 112
கண்ணகன் குடுமி 67

| | |
|---|---|
| கண்ணிலாத | 30 |
| கண்ணிறைந்த | 262 |
| கண்ணுதலை | 134 |
| கண்ணுதற்பிரா | 182 |
| கண்ணுதற்பெருங் | 25 |
| கதிர்த்தார் | 119 |
| கந்த மலர்த் | 329 |
| கயபதியாதி | 160 |
| கயலிசைய | 85 |
| கரிமருப்பை | 314 |
| கரியகமபலக் | 43 |
| கரியவன் | 232 |
| கரிய வெண்டிரை | 238 |
| கருங்குழற் | 253 |
| கருநிற மேக | 11 |
| கருப்பூர சுந்தரன் | 86 |
| கருமணிச்சிகர | 233 |
| கருமத்தான் | 301 |
| கரும்பொற் | 20 |
| கருவாசனை | 118 |
| கருவிவான் சொ | 23 |
| கருவிவான் முகில் | 169 |
| கருவின் மாதர் | 96 |
| கரை கடந்து | 294 |
| கரை செயாப் | 304 |
| கலவி வித் | 51 |
| கலிகடலிரவி | 81 |
| கலிங்கர் | 172 |
| கலைக்குரை | 147 |
| கலையொடு | 186 |
| கல்யாண | 139 |
| கல்லார் கவி | 221 |
| கல்லாலின் | 5 |
| கல்லிறகரிந்தோ | 328 |
| கல்லெனக் | 12 |
| கவனமால் விடையாளி | 217 |
| கவனமால் விடையான் | 188 |
| கவைக் கொழுந் | 10 |
| கழிந்த தெங் | 20 |
| கழையிலை | 321 |
| கழையுந் | 34 |
| களமர்கள் | 14 |
| களிதரு | 311 |
| களைந்து | 130 |
| கள்ளமாநெறி | 137 |
| கள்ளமுளரி | 297 |
| கள்ளவினைப் | 224 |
| கள்ளவிழ்கோ | 158 |
| கறங்குதிரை | 6 |
| கறித்தருந்து | 35 |
| கறைநிறுத்திய | 11 |
| கற்பகங் | 196 |
| கற்பகந்தரு | 171 |
| கற்பவைகற் | 52 |
| கற்றவை | 17 |
| கற்றறியந்தணா | 146 |
| கனவிலும் | 130 |
| கனவில் வந்த | 262 |
| கனவிற்றீர்ந்த | 128 |
| கன்றகலான் | 230 |
| கன்றொடுங் | 19 |
| கன்னிதன் | 165 |
| கன்னிப்பொன் | 290 |
| கன்னியர்க் | 213 |
| கன்னியொடு | 134 |


கா


| | |
|---|---|
| காசணி | 268 |
| காடமே | 318 |

| | |
|---|---|
| காணுமாநகர் | 225 |
| காதணி கலனுங் | 271 |
| காமரு சுரபி | 200 |
| காயிரும் பரிதி | 154 |
| காய்சின மடங் | 278 |
| காய்சினவெய் | 265 |
| காலினுங்கடிது | 157 |
| காலையிலாசான் | 271 |
| காழ்கெழு | 326 |
| காற்றினுங்கடிய | 240 |

கி

| | |
|---|---|
| கிடைத்துமற் | 283 |
| கிடைப்பன | 156 |
| கிட்டிப்பொருப் | 161 |
| கிட்டினர் | 101 |
| கிரியெட்டு | 113 |
| கிரியையான் | 302 |
| கின்னர | 167 |

கீ

| | |
|---|---|
| கீட்டிசைக்கரிய | 132 |
| கீட்டிசை மூகத் | 300 |
| கீறிக்கிடந்த | 119 |

கு

| | |
|---|---|
| குடபுலத்தரசும் | 236 |
| குடவயினயிரா | 124 |
| குடைந்தார் | 228 |
| குடைந்துதர்ப்ப | 70 |
| குடையொடுக்கு | 215 |
| குண்டுநீர்ப்படு | 22 |
| குமிழலர்ந்த | 31 |
| குருமதிக்கு | 217 |
| குருமுகத் | 239 |
| குரும்பை | 40 |
| குருவிந்தந் | 311 |
| குலவுமப் | 125 |
| குலனுங் | 246 |
| குழலுந்தும்புரு | 49 |
| குறுநிலக் | 312 |
| குறுநிலத்தரசு | 316 |
| குறுந்தளிர் | 137 |
| குனிவிலா திரை | 213 |
| குன்ற நேர் பனிக் | 35 |
| குன்றெறிந்தவேள் | 57 |

கை

| | |
|---|---|
| கைதலை | 295 |
| கைதவர்க்குர | 95 |
| கைதவ நோன்பு | 106 |
| கைதவன் | 105 |
| கைத்தலநான் | 66 |
| கையநாகமு | 54 |
| கையர்முப்புர | 216 |
| கையிற்படை | 162 |
| கையுங்கால் | 175 |
| கைவரை | 132 |

கொ

| | |
|---|---|
| கொங்கர் | 172 |
| கொங்கலர்கோ | 290 |
| கொங்கையின் | 194 |
| கொங்கையே | 26 |
| கொடிகளென | 197 |
| கொடிகள் பூத்து | 190 |
| கொடிக் கயலின | 195 |
| கொடி முகிறுழா | 46 |
| கொடிமுரசாடி | 190 |
| கொடும்பழி | 109 |
| கொடும்பிறை | 17 |
| கொட்புற்றமரா | 162 |
| கொதித்தலைக் | 261 |

கொதித் தெழு 329
கொய்யுஞ்செங் 209
கொல்லையானி 19
கொவ்வை 257

கோ

கோடுவில் 248
கோட்டுமா 54
கோதறு கற்பினா 226
கோதையொடும் 165
கோமகனிகமு 265
கோயின்முன் 191
கோலயாழ் 152
கோழிணர் 284

ச

சங்கலறச் 118
சங்கவார்குழை 216
சங்குகன்னனை 174
சஞ்சையாம் 319
சடைமறைத்து 4
சண்டபானுவுந் 32
சத்திய ஞானானந்த 268
சத்தியவுலகிற் 58
சத்தியாய் 1
சந்த வெற்ப 240
சந்தவேத 262
சந்தித்து 52
சந்நிதியடைந்து 152
சம்புபுத்தன் 55
சரண மங்கை 128
சர்ப்பமா 108
சலத்தலை 236
சலிக்கும் 161
சவித்த முனி 120

சா

சாதரங்க 310
சாறடுகட்டி 17

சி

சித்தந்தேர் 176
சித்திர நிரைத்த 131
சித்திரை மதி 326
சிந்தனை வாக்கிற் 120
சிரநாலோன் 87
சிலம்பு 215
சிலைப்படுமுகி 327
சிலையத்திரியார் 227
சிவந்தவாய் 28
சிவ பரம்பரை 154
சிறந்த தண்டமி 23
சிறிது நான் 303
சிறிது வாணகை 214
சிறுகிய வயிறு 241
சிறுகு கண்ண 35
சிறை விடுமின் 139
சிற்றிடை 136

சீ

[illegible] மணி 297
சீத வேரி 28
சீதளப் பளிக் 295
சீனர் சோனகர் 248

சு

சுகந்தவார் 303
சுண்ணமும் 237
சுந்தரவல்லி 196
சுந்தரனென் 91
சுந்தரன் றன்னை 273
சுந்தரன்றிரு 11
சுரந்திசூழ் 62
சுரந்தவன் 129

சுரந்து தேன் 50
சுருங்குமிடை 257
சுரும்புமுரல் 3
சுற்றுநான் 201
சுனையகன் 22

சூ

சூட்சிவினை 259
சூர்முதறடிந்த 240
சூலங்கண் 162
சூலமோடழ 329
சூளதாமரை 128

செ

செக்கரஞ்சடையுந் 209
செங்கண்மால் 179
செங்கை நீண்டு 252
செடியுட 145
செந்தமிழ் 145
செப்பிளங் 188
செப்புரங் 191
செம்பொற்கோயி 171
செம்பொன் 238
செம்மலரா 197
செம்மலர்த் 194
செயிரிற் 43
செய்யதாமரைக் 175
செய்யதாண் 89
செய்யவாய் 137
செருவினி 106
செருவின் 157
செல்வமாநக 125
செவித்துளையி 111
செழியர்பிரான் 8
சென்றுதன் 68
சென்னி பொருட் 90

சே

சேடுதாங்கு 150
சேட்டானை 120
சேட்படு 98
சேனுற்றவனை 228

சொ

சொல்லியநெறி 273
சொல்வாய்மைக் 141
சொற்றவிச் 79

சோ

சோம சேகரன் 250
சோம வார 126

த

தக்கமுத்தி 314
தங்குடிமை 112
தண்டகநாடு 284
தண்டருங் 55
தண்டேமொழி 228
தண்ணளி 185
தண்ணிலா 232
தண்பனிநீரிற் 39
தந்திடப் 219
தந்தை தன் 325
தந்தை தாளொடு 8
தமிழ்முதற் 183
தம்முயிர்க் 46
தரங்கவேலை 44
தருமமாதவத் 237
தருமமுன் 76
தரைபுகழ் 154
தலங்கடம்மின் 56
தலத்தினைச் 314
தலமுதன் 58

தவவலியா 224
தவளத் 1
தறிந்தனதாள் 277
தன்வண்ண 225
தன்றன்னை 225
தன்னமர்காதலி 226
தன்னரு 207
தன்னிகருயர்ச்சி 52
தன்னுயிர் 227

தா

தாங்கிக்கண் 118
தாதவிழ் மல்லி 226
தாழ்ந்த பிலத் 320
தாழ்ந்து தான் 98
தாழ்ந்துநின் 306
தாளொடு 101
தானவர் 278
தானவாரிழி 125

தி

திகழ்தரு 221
திக்கும் வானமு 27
திக்கெலாம் 44
திங்கட் படை 162
திங்களணி 2
திங்களி 260
திங்களென் 186
திங்களைச் 38
திசைகடந்த 179
திடம்படு 144
திண்ணிய 311
திண்மத வேழ 250
திருத்தயாத் 224
திருநகர் 9
திருந்தாத 140
திருந்துநான் 149
திருமகட்கொரு 27
திருமுடியை 142
திருவடிபிழைத் 288
திருவமுது 85
திருவளராரூர் 207
திருவாலவாயெ 62
திருவாலவாய்க் 60
திருவிற்கான் 39
திரைக்கடல் 282
திரையளிப்ப 42
திரைவளைக் 251
திரைவளையணி 219
திறப்படு 78

தீ

தீங்கரிய 119
தீங்குதலை 136
தீட்டுவா 140
தீந்தண்பாற் 249
தீந்தண்புனல் 244
தீயவாஞ் 80
தீர்த்தனிதழி 223
தீர்த்தன்சடை 222
தீர்த்தன்முன் 177
தீவினை 47

து

துங்கக்கலை 228
துங்கமாயிரங் 180
துணிகயாங் 132
துண்டமதித் 225
துண்டம்படவே 163
துந்துபியைந்து 263

துருவின 94

துவக்கு சங்கிலி 33

துளைய கல்லை 44

துள்ளுசேல் 21

துறக்க நாடணை 117

துறவினரீச 17

துன்னிய 190

தூ

தூண்டுவாருளமு 45

தூமரபின் 140

தூம்புடைக் 122

தெ

தெய்வத் தாமரை 114

தெய்வநாயக 11

தெய்வ நீறு 49

தெய்வ வித் 72

தெரிசிக்க 162

தெரிசித்தோர் 218

தெருட்பெறு 302

தெளிதரு 294

தெள்ளமு 136

தெற்றெனப் 95

தென்கடல் 284

தென்றனாடன் 247

தென்னரன்பினி 130

தென்னரேறு 281

தென்னர்சேகர 172

தென்னர்மர 231

தென்னவன்வடி 204

தென்னவன் வரு 185

தே

தேக்கு நீர் 218

தேசவிர்நீல 45

தேமாரி 229

தேம்பரி 155

தேரொலிகலின 158

தேரொலி கவின 38

தேர்நிரை 158

தேவர்கடேவன் 183

தேவர் கோனே 279

தேவிதிரு 225

தேன்செய்த 323

தை

தையலார்மதி 37

தொ

தொக்கமள்ள 248

தொக்கன 102

தொடுத்தபழி 110

தொடையகன் 98

தொண்டர்நாத 25

தொல்லைநான் 147

தோ

தோடலே 318

தோடவிழோதி 197

தோரணநிரை 38

தோற்றவா 306

ந

நங்கைதன் 185

நங்கையென் 184

நஞ்சுபில்கு 33

நடுத்தயா 99

நட்டமாடிய 216

நட்டவர்க் 187

நரிகள் பரி 92

நலமலிவிரத 266

நல்லவகை 84

நறியநெய் 327

நறியபூங் 242
நறுந்திரு 85
நறைபடு 18
நன்பொருள் 134
நன்மலரொ 84
நன்றிது 307

நா

நாகமாப் 103
நாடிப்பொன் 304
நாட்டமொரு 60
நாயகன்கவிக் 10
நாய்நமதென 99
நாலாகுமதியிற் 238
நாள்களுங் 43
நாற்றடந் 217
நானமென்பனி 126

நி

நிச்சலு 18
நித்தநியமிக் 246
நிருதியாடி 181
நிருத்தனுரை 224
நவப்புற 330
நிறைபராற் 298
நின்றமென் 164

நீ

நீடியபிலமுறு 220
நீண்டதிரி 296
நீலவேதிமேற் 42
நீளிடை 166

நூ

நூலொடுந் 248

நெ

நெளியரா 110
நெற்கரும்பென 28
நென்னலெல்லை 246

நொ

நொய்தழ 136

ப

பங்கயச் செவ்வி 241
பங்கயற்கணரி 8
படவரவ 111
படைக்கணேவல 215
படையற்று 163
பட்டகாரிவா 174
பட்பகை 15
பணிகளின் 105
பணிந்தொதுங்கி 214
பண்கனிந் 51
பண்டுபோற் 292
பண்ணியதவத் 293
பண்ணியவகை 268
பண்ணுகதேர் 276
பண்ணுமின் 198
பதநிரை 239
பந்தநான்மறை 182
பரந்தெழு 158
பராபரமுதலே 210
பரியமாமணி 36
பரையாதி 137
பலநிற 15
பல்பழக்குவை 215
பல்லுருச்செய்த 169
பல்வகைத்தல 65
பல்வகைத்தவ 65
பவநெறி 133
பவளக்காற் 284
பழிபடு 15
பழுதகன்ற 5

| | |
|---|---|
| பழையன | 167 |
| பளிக்கினேழுயர் | 169 |
| பள்ளநீர் | 29 |
| பற்றியபைம் | 186 |
| பனிதருமதிக் | 155 |
| பன்மலர்மாலை | 12 |
| பன்னகேசனு | 213 |
| பன்னருங் | 260 |
| பன்னிறத்த | 43 |
| பா | |
| பாட்டின் பொரு | 222 |
| பாதநாண் | 192 |
| பாதாளமே | 87 |
| பாயதொன் | 43 |
| பாயவாரியுண் | 10 |
| பாரார | 114 |
| பாரித்துள்ள | 216 |
| பார்த்திபர் | 312 |
| பாலமேற்ற | 175 |
| பாலனைய | 142 |
| பான்முத்தம் | 315 |
| பி | |
| பிணையொடு | 219 |
| பித்திகை | 166 |
| பித்திமாதவி | 170 |
| பிரணவமுதித்த | 292 |
| பிரயாகை | 75 |
| பிளிறொலி | 220 |
| பிள்ளையும் | 31 |
| பிறங்குமால | 30 |
| பிறநிறச்சார் | 312 |
| பிறந்தநா | 73 |
| பிறைதவழ் | 207 |
| பின்புதன் | 201 |
| பின்னருக்கிரப் | 260 |
| பின்னரும் | 303 |
| பின்னர்த்தங் | 108 |
| பின்னெவனு | 18 |
| பு | |
| புகர்மத | 239 |
| புக்குரல் | 121 |
| புங்கவர்மந்தார | 142 |
| புடைத்தபின் | 287 |
| புடைவரைக் | 287 |
| புண்ணிடை | 263 |
| புண்ணியமலர் | 206 |
| புண்ணியமுனிவ | 234 |
| புண்ணியம்புரி | 51 |
| புதியதாமரை | 57 |
| புத்தனாரெறிந்த | 199 |
| புத்தியட்ட | 174 |
| புரகரணிச்சா | 269 |
| புரங்கடந்த | 31 |
| புரந்தரன்தரு | 171 |
| புரந்தராதி | 53 |
| புரவலன் | 226 |
| புரவிவெள்ளமு | 247 |
| புரையற | 16 |
| புலரியிற் | 82 |
| புலர்ந்தபின் | 271 |
| புலிமுனியு | 88 |
| புல்லரிய | 318 |
| புல்லியோர் | 42 |
| புவலோகங் | 230 |
| புவனியிம் | 291 |
| புழைக்கை | 83 |
| புள்ளிய | 119 |
| பூ | |
| பூசனைபுரியு | 327 |
| பூசுகின்ற | 214 |

பூசையும் 115
பூந்துகிற்படாங் 178
பூந்துகினெ 185
பூவடைந்த 129
பூவண்ணம் 3
பூவருமயன் 205
பூவினாயகன் 3
பூவொடு 166

பெ

பெண்ணினுக் 183
பெண்முத்த 46
பெருகநீண்ட 250
பெரும்பக 151
பெருவிலையாரப் 256
பெறற்கருந் 59

பை

பைத்தழகெறிக் 189
பையரவுரியி 191
பையராவணிந் 93
பையுளபகு 147

பொ

பொதியவிழ் 256
பொதியிலே 24
பொருகின்றது 162
பொருங்கடல் 261
பொருங்கடனி 209
பொருப்பினுட் 79
பொருமாறிற் 4
பொருவரிய 75
பொருவிலிவ் 270
பொறிகளைந் 50
பொற்புற 274
பொன்மணி 195
பொன்மயமான 132
பொன்மலைக் 291
பொன்றத் 275
பொன்னசலந் 89
பொன்னவிர்கமல 206
பொன்னவிர்ச 188
பொன்னவிர்ந் 305
பொன்னுயிர்த் 107
பொன்னெடு 77

போ

போக்குமாயவன் 180
போரினுக் 278
போர்மகட் 325

ம

மகரவேலை 32
மகவின்றி 138
மகவுறுநோயை 282
மங்கலதூ 142
மங்கலநீரா 255
மங்கல மகளி 192
மங்கல மரபான் 325
மங்கலமென் 166
மங்கலம்புனைந் 26
மங்கலம் புனைபா 202
மங்கை நாயகி 165
மஞ்சோதிய 228
மடங்கலின் 49
மடங்கன்மா 285
மடங்கிதழ் 269
மடந்தையு 226
மடைவளத் 214
மட்டவிழுங் 118
மட்டிடுதாரான் 103
மணங்கொள் 170
மணவறைத் 203
மணித்தலை 309
மண்ணகழ் 220

| | |
|---|---|
| மண்ணரசிறை | 143 |
| மண்புதைக்கத் | 330 |
| மண்பேறடை | 227 |
| மதிகதிரோ | 75 |
| மதித்துணி | 97 |
| மதுமுகத் | 208 |
| மந்தரங் காசி | 266 |
| மந்ததோடங் | 319 |
| மந்திரம்புரி | 305 |
| மந்திரம்புவனங் | 176 |
| மரகதத்தினா | 43 |
| மரகதத்தோ | 317 |
| மரகதமாலை | 195 |
| மருங்குறேய்ந் | 155 |
| மருட்கெட | 70 |
| மருட்சிசெய் | 81 |
| மருட்படு | 293 |
| மருமச்செம்புன | 36 |
| மலையமாதவ | 58 |
| மலருந்திங்க | 37 |
| மலர்மகனாகி | 299 |
| மல்குகவேதவேள்வி | 2 |
| மல்குமாறில் | 281 |
| மழுக்கள்வச் | 44 |
| மழுக்கள்வீசு | 33 |
| மழைக்குமா | 196 |
| மழைவறந்த | 281 |
| மறியுமோதை | 129 |
| மறுத்தவா | 100 |
| மறைகளாகமம் | 49 |
| மறைந்தெ | 130 |
| மறைபயில் | 131 |
| மறைபலமுகங் - டலரி | 301 |
| மறைபலமுகங் - டேத்தி | 159 |
| மறைபொருள் | 295 |
| மறைமுதற் | 13 |
| மறையவர் | 227 |
| மறைவழிகிளை | 14 |
| மறைவழிமதங் | 302 |
| மற்றதற்கிசைய | 232 |
| மற்றவேலை | 304 |
| மற்றையதலங் | 63 |
| மற்றையதலத் | 64 |
| மனக்கவலை | 90 |
| மனத்தினுங் | 124 |
| மனிதரிலுயர்ந் | 79 |
| மனிதரின் | 108 |
| மனிதரு | 202 |
| மனிதர்வான் | 237 |
| மனித்தருக் | 205 |
| மனித்தனாகிய | 149 |
| மனுவற | 134 |
| மன்னவறின் | 138 |
| மன்னவர்மகளி | 168 |
| மன்னவன்குல | 232 |
| மன்னவன்வெ | 289 |
| மன்னவன்றன | 280 |
| மன்னனாணையா | 304 |
| மன்னனைத்தேவி | 236 |
| மன்னியநா | 261 |
| **மா** | |
| மாகமுந்திய | 31 |
| மாக்கடிமுளரி | 201 |
| மாசறத்துறந் | 234 |
| மாசறுதவத் | 316 |
| மாசறுத்தெமை | 193 |
| மாசிற்கழிந்த | 96 |
| மாடமாலையு | 36 |

| | |
|---|---|
| மாடம்புதுக்கி | 247 |
| மாடவெண் | 315 |
| மாணிக்க | 287 |
| மாதண்ட | 307 |
| மாதவரெழுவர் | 107 |
| மாத்திமர் | 289 |
| மாந்தர் | 136 |
| மாமணித் | 193 |
| மாமணிமரபுக் | 316 |
| மாயவன்வடி | 23 |
| மாவலம்புதார் | 127 |
| மாவொடுமயங்கி | 121 |
| மானதமே | 224 |
| மானமுனி | 296 |
| மானிட | 203 |
| மான்மதசுந் | 87 |
| **மி** | |
| மிக்கமக | 135 |
| மின்பயில்குலி | 92 |
| மின்பயில்பரி | 208 |
| மின்மைசான் | 80 |
| மின்றிகழ் | 289 |
| மின்னகுவேலா | 289 |
| மின்னகுவேற் | 187 |
| மின்னவிர் | 264 |
| மின்னேர் | 257 |
| மின்னைவா | 45 |
| **மீ** | |
| மீனவன்கொடி | 159 |
| மீனவேலையிற் | 248 |
| **மு** | |
| முகமனன்கியம்பி | 274 |
| முகிறவழ் | 183 |
| முக்கடம்படு | 127 |
| முக்கணர | 68 |
| முக்கணும் | 263 |
| முஞ்சிநாண் | 47 |
| முடங்கல்கொண் | 279 |
| முடங்கன்மதிமு | 223 |
| முடிகவிக்கு | 141 |
| முண்டநெற்றி | 249 |
| முதனுகர் | 301 |
| முத்தணி | 252 |
| முத்திற் | 170 |
| முந்தவமருல | 113 |
| முந்தியவிந் | 319 |
| முந்துறு | 208 |
| முந்தைநான் | 234 |
| முரசதிர்ப்ப | 139 |
| முரசொடு | 194 |
| முரவை போகிய | 215 |
| முல்லை வண்டு | 20 |
| முள்ளரை | 317 |
| முறையிட்ட | 330 |
| முற்றவோதிய | 57 |
| முனிதனீள் | 11 |
| முனிவரஞ்சலி | 180 |
| முனிவர் | 210 |
| முனிவனை | 265 |
| முன்புதம் | 229 |
| முன்பெற்றங் | 189 |
| முன்னதா | 92 |
| முன்னர்மாலை | 247 |
| முன்னவரென்ப | 312 |
| முன்னவனருளி | 76 |
| முன்னவன்ன | 50 |
| முன்னிருந்தினி | 146 |
| முன்னைத்தவ | 228 |

முன்னைவல் 230

மூ

மூடினான் புளகப் 117
மூவகைச்சிறப் 59
மூவகைமல 93
மூவகையுலகி 74
மூளுமன்பினான் 127

மெ

மெய்படுமன்பி 39
மெய்ம்மைநூல் 204
மெய்யரன்பு 130
மெய்யை 72
மெல்லிதாய் 251

மே

மேருமந்தரங் 56
மேவரும் 306
மேவலனல்லை 308
மேவியாகவப் 163

மை

மைக்கடல் 273
மைந்தகேட்டி 258
மைந்தர் 46
மைந்துறுசெம் 320
மைந்துறுமடங் 255
மைம்மலர் 135

மொ

மொய்த்துபுன 113

யா

யாதெனி 99
யாத்தனர் 309
யாவையுமீன்றா 285
யாவையுமுணர்ந்த 104
யாவையும்படை 115
யாழியன்மொழி 153

வ

வங்கவேலை 261
வடநிழல் 295
வடிகொள் 127
வடுவின் 27
வட்டங்கொள் 89
வட்டநீர்க் 249
வட்டயாமை 261
வட்டவாண் 297
வட்டவாய் 129
வண்டுவரி 296
வண்டுளரு 120
வண்டோதை 221
வண்ணமாந் 253
வந்தகாவல 173
வந்ததை 122
வந்தரமங்கையர் 117
வந்தவரெதிர் 305
வந்தவானவர் 177
வந்தவேதியனை 293
வந்தான்மரு 227
வந்திறையடி 6
வயந்தனை 280
வயவேனக் 91
வயிறுதோ 242
வரங்கடந் 53
வருணனு 329
வருவிருந் 41
வரைசெய் 148
வரைபடு 13
வரைவளங் 173
வலங்கிடந்த 178
வலத்தயன் 189
வலத்தவுணன் 321

வலம்படும் 36
வலம்புரி 241
வலவயினி 131
வலன்மயி 321
வல்லைதாயிரு 13
வல்லைவந்தழைத் 123
வல்லைவாணிகஞ் 127
வழுக்கறு 41
வழுதியர்பெருமா 236
வழுதியுன்ற 262
வளைந்தநுண் 24
வளையெயின் 264
வளையெறி 71
வளையொடு 260
வள்ளறவன் 282
வள்ளறன்னை 126
வள்ளன்மலயத் 135
வள்ளைபோல் 251
வறந்தநீர் 105
வன்மனங் 269

வா

வாக்கினான் 95
வாங்கி வாங்கி 218
வாங்குநான் 126
வாங்குநீர் 276
வாசிகமைந் 224
வாம்பரியுகைத் 109
வாய்மையா 308
வாரிருங் 187
வார்கழல் 160
வாளவிரு 310
வானமதி 258
வானமுந் 42
வானயாறு 21
வானவர்கோன் 88
வானவர்சேனை 100
வானவர்கயிலை 161
வான்வழிவந்த 273

வி

விசும்பு நில 135
விசையநின் 306
விச்சுவாவசு 149
விடங்கலு 306
விடம்பயி 99
விடுத்திட 74
விடைகொடு 123
விடையுகைத் 24
விட்டிலகு 136
விண்டலத்தவரு 199
விண்டலவானோ 193
விண்டவழ் 204
விண்ணவர் 71
விண்ணாடு 143
விண்ணிடைப் 82
விண்ணின்று 229
விண்ணுளார் 198
வித்தவேலனை 317
விதிவழி 202
விதுக்கலை 189
விந்தவெற்படக்கி 104
விம்மிச்செம் 186
விரதநெறி 143
விரதமாதவத் 67
விரவு வானவர் 177
விரைசெய்தார் 249
விரைசெய்பங் 29
விரைந்தரன் 107
விரைபடு 219

விரையகல் 45
விரையவிழ்ந்த 51
வில்லமாயிரங் 271
விழித்தன 283
விழுங்கிய 98
விளைவது 261
விளைவொடு 256

வீ

வீங்கிய கொங் 156
வீங்கிரு 103
வீங்குடல் 97
வீழ்ந்தனர் 101

வெ

வெங்கதிர்ப்படை 277
வெஞ்சின வலாரி 277
வெண்களிற்றவ 249
வெந்தநீற்றொளி 54
வெம்படை 286
வெம்மையால் 25
வெய்யவன் 313
வெய்யவேற் 259
வெல்லுதற் 243
வெள்ளைக்களிற் 245
வெள்ளைமந் 267
வெறிகொளைம் 34
வென்றிக்கணத் 161
வென்றுளே 2

வே

வேகமாநெறி 1
வேங்கைவாய் 303
வேட்டத்திற் 276
வேதநாயகன் 217
வேதமுடிமே 153
வேதமுமங்கமா 48
வேதமுனி 223
வேதவந்தமு 50
வேதவாகம 56
வேத்திரப்படை 69
வேளௌனவந்த 324
வேள்விச்சாலை 170
வேறுமாமுடி 304
வேனில்விறல் 134

வை

வைகறையெ 267
வையுடை 145
வையைக்கிழவன் 244



உ

திருச்சிற்றம்பலம்
திருவிளையாடற் புராணம்
அரும்பத உரை

## 1. மதுரைக் காண்டம்

பாடல்
எண்.

1. சொற்பொருள் - சொல்லையும் பொருளையும்
2. மல்குக - நிரம்புக
புல்குக - நிலைபெறுக
3. தகைமை - பண்பு. நண்ணி - இரண்டறக் கலந்து
4. போற்றி - பாதுகாத்தருள் ; வணக்கம். ஏற்றுக்குன்று - வெள்ளியங்கிரியனைய இடப ஊர்தி
5. கவுணியர் - (கவுடில்ய கோத்திரத் துதித்த) திருஞானசம்பந்தர். அங்கயற்கண் - அழகிய கயல்மீன் போன்ற கண்களையுடைய மீனாட்சி. நூபுரம் - சிலம்புகள்.
6. போதம் - அறிவு. மூவண்ணல் - அயன், அரி, அரன் ஆகிய மூவர்; வாளா - சம்மா, அசைவின்றி.
7. புறம்பும் - வெளியேயும், புறத்தும்; கரி - சாட்சி, சான்று.
8. பூவினாயகன் - பிரமன். பூமகணாயகன் - திருமால். காவினாயகன் - இந்திரன். மாதேவி - மீனாட்சி
9. படிவம் - உருவம். அண் - அணுகுதற்கு.
10. சராசரங்கள் - அசையும், அசையாப்பொருள்கள். தன்னானந்தக் கொடி - சிவகாமசுந்தரியாள்.
11. தணந்து - நீக்கி, மடவரல் - தடாதகைப் பிராட்டியார் (மீனாட்சி)
12. செழியர் பிரான் - மலையத்துவச பாண்டியன். மாலிகை - மாலை.
13. மாறன் - பாண்டியன். புழுக்கம் - துன்பம். பவக்கடல் - பிறவிக்கடல்.

14. ஆறங்கம் - ஆறு அங்கங்கள் - சிட்சை, வியாகரணம் (இலக்கணம்), நிருத்தம், கற்பம், சந்தம், சோதிடம் ஆகியவை. நால்வர் - சனகர், சனந்தரர், சனாதரர், சனத்குமாரர். சொல்லாமற் சொன்னவர் - தென்முகக் கடவுள், தட்சிணாமூர்த்தி. குறிப்பாலுணர்த்தியவர். நினையாமல் நினைந்து உலகப் பற்றுக்கள் எதையும் எண்ணாமல் சிவபரம் பொருளையே எண்ணி.

15. கூடம் - (இங்கு) யானைகட்டுமிடம். தொடர் - சங்கிலி. வருவினை - இனிவருகின்ற வினை (ஆகாமியம்)
16. கறங்குதிரை - ஒலிக்கின்ற அலை. பொருப்பு - கிரவுஞ்சமலை. சூர் - சூரபன்மன். மகம் - வேள்வி.
17. நால்வகைச் சொல் - பெயற்சொல், வினைச் சொல், இடைச்சொல், உரிச் சொல் ஆக நால்வகைச் சொற்கள். தேன் - பெண். (தேனீ) வண்டு. முண்டகம் - தாமரை.
18. பந்தி - வரிசை. வேத்திரப்படை - பிரப்பங்குச்சியாகிய ஆயுதம்.
19. கடுக்கை - கொன்றைமலர். மீனக்கொடியன் - கயல்மீன் பொறித்த கொடியையுடைய பாண்டியன், இங்கு கூன் பாண்டியன்.
20. வஞ்சகர் - சமணர்.
21. புலவி - ஊடல். கழுது - பேய். பானாள் இரவு - பாதியாகிய நள்ளிரவு.
22. எல்லில் - பகலில். அறுகாலம் - மாலை, யாமம், வைகறை, விடியல், உச்சி, ஏற்பாடு ஆகிய ஆறு பொழுதுகள். எல்லிற்பொழுதறு காலம் - சகல கேவலங்கள் அற்ற ன் மலதுரியாதீதம் எனினுமாம். பூசனை - ஞானபூசை.
23. பிறவித்தாள் - பிறவிவேர், மைந்தர் - இங்கு சண்டேசுரர்.

**பாயிரம்**

24. காந்தம் - ஸ்காந்தம் எனும் கந்தபுராணம்
25. புகழ்மை - பெருமை. உறுதி - பிறவிப்பயன்
26. எட்டெட்டு - அறுபத்துநான்கு. வரன்முறை - முறையாக

**அவையடக்கம்.**

27. கழக மாந்தர் - கடைச்சங்கப் புலவர்கள்.

28. கவை - பிளவுபட்ட. துளக்கம் - ஐயம். திரிபு முதலியன.

29. வாரி - கடல்நீர். துகள் - குற்றம்.

30. அன்மைச் சொல் - உடன்பாடு அல்லாத (எதிர்மறைச்) சொல்.

31. அறுகாற்பீடம் - ஆதிசேடனாகிய பீடம்; இஃது மதுரை - ஆலயத்திலுள்ள ஓர் இடம். ஆறு கால்களைக் கொண்ட இருக்கை எனினுமாம். அறுகு + ஆல் = அறுகால். அறுகு அறுகம்புல். அமரர் - இங்கு புலவர்.

## திருநாட்டுச் சிறப்பு

1. கறை - ஆலகால விடம். கந்தரம் - கழுத்து

2. பௌவம் - கடல். எவ்வம் - துன்பம். கௌவை - ஒலி

3. எல் - (பகல்) சூரியன். தடித்து - மின்னி. அம்பு - (அப்பு) தண்ணீர்; பாணம். கொண்மூ - மேகம்.

4. முனி - அகத்தியன். தனிதம் - மேகமுழக்கம்.

5. எழிலி - மேகம். வலாரி - தேவேந்திரன்.

6. மேகலை - இடையணி; ஆடை. தூங்கு - ஒழுகுகின்ற.

7. சைலம் - மலை. பொருனை - தாமிரவருணி.

8. செல் - மேகம். கால் - கால்வாய் (வாய்க்கால்) பணை - வயல் ; மகளிர் விளையாட்டரங்கு.

9. அரம்பை - வாழை. குறங்கு - தொடை. கைதை - தாழை ; நெய்தல் - கடலும் கடல் சார்ந்த இடமும்.

10. மான்மதம் - கத்தூரி. முந்நீர் - கடல். ஆகம் - பாம்பு.

11. முல்லை - காடும் காடு சார்ந்த இடமும்.

12. காஞ்சி - ஏழுமணிக் கோவை ; காஞ்சிமரம். பார்ப்பன மகளிர் - தாருகாவனத்து முனிவர் மனைவியர்.

13. குழை - மகரகுண்டலம் (காதணி) ; தளிர். மருதம் - வயலும் வயல் சார்ந்த இடமும். அமுதம் - நீர் ; பால். செவிலி - வளர்ப்புத்தாய்.

14. பூதிசாதன நெறி - (திருநீறு தரிக்கும்) சைவ சமயம். பூதி - திருநீறு. சாதனம் - உருத்திராக்கம், ஐந்தெழுத்து என்பன. மூரி - பெரிய.

15. பழனம் - வயல். உறை - துளி.

16. இகம் - இவ்வுலக இன்பம். பரம் - மேலுலக இன்பம். உவரி - கடல்.

17. வேறுவேறு பேர் - பராசக்தி, ஆதிசக்தி, இச்சாசக்தி,கிரியாசக்தி, ஞான சக்தி ஆகிய பஞ்ச சக்திகள். கூவல் - கிணறு.

18. களமர்கள் - உழவர்கள். பொன்னேர் - தலைஏர். ஒருத்தல் - ஆண் எருமை. அளமரு - அலமரு - சுழலுகின்ற.

19. அலம் - கலப்பை. சால் - நீர் இரைக்கும் சால்; உழுபடைச் சால். சோரி - இரத்தம். தழல்மணி - மாணிக்க மணி.

20. நாறு - நாற்று (இடைக்குறை). தெவ்வின் - பகைவரின். மாறு பகை.

21. நறவம் - தேன்; கள். கடைசியர் - மருதநிலப் பெண்கள்.

22. பட்பகை - பண்ணுக்குப்பகை. செறுதல் - செறுத்தல் - அழித்தல்.

23. மள்ளர் - மருதநில மக்கள். படை - வேற்படை. அடையவும் - முழுதும்.

24. புரை - குற்றம். மான - ஒப்ப. சாலா - நிறைவடையாத.

25. வித்தி - விதைத்து. செவ்வி - பருவம். சாலி - நெல்பயிர்.

26. நிலவேறுபாடு - செம்மண் நிலம், கரிசல் நிலம் முதலியன. நான்குவகை நலார் - பதுமினி, சித்தினி, சங்கினி, அத்தினி ஆகிய பெண்கள் பைங்கூழ் - நெற்பயிர்.

27. அங்கை - உள்ளங்கை. முள்ளரை - முட்களையுடைய தண்டு. ஈடாக்கி - கட்டுகள் கட்டி.

28. ஊர்க்காணித் தெய்வம் - கிராம எல்லை காவல் தெய்வம். பண்டி - வண்டி. தென்னாடுற்றவர் - தென்புலத்தார் விருந்தினர் - புதிதாக வந்தவர்.

29. இறுங்கு - சோளம். தோரை - மலைநெல். பழுக்குலை - பழுத்த குலைகளையுடைய. ஏனல் - தினை.

30. பனிப்பு - உடல் நடுக்கம்.

31. நிச்சலும் - தினந்தோறும். பொச்சம் - பொய்.

32. செம்பொன் வண்ணப் புழுக்கல் - சர்க்கரைப் பொங்கல். வழிமறித்து - வழியெதிர் கொண்டு.

33. பின் எவன் - வேறு யாது. அறப்புறம் - அறஞ்செய்தற்கு விடப்பட்ட நிலம், இறையிலி தேவதானம்.

34. குன்றம் - மலை ; மலையும் மலைசார்ந்த இடமும். குறிஞ்சி குலத்திணை - மேலான திணைகள். மயங்கிய - ஒன்று கலந்து.

35. கொல்லை – முல்லை நிலம். கறி – மிளகு. எயின்சிறு மகளிர் – வேடர்குல மகளிர்.
36. மேதி – எருமை. சேவகம் – யானை உறங்குமிடம். முறச்செவி – முரம் போன்ற காதுகளையுடைய யானை.
37. மனவு – சங்குமணி.
38. மருதம் – மருதப்பண். குழவி – ஆண் கன்று.
39. கரும்பொன் – இரும்பு. ஆழியான – திருமால். பூவை – காயாமரம்.
40. பரீஇ – பரித்து. கேதகை – தாழை. குருகு – கொக்கு.
41. சோறு – மகரந்தம். தூறுவார் – நகைத்துத் தூற்றுவார். அலர் – பழி ; மலர்.
42. கூனலங்காய் – வளைந்த புளியங்காய். கன்னல் – கரும்பு.
43. அவம் – கேடு. புலம் – சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என ஐம்புலன்கள், நவம் – புதுமை.
சிவமிகும் பரஞானம் – சிவஞானம். மெய்த்திரு – அழியாச் செல்வம். தவம் – தவன் – அகத்தியன்.
44. நால்வாய் – தொங்குகின்ற வாய் (துதிக்கையை) உடைய. உரி – தோல்.அசும்பு – நீர்த்துளி. கூனல்வான்சிலை – வானவில்; இந்திரவில்.
45. சூழல் – சுற்றிடம், நனை – அரும்பு. நாகு இளம் – மிகவும் இளமை. வீ – பூ.
46. மரவம் – குங்கும மரம். செம்மல் – பழுத்த பூக்கள். முத்தீ – மூன்று அக்கினிகள். அவை ஆகவனீயம், காருகபத்தியம், தாக்கிணாக்கினீயம்.
47. துகிர் – பவளம்; குற்றம். சீறூர் – குறிஞ்சிநிலத்து ஊர்.
48. கோலும் – சூழும். இறவுளர் – குறவர்.
49. கருவிவான் – இடி, மின்னலுடன் கூடிய கருமேகம். கழை – மூங்கில், கான்ற – ஒதுக்கிய் உமிழப்பட்ட.
50. சேய – செய்ய சிவந்த. பொகுட்டு – மொட்டு. முத்தமிழ் – இயல், இசை, நாடகம்.
51. சாம்பூநதம் – வெண்ணாவல், நாகர் – தேவர். போகபூமி – நல்வினைப் பேற்றினை அனுபவிக்கும் பூமி.
52. புரந்தரன் – தேவேந்திரன். நேமியோன் சக்கரப்படையினையுடைய திருமால்.

53. வனம் - வனப்பு; அழகு. காசறை - கத்தூரி, ஞாங்கர் - பக்கம்.
54. பொதியின் நதி - தாமிரவருணி.
55. ஆரம் - சந்தனச்சோலை. மென்கால் - தென்றல்.
56. பாணினி - வடமொழி முனிவன். மலையமாமுனி - அகத்தியர். அரங்கு - நாடகசாலை.
57. பசுமை - குளிர்ச்சி; இனிமை.
58. கன்னி - அழியாத. மறுபுலம் - பிறநாடுகள்.
59. அஃகினும் - குறைவுபட்டாலும். பொலிவு - சிவவேட அழகு.
60. உம்பர் - பெண் (புன்மை). திலக நாயகி - பார்வதி தேவியார். சலதி - கடல். சுலவு - சூழப்பட்ட

...

## நகரச்சிறப்பு

1. மங்கலம் - எல்லாவகையான நலன்கள். அலம்பு - ஒலிக்கின்ற.
2. கொடுங்குன்று - பிரான்மலை. ஏடகம் - ஏடு எதிர்த்துச் சென்ற திருவேடகம் எனும் திருத்தலம். பொங்கர் - சோலை. வேய்வனம் - (மூங்கில் காடு) திருநெல்வேலி; வேணுவனம்.

3. வில் ஆரம் - ஒளி பொருந்திய பதக்கம்.
4. தாமரைக்கூடம் - தாமரைக்கோயில். ஞானந்தருமகள் - உமாதேவியார்.
5. புகழ்மகள் - புகழ்மாது.
6. வர்க்கம் - வருக்கம் ; வரிசை. ஒலி - தழைத்த. கலி - ஒலியையுயடைய.
7. வான் தருக் குலங்கள் - பஞ்ச தருக்கள். அவை சந்தனம், அரிச்சந்தனம், மந்தாரம், பாரிசாதம் கற்பகம் என்பன.
8. மெல்லிலை - வெற்றிலை. பூகம் - பாக்குமரம்; கமுகு. களம் - கழுத்து
9. வேரி - தேன். செருத்தி - ஒருவகை மரம். புத்தேள் - தெய்வத்தன்மையுடைய. மனுக்கள் - மந்திரங்கள். ஏமம் - பொன். உதகம் - நீர்.
10. சேக்கை - படுக்கை. பாசடை - பச்சிலை. தரள நிராஞ்சனம் - முத்தாலத்தி.

11. இரும்பினன்ன தோள் வினைஞர் - இரும்பு போன்ற தோள்களையுடைய ஏவலர்; யானைப்பகார்.
12. காரனம் - கரிய நிறமுடைய காகம். குடம்பை - கூடு.
13. ஆழி - உருளைச் சக்கரம். மகம் - வேள்வி.
14. எழுகடல் - பால், தயிர், நெய், கருப்பஞ்சாறு, கள் உப்புநீர், நன்னீர் ஆகிய ஏழுகடல்கள் புரிசை - மதில்.
15. பறியும் - தவழும். சேண் - விண்.
16. கண்ணிலாத - இரக்கமற்ற. கராம் - முதலை.
17. குமிழ் - குமிழம்பூ
18. கள்ள - தேனையுடைய, முண்டகம் - தாமரை. தண்கிடங்கு - நீரரண்; அகழி.
19. உந்திய - ஊடுருவிச் சென்ற. பணி - பாம்பு.
20. புரம் - முப்புரம். திருந்தார் - பகைவர்.
21. சண்டபானு - விரைந்து செல்லும் சூரியன். விண்ட - திறந்த.
22. சிகரமாலை - ஞாயிலாகிய அலைவரிசை.
23. எல்லை தேர்வழி - சூரியனது தேர் செல்லும் வழி; அளவு செய்யப் புகுந்த வழி. பொறி - இயந்திரம்.
24. கழு - சூலம். எழு - வளைந்த தடி. கப்பணம் - யானை நெருஞ்சிமுள் போல இரும்பால் வடிவமைக்கப்பட்ட ஒரு படைக்கலம்.
25. பில்கு - சிந்துகின்ற. முசலம் - உலக்கை.
26. இவுளி - குதிரை, தந்து - அரிகயிறு. அலகை - பேய். கூளி - பேய்.
27. துவக்கு - கட்டுகின்ற. அரிதொடர் - கட்டுகின்ற சங்கிலி.
28. நடைகற்ற மாடம் - வேண்டிய இடங்களுக்குத் தானே செல்லும் மாடம். நடைவையம் - தானே ஓடும் தேர்.
29. முரணவாய் - வலிமையுடையவாய். கம்மியன் தேவத்தச்சன்; மயன். யவனர் - கிரேக்கர்.
30. கழை - கரும்பு (மூங்கில்). குழை - மாந்தளிர்.
31. ஆலம் - ஆலகால விடம். காந்தம் - காந்தக்கல்.
32. சராசரம் (சரம் + அசரம்) அசையும் பொருளும் அசையாப் பொருளும்.
33. கறமங்கு - கடித்து. காற்றொடர் - காலில் கட்டிய கயிறு, சங்கிலி. தெற்றி - திண்ணை. பசலை - இளமை.

34. பாசம் - கட்டுஇ பந்தம். கயிறுஇ சங்கிலி. கோட்டு மான் - தந்தத்தையுடைய யானை. மான்மதம் - கத்தூரி.
35. அகலம் - மார்பு. சுவடு - அடையாளம்
36. மருமம் - மார்பு. செம்புனல் - இரத்தம். பருமம் - கவசம்.
37. அரமியம் - நிலாமுற்றம். மின் - மின்ல் போன்ற இடை. பயோதரம் - மேகம்; கொங்கை. கொடிகள் - கொடியிடையார்; பெண்கள்.
38. வலம் - வெற்றி. புலவி - ஊடல்.
39. குழைய - குண்டலங்களையுடையன ; தழைகளையுடையன. கொடிய - கொடுமைகளையுடையன ; கொடிகளையுடையன. வண்ட - வளையல்களையுடையன் வண்டுகளையுடையன. அறல் - கருமணல். நெறிய - நெளிவையுடையன ; தரும நெறிகளையுடையன.
40. மணம் - வாசனை் திருமணம். தும்பி - வண்டு; யானை. அலர் - மலர்; பழிச்சொல்.
41. பரி - அறுத்தெறிந்த.
42. ஐய - ஆச்சரியச் சொல்.
43. காஞ்சி - எட்டு மணிகள் கோத்த கோவை.
44. புண்ணியம் - திருநீறு. சாலக்கண் - பலகண்கள். அங்கணன் - சிவபெருமான்.
45. கலினம் - கடிவாளம். கருவி ஐந்து - தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி, கஞ்சக்கருவி, மிடற்றுக்கருவி.
46. கழபவர் - மெலிகின்றவர். ஆவணம் - (இங்கு) வீதி.
47. காமன் மறைப்பொருள் - கலவிக்கரணங்களாகிய பற்குறி, நகக்குறி.
48. சூது - சூதாடுங்காய். ஒட்டி - பந்தயம் வைத்து. வடி - மாவடுவின் பிளவு.
49. தாமம் - மாலை. நாற்றி - தொங்கவிட்டு.
50. வெம்முலை - விரும்பத்தக்க இளமுலை. அரமாதர் - அரம்பை முதலிய தெய்வமகளிர். இயல் மணம் - இயற்கை மணம். சூழ்நபோய் - சூழந்துசென்று.
51. நூல் - வேதம் அவாய் - விரும்பி. சந்தை கூட்டல் - ஆசிரியர் சொல் எல்லோரும் ஒரு சேரச் சேர்ந்து செல்லுதல்.
52. ஔவியம் - பொறாமை. திவ்விய - தெய்வத்தன்மையுடைய. ஏழால் - மிடற்றொடர்; கண்டப்பாட்டு

53. வீடு பெற்றவர் - சீவன்முத்தர். பெட்பம் - மயக்கம்; மையல். நல்லவர் - விலைமதர், பரத்தையர்.
54. மூவர் - அந்தணர், அரசர், வணிகர் ஆகியோர். சேர, சோழ, பாண்டியர் ஆகிய மூவர்.
55. அடிசில் - உணவு. முகமன் - உபசரிப்பு.
56. செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருக்கும் விருந்தோம்பல் நிலை விளக்கம் கூறப்பட்டது.
57. புகழ்மை - கீர்த்தி; புகழ். வரிசை - தத்தமக்குரிய தகுதி.
58. சொல்லினும் - பொருளாலே அன்றிச் சொல்லானும்; உம் - இறந்தது தழீஇய எச்ச உம்மை.
59. வேதி - திண்ணை. வாலிய - வெள்ளிய. பீடிகைமறுகு - வணிகர் வீதி. (இருபெயரொட்டு)
60. மாடம் - பண்டகசாலைகள். திரை அளிப்ப - கடல் தருவன: உப்பு, சங்கு, முத்து, பவளம், ஒக்கோலை ஆகிய கடல் படு திரவியங்கள். புனல்வேலிக்கரை அளிப்ப - மருதநிலம் தருவன ; நெல், கரும்பூ, பயறு, வாழை, இளநீர் ஆகியவை. கானத்தரையளிப்பன - காடுதரும் தேன், தேனடை, மயிற்பீலி, அரக்கு, கத்தூரி முதலியன. வரையளிப்பன - மலை தரும் மிளகு கோட்டம், அகில், தக்கோலம், கிராம்பு முதலியன.
61. கரிய கம்பலக்கிடுகு - கறுப்புக் கம்பளத்தைப் பரப்பிய சட்டம்.
62. நாள் - விண்மீன். கோள் - கிரகம். ஆள் கலம் - (ஆளுகின்ற) அணியும் ஆபரணங்கள்.
63. அவண - அவ்விடத்து ; (அவண்) உள்ளன. பதினெழுபுலம் - தமிழ் ஒழிந்த பதினேழு நிலங்கள்.
64. அடுகலன் - சமையல் செய்யும் பாத்திரங்கள்.
65. செயிர் - குற்றம். பொன் - ஆடகம், கிளிச்சிறை, சாதரூபம், சாம்பூநதம் என நால்வகைப் பொன். அயிர் - ஐயம்.
66. துகிர் - பவளம். அரிப்பர் - அரிப்பவர்கள்.
67. தொன்மரம் - ஆலமரம். தூய மாயைகாரிய ஒலி - சுத்தமாயா காரிய ஓசை ; இது பொருள் பயக்கும் எழுத்துக்களின் வடிவாய் இருக்கும். வான் முதற் கருவின் ஆய காரிய ஓசை - ஆகாயமாகிய முதற் காரணத்தின் உண்டாகிய ஒலி ; இது பொருள் பயவாத ஒலிமாத்திரையாக இருக்கும்.

68. பல் பொருள் - பல பண்டங்கள்; அறமுதலிய ஊறதிப் பொருள். மரபுளி - வரிசையாக.

69. சிவபுரம் - சிவராசதானி, தோழன் - (இங்கு) குபேரன். தயக்கம் - - தயங்கியநிலை. நியமம் - கடைத்தெரு.

70. கலி - வருத்தம் ; செருக்கு. கோ - மன்னன்.

71. துரங்கமா - கதிரை. ந்துரை - குதிரை லாயம்.

72. கார்முகம் - வில். உடம்பிடி - வேல். கப்பணம் - கைவேல். நாஞ்சில் -உழுகலப்பை.எழுக்கள் - வளைதடி. நாந்தகம் - வாள்; கத்தி. பலகை - கேடயம். இகல்விந்தை - துர்க்கை; வீரலட்சுமி. இகல் விந்தை வழம் கூடம் - ஆயுதசாலை.

73. மால் - திருமால்.

74. காசு - குற்றம். மாசு - குற்றம்.

75. விஞ்சை - விந்தை. கதுப்பு - கூந்தல். வரை - மலை.

76. அன்ன - அந்த. பொன் - திருமகள்; இலக்குமி.

77. பாண்டில் - உருளை. சேண் - தூரம்.

78. தாமம் - (இங்கு) மகரந்தம். சிவிறி - துருத்தி. சிந்துரப் பொடி - குங்குமம்.

79. தருக்கு - வீரச் செருக்கு. கேழ் - நிறம்.. மலர் - செங்காந்தட் பூ. தகர் - ஆடு.

80. தட்ப - தடை செய்ய. சிறார் - அரசச் சிறுவர்கள்.

81. இஞ்சி - மதிலுறுப்பு ஞாங்கர் - பக்கம். ஆர் - ஆத்தி. போந்து - பனை.

82. ஆத்தன் - சிவபெருமான். தீர்த்தர் - தூயவர்.

83. முஞ்சி - நாணற்புல். குஞ்சி - கூந்தல். சொருக்கு - சொருகல். பலாசம் - முள்முருங்கை. பஞ்சிநாண் - பூணூல். எஞ்சி - ஏக்கற்று நின்று. கிடைகள் - வேதபாடசாலைகள்.

84. தீ வினை - (இங்கு) தீவளர்க்கும் செயல். பூவை - நாகணவாய்ப் பறவை. கா - சோலை.

85. அங்கம் ஆறு - ஆறங்கமாகிய மந்திரம். வியாகரணம், நிகண்டு, சந்தோபிசிதம், நிருத்தம், சோதிடம். கழகம் - பாடசாலை.

86. செங்கல் - சிவந்த காவி. அறுவை - ஆடை. அவிச்சை - அஞ்ஞானம்.

87. அட்டில் - மடைப்பள்ளி. மட்டு - மணம், வாசனை.

88. சிதைக்கலன் - பாய்மரக்கப்பல். பிறவி ஏழ் - மக்கள், விலங்க. பறவை, நீர் வாழ்வன, ஊர்வன், தாவரம், ஆகிய ஏழுவகைப் பிறவிகள்.

89. எதிர்வினை - ஆகாமியவினைன் இனிவரும் வினை. இருண்மலம் - ஆணவமலம்.

90. அடியைத்தழுவு தொண்டர் - சரியைவழி நடப்பவர். மைந்தர்கள் - கிரிடை வழி நடப்பவர். சாதகர் - யோகவழி.

91. சிவயோகியர் - சிவஞானியர்.

92. குனித்து - வளைத்து. செல்வம் - சிறப்பு, ஓசை.

93. விடங்கர் - பேரழகர். கண்ணி - தலைமாலை. மூவுலகு - சுவர்க்கம். பூமி, பாதாளம். ஓக்கம் - உயர்வு.

94. நிரந்து - தழைத்து. பழிச்சி - துதித்து.

95. உழல் - பிறப்பாலும் சிறப்பாலும் உழலுதல். உருப்பு - கோடை வெப்பம்.

96. ஆழி - சங்கரவாளமலை. நேமி - மலை.

97. வேதஅந்தம் - வேதாந்தம் ; உபநிடதங்கள். நாதம் - நாததத்துவம்.

98. வெறி - வாசனை.

99. முன்னவன் - சோமசுந்தரன்.

100. எழு - தூண். அழுக்கு - பொறாமை.

101. வாகை - வெற்றி. தளை - விலங்கு.

102. ஆயிரநாவினான் - ஆதிசேடன். கண்ணாயிரமுடையவன் - தேவேந்திரன்.

103. போகம் - பெண், ஆடை, அணிகலன், உணவு, தாம்பூலம், நறுமணம் - இசை, மலர்ப்படுக்கை ஆகிய எண்வகை இன்பங்கள்.

104. பாணி - பாட்டு, இசை.

105. வித்து - காரணம், செவ்வி - சமயம். நிலைநிலையாமை - தோற்றக்கேடுகள்.

106. அந்தித்து - அணுகி.

107. அற்புதம் - திருவருள்

108. முன்னவர் - முதுபெரும்புலவர். கவி - காப்பியம்.

109. இறைமகன் - சோமசுந்தரக் கடவுள். ஆடல் வரவு - திருவிளையாடல் நிகழ்வுகள்.

## திருக்கயிலாயச் சிறப்பு

1. முகிழ்த்திட - கைகூப்பி வணங்க. அவிச்சை - பாசம். மறையின் சிரம் - வேதாந்தம்.
2. போதுறை புத்தேன் - பிரமன். சக்கரப்படையுடைப் பகவன் - திருமால். தவாது - கெடாது. ஓங்கல் - மலை.
3. அரவம், சம்மை, ஓதை - ஓசை, ஒலி.
4. கண்கள் - இடங்கள். சாரூபம் - இறைவன் திருவுருவைப் பெற்றிருத்தல்.
5. தூங்குமாதவர் - பரசிவத்திலழுந்திய தவத்தோர்.
6. குண்டு - சுனை. கோட்டுமாமலர் - கோட்டுப்பூ. நிலமலர் - தரையில் பூக்கும் பூ. காட்டு மா மலர். காட்டுப்பூ. கொடிமலர் - கொடிப்பூ.
7. உழுவை - புலி. கடு - விடம், நஞ்சு. நாகம் - யானை, பாம்பு, தேவருலகம். சிலம்பு - மலை.

## புராண வரலாறு.

1. களம் - கழுத்து; கண்டம். விண் - தேவர். மாடு - பக்கம்.
2. தண் - குளிர்ச்சி. பண்தயங்க - ஒப்பனை விளங்கு. அண்டர் தச்சன் - மயன் ; தேவதச்சன்.
3. வானமீன் - நட்சத்திரம். பதம் - காலம்.
4. அகள் - தோல். பன்னுதல் - சிறப்பித்தல்.
5. வேலை - பொழுது. இந்து சேகரன் - சோமசுந்தரக் கடவுள்.
6. அம்புயத்தன் - பிரமன்.
7. அஞ்சலித்து - வணங்கி.
8. மிருதி - (சுமிருதி தருமநூல். போதம் - ஞானம்.
9. பர்ப்பதம் - திருப்பருப்பத மலை.
10. ஐயமாதி குற்றம் - ஐயம், திரிபு, அறியாமை ஆகிய மூன்று குற்றங்கள்.
11. தலன் - தனம் (கடைப் போலி)
12. இருண்மலம் - அணவமலம்.
13. காந்தம் - ஸ்காந்தம், கந்த புராணம், சங்கிதை - வரலாறு.
14. துணைவி - உமாதேவி. வேள் - முருகன்.
15. குன்று - கிரவுஞ்சமலை. குறுமுனி - அகத்தியன். ஒன்றும் - பொருந்தும்.

16. கதி - மோட்சம். மதி - அறிவு. வியாழன் மாணாக்கன் - சூதமுனிவன்.

17. புதிய - வாடாத. பரிமகம் - அசுவமேதயாகம். வைகல் - நாள், காலம்.

18. நூற்சிகைத் தெளிவு - வேதநூல் முடிவின் தெளிபொருள் ஆகிய வேதாந்தம், பரசிவம். சகம் - உலகம். (தோன்றி மறைவது.)

19. சரோருகக் கிழவன் - பிரமன். காசியடிகள் - காசி விசுவநாதர்.

20. தலமுதல் மூன்று - தலம், தீர்த்தம், மூர்த்தி ஆகிய மூன்று கதிர்வேல் நம்பி - முருகக் கடவுள். அலைவு - துன்பம்.

21. கொண்டல் - மேகம். தென்பார் - தென்னாடு. துலைபெற - தராசுபோல சமனாதல் போல.

22. மூவகைச் சிறப்பு - மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகியவற்றின் சிறப்புகள். தானம் - இடம் ; சிவத்தலம்.

முத்தி மண்டபம் - காசியில் உள்ள ஒரு மண்டபம். சேவல்கள் - (காசிக்காண்டத்தில் காணப்படும் செய்தி) மாகனந்தன் ன்ற வேதியனும், அவன் துணைவியும் மக்களிருவரும் வேடுவரால் கொலை செய்யப்படுங்கால் காசியை நினைத்ததனால் கோழிகளாய்ப்பிறந்து காசியை யடைந்து, முத்தி மண்டபத்திலிருந்து தவம் செய்ததனால் முத்தியடைந்தனர். வடம் - ஆலமரம், கல்லாலமரம்.

23. சமாதி - தியான (அசைவற்று) நிலை. தெருட்டி - தெளிவுபடுத்தி.

24. தவம் - சரியை, கிரியை, யோகங்கள். அகத்தெளிதல் - ஞானம் பெறல். அரிதிற் பெறுங்கதி - அரிதாகப் பெறக்கூடிய வீடுபேறு. கழிந்த - மிகுந்த.

25. வித்தகன் - மேலானவன் ; முருகன்.

## தல விசேடம்

1. நாட்டம் - கண். தோடு - மதழ். ஈட்டம் - திரட்சி.

2. பொற்கமலம் - பொற்றாமரைத்தீர்த்தம். உலவா - அழியாத ; குறையாத. முப்புவனம் - சுவர்க்கம், பூமி. பாதலம்.

3. தருமதலம் - புண்ணியபூமி
4. புலியூர் - சிதம்பரம். அம்பலம் - பொன்னம்பலம்.
5. நிருமித்து - உண்டாக்கி.
6. தேவதேவு - தேவாதி தேவன். வதிந்தவர் - வசித்தவர்.
7. சுரந்தி - கங்கை. வரநதி - மேலான நதி. திரம் - உறுதி. புரன - புரம் (போலி)
8. ஏய்ப்பு - ஒப்ப. தேம் - தேன். ஓதனம் - சோறு. வழுத்தல் - சொல்லுதல்.
9. வாசபேயம், சோடச ஆகம். அக்கினிட்டோமம் - இவை அந்தணர் செய்யும் வேள்விகள். இராசசூயம் - இது அரசர் செய்யும் வேள்வி. தரிச பூர்ணம் - சிவனை மகிழ்விக்கும் செயல். இட்டி - செயல். பேறு - பயன்.
10. இமுது; - நெய். இவுளி - குதிரை. ஆன் - பசு. பழனம் - வயல். வள்ளல் - சிவபெருமான்.
11. காளிந்தி - யமுனை நதி. வாணி - சரசுவதி நதி. கன்னவேணி - கிருஷ்ணாநதி. பொருநை - தாமிரவருணி நதி. பாலி - பாலாறு. சங்கையில் - அளவில்லாத.
12. ஆசான்பன்னி - குருவின் மனைவி.
13. சாந்திராயணம் - ஓர் திங்கள் நாள் விரதம். கங்குல் - இரவு.
14. அட்டமி விரதம் - அட்டமி திதியில் சிவபெருமானை வேண்டி மேற்கொள்ளும் விரதம்.
15. சிவனிரா - சிவராத்திரி (விரதம்). ஊனம் - குற்றம். கால் - காற்று.
16. நான்மாடம் - நான்மாடக்கூடல் ; மதுரை. முட்டி - கையளவு உணவு. சோடசம் - பதினாறு.
17. வைகிய - தங்கிய. தானம் - தரும் ; தலம்.
18. முற்றிய பயன் - முடிவடைந்த பலன்.
19. வினையை வெல்பவர் - இருவினைகளை ஒழிக்க விரும்புவர்.
20. துலை - தராசு.
21. சமட்டி - விச்சாபுரம் ; சிவஞானம் முதலிய எல்லா ஞானங்களையும் தரும் நகரம். சமட்டி - நிறைவு. விச்சை - வித்தை ; ஞானம்.
22. இறும்பூது - வியப்பு. நயப்பாடு - நன்மை. சுவணப் புண்டரீகம் - பொற்றாமரைத் தீர்த்தம்.

23. வீட்டி - வீழ்த்தி. சாதம் - மெய். தமனிய முளரி - பொற்றாமரை. கனக சஞ்சம் - பொற்றாமரை.

## தீர்த்த விசேடம்.

1. கண்ணகன் குடுமி - இடம் நிறைந்த சிகரம். கடி - மணம் ; வாசனை.
2. ஆட்ட - திருமுழுக்காட்ட. கண்ட - உண்டாக்கிய.
3. அகளம் - அருவமாகிய சிவபெருமான். நிகளம் - பாசம் ; தளை. சகளம் - உருவத்திருமேனி.
4. செங்கண் ஏறு - தருமவிடை. கயலுண்கண்ணி. வாமத்தன் - உமையை இடப்பாகத்தில் கொண்ட சிவன்.
5. தேசு - ஒளி.ட உரகவேந்தன் - பாம்பசரன்; ஆதி சேடன். விபுதர் - தேவர். வேதன் - பிரமன். தன்திருநகர் - சிவலோகம்; திருக்கயிலாயம்.
6. ஆழி - சக்கரம். ஆழிவேந்து - சக்கராயுதன், திருமால். முனிவு - கோடம், வெறுப்பு.
7. வேத்திரப்படையோன் - திருநந்திதேவர். பாலம் - நெற்றி. நிரஞ்சன ! - களங்கமில்லாதவனே !
8. மை - ஆணவமலம். அறுநீர் - அறுத்தற்குக்காரணமாகிய நீர். இருமைப்பேறு - இம்மை மறுமைப் பயன். செய்ய - நல்க.
9. சார் - பக்கம். அண்டகடாகம் - அண்டகோளத்தின் பின்பகுதி.
10. புறம்பு - (சக்கரவாளகிரியின்) பின்பு. பேராழி - பெரும்புறக்கடல் - பௌவம் - கடல். பாணி - கை.
11. கண்ட - ஏற்படுத்திய. மன் - நிலையானது.
12. மருள் - அஞ்ஞானம்.
13. தர்பணம் - தென்புலத்தார் வழிபாடு. அம்மாடே - அத்தீர்த்தத்தருகில்.
14. குறி - திருவருட் குறி ; சிவலிங்கத் திருமேனி.
15. அனுஞை - கட்டளை ; உத்தரவு; அனாதி - ஆதியில்லாதது. தனக்கு முதலில் ஒன்றும் இல்லாதது.
16. செம்பொன் கஞ்சம் - பொற்றாமரை
17. காமியம் - விரும்பும் பொருள்.

18. மண்ணாதி - மண் முதலான ஒன்பதுவகையும், எழுவகைத் தளிரும், பஞ்சகவ்வியமாகிய ஆனைந்தும் ஆம்.
19. அவ்வியம் - பொறாமை.
20. வாருணம் - வருணனை நினைத்து நீராடுதல். ஆக்கினேயம் - அக்கினியை நினைந்து நீராடுதல், வெந்நீர் நீராடலும் ஆம். மந்திரம் - மந்திரங்களை உச்சரித்து நீராடுதல். நானம் (ஸ்நானம்) நீராடுதல்.
21. பவித்திரம் - புனிதம். பாவத்தைப் போக்கிப் புண்ணியம், வீடுபேறு தருவது.
22. ஆதரவு ; ஆதரம் - விருப்பம்.
23. ஞாங்கர் - பக்கம் ; கரை.
24. மறிந்திடும் - வற்றும். மறி - (ஆடு) சித்திரைமாதம். தேள் - கார்த்திகைத்திங்கள். கும்பம் - மாசித்திங்கள்.
25. தென்புலம் - முன்னோர் உலகம்.
26. சேவகம் - தொண்டு.
27. நித்தவேள்வி - தினம் தினம் செய்யும் தீவழிபாடு.
28. உம்மை - முன்பிறவி. செம்மைநன்னெறியில் நின்ற சித்தர் - முழுதும் நல்ல வழியில் ஒழுகிய சிந்தையினை உடையவர்கள், நல்ல ஒழுக்கமுடைய சித்தர்களுமாம்.
29. மதி கதிரோனிடத்து ஒடுங்க தினம் - அமாவாசை. அரவம் வாய் அங்காந்து கதிர்கள்தமை விழுங்கு தினம் - கிரகண நாள். விதிபாதம் - ஒருயோகம்.
30. தகர்த்திங்கள் - (ஆடுமாதம்) சித்திரை மாதம். துலாத்திங்கள் - ஐப்பசிமாதம். சுறவு - தைத்திங்கள். கனவத்தாள் அலவன் - பிளவு பட்ட காலையுடைய நண்டு ; ஆடித்திங்கள். இந்துவாரம் - திங்கட் கிழமை. மனு - மந்திரம்.
31. மகரமதி - தைத்திங்கள். வரையாமல் - தவறாது.
32. பொற்புண்டரீக தடகம் - பொற்றாமரைத் தீர்த்தம்.
33. வாவி - குளம். சிவகங்கை - சிவதீர்த்தம்.
34. அலகு - அளவு. இலகலால் - விளங்குதலால்.
35. இருமை - பெருமை. வெரு - அச்சம்.
36. பதுமம் - தாமரை. பரிபவ விழுமம் - துன்பம்.

28. புட்டில் - அம்பறாத்தூணி. புறம் - முதுகு. மறம் - வீரம். வட்டித்து - சபதங்கூறிச் சுழன்று. உரம்ஏறு - இடி.
29. ஏனம் - வராக அவதாரத் திருமால்.
30. கனம் - மேகம். குன்றி - குண்டுமணி. இக்கு - கரும்பு(ச்சாறு)
31. தோமரம் - பெரியஈட்டி. பிண்டிபாலம் - எறிபடை. கழுக்கடை - கைவேல். நாஞ்சில் - கலப்பை. களமர் - வீரம்.
32. எறிகின்றன - எறிபடை. ஒச்சுவ - விடுவன. எய்வன - வில்முதலியன. செறிகின்றன - குவிகின்றன. பறிகின்றனவும் - இறக்கின்றனவும்.
33. சிறைப்புள் - கருடன் விலங்கு ஊர்தி - ஐராவதம் முதலான வாகனங்கள். மானம் - விமானம். கருவி - அயுதம். காலனூர்தி - எருமைக்கடா. கொற்றவை - துர்க்கை. கொற்றவையுண்டது - துர்க்கை வதைத்த மகிடாசுரன்.
34. விச்சாதரர் - வித்தியாரர். ஊற்றம் - இடையூறு.
35. துங்கம் - உயர்ந்த. சிம்புள் - சரபம். சூறை - வாயு. பன்னகம் - பாம்பு.
36. கொட்புற்று - சுழன்று. வெட்புற்று - விரும்பி.
37. வீரக்கன்னி - அங்கயற் கண்ணி; தடாதகைப் பிராட்டியார்.
38. துண்டம் - துண்டாக. சாய்ந்து - புறமுதுகிட்டு. சாம்பி - வலிகெட்டு, தளர்ந்து, சோர்வுற்று.
39. சுற்றுந்தொடை - சுற்றிக்கட்டிய தும்பைமாலை. இகல் - போர். செற்றம் - கோபம். ஏறு - சிங்கம்.
40. உடையான் - சோமசுந்தரக்கடவுள். ஓதம் - அலை. நீத்தம் - கங்கை வெள்ளம். தெய்வப்படை - பாசுபத அத்திரம்.
41. ஆகவப்பார் - போர்க்களம். பாரிடவீரர் - பூதகணம். ஓவிலா - நீங்காத. பிணாமடங்கல் - பெண்சிங்ம். சேவகம் - வீரம்.
42. வலப்பாதி - சிவபெருமான்; பார்வதிக்கு இடப்பாகம் தந்து அதனால் அர்த்தநாரியானவர். (இடப்பாதி) எனில் பார்வதி
43. ஒல்கி - துவண்டு. கிளைத்து - கீறிக்கொண்டு.
44. மாற்றம் - பதில்; உரை. குழகன் - பேரழகுடையவன்.
45. மதுரைவிட்டுனை விடாதடுத்து வந்தனம் - மதுரையிலிருந்து தொடங்கி, சத்தனாயுள்ள தமக்குத் தாதான்மிய சத்தியாய் நிற்பதால் தொடர்ந்து வந்தேன். ஓரை

நன்று தொட்ட நாள் - திருமணவேளை நன்றாக உள்ள முகூர்த்த நேரம்.

46. ஆயஞ்சூழ - தோழியர்சூழ. புண்ணியநீத்தம் - புண்ணிய நதிகளான கங்கை முதலியன. மன்றல் - மலர் மணம்.

47. புது மணத்திறம் - திருமணச்செய்தி. கடிமுரசு - மணமுரசு.

48. கடி - காவல். முகிழ்ப்பு - மகிழ்ச்சி ; பரவசம்.

49. கோதை - பூமாலை. பூதி - புழிதி. தொடி - வளையல்.

50. மதிநாள் - சோமவாரம். ஓகை - மகிழ்ச்சி ; உவகை. உகம் - யுகம். கடி - திருமணம்.

51. பித்திகை - சுவர்த்தலம். பெட்புறுவார் - சிற்பநூலார். பெட்பு - ஆசை. தெற்றி - திண்ணை. வேதி - வேதிகை ; மேடை. பாலிகை - முளைப்பாலிகை.

52. மறுகு - வீதி. காவணம் - மணப்பந்தல், நடைப் பந்தல். கோள் - சூரியன் முதலான நவக் கிரகங்கள்.இறைகொண்டென - இடம்பெற்றிருப்பது போல. ஆடிகள் - கண்ணாடிகள். அரி - சூரியன். மத்திகை - குதிரைச் சம்மட்டி.

53. கோப்பு - கோவை.

54. ஓடை - யானையின் நெற்றிப்பட்டை. கலன் - சேணம்.

55. கலன் - ஆபரணம். பரிப்பார் - அணிவார். கண்ணாடி - கண்ணாடி. ஆகுல் - துன்பம், வருத்தம்.

56. பரி[illegible] - சிலம்பு. கொஞ்சிய கனிமொழி - குதலைமொழி. குரவை - குரவைப்பாட்டு. மருங்குறளாட - (மருங்குல் + தளாட இடுப்பு அசைய.

57. கின்னர மிதுனம் - இசையறியும் கின்னரப்பறவைகளின் ஆணும் பெண்ணும். கிளைகெழுபாண் - யாழிசையினையுடைய பாண[illegible]

58. சோபனம் - திருமணம். காசறை - மயிற்சாந்து.

59. தசும்பு - குடம். துள்ளியகவரி - வீசுகின்ற கவரி. மதலை - யானை. பலி - பிச்சை.

60. அங்கவர் - அந்நகரத்தவர். துழனி - ஓசை. பலி - பிச்சை. சபரி - பூசனை.

61. இணையிலி - ஒப்பில்லாதவன். எழில் - பொலிவு.

62. முகிலூர்தி - மேகவாகனன், இந்திரன். மருமாட்டி - வழித் தோன்றியவள்.

63. ஏழ:உயர்களிறு - ஏழுமுழம் உயரமுள்ள அரசயானை. சாய் - சாயல்.

64. போதி - போதிகை. துலாம் - விட்டமாக இடப்பட்ட உத்தரம். கல் - சந்திரகாந்தக்கல்.

65. துப்பு - பவளம். கோழ் - கொழுகொழுப்பு. தொத்து - கொத்து.

66. பித்தி - பித்திகை. சிறுசண்பகப்பூ. மாதவி - குருக்கத்தி. உய்யானம் - பூங்கா.

67. மேகலை - ஓமகுண்டத்தின் விளிம்பு. கேள்வி - ஆகமம். சீவற்சம் - பெண்குழந்தையை இடையில் கொண்டுள்ள ஒரு பெண் உருவம். சுவத்திகம் - மேழிவடிவம் அல்லது மண்டப வடிவம் ; மங்கலப் பொருள். பொறி - சித்திரம்.

68. தாரகை - நட்சத்திரம். விதானித்தார் - மேலே விரித்துக்கட்டினார்.

69. பாண்டில் - அகல். நாப்பண் - நடு.

70. அரி - சிங்கம். கதுவ - பொருந்த. எல்படு - ஒளி பொருந்திய. துகிர், துப்பு - பவளம். விடங்கம் - கொடுங்கை. பொற்ப - அழகுசெய்ய. நூல் - சிற்பநூல்.

71. அங்கம் - வேத அங்கங்கள். முதலெழுத்து - ஓம் எனும் பிரணவம். தவிசு - இருக்கை.

72. ஐவகை உணா - உண்ணல், தின்னல், நக்கல், பருகல், உரிஞ்சல்(குடித்தல்) ஆக ஐந்து வகை உணவு.

73. தென்னர் சேகரன் - மலையத்துவச பாண்டியன்.

74. சிங்களர் - ஈழ (இலங்கை) நாட்டினர். வில்லவர் - சேரர். நேரியர் - சோழர்.

75. கல்யாணர் - சாளுக்கியர். கடாரம் - பர்மா. துறை - வழி.

76. பைத்த ஆழி - பரந்து விரிந்த கடல். செழியர் - பாண்டியர்.

77. உழையர் - வாயில் காவலர். சந்தம் - அழகு.

78. புறவு - முல்லைநிலம். சலதி - கடல். நடைக்கலம் - மரக்கலம்.

79. ஏகநாயகி - ஒப்பற்ற தலைவி. ஞாட்பு - போர்க்களம். இரசதகிரி - வெள்ளிமலை கயிலைமலை - நாகநாயகன் - ஆதிசேடன். புணர்ப்பு - குறிப்பு. மகாநாயகன் - இந்திரன்.

80. திருமணச் சோபனம் - திருக்கலியாண விழா. பொள்ளென - விரைந்து.

81. இருமடங்கு அழன்றவர் - காலாக்கினி உருத்திரர். புடையுடுத்தவர் - மேற்சொன்ன பதின்ரையும் தனித்தனி சூழ்ந்துவரும் ஒவ்வொருகோடி உருத்திரர். ஆணை - ஆககினை. குறட்படை - பூதப்படை.

82. புத்தியட்டகர் - சூக்கும புவனாதிபதகிள் எட்டுபேர் நரகங்கள் பத்திரட்டி - இருபத்தெட்டுவகை நரகங்கள். கூர்மாண்டர் - கூஷ்மாண்டமுனிவர்.

83. பவர், பசுபதி யுருத்தரராதி அட்டமூர்த்திகள் - பவர், பசுபதி, உருத்திரர், சர்வர், ஈசானர், பீமர், மகாதேவர், உக்கிரர் ஆகிய பதின்மர் ஆடகர் - ஆடகேசுரர்.

84. பாலம் - நெற்றி. உருத்திரர் பதினொருவர் - 1. மகாதேவர், 2. அரர், 3. உருத்திரர், 4. சங்கரர், 5. நீலலோகிதர், 6. ஈசானர், 7. விஜயர், 8. வீமதேவர், 9. பவோற்பர் 10. கபாலி. 11. தேவதேவர் ஆகிய பதினொருவர். கங்காளம் - முதுகெலும்பு. துரகதம் - குதிரை. காரி - சாத்தன். ஞாளி - நாய். கேத்திரபாலர் - க்ஷேத்திரபாலர். அவை: மகாவைரவர், உக்கிரவைரவர், சண்டவைரவர், குரோதவைரவர், உன்மத்த வைரவர், கபாலவைரவர், பீஷண வைரவர், ஸாஹர வைரவர் ஆகியோர்.

85. வாசவானதி எண்டிகைப் புலத்தர் - அட்டதிக்குப் பாலகர்:- இந்திரன், அக்கினி, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் ஆக எட்டுத்திசைக்கும் உரியவர்கள். மருத்துவர் - அசவினி தேவர்கள் . அருக்கர் - சூரியர்.

86. மாதவன் - திருமால். சிறுமுனி - உபமன்யு முனிவர்.

87. எழுர் அன்னையர் - சந்த மாதர்கள். நிருதர் - அரக்கர்.

88. ஆண்டு - பிரபவ முதலான வருடங்கள் அறுபது. ஐம்பெரும்பூதங்கள் - மண், நீர், தீ, காற்று, விசும்பு ஆகியவை.

89. மந்திரம் - ஏழுகோடி மகா மந்திரங்கள். வன்னங்கள் - எழுத்துக்கள். சதுட்பாதம் - நான்கு பாதங்கள். எண்சித்தி - அணிமா, மகிமா, கரிமா, இலகிமா, பிராத்தி, பிரகாமியம், ஈசத்துவம், வசித்துவம் ஆகிய எட்டு சித்திகள். அட்டமாசித்திகள்.

90. ஆயிரம் - எண்ணில்லாத. அனிகம் - சேனை. ஆயிரம் சதம் - இலட்சம்.

91. சிவனுருத்தரித்தோர் - உருத்திரர். சாரூபர். அந்தந்தேரிடையாள் - (அ+தந்து+ஏர்+இடையாள்) அந்த நூல்போன்ற இடையினையுடையவள் ; மீனாட்சி.
92. பொடிப்பு - புளகம். திருமலை - திருக்கயிலாய மலை.
93. வேத்திரம் - பிரம்பு. தூளி - துகள். இரத்தினத் துகளில் சூரிய மண்டலமாகவும், கயிலை, சந்திர மண்டலமாகவும் கொள்க.
94. தந்திடு - அழைத்து வருக. தராதரம் - ஏற்றம் தாழ்வு. முண்டகம் - தாமரை.
95. தீர்த்தன் - சோமசுந்தரக் கடவுள். துளக்கியும் - அசைத்தும். கண்டன் - திருநீலகண்டன், சொக்கேசன்.
96. அளகை நாயகன் - அளகாபுரிக் குபேரன். இருவரும் - பிரமனும், திருமாலும்.
97. ஏந்து - மிக்க அழகுடைய, ஞாண் - அரை ஞாண். குஞ்சி - ஆண்மயிர். சிகழிகை - மாலை. சிகழிகை - மாலை.
98. செஞ்சுடர் - சூரியர்கள். மருண்ட தேவர் - மயங்கிய பிரம் விட்டுணுக்கள். கண்டிகை - (இங்கு) முத்துமாலை.
99. கலம் - மரக்கலம். பிறந்தாரம் - (பிளந்த + ஆரம்) மாணிக்கமாலை.
100. நக்க - உண்ட. அங்கதம் - வாகுவலையம். பவித்திரம் - மோதிரம்.
101. பொலந்துகில் - பீதாம்பரம்; பொன்னாடை. கொடுக்கு - (கொசவம்) கொய்சகம். இருநிதிக் கோமகன் - சங்கநிதி, பதுமநிதி ஆகிய இரண்டு நிதிகளுக்கும் உரிய குபேரன்.
102. சங்கை - திருவுளம். சரணம் - திருவடி.
103. கொளை - இசைப்பாட்டு. பூங்கொம்பர் - பூங்கொம்பு ; பூக்கள் நிறைந்த கிளை.
104. துங்கமாய் - அதிகமாய். சிரங்கள் ஆயிரந் திண்டோள் அங்கம். ஆயிரமாயிரம் உடையவன் - பாணுகம்பன்.
105. மாயவன் போக்கும் புணர்ப்பு - விட்டுணுவினால் உணர்த்தப்பட்ட உபாயம் எனப் பொருள் கொள்வர்; அது விட்டுணு புததனாய்ப் பிடகம் போதித்துத் திரிபுரர் முதலியோரைச் சிவபூசை கைவிடச் செய்தமையாம். வாணன் - வாணாசுரன். தூக்கு - பாடல்.
106. துனிவு - துன்பம். கணர் - கண்ணர்(இடைக்குறை)
107. மெல்லிலை - வெற்றிலை. ஈசன் - ஈசானன். மருத்துக்கோ

- வாயுதேவன். ஒலி - பொலிவு. கோடிகம் - பூந்தட்டு.

108. தண்டி - தண்டத்தையுடைய இயமன். காஞ்சுகர் - கஞ்சகம் எனப்படும் சட்டை அணிந்தவர். பணாடவி - ஆதிசேடன். உரகர் - நாகர். சுருதிநாயகன் - வேதமுதல்வன்.

109. பிறைக்கீற்று - பிறையாகிய பிளவு. தூங்க - மிகவும். செம்பங்கி - சிவந்த மலர். குழை - குண்டலம்.

110. எகினன் - அன்னப்பறவை. உளர் - வீசுகின்ற. உவணம் - கருடன்.

111. கண்ணுதற்பிரான் மருங்கு இரு கடவுளர் - இது. ஏக பாத திரிமூர்த்தி உருவமாகும். இருகடவுளர் - பிரம்மா, திருமால்.

112. பந்தம் - வேதத்தின் உருப்பு. வடபால் - வடமொழிப் பாடல். சுந்தரன் - சுந்தரமூர்த்திகள்.

113. சேனன் - கருடன். வன்னம் - வண்ணம், நிறம். பொன்ன - (பொன் + ந) பொன்னிறமுடைய சிறந்த.

114. செங்கண்மால்விடை திருமாலாகிய இடபவாகனம். சிவந்த கண்களையுடைய பெரிய இடபம். புராணன் - பழமையானவன்.

115. கண்ணினுக்கினியான் - பார்வைக்கு இனியவன், சோமசுந்தரக் கடவுள். உரின் - நகரைக் காட்டிலும்.

116. நகில் தழை பொலங் கொம்பன்ன மகளிர் - பேதை நீங்கலாக ஏனைய பெதும்பை, மங்கை, புடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் என்போர். நகில் - முலை. ஆயம் - கூட்டம்.

117. தேத்து - தேயத்து. சங்க - சங்குவளையல். விம்ம - ஒலிக்க.

118. கமலக்காடு - தாமரைக்காடு ; இங்க முகம், கண், வாய், கை, தொப்புள் (உந்தி), பாதம் ஆகியவற்றைக் குறித்தது. கருணைவாரி - கருணைக்கடல், சொக்கேசன்.

119. அம்கடி - அழகிய விளக்கம் அமைந்த. வதுவை - திருமணம்.

120. தென்னவர்- மலையத்துவச பாண்டியன். கன்னி - தடாதகைப்பிராட்டியார். காளை - சொக்கநாதர் (உவமையாகுபெயர்)

121. நலன் - அழகு. துங்கம் - உயர்வு ; மதிநூல் - அறிவுநூல். சூழ்ச்சி - ஆலோசனை.

122. நலன் – அழகு. துங்கம் – உயர்வு ; மதிநூல் – அறிவுநூல். சூழ்ச்சி – ஆலோசனை.

123. சாந்து – சந்தனக்குழம்பு. மாரன் – மன்மதன். வாளி – மன்மத பாணம்.

124. நீலத்தாரும், வெண்ணகையரும்பு முல்லைத் தாமமும் வெறுத்து வீழ்ப்பர் – நீல மலரும், முல்லைமலரும் மன்மத பாணங்களுள் கொடுமை செய்வன. அதனால் பெதும்பைப் பெண்கள் அவற்றை வெறுத்து அவர்கள் வீழ்த்துவர்.

125. காமன் கணை – தாமரை, மாம்பூ, அசோகு, முல்லை, நீலம் (நீலோத்பலம்) என்ற ஐந்து பாணங்களும் பஞ்சபாணம் எனப்படும்.

126. பசப்பு – காமநோயினால் ஏற்படும் பசலை (தேவல்)

127. புங்கவன் – சோமசுந்தரக் கடவுள். அயிர்ப்பார் – ஐயுறுவார். அங்கு – அசை.

128. கலை – ஆடை. கருத்து – மனம். அலை – கங்கை.

129. நட்டவர் – நட்பினை உடையவர் (நள்:பகுதி) இடுக்கண் – வறுமை, துன்பம். தொடி – வளையல்.

130. நகைப்போது – (பற்கள் போன்ற) முல்லைமலர். நோக்கப் போது – கண்களாகிய தாமரைமலர். வேளின் மன்னன் – வேள் எனும் மன்மதன். புரம் – உடல்.

131. உழை – மான். ஊற்றம் – பரிசம். இழை – நூலிழை.

132. வார் – கச்சு. கார் இரும்பு – கருமையான இரும்பு.

133. சேந்தான் – சிவந்தான். பூசல் – சண்டை.

134. தெரிவை – பெண். மதன் – மன்மதன்.

135. கவனம் – வேகம். ஓவத்தொழில் – ஓவியத் தொழில்.

136. ஞானப்புலத்தவர் – மெய்யறிவுடையார். தையல்மாது – அழகிற் சிறந்த பெண். இடம் – இடப்பாகம். வடிவா – திருவுருவாகவே.

137. பெற்றம் – இடபம். காலில் – காற்றைப் போல. பாசம் – கயிறு. காஞ்சி – அணிகலன்.

138. விதுக்கலை – சந்திரகலை. புதுக்கலை – புத்தாடை. புரி – விருப்பம். முதுக்குறைவு – பேரறிவு.

139. பைந்து – ஒளிபரவி. மாண – மாட்சிமைப்பட. மண்பாவை – சுதையாற் செய்த பொம்மை.

140. அன்பு அட்ட புரம் - சிவப்பறறொழிந்த முப்புரர். ஐய - இடைச்சொல்.

141. நந்தி அடிகள் - நந்திதேவர். தார் - இங்கு கற்பகமாலை.

142. பூசுரர் - அந்தணர். பன்னியர் - மனைவியர். நீராசனக்கலம் - ஆரத்தித்தட்டு.

143. நெய்யில் பூத்த - நெய்யில் ஏற்றிய. பதுமம் - தாமரை. மிணையை நீக்கி இணைக்கயல் என்பதும் உண்டு.

144. துப்புரவு - உறுதி. இயங்கள் - வாத்தியங்கள்.

145. சுவத்தி - மங்கல வசனம் (இருவர் மாறி மாறி ஓதுவது)

146. பாதுகை - திருவடி. பாசவல்வினை - ஆணவமாகிய வலிய கட்டு.

147. நடைப்படாம் - நடைபாவாடை. போது - மலர். நீத்தம் - வெள்ளம். ஐயன் - சொக்கேசன்.

148. மங்கல மகளிர் - சுமங்கலிகள். பெய்து - தெளித்து.

149. நாள்மலர் - அன்று அலர்ந்த தாமரை. நீவி - துடைத்து.

150. திரு - செல்வம். கன்னித் தேயம் - பாண்டியநாடு. உள்நனை - புன்னகை.

151. அருத்தம் - பொருளமைந்த. அரிமணித்தவிசு - சிங்க ஆசனம். திருத்தக - சிறப்புமிக்க.

152. ஞாலச் செல்வி - பூமிதேவி. பரித்தனர் - தங்கினள். பௌவம் ஏழும் உண்டவன் - கடல் ஏழையும் உண்ட அகத்தியன். உத்தரம் - வடக்கு.

153. ஓரை - முகூர்த்தம். தமனியமலர்க் கொம்பு - பொன்னாலான பூங்கொம்பு. காமர் - அழகு.

154. மாசு - ஆணவம் முதலான குற்றங்கள். நானம் - கத்தூரி.

155. நுண்தூசு - மெல்லிய ஆடை.

156. செம்மலர்த்திரு - இலக்குமி. வெள்ளைச் செழுமலர்-கலைமகள். திரு - கண்டோரால் விரும்பப்படும் கருணைப் பார்வை.

157. முகடு - உச்சி. அட்டி - பூசி, சொரிந்து. பாதசாலம் - காலணி.

158. விரிசிகை, கலாபம், பருமன், மேகலை, காஞ்சி - இவை பழங்கால அணிகலன்கள்.

159. மணி - நீலமணி. ஆழி - மோதிரம். யாப்புக் கடகம் - தலைப்பூட்டு (கொக்கி) உள் கடயம். எல் - சூரியன்.

160. வித்துருமம் - பவளம். ஆரத்தாமம் - முத்துமாலை. வரைபடும் - மலையினின்றும் ஓடிவரும்.

161. உடு - நட்சத்திரம். காசு - இரத்தினம். கோள் - திங்கள் முதலான எண் கிரகங்கள். கதிர் - சூரியன்.

162. கோள் - வலிமை. சுறாஏறு - மகரமீன் ஆண். தொடிமதி - வட்டமாகிய சந்திரன். மந்தணம் - இரகசியம். வடி - நீட்சி கொண்ட, நீண்ட . வாள் - ஒளி.

163. இலம்பகம் - நுதலணிமாலை. மைந்தன் - உக்கிரகுமார பாண்டியன். தளை - விலங்கு. தகரஞாழல் - தகரமும் ஞாழலும் சேர்ந்த மயிர்ச் சாந்து.

164. பொற்ப - அழகு செய்ய. அமயம் - சமயம், மணவேளை. சொற்கலையாள் - சொல்கிழத்தி, கலைமகள். பூவின் கிழத்தி - திருமகள்.

165. இருகை - இரண்டு பக்கம். அறம் எலாம் - அறங்கள் முபத்திரண்டும்.

166. தூரியம் - வாச்சியம்; மணமுரசு. செல்வம் - பொலிவு.

167. சுந்தரி - இந்திராணி. விந்தை - வீரலட்சுமி. பொற்கோல் - பொன் பூணிட்ட பிரம்பு. உடுத்த - சூழ்ந்த.

168. ஊர்ப்பசி - உருப்பசி, ஊர்வசி. மணிக்காசு - இரத்தினம்.

169. போது - மலர். வடி - வடித்த. பூம்புகை - மணம்மிக்கபுகை, தூபம், சாம்பிராணி.

170. தோடு அவிழ் - இதழ் விரிந்த மலர்களைத் தரித்த. ஓதியர்- கூந்தலையுடைய பாடல் மகளிர். படம் - நடைப்பாவாடை.

171. தேவி - தடாதகைப் பிராட்டியார். ஆக்கம் - செல்வம்.

172. பில்கி - நிறைந்து. மெல்கி - மென்மைக்குணத்தோடு. எருத்தம் - கழுத்து, பிடரி.

173. அல்பக - இருள்கெட. எல்பகல் - சூரியன். கதிர் - ஒளி. வரை - மேருமலை. காமருவல்லி - காமவல்லிக்கொடி.

174. தண்மை - குளிர்ச்சி. கேழ் - நிறம். அண்ணல் - சோமசுந்தரக்கடவுள்.

175. பண்ணுள் இசை கலந்து இருத்தல் போல சிவபரம் பொருள் எங்கும் அத்துவிதமாய் இருத்தலின் 'பரந்து' என்றும், தேவர்முதல் மண்ணுலகத்தார் வரை யாவரும் பேதமின்றித் திருமண மண்டபத்தில் நிறைந்திருத்தலின் 'அடியின் நீழல் கலந்துளார் தம்மை ஒத்தார்' என்றார்.

176. ஆழிஅம் கை அண்ணல் - திருமால். ஆடல் சேவடி - நடனமாடிச் சிவந்த பாதங்கள். கோட்டி - சுழற்றி.

177. ஆதிவேதியன் - சோமசுந்தரக்கடவுள். கணத்தவர் - சிவகணத்தார்.

178. ஆதி - சொக்கேசன். கரகநீர் மாரி பெய்தான் - கமண்டலத்திலுள்ள நீரால் தாரை வார்த்தான்.

179. தொடு கடல் - (சகார்) தோண்டிய கடல்.

180. புத்தனார் - சாக்கிய நாயனார். முத்தவாலரிசி - முத்தினை யொத்த வெள்ளை அரிசி.

181. ஆற்றநாள் - நீண்டநாள். தமியர் - தனித்தவர், பிரிந்தவர் மும்மை ஞாலம் - மூன்று ஞாலம், சுவர்க்கம் - பூமி, பாதலம் ஆகிய மூன்று.

182. காமரு சுரபி - அழகிய காமதேனு; கற்பக நிழலில் இருக்கும் காமதேனு. காமருசுரபி - காமம்வரு சுரபி - விரும்பம் வருகின்ற சுரபி எனலுமாம். கற்பகக்கனி - வாழைக்கனி. கன்னல் - கரும்பு; சர்க்கரை. பாசனம் - உண்கலம்.

183. அட்டமூர்த்தி - நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆன்மா ஆகிய எட்டு உருவாயமைந்த அருள் வடிவம். புங்கவர் - தவமுனிவர். கற்பின் மகளிர் - ஏழு முனிவர்களின் மனைவியர்.

184. மாக்கடி - மணம்மிக்க. முளரி வாணன் - பிரமன். வாழ் + நன் = வாணன். மைந்தன் - சாதகர், சனகர் முதலியோர். துடுவை - தீவளர்க்க உதவும் சிருக்கு சிருவம். ஆர்த்தி - நிரப்பி. அகடு - வயறு.

185. கரைந்த - கூறிய. பற்றிலார்கே - அகப்பற்று. புறப்பற்று - ஆகியவை விட்ட சியோகிகளுக்கே.

186. இணர் - நெருங்கிய. உணவு - தேவர் உணவு, அவிசு. ஒருவன் - ஒப்பற்ற சொக்கலிங்கப் பெருமான்.

187. பன்னி - மனைவியாகய தடாதகைப்பிராட்டியார். படிவு - வடிகம், திருவுருவம்.

188. பரிபுரம் - சிலம்பு. சிலம்ப - ஒலிக்க. புங்கவன் - சோமசுந்தரக் கடவுள். மனு - மந்திரவிழி. வசிட்டன் தேவி - அருந்ததி.

189. வேள்வி வினை - தீவளர்த்தல் முதலான திருமணச் சடங்குகள் மணவறை - மணமேடை.

190. கனிதரு கருணை நாட்டம் - முதிர்ந்த அருட்பார்வை.

191. இடர் - பிறவித்துன்பம். தலைத்தலை - இடங்கள் தோறும். கான் - காடு, இடுகாடு. ஊன்இடர் அகலும் நாள் - பிறவித்துன்பம் ஒழியும் நாள்.

192. சேக்கை - சிங்காதனம். தணவு - நீக்கம். சாறு - திருமணவிழா.

193. ஆட்டுவான் - பரதநூல் முறைப்படி ஆட்டுகின்ற நட்டுவன். ஐயன் - சொக்கேசப் பெருமான்.

194. பொதி - அரும்பு ; கட்டு. அராக்கலன் - பாம்பு ஆபரணம். கடுக்கை - கொன்றைமலர். அகள் - தோல்.

195. விடங்கம் - அழகு. குருதி - உதிரம். பண்டைய வடிவம் மாறி - தெய்வ உருவத்தினின்றும் மாறி அரசப் பணி செய்தற்கேற்ற உருக்கொண்டு. பார்த்திபன் பணி - அரசு செலுத்தல்.

196. மறை ஆறு - வேத நெறி. (ஆறு - வழி) தானும் - சோமசுந்தரக் கடவுளும். சொன்னது - திருவாய் மலர்ந்தது.

197. மெய்ம்மைநூல் - சிவஆகமம். குறி - சிவலிங்கம், சொக்கலிங்கம். நன்மை நல்கும் இறை - இது தாபித்த (பிரதிட்டை செய்த) சிவலிங்கத்தின் பெயர்.

198. மூவர் - பிரமன், திருமால், உருத்திரன் எனும் மும்மூர்த்திகள். தாவரலிங்கம் - பரார்த்த லிங்கம், சிவபெருமான் எப்போதும் எழுந்தருளியிருந்து ஆன்மாக்களுக்கு அரள்பாலிக்கும் இலிங்கம்.

199. தெவ் - மாறுபட்ட. ஐயங்களைக்காளை - மன்மதன் .அனித்தம் - அழியுந்தன்மை. நித்தம் - நிலையுடைமை.

...

## 6. வெள்ளியம்பலத் திருக்கூத்தாடிய படலம்

1. உலகு இயல் - அறநிலை யறம், மறநிலையறம், அறநிலைப் பொருள், மறநிலைப் பொருள், அறநிலையின்பம், மறநிலையின்பம் ஆக உயர்ந்தோர் வகுத்தவை. முனிவர் இருவல் - பதஞ்சலி, வியாக்கிரபாதர்.

2. வேட்டல் - மணத்தல், கவுரியன் - சவுந்தரபாண்டியன்.
3. புனிதநீர் - பொற்றாமரைத் தீர்த்தம். நியமம் - அன்றாட - (கடன்கள்) செயல்பாடுகள். அம்பலம் - பொன்னம்பலம்.
4. தில்லைப்பொன்நகர் - சிதம்பரம். உலகபுருடன் - விராட்புருடன். உள்;எம் - இதயத்தானம் -இந்நகர், மதுரை. ஏனை அங்கம் - (விராட்புருடனுடைய) மற்ற உறுப்புகள். மன்னர் - சோமசுந்தரக்கடவுளாகிய சவுந்தரபாண்டியன்.
5. அரைக்குமேல் - இடைக்குமேல். வரை - அளவு.
6. மூலம் - மூலாதாரம். குய்யம் - மறைவிடம் ; சுவாதிட்டானம். இதயம் - அனாகதம். கண்டம் - விசுத்தி. புருவமத்தி - ஆக்கினேயம்.
7. கறை அறு - குற்றமற்ற.
8. விடை - இடபஊர்தி. மன்று - வெள்ளியம்பலம் ; மதுரை. பொது - அம்பலம்.
9. ஆங்கு - போல. பீடிகை - இருக்கை.
10. உம்பர் - மேல். பின்முதல் - பின்னும் முன்னும்.
11. மொந்தை - ஒரு வாத்தியம். தண்ணுமை - சிறுமத்தளம். முழவம் - பெரியமத்தளம். கந்தருவநூல் - இசைநூல். ஐந்து துந்துபி - தோற்கருவி, துளைக்கருவி, கஞ்சக்கருவி, நரம்புக்கருவி, மிடற்றுக்கருவி ஆகிய ஐந்து. ஆர்கலி - கடல்.
12. மது - தேன். விதுமுகம் - சந்திரமண்டலம். மீன் - நட்சத்திரம். பொதுமுகம் - அம்பலம்..
13. உளை - புறமயிர். குறளன் - குட்டையான முயலகன். வடவை - வடவாமுகாக்கினி, கடலின் நடுவில் உள்ளது. முருங்கு - முருக்கு; அழிக்கும். அடல் - வலிமை. எரியில் - வடவை அக்கினிபோல.
14. தெய்வப்பெண்கள் - திருமகள் முதலானோர்.
15. செக்கர் - சிவந்த. உரகம் - பாம்பு. எயிறு - ஆதி. வராகத்தின் தந்தம் (கொம்பு) நங்கை உமாதேவியார்.
16. அலம்பும் - ஒலிக்கும். மந்திரவேதம் - மந்திரங்கள் நிறைந்த வேதம். எரி - மழுவாயுதம்.
17. அமலன் - மலமலையான்; கடவுள். ஆயிரம் - அநேகம் பரமானந்தப் பாவை - பேரின்பக்கடல்.
18. மோனம் - மோனநிலை. கிம்புருடாதிப் புலவர் - கிம்புருடர்

முதலான இசைநூல் வல்ல தெய்வப் புலவர்கள்.

19. அனந்தன் ஆம். முனிவர் வேந்தன் - ஆதிசேடன் அவதாரமாகிய பதஞ்சலி முனிவர்.

20. பராபரம் - அனாதியாயுள்ளது. கராசலம் - (கரம் + அகலம்) கைம்மலை + யானை. நிராமயன் - நோயில்லாதவன்.

21. ஒன்று - (சகளமும், நிட்களமும், சகளநிட்களமும் கடந்துநின்ற) கடவுள். ஐந்து உரு - பரசிவன், அனாகதசிவன், சதாசிவன், மகேசன், உருத்திரன் என ஐந்து மூர்த்திகள். ஐயைந்து - சந்திரசேகரர் முதலான இருபத்தைந்து மூர்த்திகள்.

22. அடியரேம் - அடியார்களாகிய நாங்கள். கயல்விழி - அங்கயற்கண்ணம்மையார். பாகம் - கிடப்பாகம்.

23. மறைமுதல் - வேத முதல்வன்; சோமசுந்தரன். வேட்டது - விரும்பியது.

24. இந்நிலை - இந்த வெள்ளியம்பலம். கன்னிநாடு - பாண்டிநாடு. பேறு - பயன்.

25. அராமுனி - பதஞ்சலி முனிவர். தராதலம் - பூமி. தனிக்கதி - மேலான சிவகதி, பரகதி.

26. அலர் பூ - மலர்ந்த மலர். புல்லுதல் - தழுவுதல். பரவி - வணங்கி.

27. இருள் - சகசமலமாகிய அணவம். குனித்த வண்ணம் - ஆடிய திருக்கோலம்.

28. வில் - தனுர்மாதம் எனப்படும் மார்கழி. குனிவில் - சோடித்த வில் - மார்கழி, ஆதிரை - திருவாதிரை நட்சத்திரம் - ஆடக முளரி - பொற்றாமரைத்தீர்த்தம்.

...

## 7. குண்டோதரனுக்கு அன்னமிட்ட படலம்.

1. பன்னகேசன் - பதஞ்சலி முனிவன் - புலிப்பாதன் - புலிக்கால் முனிவன், வியக்கிரபாதன். பசி தழல்சுட - பசியாகிய உதராக்கினி சுட்டு வருத்த. தொலைத்த - சாப்பிட்டு ஒழித்த.

2. மின் இயல் - மின்னலைப்போல விளங்கும். கலம் - உண்கலம். போனகம் - திருவமுது. அருத்தா - உண்பித்து.

3. பழுக்காய் - பாக்கு. ஏனவும் - பிறவற்றையும் ; மலர்முதலிய விறவற்றையும்.
4. மடை - சோறு. அட்ட - சமைத்த. முன்குருகா - முன்சென்று.
5. உணங்ககின்றது - வாடுகின்றது. எனைத்து - எவ்வளவு.
6. அடைகல் - பக்கமலை - சிமையக்குன்று - உச்சியையுடைய சிறிய குன்றுகள். அரி - அரிசி.
7. ஒன்றும் அன்பு - ஒத்த அன்பு. பாரிடத்தலைவன் - பூதகணங்களுக்குத் தலைவன் ஆகிய குண்டோதரன்.
8. மீனவன் - மலையத்துவச பாண்டியன். அரும்பெறல்.
9. விருந்து - விருந்தினர்களிக்கும் உணவு. தவளம் - முல்லை. மூரல் - பற்கள்.
10. அகடு - வயிறு. வடவை (ஆய்) வடவாமுகாக்கினி போல மடுக்க - குடிகொள்ள் தக்க. ஆலம் - நஞ்சு. உயங்கல் - வருந்துதல்.
11. குறியதாள் குறள் - குட்டையான கால்களையுடைய பூதமாகிய குண்டோதரன் சோறும் - சொல்லுவாம்.
12. படைக்கண் ஏவலர் - வாட்படை போலும் கண்களையுடைய ஏவல் செய் மகளிர். சொன்றி - சோறு. அடிசில் - சோறு.
13. இரிந்தார் - ஓடினார்.
14. முரவை - உமி நீங்குமுன் அரிசியிலிருக்கும் சிவந்த நிறம். மூரல் - வெள்ளைச்சோறு. பால்வறையல் -பால் சேர்த்துச் சமைத்த வெள்ளைத் துவட்டல். கருனை - பொரிக்கறி. துவை - துவையல். இழுது - வெண்ணெய்.
15. பண்ணியம் - பலகாரம். கன்னல் - சருக்கரை. மெல்சுவைத்தண்டு - கரும்பு. வல்சி - உணவு. நவபண்டம் - நவதானியம்.
16. பாரித்துள்ள - நிறைந்துள்ள. துடவை - சுருக்கு, சுருவம் - (தீவளர்க்க உதவுவது) கோரித்து - அதிகரித்து, கொடுமையுற்று.
17. அலங்கல் - பூமாலை. சுவல் - பிடரி. ஒல்கி - துவண்டு. கிளைத்து - (பெருவிரலால் கீறி)
18. சில் - சிலவாகிய வட்டத்தகட்டுஅணி. நிமிலை - தடாதகைப்பிராட்டியார்.
19. பசி அடங்கிடா - தீப்பசி அடங்கவில்லை. அதனால் - அக்காட்சியளவையினால்.

20. குறள் மகன் - குண்டோதரன். முழை - மலைக்குகை.
21. நட்டம் - திருநடனம். பனிவரை - பனிமலை, இமயமலை. காத்துவது - எரிகின்றது.
22. கையர் - வஞ்சகர். முப்புரம் - திரிபுரம். பொய்யனேன் - மெய்யன்பிலாதேன்.

...

### 8. அன்னக்குழியும் வைகையுமழைத்த படலம்

1. பாரிட - முறையிட. அமையா - வயிறு நிரம்பாத. ஓதினாதிகள் - சோற முதலியன. உவை - அன்னம் முதலியன. (சுட்டுப்பொருள்)
2. பவனம் - காற்று. மலையாட்டி - பொதிகை மலைக்கரசி; தடாதகைபிராட்டியார். தவனம் - நீர்வேட்கை. புவன அன்ன மாது - உலகத்தாருக்கு உணவளிக்கும் அன்னபூரணி.
3. நனந்தலை - நடுவிடம். கிடங்கர் - குழி. வால் அரிப்பதம் - வெண்மையான அரியால்சமைத்த சோறு.
4. குரு - நிறம். பேழ்வாய் - பிளந்தவாய்.
5. தயிர்ப்பதம் - தயிர்ச்சோறு. பழவினை - ஊழ்வினை, சஞ்சிதவினை.
6. நீள் உப்பு - நெட்டுயிர்ப்பு; நீண்ட மூச்சு. வேட்டு - விரும்பி.
7. காவி - நீலோற்பலம். வாவி - நடைவாவி, படியில் நடந்து செல்லுங்கிணறு. கூவம் - கிணறு.
8. நசை - விருப்பம். இனைய - விழுந்து வருந்த. நனைய - தேனையுடைய.
9. திரை மாலிகைச் செல்வி - அலைகளை மாலையாக உடைய கங்கை (விளி). வாங்குநீர்த்தடம் - வளைந்த அகழி. மாடு - பக்கம்.
10. எம்பிரான் - சோமசுந்தரக் கடவுளே ! (விளி).
11. உருகித்து - இன்ப ஊற்றெடுத்து. விச்சை - சிவஞானம். விரிசித்து - எங்கும் நிறைந்த அறிவுப்பொருள்.
12. இழிபவள் - கங்கை (பகீரதன் பொருட்டு இறங்கினவள்)
13. அறல் - கருமணல். விரை - இயற்கை மணம். மடவரல் - கங்கை.
14. பொரி அரை தீமில் - பொருக்குப் பொருந்திய

அடியினையுடைய வேங்கை மரம். இறவுளர் - வேடர், குறிஞ்சி நில மக்கள். சிறுகுடி - சீறூர் (சிறிய ஊர்)

15. பிணை - பெண்மான். கலை - ஆண்மான். பிடி - பெண்யானை. பழுவம் - காடு; பழுத்தலுமாம். பணை - அரசமரம்; மரக்கிளை. முசு - ஆண்குரங்கு. பறழ் - குட்டி. இதண் - பாண். ஒடுக்கள் - எண்ணிடைச்சொல்.

16. திடர் - மேடு. மழை - மேகம். படுகடல் - ஒலிக்கின்ற கடல்.

17. இப்பாடல் - ஆற்றுக்கும் யானைக்கும் சிலேடை. பிளிறல் - ஒலித்தல்; வீறிடல். முதுரம் - ஆலமரம் ; முதிர்ந்த மரம். வெளில் - விளாமரம் ; கட்டுத்தறி. மதம் - வலிமை ; மதநீர். அளி - குளிர்ச்சி ; வண்டு. முகபடம் - போர்வை ; நெற்றிப்பட்டம். குடிளை - கங்கைநதி.

18. இது ஆற்றுக்கும் பாம்புக்கும் சிலேடை. பிலம் - பாதலம் ; பிலத்துவாரம். ஆடிய - அசைகின்ற ; ஆடுகின்ற. மணிதலையின் - மனிகளைத் தம்மிடத்தே கொண்டன; மணிகளை (த்தலையில்) சுடிகையில் உடையன (நாகரெத்தினம்). கோடிய- வளைந்த. காலின் - கால்வாய்களின், கால்களின். உரகம் - பாம்பு.

19. வளை - சங்கு. கருமா - பன்றி ; வராக மூர்த்தி. அவுணர்கள் இறை - மாவலி மன்னன. நெடுகும் அண்ணல் - வாமனமூர்த்தி. அளை - தயிர்.

20. குடபுலம் - மேற்குத்திசை. நெறி -ஆணை. பதி - மதுரை. அரசு - பாண்டியன். குடபுலவரசன் - சேரன்.

21. ஆர் - ஆத்திமாலை. அரம் - ஒருகருவி. தமிழ்பயில். அரசர் - சேரசோழ பாண்டியர். மூவேந்தர்.

22. இப்பாடல் கவிக்கும் நதிக்கும் சிலேடை. மாண்ட - மாட்சிமைப்பட்ட (மாண்:பகுதி) துறை - அகப்பொருட்டுறை. புறப்பொருட்டுறை ; நீர்த்துறை. பயன் - அறம், பொருள், இன்பம், வீடு எனும் நால்வகைப் பயன்கள்; பிரயோசனம். இறுத்தல் - நிலை பெறுத்தல்.

23. பாட்டின் பொருளானவன் - சோமசுந்தரக் கடவுள். ஓதம் - கடல். விண்டு - திறந்து. ஞாங்கர் - பக்கம்.

24. குறுங்கை - சிறியகை. அங்காந்து - அண்ணாந்து; வாயைத்திறந்து. விடாய் - தண்ணீர்தாகம்.

25. சுவர்ந்து - மிகுந்து. பார்த்தன் - அருட்சுனன். அளவாத - அளவிலாத.

26. பாட்டு - சொல்; இது சத்திவடிவம். பொருளானவன் - பொருள் வடிவான சொக்கலிங்கப் பெருமான். கிழமை - உரிமை. மோட்டின் புனல் - கடல். (மோடு - பெருமை).

27. தீர்த்தன் - தூயவன் ; சோமசுந்தரக் கடவுள்.

## 9. எழுகடலழைத்த படலம்.

1. முடங்கல் - வளைவு. மடங்கல் - நரசிங்கமூர்த்தி ; இயமன். கவரந்தான் - சொக்கேசன். (விளையாலணையும் பெயர்) பொன்மாலை - காஞ்சனமாலை.

2. அறம் - தருமநூல். போதம் - ஞானநூல். இருடிகள் - அகத்தியர், ஆங்கீரசர், கௌதமர், காசிபர், புலத்தியர், மார்க்கண்டேயர், வசிட்டர் ஆகிய ஏழு ரிஷிகள்.

3. தலைப்பட்டு - சந்தித்து. திறம் - பாகுபாடு.

4. பொறி - ஐம்பொறிகள். மறைச் சென்னி - உபநிடதம்.

5. திறல் - வெற்றி. அவனி - பூமி.

6. மானதம் - மனதாள் செய்வது. வாசிகம் - வாக்காற் செய்வது. காயிகம் - காயத்தாற் செய்வது. தருமம் - முப்பத்திரண்டு அறங்கள். தானம் - தக்கார்க்கு அளிப்பது.

7. பஞ்சமனு - பஞ்சப்பிரம மந்திரங்கள். சாந்தி - உபநிடதம். சதஉருத்திரம் - நூறு உருத்திர மந்திரங்கள்.

8. பணி - திருப்பணிகள். திருத்தன் - தீரத்தன் ஆகிய சொக்கேசன். ஆடல் - மூழ்குதல்.

9. திருத்தம் - கங்கை ; சிவபெருமான் காசியில் கங்கை எனும் தீர்த்தம் உருவாகி நின்று, அங்கு இறக்கும் மக்களுக்கு முத்தி தருவதால் சிவனுருவாம் ..... கங்கை எனப்பட்டது.

10. முனி - கௌதம முனிவர். செழியன் தவக்கொழுந்து. அனையாள் - தடாதகைப் பிராட்டியார்.

11. தன்றன்னை - (தன் + தன்னை). குறள்வீரன் - குண்டோதரன்.

12. காவி - நீலோபலம். குணபால் ஒருவாவி - கீழ்த் திசையில் உள்ள பொற்றாமரைக் குளம். வண்ணம் - நிறம்.

13. சுரி - சுருங்கயி முகத்தையுடைய. கொட்ப - சுழல.

14. பனிப்ப - வருத்த. கலி - கலியும். ஆணை - கட்டளை.

15. தன்வண்ணம் - பொற்றமரைத்தீர்த்தத்தின் வெண்மை நிறம். சிவபெருமான் அட்டமூர்த்தியாகத் தோன்றுங்கால், மண், நீர், தீ, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆன்மா ஆகியவற்றின் முறையே பொன்னிறம், வெண்ணிறம், செந்நிறம், கருமைநிறம், புகைநிறம், சுக்கில நிறம், இரத்தநிறம், படிகநிறம் ஆகிய நிறங்களைப் பெற்று நிற்பதால், 'மன்றாடும் மண்வண்ணம்' என்றார்.

10. மலையத்துவசனை யழைத்த படலம்

1. செழுமதி மரவினோன் - மலையத்துவச பாண்டியன். சேணிழிந்து - விண்ணுலகத்தினின்று இறங்கிவந்து வாகை தோய்ந்து - கடல் நீராடி.

2. புரவல்ன - சவுந்தரபாண்டியன். உரவு - வலிமை. மரவம் - குஞ்குமம். வகுளம் - மகிழம்பூ. பாடலம் - பாதிரிமலர். நந்தனம் - நந்தவனம், பூந்தோட்டம்.

3. இளையர் - பணிப்பெண்; மங்கையர், பொன்தொடி சேடி மாதர் - தோழியர். ஆதரம் - அன்பு.

4. காதலி - தடாதகைப் பிராட்டியார். வாரி - கடல்.

5. புராணநூல் படர்ந்து கேள்வியர் - முனிவர்கள்.

6. கொழுநன் - கணவன். காதலன் - புதல்வன். கன்று - ஆண் கன்றுக்குட்டி, காளைக் கன்று.

7. மறையவர் - முனிவர்கள். இறைவன் - கணவன். கன்று - பசுங்கன்றின் வால்.

8. ஆடுகோ - (கடல்) ஆடுவேனோ. ஆடு: பகுதி.

9. ஆண்டகை மன்னவன் - சவுந்தரபாண்டியன். வலாரி - இந்திரன். வைகிய - வீற்றிருந்த.

10. சிலயத்திரியார் - மேருமலையை வில்லாக உடைய அத்திரிச் சிலையாராகிய சிவபெருமான். அலையத்திரியட்டவன் - பறக்கின்ற மலைகளை வென்ற இந்திரன். உலையத்திரி - சஞ்சரிக்கின்ற மலை. (துருத்தி - அத்திரி)

11. பேறு - பயன். எண்பேறு - அளவிடுதற்கு. இன் அமுது - இனிய அமுதம் போன்ற மருகன் சோமசுந்தரன்.

12. மகள் தந்தானை - மகட்கொடை தந்த மலையத்துவச பாண்டியனை.

13. ஆத்தன் - சொக்கேசனான சவுந்தரபாண்டியன்

14. அனப்பெடை அன்னவன் - பெண் அன்னம் போன்ற தடாதகைப் பிராட்டியார். கிரிவேந்து - மலையரசன்.
15. வேள்வி - திருமணம். அவலம் - கவலை.
16. சேண் - தூரதேசம். நிறைகற்புடையாள் - காஞ்சனமாலை. பூண் உற்று மலர்ந்ததொர். பொற்கொடி - திருமாங்கல்ய நாண் முதலான அணிகலன்களை அணிந்த மலர்ந்த மின்னற்கொடி (இல் பொருளுவமை அணி)
17. மஞ்சு - மேகம். ஓதி - கூந்தல். பைஞ்சோதி - பசியகிரணம். பவித்திரை - பரிசுத்தமுடையவள். பைஞ்சோதி பவித்திரம் - தருப்பையாலான மோதிரம்.
18. தன்துணை - மலையத்துவசபாண்டியன்.
19. மிடைந்தார் - தரித்தவர், சிவபெருமான். உடைந்தார் - பாசம் ஒழிந்தவர். உதரம் - (வயறு) கருப்பத்தில் அருட் படிவம் - சிவசாருப்பியம்.
20. எழில் - வனப்பு; உடல் வளர்ச்சி. வயங்கினன் - (மலயத்துவச பாண்டியன்) விளங்கினான்.
21. கதிர் - சூரியன். கண் - (இந்து) மேல் நோக்கியகண் ; நெற்றிக்கண். எண்நின்றபுரம் - சிவபுரம் ; திருமால் முதலானோரால் மதிக்கத்தக்க, எண்ணத்தில் நின்ற சிவபுரம்.
22. முத்தெய்வம் - சூரியன், சந்திரன், அக்கினி, ந தெய்வம் தருக்கரன் - மேலான தெய்வத்தன்மை பொருந்திய கற்பகத்தரு போன்ற ஈகைத்தன்மையுடைய கைகளைக் கொண்ட மலையத்துவச பாண்டியன்.
23. தேமாரி - இனிய மழை (தேன் மழை) கார் - காளமேகம்.
24. அரஒலி - அரசர எனும் சிவநாமப் பேரொலி. சுராதிகள் - தேவர்கள். கோநகர் - சிவபுரம்.
25. முன்புதம் உருவம் - பாண்டியர் திருவுருவம். பின்பு தம் உருவம் - சிவசாரூப்பியம். (சிவவடிவம் கொளல்) குடுமி - சிகரம்.
26. முறை தடுமாறி - பிறப்பு முறை மாறி மாறி பண்டைய வடிவம் - சிவமும் சக்தியும்.
27. ஆன் - பசு. ஐயன் - சொக்கலிங்கப் பெருமான்.
28. பூலோகம் - சந்திர சூரியர் முதலியோர் வசிக்கும் இடம். சுவலோகம் - இந்திரன் இருக்கம் இடம். மகலோகம் - இருடிகள் சித்தர்கள் இருக்கும் இடம். சவலோகம் - பிதுர்

தேவர்கள் முதலானோர் இருக்கம் இடம். தவலோகம் - சனகர், சனந்தனர் முதலியோர் தவம் செய்திருக்கும் இடம். சத்தியலோகம் - பிரமதேவன் இருக்கும் இடம். சிவலோகம் - உமாதேவியாரோடு சிவபெருமான் எழுந்தருளி அருள்பாலிக்கும் இடம்.

இவை எட்டும் முறையே பதினைந்து லட்சம், எண்பது லட்சம், இரண்டுகோடி, எட்டுகோடி, பனிரண்டு கோடி, பதினாறுகோடி, நாலுகோடி, ஆறுகோடி யோசனை உயரமுள்ளது என்று சிவதருமோத்திரம் கூறுகின்றது.

29. அறக்கொடி - தருமவடிவாகிய தடாதகைப் பிராட்டியார்.

30. புண்ணிய ஆன் - புண்ணியத்தின் உருவமான காமதேனு. புனிறு - இளமை. அருள்வடிவு. சிவசாரூப்பியம்.

31. செவ்வி - காலம். உட்கோள் - மனக்கொள்கை. உட்கிடக்கை. தமிழர் கோமன் - சவுந்தரபாண்டியன், தமிழ்ச் சொக்கன்.

...

## 11. உக்திரபாண்டியன் திருவவதாரப் படலம்.

1. குலசேகரன் திருமகள் - மலயத்துவச பாண்டியன். உக்கிரன் - உக்கிரகுமாரபாண்டியன்.

2. தண்ணிலாமௌலி - குளிர்சிபொருந்திய நிலவினை அணிந்த முடியினையுடைய. சுந்தரசாமி - சவுந்தர பாண்டியர். எண்ணிலா வைகல் - அறுபத்தாறாயிரம் ஆண்டுகள். உண்ணிலா - உள்ளேவிளங்கும்.

3. கற்பினுக்குரியவள் - காஞ்சனமாலையார்.

4. கரியவன் - திருமால். மூன்று கொற்றவர் - சேரசோழ பாண்டியர். திங்கள் கோக்குடி - சந்திரன் வழிவந்த பாண்டிய மரபு. விழுப்பம் - மேன்மை.

5. ஒன்றினைச் செய்கை - கர்த்திருத்துவம். செய்யாதொழிகை - அகர்த்திருத்துவம். வேறொன்று செய்கை - அந்தியதா கரத்திருந்துவம் என்றிவையுடையோன் - என்ற இம்முக்குணங்களையுடையவன். இகல் - பகை.

6. விச்சை - வித்தை. சாலம் - வலை. செந்தழல் நாட்டமீன்ற

செல்வன் - அக்கினி கண்ணில் தோன்றிய முருகவேள். சுந்தரவல்லி - தடாதகைப்பிராட்டியார்.

7. ஆயம் - தோழிகள் கூட்டம்; மன்றல் செல்வி - கருவுற்ற சடங்கு, திருவிழாப் பொலிவு. புனிதை - தடாதகைப் பிராட்டியார்.

8. கருமணி - நீலமணி ; முலைக்கண். கனம் - கனகம் ; பொன் கனிந்து - கனிந்தால்.

9. போகபூமி - இன்பம் அனுபவிக்குமிடமாகிய மேலுலகம். பன்னகர் - நாகருலகம்.

10. அண்ணிய சடங்கு - கருப்பதானம், பும்சவனம். சீமந்தம் விண்டுபலி முதலியன. கடி - திருவிழா. எண்ணிய - மதித்த.

11. ஈசர்தம்கிழமை - சோமவாரம். இந்து - திங்கட்கிழமை. எரிபசும் பொற்கோள் - குரு ; வியாழன். கேந்திரம் - சோதிடத்தில் இலக்கினத்திற்கு ஒன்று, நான்கு, ஏழு, பத்தாம் இராசிகள். ஒரே - இலக்கினம் ; நேரம்.

12. விந்தை - வீரலட்சுமி. வீறு - இருமாப்பு.

13. சிந்துரநுதல்மா - சிந்துரம் அணிந்த எட்டு யானைகள் அட்டகஜங்கள். பொறை - பாரம். எய்ப்பு - இளைப்பு. புனல் இறை - வருணன்.

14. சேய் - முருகன். கள் - தேன். பலிற்றும் - பொழியும்.

15. புல்லி - தழுவி. காந்தன் - கணவன். குமுதப்போது - அல்லிமலர்.

16. சலத்தலைக்கிடக்கைப் புத்தேள் - பாற்கடலில் பள்ளி கொண்ட திருமால். தருநிழல் வாழ்க்கைப் புத்தேள் - கற்பகத்தரு நிழலில் அமர்ந்த இந்திரன். அலர்த்தலையிருக்கைப்புத்தேள் - தாமரைமலரில் வீற்றிருக்கும் பிரமன். புத்தேளிர் - தேவர்கள். வேதப்புலம் - வேதத்தின் இருக்கை.

17. குடபுலத்தரசு - சேரன். பொன்னி - காவிரி. கோழி - உறையூர். கோழிவேந்தன் - சோழன். தொண்டை - தொண்டைநாடு. கலித்தல் - ஒலித்தல்.

18. வழுத்தி - துதித்து. நன்னர்கோளாகி - வழுத்தலும். வாழ்த்தலுமாகிய நல்ல கொள்கைகளையுடையராய் ; நன்றாக ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களாய். ஓகை - உவகைமொழிகள்.

19. வழுதியர் - பாண்டியர். தென்னாட்டவர். மதன் - மன்மதன். கோல் - செங்கோல்.
20. தென்பார் - தென்பாண்டியநாடு.
21. அருத்தம் - பொருள். திருமகள் - உக்கிரகுமார பாண்டியன்.
22. மங்கலவணி - மங்கலவிழாக்கள். கௌவைமங்கலம் - ஒலியையுடைய மங்கலவாச்சியங்கள். நெய்விழா - எண்ணெய்முழுக்காட்டு.
23. தூர்வைக்காடு - அருகம்புல்குப்பை - தானவெள்ளம் - தானநீர்ப் பெருக்கு ; யானை மதநீர்ப் பெருக்கு.
24. தூம்பு - தொளை. சிவிறி - நெடுந்துருத்தி. அண்டை - நீர்தெளிக்கும் கருவி. அனங்கன் - உடம்பு (அங்கம்) இல்லாதவன், மன்மதன், துருத்தி, குழல், சிவிறி, அண்டை - இவை வெவ்வேறு வகையாக நீர் தெளிக்கும் கருவிகள்.
25. மூதூர் - மதுரை. பொன்னவன் - குரு. கேந்திரித்த - கேந்திரத்தானமடைந்த. சாதகச் செய்தி - குழந்தை பிறந்தபின் செய்யும் ஜாதகர்மம். ஆதி என்றதனால் உத்தாபனக் கிரியையும் கொள்க. உத்தாபனம் என்பது அசுத்த இடத்தினின்றும் சுத்தமான இடத்தில் குழந்தையைச் சேர்ப்பித்தல் (புண்ணியாகவசனம்) .
26. வருமன், வர்மா என்பவை அரசர்க்குரிய பெயர்கள்.
27. சந்திமிதித்தல் - குழந்தையை கோயிலுக்குக் கொண்டு செல்லும் பிரவாசக்கிரியை. அன்னமங்கலம் - அன்னப்பிராசம் ; சோறூட்டுதல். கேசவினை - மயிர்களையும் வினை, சௌளம். பூணநூற்கடி - உபநயனம்.
28. பதநிலைபாழி சாகை யாரணம் பணைத்த வேத முதனினாக் கலை - வேதங்களைப் பாராயணம் செய்ய ஆரம்பித்தல் ; காண்டோபக்கிரமணக்கிரியை. பதம் - வாக்கியம். நிரை - பூர்வ பூர்வ பதத்தை அநுசரித்து உத்தரோத்தர பதத்தை உச்சரிக்கும். முறை. பாழி - இரண்டு பதத்தை எடுத்துக்கொண்டு முதல்பதத்தை ஒருமுறை உச்சரித்து இரண்டாம் பதத்தை இரண்டுமுறை உச்சரித்து, மீண்டும் முதல் பதத்தை இரண்டுமுறை உச்சரித்து இரண்டாம் பதத்தை ஒருமுறை உச்சரிக்கும் சடை என்பது. சாகை -

சத்தகாண்டத்தின் வேறுபாடு. ஆரணம் - அச்சாகையில் பத்துப்பிரச்சின்னங்கள் கொண்டது. பணைத்த - இவ்வுறுப்புக்களால் நிரம்பிய. வேதமுதல் நினாக்கலை - மந்திரம், இலக்கணம், நிகண்டு, சந்தோபிசிதம், நிருத்தம், சோதிடம் எனும் ஆறுஅங்கம். வையம் - தேர். பாய்மா - குதிரை.

29. எண்ணெண்கலைகள் - அறுபத்து நான்கு கலைகள்.

30. அகவை - வயது. மகிழ்ச்சி கொள்கலன். மகிழ்ச்சிக்கோர் பாத்திரம்.

31. புகர் - புள்ளி. தகர் - ஆட்டுக்கிடாய வகிர் பிளவு. வாரணம் - சேவல் (யானை). நான்கு உறுப்பு ஆடி - நான்கு அங்க (உடல்) உறுப்புகளைத் தொட்டுவிளையாடி.

32. மா - குதிரை. காவதம் - காதம் ; நாலு கூட்பிடுதூரம். ஆவி - பொய்கை.

33. சந்த வெற்பு - பொதியமலை. சைலம் - மலை. கந்தம் - கிழங்கு. விருத்து - விருந்து (வலித்தல்விகாரம்) கைதழீஇ - கைக்கொண்டு.

34. சூர் - சூரபன்மன். தோன்றல் - முருகக்கடவுள். மருங்கு - பக்கம்.

35. பாங்கயச்செவ்வித்து - தாமரைபோன்ற அழகினையுடையது. சொன்ன அடைவு - சாமுத்ரிகா லட்சணப்படி. சங்கம் - கணைக்கால். காவன் - தொடை.

36. கடி - விளக்கம். வரைகொண்மார்பு - மூன்றுவரியைத் தன்னிடத்தே கொண்ட மார்பு; மலையையொத்த மார்பு.

37. நின்று நின்று நோக்கி - உற்று உற்றுப் பார்த்து.
நலம்புரி நூல் - சாமுத்ரிகாலட்சண நூல்.

38. சூக்கம் - சுருங்கிய உறுப்பு. அன்னது - அவ்வளவு. கம்பீரம் - ஆழம்.

39. உயிரில் - உயர்ந்தால். துண்டம் - மூக்கு. நீண்டவேல் - நீண்டிருந்தால்.

40. குஞ்சி - கூந்தல். தொக்கு - தோல். கோசம் - ஆண்குறி. குளம் - நெற்றி.

41. அகவடி -உள்ளங்கால். அங்கை - உள்ளங்கை. இதழ் - உதடுகள்.

42. எல்லையில் மூர்த்தி - சவுந்தரபாண்டியன்.
43. இசைமை - புகழ். வித்தகம் - சதுரப்பாடு; சாமர்த்தியம். வீறு - நிகரின்மை.
44. தேத்தும் - தேயத்தும். திறை - கப்பம். கீர்த்தி - வெற்றியால்வரும் புகழ்ச்சி.
45. இயல் - இயற்கை. மதிஞர் - (சுமதி முதலான) அமைச்சர்.

...

## 12. உக்கிர பாண்டியனுக்கு வேல்வளை செண்டு கொடுத்த படலம்.

1. உதயம் - பிறந்த வரலாறு. மணம் - திருமணம். வளை - சக்கரம். செண்டு - வளைதடி.
2. வையக்கிழவன் - சவுந்தரபாண்டியன். அளக்கின்றார் - ஆராய்கின்றார்.
3. வடபுலத்து மணவூர் - மதுரைக்கு வடக்கேயுள்ள கல்யாணபுரம். அற்றை - அந்நாள். கனையிருள் - நடுஇரவு.
4. இரவி மருமானம் வள்ளற்கரத்தான் - சோமசேகர சோழன். மருமான் - வழித்தோன்றல் (மருமகன்) நனவு - சாக்கிரம். கள்ளத்து - கிட்டாதுமறையும்.
5. அன்னம் இறைகொள் - அன்னப்பறவை வசிக்கும். பொன்னை அனையாள் - இலக்குமியை ஒத்த காந்திமதி.
6. அள்ளல் - சேறு. வேலை - இரண்டனுள் - முன்னது கடல், பின்னது விடியற்காலம்.
7. நிருபன் - சோமசேகர சோழன். பைத்த - பரந்த. பொய்த்த மருங்குல் - பொய் எனும்படி இல்லாத இடுப்பு.
8. நென்னல் எல்லை - நேற்றைய பொழுது. அன்னவேந்தன் - சோம சேகர சோழன். அடல் - கொல்லுதல்.
9. புலன் ஒன்று உழையர் - அறிவுடைய தூதுவர். வலன் - வெற்றி. அயில் - கூர்மை.
10. வரைவுநாள் - திருமணநாள்.

11. பூதகம் - பாக்குமரம். மறுகுடவீதி. கூடம் - யானை கட்டுமிடம். கொளுத்தினார் - அலங்கரித்தார்.
12. தென்றல்நாடன் - மலயத்துவச பாண்டியன். அன்று - தடாதகைப்பிராட்டியார் திருமணநாள்.
13. சுந்தரத் தென்னர் - சவுந்தரபாண்டியர்.
14. கால் - காற்றைப் போல. மள்ளர் - காலாட்படைவீரர். ஆழிய வெள்ளம் - தேர்க்கூட்டம்
15. கோடு - வளைந்த. சேடு - பெருமை. அனீகம் - சேனை.
16. உந்துறும் - விரைவாக. வரம் - தாவிச் செல்லுதல்.
17. அலகு - அளவு. ஆதவர் - சூரியன். ஓடை - நெற்றிப்பட்டம்.
18. தொக்க - நெருங்கிய. எக்கர் - மேடு; திடர். நக்க - விளங்கிய.
19. கந்துகம் - குதிரை. அரட்டர் - குறும்பர். கரும்படை - பெரியசேனை.
20. சோனகர் - ஆரியதேசத்துக்கு மேற்கிலுள்ள துலுக்கர்.
21. நூல் - பூணூல். துவக்கு - கட்டு. தூங்குதல் - தொங்குதல். முஞ்சி - ஒருவகைப்புல். கிஞ்சுகம் - முள்முருக்கு ; பலாசம். நூல்பயில் நாவினர் - மாணவர்கள், பிரமசாரிகள்.
22. தீத்தொட்டகோல் - தீக்கடைக்கோல், வேள்வியிற் சுட்ட நீறு இட்டநெற்றியர் - திருநீறு.
23. முண்டம் - திரிபுண்டரம் (நாமம்) மூரல் - பல். கல்தூனை - கல்லாடை, காவியுடை. பொய்யினைக் காய்ந்தவர் - சந்தியாசிகள். பொய் - உலகோர் கூறும் கற்பனை.
24. துகிர் - பவளம். புண்ணியப் பூச்சினர் - திருநீறு தரித்தவர். சேந்த - சிவந்த. வேதச் சிரப்பொருள் - சிவபெருமான். கேள்வி அருந்தவர் - சிவாகம நூல்வல்ல அரிய சைவதபோதனர்.
25. ஆதிசைவர் - முதல் சைவர் ஐவர் - ஆதிசைவர், மகாசைவர், அநுசைவர், அவாந்தர சைவர், பிரவரசைவர், ஆகஜயர், அகச்சைவம் - சைவம், பாசுபதம் ; மாவிரதம், காளாமுகம், வாமம், வைரவம் ஆகியவை.
26. வெண்களிற்றவன் - வெள்ளையானையுடைய இந்திரன். வேரி - வாசனை - தேன்.
27. அரிச்சேக்கை - சிங்கஆதனம். குணம் - முக்குணங்கள். கோமளம் - இளமை, அழகு.
28. சுரர்கள் - திருமால் முதலிய தேவர்கள். திருமகன் - உக்கிரகுமாரன்.

29. கோமகன் - சவுந்தரபாண்டியன். ஏமமேனியன் - பொன்னிறமுடைய குரு. கோதை - காந்திமதி.
30. கருவி - உலகத்துக்குத் துணைக்காரணமான கருவி. நெய்த்து - நெய்ப்பசையுடைய. மல்லல் - வளமை.
31. எட்டாம் தண்மதி - எட்டாம் நாள் சந்திரன் ; அர்த்த (பாதி) சந்திரன். உலப்பு - கெடுதி.
32. பண் - அமைதி. துண்டம் - மூக்கு. எஃபோது - எள்ளின் பூ.
33. வார்த்து - நீண்டு தசைந்திட்டு - தசைப்பற்றுடையதாய். ஊற்றம் - பரிசம். திரைகடற் செல்வன் - வருணன்.
34. கொவ்வை - கோவைக்கனி. அணிஇழை - பெண். நூல் - சாமுத்திரிகாலட்சண நூல்.
35. மஞ்சுளம் - அழகு. சுபுகம் - மோவாய். அல்லி - அகவிதழ்.
36. வரை - கீற்று. அகிலம் - உலகம். தசைந்து - தசைப்பற்றுடையதாய். மொழி - நரம்புமுடிச்சு.
37. கை - கைவிரல். வள்உகிர் - கூரிய நகம். சரசரப்பு - மொரமொரப்பு. நல்ல - மங்கலத்தைச் செய்வன.
38. கடம் - குடம். இறுமாந்து - செறுக்குற்று. பண்டி - வயிறு.
39. நிதம்பம் - இடுப்புக்கும் தொடைக்கும் நடுப்பகுதி; அல்குல். யாமை - பெண்ஆமை. தடவு - பெருமை. கரபம் - மணிக்கட்டிலிருந்து. சிறுவிரலடி வரை உள்ள கையின் அடிப்பகுதி.
40. அங்கம் - எலும்பு. சங்கை - கணைக்கால். சிரை - நரம்பு.
41. புகர் - குற்றம்; துகள். அகத்தாள் - உள்ளங்கால்.
42. உண்ணம் - உஷ்ணம்; வெம்மை. பாடலம் - பாதிரி.
43. நல்கூர்ந்த - வருமையுற்ற. வாக்கின் செல்வன் - குரு; வியாழன். இரங்கும் - கூவும்.
44. கொங்கு - மகரந்தம், தேன். மத்தமான் - மதமயக்கத்தையுடைய யானை.
45. கட்டு அவிழ் - முறுக்கு அவிழ்ந்த. கண்ணி - மாலை. மட்டனஞ்செய்து - பூசி ; மட்டித்து. ஏங்க - ஒலிக்க.
46. மணநீர் - வாசனைப் பொருள்கள் கலந்த நீர். சிரகம் - கரகம் ; கமண்டலம்.
47. மது பருக்கம் - பால், பழம், தேன் முதலியன.
48. உரவு நீர் - கடல். குரவு அலர் - குரவமலர்.

49. மைந்து - வலிமை. மணிவடம் - முத்து மாலை. தூவி - சிறையடியிலுள்ள மெல்லிய மயிர். இந்திரமணி - நீலமணி.

50. அட்டில் - மடைப்பள்ளி. பொன்வாக்கி - பொன்னால் வார்த்து.

51. பேழை - பெட்டி. தூசு - பருத்தி ஆடை.

52. மூதூர் - பெரிய ஊர். மதுதிளை - தேனை அனுபவிக்கும்.

53. சுழித்தது - சுழன்றது. வார் - கச்சு (அணிந்து) பேறு - பயன்.

54. கடப்பம் கண் தார்ப்புயத்திளங்காளை அன்னான் - முருகக் கடவுள் அனைய உக்கிர குமாரன்.

55. இரவி மருமான் - மடப்பிடி - காந்திமதி. நிலா - கிரணம். தாராகணம் - நட்சத்திரக் கூட்டம்.

56. தொடியினர் - அடியினர், முலையினர், மேகலையினர், தாரினர் இவர்கள் பவனிகாணவந்த பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை ஆகிய பருவப் பெண்கள்.

57. சுருங்கும் இடை - சிற்றிடை. கலை - மேகலை. வரை - மூங்கில். நிறை - மனம் கெட்டவழியில் செல்லாது நல்ல நெறியில் நிறுத்துதல்.

58. எருத்து - பிடரி. யானைமகள் - தெய்வயானையார். இளையோன் - முருகன். செல்வம் - சிறப்பு.

59. நன்மைதரும் ஈசன் - மகாபீஷ்டப் பிரதேசுரர். வன்பழிதீர்த்தவிமலன் - சொக்கலிங்கப்பெருமான்.

60. ஆனா - நீங்காத. மதிக்கோன் - சவுந்தரபாண்டியன். ஒழுகி - மநுமுறைவழி அரசு செலுத்தி.

61. வான்பகை - பெரிய பகைவர். முன்னொருகாலத்தில் இந்திரன், கடல், மேரு இம்மூன்றும் தீவினை வசத்தால் கர்வம் கொண்டு சிவபெருமானைப் பூசிக்காமல் இகழ்ந்து பகைகொண்டன என்பது வரலாறு.

62. ஆடல் ஏறு - சிங்கம். தனையன் - புதல்வன்.

53. சூட்சி - மந்திராலோசனை. பொன் - பிரகஸ்பதி ; குரு. காட்சி பயக்கும் கல்வி - தளர்வுற்றபோது அறிவு தந்து ஊன்றுகோல்போலுதவும் கல்வி. காட்சி - அறிவு.

64. மை - குற்றம். வாய்மை - உண்மை. ஆறு - வழி.

65. பன் அரும் - சொல்லுதற்கு அரிய. அருள் - திருவருள்.

66. தன்னது ஆணையால் - தனது ஆணைவழியினால்.

...

## 13. கடல் சுவற வேல்விட்ட படலம்.

1. வேன் - வேல். வேம்பணிந்த கோன் - சவுந்தரபாண்டியன். இளையவன் - முருகக்கடவுள்.

2. வெண்குடை - வெண்கொற்றக்குடை. சங்கை இல்லாத மாதரும் வேள்விகள் - இராசசூயம் முதலான பெரிய யாகங்கள். சங்கை - அளவு. புடை - பக்கம்.

3. பரிமகம் - அசுவமேதயாகம். சுரும்பு அரி - மலைகளின் சிறகு அறிந்த. பெரும்படை - வச்சிராயுதம். தோன்றல் - இந்திரன். நறா - தேன். அரி - வண்டு. குழை - மலர். வீரன் - உக்கிர குமார பாண்டியன்.

4. பொன்இயல் நாடு - தேவ உலம். உன்னிய - எண்ணிய.

5. பொள்ளென - விரைந்து. பார் ஏழ் - நாவல், இத்தி, குசை, கிரவுஞ்சம், புட்கரம், தெங்கு, கமுகு எனும் ஏழு தீவுகள் உருத்து - கோபித்து. கடி - காவல்.

6. வேலை வேந்தன்-வருணன். கண்படை - தூக்கம். நனந்தலைக்குருட்டு கங்குல் - பார்வையுடையாரையும் குருடராக்கும் மிகுந்த இருள் ; நடு இரவு.

7. நீத்தம் - பெருவெள்ளம். மதித்தலம் - சந்திரமண்டலம். உட்க - அஞ்சும்படி. உததி - கடல்.

8. வங்கம் - மரக்கலம். காரி - விஷம். அரா - இராகு. கார் - சிவபெருமான் ஏவிய நான்கு மேகங்கள்.

9. பலகை - கேடகம். அட்டம் ஆக - குறுக்காக, எதிராக.

10. மஞ்சு - மேகம். இஞ்சி - மதில். குணங்கு - கிழக்கு.அரை இரா எல்லை - நடுஇரவு. வெள்ளி மன்றவாணர் - சோமசுந்தரக் கடவுள்.

11. வழுதி - பாண்டியன். ஆழி - கடல். வல்லை - விரைந்து. எழுதி - (நீ) எழுவாயாக. போதி - பேவாயாக. கழுது -பேய்.

12. கண்நிறைந்த - கண்துயின்ற. எண்ணிறந்த - அளவில்லா.

13. தெவ்வை - பகைவனை. மானம் வலி - பெருமையும் வலிமையும்.

14. **திரித்து** - சுழற்றி. சஃறென - ஒலிக்குறிப்பு. அடுத்து - அடைக்கலம் புகுந்து. வடுத்து எனின் குற்றப்பட்ட எனப் பொருள். வேரி - மணம்.

15. சந்தம் - பண். முன்பு கடல். சூரபன்மனுக்கு இடம்கொடுத்து முருகக் கடவுளின் வேலால் அழிந்ததையும், விருத்திராசுரனுக்கு இடங்கொடுத்து அகத்தியர் ஆசமனத்தால் வலியிழந்து அழிந்ததையும் குறிக்க 'இந்த வேலை வலி இழப்பதென்று முள்ளதே கொலாம்' என்றார்.
16. புண்இடை - பகைவர் உடலில். சித்தர் - சித்த உருவாய் வந்த சொக்கநாதர். விடை - இடபம்.
17. செக்கர் - செந்நிறம். காளகண்டம் - நீலகண்டம். பக்கம் - சோமசுந்தரக்கடவுள் எழுந்தருளியிருக்கும் திக்கு, பட்சமுமாம்.
18. பாரிடம் - சிவகணங்கள். தந்திரம் - நூல், சிவாகமம் வரவு போக்கிறந்த வள்ளல் - பிறப்பிறப்பில்லாத பரம்பொருள் சொக்கேசப் பெருமான்.
19. முகிழ்ந்து - கூப்பி. பரிப்ப - தாங்கி (எதிர்வர)
20. வளை - வளைந்த. களைகணாய் - பற்றுக்கோடாய்.

...

## 14 . இந்திரன் முடிமேல் வளையெறிந்த படலம்.

1. மின்னவிர் - மின்னலையொத்த. மணிப்பூண்மார்பன் - உக்கிரகுமாரபாண்டியன். நாகநன்னிகாரளி - இந்திரன்.
2. நிகழும் - செங்கோலோச்சும். கோள் - நவக்கிரகம். கொண்மூ - மேகங்கள். பைங்கூழ் - பசியபயிர். கையறவு - வறுமை. தமிழ்முனி - அகத்தியர்.
3. பனிவருமாரி - குளிர்ச்சியைத்தரும் மழை. பனி - நோய் எனலுமாம். இது குடநாட்டு வழக்கப்படி அம்மைநோய் எனப்படும். மேருக்குனிவரு சிலையார் - சிவபெருமான்.
4. வெய்யோன் - சூரியன். சேயோன் - செவ்வாய். பின்புசென்று - வக்கரித்து. தூசின - ஆடையாக உடைய. வான் - மழை.
5. ஐந்தும் வென்றவன் - ஐம்பொறிகளையும் அடக்கிய அகத்தியன்.
6. வானோர் - திருமால் முதலான தேவர்கள். சக்தி - இலக்குமி முதலான சக்திகள். உருத்திராணி - சிவசக்தி.
7. மந்தரம் - ஒருதலம்.

8. அறாக்கனி - மதிதோய்ந்து ஒன்றித் தங்கிய திங்கள் - சோமவார அமாவாசை.
9. தேளிற் சிலையினில் - கார்த்திகையிலும் மார்கழியிலும் (விருச்சியம், தனுசு) தெரிசம் - அமாவாசை மலமதி - குற்றமுள்ள மாதம். முந்தைய பக்கம் - அமாவாசைக்கு முந்திய சுக்கில பட்சம். கதிர் வாரம் - ஞாயிறு. அல் - சிரவு. அயலிற்றுஞ்சல் - சுத்தமான தரையில் தனித்து உறங்குதல்.
10. வைகறை விடியற்காலம். காமாதி - காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாச்சரியம் எனும் துற்குணங்கள். ஒருப்பாடு எய்த - ஒன்றுபட.
11. கடம்பு - கடப்ப மரம். நீறு - திருநீறு. விதியால் - சிவாகம முறைப்படி . அக்கமாலை - உருத்திராக்கமாலை.
12. மயிலை - இருவாட்சி. வேழப்பிள்ளை - விநாயகர்.
13. சத்திய ஞானானந்த தத்துவம் - உண்மை அறிவானந்த தத்துவப் பொருளான சொக்கலிங்கப் பெருமான். உள்கிவைத்து - மனதில் நிலைபெறச் செய்து. அதன் வடிவம் கொண்டு - அச்சிவசொரூபமாய்நின்று. வித்தை - மந்திரம்
14. ஐந்து அமுது - பஞ்சாமிர்தம். (சர்க்கரை, தேன், பால், தயிர், நெய் என்பன. வாழைப்பழம், சர்க்கரை, தேன், கற்கண்டு எனலுமாம். ஆவின் ஐந்து பால், தயிர், நெய், கோமயம், சாணம் என்பன. நறுங்கனி ஐந்து - எலுமிச்சம்பழம், நாரத்தம் பழம், தமாத்தம்பழம், மாதுளம் பழம், குளஞ்சிப் பழம் என்பன. தோயம் - குழம்பு; கலவை.
15. அங்கபூசை - போகாங்கபூசை, லயாங்கபூசைகள். பரை - பராசக்தி. சுரபி - பசு.
16. பண்ணியம் - பலகாரங்கள். பானீயம் - அருந்தும் நீர்வகைகள், பானகம் முதலியன. கோட்டி - அழற்றி.
17. புரகரன் - திரிபுரம் எரித்த சோமசுந்தரக் கடவுள். ஐம்பெரும் பாதகங்கள் - காமம், களவு, பொய், கள், குருநிந்தை ஆகிய ஐந்து. விரகு - அறிவு.
18. இதழ் - இலை. புழுக்கடி - பூச்சியரித்தது.
19. படி - படிவம், உருவம். காத்தி - கரப்பாய் (முன்னிலை ஏவல்)
20. பொான் - செல்வம். புறகு - முதுகு, பின்புறம்.
21. வேத வேதியர் - வைதிகப் பிராம்மணர். இட்ட லிங்கம் - ஆன்மாத்தமூர்த்தி, ஆன்மலிங்கம்.

22. ஒருவுதல் - விடுதல். உஞற்றுதல் - செய்தல்.
23. உத்தியாபனம் - குறிப்பிட்ட ஆண்டுவரை விரதம் இருந்து, நிறைவுறும்போது செய்யும் செயல்பாடுகள். 'உடல் அளவி எண்ணி நோற்போர்க்கு உத்தியாபனம் இல்லை என்பது முதனூல் துணிபும் பிறநூல் துணிபும் ஆம்.' எட்டனை - நியது. மண்டலம் - அனந்த விஜயம் முதலான மண்டலம். உமாபதி - உமை அம்மையாரும் சிவனும்.
24. புராணம் - சிவபுராணங்கள்.
25. வில்லம் - வில்வம். வில் அழல் - பாதி (அர்த்த) சந்திர வடிவ ஓமகுண்டத்தில் உள்ள வேள்வித்தீ, விளங்கும் வேள்வித்தீ.
26. அரம்பைப் பொதுளும் பாசிலை - வாழைமரத்தின் செழித்துத் தழைத்த பச்சை இலைகள். அலம் - அமைவு. கடவுள் வேதியர் - ஆதிசைவர்.
27. ஆதரம் - அன்பு. பாதப்போதிணிகாப்பு - பாதமலரைக் காக்கின்ற காலணி, பாதுகை.
28. படிமை - திருவுருவம். கோட்டணி - கொம்பில் அணியப்படும் பூண். சுரபி - பசு.
29. தனையர் - புதல்வர். ஒக்கல் - சுற்றம். நனை - தேன்.
30. பதினால் இந்திரபதம் - ஒரு பிரம கற்பம். அறவோன் - அகத்தியன்.
31. முனிவன் - அகத்தியன். கனக கஞ்சம் - பொற்றாமரைத் தீர்த்தம்.
32. சுந்தரன் - சோமசுந்தரக்கடவுள். மடங்கல் மான் தவிசு - சிங்காசனம்.
33. குலிசம் - வச்சிராயுதம். போந்து - பனை. ஆர் - ஆத்தி.
34. செழியன் - உக்கிர குமார பாண்டியன். அழுக்காறு - பொறாமை. ஏனைப் பார்த்திபர் - சேர, சோழர்.
35. மகபதி - இந்திரன். வான்சுரக்க - மழைவளம் மிக.
36. அமரர்கோன் - இந்திரன். மாரி - மழைவளம். வீறு - செருக்கு. வினையம் - சூழ்ச்சி.
37. ஆரம் - முத்துமாலை. கதுமென - விரைந்து.
38. கடவுள்நாதன் - இந்திரன். இறும்பூத - (மகிழ்ச்சி) , வியப்பு. இரையளி - ஒலிக்கும் வண்டு.
39. இப்பால் - இப்புறம்.
40. விண்ணம் - விண்ணுலகம். தோல் - யானை. அரிமான் -

சிங்கம். ஏனம் - பன்றி. எண்கு - கரடி. இரலை - மான்.

41. குன்று - பொதிகைமலை. புட்கலாவர்த்தனமாதிமேகம் நான்கு - புட்கலாவர்த்தம், சங்காரித்தம், துரோணம், காளாமுகி என்பன. இவை முறையே பொன், பூ, மண், கல், சொரிவன. கன்ற - வருந்துமாறு.

42. கோட்டம் - சிறைக்கூடம். நாட்டம் - கண்கள். படிவம் - உடல். காட்டம் - (காஷ்டம்) விறகு.

43. ஊக்க செலுத்த. சூழ்ந்தான் - முற்றுகையிட்டான்.

44. மூடின - முற்றுகை செய்தன. முனிவு - கோபம்.

45. பகடு - மதமலை - யானை. காப்பு - (இங்கு) மதில்.

46. இறுதிநாள் - ஊழிக்காலம். மதிக்குல வீரன் - சந்திரகுலமன்னனான உக்கிர குமார பாண்டியன்.

47. மலயவெற்பு அரையன் - உக்கிரகுமாரபாண்டியன். குவை - கூட்டம்.

48. குருதிநீர் - ரத்தம். சேனம் - பருந்து. கூளி - பேய்.

49. குறைத்தலை - தலைநீங்கிய உடம்பு; கவந்தம். விந்தைப் பாவை - கொற்றவை.

50. வஞ்சினம் - சூழுரை ; நெடுமொழீ (கூறல்) இது போர்க்களத்துத் தமது வீரத்தைப் புகழ்ந்து கூறுதல்.

51. புங்கவன் - (புங்கம் : வன்) வலிமைமிக்க (வன்). சிம்புள் - சரபம். புணரிவென்றோன் - கடல்சுவற வேல்விட்ட உக்கிர குமார பாண்டியன்.

52. தானவர் - அசுரர். தானவர் பகைவன் - இந்திரன். விளித்து - அழித்து.

53. கைவலை - கையிலுள்ள சக்கரத்தை. தேசு - ஒளி.

54. இருள்வரை - மயக்கத்தைச் செய்யும் மலை. கிரௌஞ்சம். மைந்தனில் - முருகனைப் போல.

55. கூர்வேல் - வச்சிராயுதம். நிகளம் - விலங்கு. கார் - புட்கலாவர்த்தம் முதலான நான்கு மேகங்கள்.

56. முடங்கல் - ஓலை. ஓலை - பொன்னோலை. உழை - அருகில். தேறானாகி - நம்பானாகி.

57. பாகசாதனன் - பாகனென்றும் ஓர் அரக்கனை வென்ற இந்திரன். நட்டவன் - நண்பன். வேளாளன் - இங்கு ஏகவீரன் என்பவன். பிணை - புணை ; ஈடு.

58. இடுக்கண் - துன்பம், வறுமை. ஊற்றம் - இடையூறு.

நாலாம் மரபினான் - வேளாளன் ஆத்தன் - (ஆப்தன்) சிவபெருமான். சூழ்ந்து - சிந்தித்து. பகடு - யானை.

59. மடுத்து - நிறைந்து. செய் - மேட்டு நிலம். வயல், கன்னல் - கரும்பு. பொழில் - சோலை, நந்தவனம். கா - சோலை.

...

## 16. மேருவைச் செண்டாலடித்த படலம்.

1. வெந் - முதுகு. வைப்பு - சேமநிதி.
2. திங்கள் விரதம் - சோமவார (திங்கட் கிழமை) விரதம்.
3. வயந்தனைப் பயந்தது என்ன - (திருமால்) மன்மதனைப் பெற்றதுபோல ; வெற்றியைப் பெற்றது போல .
4. சாதகாதி - (சாதகம் + ஆதி) சாதகம் முதலான சடங்குகள். எழுதொணாக்கலை - எழுதாக்கிளவி ; வேதம்.
5. மல்குமாறில் - வளம்பெருகுந்தன்மை இல்லையாம்படி. திரிந்து - தத்தம் நிலையினின்றும் மாறுபட்டு பருவம் - கார்காலம்.
6. பிரமகற்பம் - பிரமதேவனுக்குரிய ஒரு பகல். அது பதினான்கு இந்திரர் அழியும்வரையுமள்ள காலம். நூல் உழவர் - புலவர். வருடியாது - பொய்யாது.
7. மன்னன் - உக்கிரகுமாரன். பகவு - பிளவு.
8. செவ்வி - கூறுபாடு. மரு - வாசனை. அரக்கர் போர்க்கடலில் நீந்தி - (சூரியன் தன் சிறப்புடன் தோன்றி வரும்போது நடுவில்) அறுபத்து நான்கு கோடி அசுரர் வந்து போர்புரிய, அப்போர்க் கடலினின்றும் நீங்கி.
9. வள்ளல் - உக்கிர குமார பாண்டியன்.
10. இடர்படல் - வருந்தற்க. பெருமுழை - பெரிய குகை.
11. கிடைத்து - சென்றடைந்து. குறி - இலச்சினை. அடயாளம், முத்திரை.
12. ஏழுமான் தேரோன் - ஏழுகுதிரைகள் பூட்டிய தேரினையுடைய சூரியன். ன் - சாரியை. மீனநோக்கி கணவன் - சொக்கேசப்பெருமான். கொண்டல் - மேகம்.

1. மண்டலம்.
13. நாவல்லோர் - புலவர்கள். பாகு - பாகன்.
14. பிச்ம் - பீலிக்குடை. பொருப்பு - (இங்கு) யானை. பாய்மா - குதிரை.
15. ஞாழல் - புலிநகக் கொன்றை (குங்குமமரம்) உழுவை - புலி. காழ் - வலிய. துழாம் - துழாவுகின்ற. ஏழுயர்வரை - யானை. அகடு - வயறு.
16. வன்கடம் - கரடுமுரடான கொடியகாடு. நன்கடன் - நல்லவரிசை. புன(ல்)னாடு - சோழநாடு.
17. தண்டகம் - தொண்டைநாடு. கண்டகம் - முள்ளி. கைதை - தாழை. கருநடம் - கருநாடக நாடு. தொண்டகம் - குறிஞ்சிநிலப்பறை.
18. சுரம் - பாலைநிலம். மங்குலம் - மேகம். ஓரீஇ - நீங்கி.
19. ஆடல் - வெற்றி. ஏறு - இடபம். ஆடல் ஏறு உயர்ந்த தோன்றல் - இடபக்கொடியினையுடைய சோமசுந்தரன்.
20. மாநகரம் - பெரிய யானை. பாரத வருடம் - பரத கண்டம். (இது மேருமலைக்குத் தெற்கும், தென்கடலுக்கு வடக்கும் ஆகிய இடைப்பட்ட நாடு. பரதன் - சுவாயம்பு மனுவின் இரண்டாம் பேரன் அங்கிதீரன் மகன் (அங்கிதீரன் - நாவலந்தீவை ஆண்டவன்) வருடம் - (வர்ஷம்)பெரும் பரிவு; பரதனால் ஆளப்பட்ட பூமியின் பெரும் பிரிவு. பரத கண்டம் இப்பரதனுக்குக் குமரி என்ற ஒரு மகளும். இந்திரன், சேருகன், தாமிரன், கபத்தி, நாகன், சவுமியன், காந்தருவன், வருணன் ஆகிய எட்டு மகன்களும் இருந்தனர். இவர்கள் பரத கண்டத்தினைத் தன் தந்தையால் ஒன்பது பிரிவாகப் பிரித்துக் கொடுக்கப்பட்டு ஆண்டு வந்தனர். அதனால் பாரத வருடம் ஒன்பது கண்டமாக விளங்கியது. பரதனுக்குக் கிம்புருடன், அரி, கேதுமாலன், பத்திராகவன், இளாவிரதன், இரமியன, ஈமன், குரு ஆகிய எட்டுபேர் உடன் பிறந்தவர்களாவர்.
21. கிம்புருட கண்டம் - இமயமலைக்கும் ஏம மலைக்கும் நடுவில் உள்ள இடம் ; அரிவரும் - ஏமமலைக்குத் தெற்கும் நிடதமலைக்கு வடக்கும் ஆகிய இடைப்பட்ட இடம்.
22. சம்புத்தரு - நாவல் மரம். இளாவிருத கண்டம் -

மேருமலைச்சாரல். மூன்று ஊர் - திரிபுரம். மலயவெற்பம் - உக்கிரகுமார பாண்டியன்.

23. சம்புவின் நீர் ஆறு - சம்புநதி, புனம் - கொல்லை, தோட்டம்.

24. வரிசிலை - வரிந்து கட்டப்பட்ட வில், களைகண் - பற்றுக்கோடு.

25. பாணித்து - பொழுது நீட்டித்து. கேண் - வானம்.

26. சிகரபந்தி - (ஆயிரங்) கொடுமுடிகளின் வரிசை. தருணபானு - இளஞ்சூரியன்.

27. வரைக் குலுங்கள் எட்டு - நிடதம், ஏம கூடம். இமயம், நீலம், சுவேதம், சிருங்கம், கந்தமாதனம் மாலியவான் ஆகிய எட்டு மலைகள். அடைகல் ஓர் நான்கு - மந்தரம், கந்தமாதனம், விபுலம், பார்சுவம் ஆகிய நான்கு; இவை மேருமலைக்கு ஆதரவாகச் சூழ்ந்து நிற்பவை. கிடங்கர் நான்கு - தாகம், மானதசரசு, விமலோதகம், மனோரதம் ஆகிய நான்கு ஓடைகள். நான்க தடம் - அருணம், அசிதோதம், மானதம், மகாமடு ஆகியநான்கு தடாகங்கள். பொழில் நான்கு - சயித்திரகம், விசித்திரை, வைப்பிரசம், திருதாக்கியம் ஆகிய நான்கு சோலைகள். தருக்கள் நான்கு - கடம்பு, நாவல், அரசு, ஆல் ஆகிய நான்கு மரங்கள்.

28. மேருத்தெய்வம் - மேருமலையின் அதிதேவதை. புடை - பக்கல்.

29. நம்பி - ஆண்மகனில் சிறந்தவன். கேட்டி - கேளாய்.

30. நிமித்தினால் - காரணத்தினால், அம்மு அத்தும் கெட்டன.

31. உறுதி - பயன். மன்றல் - வாசனை (இங்கு) மாலை.

32. வெறுக்கை - செல்வம். உன்னதுரு புலம் - உனது நாடு.

33. பொத்திய - மூடிய. தவனியம் - பொன்.

34. ஊர்ந்து - ஏறி. போகபூமி - இஃது ஆதியரி வஞ்சம், நல்லரிவஞ்சம், ஏமதவஞ்சம், தேவகுரு வஞ்சம், உத்தரகுருவஞ்சம் ஆகிய ஆறு வகையாம். இவை மேரு மலையைச் சுற்றிலும் உள்ளவை. வைப்பு - நாடு.

35. மாத்திமர் - மத்திய தேசத்து அரசர். தண்தமிழ் - செந்தமிழ்.

36. எட்டோடு ஐந்து உறுப்பினால் பணிந்து - எட்டு அங்கங்கள் பூமியில் தோய வணங்கும். அட்டாங்க நமஸ்காரமும், (பெண்கள்) ஐந்து அங்கங்கள். பூமியில் தோய வணங்கு பஞ்சாங்க நமஸ்காரமும் செய்து

37. சைவ பூதியர் - சைவப் பெருஞ்செல்வர். தொண்டர் - சிவத்தொண்டர்.

38. குங்குமம் - குங்குமம் கலந்த நீர். திங்கள் சூழ் குடுமி - சந்திரன் சூழ்ந்து செல்லப் பெறும் குடுமி.

39. தென்மலை - பொதிய மலை. தென்புலவாணர் - பிதிரர் (இச்செய்யுளில்; தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான் என்று ஆங்கு ஐம்புலத்தாறு ஓம்பல் தலை என்ற திருக்குறள் கருத்து கூறப்பட்டளது.

40. ஐவினை - ஐந்தொழில். (படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல்). ஆணை - இறைவன் (சக்தி) ஆற்றல். செய்வினைத் திரிவு - தீய செய்கை.

41. புவனி - பூவுலகம். ஆரம்பூண்ட பாண்டியன் - உக்கிர குமார பாண்டியன். நவம் - புதுமை. நிரதிசயம் - தனக்கு மேற்பட்டதொன்ற இல்லாதது. பூரணம் - முழுமை பிறப்பு அற - இரண்டு அற. பழைய தேசு - முருகன். தேசு - ஒளி.

...

## 16. வேதத்துக்குப் பொருள் அருளிச் செய்த படலம்

1. உலம் - திரண்டகல், பொரு - ஒத்த. வைப்பு - நிதி.

2. ஐம்பெரும் பூதம் - நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம். உருத்தது - அஞ்சத்தக்கதாகிய. வழிநாள் - வருங்காலம். வழி - பின். வம்பு - வாசனை.

3. திகிரி வலவன் - திருமால். நாபி முண்டகம் - உந்தித் தாமரை - உம்பர் நாயகன் - சோமசுந்தரக் கடவுள்.

4. பிரணவம் - சத்தவடிவாகிய அபரப் பிரணவம். புலந்தனர் - வாடினர். அப்போதத்து - அப்பொழுது.

5. வேறு இருக்கை - (இங்கு) தருப்பாசனம். வேதனை பந்தம் - பாசபந்தம்.

6. இருந்தும் - இருக்கின்றோம். சூழ் - ஆலோசனை.

7. படுபொருள் - கைவரப்பெறும் பொருள். அதிகதலம் - மேலான சிவத்தலம்.

75. நல் அன் புண்ணிய நீர் - கோகலம். சேந்து - சிவந்து. செருக்கு - உயர்ந்த. மெலிது - வழுவழும் புடையது.

76. பிலம் - பாதலம். இழிந்த - இறங்கி ஒளித்த. எரி பொற் கண் அவுணன் - இரணியாக்கன். இரணியனின் தமயன்.

77. பாரியாத்திரி கிரி - குமரிக்கண்டத்திலுள்ள ஏழு மலைகளுள் ஒன்று. மயன் - தேவதச்சன். அயன் எனலுமாம். தரியார் - பகைவர். வெந்நிட - புறமுதுகிட.

78. வந்து - மேற்குத்திசையில் வந்து. இறுதிக்கார் - ஊழிக்கால மேகம்.

80. வலம் - வெற்றி. சந்தி - சந்தியா காலம். பிரம்மா சத்துவ குணவடிவெடுத்துப் பிதிரர்களை அதினின்றும் தோற்றுவித்து அவ்வுடலத்தை விடுத்தார். அக்காலமே சந்தியாகால வடிவாம். உடல்மாசு - உடல் அழுக்கு. இழிபுலத்தும் - ஒழிந்தி விடத்தும். மதுகைடவர் - இவர்கள் திருமாலின் இரு செவிகளிலிருந்தும் தோன்றிய அசுரர்கள்.

81. கோடல் - கோணுதல். எவ்வம் - குற்றம். ஏந்தல் - தரித்தல்.

82. கல் - சூரியகாந்தக்கல் ; சந்திரகாந்தக்கல். உரையிடும் - உரைக்கும். இடு ; பகுதிப்பொருள் விகுதி - விலை பகருங்கால் கீழ்த்திசை நோக்கியிருந்து மணியை அருச்சித்தலும். கொடுக்குங்கால் வடதிசை நோக்கியிருந்து மணியை அருச்சித்தலும் மரபு.

83. விஞ்சுக - ஓங்குக. நாய்கர் - வணிகர். செல்வ நாய்கர் - சோமசுந்தரக் கடவுள். மஞ்சள் - மைந்தன், அரசகுமாரன்.

84. நவமுடி - புதிய முடி. நவம் என்பதை மணியுடன் கூட்டிப் பொருள்கள் கூறுதலும் உண்டு. தூக்கி - தராசில் நிறத்து.

85. பாருருவாய் - உலகின்கண் வணிகர் உருவாய்.

86. என்னது - என்னுடையது. உனவே - உன்னுடையனவே. வான் - மேகம்.

87. மாறன் - வீரபாண்டியன். கோக்கொழுந்து - அரசிளங் குமரன். விந்தைமன் - வீரலட்சுமியின் தலைவன். இறந்த - கடந்த.

88. இபம் - யானை. மூவா - கெடாத. சங்கை - ஐயம்.

89. வேள் - முருகக்கடவுள். நாள்கள் - நட்சத்திரங்கள். கோள் - நவக்கிரகங்கள்.

90. இந்திரக் கடவுள் - இந்திரன். மாண்ட - மாட்சிமைப்பட்ட தந்திரம் - சிற்பநூல். கனகக் கொல்லர் - பொற்கொல்லர், தட்டார்.

91. வேத புங்கவர் - அந்தணர். புனிதன் - சொக்கேசன்.
92. போர் மகள் - சயலட்சுமி. தெவ்வர் - பகைவர்.
93. உட்கும் - (தீச்செயலால்) திடுக்கிடும் - ஈர்ங்கதிர். மருமான் - அபிடேக பாண்டியன்.

...

## 18. வருணன் விட்ட கடலை வற்றச் செய்த படலம்.

1. கார்கெழுகண்டத்து அண்ணல் - நீல கண்டத்தையுடைய சொக்கலிங்கக் கடவுள். கௌரியன் - அபிடேக பாண்டியன். வறப்ப - வற்ற.
2. சித்திரைநாள் - முழுநிலா நாளுடன் கூடிய சித்திரை நட்சத்திரம் (சித்ரா பௌர்ணமி). பத்திமை - அன்பு; பக்தி. புத்தி - போகம் ; ஞானம்.
3. கர்ப்புரநீர் - பச்சைக் கற்பூரம் கலந்த நீர். அற்புத வெள்ளம் - சிவநேயப் பெருக்கு.
4. பூசை கழவுறும் அளவும் - பூசை முடியும் வரை. சிறப்பார் பூசை - (சிவாகம விதிப்படி) சிறப்பாகச் செய்யும் பூசையினை.
5. வேள்வி நாயகன் - இந்திரன். நின்றவன் - வருணன். தன்நோய் - வயிற்று (வலி) நீர் நோய். ஈர்ந்த - அறுத்த. தேம்பி - வருந்தி.
6. சிலை - இந்திவில். அன்பின்வலை - பக்திவலை. ஆகுலம் - துன்பம்.
7. மா - மேம்பட்ட. நீர் அண்ணல் - வருணன்.
8. அது - அச்சிவலிங்கம். தெய்வமருத்துவம். அச்சு வினி தேவர். தெறும் - வருத்தும்.
9. அரி அயராலும் - பிரம விட்டுணுக்களாலும். கடல் சேர்ப்பன் - கடல் தலைவனாகிய வருணன்.
10. காமம் - விரும்பப்பட்ட பொருள் (ஆகு பெயர்). ஆறு - வழி. சோபனம் - நிமித்தம்.
11. முரசு - கொடை முரசு. வல்லே - விரைந்து.
12. கொத்தி - கல்வி. பிதிர்த்து - பொடியாக்கி.
13. கந்தமலர்த் தனிக்கடவுள் கற்பத்தும் - பிரம கற்பத்தும்.
14. சீலம் - செய்கை. நகரம் - நகரமக்கள். பனிப்பு - நடுக்கம்.

14. சீலம் - செய்கை. நகரம் - நகரமக்கள். பனிப்பு - நடுக்கம்.
15. நீத்தம் - பெருவெள்ளம். அரசன் - அபிடேக பாண்டியன்.
16. ஆலம் - விடம். மறலி - யமன். பாலன் - மார்க்கண்டன். உலகு புகழ் உறையிட்டான் - உலகத்தார் கூறும் புகழையே கவசமாக அணிந்தான் ; உலகத்துக்குத் தனது புகழாகிய கவசத்தை அணிந்தவன் எனலுமாம்.
17. கறை - விஷம். துறையிட்டு - பலதுறைகளை உண்டாக்கி. பெயல் - (மழை) மேகம். "திருச்சடை நுனியில் நான்கு மேகங்களை உண்டாக்கி அனுப்பினார்" என்ற ஆலாசிய மான்மியத்தின் கருத்தும் அடங்க, 'திருச்சடையில் பெயல் நான்கும் வரவிடுத்தான்' என்றார்.
18. நிவப்புற - உயர. சிவப்பெருங்கடவுள் - சொக்கநாதர். தே - கடவுள். பசை - நீர்ப்பசை.
19. எந்தை - எம் தந்தையாகிய சொக்கலிங்கக் கடவுள். ஈறு இலா இன்பம் - முடிவில்லாத இன்பம்.

...



## பிழைதிருத்தம்

| பக்கம் | பிழை | திருத்தம் |
|---|---|---|
| 5 | கல்லாவின் | கல்லாலின் |
| 41 | விருவிருந் | வருவிருந் |
| 51 | கலவித்தாக | கலவிவித் |
| 78 | இந்தமாலிங்கத் | இந்தமா விலிங்கத் |
| 84 | அவ்வணஞ் | அவ்வண்ணஞ் |
| 1 | நல்மலரொண் | நன்மலரொண் |
| 86 | கற்பூர | கருப்பூர |
| | விரும்பூருங் | விருப்பூருங் |
| 105 | வந்தநீ | வறந்தநீர் |
| 123 | வல்லவந் | வல்லைவந் |
| 165 | கோதையோ | கோதையொ |
| 261 | பெருங்கடல் | பொருங்கடல் |
| 292 | உலம்பெரு | உலம்பொரு |

...

